# 100

# நூற்றாண்டு நிறைவு மலர்

## 1917 - 2017

யா/ விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி

விக்னேஸ்வரா கல்லூரி நூல் நிலையம்
இல:.................
கரவெட்டி

யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின்

# நூற்றாண்டு நிறைவு மலர்

1917-2017

# கல்லூரிக் கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே – வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே.

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறைகாயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக்கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ் தன் ஊற்றிடமாகக்
திறன் பணி கண்டிடுவோம்.
(வாழ்கவே வளர்க)

வர்த்தக இயலும் தொழில்முறைக்கல்வியும்
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே வளர்க)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி என்றதை கூறிடுவோம்.
(வாழ்கவே வளர்க)

# உள்ளே........


**01. வாழ்த்தியல்**

1. வெல்லன் விநாயகர் ஆலய பிரதம குருவிடமிருந்து ........ 03
2. கரவெட்டிப் பங்குத்தந்தையிடமிருந்து ........ 04
3. முதலமைச்சரிடமிருந்து ........ 05
4. கல்வி அமைச்சரிடமிருந்து ........ 06
5. கல்வி அமைச்சுச் செயலாளரிடமிருந்து ........ 07
6. மாகாணக் கல்விப்பணிப்பாளரிடமிருந்து........ 08
7. வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரிடமிருந்து ........ 09
8. கரவெட்டிக் கோட்டக் கல்விப்பணிப்பாளரிடமிருந்து ........ 10
9. முன்னாள் வடக்கு - கிழக்கு கல்விப்பணிப்பாளரிடமிருந்து ........ 11
10. பழைய மாணவர் சங்கத் தலைவரிடமிருந்து ........ 12
11. பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரிடமிருந்து........ 14
12. அதிபரின் பார்வையில் ........ 15

**02. பதிவியல்**

1. கரவெட்டியின் பண்பாட்டு ........ 21
2. தொட்டிற் பழக்கம் ........ 23
3. கரவெட்டி விக்னேஸ்வராப் ........ 27
4. Vigneswara at hundred ........ 32
5. அறிவுக் கண்ணைத் திறந்த ........ 36
6. கரவெட்டி விக்னேஸ்வரக் ........ 39
7. நினைவெழுதல் ........ 47
8. The hundred year old ........ 60
9. விக்னேஸ்வரக் கல்லூரியுடனான ........ 63
10. நீங்கா நினைவுகள் ........ 67
11. சகாப்தம் வென்ற ........ 70
12. யா/ விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை ........ 81

**03. ஆய்வியல்**

13. பாடசாலைகள் மாணவர்களை........ 85
14. கரவெட்டிப் பிரதேச ........ 93
15. கரவெட்டி - கல்வியும் கலையும் ........ 97
16. சமகாலக்கல்வியும் ........ 104
17. தமிழ்த்தேன் ........ 105
18. அறிவுசார் பொருளாதாரத்தின் ........ 110

19. முன்பள்ளிச் சிரார்களின் நடத்தை ........ 118
20. இளையோர் இடர் நடத்தைகளும் ........ 128
21. ஈரல் செயலிழத்தல் ........ 134
22. Siva Annan ........ 140
23. மனம் ........ 145
24. The Expected Trend ........ 147
25. அதிபர்களின் தலைமைத்துவமும் ........ 154
26. திண்மக்கழிவகற்றல் பிரச்சினைகளும் ........ 157
27. விளையாட்டுக்களில் தொழில்நுட்பத்தின் ........ 163
28. விக்னேஸ்வரக் கல்லூரி தந்த ........ 167
29. இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு ........ 179
30. சிரித்திரன் சுந்தரும் ........ 183
31. பிழையானவற்றை சிறப்பாகச் ........ 188
32. வெற்றிகரமாகக் கற்பதற்கான ........ 192
33. பாடசாலைக் கலைத்திட்டத்தினூடாக ........ 195

**04. கவியியல்**

34. அறிவுக் கண்ணீந்த ........ 203
35. கரவையின் பெருமையே ........ 204
36. My Venerable Vigneswara ........ 206
37. சாதனை விருட்சமே ........ 209
38. நூற்றாண்டு வாழ்த்துக்கள் ........ 211
39. Vigneswara at hundred ........ 212
40. வெற்றிகளின் விருட்சமாக ........ 213


**05. மாணவர் ஆக்கவியல்**

41. புவி வெப்பமடைதல் ........ 217
42. சூதும் வாதும் ........ 221
43. போதையற்ற வாழ்வு ........ 229
நூற்றாண்டு விழா ........ 231
History of Vigneswara ........ 235
உதவுகை விபரம் ........ 245
Students of past 25 years who ........ 248
என்றும் நன்றிக்குரியவர் ........ 258



# வாழ்த்தியல்






# யா/ கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழா ஆசியுரை

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கையின் வடக்கு கரையிலே வடமராட்சிப் பகுதியில் எழில் பொங்கும் சகல வளங்களும் நிறைந்து காணப்படும் கரவை மண்ணிலே சிப்பிக்குள் முத்தாக திகழும் விக்னேஸ்வரக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை இவ் வருடம் வெகு சிறப்பாகவும் கோலாகலமாகவும் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். அறிந்த காலம் தொட்டு இன்று வரை இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் யாரும் மங்கிப்போனதில்லை. கரவை மண்ணிலே இன்று புகழ்பூத்த, பூத்துக் கொண்டு இருக்கின்ற, பூக்கப் போகின்ற கல்வி வளமும், நன் மாணாக்கர்களும் சமூகத்தில் நற்பிரஜைகளாகவும் அன்பு, பணிவு, அடக்கமும் கொண்டவர்களாகவும் மேலும் இப்பாடசாலையை மெரு கூட்டி சகல செல்வங்களும் மங்காது பாடசாலையின் பெருமையை உலகறியச் செய்து விழா மேலும் சிறப்புற வேண்டும் என்று எல்லாம் வல்ல கரவை வெல்லன் விநாயகப் பெருமானின் அருளாசி கிட்டவேண்டும் என விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

சுபம்

**சிவஸ்ரீ. வேதாரணியக் குருக்கள் கனகசபைக்குருக்கள்**
(கரவை வெல்லன் விநாயகர் ஆலயம்,
கரணவாய் வெற்றிகாட்டு விநாயகர் ஆலய பிரதம குரு.)

# பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி



*“நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!” (கொரி. 1:2)*

கரவையின் கல்வித்தாயாக விளங்கும் விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன்.

1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியானது எமது மக்களின் முன்னேற்றத்திற்கு ஆற்றிவரும் பணிகள் மகத்தானது என்பது வரலாறு. பல அறிஞர்களையும் பெரியோர்களையும் உருவாக்கித் தந்த பெருமைக்குரியதாயாக இக் கல்லூரி விளங்குகின்றதென்றால் அது மிகையாகாது

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நூற்றாண்டு விழாவில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தமது தன்னலமற்ற சேவையை வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்களையும் தமது அயராத உழைப்பி னாலும் உயர்வினாலும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் நன்றியோடு நினைத்து அன்புடன் பாராட்டுகின்றேன்.

வயல்களும் நெடிதுயர்ந்த பனைகளும் சூழ்ந்த அமைதியான கிராமச்சூழலில், தேவதாயாரின் அருகாமையிலும், அரவணைப்பிலும் அன்புப்பராமரிப்பிலும் இருக்கும் இக்கல்லூரியின் சீரும் சிறப்பும் செழித்தோங்க அன்புடன் வாழ்த்தி, ஆசித்து நிற்கின்றேன்.

நன்றி

**அருட்பணி அ. அ. அமலராஜ்**
பங்குத்தந்தை
கரவெட்டி.

கல்லூரி நிறுவுநர்
இராசவாச முதலியார் வீரவாகு சிற்றம்பலம்



மனேஜர்
இராசவாச முதலியார் கந்தப்பு சின்னத்தம்பி



# Our Principals



Mr.K.Krishnapillai
1917 - 1920



Mr.K.Ramasamy
1921 - 1928



Mr.K.Achchuthampillai
1929 - 1942



Mr.K.Pathmanathanpillai
1943 - 1948



Mr.K.Sivapragasam
1949-1963



Mr.V.Somasuntharam
1964 - 1970

# Our Principals



Mr.Pon-Kanesan
1971 - 1975



Mr.V.Thangarasa
1976 - 1977



Mr.S.Namasivayam
1977 - 1979



Mr.A.Subramaniyam
1979 - 1980




Mr.K.Sivapathasuntharam
1980 - 1990



Mr.K.S.Sithamparanathan
1990 - 1990

# Our Principals



Mr.V.Selvarasa
1990 - 1993



Mr.K.Ampalavanar
1993 - 2000




Mr.K.Selvarasa
2000 - 2002



Mr.V.Sivasithamparam
2002 - 2012



Mr.K.M.Kanagalingam
2012 - Upto Now



முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්

ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

# Justice C.V.Wigneswaran

**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்

මුදල් හා කුමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration

எனது இல / මගේ අංකය / My No } NP/CM/media/19/07/2017

திகதி / දිනය / Date } 19.07.2017

## வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டி பகுதியில் 1917ம் ஆண்டில் அமைக்கப்பட்ட யாழ் விக்னேஸ்வராக் கல்லூரி தனது 100 ஆண்டு கால கல்விச் சேவையை வளமுற வழங்கி நூற்றாண்டு விழாவை கொண்டாடுகின்ற இத்தருணத்தில் வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்து கலாசாரச் சூழலில் ஆங்கிலமொழி மூலப் பாடசாலை ஒன்றின் அவசியத்தை உணர்ந்த அக் காலத்தில் மணியகாரனாகப் பணியாற்றிய இராசவாச முதலியார் திரு. வீரபாகு சிற்றம்பலம் அவர்களின் முயற்சியில் ஓலைக் கீற்றுக் கொட்டில் ஒன்றின் கீழ் 06.10.1917ல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்வேறு படிநிலைகளில் வளர்ச்சியடைந்து பல மாடிக் கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், விளையாட்டு மைதானம், நன்னீர்த் திட்டம், மின்சாரவசதி என அனைத்து வசதிகளுடன் க.பொ.த உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்களுடன் கூடிய ஒரு 1AB தர கல்லூரியாக விளங்குவது மகிழ்விற்குரியது.

அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் எமது முன்னோர்கள் சிந்தனையில் உருவாக்கம் பெற்ற இவ்வாறான பல பாடசாலைகள் இன்று எமது குழந்தைகளுக்கு அறிவுப்பசியை தீர்க்கின்ற ஆலயங்களாக விளங்குகின்றன.

அந்த வகையில் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கின்ற யாழ் விக்னேஸ்வராக் கல்லூரி இன்னும் பல நூற்றாண்டு காலம் கல்வி சேவையில் முன்னணியில் திகழ்ந்து கல்விப் புலத்திற்கு மேலும் மெருகூட்ட எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி


நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்
A9 පාර, කයිතඩි, යාපනය
A9 Road, Kaithadi, Jaffna

தொலைபேசி / දුරකථනය / Telephone } 021 221 7311, 021 221 7313

தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 221 7227, 021 221 7310

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email } cmofficenorthernpc@gmail.com



# சாதனைகள் படைத்து வரும் கல்லூரி

வடமராட்சியில் இந்து தமிழ்ப் பாரம்பரியத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்தும் நோக்கில் 1917 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி அமரர் இராசையா முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட விக்னேஸ்வரக் கல்லூரி இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

நூறு வருடங்கள் என்பது பத்து தலைமுறைகளை உருவாக்கி வடமராட்சி கரவெட்டிப் பிரதேசத்தில் தனக்கென ஒரு கல்விப் பாரம்பரியத்தை மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் பல சாதனையாளர்களை உருவாக்கி வரும் இக்கல்லூரி மேலும் பல ஆண்டுகள் சிறப்புறச் சேவையாற்றி மேலும் பல புகழ் பூத்த மாணவர் பரம்பரையை உருவாக்கவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். அதன் தோற்றுவாயில் இருந்தே ஒரு ஆங்கிலப் பாடசாலையாகவே உருவாக்கப்பட்டு இன்றும் அதே தரத்தைப் பேணி வருவது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அன்று தொடக்கம் இன்று வரை பல நூற்றுக்கணக்கான கல்விமான்களை உருவாக்கிப் பெருமை படைத்த விக்னேஸ்வரக் கல்லூரி வடமராட்சிக்கு மட்டுமல்லாது வடக்கு மாகாணத்திற்கே பெருமை சேர்த்து வரும் கல்லூரியாக விளங்குகின்றது.

வடமராட்சியின் புகழ்பெற்ற தரம் 1AB பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இப்பாடசாலை இசுறு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வடமராட்சிக் கல்விச் சமூகத்திற்கு உன்னதமான சேவைகளை ஆற்றிவருகின்றது. இக்கல்லூரி மேலும் பல சாதனைகளைப் பெற்று பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



**யா**/விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வடமராட்சி கரவெட்டிப் பிரதேசத்தில் இந்து, கலாசாரச் சூழலில் ஆங்கில மொழிப் பாடசாலை ஒன்றின் அவசியம் கருதி இராசவாச முதலியார் திரு.வீரவாகு சிற்றம்பலம் அவர்களால் 1917 ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது இப்பாடசாலை 6-13 வரையான வகுப்புக்களைக் கொண்டு 1 AB தரம் கொண்ட பாடசாலையாக வடமராட்சிப் பிரதேசத்தில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக சிறப்பாக இயங்கி வருவதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையின் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக்குக் காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள் அமைகின்றன. அந்தவகையில் இந் நூற்றாண்டு மலர் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றுப் பதிவாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இப்பாடசாலை பல கல்விமான்கள், உயரதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற்பிரஜைகள் போன்றோரை உருவாக்கி மாகாண மற்றும் தேசியமட்டத்தில் மேலும் பலசாதனைகளைப் படைக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் நூற்றாண்டு வெளியீடாக வெளியிடப்படவுள்ள இம்மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**இ.இரவீந்திரன்**<br>
செயலாளர்,<br>
கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை<br>
மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சு,<br>
வடமாகாணம்.

# வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



வடமராட்சியின் கரவெட்டிப் பிரதேசத்தில் 1917 ஆம் ஆண்டில் விக்னேஸ்வரக் கல்லூரி இந்து மாணவர்களுக்கும் ஆங்கில மொழி மூலமான கல்வியை வழங்கவேண்டும் எனும் நோக்கில் இராசவாசமுதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்களால் தாபிக்கப்பட்டது. கிடுகுக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று சகலவளங்களும் கொண்ட 1AB தரப் பாடசாலையாக (இசுறு) மிளிர்கின்றது.

1933 ஆம் ஆண்டில் இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு இப்பாடசாலையிலிருந்து மாணவர்கள் தோற்றியமை குறிப்பிடத்தக்கது. அக் கால கட்டத்தில் இப்பாடசாலை வடமராட்சியில் தலைசிறந்த பாடசாலையாகத் திகழ்ந்ததுடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்க நாடி வந்தனர். பல்வேறு கால கட்டங்களிலும் ஏற்ற, இறக்கங்களுடன் இயங்கி வந்த இப்பாடசாலையில் 1977 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த) இல் கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

மாணவர்களுக்கு இந்து சமயப் பாரம்பரியத்துடன் கூடிய ஒழுக்க, விழுமியப் பண்புகள் சார்ந்த கல்வியை இப் பாடசாலை வழங்கியது. இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் இன்று சமூகத்தில் பெரு மதிப்புடன் வாழ்வதைக் காண முடிகின்றது. உலகின் பல்வேறு நாடுகளிலும் இப்பாடசாலையினது பழைய மாணவர்கள் நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் அரும்பணியாற்றியுள்ளனர். இவ் வருடம் நூற்றாண்டு விழாவினைக் காணும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களிற்கு கல்விச் செல்வத்தினை வழங்க வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாண மருதனார்மடம், சுன்னாகம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா கல்லூரி நூல் நிலையம்
இல. ........
கரவெட்டி



# வாழ்த்துச்செய்தி

தமிழும் சைவமும் பாரம்பரியமும் பண்பாட்டு கலாச்சாரமும் செழித்தோங்கிய பெருமை வாய்ந்த கரவைப் பகுதியில் திருவாளர் வீரவாகு சிற்றம்பலம் முதலியார் அவர்களால் உருவாக்கப்பட்ட விக்கினேஸ்வரக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை இன்று சிறப்புடன் கொண்டாடுவதையிட்டு மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். தமிழுடன் இணைந்து ஆங்கிலக் கல்வியையும் வளர்க்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் உருவாக்கப்பட்ட இக் கல்லூரி தனது நூற்றாண்டு வாழ்வியலில் வளங்கள் நிறைந்த கல்லூரியாக கரவை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மகுடமாக நிமிர்ந்து நின்று காட்சியளிக்கும் கல்லூரிக்கு எனது வாழ்த்துக்கள். வடமராட்சி மண்ணிலிருந்து பாராளுமன்றம் சென்று இம் மண்ணுக்கு பெருமை சேர்த்த திரு. பொன் கந்தையா, திரு.மு.சிவசிதம்பரம், திரு.க.ஜெயக்கொடி போன்ற உயர் அரசியல் தலைவர்களை உருவாக்கிய கல்லூரியின் சாதனைகளுக்கு எனது பாராட்டுதல்கள். உயர் அரசியல் தலைவர்களை மட்டுமல்ல பேராசிரியர்களையும் சிறந்த நிர்வாகிகளையும், கல்விமான்களையும் பல்துறை விற்பனர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கே உரித்தானது.

வடமராட்சி வலயத்தில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு Isuru பாடசாலை என்ற பெருமையைப் பெற்றதோடு Isuru திட்டத்தின் ஊடாக நிறைந்த பௌதீக வளங்களை பெற்ற கல்லூரியாக தரம் உயர்ந்து கரவை மண்ணுக்கு பெருமை சேர்த்து நிற்கின்றது. தனது நூற்றாண்டு வாழ்வியலில் பல்துறை சார்ந்த, அனுபவம் பெற்ற அதிபர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இக்கல்லூரியின் வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத அதிபர்களாக விளங்கிய திரு.கே.சிவப்பிரகாசம், பண்டிதர் பொன்கணேசன், திரு.V.தங்கராசா, திரு. கே. சிவபாதசுந்தரம், திரு.V.செல்வராஜா, திரு. கே. அம்பலவாணர்,திரு.V.சிவசிதம்பரம் ஆகியோர் கல்லூரியின் வளர்ச்சியுடன் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய பெருமைக்குரியவர்கள். இக்கல்லூரியின் எதிர்கால வளர்ச்சியில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கூட்டு ஒத்துழைப்போடு இலக்கு நோக்கி கடின உழைப்புடன் செயற்பட அன்புடன் வேண்டுகின்றேன். கரவை மண்ணில் மிளிர்கின்ற இக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை சிறப்புடன் முன்னெடுத்து நடாத்துகின்ற பழைய மாணவர் சங்கத்திற்கும், பாடசாலை சமூகத்திற்கும் எனது பாராட்டுதல்கள். நூற்றாண்டு விழாவையொட்டி வெளிவரவிருக்கும் மலர் சிறப்புற அமைந்து பலருக்கும் பயன்படும் வகையான பல் துறைசார் ஆக்கங்களோடு வெளிவந்து கல்லூரியின் நூற்றாண்டு சாதனைகளை வெளிக்காட்டும் வரலாற்று ஆவணமாக மலர எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறிக்கொள்வதில் மகிழ் வடைகின்றேன்.

கரவை மண்ணுக்கு பெருமை சேர்க்கும் விக்கினேஸ்வரா வாழ்க பல்லாண்டு

**சி. நந்தகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி



# சதம் தழுவும் விக்னேஸ்வரக் கல்லூரித் தாய்க்கு வாழ்த்துக்கள்

**யா**ழ்ப்பாணத்தின் பூர்விக வரலாற்றில் மொழி, சமயம், சமூக விழுமியம் சார் பண்பாட்டில் மாப்பாண முதலியார் பரம்பரையிலே உதித்த பெருமகன் வீரவாகு சிற்றம்பலம் அவர்களினால் 1917ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விக்னேஸ்வரக் கல்லூரி நூறு ஆண்டுகளைக் கடந்து கல்வி ஒளி பரப்புகிறது.

ஆங்கில மொழிக் கல்வியின் தேவையினை உணர்ந்து ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி வடமராட்சியின் புகழ்பூத்த கல்விமான்களை உருவாக்கியுள்ளது என்பது வெள்ளிடைமலை. வடமராட்சியின் பல்வேறு பாகங்களிலுமிருந்து கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியை விருப்போடு நாடிவந்து கற்றவர்களின் கல்லூரி அபிமானம் இதனைக் கோடிட்டக் காட்டுகிறது. போக்குவரத்து வாகனங்கள் அரிதாகவுள்ள அக்காலத்தில் புலோலி, பருத்தித்துறை மற்றும் வரமராட்சி கிழக்கிலிருந்து கூட வேட்டியணிந்து கால்நடையாக வந்து கற்றவர்களின் வரலாறு கல்லூரியின் பெருமையினை எடுத்துக்காட்டுகிறது.

அன்றிலிருந்து இன்றுவரை தாபகரின் கல்வி நோக்கங்களை நிறைவேற்றவல்ல புகழ் பூத்த அதிபர்களின் அயராத முயற்சியும் இக் கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கின்றது. சிறந்த சமூக விழுமியம் சார் கல்வி, கேள்வி, ஞானங்களில் சிறந்தோங்கும் சமூகப்பின்னணியும் ஒத்துழைப்பும் உதவியும் மற்றும் பழைய மாணவர்களுடைய உதவும் கரங்களும் இக்கல்லூரியின் பெருமைக்குப் பெரும் பங்காற்றுகிறதெனலாம்.

கல்வியோடு மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசியமட்டச் சாதனைகளைப் படைத்து வரும் இக்கல்லூரித் தாய் நூற்றாண்டுகளைக் கடந்து புளகாங்கிதம் அடைவதைக் கல்விசார் பெருமக்கள் எல்லோராலும் பாராட்டாமலிருக்க முடியாது. கரவெட்டியில் சிறந்த வளமுள்ள இக்கல்லூரி மேலும் மாணவர்கள் அங்கலாய்ப்போடு நாடி வரும் தந்திரோபாயங்களைக் கையாண்டு பெரு விருட்சமாக வியாபித்து வளர வாழ்த்தி வணங்குகின்றேன்.

**Dr. க. க. யோகநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
கரவெட்டி.



## வடக்கு - கிழக்கு மாகாண ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.செ.கந்தசாமி அவர்களின் வாழ்த்துச்செய்தி


கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளிவருவது நம்மெல் லோருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். என்னைப் போன்ற பலருக்கு நூலறிவும், வாலறிவும் கொடுத்த இப்பாடசாலை கரவெட்டியின் அறிவாலயமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வால யத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவது நான் செய்த பாக்கியமே. இவ் வாய்ப்பை யிட்டு நான் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியுமடைகின்றேன்.

இவ்வாலயத்தில் எண்ணும், எழுத்தும் அறிவித்த ஆசிரியப் பெருமக்கள் பலர், இவர்கள் இன்றும் எங்கள் மனதில் குருதெய்வமாக இருக்கிறார்கள். எம்மை நல்வழிப்படுத்தி வழிகாட்டி வாழ வைத்த பெருமை இவர்களுக்குரியதே. கணிதம், தமிழ், இலக்கியம், ஆங்கிலம், விஞ்ஞானம் முதலான பாடங்களைச் செவ்வனே போதித்து இப்பாடசாலையைப் புகழ்பெற வைத்த ஆசான்கள் பலர். இவ்வாசியரியர்களும், அவர்களது சேவையும், ஞாபகத்தில் வரும்போது கரவை என்ற உணர்வும் ஓர் அந்நியோன்னியமான பாசமுமே வளர்கிறது.

பனைவடலி வளவில் சித்தமணியமெனும் பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிக்கூடம் சகல துறைகளிலும் சாதனைகளைப் புரிந்து இன்று பெரியதோர் அறிவாலயமாக மிளிர்கிறது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகு, மனையியற் கூடம், கவின்கலைக்கூடம், விஞ்ஞானகூடம், நூலகம் முதலான சகலவற்றையும் கொண்டு பெரியதோர் கல்லூரியாக வளர்ந்துள்ளது. கல்லூரி வளவும் விசாலமாகி வனப்பு மிக்கதாகி விட்டது. இதன் வளர்ச்சி சந்ததியினர், பல பெரியார்களின் சேவை போற்றுதற்குரியதே.

கரவெட்டியில் வளர்ந்தது விக்னேஸ்வரா, கரவெட்டியை வளர்த்ததும் விக்னேஸ்வரா. தொடர்ந்தும் இக்கல்லூரி பல சாதனைகளைப் புரிந்து ஒளி விளக்காகத் திகழ வாழ்த்துகிறேன்.

**க. கந்தசாமி**
ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்
(பழைய மாணவன்) கனடா



# Message from the President Vigneswara OSA Karaveddy

Vigneswara College, the cumulative symbol of Karaveddy, is slowly but steadily marching towards its land mark occasion I.e its one hundred$^{th}$ birthday. It is due to fall on 06.10.2017. An - interupted journey of one hundred years in the noble field of education is indeed a rare accomplishment - an enviable feat.

Vigneswara and Karaveddy cannot be viewed indipenfantly of each other. The history of both has been in - extricably inter twined. In fact, Vigneswara has been Amanifestation of the culture, in to to, of Karaveddy.

Vigneswara had a Comparatively eventful and multifaceded history. Various articles which adonr this publication appears to have done adequate justice to the task of recording the varied history of Vigneswara. So I have deleberately refrained from going down memory lane and further expatiating on the history as it is well known and would mean mere replication. So I have preferred to dealing with general issues.

Vigneswara can boast of a proud history and is the inheritor of a rich tradition. A succession of dedicated and eminet principals, the comitment of able teachers and quality students have harmoneously combined to make Vigneswara what it is today. Vigneswara always believed that " Education of the head without education of the heart is no education at all". It is incumbent of everyone connected with Vigneswara in someway or other to contribute his / her mite to not only sustain this tradition but also to take our college to greater heights.

Our old students are spread all over the globe particularly in the develop ed countries. The holocaust of 1983 and the resultant exodus of Sri Lankan Tamils particulary from the North made this possible. Though they had migrated for good, we are proud to record that they have not forgotten their alma - mater. In addition to old students association in Karaveddy and Colombo, there are properly formed and very active associations in the United Kingdom as well as

in Canada. They have contributed immensely for the furtherance of educational and extra curricular activities of our College. We take this opportunity to solicit the support of those in Australia, France, Germany and the Candinavian countries to establish contact with us.

Over the years, cost of everything had increased manifold. At the same time collcge activities have progressively expanded. But Government financial contribution has been dwindling for various reasons. The gap is tremendous. This phenomenons is not peculiar to one School. It is applicable to each and every school. This has caused great financial strain and Schools are struggling to make ends meet. At the same time they have to fulfil expectation of the college community and meet the modern needs of The school. Vigneswara has been no exception. Fortunately the all students have come to the rescue and ensured that the school meet the Obligations.

Vigneswara owes a duty by nation to ensure the overall development of the students in to well rounded personalites positively useful to the country of his / her birth. Vigneswara expects every old student to do his / her duty by their alma mater.

***S. Selvaratnam***
*President,*
*Vigneswara O S A,*
*Karaveddy.*




## வாழ்த்துச்செய்தி

கற்றோர் மிகுந்த கரவெட்டியின் உருவாக்கத்திற்கு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் பங்கு அபரிமிதமானது. நூறு ஆண்டுகள் கல்லூரி ஒன்று நின்று நிலைத்திருப்பது மிகவும் போற்றப்பட வேண்டியது. நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமிதமடைகிறேன். ஈழ தேசத்தின் கூர்மையடைந்த தமிழ் தேசிய இனத்தின் போராட்ட காலங்களில் எமது மக்கள் வீடிழந்து உறவுகள் இழந்து அங்கும் இங்கும் அலைந்து திரிந்த காலத்தில் கூட அம் மக்களை அரவணைத்து தங்க இடம்கொடுத்து சில பாடசாலைகளை இயங்குவதற்கு உறுதுணையாக இருந்து உதவி செய்த பெருமைக்குரிய கல்லூரி என்பதனை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஏழைகளின் தோழனாக சகல வசதிகளையும் கொண்ட கல்லூரியாக இன்றும் திகழ்ந்து கொண்டிருப்பதற்கு உறுதுணையாகவிருந்த பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

விக்னேஸ்வரா வாழ்க! வளர்க!

**லயன் சி. ந. கதிர்வேல் ஜே.பி**
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்



# அதிபரின் பார்வையில்......

**திரு. க. மு. கனகலிங்கம்**
**அதிபர்**
**யா / விக்னேஸ்வரக்கல்லூரி கரவெட்டி.**

ஈழத்தின் தமிழ்ச் சைவப்பாரம்பரியத்தை நிலைநாட்டும் தலைமகனாக நல்லூர் ஆறுமுகநாவலர் 19ம்நூற்றாண்டில் அவதரித்தார். அவரின் உன்னதமான செயற்பாடுகள் சைவத்தையும் தமிழையும் நிலைபேறடைய வைத்தன. நாவலரவர்களின் எழுச்சியைத் தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. வடமராட்சியிலும் சில பாடசாலைகள் சைவப்பாரம்பரியத்தையும் தமிழ் மொழியைப் பேணுவதற்காகவும் அமைக்கப்பட்டமை வரலாறு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலையொன்றின் தேவை கரவெட்டிப் பிரதேச மக்களிற்கு ஏற்பட்டது. அத்தேவையை நிறைவு செய்தவற்காக அக்காலத்தில் தென்மராட்சி பிரதேச மணியகாரனாக இருந்த அமரர் வீரவாகு சிற்றம்பலம் அவர்களால் 1917 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதி விக்னேஸ்வரக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் வடமராட்சியின் பல்வேறு பகுதியில் இருந்தும் படிப்படியாக மாணவர்கள் வரத் தொடங்கினர். ஒரு கல்லூரிக்கு வேண்டிய அத்தனை செயற்பாடுகளும் அங்கே நடைபெற்றன. கல்லூரியின் கடந்த நூறாண்டு வரலாற்றில் பல மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், கவிஞர்கள், நாவன்மையாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் என வகையளவிலும் தொகையளவிலும் அதிகரித்த பல்வேறு அறிஞர்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்கிய, உலகெங்கும் வாழ வைத்த பெருமை விக்னேஸ்வரக் கல்லூரிக்கு உண்டு. விக்னேஸ்வரக் கல்லூரி தனியே கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மட்டும் ஈடுபடவில்லை என்பது அதன் வரலாற்றை தெரிந்து கொண்ட வர்கள் புரிந்து கொள்வார்கள். பல்வேறு வகையான ஆளுமைப் பண்புகளை இக் கல்லூரியில் பெற்றுக்

கொண்டதாக பல பழைய மாணவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். ஒவ்வொரு துறையிலும் தனித்துவ முன்னோடிகள் பலபேர் உருவாகியுள்ளனர். உதாரணமாக 1928 ஆம் ஆண்டளவிலே விக்னேஸ்வரக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் பாராளுமன்றம் நான்கு அமைச்சுக்களைக் கொண்டு சிறப்பாக இயங்கிய மையால் அதன்பால் ஈர்க்கப்பட்டு தி.மு.சிவசிதம்பரம், திரு.பொன்.கந்தையா, திரு.ஜெயக்கொடி போன்றோர் பின்னாளிலே சிறந்த அரசியல்வாதிகளாகச் செயற்பட்டனர் ஸ்தாபகர் வழிவந்த திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் உப சபாநாயகர் பதவி வகித்தமை வரலாறு. விக்னேஸ்வரக் கல்லூரியில் மாணவர் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் உபசபாநாயகர் பதவியை சிறப்பாகச் செய்ய உதவியதாக மு.சிவசிதம்பரம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேபோல் நாடறிந்த இலக்கிய வாதிகளான செ.கதிர்காமநாதன், தெணியான், பேராசிரியர் கா.சிவத்தம்பி போன்றோர் பழைய மாணவர்களாக இருந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர்கள்.

அன்னை விக்னேஸ்வராவின் நூற்றாண்டு நிறைவை உலகெங்கும் உள்ள பழைய மாணவர்கள் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர். இலண்டன் மாநகரிலே 17.07.2017 இல் நடைபெற்ற "நல்லதோர் வீணை செய்தே..." என்ற நிகழ்வு சிறப்பாக பிரமாண்டமான அளவிலே நடைபெற்றுள்ளது. தாயகத்தில் இருந்து இக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் ஓய்வுநிலை அதிபரும், கௌரவ மகாணசபை உறுப்பினருமான தர்மலிங்கம் அவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். ஏனைய நாடுகளில் உள்ள பழையமாணவர்களும் குழுவாகவும் தனித்தும் நூற்றாண்டு நிகழ்வுகளில் இணைந்து வருகின்றனர். இவர்களின் செயற்பாடுகள் போற்றுதற்குரியவை.

2017 ஆம் ஆண்டில் கல்லூரிச் சமூகத்தால் நடைபவனி, இரத்ததானம் வழங்கல் பழைய மாணவர் களுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் பாடசாலைகளுக்கு இடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள் இதுவரை நடைபெற்றுள்ளன.

கல்லூரியின் நூற்றாண்டுகால வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் பல நூறுபேர்கள். அவர்கள் எல்லோரையும் இக்கால கட்டத்திலே எம் இதயங்களில் ஏந்தி வணங்க வேண்டும். இக் கல்லூரியை நிறுவியவர், உதவிய அன்பு உள்ளங்கள், அர்ப்பணிப்பான சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், நன்கொடையாளர்கள், நலன்விரும்பிகள், பிரதேச மக்கள் என எல்லோரும் ஆராதனைக் குரியவர்களே. கல்லூரியின் ஆரம்ப காலங்களில் இந்தியாவில் இருந்து இங்கு வந்து சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் தியாகத்தின் விளைவுகள் போற்றுதற்குரியன. உள்ளூரில் வாழ்ந்த ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் விக்னேஸ்வரக் கல்லூரியை தம் கண்ணெனப் போற்றிக் காத்தனர். இதன் காரணமாகவே கல்லூரி வரலாற்றில் சில உன்னதங்களை அடையக் கூடியதாக இருந்தது. தற்போதும் கூட, நூற்றாண்டுவிழா நடைபெறுகின்ற இந்த ஆண்டிலும் (2017) விஞ்ஞானம் தொடர்பான அறிவுப்போட்டியிலே, தேசிய மட்டத்திலே பலநூறு பாடசாலைக்கு இடையே நடைபெற்ற போட்டியில் முதலாம் இடம் பெற்று பெறுமதியான பல பரிசில்களையும் பெற்று, விக்னேஸ்வரக் கல்லூ ரிக்கு மீண்டும் ஒரு மகுடம் வைத்திருக்கின்றார்கள் தற்போதைய மாணவர்கள்.

1917 ஆம் ஆண்டிலே 3 ஆசிரியர்களுடனும் சில மாணவர்களுடனும், சிறு கொட்டிலிலே ஆரம்பிக்கப்பட்டு இக் கல்லூரி இன்று நிறைவான கட்டிட வளங்களோடும் ஏனைய நவீன கற்றல்

கற்பித்தல் சாதனங்களோடும் நான்கு ஏக்கர் நிலப்பரப்பிலே ஒரு பெரிய கல்லூரி வளாகமாக நிமிர்ந்து நிற்கின்றது. இந்த ஆண்டிலும் மாணவரின் தியானம், பிரார்த்தனை போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களின் பண்புசார் விருத்தியை மேம்படுத்துவற்கு பிரார்த்தனை மண்டபம் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பப் பிரிவு தனியாகப் பிரிந்து சென்றமையாலும் போர்ச் சூழ்நிலை காரணமாக உண்மையாகவே கல்லூரியில் பற்றுக் கொண்ட பழைய மாணவர்கள் குடும்பம் குடும்பமாக புலம்பெயர்ந்து சென்றமையாலும் உள்ளூரில் பிறப்பு வீதம் தாழ் மட்டத்தில் இருப்பதாலும் மாணவர்களின் தொகையில் சற்று தளர்வு ஏற்பட்டுள்ளது. நாளடைவில் இது மேம்படும் என எதிர் பார்க்கின்றோம். கல்வியின் தரம் தொடர்ந்து சிறப்பாகப் பேணும்போது இந்த நிறைவான நிலையை கல்லூரி அடைந்து கொள்ளும். தரமான உள்ளீடுகளை கற்றல் செயலொழுங்கில் கொண்டுவரும்போது நீண்டகாலத்தில் விளைவுகள் (Out Comes) பாராட்டக் கூடியதாக இருக்கும்.

'தரமான கல்வி' எனும்போது (Quality in Education) வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துகின்ற கல்வியை வழங்குவது என வரைவிலக்கணப்படுத்தலாம். இங்கே மாணவர்களும் அவர் தம் பெற்றோருமே வாடிக்கையாளர்கள். அவர்களைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகள் பொதுவாக எல்லாக் கல்லூரியிலுமே நடைபெற்று வருகின்றன. ஆனால் அதீத எதிர்பார்ப்புக்களை எந்தக் கல்லூரி யாலும் நிறைவேற்ற முடியாது. எல்லோரும் பொறியியல், மருத்துவம் என்ற இரண்டு தெரிவுகளையே அதீதமாக எதிர்பார்க்கின்றார்கள். யதார்த்தத்தில் அது முடியாத காரியம். பெரும் நிதிச் செலவு செய்து கல்வி கற்று இறுதியில் மிகக் குறைந்த வீதத்தினர் உயர்கல்வி வாய்ப்புப் பெற ஏனையோர் இருக்கும் வழிகளில் செல்லாமல் இல்லாத வழிகளில் காத்திருக்கின்றார்கள். உதாரணமாக தற்போது விவசாயம். தாதியர் பயிற்சி நெறி விஞ்ஞானப்பட்டப்படிப்பு, போன்றவற்றிற்கு கற்கை நெறி வசதிகளும் வேலைவாய்ப்புக்களும் காணப்படுகின்றன. ஆனால் இதைப்பின்பற்றுவோர் குறைவாக உள்ளனர்.

எதிர்காலத்தில் வேலைவாய்ப்புக்களைப் பெற்று சிறப்பாக வாழவேண்டும் எனில் விஞ்ஞானம் சார்ந்த தொழில்நுட்ப ரீதியான கற்கை நெறிகளைப் பின்பற்ற வேண்டும். நவீன சாதனங்களைக் கையாளும் திறன்களுடன், சிறந்த மனப்பாங்குடன் ஒவ்வொரு மாணவரும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

வேகமாக மாறிவரும் உலகில் எல்லாத் துறைகளும் விரைந்து மாற்றம் பெற்று வருகின்றன. சவால் மிக்க எதிர்காலம் ஒன்று இன்றைய மாணவர் முன்னே விரிந்து கிடக்கின்றது. இயந்திரமயம் விஞ்ஞான பூர்வமானதும் வேகமானதுமான செயலொழுங்குடன் மனித மூளையானது தொடர்புபட, இன்னொருபுறம் அன்பு, கருணை, மனிதநேயம். கலாசாரம், பண்பாடு என இதயத்துடன் (உள்ளம்) தொடர்புபட்ட விடயங்களும் முதன்மை பெறுகின்றன. இங்கே மூளைக்கும் இதயத்திற்குமான இடை வெளியைக் குறைத்து, அதே நேரம் இரண்டையுமே வளர்த்துச் செல்லுகின்ற செயலை கல்வி நிறுவனங்கள் இலக்காக கொள்ள வேண்டும். மனிதநேயத்துடன் கூடிய பண்பு விருத்தியுடன் அறிகை விருத்தி செய்வதே தரம் பெற்ற கல்லூரிகளின் செயற்பாடாகும்.

தற்காலத்திலே போலியான நடவடிக்கைகளை போற்றுவதும் பிழையானவற்றைச் சிறப்பாகச் செய்வதும் வேகமாக நடைபெறுவதைக் காணலாம். வெற்றுப்புகழுக்கு கல்விப் புலம் அடிபணியாமல் எச்சரிக்கையாக இருக்கவும் தவறுகளை பூச்சியமட்டத்தில் வைத்திருக்கவும் பழகுதல் வேண்டும். தமது கடமைகளில் இருந்து விலகுதல், பிறர் மீது குற்றம் காணுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்

வேண்டும். விக்கினேஸ்வரக் கல்லூரி அன்னையின் பழைய மாணவர்கள் ஒற்றுமையாக இருந்தால் தங்கள் பிள்ளைகளையும் விக்னேஸ்வராவில் இணைத்து "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற கோட்பாட்டிற்கு வலுச்சேர்க்கலாம்.

இம் மலரினைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்ட நூற்றாண்டு நிறைவு மலர்க்குழுவினர்க்கும், பதிப்பித்த அன்றா அச்சகத்தினருக்கும் நன்றிகள்..

கல்லூரியின் வளர்ச்சியோடு இணைந்திருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக ஸ்தாபகரின் குலதெய்வமான வெல்லன் விநாயகரின் அருளாசி எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.



# பதிவியல்




# எமது அதிபர்




திரு.க.மு. கனகலிங்கம் B.A., PGDE, M.Ed, M.Phil (Ed).



**திரு.க. மனோகரன். B.Sc, PGDE**
**பிரதி அதிபர் ( கல்வி முகாமை )**



**திரு.ந.நந்தன்.National Dip. in Teach, BIT, B.Ed.**
**பிரதி அதிபர் ( நிர்வாகம் )**



**திரு.சு.சுதாகரன் B.A (HONS), PGDE, M.Ed.**
**பிரதி அதிபர் ( கல்வி அபிவிருத்தி )**



புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடம்



"மதர் ஸ்ரீலங்கா" செயற்றிட்டத்திற்கான விருது பெறும்போது



தேசிய ரீதியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில (2008) தமிழ் அறிவு வினாவிடைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாணவிகள்







# கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை (விக்னேஸ்வரா - ஒரு கண்ணோட்டம், மீள்பதிப்பு)



**கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி**
**பேராசிரியர் , யாழ். பல்கலைக்கழகம்**
**( பழைய மாணவன்)**

**கரவெட்டியின் வரலாறு மிகச் சுவாரசியமானது.**

ஈழத்துத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் முக்கிய இடம்பெறும் ' கரவை வேலன் கோவை' யின் களம் கரவெட்டியே. கரவெட்டியைச் சேர்ந்த வேலாயுத முதலியார் பற்றிய இந்நூல் உள்ளூர்ப் பிரபுத்துவ பரம்பரை பற்றித் தோன்றிய முதல் ஈழத்து நூலாகும். " சமயச் சார்பற்ற தேசிய நிலை நின்ற ( ஈழத்துத் தமிழ் ) இலக்கியத்தின் கால்கோளாக இந்நூலினைக் கொள்ளல்வேண்டு" மென்று பிறிதோரிடத்தில் கூறியுள்ளேன்.

கரவை வேலன் கோவையின் களமாக அமைந்தது முதல், கதிர்காமநாதன் என்ற சிறுகதை எழுத்தாளன் தோன்றியது வரை, கரவெட்டி ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாத இடத்தினைப் பெற்றுக்கொண்டே வந்துள்ளது.

1930 களில் அரசினர் சேவையில் தமிழாசிரியர்களாகக் கடமையாற்றியோரில் கணிசமானோர் கரவெட்டியைச் சேர்ந்தவர்களே. என்னுடைய தகப்பனாருடைய நண்பரான சக பண்டிதர் ஒருவர் ( கரணவாயைச் சேர்ந்தவர்) " கற்றோர் மிகுந்த கரவெட்டி" என்று செய்யுள் நிலைப்படக் கூறுவார்.

இந்தக் கல்வி வளத்துக்குக் காரணம் கரவெட்டியின் கல்வி வளம் எனலாம். பாரம்பரியச் சமூக அமைப்பிற்கு அதிக ஊறு விளைவிக்காத வகையில், ஆனால் கல்வி நிலைப்பட்ட சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கத்துக்கு இடமளிக்கும் வகையில் இங்கு பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்காலச் சமூக நிலைமையில் இதுவே ஒரு பெரிய சமூக சாதனை எனலாம்.

இந்தச் சமூக சாதனையின் எடுத்துக்காட்டுகளாக விளங்கும் / விளங்கிய பாடசாலைகள்

விக்னேஸ்வரக் கல்லூரி,

சரஸ்வதி வித்தியாசாலை,

மாணிக்கவாசகர் வித்தியாலயம்,

விநாயகர் வித்தியாசாலை என்பனவாகும்.

விக்னேஸ்வரக் கல்லூரிதான் ஆங்கிலக்கல்வி மையமாக விளங்கியது. இதன் வரலாற்றினூடே கரவெட்டியின் சமூக வரலாறு தொக்கி நிற்கின்றது.

இந்த நான்கு பாடசாலைகளையும் நிறுவியவர்கள் கரவைச் சிற்றம்பலம் முதலியாரும் , அவர் குடும்பத்தினருமே. "சித்தமணி" யத்தின் வரலாறு எழுதப்பட வேண்டிய ஒன்று. வடமராட்சிப் பகுதியில் முக்கிய இடம் பெறும் கிறிஸ்தவம், கரவெட்டி கிராமத்தினுட் பெரிதும் வராது நின்றமைக்கு இவரது சமய- சமூக நடவடிக்கைகள் பல காரணமாகும்.

யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவத்தின் கொடுமைகளைச் சித்தரித்த டானியல், சிந்தாமணியத்தின் சமூக முற்போக்கு நடவடிக்கைகளை அவதானித்துக் குறிப்பிட்டுள்ளது (தண்ணீர்) ஒரு சுவாரசியமான அம்சம்.

கிறிஸ்தவக் கல்லூரிகள், பாடசாலைகளுக்கிடையே இந்த நான்கு "சைவத் தமிழ்க் கல்வி நிறுவனங்கள்" ஒரு பண்பாட்டுப் பேணுகைப் பணியையும் செய்ய முயன்றுள்ளன என்பது தெரிய வரும்.

இதனாலோ என்னவோ கரவெட்டியில் பழைமைப் பேணுகை இன்னும் வலுகுன்றாது காணப் படுகின்றது.

அத்தகைய சிறு குறைபாடுகள் தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வுகள். அவற்றினூடே காணப்படும் உடனிலை (Positive) அம்சங்களையும் அவதானித்தல் வேண்டும். அந்த உடனிலை அம்சம் கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமையாகும்.


மண்ணில் தொடர்பு அற்றுப் போகாத வகையில் முன்னேற்றங்களை எட்டிப்பிடிக்கும், உள் வாங்கி மேலெழும்பும் ஒரு சமூக ஆற்றலைக் கரவெட்டியின் பண்பாடு நமக்கு தந்துள்ளது.

நாம் எங்கிருந்தாலும் நமது பாரம்பரியத்தில் இருந்து அந்நியப்பட்டவர்கள் அல்லர். இந்த ஆற்றல், வன்மை கரவெட்டியின் "பலம்" எனலாம். கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை இதனுள் உண்டு.

இந்தப் பண்பாட்டு ஆளுமை வளர்ச்சியில் விக்னேஸ்வரக் கல்லூரிக்கு ஒரு முக்கியமான இடமுண்டு.

விக்னேஸ்வரா கரவெட்டியின் சின்னம்.

அதன் வளத்தைப் பெருக்குவது கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமையை வளர்ப்பதாகும்.



# தொட்டிற்பழக்கம் சுடுகாடு வரை

**எம். சிவசிதம்பரம்**
**இக்கட்டுரை 2002 ஜூன் 7ஆம் திகதி யாழ். தினக்குரலில் வெளியானது**

**ஆ**ங்கிலக்கல்வி பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே என்ற காலகட்டத்தில் வறிய கிராமம், கரவெட்டியில் ஏழைக் குடும்பங்களிலும் உள்ள பிள்ளைகள் ஆங்கிலக்கல்வி கற்க வழிவகுத்த பெருமை விக்னேஸ்வராவைச் சாரும். சிறந்த கல்வி புகட்டியதும் அல்லாமல், அக்கல்வி ஏழை, பணம் படைத்தவர்கள், உயர் சாதி, குறைந்த சாதி என்ற வித்தியாசமில்லாமல் புகட்டப்பட்டது. இதைச் செய்வதற்கு உதவியாயிருந்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கு விசேடமாகக் கடல் கடந்து திருவனந்த புரத்திலிருந்து வந்த பட்டதாரி ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள்.

இதுவே ஓர் சாதனையாயினும், இலங்கையில் வேறு எந்தக் கல்லூரிக்கும் இல்லாத பெருமை நமது கல்லூரிக்கு உண்டு. அதுதான் கல்லூரியின் அன்றாடநிர்வாகத்தை மாணவ மாணவிகளோடு ஒரு நாடாளுமன்ற அமைப்பின் மூலம் பல ஆண்டுகளாக நடத்தியது. இம்முறையை முதன் முதலாக அதிபர் இராமசாமி 1927 இல் ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து வந்த அதிபர்கள் அம்முறையை மேலும் சீர்படுத்தி, மெருகூட்டி நடத்தி வந்தார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஒப்ப பிரதிநிதிகளை அந்த மாணவ மாணவிகள் தெரிவு செய்வார்கள். அப்படி எல்லா வகுப்புகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கள் சேர்ந்து நாடாளுமன்றத்தை அமைத்தார்கள். இவர்கள் ஓர் நல்ல நாளிற்கூடி, சபாநாயகர், பிரதம மந்திரி, மந்திரிகள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைத் தெரிவு செய்வார்கள். மந்திரிகளின் எண்ணிக்கை தேவைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும். நாடாளுமன்றத்திற்குத் தேவைப்படும் பணத்தை, அதிபர் நிதி மந்திரியிடம் கொடுப்பார். வருட ஆரம்பத்தில் நிதி மந்திரி கொடுக்கப்பட்ட பணத்தை எவ்வகையில் செலவு செய்வது என்பதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும். இதன் படிதான் பணத்தைச் செலவு செய்ய வேண்டும். இத்தனை வருடங்களில் பணம் வீணாக செலவு செய்யப்பட்டதாக அல்லது கையாடப்பட்டதாக எந்த நிதி மந்திரி மேலும் குறை கூறப்படவில்லை.

பொறுப்பைக் கொடுத்தால் அதைச் சிறந்த முறையில் இளைஞர்கள் செயல்படுத்துவார்கள் என்பது தெளிவாகின்றது. மாதம் இரு முறை நாடாளுமன்றம் கூடும். எல்லா மாணவ மாணவிகளும் கூட்டத்திற்கு வரலாம், விவாதங்களில் பங்குகொள்ளலாம். ஆனால், வாக்களிக்கும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும்தான் உண்டு.

சுகாதாரத்துக்குப் பொறுப்பாக ஒரு மந்திரி. வகுப்பறைகளும், முற்றமும் மிகச் சுத்தமாக வைத்திருப்பது இவர் பொறுப்பு. மாணவ மாணவிகளும் கல்லூரி வேலையாட்களும் இவருக்கு உதவி புரிவார்கள்.

மாணவ மாணவிகளின் ஒழுக்கநெறிக்கு ஓர் மந்திரி. மாணவ மாணவிகள் நேரம் தவறாமல் வருவதும், தேவையில்லாமல் சத்தம் போடுவதும், தங்களுக்குள் வீண் சச்சரவு உருவாகாமல் தவிர்ப்பதும், இந்த மந்திரி பார்க்க வேண்டிய கடமைகள். மாணவ மாணவிகள் குற்றம் புரிந்தால் அவர்களுக்குப் புத்திமதி கூறும் உரித்து இவருக்கு உண்டு. ஆனால் கண்டிக்கும் உரித்து இவருக்கு இல்லை. அது அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் தான் உண்டு. இந்த மந்திரி செய்யும் கடமைகள் மறு கல்லூரிகளில் பிரிபெக்ட் (Prefect) அல்லது மொனிட்டர் (Monitor) செய்வார்கள். இவர்கள் அதிபரால் நியமிக்கப்பட்டவர்கள். எனவே இயற்கையாகவே மாணவ மாணவிகள் மத்தியில் ஒரு எதிர்ப்பு மனநிலை உருவாகின்றது. மேலும் பிரிபெக்ட் அல்லது மொனிட்டர் பாரபட்சமாகவோ அல்லது நியாயமற்ற முறையிலோ நடந்தால் அதிபர்தான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், எங்கள் கல்லூரியில், தாங்கள் தெரிவு செய்தவர்கள் தான் மந்திரி. எனவே, அவருக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று மாணவ மாணவிகள் நினைப்பார்கள். மேலும் அவர் நியாயமில்லாமல் நடந்தால், நாடாளுமன்றத்தில் அவரைக் கேள்வி கேட்கவோ, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அகற்றும் உரிமை தமக்கு உண்டு என்று தெரிவதால், ஒழுக்கத்தைப் பேண முழு ஒத்துழைப்பும் நல்குவார்கள்.

விளையாட்டுத்துறைக்கு ஓர் மந்திரி, மாணவ மாணவிகள் வெவ்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்ற வசதி செய்தல், போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சிக் குழு ஒழுங்கு செய்தல், வேறு கல்லூரிகளிலிருந்து எங்கள் கல்லூரிக்கு வரும் கோஷ்டிகளை வரவேற்றல், உபசரித்தல் போன்றவை இவரின் கடமைகள்.

சமய நெறியைப் பேண இன்னும் ஒரு மந்திரி. கல்லூரி ஆரம்பிக்க முன் தேவாரம் ஓதுதல், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூஜைகளுக்கு ஒழுங்கு செய்தல், இந்துக்கள் அல்லாத மற்ற சமயங்களைச் சார்ந்தவர்களுக்கு அவர்கள் பிரார்த்தனை செய்ய ஒழுங்கு செய்தல், காலத்திற்குக் காலம் சமயச் சொற்பொழிவு செய்வதற்கு ஒழுங்கு செய்தல் இவரின் முக்கிய கடமையாகும்.

ஓர் கல்லூரியின் கல்வி புகட்டலுக்கு அப்பால் உள்ள நடவடிக்கைகளுக்கு, மாணவ மாணவிகளால் தெரிவுசெய்யப்பட்ட மாணவ மந்திரிகள் பொறுப்பாக இருந்தார்கள். இந்த முறை சிறப்பாக நடந்தபடியால் தான் பல ஆண்டுகளாக வெவ்வேறு அதிபர்களின் கீழ் இம்முறை தொடர்ந்தது. பொறுப்பான கடமைகளைக் கொடுத்தால் பொறுப்புணர்ச்சியுடனும், கண்ணியத்துடனும், கடமையுணர்வுடனும் இளைஞர்கள் செயற்படுவார்கள். இதற்கு விக்னேஸ்வரக் கல்லூரி நாடாளுமன்ற முறை ஓர் எடுத்துக்காட்டு.

நாடாளுமன்றக் கூட்டம் தொடங்கி, சில நிமிடங்களுக்கு மந்திரிகளைக் கேள்வி கேட்கலாம். மந்திரிகள் தக்க பதில் சொல்லாவிட்டால், பிரதம மந்திரியும் சபாநாயகரும் அவர்களைக் கண்டித்து, அடுத்த கூட்டத்தில் பதில் கொடுக்க வற்புறுத்துவர். சபாநாயகர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவார். பிரதமமந்திரி எல்லா மந்திரிகளின் கடமைகளை ஒருங்கிணைப்பதோடு, நாடாளுமன்றத்திற்கும் அதிபருக்கும் பாலமாக இருப்பார்.

கேள்வி நேரம் முடிந்தவுடன் பிரதமமந்திரி ஏதும் பிரேரணை இருப்பின் அதை முன்மொழிவார். அதில் விவாதம் நடந்து வாக்கெடுக்கப்படும். இதைப் போல தனிப்பட்ட அங்கத்தவர்களும் பிரேரணை களைக் கொண்டு வரலாம். ஆனால், அவைகளுக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

இவைகளுக்கு மேலாக உலக விவகாரங்கள், பொது விடயங்கள் இவைகளைப் பற்றி விவாதங்கள் நடக்கும். வெள்ளைக்கார அரசாங்கம், மகாத்மாகாந்தியை சிறையிலடைத்த பொழுது, அவரை உடனே விடுதலை செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தோம். சீதனம் வாங்கும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென விவாதித்தோம். இப்படிப் பல முக்கியமான, ருசிகரமான விவாதங்கள் விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தில் நடந்துள்ளன.

எமது கல்லூரியின் சரித்திரத்தில், நாடாளுமன்றப் பயிற்சியால், என்றும் மறக்க முடியாத ஓர் நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட வேண்டும். 1930 ஆம் ஆண்டு ஆசிய ஜோதி பண்டிதநேரு இலங்கைக்கு வந்தபோது நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறைக்குச் சென்றார். எமது கல்லூரி மாணவ மாணவிகளும், பொதுமக்களும் நெல்லியடிச் சந்தியில் பெரியாருக்கு ஒரு வரவேற்புக் கொடுத்தார்கள். கல்லூரி நாடாளுமன்றத்தின் சார்பில் அவரை வாழ்த்தி ஒரு மடல் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதன் கடைசி வாக்கியம் "We Will Not Falter" (நாங்கள் நிலை தவறோம்). வழக்கமான வசீகரப் புன்சிரிப்புடன் மடலைப் பெற்றுச் சென்றார். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ முக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார். ஆனால், தனது சுயசரித்திரத்தில் (Autobiography) இந்த நிகழ்ச்சியை விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார். கல்லூரியின் பெயர், வரவேற்பு நடந்த இடத்தின் பெயர் எல்லாம் மறந்து விட்டார். ஆனால் அந்தக் கடைசி வாக்கியம் "We Will Not Falter" அவர் நினைவில் நிலைத்து நின்றது. அவரின் சுயசரிதையில் இந்த நிகழ்ச்சியை வாசிக்கும் பொழுது என் நெஞ்சம் பெருமையால் நிறையும்.

விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தில் பயிற்சி பெற்ற மூவர் நாட்டின் நாடாளுமன்றம் சென்றோம். திரு.கந்தையாவும், திரு.ஜெயக்கொடியும் நானும், இலங்கை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு, திறமையாக நமது கடமைகளை ஆற்றினோம். கண்ணியமான உறுப்பினர்கள் என்று பெயரும், புகழும் பெற்றோம். இதற்கு முக்கிய காரணம் நாம் கல்லூரி நாடாளுமன்றத்தில் பெற்ற பயிற்சியே.


என்னுடைய காலத்தில் நாடாளுமன்றத்தின் மந்திரியாக, பிரதம மந்திரியாக, சபாநாயகராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளேன். ஏதோ, கல்லூரி முகாமையாளரின் பேரன் என்பதால் தெரிவு செய்யப் படவில்லை. ஏனெனில், மூன்று தருணங்களில் படுதோல்வியும் அடைந்திருக்கின்றேன். இதனால் வெற்றியையும், தோல்வியையும் சமனாகப் பாவிக்கும் மனோபாவம் கிடைத்தது. வாழ்க்கையில் இது மிக அவசியம்.

விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தின் பயிற்சியினால், எனக்குக் கிடைத்த வேறு ஒரு நற்பண்பைக் குறிப்பிட விரும்புகின்றேன். விக்னேஸ்வரா நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது, திரு.கோவிந்தப்பிள்ளை ஆசிரியர் ஓர் உபதேசம் தந்தார். இந்தப் பதவியில் இருக்கும் பொழுது நடுநிலை தவறாமல், எதிரியையும் நண்பனையும் சமனாகப் பாவித்து நேர்மையான தீர்வு வழங்க வேண்டும். இலங்கையின் உப சபாநாயகராக, சபாநாயகர் ஆசனத்தில் முதன் முதல் அமர்ந்த பொழுது, இந்த அறிவுரையை நினைவுகூர்ந்து கொண்டேன். நடைமுறையிலும் அப்படி நடந்து கொண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1967இல் திருமதி பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார். அவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு அரசாங்கக்கட்சிப் பிரதிநிதி, தங்கள் கட்சியின் அமைச்சரிடம் திருமதி பண்டாரநாயக்கவின் ஓர் மோட்டார் வாகனம் வாங்கிய விடயமாகக் கேள்வி கேட்டார். விளக்கமில்லாத ஓர் பதில் திருமதி பண்டாரநாயக்கவிற்கு சற்று பாதகமாக இருக்கும் கேள்வியும் பதிலும் என்ற முறையாகையால், திருமதி பண்டாரநாயக்கவிற்கு விளக்கம் கொடுக்க வசதியில்லை. இந்த விடயத்தைக் கேள்வி, பதில் மூலம் எழுப்ப முடியாது என்று நான் கூறி கேள்வி கேட்க இடம் கொடுக்கவில்லை. தேவையெனின், தனிப்பட்ட பிரேரணை கொண்டு வரலாம் எனத் தீர்ப்புச் சொன்னேன். பிரேரணை கொண்டு வந்தால் திருமதி பண்டாரநாயக்க விளக்கம் கொடுக்கலாம். இது நியாயமான, நேர்மையான தீர்ப்பு என்று டாக்டர் என்.எம்.பெரேரா போன்றவர்கள் பாராட்டினார்கள்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்" போல விக்னேஸ்வர நாடாளுமன்றப் பயிற்சி, வாழ்க்கை முழுவதும் நின்று உதவி செய்தது.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் ஆரம்பக்கல்வியை மேற்கொண்ட கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை கடந்த பெப்ரவரியில் அவருக்கு வரவேற்பு விழாவொன்றைக் கொழும்பில் நடத்தியது. அதனையொட்டி சிவசிதம்பரம் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையொன்று இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.**



# கரவெட்டி விக்னேஸ்வராப் பாரம்பரியமும் அங்கு நான் பெற்ற அனுபவங்களும்

-தெணியான்-

கல்விக்கூடங்கள் யாவற்றுக்கும் அவைகளுக்கென்று குறிப்பிட்டுக் கூறத் தகுந்த தவிர்க்க இயலாத ஒரு வரலாறு இருந்து வரவே செய்கின்றது. ஒரு கல்விக்கூடம் ஆரம்பித்த காலம் முதல் இற்றைவரை தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ள நிகழ்வுகளின் வரன் முறையான மொத்தத் தொகுப்பே அத்தாபனத்தின் வரலாறு எனப்படும். தனக்கென்றொரு வரலாறு இல்லாத கல்விக்கூடம் எதுவும் இருக்கவே முடியாது. அதேசமயம் கல்விக்கூடங்கள் யாவும் தனித்துவமான போற்றத்தகுந்த பாரம்பரியத்தைக் கொண்டவைகளாக விளங்குகின்றனவெனக் கூறிவிடவும் இயலாது. பாரம்பரியம் என்பது தொன்மை மரபு. வரலாற்றில் இருந்து பாரம்பரியத்தைப் பிரித்து நோக்குதல் சாத்தியமான ஒன்றன்று. பாரம்பரியம் என்பது குறித்த தாபனத்தின் வரலாற்றுக்கு முற்பட்டதாகவும், வரலாற்றுடன் இணைந்ததாகவும், வரலாற்று ஓட்டத்துடன் பிணைந்து வருவதாகவும் இனங்காணப்படுகின்றது. ஆயினும் பாரம்பரியத்துக்குப் பிரத்தியேகமான ஒரு முக்கியத்துவமுண்டு. ஒரு தாபனத்தின் வரலாற்றுச் சிறப்புக்கு இந்தப் பாரம்பரியம் பிரதான அடிப்படைக் காரணியாக அமைந்து விடுகின்றது

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி ஏனைய கல்லூரிகள் போன்று தனக் கென்று ஒரு வரலாற்றினைப் பொதுவாகக் கொண்டுள்ளதெனினும் ஏனைய பெரும்பாலான கல்லூரிகளுக்கு இல்லாத ஒரு பாரம்பரியச் சிறப்பினை உடையதாக உயர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரிக்குரிய பாரம்பரியத் தொன்மை மரபினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனின் இக்கல்லூரித் தாபனம் தோன்றிய காலம், இதன் தேவைப்பாடு, தோற்றுதற்குரிய பின்னணி என்பவற்றினைப் பூரணமாக விளங்கிக்கொள்ளுதல் அவசியமானது.

இந்த நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சி அதிகாரம் கோலோச்சிய காலத்தில், அரச உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்ள நாட்டங்கொண்ட சுதேசிகளுக்கு ஆங்கிலமொழி அறிவு கட்டாயமாக தேவைப்பட்டது. அதனால் பட்டணம் சார்ந்த இடங்களில் தாபிக்கப்பெற்ற கிறிஸ்தவக் கல்லூரிகளை நாடி வசதி படைத்த குடும்பங்களிற் பிறந்த மாணவர்கள் சென்று கற்றார்கள். அவர்கள் ஆங்கிலக் கல்வி அறிவைப் பெற்றுக் கொண்டதுடன் சலுகையை நோக்கமாகக் கொண்டு

கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இந்துக்கள் அரச உத்தியோகங்களை சுகிப்பதற்காகவும் சலுகைகளைப் பெறுவதற்காகவும் இவ்வாறு கிறிஸ்தவர் களானார்கள் என்பதே உண்மை. கிராமப்புறங்களில் வாழ்ந்தவர்கள் பட்டணத்துக் கல்லூரிக்குச் சென்று ஆங்கிலக் கல்வியைப்பெறும் வசதி அற்றவர்கள், மதம் மாறுவதனை வன்மையாக நிராகரித்து எதிர்த்தவர்கள். இதனால் பெரும்பாதிப்புக்குள்ளானார்கள். கிராமியச் சூழலில் ஆங்கிலக் கல்வியை இந்துக்கள் கற்று அரச உத்தியோகங்களைப் பெற்று தேசிய நீரோட்டத்தில் கலந்து வாழவேண்டிய கட்டாய தேவையின் பொருட்டு திட்டமிட்டு உருவாக்கப்பட்டதே கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி. ஆங்கிலக் கல்வி அறிவைப் பெறுவதுடன் இந்துமதத்தினைப் பாதுகாக்க வேண்டு மென்னும் பிரதான நோக்கம் இந்தக் கல்லூரிப் பாரம்பரியத்தின் மிக முக்கிய அம்ச மெனலாம். இக்கல்லூரியைத் தமக்கென்றுரிய விசேட பாரம்பரியத்தை உடைய கரவெட்டி சிற்றம்பலம் மணியகாரன்(சித்தமணியம்) அவர்கள் நன்கு திட்டமிட்டு 1917இல் நிறுவினார்.

சிற்றம்பலம் மணியகாரன் அவர்களுக்கும் இந்தக் காலகட்டத்தில் நிறுவப்பெற்ற தேவரையாளி இந்துக் கல்லூரியைத் தாபித்த சைவப்பெரியார் கா.சூரன் அவர்களுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. சிற்றம்பலம் மணியகாரன் அவர்களுக்கும் சூரனுக்குமிடையே சௌசன்னியமான ஓர் உறவு நிலை இருந்து வந்திருக்கின்றது. மணியகாரன் அவர்கள் பின்னணியில் இருந்து தேவரையாளி இந்துக் கல்லூரியை ஆசாரியார் கா.சூரன் நிறுவுவதற்குப் பல ஆலோசனைகளை வழங்கி வழி நடத்தி வந்துள்ளார். அக்கல்விக் கூடத்திற்குத் தேவரையாளி சைவ வித்தியாசாலை எனும் நாமத்தை அக்காலத்தில் சூட்டியபெருமையும் மணியகாரன் அவர்களையே சாரும் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி , கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகிய இரு கல்விக் கூடங் களுக்கு மிடையே மணியகாரன் ஊடாக ஒரு பிணைப்பு இழையோடிக் கொண்டிருக்கின்றது. குறித்த ஒரு பகுதி மக்கள் மத்தியில் சைவமும் தமிழும் வளர்ப்பதற்கென்று தோற்றுவிக்கப் பெற்ற தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றுத்தேறி, உயர்ந்த வகுப்பில் இணைந்து கல்வி கற்ப தற்காக விக்னேஸ்வரக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தேன், அதன் பின்னர் எனது நட்பு வட்டம் விரிவடைந்தது. நண்பர்கள் பலரை நான் சம்பாதித்துக் கொண்ட போதும், குறிப்பாகக் கூறுவ தானால் செ.கதிர்காமநாதன் அவர்களுடன் ஒரே வகுப்பிற் கல்வி கற்றேன். இருவரும் நெருக்கமான நல்ல நண்பர்களாக இருந்தோம். கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களால் வெளியிடப்பெற்ற ''கலைஒளி''என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக அவர் செயற்பட்டார். பிற்காலத்தில் சிறந்த ஓர் எழுத்தாளராக விளங்கிய அவர்,விக்னேஸ்வரக் கல்லூரியின் தனது மாணவப் பருவத்தின் ''ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குப் போகிறான்''என்னும் பிரபலமான சிறுகதையின் மூலம் பதிவு செய்திருக்கின்றார். அவ்வாறே எனது அனுபவங்கள் சிலவற்றை தமிழ்நாடு எழுத்துப் பிரசுர வெளியீடாக 2011இல் வெளிவந்திருக்கும் "என்னும் சொல்லாதவை" என்னும் நூலிற் பின்வருமாறு நான் பதிவு செய்திருக்கின்றேன்.

வாத்தியார் வந்த கதை இருக்கிறது. உபாத்தியாயர், உபாத்தியார் ஆகி வாத்தியாராக வந்தவர், முந்தி சட்டம்பியார் என்றும் சொல்லுகிறது. வலு பொல்லாத ஆட்கள் அடிகாரர் கொடுமைக்காரர். ஆனால் ஊருலகத்தில் நல்ல மதிப்பு. கஞ்சிக்குப் பயறு போட்டது போலத்தான் பிரம்பில்லாதவை. எல்லாற்றை கையிலும் பிரம்பிருக்கும் .பிரம்பு காசு கொடுத்து வாங்கிறது. ''அடியாத மாடு படியாது''என்று சொல்லுவார்கள். அது அவர்களின் கல்விக் கொள்கை. அடித்தால் மாடும் படியாது என்று சொல்லேலாது என்றது கொள்கை விளக்கமாக இருந்திருக்கக்கூடும். பிறகு தான் படியாது என்றது படிக்கிறதல்ல. புத்தி வளர வளர எல்லாத்துக்கும் புது விளக்கந்தான். ஏன் இந்தத் திருக்குறளுக்கு எத்தனை விளக்கம்? இந்த விளக்கங்களாலே''திருவள்ளுவர் திடுக்கிடுவார்''என்றொரு புத்தகம் வந்தது. நாமக்கல் கவிஞர் எழுதியது.

வாத்தியாரின் அடிக்கு என்ன புதுக்கருத்து? வாத்தியார் சொல்லிச் சொல்லி அடித்ததுதான் கருத்து. அடி என்றால் "அந்த இந்த மாதிரி"என்று சொல்லேலாது அப்பிடி அடி அதுக்கு உதாரணம் இல்லை. வேணுமென்றால் இப்ப சொல்லுகிறது போல "அந்தமாதிரி"அடி எனலாம். ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒழுக்கம் முதல் பிறகுதான் படிப்பு. அவர்களின் அடியில் நிமிர்ந்தவை கொஞ்சப்பேர். சில பேர் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டினம். வாத்தியார் அடித்தால் ஆருக்குப் போய்ச் சொல்லு கிறது? ஐயா, அம்மாவும் வாத்தியார் பக்கந்தான். வீட்டில் சொல்லி அங்கேயும் ஆறேலாது, பிறகு வாங்கிக் கட்டவேண்டிவரும். வாத்தியார் பிழைவிடமாட்டார் என்றது முடிஞ்ச முடிவு. அது பிழை என்றும் அப்ப சொல்லேலாது.

இப்ப என்றால் "கோட்"டிலே வழக்குப் போட்டு விடுவினம். மாஸ்ரர் "கோட்"டுக்குப் போவேணும். அடித்தால் சிறுவர் துஷ்பிரயோகம் என்று சொல்லுவினம். இதென்ன துஷ்பிரயோகமா? துஷ்பிரயோகம் செய்கிறது அடிச்சா? உண்மையா விளங்கவே இல்லை. துஷ்பிரயோகம் என்று இப்ப கனசங்கதிகள் சொல்லுகினம்,எல்லாம் குழப்பமாக இருக்கின்றது.

அந்தக் காலத்தில் ஒரு குமர்ப்பிள்ளையோடு கதைக்லோது. அதுக்கும் தனியக் கதைச்சாப் போச்சு. உடனே விசாரணை பிறகு தண்டனை. சில நேரம் பள்ளியில் இருந்து கலைப்பு. அதுக்குப் பிறகு தெருவில் நின்று "தேவதாஸ்"கதை சொல்லவேண்டியது தான். புத்தகங்களுக்குள்ளே மறைச்சுக் கிறைச்சு ஒரு பொம்பிளைப் படம் வைத்திருக்கேலாது. கண்டால் துலைஞ்சுது. அடிச்சுக் சொல்லுவினம் அல்லது வீட்டுக்கு அனுப்புவினம்.

பொம்பிளைப் படத்தால் எனக்கொரு அனுபவம்,அதைச் சொல்ல வேணும், சொல்லுகிறதில் எனக்கொரு வெட்கமுமில்லை.

நான் அப்ப கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். ஏச்.எஸ்.ஸி வகுப்பு. இப்பவுள்ள ஏ.எல் அன்றைக்கொரு வெள்ளிக்கிழமை காலை நேரம் பிரார்த்தனை நடக்கும். பிரார்த்தனையைத் தவிர்க்கிறது என்னுடைய நோக்கம். திராவிடக்கழகப் புத்தகங்கள், இங்கர்சால், எமிலிசோலே, வெ. சுவாமிநாதசர்மாவின் மொழிபெயர்ப்புக்கள் என்று நிறைய வாசித்திருந்தேன். புதிதாகப் புததகங்கள் படிக்கிறவர்களுக்கு வாறது ஒரு வியாதி. "எல்லாம் தெரிஞ்சநோய்"அப்ப எனக்கு இன்னொரு விதமான போக்கு. மதம் என்றால் வெறுப்பு. கோயிலுக்குப் போறதில்லை. அதுக்கு வேறு நியாயமும் இருந்தது. எங்களைத்தானே கோயிலுக்குள்ளே விடுகிறதில்லை. முதல் நாள் வாங்கின புத்தகமும் கையில் இருந்தது. தாமதமாகக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தேன். பிரார்த்தனைதொடங்கிவிட்டது.

நான் வகுப்பறைக்குள்ளே போய்ப் புத்தகம் வைத்துவிட்டு, புதிய புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினேன். தொடராகப் பல வகுப்பறைகள், குறுக்குச்சுவர்கட்டிப் பிரிக்கப்பட்டிருந்தன. நீட்டு விறாந்தைப் பக்கம் உயரமில்லாத சின்னச் சுவர். எதிர்ப்பக்கம் முக்காற் சுவர். கொஞ்சநேரம் கழிஞ்சிருக்கும் உப அதிபர் விறாந்தையில் வந்து கொண்டிருந்தார். கையில் பிரம்பு. பிரார்த்தனைக்கு மட்ட மடிச்சுப் போட்டு இருக்கிறவர்களுக்கு "இரண்டு குடுத்து"அனுப்பிவிடுகிறது. இவர் வருகையின் நோக்கம் வளர்ந்தவர்கள் என்று பார்க்கமாட்டார்கள். நான் இண்டைக்கு வாங்கப் போகின்றேன். புத்தகத்தில் முழுக்கவனமாக இருப்பது போலஅவரைக் கவனியாது இருந்தேன். ஒவ்வொரு வகுப்பறையாக அவர் பார்த்துக்கொண்டுவந்தார். எனது வகுப்பறைக்கு அருகே வந்தார். நான் இருப்பதைக் கண்டு கொண்டார். ஆனால் காட்டிக் கொள்ளாமல் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டு கடந்து போனார்.

அப்பா...! நின்ற மூச்சு எனக்குத் திரும்பவந்தது. தப்பிவிட்டேன். நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டு புத்தகத்துள் புகுந்தேன்.

எல்லாம் சில விநாடிகள் தான். போனவர் சடாரென்று திரும்பிவந்தார். அவருக்கு முகம் இறுகிச் சிவந்திருந்தது. கண்களில் கோபக்கனல். விறாந்தையில் நின்று பிரம்பை நீட்டி,"அந்தப் புத்தகத்தைக் கொண்டு வா"என்றார். நான் பணிவாக எழுந்து வகுப்பறைக்கு வெளியே வருகின்றேன். புத்தகத்தை அவர் கையில் கொடுத்துவிட்டு அடக்க ஒடுக்கமாக நின்றேன். வாங்கினவர் அட்டைப் படத்தைக் கவனமாகப் பார்க்கிறார். புத்தகத்தை விரித்து இடையிடையே படித்துப் பார்க்கின்றார். அவர் முகம் மாறுகிறது. கோபம் மாறி மலர்கிறது. என்னை நெருங்கி வந்து புத்தகத்தை கையில் தருகிறார். எனது தோளில் ஆதரவாக மெல்லத் தட்டுகிறார். "போயிருந்து படி"சொல்லிப் போட்டு திரும்பிப் போகிறார்.

நான் திரும்பவும் வந்து எனது ஆசனத்தில் அமருகிறேன்.அந்தப் புத்தகத்தின் அட்டைப் படத்தைத் திருப்பிப் பார்க்கிறேன். நல்லவடிவான ஒரு பெண்ணின் உருவம் அந்தப் படம் என் மீது சந்தேகத்தை அவருக்குக் கிளப்பிவிட்டது. அட்டையில் அழகான பெண்ணின் உருவம் தாங்கின அந்தப் புத்தகம் எது தெரியுமா?

கலைஞர் மு.கருணாநிதி எழுதின "குறளோவியம்"வாசிக்கிறதால் நன்மை மட்டுமா கிடைக்கும்? மாறுபாடாகவும் கிடைக்கும். எனக்கு அப்பிடிக் கிடைத்திருக்கிறது. அந்த ஓலத்தைச் சொல்லாமல் விடக்கூடாது.

ஒரு நாள் ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை. பாடம் நடக்கவில்லை. எங்களுக்கு ஒரே கொண்டாட்டம். எங்கள் வகுப்பறையில் ஒரு பக்கத்தில் மூன்று வரிசை. எதிர்ச்சுவரில் கரும்பலகை. கரும்பலகைக்கு முன்னால் கொஞ்சம் இடது பக்கம் அண்டி ஆசிரியர் மேசை. இப்ப போல பொம்பிளைப் பிள்ளையள் கனக்கப் படியாத காலம். எங்களுடைய பக்கத்து முன் வரிசை ஒன்றிலே மாத்திரம் பொம்பிளப்பிள்ளை. நாங்கள் கதைக்கிறது எல்லாம் அவர்களுக்கு கேட்கும் கள்ளியள், கேளாதது போல கேட்டுக்கொண்டிருப்பினம்.

நான் முதல் நாள் பெரியாருடைய புத்தகம் ஒன்று வாசித்தேன். அச்சுப் பதித்த புத்தகம் எனக்குக் கிடைக்கவில்லை. இன்றுவரை அச்சில் நான் பார்க்கவில்லை, அருமையான ஒரு புத்தகம் . அதைக் கையெழுத்தில் பிரதி பண்ணி வைத்திருந்தார் ஒரு நண்பர். அந்தப் பிரதி கிடைத்தது படிக்க 'மரணத்தின் பின்' என்பதுதான் புத்தகம் , ஈ.வெ.இராமசாமிப் பெரியார் எழுதியது. சமயம் சொல்லும் உயிர் பற்றிய கருத்துக்களுக்கு அவர் உடன்படவில்லை. எல்லாவற்றையும் அவர் மறுத்தார். பிறகு நான் படித்த மார்க்ஸிஸக் கருத்துகளோடு ஒத்துப் போனார்.

நான் அந்தப் புத்தகம் பற்றிச் சொன்னேன். எழுதின பெரியாரைப் பற்றிச் சொன்னேன். எனக்கு முன் வரிசையில் இருந்த ஒருவன் எப்போதும் குறும்பு செய்கிறவன். நான் பெரியார் பற்றி சொன்னது கேட்டு, அவன் தனக்கு முன்வரிசையில் இருந்த மாணவிகளுள் ஒருத்தியைக் காட்டி 'பெரியார் இஞ்சை இருக்கிறார்" என்றான். வகுப்பு முழுக்க 'கொல்லென்று' சிரிப்பொலி. அவள் 'சட்டென்று' பின்புறம் திரும்பி அவனைப் பார்த்து முறைத்தாள். அவள் ஒரு குண்டுப்பெட்டை,கட்டை உருவம், தடிச்ச உடம்பு. அவனுக்கு சொந்த மச்சினி, இடையிடையே அவளைச் சீண்டிக் கொண்டிருப்பான். அவள் திரும்பி முறைப்பாள். அவள் பார்க்க வேணுமென்றுதான் அவன் சுறண்டிக் கொண்டிருக்கவேணும். அன்றைக்கும் வழக்கம் போல. ஆனால் எல்லோரும் சிரிச்சது அவளுக்கு வெட்கமாகப் போச்சு. மேசையிலே படுத்திட்டாள், என்றைக்கும் போல அதுக்கு மேல் ஒன்றுமில்லை என்று நான் நினைத்தேன்.

கைகேயியின் மனத்தை ஒரு கூனி மாற்றினாள் என்கிறது இராமாயணம். பலரும் அறிந்த கதை. ஆனால் நான் நேரில் பார்த்தேன். பக்கத்தில் இருந்த கூனிகள் ஏதேதோ சொல்லி அவள் மனதை மாற்றினார்கள. குண்டுக்குமரி குலுங்கி அழத்தொடங்கினாள். அவ்வளவோடு விட்டார்களா? அவளை தூக்கி நிறுத்தாத குறை. மைத்துனனுக்கு 'பூசை" வாங்கிக்கொடுக்க விருப்பமில்லாமல் இருந்திருக்கலாம். ஒரு கூனியால் கைகேயி தடுமாறிப்போனாள். ஐந்து கூனிகள் சேர்ந்தால் அவளை சும்மாவிடுவார்களா? அவளை எழுப்பி அதிபரிடம் அனுப்பினார்கள். இலட்சுமணன் அரிஞ்சுபோட்டு விட்ட சூர்ப்பனகையாட்டம் அவள் அழுது கொண்டு போனாள்.


அழைப்பு வந்தது அதிபரிடம் இருந்து. அவனுக்கு மாத்திரமில்லை எனக்குந்தான். இருவரும் போனோம். அதிபர் விசாரணை செய்தார். எனக்கென்ன பயம்? நானென்ன தவறு செய்தேன்? தயங்காமல் சொன்னேன்? நடந்ததெல்லாம் அவன் ஒன்றும் பேசவில்லை. அதிபர் அமைதியாகக் கேட்டார். அவர் முகத்தைப் பார்க்க மனதில் இருப்பது ஒன்றும் விளங்கவில்லை. என்னுடைய வாயப்பிறப்பு முடிந்தது. மேசையில் கிடந்த பிரம்பை எடுத்துக்கொண்டு அதிபர் எழுந்தார் எனக்கு விளங்கிவிட்டது. இன்றைக்கு மச்சான் 'பிரப்பம் பழம்" தின்னப்போறான். நல்ல சாப்பாடு. உறைப்பான மூன்று அடி அவன் சிரிச்சுக்கொண்டு வாங்கினான்.

பிறகு அதிபர் என் பக்கம் திரும்பினார் "நீட்டு கை" என்றார். நான் திகைத்துப்போனேன். ஒரு குற்றமும் செய்யாதவன் நான். ஆனால் மறுக்கேலாது. கையை நீட்டினேன். இரண்டு விழுந்தது என்ன பாவமோ கம்பராமாயணத்தை தீயில் இட்டுக் கொளுத்த வேணும் என்னும் 'தீ பரவட்டும்' கம்பனுடைய ஆபாசங்களை மட்டும் புட்டு வைக்கும் 'கம்பரசம்" எல்லாம் படித்திருக்கின்றேன். அதிபர் அறிந்தால் சாட்டோடு சாட்டாக இன்னும் சாப்பாடு கிடைத்திருக்கும்.

நான் அந்த இரண்டடியோடு தப்பித்துக் கொண்டேன். அவன் அந்த மூன்று அடிகளோடு தப்பி இருக்க முடியாது. பிறகுதான் எனக்கது தெரியும். அந்த மச்சினி அவன் மனைவியானாள் என்று. அதன் பிறகு அவனை என்னபாடு படுத்தினாளோ? ஆருக்கு தெரியும்!

இந்த அனுபவங்களை நான் பெற்றுக்கொண்ட காலத்தில் தும்பளை சிவப்பிரகாசம் சேர் அவர்கள் அதிபராகவும், பாலசுப்பிரமணியம் சேர் அவர்கள் உப அதிபராகப் பணி புரிந்தார்கள் துன்னாலை தங்கராசா சேர் கரவெட்டி பொன் கணேசன் சேர், சிற்றம்பலம் சேர் ஆகியோர் எங்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களாக விளங்கினார்கள். இவர்களையும் எனது நண்பர்களையும் நான் பெற்ற அனுபவங்களையும் நினைவுகூர்ந்து, இன்று நூற்றாண்டு விழாக்காணும் விக்னேஸ்வரா அன்னையின் திருப்பாதங்களை நன்றியுடன் வணங்கி நிற்கின்றேன்.

# Vigneswara at HUNDRED



**K.Tharmasirirajah**
An Old Student

When I start writing about Vigneswara, pleasant nostalgic memories come to my mind. Unlike an individual an institution can make more positive and everlasting contributions to people and the community at large. Vigneswara was established due to the untiring efforts of Late Mr. Mudaliyar Veeravagu Sittampalam. He was a philanthropist.

By the turn of the twentieth century, education in English in the Peninsula was in the hands of the Christian Missionary Societies. It was the desire of Srila Sri Arumuga Navalar to start schools at every village to educate the children in a Saivite environment. He also realized the importance of English education. Hence, it was with the intention of giving education in English in a Saivite environment to the children of Karaveddy that Vigneswara was founded. It made its remarkable reputation due to the unwavering commitment and dedication of a team of teachers headed by energetic Principals during the first three or four decades of its existence. As a result it started to draw students from all corners of entire Vadamaradchi, even from a part of Thenmaradchi.

During the formative years there was a severe dearth of Graduates to manage the school and teach the students. Mr. V.K.Krishnapillai, a man from the locality was the first Principal. The school had to get down graduates from Kerala. They came as a team and did the pioneering work in English education. The local teachers taught the lower classes. Those teachers from India were very efficient and competent in

teaching their subjects. English Literature was their forte. They knew Shakespeare by heart. The visual impact of their teaching made the learning of English Literature easy. They introduced plays of Shakespeare and taught the poems of Wordsworth, Milton, Shelly. Longfellow and Tennyson.

Education did not mean just mere acquisition of knowledge through book learning. During the early years Vigneswara did not have a Playground of its own. The school had its Sportsmeet and other sports activities at "Sandil". From the inception a sound mind in a sound body was the unwritten Vision of the school. Within four decades of its existence the school could boast of having the best Volleyball team in the Peninsula. The school could produce players like Pathmanathan and Ramajeyam in Volleyball. It reached its pinnacle of achievement in Volleyball when she became the all Island Champion in Volleyball in 1952. It showed the school's unflinching determination to give her students a holistic education.

Most of the schools in the Island had a Prefect system to maintain discipline in the school and for the smooth functioning of the school. It also helped the students to build leadership qualities. It brought an environment in which the non-prefects to comply and if there was any necessity to complain later on. It made the students to obey their leaders. Instead of 'Prefect System' the Indian educators introduced a novel system of Parliament to help the school administration to run the school efficiently and smoothly. It also enabled the students to look after their own affairs. It was modelled on the Mother of Parliament, Great Britain. It is said it was trail blazer for the Parliament of Ceylon since the Parliament of Ceylon came into existents only after Ceylon attained its independence in 1948. It was unique since no other school in Ceylon had a similar system for the students. The ultimate beneficiaries of the system were the students. It helped the students to elect their own leaders. The school Parliament was a training ground to groom the future leaders of the country. It was felt that the Parliamentary System of managing the school affairs was more liberal than the prefect system. They could discuss their problems and air their views independently. Of course, there was a Patron to supervise their activities. The Patrons used to be either the Vice-Principal or a senior teacher.

A Speaker or a Deputy Speaker was elected annually. The party in power had a Primeminister, a Cabinet Ministers and a Whip. The party in opposition had a leader called the Leader of the Opposition. The Prime Minister was the leader of the students. The Cabinet had Ministers for Religious activities (affairs), Finance, Health, Sport and Horticulture. They were responsible for the maintenance of discipline among the students.

Vigneswara had the distinction of producing eminent Parliamentarians. Mr. P. Kandiah, a Cambridge University scholar was the first to enter Parliament on a Communist Party ticket from the Point Pedro electorate. Mr. M. Sivasithamparam,

a brilliant Lawyer with a stentorian voice was the Member of Parliament for Point Pedro, Uduppiddy and Nallur. He could address a meeting in a poised manner and keep a mammoth gathering in rapt attention. He was a Deputy Speaker of our Sri Lankan Parliament. Mr. Jeyakody, a Lawyer and a member of the Judiciary was elected to Parliament for the Uduppiddy Electorate in 1970. All these three made Significant and remarkable contributions as Sri Lankan Parliamentarians. People still have vivid memories of their stellar performances in Parliament. Late Messers K.C. Nadarajah, Pon Kumarasamy and K.C.Mahadevan also contested Point Pedro and Uduppiddy Electorates and remained unsuccessful. Mr. K.C. Nadarajah, a debonair Barrister was the Manager of the school from early fifties until the takeover of the school in 1962. He was a crackerjack, famous for his quips. His repartee to the Late Mr. Pandit Jawarharlal Nehru, when he visited Nelliady, is considered a sharp and clever remark. It is found in Pandit Nehru's Autobiography.


Mr. K. Sivapragasam was at the helm of affairs when I was in school. He succeeded Mr. Pathmanathapillai as the Principal of the school. He taught us English well. His versatility in teaching was well known by the number of subject he taught. In addition he could teach many other subjects. Mr. T. Balasubramaniam could also teach English with equal competence. He was popularly known as a 'Phonetician' among the students.

The school had its humble beginnings. It was started in a mud hut with thatched roof. At the inception it had only 16 students. It was started as a mixed school. It still remains a co-educational institution. It has remained a child centric school and the best benefits have gone to the students. It has produced eminent academics like Prof. Karthigesu Sivathambi, Civil servants, Doctors, Engineers, Lawyers, Accountants, Provincial Directors of Education, Directors of Education, Inspectors of Schools, Principals and Teachers. Several generations of boys and girls have spent their formative years in this century old institution. It still continues to provide education in a saivite environment as envisaged by the founders of the school. The Friday religious Assembly, the Annual Saraswathy Poojas and other religious ceremonies bear ample testimony to this. The school has impacted the lives of thousands of students for whom the Motto "Truth Triumphs" has been and still is an unalterable principle.

Now the school has grown into a very big institution with all the facilities and amenities. It has its Administration Block, an auditorium, a good library, a well equipped science laboratory a Computer lab, a play ground within the school premises. It has Classes from Grade 1 to Advanced Level in the Tamil medium and English medium classes from Grade 6 to Grade 11. Vigneswara at its Centenary year remains a leading educational institution in the Peninsula.

No account of Vigneswara will be complete unless we write the historic role she played during the peak period of the war. When war erupted several schools along the coastal areas were badly affected. Hartley College and Methodist Girls' High School were the two popular schools found their physical existence difficult in their schools' premises. The staff and students of Hartley had to get housed in the school's premises of Puttala M.V. Scores of children not only lost their domiciles but also their schools. They had to move into the hinterland of the Peninsula. At this critical hour Vigneswara played a messianic role. Several students came to Vigneswara. It received them with open arms. It gave them the refuge, the moral and physical succour they needed. One person who deserves special mention here is Mr. K. Sivapathasundaram, a fine product of Vignswara, a veteran teacher of Zoology and one time senior Zoology teacher of Hartley College was the Principal during this period. He played the role of a Good Samaritan at this crucial hour. He admitted these displaced children and looked after them with care and devotion. An interesting episode that was narrated to the writer of this article can be included here. Once a student of Hartley College who was admitted to Vigneswara sustained an injury in a soccer match was immediately taken to the Office by the Principal. He himself dressed the wound. The student's wound was daily checked and nursed by the Principal till he got completely healed. Many students who joined Vigneswara during this period entered the prestigious courses of Engineering, Medicine, and Management. The above facts evince the deep and abiding interest of Vigneswara to educate 'the needy and the desperate' children. This has been the lifelong Vision and Mission of Vigneswara.

It is said that "Education is the light of life". Vigneswara has been shedding this light for 'The last 100 years. In its epic journey, 06th October, 2017 marks another milestone. As our Alma . Mater goes through its 100th year let us earnestly pray it will be a beacon of light and beacon of hope for the generations of students who are going to enter this portal of learning.



# "அறிவுக் கண்ணைத் திறந்த அன்னை விக்னேஸ்வரா"



**வே.விசுவலிங்கம்**
**ஓய்வு நிலை அரச அதிபர்**
**மன்னார்.**

இலங்கையில் ஆங்கிலேயரது ஆட்சி நிலவிய காலத்தில் ஆங்கிலக்கல்வி முக்கியம் பெற்றிருந்த துடன் கல்விப் போதனா மொழியாகவும் ஆங்கிலமே இருந்தது. ஆங்கிலம் கற்றவர்கள் உயர்கல்வியை இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பெற்று வந்தார்கள். இத்தகையவர்கள் மட்டுமே அரச பணிகளிலும் உயர் பதவிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. இதனைக் கண்கூடாகக் கண்ட கரவெட்டியைச் சேர்ந்த உயர்திரு வீரவாகு சிற்றம்பல முதலியார் களனி சூழ் கரவெட்டிப் பகுதியில் விக்னேஸ்வரக் கல்லூரியை 1917 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைத்தார். அக்காலப்பகுதியில் உயர்திரு வல்லிபுரம் மயில்வாகனம் அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து வடமராட்சிப் பிரதேச இராசவாசல் முதலியார் உயர்திரு க.சின்னத்தம்பி அவர்கள் 1920-1955 வரை முகாமையாளராகக் கடமை புரிந்தார். இவரைத் தொடர்ந்து பிரபல சட்டத்தரணி கே.சி.நடராஜா 1955 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்கள் முகாமையாளராகக் கடமை புரிந்தார். பின்னர் இப்பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

இக்கல்லூரியின் முதலாவது அதிபரான திரு.மு.கிருஷ்ணபிள்ளை முதல் இன்று வரை பதினேழு அதிபர்கள் கல்லூரியன்னையை வளர்த்த பெருமைக்குரியவர்களாவர். இக்கல்லூரியில் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட நிரந்தரக் கட்டடத்தினை 26.10.1917 இல் அக்கால அரச அதிபரான B.S.கோஸ்பேர்க் அவர்கள் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கல்லூரியின் பௌதீக வளங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்தன. அக்காலத்தில் வடமராட்சியில் பிரபல்யமான பாடசாலைகள் திறன்மிகு மாணவர்களுக்கு மட்டுமே தமது பாடசாலைகளில் அனுமதி வழங்கி வந்தன. ஆனால் இக்கல்லூரி அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி வளர்ச்சியடைந்தது.

இக்கல்லூரியைச் சூழவும் அயலிலும் வாழ்ந்த மக்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாவர். சைவநெறி புகட்டும் தர்ம வழியில் இவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயத்தையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் கால்நடை

வளர்ப்பு, மீன்பிடித்தொழில்களிலும் ஈடுபட்டு வந்தனர். இம்மக்களுக்கு அறிவூட்டி இம்மண்ணில் மாந்தர்களாக வழிகாட்டிய பெருமை இக்கல்லூரியன்னைக்கு உரித்தாகும்.

இக்கல்லூரியின் பெருமையை அறிந்த எனது தந்தையார் 1957ஆம் ஆண்டு என்னை இக்கல்லூரியில் இணைத்தார். 1963ஆம் ஆண்டு வரை இக்கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். அக்காலப்பகுதியில் எனது ஊரைச் சார்ந்த 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கால்நடையாகச் சென்றே இக்கல்லூரியிற் கல்வி கற்றோம். இது போன்றே பொலிகண்டி, புலோலி, துன்னாலை, வரணி, கரணவாய், கரவெட்டி, நெல்லியடி, வதிரி, புற்றளை முதலான ஊர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இக்கல்லூரியிற் கல்வி கற்றனர். இப்பாடசாலை கலவன் பாடசாலை யாகையால் ஆண் பிள்ளைகள் மட்டுமன்றிப் பெண் பிள்ளைகளும் கல்வி கற்றனர்.

அக்காலப்பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த பல ஆசிரியர்களும் எமது பிரதேசத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் எமக்குக் கல்வி புகட்டினர். இவர்களிற் பட்டதாரிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எனப் பலர் உள்ளடங்குகின்றனர்.

நான் கல்வி கற்ற காலப்பகுதியில் தும்பளையைச் சேர்ந்த அமரர் சிவப்பிரகாசம் அவர்கள் அதிபராகப் பணி புரிந்தார். இவர் தினமும் காலை பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி வரை பேரூந்து வண்டியில் வந்து பின்னர் பாடசாலை வரை கால்நடையாகவே வருவார். காலை 7.30 இற்கு முன்னதாகவே பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலை ஆரம்பிக்கும் முன்னர் பாடசாலையைச் சுற்றி வருவார். பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்ட அவர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். இவர் விவேகமாகவும், சாதுரியமாகவும் மற்றவர்களுடன் உறவாடும் பண்பைக் கொண்டவர். நான் பாடசாலையில் இணைந்த காலம் முதல் விலகும் வரை வகுப்பு மாணவர் தலைவனாகக் கடமையாற்றினேன். இதனால் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்தேன். திரு.சிவப்பிரகாசம் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் இக்கல்லூரி கல்வியிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்தது.

இக்காலப் பகுதியில் புலோலியைச் சேர்ந்த திரு.C.தர்மலிங்கம் அவர்கள் பிரதி அதிபராகக் கடமையாற்றினார். விஞ்ஞானப்பட்டதாரியான இவர் இடைநிலை வகுப்புக்களில் விஞ்ஞான பாடங் களைப் போதிப்பதில் வல்லவராக இருந்தார். இக்கடமையுடன் அதிபருக்கு மிகவும் ஒத்தாசையாக இவர் செயற்பட்டார்.

இக்காலப்பகுதியில் கல்வி புகட்டிய ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டனர். எனது ஆரம்ப காலங்களில் திருமதி பூபதி, திருமதி சிற்றம்பலம் போன்ற ஆசிரியர்கள் கணிதம், தமிழ் முதலான பாடங்களைப் போதிப்பதில் வல்லவர்களாக விளங்கினர். திரு.மகேசன் ஆசிரியர் ஆங்கில பாடத்தைக் கற்பித்து எமது மனதினைக் கொள்ளை கொண்டார். இவர்களைத் தவிர திரு.கார்த்திகேசு, திரு .சின்னையா, திரு.ஆறுமுகம் முதலான ஆசிரியர்களும் தமிழ் சைவநெறி முதலான பாடங்களைக் கற்பித்தனர். உயர் வகுப்புக்களில் திரு.P.சின்னத்தம்பி, திரு.பண்டிதர் பொன்.கணேசன், திரு.V.தங்கராசா முதலானோர் கலைப்பிரிவு பாடங்களைச் செவ்வனே கற்பித்த சிறப்பு மிகு ஆசிரியர்களாவர்.

இக்காலப்பகுதியில் திரு.குணரத்தினம், திரு.கணேசமூர்த்தி, திருமதி.ரதிதேவி, திருமதி. மங்களம் ஆகியோர் விஞ்ஞான பாடங்களைப் போதிப்பதில் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்களைத் தவிர வேறு பல ஆசிரியர்களும் இக்காலத்தில் கல்லூரியில் தமது கடமைகளை அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

இக்கல்லூரியில் நான் இணைந்த காலத்தில் திருமதி.பூபதி, திரு.மகேசன் போன்ற ஆசிரியர்கள் என்னைத் தமது பிள்ளை போன்று நேசித்து வழிகாட்டினர். தொடர்ந்து நான் விஞ்ஞான பிரிவிற் கற்கும் காலத்தில் திருமதி ரதிதேவி, திரு. குணரத்தினம் முதலான ஆசிரியர்கள் என் மீது மிகுந்த அக்கறை காட்டினர். எனது வாழ்வில் மறக்க முடியாத ஆசிரியர்களாக இவர்களைக் குறிப்பிடலாம்.

அதிபர் திரு.சிவப்பிரகாசம் அவர்களுடைய சாணக்கியம், திறமை, நிர்வாகத்திறன் என்பவை நான் அரச சேவையில் பணியாற்றிய காலப்பகுதியில் எனக்குப் பேருதவியாக இருந்தது. நான் குடாநாட்டுக்கு வெளியே நீண்ட காலம் பணியாற்றிய காலப்பகுதியில் கல்லூரியின் வளர்ச்சி பற்றி திரு.செ.சுவாமிநாதன் (செயலாளர், புனர்வாழ்வு அமைச்சு, வட-கிழக்கு மாகாணம்) மூலமே அறிந்து கொண்டேன்.

விக்னேஸ்வராவின் வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டிய அதிபர்கள், ஆசிரியர்கள் என்றுமே பூஜிக்கப்பட வேண்டிய தெய்வங்களாவர். அதேவேளை இக்கல்லூரியை விஸ்தரிப்பதற்கு அயற்புறக் காணிகளை நன்கொடையாக வழங்கியவர்கள், வேறு வழிகளில் நன்கொடை, நிதியுதவி வழங்கியவர்கள் மறக்க முடியாதவர்களாவர்.

மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் இப்பாடசாலையை ஆரம்பித்த உயர்திரு.சிற்றம்பல முதலியாரையும் இவ்வேளை நினைவுகூருகின்றேன். இக்கல்லூரி மேன்மேலும் வளர்ச்சிப்பாதையிற் பயணிக்க வெல்லன் விநாயகரை வேண்டுகின்றேன்.

வாழ்க விக்னேஸ்வரா !

வளர்க அதன் கல்விப்பணி !



# கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியும் நானும் பசுமையான நினைவலைகள்

**Velautham Vimalarajah (Attorney - at - Law)**
Industrial Court Arbitrator, President, Karaveddy
Vigneswara College Old boys Association
Colombo Branch

**வ**டமராட்சியில் எமது சொந்த ஊரான கரவெட்டியில் பழம்பெரும் கல்விக் கோவிலாக விளங்கும் விக்னேஸ்வரக் கல்லூரி இவ்வருடம் அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. நான் அண்மைய சில வருடங்களாக அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதால் அந்த கொண்டாட்டங்களில் நேரடியாக பங்கேற்க முடியாத துர் அதிஸ்டத்துக்குள்ளாகியிருக்கின்றேன். இது எனக்கு உண்மையிலே பெரும் மனவேதனையைத் தருகின்றது. எனது விதி என்று இதை நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. என்றாலும் அந்தக் கல்விக் கோவிலுடனான எனது அனுபவங்களை - நினைவலைகளை எழுத்தில் பொறிப்பதன் மூலமாக ஒரு ஆறுதலைப் பெற முடியுமென்று எதிர் பார்க்கின்றேன்.

**ஆரம்பத்தில் கல்வி புகட்டிய ஆசிரியர்கள்**

நாம் கல்வி கற்ற காலத்தில் யாழ்ப்பாணத்திற் பல பாடசாலைகளில் இந்தியாவைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் பணி புரிந்தனர். விக்னேஸ்வராவில் நான் சேர்ந்த போது இந்தியரான கே.சி.பத்மநாத பிள்ளை அவர்களே அதிபராக பணிபுரிந்தார். கோவிந்தபிள்ளை, வாசுதேவன் பிள்ளை என்ற இந்திய ஆசிரியர்களே எமக்கு முறையே விஞ்ஞானமும் இலக்கியமும் கற்பித்தனர். கல்லூரியில் சேர்ந்த முதலாம் வருடத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்தவரான ரி.முருகேசுவும் கரவெட்டியைச் சேர்ந்த மின்னொளி அக்காவும் எனக்கு ஆங்கிலம் கற்பித்தனர். விக்னேஸ்வரவின் முதல் ஆசிரியை மின்னொளி அக்கா என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஆங்கிலத்தில் சிறுகதைகள் சொல்லித்தர, முருகேசு சேர் ஆங்கிலத்தில் பாடல்களைச் சொல்லித்தந்தார். அவர்கள் எங்களோடு சேர்ந்து ஆடிப்பாடியே கற்பித்தனர். அது ஒரு சுவையான அனுபவமாக இருந்தது. இன்றும் பசுமரத்தாணி போன்று மனதில் பதிந்திருக்கின்றது. 'Twinkle Twinkle Little Star, How I wonder what you are' என்ற பாட்டிலும் Baa Baa black sheep என்ற பாடலும் மனதில் இறுகப் பதிந்துள்ளன.

ஐந்தாம் வகுப்பில் கே.வி. கந்தையா அவர்கள் எமக்கு கணிதம் படிப்பித்தார். அவர் எமது ஊரைச் சேர்ந்தவர். உறவினரும் கூட. மிகவும் கடுமையானவர். அவரிடம் கணிதம் கற்றது பற்றி காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் அடிக்கடி சுவாரஸ்யமாகக் கூறுவார். 'நானும் கோபா மில்ஸ் பாலாவும் (பிரபல தொழிலதிபரான அவர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவ ராகவும் இருந்தவர்) கந்தையா சேரிடம் வளமாக வாங்கிக் கட்டினோமென்றாலும் கணித பாடத்தைக் கரைத்துக் குடித்து விட்டோம், என்று பேராசிரியர் சொல்வார். எனக்கு ஏற்பட்ட சுவாரஸ்யமான அனுபவமொன்றையும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். மாணவர்களை வட்டமாக நிற்க வைத்துக் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாதவர்களுக்கு சரியான பதில் கொடுத்தவர் தலையில் குட்டி முந்துவது ஒரு வழக்கம். ஒரு தடவை எனக்கு முன் வட்டத்தில் நின்ற பெண்பிள்ளை சரியான பதிலைக் கொடுக்க வில்லை. நான் சரியான பதிலைக் கொடுத்தேன். எனக்கு முன் இருந்த பிள்ளைக்கு தலையில் குட்டும்படி கந்தையா சேர் என்னிடம் கூறினார். நான் அவ்வாறு செய்ய விரும்பாதிருக்கவே அவர் என்னை உரத்த குரலில் அதட்டி குட்டடா என்று கட்டளையிட்டார். அதை மீற முடியாத நிலையில் நான் அவர்களின் தலைகளில் மெல்லக் குட்டினேன். அவர் உடனே சீறியெழுந்து என்னடா நொட்டுகிறாய் என்று கூறி எனது தலையில் பலமாக குட்டி இது போன்று அவர்களுக்கு குட்டு என்று பணித்தார். எனக்கு கிடைத்த குட்டின் வேகத்தில் நான் அந்த பெண் பிள்ளைக்கு பலமாகக் குட்டினேன். கந்தையா சேர் கணித பாடத்தை சிறப்பாக கற்பித்த காரணத்தினால், வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஐந்தாம் வகுப்பு தெரிவுப் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்தேன்.

எனக்கு ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் எஸ்.எஸ்.சி.பிறெப் வரை தமிழ் கற்பித்தவர். எனது அயலவரான ஏ.கனகசபை ஆசிரியர். எனது தந்தையாரோடு விக்னேஸ்வரவில் கல்வி கற்றவர். வினையாலணையும் பெயர், ஆகு பெயர் போன்ற இலக்கண நுணுக்கங்களை அவர் சிறப்பாக கற்பித்தார். சுடுதோசை என்பது சுட்டதோசை, சுடுகின்ற தோசை, சுட இருக்கும் தோசை என்று வினையாலணையும் பெயரை விளக்குவார். இதைவிட படுத்து உறங்கேல், இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று என்ப வற்றின் ஆழமான கருத்துக்களையெல்லாம் விளக்கினார். எமது தமிழறிவை மெருகூட்டியவர் என்று அவரைக் கூறமுடியும். அடுத்ததாக குறிப்பிடத்தக்கவர் எனக்கு ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலம் கற்பித்த தாமோதரம்பிள்ளை சேர். thought for the day என்று கரும்பலகையில் அவர் நாளொரு பழமொழி எழுதுவார். அந்தப் பழமொழிகள் இன்றும் கூட எனது மனதில் ஆழப்பதிந்திருக்கின்றன. ஆறாம், ஏழாம் வகுப்புக்களில் எனக்கு ஆறுமுகம் சேர் கணித பாடம் கற்பித்தார். அவர் மிகவும் ஆறுதலா கவும் தெளிவாகவும் கற்பிப்பதில் பெயரெடுத்தவர்.

**ஆறாம் வகுப்பு தொடக்கம் எஸ். எஸ். சி வரை எனது கல்வி**

ஆறாம் வகுப்புத் தொடக்கம் எஸ்.எஸ்.சி வரை விக்னேஸ்வரவில் நான் படித்த காலத்தில் ஆசிரியராக இருந்த சிவப்பிரகாசம் அவர்கள் பின்னர் அதிபரானார். அவரும் எனது சிறிய தந்தையாரான மகேசன் சேரும் நான் 8 ஆம் வகுப்பில் படிக்கும் போது வில்லியம் ஷேக்ஸ்பியரின் Merchant of Venice நாடகத்தில் Portia என்ற வக்கீலின் பாத்திரத்தில் என்னை நடிக்க வைப்பதற்காக பழக் கினார். நாடகம் மேடையேறிய போது நான் கறுத்த கோர்ட் அணிந்து ஷைலொக்கிற்கு எதிராக வாதாடினேன். அந்த வாதத்தில் முதலாவது வரி 'The quality of mercy is not strained. It droppeth like the gentle rain from the heaven' என்பதாகும். நாடகத்தில் எனது பங்களிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. பத்திரிகைகளிலும் வியந்து எழுதப்பட்டது. அப்போது கறுத்த கோர்ட் போட்டு

எப்படியாவது வக்கீலாக வரவேண்டும் என்று அதிபர் என்னிடம் கூறியபோது," சேர் நீங்கள் விரும்புவதை எப்படியாவது நான் நிறைவேற்றுவேன் என்று பதிலளித்தேன்.

என்னோடு கல்வி கற்ற மாணவர்களில் நல்ல நிலையில் இருந்தவர்களில் சிலரை இங்கு குறிப்பிட வேண்டும். கலாநிதி ஏ.சின்னத்தம்பி (Doctorate in Education) திருமதி. பார்வதி சின்னத்தம்பி, கந்தையா சேரின் மகளான இவரே முதலாவது ஆங்கிலப் பட்டதாரி. 1958 தொடக்கம் 1976 வரை விக்னேஸ்வராவிலேயே இவர் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அடுத்தது ஆசிரியர் வி. தில்லையம்பலம், மத்திய வங்கியில் கடமை புரிந்த சின்மையானந்தன், நில அளவையாளரான ஆனந்தாபரணம் நல்லதம்பி ஆசிரியர் ஆகியோரைக் குறிப்பிடலாம். மாவட்ட நீதிபதியாக இருந்த வி.பி.சுந்தரலிங்கமும் என்னுடன் கல்வி கற்றவரே. விக்னேஸ்வராவில் இந்திய ஆசிரியர்கள் அறிமுகப்படுத்திய பாராளுமன்றத்தில் சுந்தரலிங்கம் பிரதமராக இருந்தார். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். எமது கல்லூரியின் மூன்று மாணவர்கள் இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கீர்த்தி மிக்க சேவைகளை ஆற்றியிருந்தார்கள். பொன்.கந்தையா, எம்.சிவசிதம்பரம், கே.ஜெயக்கொடி ஆகியோரே அவர்கள். பாடசாலை பாராளுமன்றத்தில் பெற்ற அனுபவங்கள் அவர்களின் இந்தப் புகழுக்கு நிச்சயமாக உதவியிருக்கும். இங்கு பெருமைப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இலங்கையில் அரசாங்க சபை (State Council) 1931 ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டது. ஆனால் விக்னேஸ்வரவின் இந்திய ஆசிரியர்கள் அதற்கு முன்னதாக 1927 ஆம் ஆண்டில் பாடசாலைப் பாராளுமன்றத்தைத் தொடக்கி மாணவர்களை பயிற்றுவித்தனர் என்பது தான்.

**விக்னேஸ்வராவில் எனது ஆசிரியப்பணி**

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அரசாங்க சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னதாக சுமார் பத்து மாதங்கள் நான் விக்னேஸ்வராவில் ஆசிரியராகவும் பணி புரிந்தேன். அது எனக்கு மன நிறைவாகவும் இருந்தது. அங்கு ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருந்த (கந்தையா சேரின் மகனான) வி.கே.நடராஜா திடீரென பதவி விலகி கொழும்பில் சென்.பீட்டர்ஸ் கல்லூரிக்கு போனதையடுத்து அவரின் இடத்துக்கு என்னை நியமிக்குமாறு என் மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்ட அதிபர் சிவப்பிரகாசம் முகாமையாளரான கே.சி.நடராஜாவுக்கு சிபாரிசு செய்தார். துடிப்பான வயதில் மிகவும் ஆர்வமாக கல்வி கற்பித்த காரணத்தால் அதிபரினதும் சக ஆசிரியர்களினதும் பாராட்டை என்னால் பெறக்கூடியதாக இருந்தது.

நான் ஆசிரியராக கடமையாற்றிய போது ஒரு நாள் எனது வகுப்பிற்கு பாடசாலை பரிசோதகர் Miss Gould வந்தார். நான் ஆங்கிலம் கற்பித்த முறையை அறிந்து என்னை அவர் வெகுவாகப் பாராட்டினார். சர்வ சாதாரணமாக என்னுடன் பேசிய அவர் நான் படித்த பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் பற்றி விசாரித்தார். 6 ஆம் வகுப்புத் தொடக்கம் எஸ்.எஸ்.சி வரை விக்னேஸ் வராவிலேயே நான் கல்வி கற்றதை அவரிடம் கூறி அதிபரான சிவப்பிரகாசம் அவர்களே எனக்கு ஆங்கிலம் போதித்ததையும் எடுத்துச் சொன்னேன். அதிபர் எனக்கு கற்றுத்தந்த முறையிலேயே நானும் கற்பித்தேன் என்றும் கூறினேன். என்னை வாழ்த்திய அவர் அதிபரின் வேண்டுகோளின்படி வக்கீலாக வரவேண்டுமென்று என்னை வாழ்த்தினார். அவருக்கு நன்றி கூறிய நான் "Madam, If not for the letter "U" You will be miss Gold instead of Miss.Gould" என்று குறிப்பிட்டேன். அவர் எனது திறமையைப் பாராட்டி நான் கூறியதை

அதிபர், ஆசியர்களிடமும் தெரியப்படுத்தினார். எனது புகழ் பூத்த மாணவர்களில் டாக்டர் கே. சிவராஜா, எனது ஒன்றுவிட்ட சகோதரன் பொறியியலாளர் கே.குலவரதராஜா, அமரர் கே.பாலகிருஷ்ணன் (வழக்கறிஞர்) திருமதி புவனேஸ்வரி பரமேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**அரசாங்க தொழில் பிரவேசம்**

கொழும்பு தொழில் திணைக்களத்தில் பணியில் சேர்ந்த ஆரம்பத்திலேயே தொழில் பிணக்குகள் (Industrial Disputes) தொடர்பான விசாரணைகளைச் செய்தேன். நாளடைவில் எனக்கு பலரும் வேலை பார்க்க விரும்பாத Prosecution Division க்கு மாற்றம் கிடைத்தது. நீதிமன்றத்தில் வழக்குகளை நெறிப்படுத்தி வழக்குத் தொடருநராக கடமை புரிவது சிக்கலான வேலை என்பதாலேயே பலரும் இதை விரும்புவதில்லை. ஆனால் நான் அந்தப் பிரிவுக்கு விரும்பி இடம்மாற்றம் பெற்றேன். அதில் பணியாற்றிய நாட்களில் இலங்கை முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களுக்கு வழக்குகளை நடத்தச் சென்று வந்தேன். பிரபல சட்டத்தரணிகளுக்கு எதிரான வழக்குகளில் வெற்றியும் கண்டேன். இதை அவதானித்த தொழில் ஆணையாளர் நாயகம் என்னைப் பாராட்டியதுடன் சட்டக்கல்லூரிப் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றும்படி ஆலோசனை கூறினார். "Sir, Public Administration circular states specifically that permission should not be granted to any employee to follow the course at Attorney at law at law college" என்று நான் தெரிவித்த போது தனக்கு இது தொடர்பில் தற்துணிவு அதிகாரம் இருக்கிறது என்று அவர் பதிலளித்தார். அவரின் ஆலோசனைப்படி சட்டக்கல்லூரி பிரவேசப் பரீட்சைக்கு தோற்றிய நான் முதற் தடவையிலேயே சித்தியடைந்து விட்டேன். எனக்கும் வேறு மூவருக்கும் சட்டக்கல்லூரி விரிவுரைகளுக்கு போவதற்கான அனுமைதியை தொழில் ஆணையாளர் நாயகம் வழங்கினார். பரீட்சையொன்றில் சித்தியடையத் தவறினால் அனுமதி வாபஸ் பெறப்படும் என்ற நிபந்தனையுடனே அவர் எங்களை விரிவுரைகளுக்கு அனுப்பினார். அதை ஒரு சவாலாக ஏற்று நான் முதல் வகுப்பு திறமைச் சித்தி பெற்றேன். பத்திரிகைகளில் எனது பெறுபேற்றைப் பார்த்த அதிபர் சிவப்பிரகாசம் எனக்கு வாழ்த்துத் தெரிவித்தார். நான் சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்த பின்னர் விக்னேஸ்வரக் கல்லூரிக்குச் சென்று அவரையும் எனது ஆசிரியர்களையும் சந்தித்து ஆசி பெற்று மகிழ்ந்தேன். என்னை ஒரு நீதிபதியாகப் பார்க்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை அதிபர் என்னிடம் சொன்னபோது நான் அதற்கான முயற்சிகளை எடுப்பேன் என்று உறுதியளித்தேன்.

**அரசாங்க சேவைக்குப் பின்னர் பாடசாலையுடனான தொடர்புகள்**

அரசாங்க சேவையில் இணைந்த பின்னரான காலகட்டத்தில் எமது கரவை கிராய்ப் பிள்ளையார் கோவில், தச்சன் தோப்பு விநாயகர் கோவில் திருவிழாக் காலத்திலும், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகைக் காலங்களிலும் தவறாமல் ஊருக்குப் போய் வருவேன். ஊருக்கு செல்கின்ற வேளைகளில் எல்லாம் விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் தவறாமல் செல்வேன். பிறகு எனக்கு யாழ்ப்பாணத்தில் பணிபுரிவதற்கு இடமாற்றம் கிடைத்தது. பெற்றோரின் முதிர்ந்த காலத்தில் அவர்களுக்கு உதவியாக இருக்க எனக்கு இது வசதியாக அமைந்தது.

1975 தொடக்கம் 1980 வரை யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினேன். அந்தக் காலத்தில் இடைவிடாது விக்னேஸ்வராவுக்குச் சென்று அதிபர்களான பொன். கணேசன், தங்கராஜா, நமசிவாயம், கே.சிவபாதசுந்தரம் மற்றும் ஆர்ட்டிஸ்ட் மாஸ்டர் சுப்பிரமணியம் ஆகியோரைச் சந்தித்து பாடசாலையின் அபிவிருத்திக்கு அவசியமான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அவை தொடர்பான உதவிகளைச் செய்து வந்தேன்.

விக்னேஸ்வராவின் பழைய மாணவரான பொன். கணேசன் அதிபராக இருந்த வேளையில் அயலில் இருந்த பாலர் பாடசாலை, ஆரம்பப்பாடசாலை மூடப்பட்டு பாலர் வகுப்புக்கள் தொடக்கம் கல்வி பொதுத்தராதர உயர்தர வகுப்பு வரை கல்லூரியில் கற்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. பாடசாலைக்கீதம் மன்னவன் கந்தப்பு ஆசிரியர் அவர்களால் இயற்றப்பட்டது. தங்கராசாவும் நமசிவாயமும் மிகவும் குறுகிய காலமே அதிபர்களாக பதவியில் இருந்தனர். சுப்பிரமணியம் நீண்ட காலமாக ஆசிரியராக இருந்த பிறகு 1979-80 இல் அதிபராக பணியாற்றினார். அவரும் மனைவி திருமதி பாக்கியம் சுப்பிரமணியமும் நான் விக்னேஸ்வராவில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இருந்து சேவையாற்றி வந்தனர். இவர்களுக்குப் பிறகு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புகழ்பெற்ற விலங்கியல் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் தொண்டமானாறு வெளிக்கள நிலையப் பணிப்பாளராக செயற்பட்ட எனது உறவினரான கே.சிவபாதசுந்தரம் பலரின் வேண்டுகோளுக்கிணங்க 1980ஆம் ஆண்டு முதல் கல்லூரியின் அதிபராகினார். 1992ஆம் ஆண்டு வரை அவர் அதிபராக இருந்து கல்வித்துறையிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் அளப்பரிய பணிகளைச் செய்திருந்தார். அவர் காலத்தில் மாணவர்களின் தொகையும் பல மடங்கு அதிகரித்ததுடன் விக்னேஸ்வராவில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலம் முடிந்து கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற பிறகு அங்கு விக்னேஸ்வரக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை செயற்பட வைக்க வேண்டுமென்று சிவாபாதசுந்தரம் என்னை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். அவரின் வேண்டுகோளின் பிரகாரம் செயற்படுவதாக நான் உறுதியளித்தேன். யாழ்ப்பாணத்தில் நான் தொழில் அதிகாரியாக பணியாற்றிய காலத்தில் அதிபரோடு தொடர்பு கொண்டு எமது உடுப்பிட்டித்தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அதில் விக்னேஸ்வரா மாணவர்களுக்கு பயிற்சி பெறுவதற்கு வசதி செய்து கொடுத்தேன். அங்கு பயிற்சி பெற்ற மாணவர்கள் இன்று சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, லண்டனில் சிறப்பான முறையில் தொழில் புரிந்து வாழ்வது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை அங்குராப்பணம்**

விக்னேஸ்வரா பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை சுமார் 30 வருடங்களாக மிகவும் சிறப்பான முறையில் இயங்கி வந்தது. 1983 ஜுலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து அதன் செயற்பாடுகள் சீர்குலைந்து போயின. எங்கள் பாடசாலையின் பழைய மாணவரும் புகழ் பூத்த கணித ஆசிரியருமான கே.வி.கந்தையாவின் மகனான வி.கே.நடராஜாவின் புதல்வியின் திருமணம் 1992 சித்திரையில் தெஹிவளையில் நடைபெற்றது. அதில் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். அந்தத் திருமண வைபவத்தில் வைத்து அதிபர் சிவபாதசுந்தரம் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையை மீண்டும் இயங்கச் செய்வது பற்றி ஆலோசித்தார். பத்திரிகைகளில் இது தொடர்பில் விளம்பரம் கொடுத்தது மாத்திரமல்ல, எம்மில் சிலர் பழைய மாணவர்களிடம் வீடு வீடாகச் சென்று அழைப்பு விடுத்தோம். 1992 ஜுலை 5ஆம் திகதி அங்குரார்ப் பணக் கூட்டத்தை கொழும்பில் நடத்தினோம். நான் அதில் கலந்து கொள்வதற்காக நீர்கொழும்பில் இருந்து வந்திருந்தேன். சிவா அண்ணனும் (தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் உடுப்பிட்டி நல்லூர் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரம் தொழிலதிபர் கே.கனகசபை (கே.கே.எஸ்) யும், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் (காப்பாளர்கள்) என்னை

கொழும்புக் கிளையின் தலைவராக பொறுப்பேற்குமாறு வலியுறுத்தியதையடுத்து தவிர்க்க முடியாத வகையில் இணங்கிக் கொண்டேன்.

அந்தக் கூட்டத்தில் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நான் தொடர்ந்து 2016 மார்ச் வரை அப்பதவியை வகித்தேன். அவுஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டபடியால் கடந்த வருடம் எனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்தேன். தற்போது கொழும்புக் கிளையின் தலைவராக மூத்த ஊடகவியலாளர் வீ.ஏ.திருஞானசுந்தரம் பொறுப்பேற்றுச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

**கொழும்புக் கிளையின் சேவைகள்**

1992 நாம் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையை மீண்டும் அங்குரார்ப்பணம் செய்த வேளையில் கல்லூரி அதன் 75 வருடங்களைப் பூர்த்தி செய்திருந்தது. பவளவிழாவுக்காக நாம் பல வழிகளிலும் உதவிகளைச் செய்தோம். எமது சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரான தொழிலதிபர் கனகசபை பவளவிழா மலருக்கான நிதியுதவியைச் செய்ததுடன் பாடசாலைக்கு காணியும் வாங்கிக் கொடுத்தார். மேலும் விளையாட்டு மைதான விரிவாக்கத்துக்கும் புலமைப்பரிசில் நிதியத்துக்கும் நிதி வழங்கினார். பழைய மாணவர் சங்க உபதலைவரான நடேசு பாஸ்கரனின் முன்முயற்சியுடன் புலமைப்பரிசில் நிதியொன்று தொடங்கப்பட்டது. காலஞ்சென்ற எனது ஏக புத்திரியின் பெயரில் நானும் புலமைப்பரிசிலுக்கு நிதியுதவி செய்தேன். உபதலைவரான பொன்னையா பாலச்சந்திரன் தற்போது காப்பாளராக இருக்கும் மனைவணிக (Real estate) தொழிலதிபர் என். வாகீசன் ஆகியோரும் நிதியுதவி செய்தனர். ஆரம்பத்தில் நான்கு மாணவர்களுக்கு பல்கலைக்கழக கல்விக்காக நிதியுதவி செய்தோம். கல்லூரி வளாகத்தின் வடக்குப் புற மதில் கட்டுவதற்காக 74 ஆயிரம் ரூபா வழங்கினோம். விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் பெருமளவு உதவினோம்.

1992 ஜூலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட எமது பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளையின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2002 ஜூலையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் ஒரு விழாவை ஏற்பாடு செய்தோம். எமது கிளைச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான செ.சிற்றம்பலநாதனின் மனைவியான திருமதி உஷாவின் நெறியாள்கையில் அவரின் சகோதரி திருமதி கார்த்திகா கணேசரின் படைப்பான “இராமாயணம்” நாட்டிய நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் பங்கேற்று நடித்தவர்கள் எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளேயாவர். இன்னொரு நிறைவேற்றுக்குழு உறுப்பினராக வாகீஷன் இதற்கு அனுசரணை வழங்கியிருந்தார். பத்தாண்டுப் பதிவுகள் என்ற மலரையும் வெளியிட்டோம். இச்சந்தர்ப்பத்தில் அந்த விழா பல வழிகளிலும் சிறப்பாக நடந்தேற உதவிகள் புரிந்தவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராக இருந்து சொந்த ஊரில் அளப்பரிய சமூகப் பணிகளைச் செய்து வரும் உபாலி வி.எஸ்.பொன்னம்பலம் பத்தாண்டு நிறைவு விழாவில் பங்கேற்பவர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தந்தார். மலரை அழகாக வெளியிடுவதற்குப் பாடுபட்ட அன்றைய எமது கிளைச் சங்க செயலாளரான வீ.ஏ.திருஞானசுந்தரம், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் பி.பாலச்சந்திரன், திருமதி எஸ்.முருகானந்தம் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

**அடுத்த பத்தாண்டுகள்**

2002 ஜுலை தொடக்கம் 2012 ஜுலை வரையிலான அடுத்த பத்தாண்டுகளில் எமது கிளைச் சங்கம் மேலும் கூடுதல் துடிப்புடன் செயற்படக் கூடியதாக இருந்தது. கிளைச் சங்கத்தின் முயற்சியால் நியமிக்கப்பட்ட வி. சிவசிதம்பரம் அவர்கள் இந்த காலகட்டத்தில் விக்னேஸ்வராவின் அதிபராகப் பணியாற்றினார். எம்முடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி அவர் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். எனது நெருங்கிய நண்பரும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியினதும் "நொக்கார்ட்" என்ற தன்னார்வ நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த லங்கா நேசனினதும் உதவிகளைப் பெற்று எனது சொந்த முயற்சியால் கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத்தை புனரமைத்தல் மற்றும் நூலகக் கட்டடத்தை பூர்த்தி செய்தல் பணிகளை நிறைவேற்றினேன். எமது சங்க உறுப்பினர்கள் பலர் கல்லூரிக்கு நேரடியாக உதவிகளைச் செய்திருந்தார்கள். இவர்கள் பற்றிய முழு விபரமும் என்னிடம் இல்லை. என்னுடன் அதிகமாகப் பழகுபவர்கள் செய்திருக்கக்கூடிய உதவிகளைப் பற்றித்தான் இப்போது என்னால் தகவல்களைக் கூறமுடியும். தொழிலதிபர் கனகசபை (கே.கே.எஸ்) 2004 நவம்பரில் கரவெட்டிக்குச் சென்ற போது பாடசாலைக்கு விஜயம் செய்து தனது தந்தையாரான முன்னாள் கிராம சபைத் தலைவர் கந்தவனம் அவர்களின் பெயரில் 50 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டு புலமைப்பரிசில் நிதியத்தை ஆரம்பித்து வைத்தார். ஊருக்கு அவர் மேற்கொள்ளவிருந்த விஜயத்தைப் பற்றி நான் முன்கூட்டியே அதிபர் சிவசிதம்பரத்துக்கு அறிவித்தபடியால் கல்லூரியில் அவருக்கு கௌரவமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றுவதற்காக 2009 மார்ச் மாதம் கொழும்புக்கு வருகை தந்த எமது கல்லூரி மாணவர்களுக்கு கொழும்புக்கிளை வரவேற்பு அளித்தது. முதலிடம் பெற்ற இந்த மாணவர்களுக்கு நாம் பரிசில்களை வழங்கினோம். 2011 ஜுலையில் கொழும்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் அறிவு வினாவிடைப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற மாணவர்களை சங்கம் பாராட்டி விருந்துபசாரம் அளித்தது.

2010 பெப்ரவரி 14 கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுமாறு அதிபர் சிவசிதம்பரம் அவர்களும் ஆசிரியர்களும் என்னையும் பாரியாரையும் அழைத்தனர். நாமிருவரும் எமது கிளைச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான எமது மருமகள் திருமதி பவானி புவனேந்திரா விமலராஜாவுடன் ஊருக்குச்சென்று அதில் கலந்துகொண்டோம். உள்நாட்டுப் போர் காரணமாக சுமார் 20 வருடங்களாக ஊருக்கு நாம் செல்லவில்லை. ஊரிலும் பாடசாலையிலும் ஏற்பட்ட பல மாற்றங்களை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. பாடசாலைக்கு அருகாமையில் உள்ள சரஸ்வதி வில்லாவிற்கு பின்புறமாகவுள்ள 11 பரப்புக் காணியை இசுறு பாடசாலை நடத்துவதற்கு வாங்கித்தருமாறு அதற்காக லண்டனில் உள்ள விக்னேஸ்வரா பழைய மாணவர் சங்கக் கிளையுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யுமாறு அதிபர் சிவசிதம்பரம் விளையாட்டுப்போட்டியின் போது என்னிடம் வேண்டுகோள் விடுத்தார். அதற்கிணங்க நான் லண்டன் கிளையோடு தொடர்புகொண்டு அங்கு வாழும் சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளரான எனது உறவினர் டாக்டர் வி.தேவேந்திராவுடன் பேசி காணியை வாங்கிக் கொடுத்தேன். இன்று அதில் இசுறு பாடசாலை சிறப்பாக இயங்குகின்றது. எமது சங்கம் நான்கு இலட்சம் ரூபாவை கட்டைவேலி கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு அத்தொகையிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியை கல்லூரியின் குறிப்பிட்ட தேவைகளுக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்தது.

காலஞ்சென்ற மு.சிவசிதம்பரம் அவர்களின் பிறந்தநாள் நினைவை முன்னிட்டு 2012 ஜுலை 21ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தோம். எமது சங்கத்தின் 20 ஆண்டு நிறைவும் இதனுடன் ஒருங்குசேர அமைந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சிவசிதம்பரம் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். அந்த நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.கே.எஸ்.சுரேஷ் சந்திராவும் அகில இலங்கை இந்து மாமன்ற தலைவரான சிரேஸ்ட சட்டத்தரணி கந்தையா நீலகண்டனும் எனது அழைப்பையேற்று கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். பேராசிரியர் சிவத்தம்பி, திரு.சிவசிதம்பரம் ஆகியோரின் நினைவு மலர்களையும் வெளியிட்டோம். பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரான ஏ.எம் நஹியா "யான் அறிந்த பேராசான்" என்ற தலைப்பில் நிகழ்த்திய சிவத்தம்பி நினைவுப்பேருரை நூலாக வெளியிடப்பட்டது.

என்னால் நினைவு மீட்டக்கூடியதாக இருக்கின்ற நிகழ்வுகளையும் விடயங்களையுமே இங்கு நான் குறிப்பிட்டிருக்கின்றேன். எமது கிளைச் சங்கத்தின் செயற்பாடுகளில் எந்தவொன்றையும் நிகழ்வுகளில் எந்தவொன்றையும் அல்லது உறுப்பினர்களில் எவரினதும் முக்கியமான சேவை யினையும் நான் குறிப்பிடத் தவறியிருந்தால் அதற்கு வயது மூப்பின் காரணமான மறதியே தவிர வேறு இருக்கமுடியாது.

விக்னேஸ்வராவின் தற்போதைய அதிபரான எம். கனகலிங்கம் கடமையேற்ற பின்னர் அண்மையில் செய்த சேவையொன்று இப்போது தான் நினைவுக்கு வந்தது. எமது நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் பாடசாலைக்குச் சென்றபோது மாணவர்கள் கேட்போர் கூடத்தில் தரையில் அமர்ந்திருந்ததைக் கண்டதாகக் கூறினார். உடனடியாகவே நிறைவேற்றுக் குழுவைக் கூட்டி அதிபரோடு தொடர்பு கொண்ட போது கேட்போர் கூடத்திற்கு 400 கதிரைகள் போதுமானது என்று அறிவித்தார். அதையடுத்து 'நில்கமல்', 'ஈஸ்வரன் பிளாஸ்டிக்ஸ்' ஆகிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எனது தனிப்பட்ட நல்லெண்ணத்தையும் பயன்படுத்தி 400 கதிரைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தோம். அதற்கு அதிபர் நன்றி தெரிவித்தார்.

இவ்வாறாக எமது கல்லூரியுடனான எமது அனுபவங்களையும் சேவைகளையும் எழுதிக் கொண்டே போகலாம். எனது வாழ்நாளில் நான் கண்டிருக்கக் கூடிய முன்னேற்றங்கள் அனைத்துக்குமே விக்னேஸ்வராக் கல்லூரியில் நான் பெற்ற கல்வியே அடித்தளமாகும் என்பதை நன்றிப் பெருக்குடன் கூறிக்கொள்கிறேன்.

என்னைப்பெற்ற தாய், தந்தையாரும் எனக்கு கல்வி புகட்டித் தந்த ஆசிரியர்கள், அதிபர் எல்லோரும் பெருமைப்படத்தக்க வாழ்க்கையை முன்னெடுத்திருக்கிறேன் என்பதை திருப்தியுடன் நினைவு கூருகின்றேன்.

I Conclude by saying that I have given something of everything and everything of something but not everything of everything.



# நினைவெழுதல் ஒரு படைப்பாளியின் கல்லூரிக்கால அனுபவப்பகிர்வு.



**திரு. S. இராகவன்**
**பழைய மாணவன்**

கேள்வி : இந்தப் பாடசாலையில் நீங்கள் எந்தக் காலப்பகுதியில் படித்தீர்கள்?

பதில் : 1990 ஜனவரி தொடங்கி 1995 ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் இந்தப் பாடசாலையில் படித்தேன். அதாவது எட்டாம் வகுப்பிலிருந்து உயர்தரம் வரை படித்தேன்.

கேள்வி : இதற்கு முன்?

பதில் : இதற்கு முன்னர் 1982 ஜனவரி தொடங்கி 1989 டிசம்பர் வரை ஆண் பாடசாலையென் றழைக்கப்பட்ட கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரை படித்தேன். அப்போது அங்கே ஏழாம் வகுப்பு வரை மட்டுமேயிருந்தது. அதனால் எட்டாம் வகுப்பில் சேர்வதற்காக சக வகுப்பு மாணவர்களோடு இந்தப் பாடசாலைக்கு ஒரு புதுமுக மாணவனாக வந்தேன்.

கேள்வி : இந்தப் பாடசாலைக்கு வந்த முதல் நாள் நினைவிருக்கிறதா?

பதில் : ஏதோ நேற்று நிகழ்ந்தது போல் நன்றாக நினைவிருக்கிறது. இலேசாக மழை தூறிக் கொண்டிருந்த ஒரு காலைப்பொழுது. இந்தப்பாடசாலைக்குள் முதன்முதல் காலடியெடுத்து வைத்தேன். அதிபர் காரியாலயத்தில் உரிய சான்றிதழ்களைச் சமர்ப்பித்த பின்னர் பியோன் வேலுப்பிள்ளையண்ணை என்னையும் சிவராசா என்ற மாணவனையும் கூட்டிக் கொண்டு போய் ஒன்பதாமாண்டு 'சீ'ப்பிரிவு வகுப்பின் வாசலில் விட்டார். அந்த வகுப்பு இப்போது சிவப்பிரகாசம் மண்டபம் எனப் பெயரிடப்பட்டுள்ள கட்டடத் தொகுதியின் கீழ்த்தளத்தின் தொங்கலிலிருந்தது. அப்போது அக்கட்டடம் பூர்த்தியடையவில்லை. வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அந்த வகுப்பின் தரைப்பகுதி கூட சீமெந்து பரவப்படாமல் வெறும் மண்தரையாக இருந்தது. வகுப்பறையில் ஆசிரியர் ஒருவர் விஞ்ஞான பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார். நானும் சிவராசாவும் தயங்கித் தயங்கி வகுப்பறைக்குள் நுழைந்தோம்.

அவர் எங்களை விசாரித்து விட்டு இருக்கைகளில் அமரும்படி கூறி விட்டுத் தனது பெயர் சோதிரூபன் என்றும் இந்த வகுப்பிற்கு வகுப்பாசிரியர் தானென்றும் சொல்லி விட்டுத் தொடர்ந்து படிப்பித்தார். எனக்கு நெஞ்சில் ஒரு விதமான பய வுணர்வு மேலோங்கியிருந்தது. ஏனென்றால் நாங்கள் மாணிக்கவாசகர் வித்தியாலயத்தை விட்டுப் புறப்பட்ட கடைசி நாளில் எங்கள் வகுப்பறைக்கு கணபதிப்பிள்ளை மாஸ்ரர் வந்து 'நீங்கள் ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் பெயர் பெற்ற விக்னேஸ்வரக் கல்லூரிக்குப் புதுமுக மாணவர்களாகச் செல்லப் போகிறீர்கள். அந்தப் பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறையும் ஓர் ஊசி விழுந்தாலும் அந்தச் சத்தம் கேட்குமளவுக்கு அமைதியாக இருக்கும். நீங்களோ குழப்படி மன்னர்கள். அதனால் இந்தப் பாடசாலையின் நற்பெயருக்குக் களங்கமேற்படாத வகையில் அந்தப் பாடசாலையிலும் ஒழுக்கத்தோடு நடந்து கொள்ளுங்கள்' என்று சொல்லித் தான் வழியனுப்பினார். அதற்கேற்றபடி இந்தப் பாடசாலையிலிருந்து வெளியேறிய இறுதி நாள் வரை என்னால் இயன்றவரைக்கும் ஒழுக் கத்தோடு நடந்து கொண்டேன் என நம்புகிறேன்.

கேள்வி : நீங்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர்களைப் பற்றிக் கூறுங்கள்?

பதில் : இந்தப் பாடசாலைக்குப் புதுமுக மாணவனாக வந்தபோது மதிப்பிற்குரிய திரு. சிவபாத சுந்தரம் அதிபராக இருந்தார். அடிப்படையில் அவர் ஒரு B.Sc பட்டதாரி. உயர்தர வகுப்புக்கு விலங்கியல் பாடத்தைக் கற்பிப்பதில் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருந்தார். ஒழுக்கத்திற்கும் கண்டிப்பிற்கும் பெயர் பெற்றவர். விக்னேஸ்வரக் கல்லூரியை ஒரு புகழ் பூத்த பாடசாலை யாக்கியதில் இவருக்குக் கணிசமான பங்கிருக்கிறது. முற்பகல் வேளைகளில் ஒரு பிரம்பை முதுகுப்புறமாக மறைத்துக் கொண்டு டக்டக்கெனச் சப்பாத்து ஒலியெழுப்ப வகுப்பறைகளைக் கண்காணித்துக் கொண்டு செல்வார். அவ்வேளை பாடசாலை வளாகமே மயான அமைதியில் மூழ்கியிருக்கும். அந்தக் காலத்தில் விக்னேஸ்வரக் கல்லூரியில் நடந்த கல்விக் கண்காட்சியொன்றில் மனித எலும்புக்கூடொன்று சைக்கிள் ஓடியதைப் பற்றி இன்றைக்கும் பரபரப்பாகப் பேசுவார்கள். இதற்கான பொறிமுறை முழுக்க முழுக்க திருவாளர் சிவபாதசுந்தரத்தின் அயராத முயற்சியினாலேயே உருவாக்கப் பட்டிருந்தது. இவர் நான் இந்தப் பாடசாலைக்குப் புதுமுக மாணவனாக வந்து ஒரு வருடத்துக்குள் இளைப்பாறிவிட்டார். பின்னர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஓய்வுநிலை ஆசிரியராக உயர்தர வகுப்புகளுக்கு விலங்கியல் கற்பித்து வந்தார். 1993 என்பதாக நினைவு. அப்பாடசாலையில் விலங்கியல் கற்பித்துக் கொண்டிருக்கும் போது திடீர் சுகவீனமேற்பட்டு வகுப்பறை மேசையிலேயே அவர் உயிர் பிரிந்து விட்டது. திருவாளர் சிவபாதசுந்தரம் இளைப்பாறியதும் மதிப்பிற்குரிய திரு.வ.செல்வராசா அதிபரானார். இவர் அடிப்படையில் ஒரு B.Com பட்டதாரி. மென் போக்காளர். ஆனால் கண்டிப்பானவர். நல்ல பேச்சாளர். இவர் ஒருமுறை தியாகி திலீபனின் நினைவுநாளில் அகிம்சைப்போரின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றிய போது பொபிசாண்டோசையும் திலீபனையும் ஒப்பிட்டுப் பேசியது எனக்கு இப்போதும் நினைவிலிருக்கிறது. 1992 காலப் பகுதியில் நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டியில் வலய மட்டத்தில் கட்டுரையாக்கத்தில் நான் இரண்டாமிடம் பெற்றமைக்கான சான்றிதழை இப்பாடசாலையின் சோமசுந்தரம் அரங்க மேடையில் வைத்து இவரது கைகளால் பெற்றிருக்கின்றேன். இவரும் சுமார் இரண்டு வருடங்கள் அதிபராகவிருந்து இடமாற்றலாகிச் சென்றுவிட்டார். பின் நாட்களில்

வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயங்களில் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி இளைப்பாறி இப்போது இப்பாட சாலையின் நூற்றாண்டு விழா மலர்க் குழுவின் தலைவராக இருக்கிறார். இவரை யடுத்து உயர்திரு க.அம்பலவாணர் அதிபராகப் பொறுப்பேற்றார். அடிப்படையில் ஒரு B.A பட்டதாரியான இவர் மனிதநேயம் மிக்க பண்பாளர். நல்ல நிர்வாகி. இவரது உயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றத்தைப் போலவே உள்ளமும் பரந்து விரிந்து உயர்ந்ததாகும். விவசாயக் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் மீது அதீத பரிவும் அக்கறையும் காட்டுவார். சமூகக்கல்வி, தமிழ் இலக்கண இலக்கியம், பொருளியல் போன்ற பாடங்களை ஐயம், திரிபு, மயக்கமின்றிக் கற்பிப்பதில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர் இப்பாடங்கள் எல்லாவற்றையும் சாதாரண தரத்திலும், உயர்தரத்திலும் கற்கும் அரிய வாயப்பினை நான் பெற்றிருந்தேன். நான் பாடசாலையிலிருந்து வெளியேறிய 1995 காலப்பகுதியிலும் இவரே அதிபராக இருந்தார். இதனைத் தொடர்ந்து ஓரிரு வருடங் களில் பதவி உயர்வு பெற்றுக் கரவெட்டிக் கோட்டக் கல்வியதிகாரியாகக் கடமையாற்றி வந்தார். நோய் வாய்ப்பட்டிருந்த தனது துணைவியாரைப் பராமரிக்கும் நோக்குடன் ஓய்வு பெறும் காலத்திற்கு ஒரு வருடம் முன்பாகவே இளைப்பாறி விட்டார்.

கேள்வி : இந்தப் பாடசாலையிலே உங்களுக்குக் கற்பித்த பெரு மதிப்பிற்குரிய ஆசிரியர்களைப் பற்றிக் கூறுங்கள்.

பதில் : இந்தப் பாடசாலையிலே சாதாரண தரத்திலிருந்து உயர்தரம் வரை எனக்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் பெரு மதிப்பிற்குரியவர்களே. இருந்தும் சிலரை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்தேயாக வேண்டிய கடப்பாடு எனக்குண்டு. அந்த வகையில் எனக்குக் கணித பாடத்தைக் கற்பித்த உயர்திரு.க.செல்வரத்தினம் ஆசிரியரைப் பற்றி முதலில் குறிப்பிட்டாக வேண்டும். ஆரம்ப வகுப்புகளிலிருந்தே எனக்குக் கணித பாடம் விளங்கிக் கொள்வதற்குக் கடினமானதொன்றாகவேயிருந்தது. அப்பாடத்திலே நான் முப்பத்தைந்திற்கும் குறைவான புள்ளிகளையே பெற்று வந்திருந்தேன். திரு.க.செல்வரத்தினம் ஆசிரியரிடம் கணித பாடத்தைக் கற்க ஆரம்பத்திலிருந்து தான் அப்பாடத்தின் மீது ஆர்வமும் ஈடுபாடுங் கொண்டேன். அவர் கணித பாடத்தை வெகு எளிமையாகவும் தெளிவாகவும் கற்பிப்பதில் வல்லவராக இருந்தார். தவணை விடுமுறை நாட்களில் கூட எங்களுக்கு விசேட வகுப்புகளை இப்பாடசாலையில் ஒழுங்கு செய்து கற்பித்திருக்கிறார். கணிதத்தில் சாதாரண சித்தியாவது கிடைக்குமா? என்ற சந்தேகங் கொண்டிருந்த எனக்குப் பொதுப் பரீட்சையில் விசேட சித்தி கிடைத்தமைக்கு அவரது கற்பித்தலே முழுக்காரணமாகும். பின்னாளில் எதிர்பாராதவிதமாக அவருக்கு ஏற்பட்ட விபத்தொன்றில் உடல் வலுவிழந்து காரியாலய பணியிலமர்த்தப்பட்டார். இது கணித பாடத்தை மெல்லக் கற்கும் என் போன்ற மாணவர்களுக்குப் பெருமிழப்பாகும். இப்போது என்னைக் கண்டாலும் அக்கறையோடு நலம் விசாரிக்கும் பெருந்தகைகளுள் அவருமொருவர்.

அப்போது விவசாய விஞ்ஞான ஆசிரியராக திரு.A.K.மனுநீதி (அப்பாத்துரை கிருபானந்த மனுநீதி) இருந்தார். சாரணர் இயக்கப் பொறுப்பாசிரியரும் அவர் தான். ஆசிரியர்கள் வருகை தந்திராத சாதாரணதர வகுப்புகளுக்கு வருகை தந்து பாடத்திட்டத்திற்கு வெளியேயான சிற்சில பொது விடயங்களைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுவார். அவ்விதமொரு

நாள் எங்களது வகுப்பிற்கும் வந்தார். நானப்போது ஓரளவுக்கு ஓவியம் வரையக்கூடியவனாக இருந்தேன். அன்றைக்கும் ஏதோவொரு ஓவியம் வரைந்து கொண்டிருந்தேன். அவர் வகுப்பறைக்குள் நுழைந்ததைக் கவனிக்கவில்லை. ஆனால் அவர் என்னைத் தான் கவனித்திருக்கிறார். நேரடியாக எனதிடத்திற்கு வந்து நான் வரைவதைப் பார்த்துக் கொண்டு நின்ற போது தான் அவரைக் கண்டேன். உடனே சட்டென்று இருக்கையிலிருந்து எழுந்தேன். அவர் என் தோளில் தட்டிக் கொடுத்து இருத்தி 'நன்றாகக் கீறுகிறாய்' எனப் பாராட்டி எனது பெயர், விபரமெல்லாம் கேட்டறிந்து சாரணர் இயக்கத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டார். எப்போதும் என் மீது அதீத அக்கறை காட்டுவார். மற்றவர் முன் என்னையழைத்து எனது ஓவியம் வரையுமாற்றலை மெச்சி அறிமுகப்படுத்துவார். ஒரு நல்லாசிரியர் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு இவரும் ஒரு முன்னுதாரணர் என்று தான் சொல்லுவேன். புத்தாக்கங்கள் மற்றும் கண்டுபிடிப்புக்களில் அதிக ஈடுபாடுள்ளவர். மின்தடை நிலவிய நெருக்கடியான காலகட்டத்தில் பெருங்காற்றாடியொன்றினைத் தனது வீட்டில் வடிவமைத்து மின்சார உற்பத்தியைச் செய்த பெருமை இவருக்குண்டு.

எனக்குச் சாதாரணதர வகுப்பில் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பித்த மூவரைப் பற்றி இத்தருணத்திலே குறிப்பிட்டேயாக வேண்டும். முதலில் திரு.செ.யோகராசா ஆசிரியர் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பித்தார். இவரிடம் தமிழ் கற்க ஒவ்வொரு மாணவனும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அக்காலப் பகுதியில் இவர் 'கருணையோகன்' என்ற புனைபெயரில் சிறுகதைகள் எழுதி இலக்கிய உலகில் கவனிப்பைப் பெற்றிருந்தார். தமிழ்மொழியை சுவையாகவும், நயமாகவும், அங்கதமாகவும் கற்பிக்கும் சிறப்புத்தேர்ச்சியை இவர் கொண்டிருந்தார். இவர் பாடம் நடத்தும் போது இடைக்கிடையே மாணவர்களைக் கேள்விகள் கேட்பார். பதில் தெரியாமல் எழுந்து நிற்கும் மாணவர்களுக்குத் தோழர்! மௌன அஞ்சலி செலுத்துவதற்கு இரண்டு நிமிடம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்வார்.

இயல்பாகவே எனக்குத் தழிழைக் கற்பிப்பதில் மிகுந்த ஈடுபாடும் அதீத ஆர்வமுமிருந்தது. அதைக் கவனித்து வந்தார். என் மீது மிகுந்த அக்கறையும் பிரியமும் கொண்டிருந்தார். இதைத்தவிர இல்ல விளையாட்டுப் போட்டியில் நான் கிருஷ்ணபிள்ளை இல்லத்தில் (மஞ்சள்) இருந்தேன். எங்கள் இல்லப் பொறுப்பாசிரியராகவும் திரு. செ.யோகராசா ஆசிரியர் இருந்தார். விளையாட்டுக்களில் ஈடுபடுவதில் பின்னடிக்கும் இயல்புள்ள என்னை இவர் தான் இல்லத்தலைவரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டியெறிதல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடவைத்து இல்லத்திற்குப் புள்ளிகள் பெற்றுக்கொடுக்க வழிவகுத்தார். இப்பாடசாலையின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் ஏணி சஞ்சிகை முழுக்க இவரது முயற்சியினால் தான் உருவானதென்பது குறிப்பிடத்தக்கது. 1991 காலப்பகுதியில் இவர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றுவிட்டார். இவரைத் தொடர்ந்து எங்களுக்கு திரு.க.அம்பலவாணர் ஆசிரியர் தமிழ் கற்பித்ததோடு இலக்கியப் பகுதிகளில் வரும் வெண்பாக்களுக்கு நயம் எழுதும் முறையினையும் அறிமுகப்படுத்தினார். சாதாரணதர வகுப்பில் மட்டுமன்றி உயர்தர வர்த்தகப்பிரிவில் கற்றலைத் தொடர்ந்தபோதும் திரு.க அம்பலவாணரவர்கள் எமக்குப் பொருளியல் கற்பித்தார். ஒவ்வொரு வகுப்பிற்கு வரும் போதும் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையைக் கொண்டு வந்து முக்கியமான புள்ளிவிபரங்களையெல்லாம் எடுத்துக்காட்டிக் கற்பித்தலை மேற்கொள்வார். தனியார் கல்வி நிறுவனங்களில் பொருளியல் கற்பித்த ஆசிரியர்கள் கூட வியந்து மெச்சும் வகையில்

இவரது கற்பித்தல் குறிப்புக்கள் அமைந்திருக்கும். உயர்தர வகுப்பிற்குப் பொருளியல் கற்பிக்க வரும் போதெல்லாம் "இந்த பதினைந்து பேரும் இப்படியே பல்கலைக்கழகம் சென்று விட வேண்டும்" என்று சொல்லுவார். உயர்தர வகுப்பில் படிக்கும் போது எங்களுக்குப் பாடசாலைக்குப் பிந்திச் செல்லும் கெட்ட பழக்கமிருந்தது. ஒரு நாள் திரு.க. அம்பலவாணர் எங்கள் வகுப்பிற்கு வந்து நாளை இங்கே Team வருகிறது யாரும் பிந்தி வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டுப்போனார். அப்போது அவர் கல்லூரி அதிபராகவுமிருந்தார். அடுத்தநாள் அவர் சொன்னதை மறந்து வழமைபோல் பிந்தித்தான் பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தோம். Team வந்து விட்டது அதிகாரிகள் கல்லூரி வளாகத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடன் நின்று கொண்டிருந்த அதிபரவர்கள் பிந்தி வந்த எங்களைக் காட்டி "இவையள் எல்லாம் விவசாயக்குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பெற்றோருக்குத் தோட்டத்தில் உதவி செய்து விட்டு சற்று பிந்தி வருகிறார்கள்" என அதிகாரிகளிடம் சொல்ல நாங்கள் வெட்கித் தலை குனிந்தோம். இப்படியொரு மனிதரை நாம் எங்கும் காண முடியாது.

திரு.க.அம்பலவாணரை தொடர்ந்து எங்களுக்கு சாதாரணதர வகுப்பில் தமிழ் கற்பிக்க திருமதி க.நாளினி ஆசிரியை வந்தார். இவர் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் சகோதரியின் மகள் அதாவது பேராசிரியரின் மருமகள் இவரிடம் பாடங்கேட்பது எங்களுக்கெல்லாம் ஒரு சுகானுபவ மென்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் இலக்கியத்திலும் இலக் கணத்திலும் இவருக்கிருந்த ஆழ்ந்தகன்ற புலமையால் கற்பித்து ஆக்கமும் ஊக்கமு மளித்தார். நான் இவரது விருப்புக்குரிய மாணவர்களில் ஒருவனாக இருந்தேன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் பெருமையடைகின்றேன். கோட்டமட்ட, வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி களிலெல்லாம் இவர்தான் என்னைப் பங்குபற்ற வைத்தார். இவர் எங்களுக்குத் தந்த ஊக்கமும் வழிகாட்டலும் தான் நான் கட்டுரையாக்கத்திலும் ஈ.தயாரூபன் சிறுகதையாக் கத்திலும் கே.தரணீதரன் பேச்சுப்போட்டியிலும் கல்லூரிக்குச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்க வழி சமைத்தது. 1994 காலப்பகுதியில் விவாதப் போட்டியில் எங்கள் கல்லூரி வலய மட்டத்தில் முதலிடம் பெற்றமைக்கும் இவர் தான் முழுமுதல் காரணம். நான் இப்போது இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருப்பதற்கும் இவர் தான் உந்து சக்தியாக இருந்தார். தற்போது இடமாற்றலாகி வடமத்திய மகளிர் கல்லூரிக்குச் சென்று விட்டார். இப்போதும் என்னை எங்கே கண்டாலும் தாயன்புடன் நலம் விசாரிக்கும் இந்த நல்லாசிரியரை உயிருள்ள வரை மறக்க முடியாது.

திரு.கை.நமசிவாயக்குருக்கள் எங்கள் வகுப்பிற்குச் சைவசமயம் கற்பித்தார். வேதம், ஆகமம் சடங்கு, கிரியை இவற்றிற்கெல்லாம் குல ரீதியாகவே தாடனங் கொண்டிருந்தவர் என்பதால் இவரிடம் சைவசமயம் கற்பது எனக்கு சிறந்ததொரு கற்றல் அனுபவத்தைத் தந்தது. என்ன சந்தேகங்கேட்டாலும் ஐயந்திரிபு மயக்கமுற விளக்குவார். தேவாரங்களைப் பண்ணோடு பாடி விளக்கமளிப்பார். இதனால் எங்களுக்குத் தேவாரங்களை மனனஞ் செய்வது எளிதாகவிருந்தது.

சாதாரணதர வகுப்புக்களில் திரு.தங்கராசா ஆசிரியர், திரு.கிருஸ்ணமூர்த்தி, திரு.நல்லதம்பி ஆசிரியர் ஆகிய மூவரிடம் நாங்கள் ஆங்கிலம் பயின்றோம். திரு.தங்கராசா ஆசிரியர் நீண்ட வெண் தாடியுடன் தோற்றமளிப்பார். இதனால் தான் அவரைத் தாடித்தங்கராசா மாஸ்ரர் என்றும் சிலர் அழைப்பதுண்டு. வகுப்பில் மிகக் கண்டிப்பானவர். அவர் பாடம் நடத்தும்போது

கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். கவனயீனமாக இருக்கும் மாணவர்களுக்கு முதுகில் பிரம்படி நடக்கும். இவர் கற்பிக்கும் முறை உயர்தரமானது. என் போன்ற மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் விளங்கிக் கொள்வது கடினமாகவிருக்கும். இவர் சோதிடம் பார்ப்பதிலும் வல்லவர். இப்போது காலமாகிவிட்டார். திரு.கிருஸ்ணமூர்த்தி ஆசிரியர் கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய பூசகரின் மருமகன் அவர் எங்கள் வகுப்பிற்கு ஆங்கிலம் கற்பிக்க வந்தபோது எல்லோருக்கும் பயமாக இருந்தது. அவர் வேறு பாடம் நடத்தும்போது மாணவர்களை மேசை மீது கவிழ்த்து முதுகில் குத்துவதைப் பார்த்திருக்கின்றோம். உண்மையில் திரு.கிருஸ்ணமூர்த்தி ஆசிரியரிடம் ஆங்கிலம் கற்க ஆரம்பித்த பின்னரே எனக்கு அப்பாடத்தைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் பாடத்தைப்படித்த பின்னர் பயிற்சி தருவார். அதைச் செய்து காட்ட வேண்டும். அதில் பிழைகள் விட்டிருந்தாலும் பக்குவமாகத் திருத்தி அழகாகக் கையெழுத்திடுவார். அந்தக் கையெழுத்தைப் பெறுவதற்காகவே அவரிடம் பயிற்சி செய்து காட்டும் மாணவர்களும் இருந்தனர் பாடவேளை முடியும்போது வீட்டுப்பயிற்சி தருவார். அதைச் செய்யாமல் அடுத்தநாள் வகுப்பிற்கு வரும் மாணவர்களுக்குத்தான் முதுகில் குத்து விழும். இவரும் ஒரு குறுகிய காலப்பகுதி தான் எங்களுக்குக் கற்பித்தார். பின்னர் இடமாற்றலாகி சென்று விட்டார். இப்போது கொழும்பில் வசிக்கிறார். இவரையடுத்து எங்களுக்குத் திரு.கா.நல்லதம்பி ஆசிரியர் வந்து ஆங்கிலம் கற்பித்தார். அப்போது வேட்டியுடன் வந்து ஆங்கிலம் கற்பித்த ஒரேயொரு ஆசிரியர் இவராகத்தானிருக்கும். எங்களை எந்தக்கேள்வியும் கேட்கமாட்டார். எதையும் வாசிக்கும் படி சொல்லவும்மாட்டார். எல்லாவற்றையும் தாமே வாசித்துத் தெளிவாக விளக்குவார். பயிற்சிகள் தருவார். முடிவில் அதற்கான விடைகளையும் எழுதிக் காட்டுவார். எனக்கு ஆங்கில பாடத்தின் மீதிருந்த பயத்தையும் நம்பிக்கையீனத்தையும் போக்கியதில் இவர் முக்கியமானவர். இப்போது காலமாகி விட்டார்.

இவர்களைத்தவிர சாதாரண தர வகுப்புக்களில் கற்பித்த ஆசிரியர்களெனப் பார்த்தால் திரு.சங்கரப்பிள்ளை ஆசிரியர் (சமூகக்கல்வி), செல்வி மல்லிகா ஆசிரியை (விஞ்ஞானம், திருமதி.இ.சரோஜினிதேவி (சித்திரம்), திரு.கி.தர்மேந்திரா, திருமதி ந.ஒப்பிலாமணி (வர்த்தகமும் கணக்கியலும்) ஆகியோரும் மறக்க முடியாத பெருந்தகையோராவார். அதுவும் திரு.சங்கரப்பிள்ளை ஆசிரியரைக்கண்டால் சாதாரணதர வகுப்பு மாணவர் களுக்கெல்லாம் அடிவயிற்றில் புளியைக் கரைத்தது போலிருக்கும். அவர் கைவசம் எப்போதுமொரு பிரம்பு இருக்கும். யாராவது மாணவர் குழப்படிவிட்டால் பார்த்துப் பாராமல் விளாசித்தள்ளி விடுவார். சோதிரூபன் ஆசிரியருக்குப்பிறகு தொடர்ந்து இரண்டு வருடங்கள் எமது வகுப்பிற்கு வகுப்பாசிரியராக இருந்தார். இவரிடம் அடியேதும் வாங்காமல் தப்பித்த அதிர்ஷ்டசாலிகளுள் நானுமொருவன். இவரது வசிப்பிடம் துன்னாலை. இவரது மகன் தயாளனும் எங்களுடன் தான் படித்தான். தற்போது ஒரு பொறியியலாளனாக வெளிநாட்டிலிருக்கின்றான்.

திருமதி இ.சரோஜினிதேவி ஆசிரியை எங்களது வகுப்பிற்குத் தொடர்ந்து மூன்று வருடங்கள் சித்திரம் கற்பித்தார். நான் ஓரளவு சித்திரம் வரையக்கூடியவனாக இருந்தமையால் எப்போதும் அவரது விருப்பிற்குரிய மாணவனாக இருந்தேன். அப்போது தனியார் கல்வி நிறுவனங்களில் சித்திர பாடம் கற்பிக்கப்படுவதில்லையென்பதால் பாடசாலையில்தான் அதைப்படித்தாக வேண்டும். சரோஜினி ஆசிரியை தரும் பாடக்குறிப்புக்களை ஒழுங்காக

எழுதிப்படிக்கும் மாணவர்களில் நானுமொருவனாக இருந்தேன். பொதுப்பரீட்சையில் சித்திர பாடத்தில் நான் விசேட சித்தி பெற்றமைக்கு சரோஜினி ஆசிரியையின் வழி காட்டுதல் தான் முழுமுதற் காரணமாகும். இவரது கணவர் திரு.இராஜேந்திரா தீவகம் மற்றும் வலிகாமப் பகுதிகளில் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவி வகித்தவர். திருமதி இ.சரோஜினி ஆசிரியை இப்போதும் என்னை எங்காவது சந்தித்தால் மிகுந்த அக்கறையோடு நலம் விசாரிபபார்.

திரு.க.சோதிரூபன் ஆசிரியரையடுத்து எங்களது வகுப்பிற்குத் தொடர்ந்து இரு வருடங்கள் செல்வி வி.மல்லிகா ஆசிரியை விஞ்ஞானம் கற்பித்தார். உயர்தர விஞ்ஞான பிரிவு வகுப்பு களுக்குத் தாவரவியல் பாடத்தையும் இவர் கற்பித்து வந்தார். மிகவும் அமைதியான சுபாவ முடையவர் இவரைத்தவிர வர்த்தகமும் கணக்கியலும் கற்ப்பித்த திரு.கி.தர்மேந்திரா ஆசிரியர் மற்றும் திருமதி ஒப்பிலாமணி ஆசிரியை ஆகியோரைப் பற்றியும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நான் இந்தப் பாடசாலைக்கு புதுமுகமானவனாக வந்திருந்தபோது எட்டாம் வகுப்பிற்கு (ஆண்டு ஒன்பது) தொழில் முறைப்பாடமாக வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தைத் தெரிவு செய்யும் மாணவர் தமிழ் மொழியிலும் கணிதத்திலும் ஆகக்குறைந்தது 35 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடாகவிருந்தது. எனக்கோ வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தைக் கற்பதில் மிகுந்த விருப்பமிருந்தது. ஆனால் கணிதத்தில் 30 புள்ளிகள் மட்டுமே பெற்றிருந்தேன். நான் வேறு பாடசாலையிலிருந்து வந்திருந்தமையால் அந்தப் பாடசாலையில் மாணவர் தேர்ச்சி அறிக்கையினை (Progress Report) பார்த்துப் புள்ளிகளை உறுதிப்படுத்திக் கொள்ள ஏற்பாடாகியிருந்தது. அன்றைய தினம் “வர்த்தகமும் கணக்கியலும்” பாடத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்தார்கள். நான் போய்த் தெரிவு செய்யும் ஆசிரியரிடம் எனக்குத் தமிழ்மொழி 76 புள்ளிகள் என்ற உண்மையையும் கணிதம் 38 என்ற பொய்யையும் சொல்லி நாளை மாணவர் தேர்ச்சி அறிக்கையைக் கொண்டு வந்து உறுதிப்படுத்துவதாகக் கூறி தெரிவுக்குள்ளானேன். நல்ல வேளை அதன் பின்னர் ஒருபோதும் என்னிடம் மாணவர் தேர்ச்சி அறிக்கையை காட்டுமாறு யாரும் கேட்கவில்லை. எங்களது வகுப்பிற்கு முதலில் “வர்த்தகமும் கணக்கியலும்” கற்பித்தவர் தான் திரு.கி.தர்மேந்திரா ஆசிரியர் அப்பாடத்தில் எங்களுக்கெல்லாம் ஆர்வமூட்டக்கூடிய விதத்தில் நுட்பமாகக் கற்பிக்குமொருவராக இவர் விளங்கினார். விளையாட்டுத்துறையிலும் இவர் வல்லவராக விளங்கினார். இவரையடுத்து திருமதி ஒப்பிலாமணி ஆசிரியை தொடர்ந்து இரண்டு வருடங்கள் எங்களது வகுப்பிற்கு “வர்த்தகமும் கணக்கியலும்” கற்பித்தார். ஒரு தாயின் பரிவோடு தான் இவரது கற்பித்தல் அணுகுமுறையமைந்திருக்கும் இவ்விருவரிடமும் நான் கற்றுக் கொண்ட அடிப்படையறிவு தான் உயர்தர வகுப்பில் நான் துணிவோடு வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுக்க உந்து சக்தியாக அமைந்திருந்தது.

இத்தருணத்தில் எனக்கு உயர்தரப்பிரிவில் கற்பித்த ஆசிரியர்களைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். 1995 வர்த்தகப்பிரிவில் எட்டு ஆண்களும் ஏழு பெண்களுமாக பதினைந்து பேர் படித்தோம். எங்களுக்கு வகுப்பாசிரியராகவும் கணக்கியல் பாட ஆசிரியராகவும் திருமதி இ.மகேந்திரராணி ஆசிரியை இருந்தார். இவர் மிகக் கண்டிப்பானவர் கணக்கியல் பாடத்தைக் கற்பிக்கும் போது மாணவரனைவரும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பார். அந்த நேரத்தில் யாராவது வேறு பராக்கிலிருந்தால் வகுப்பை விட்டு வெளியேற்றி விடுவார். அப்போதெல்லாம் இவரது பெயரைக்கேட்டால் தனியார் கல்வி

நிறுவனத்தில் கணக்கியல் கற்பிப்பவர்கள் கூட யாழ் மாவட்டத்திலேயே இவரைப்போல் கணக்கியல் பாடத்தில் ஆளுமை மிக்கவர் எவருமில்லையென்பார்கள். அந்தளவிற்கு மேதமை வாய்ந்ததாக இவரது கற்பித்தல் அணுகுமுறையமைந்திருக்கும். பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் போது எந்த மாணவருக்கும் இவர் 50 புள்ளிகளுக்கு மேல் வழங்கியதில்லை. ஆனால் பிரபல கணக்கியல் ஆசிரியர்களெல்லாம் மகேந்திர மிஸ்ஸிடம் 50 மார்க்ஸ் எடுத்தால் அது 100 மார்க்ஸ் எடுத்ததற்குச் சமம் என்று சொல்வார்கள். நான் கணக்கியல் பாடத்தில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் காட்டியதால் இவர் என் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். நீ எக்கவுன்ஸில் A எடுப்பாய்" என்று என்னைப் பார்த்து அடிக்கடி சொல்வார். அதுபோலவே நான் பொதுப் பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் அதிவிசேட சித்தியைப் பெற்றிருந்தேன். நான் இலக்கியச் செயற் பாடுகளில் ஈடுபடுவதையறிந்த மகேந்திர ஆசிரியை ஒரு தடவை என்னைப் பொது நிகழ் வொன்றில் சந்தித்தபோது நீ ஓர் இலக்கியவாதியாகிவிட்டாய் என்று அறிந்தபோது மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தேன். இடைவிடாமல் தொடர்ந்து இத்துறையில் ஈடுபட வாழ்த்துகிறேன் என்று சொன்னார் அந்தக் கணத்தில் நான் உள்ளம் பூரித்து நின்றேன்.

எங்களுக்குப் பொருளியல் பாடத்தை இருவர் கற்பித்தனர். ஒருவர் திருவாளர் க.அம்பலவாணர் ஆசிரியர் இவரைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டு விட்டேன். மற்றவர் திருமதி சு.மகேஸ்வரி ஆசிரியை இவரது கற்பித்தல் முறை மிகவும் வித்தியாசமானதும் தற்புதுமையானதுமாகும். முதலில் ஒரு குறிப்பிட்ட பாட அலகினைப் போதுமான அளவிற்கு விளங்கப்படுத்துவார். பின்னர் தான் விளங்கப்படுத்தியதை எங்களிடம் எழுதித்தருமாறு பணிப்பார். எழுதிக்கொடுத்தால் தேவையான திருத்தங்களைச் செய்து மேலதிக விளக்க மளிப்பார். அந்தப்பாட அலகினைத் திரும்பப் படிக்க வேண்டிய அவசியமிருக்காது. இவர் மற்ற வகுப்புக்களுக்குத்தான் மிகக் கண்டிப்பான ஆசிரியை ஆனால் எங்கள் வகுப்பிற்கு ஒரு தாயைப் போன்று பரிவு காட்டும் ஆசிரியையாக இருந்தார். தோழமை உணர்வோடு எங்களுடன் பழகினார். 1994 காலப்பகுதியில் வருடாந்த ஒன்றுகூடல் நடைபெற்ற போது எமக்குப் போதுமான நிதி கிடைக்கவில்லை. அப்போது இவர் தனது சொந்தப்பணத்தில் 5000 ரூபாவினை நாங்கள் கேட்காமலேயே தந்துதவினார். வடமாகாணத் திட்டமிடல் பணிப்பாளர் திரு.சுவாமிநாதனின் அன்பு மனைவியாக மட்டுமன்றி எங்கள் பாசத்துக் குரிய ஆசிரியையாகவும் இருந்த இவரை என்றென்றும் மறக்க முடியாது.

அளவையியலும் விஞ்ஞானமுறையும் பாடத்தை முதலில் எமக்கு இருவர் கற்பித்தனர். ஒருவர் திரு.எஸ்.கருணேஸ்வரன் ஆசிரியர் மற்றவர் திரு.கே.நவரத்தினம் ஆசிரியர் இந்த இருவருள் திரு.கருணேஸ்வரன் ஆசிரியர் அடிப்படையில் ஒரு B.Sc. பட்டதாரி விருப்பத் தெரிவுக்குரிய பாடமாக அளவையியலை கற்றிருந்தமையால் எமக்கு பாடமெடுக்க வந்திருந்தார். குறியீட்டு அளவையியலை மையப்படுத்தியே அவர் எமக்குக் கற்பித்தார். அவரது கற்பித்தல் முறை கணிதவியலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவர் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் இருந்தார். துன்னாலையை வசிப்பிடமாகக் கொண்டவர் இப்போது காலமாகிவிட்டார். மற்றவர் திரு.கே.நவரத்தினம் ஆசிரியர் இவர் தனியார் கல்வி நிறுவனங்களில் அளவையியலைக் கற்பிப்பதில் மிகப்பிரபலமானவர். எல்லோரும் இவரை லொஜிக் நவம் என்று தான் அழைப்பார்கள். வேட்டியணிந்து வரும் மிகச்சில ஆசிரியர்களில் இவருமொருவர். அளவையியலைக் கற்பிப்பதில் ஒரு நீண்ட கால அனுபவம் வாய்ந்தவர். பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

மெல்லக் கற்கும் மாணவனுக்கும் உடனடியாக விளங்கக்கூடிய வகையில் மிக எளிமையாகக் கற்பிப்பார். இவர் எங்களுக்கு குறியீட்டு அளவையியலைக் கற்பித்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் வடமத்திய மகளிர் கல்லூரிக்கு இடமாற்றலாகி சென்று விட்டார். இவருக்குப் பின்பாக செல்வி கே.ஜமுனாராணி ஆசிரியை எங்களுக்கு அளவையியல் கற்பிக்க வந்தார். இவரும் எல்லோருக்கும் விளங்கக் கூடிய விதத்தில் இலகுவான அணுகுமுறையில் கற்பிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார். எங்களோடு அன்பாகவும் சிநேக பூர்வமாகவும் பழகினார். ஒரு சில மாதங்கள் கற்பித்த நிலையில் இவரும் வேறு பாடசாலைக்கு இடமாற்றலாகி சென்று விட அளவையியல் கற்பிக்க ஆசிரியர் இல்லாத நிலை ஏற்பட்டது. இதை நாங்கள் அதிபர் திரு.க.அம்பலவாணரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். அதற்கவர் நீங்கள் யாராவது அளவையியல் கற்பிக்கும் ஆசிரியரைப் பாடசாலையில் வந்து கற்பிக்க ஒழுங்கு செய்யுங்கள் அவருக்குரிய கொடுப்பனவை பாடசாலை நிர்வாகம் மேற்கொள்ளும் என்றார். நாங்கள் அப்போது கோவிற் சந்தைக் கருகில் வசித்து வந்த அளவையியல் ஆசிரியர் திரு ஆ.பிரபாகரன் அவர்களிடம் போய் எங்கள் கல்லூரியில் அளவையியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை வந்து கற்பிக்க முடியுமா? எனக்கேட்டோம். அவரும் எவ்வித மறுப்பும் சொல்லாமல் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் பாடசாலைக்கு வருகை தந்து இரு பாட வேளைகள் அளவையியல் கற்பித்தார். இவரும் இவரது தமையனார் திரு ஆ. விக்கினேஸ்வரன் ஆசிரியரும் அப்போது தனியார் கல்வி நிலையங்களில் அளவையியலும் விஞ்ஞானமும் முறையும் கற்பிப்பதில் முன்னணி புகழ் பூத்த ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் எங்களுக்குக் குறியீட்டு அளவையியலை மட்டுமன்றி விஞ்ஞான முறையினையும் வெகு நுட்பமாக்க கற்பித்தார். இதனால் பொதுப் பரீட்சையில் இப் பாடத்தில் அதி விசேட சித்தியைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலுமாயிருந்தது.

எங்களது வர்த்தகப்பிரிவுக்கு வர்த்தகமும் நிதியும் பாடத்தினை திருமதி கி.வனஜா ஆசிரியை கற்பித்தார். இவர் சாதாரண தர வகுப்புகளில் எமக்குச் சித்திரக்கலையைக் கற்பித்த திருமதி இ.சரோஜினிதேவியின் இளைய சகோதரியென்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய பொருளியல், அளவையியல் பாடங்களைப்போலன்றி இப்பாடத்தில் கேட்கப் படும் வினாக்களுக்கு நுட்பமாகவும், திட்பமாகவும், சுருக்கமாகவும் விடையளிக்க வேண்டியிருக்கும். அதற்கேற்ற விதத்தில் திருமதி கி.வனஜா ஆசிரியை எங்களுக்கு “வர்த்தகமும் நிதியும்” பாடத்தினைச் சிறப்பாகக் கற்பித்திருந்தார். இவரும் என் மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகையாவார்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்வாசிரியப் பெருந்தகைகளையெல்லாம் நினைவுகூர முடிந்ததை யிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

கேள்வி : நீங்கள் இக்கல்லூரியில் பயின்ற நாள்களில் நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவங்களைக் குறிப்பிடமுடியுமா?

பதில் : நிச்சயமாக என்னால் இயன்றவரை குறிப்பிட எத்தனிக்கிறேன். 1990 காலப்பகுதியின் முற்பகுதியில் (மார்ச்மாதமென்பதாக நினைவு) ஒரு வெள்ளிக்கிழமையிரவு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தேனிசைச்செல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் பாடும் நிகழ்வொன்று நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. நான் அப்போது திரு A.K.மனுநீதி ஆசிரியரின் தூண்டுதலால் சாரணர் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தேன். அன்றைய தினம் பாடசாலை முடிவடைவதற்கு ஒரு பாடவேளை முன்னதாக

சாரணர் அனைவரையும் திரு A.K. மனுநீதி ஆசிரியர் மைதானத்திற்கழைத்து எங்களை வட்ட வடிவில் நிற்கவைத்து இன்றிரவு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இடம் பெற வுள்ள இசை நிகழ்விற்கு நீங்கள் கடமையாற்றுவதற்குச் செல்ல விருக்கிறீர்கள். இந்தக் கல்லூரிக்கு நற்பெயரைத்தேடித்தரும் விதத்தில் அங்கே செயற்படுவீர்களென நம்புகிறேன். இப்போது நீங்கள் வீடுகளுக்குச் சென்று உணவருந்தி பிற்பகல் 5.30 மணிக்கு உரிய ஏற்பாடுகளுடன் நிகழ்விற்குச் சமூகமளிக்க வேண்டும் இப்போது நீங்கள் கலைந்து செல்லலாம். என ஓர் இராணுவத்தளபதியின் கம்பீரத்தோடு சொல்லி முடித்தார். அவர் சொன்னதை நாங்கள் பிசகாமல் செய்தோம். நிகழ்விடத்திற்குச் சென்ற போது வகுப்புத் தோழன் சசிகுமார் என்னுடன் சேர்ந்து கொண்டான். அங்கே எங்களுக்குச் செய்வதற்குப் பெரிதாகக் கடமைகள் ஒன்றும் இருக்கவில்லை. எல்லாப் பொறுப்பும் தமிழீழ மாணவர் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வமைப்பின் பிரதிநிதியாக அங்கே நின்று கொண்டிருந்த இன்னொரு வகுப்புத்தோழன் தயாளனைக் கண்டு கதைத்தோம். பின்னர் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியையும் சுப்புமணியின் நாடகங்களையும் கண்டு கேட்டுக்கணித்துப் பின்னிரவில் வீடு திரும்பினேன்.

1990 நடுப்பகுதியில் வடக்கில் போர்மேகம் சூழ்ந்து கொண்டது. விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டனர். போர் தொடங்கியது வடபகுதிக்கான மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. பிரேமதாசாவின் அரசாங்கம் வடபகுதியெங்கும் கால வரையறையற்ற ஊரடங்குச்சட்டத்தினை அமுலுக்குக் கொண்டு வந்தது. பாட சாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டன. அப்போது மக்கள் வட பகுதியில் தொடர்ந் திருக்கமுடியாதென்ற நிலையில் படகுகளில் இந்தியாவிற்கு பெருமளவில் புறப்பட்டுச் சென்றனர். அப்படிப்புறப்பட்டுச் சென்ற சில திசைமாறிப் போய்க் கடலில் தத்தளித்து இறந்ததுமுண்டு எங்கள் கல்லூரியில் அப்போது நடனக்கலை ஆசிரியையாக இருந்த செல்வி மாலதியும் இவ்வாறு படகில் இந்தியாவுக்குப் புறப்பட்டுத் திசைமாறிப் போய்க் கடலில் தத்தளித்து இறந்து போனார். இந்த வருடம் க.பொ.த உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகள் எதுவும் நடைபெறவில்லை. மிகுந்த நெருக்கடியான ஒரு கால கட்டமாக அது இருந்தது. போர் முடிந்து டிசம்பர் மாதம் தான் திரும்பவும் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. அடுத்து வந்த 1991 காலப்பகுதியில் பாடசாலைகள் ஒழுங்காக இயங்கின. இடைக்கிடையே நிகழும் விமானக்குண்டு வீச்சுக்களாலும் பலாலி இராணுவ முகாமிலிருந்து வீசப்படும் எறிகணைகளாலும் மிகுந்த அச்சத்துடனேயே நாங்கள் கல்வி கற்க வேண்டியிருந்தது. இக்காலப்பகுதியில் தான் புலிகள் ஆனையிறவு இராணுவ முகாம் மீது தாக்குதல் தொடுத்து பலத்த உயிரிழப்புக்களோடு மோசமாகத் தோல்வி யடைந்து பின்வாங்கினார். 1991 நவம்பரில் மாவீரர் நாள் வந்த போது எங்கள் கல்லூ ரியிலே மாவீரர் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந் நிகழ்வில் எங்கள் கல்லூரியின் சாரணர் இயக்கம் இரவு பகல் கடமைகளில் ஈடுபட்டது. இதற்காகச் சாரணரை ஐந்து பிரிவுகளாக்கித் திரு.A.K.மனுநீதி ஆசிரியர் பொறுப்புக்களை ஒப்படைத்திருந்தார். நான் சுடுநீர் வைக்கும் பிரிவில் உள்ளடக்கப்பட்டிருந்தது ஞாபக மிருக்கிறது. பிற்பகல் வேளையில் மாவீரர்களின் பெற்றோர் பல வாகனங்களில் கொண்டுவரப்பட்டு கல்லூரியில் இறக்கிவிடப்பட்டனர். நாங்கள் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் அமரவைத்தோம். இரவிரவாக வீடியோப்படக் காட்சிகளும் நாடகங்களும் இடம் பெற்றன. இப்போது சிவபாதசுந்தரம்

கேட்போர்கூடம் எனப்பெயரிடப்பட்டுள்ள மண்டபத்தில் புலிகள் இயக்கப் பிரமுகர் யோகரட்ணம் யோகி வந்து சிறப்புரையாற்றினார். நள்ளிரவு 12 மணிக்கு மைதானத்தின் நடுவே ஈகைச்சுடரேற்றப்பட்டது. மாவீரரின் பெற்றோர் எள்ளங்குளம் மாவீரர் துயிலு மில்லத்திற்கு வாகனங்களில் ஏற்றிச்செல்லப் பட்டு ஈகைச் சுடரேற்றும் நிகழ்வு முடிந்த பின் திரும்பவும் கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டனர். அடுத்த நாள் காலை சிற்றுண்டி வழங்கி மாவீரர் பெற்றோரை வழியனுப்பி வைத்தோம்.

1992 தொடக்கம் என்பதாக நினைவு பிரேமதாசா அரசு பாடசாலை மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்கி வந்தது. திடீரென அவ்வுணவு முத்திரைத்திட்டத்தை நிறுத்தப் போவதாகச் செய்திவந்தது. அதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் பாடசாலை மட்டத்தில் பேரணியொன்றை ஒழுங்குசெய்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து "உணவு முத்திரையை நிறுத்தாதே!" என்ற கோசத்துடன் நெல்லியடி , மந்திகை பருத்தித்துறை யூடாக ஊர்வலம் சென்று பருத்தித்துறைப் பேருந்து நிலையத்தில் கல்விப்பணிப் பாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்தக் கல்லூரியில் சாதாரண தர வகுப்புக்களுக்கு விஞ்ஞானமும் உயர்தர வகுப்புக் களுக்கு விலங்கியலும் கற்பித்து வந்த திரு ப. ஈஸ்வரநாதன் ஆசிரியர் துடிப்பானவர். ஒரு செயல் வீரர் அவருடைய முன் முயற்சியினால் 1993 காலப்பகுதியில் தியாகி திலீபனின் நினைவு நாளையொட்டி இப்போதுள்ள நூலகம் திலீபன் அறிவகம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. ஆசிரியர்கள் , மாணவர்கள், நலன் விரும்பிகள், நூல்கள், சஞ்சிகை களைத் தாராளமாக அன்பளிப்புச் செய்தனர். நிதிப்பங்களிப்பிலும் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. எனக்கு இந்த நூலகம் பெரிதும் பயன்பட்டது. இந்த நூலகத் திலிருந்து தான் திரு.சந்திரராஜா எழுதிய அளவையியலும் விஞ்ஞானமுறையும் என்ற நூலை இரவல் பெற்றுப் பயன்படுத்தினேன். இது பொதுப்பரீட்சையில் எனக்குப் பெரிதும் கைகொடுத்து உதவியது. இக்கல்லூரி வரலாற்றில் திரு.ப.ஈஸ்வரநாதன் ஆசிரியருக்கு நீங்காத இடமுண்டு.

திருமதி க.நாளினி ஆசிரியையின் தூண்டுதலும் ஊக்கமும் தான் என் போன்றவர்களைத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்கு பற்ற வைத்ததென ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அப்போதெல்லாம் வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் தான் நடக்கும். நான் கட்டுரை எழுதும் பிரிவிலும் ஈ.தயாரூபன் சிறுகதை எழுதும் பிரிவிலும் பங்கு பற்றுவது வழமை. இருவரும் ஒரே சைக்கிளில் தான் போவோம். அங்கு சென்று போட்டிகளில் பங்கு பற்றிமுடிவுகள் அறிவிக்கப்படும் வரை காத்திருந்து முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் திரும்பி வருவோம். எப்போதும் கட்டுரைப்போட்டியில் எனக்கு இரண்டாவது இடமும், ஈ.தாயாரூபனுக்கு சிறுகதைப் போட்டியில் முதலாமிடமும் கிடைக்கும். தயாரூபன் என்னிலும் இரண்டு வயது மூத்தவர் தடியூன்றிப் பாய்தல் விளையாட்டிலும் வல்லவர் . கலைப்பிரிவில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகிப் பட்டதாரியானவர். இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை எழுதித் தேர்ச்சி பெற்று முல்லைத்தீவு பிரதேச செயலாளராகப் பதவி வகித்துத் தற்போது கிளிநொச்சி மாவட்டக் கமநல சேவைத்திணைக்களத்தின் உதவி ஆணையாளராகப் பதவி வகிக்கிறார். நாங்கள் உயர்தர மாணவர் மன்ற வெளியீடாகக் கொண்டு வந்த ஏணி இதழில் "தவளை" என்றொரு நல்ல சிறுகதையையும் எழுதியுள்ளார். படம் வரைவதிலும் கெட்டிக்காரர். எழுத்தோவியமும் கைவரப்பெற்றவர்.

நான் 1992 டிசம்பர் மாதம் க.பொ.த (சாதாரண) பரீட்சையை இந்தக்கல்லூரியில் இப்போது சிவபாதசுந்தரம் கேட்போர் கூடம் இருக்கும் மண்டபத்தில் எழுதினேன். முதல் நாள் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான பரீட்சை நடந்தது. அவ்வினாத்தாளில் எழுதும்படி கேட்கப்பட்டிருந்த நான்கு கட்டுரைகளில் எதையும் என்னால் எழுதக்கூடியதாக இருக்கவில்லை. அதனால் மனக்குழப்பத்திற்கும் பதற்றத்திற்குமுள்ளானேன். நல்ல வேளை அக்கட்டுரைகளுக்குப் பதிலாக ஏதேனும் சிறுகதையொன்றை எழுதலாமென்ற தெரிவுமிருந்தது. தவிர்க்க முடியாமல் அன்றொரு சிறுகதையை எழுதித் தேர்வை முடித்தேன். அதுவே நான் எழுதிய முதற்சிறுகதை. இந்தக்கல்லூரியில் வைத்துத்தான் நான் எனது முதற் சிறுகதையை எழுதினேன் என்பதில் பெருமையடைகிறேன். பின்னாளில் நான் ஒரு சிறுகதை எழுத்தாளனாவேன் என்பது அப்போது எனக்குத்தெரியாது.

1994 காலப்பகுதியில் கோட்டமட்டத்தில் ஒரு கல்விக்கண்காட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அப்போது எங்களது உயர்தர வர்த்தகப்பிரிவுக்கு வகுப்பாசிரியராக இருந்த திருமதி இ.மகேந்திரராணி என்னை அழைத்து 1995 வர்த்தகப் பிரிவின் சார்பில் கல்விக்கண்காட்சிக்கு ஒரு மாதிரிவங்கி (Model Bank) யினைக் காட்சிப் படுத்துமாறு பணித்தார். அவர் எதைச் சொன்னாலும் மறுத்துச் சொல்ல முடியாது. அந்தளவிற்குக் கண்டிப்பானவர். அதனால் உடனடியாக நாங்கள் நெல்லியடி மற்றும் பருத்தித்துறையிலமைந்துள்ள இலங்கைவங்கி, மக்கள் வங்கிக் கிளைகளுக்குச் சென்று முகாமையாளர்களுடன் நன்கு கலந்துரையாடிய பின்னர் ஒரு வங்கிக் கிளையின் கட்டமைப்பிற்கேற்ற வகையில் அந்தக்கல்விக்கண்காட்சியில் ஒரு மாதிரிவங்கியை அமைத்துக் காட்சிப்படுத்தினோம். பார்வையிட வந்தவர்களெல்லாம் எங்களைப் பாராட்டிச் சென்றனர். இந்தப் பாராட்டெல்லாம் திருமதி இ.மகேந்திரராணி ஆசிரியைக்கே உரித்தானதாகும்.


1994 காலப்பகுதியில் நான் உயர்தர மாணவர் மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டேன். திருமதி க.நாளினி ஆசிரியை, திருமதி சு.மகேஸ்வரி ஆசிரியை திரு.க.தர்ம லிங்கம் ஆசிரியர் ஆகியோர் என்னைப்பின் நின்று வழிநடத்தினார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் கடைசி இரு பாடவேளைகளில் மாணவர் மன்ற நிகழ்வுகள் நடைபெறும் முதிரா இளைஞர்களாக நாங்கள் செய்த நிகழ்ச்சிகள் இப்போது நகைப்பிற்குரியதாக விருந்தாலும் எங்களது ஆளுமைப்பண்புகளை நன்கு வளர்த்தெடுக்க நான் தலைமை யேற்று நடத்திய வருடாந்த ஒன்று கூடலுக்கு திருமதி க.நாளினி ஆசிரியையின் வழிகாட்டு தலில் யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் உயர்திரு.ம.சின்னத்தம்பி அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்து அந்நிகழ்வினைச் சிறப்பாகச் செய்து முடித்தோம்.

அடுத்ததாக உயர்தர மாணவர் மன்ற வெளியீடான ஏணி இதழ் வெளியிடும் பாரிய பொறுப்பும் எனக்கிருந்தது. அந்தக்காலப்பகுதியில் இன்றுள்ளதைப் போல் அச்சுத் தொழில் நுட்பம் விருத்தியடைந்திருக்கவில்லை. தட்டச்சுச் செய்து ஸ்ரென்ஸிலில் வெட்டி றோணியோ செய்யும் தொழில்நுட்பமே பரவலாக இருந்தது. அதுவே செலவு குறைந்ததாகவுமிருந்தது. அப்போது வடபகுதிக்கான பொருளாதாரத்தடை தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தமையால் கடதாசிக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது. முதலில் இதழுக்கான ஆக்கங்களைத் திரட்ட ஆரம்பித்தோம். இந்த விடயத்தில் திருமதி க.நாளினி ஆசிரியை

எங்களுக்குப் பக்கபலமாக இருந்தார். இந்த ஏணி இதழில் கனதியான விடயங்கள் இடம் பெறவேண்டுமென்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அதில் பிரதானமான விடயமாக நேர்காணல் இருந்தது. யாரை நேர்காணல் செய்வதென்ற கேள்வியெழுந்த போது இக்கல்லூரியின் பழைய மாணவரென்ற அடிப்படையில் அப்போது யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவிருந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் கா.சிவத்தம்பியை நேர்காணல் செய்வதென முடிவானது. நேர்காணலுக்கான வினாக் களைத் திருமதி க. நாளினி ஆசிரியை தான் மிகச் சிறப்பாகத் தயார் செய்து கொடுத்தார். ஒரு நாள் மதிய வேளை பேராசிரியருடனான நேர்காணலை மேற்கொள்ள நானும் உயர்தர மாணவர் மன்றச் செயலாளராக இருந்த நண்பன் சு.சசிகுமார் திரு.கே.சிவநேசன் ஆசிரியரும் கல்லூரியிலிருந்து சைக்கிள்களில் யாழ்.பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டோம். அந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாணம் செல்வதற்குச் சீரான பேருந்துப் போக்குவரத்து வசதியேதுமிருக்கவில்லை. நாங்கள் யாழ் பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்த போது பிற்பகல் நான்கு மணிக்கு மேலாகியிருந்தது. அங்கே க.ஜெகதீஸ்வரன், ஈ.தயாரூபன் தரணிதரன் ஆகியோர் ஏற்கனவே வந்து எங்களுக்காக காத்திருந்தனர். எல்லோருமாகச் சேர்ந்து போய்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பியைச் சந்தித்தோம். அப்போது தான் நான் அவரை நேரில் பார்த்தேன். ஓங்கியுயர்ந்த பேருருவாக நின்றார். ஒரு பேராசிரியர் இவ்வளவு எளிமையாகவும் இனிமையாகவும் தோழமையுணர்வுடனும் பழகுவார் என நான் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சலிக்காமல் நயமாகவும், இனிமையாகவும் பதிலளித்தார். அதை நாங்கள் ஒலி நாடாவில் பதிவு செய்தோம். சுமார் இரண்டு மணி நேரம் அவரைப் பேட்டிகள் கண்டு பதிவு செய்து முடித்து மன நிறைவோடு திரும்பினோம். அந்நேர்காணலைத் தயாரூபன் அழகாக எழுத்துருவாக்கித்தந்தார். இதழுக்கான வடிவமைப்பு மற்றும் ஓவியங்களை அருள்ராஜன் என்ற 1994 கலைப்பிரிவு மாணவன் சிறப்பாகச் செய்தார். விரைவாக ஏணி இதழை வெளிக்கொண்டு வந்தோம். பேராசிரியர் கா.சிவத்தம்பி நேர்காணல் பலரது சிலாபிக்குமுள்ளானது.

இதையெல்லாம் இப்போது நினைவுகூரும் போது அளவில்லா மகிழ்வும், மனநிறைவும் ஏற்படுகிறது. கரவெட்டியின் கல்விப் பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் விக்னேஸ்வரக் கல்லூரியில் கல்விகற்க எனக்குமொரு வாய்ப்புக் கிடைத்தது மட்டு மன்றி 2004 காலப்பகுதியில் பட்டதாரிகளுக்கான முன் பயிற்சிக் காலத்தில் நானும் இக் கல்லூரியில் 6 மாத காலம் பயிலுநராக இருந்ததையும் 1998 காலப்பகுதியில் இக்கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு (மதிப்பிற்குரிய அதிபர் திரு.க. அம்பல வாணர் கேட்டுக் கொண்டமைக்கிணங்க) கணக்கியலும், அளவையியலும் கற்பித்ததையும் அக்கல்லூரி நூற்றாண்டு விழாக்கொண்டாடும் இவ்வேளையில் எனக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதிப்பெருமிதம் கொள்கிறேன்.

# The hundred year old Vignesvara my alma mater



*Lion. V.Thillainathan. M.J.F.*
*Charter President Lions club of Vadamaradchy*
*Retired Chief Manager*
*Bank of Ceylon Super GR br*
*Jaffna*

Vigneswara college Karaveddi is celeberating its 100th birthday this year. This coincides with the centenary celeberations of the Lions clubs international the largest service organisation in the world.It is significant that when a chicago businessman named Melvin Jones conceived the idea of man helping his fellow humans who are under previleged by e stablishing the Lions clubs international way back in 1917, a man called Sithamaniam Maniyam as fondly called by the people of Karaveddi concieved the idea of establishing schools and temples for the welfare of his community.He established VIGNESWARA COLLEGE ---Manickavasagar vidyalayam--Sarawathi vidyalayam andVinayagar vidyalayam in addition to the Vellan pillayar temple.The lions clubs international established by Melvin Jones is today the largest service organisation in the world with more than one million four hundred thousand members in two hundred and one countries around the world. Thousands of Vignesvarans--old students of Vigneswara are spread out all over the world serving in different capacities and holding various positions.We must be proud of our Maniyapa-Gate Mudaliyar Chittampalam for the great services he has rendered to the people of Karaveddi which benefited even the villages in the neighbourhood.

Entered Vigneswara in the year 1949 in the sixth standard.There was no primary section at Vigneshwara those days.I came from Manickavasagar

vidyalayam.Our college was one of the best schools in Vadamaradchy at that time.We were taught by teachers from Thiruvananthapuram , south india. There were no gradguate teachers from the locality. Mr. G.Pathmanathapillai was the last indian principal and he retired the same year i joined.The first Sri-Lankan principal was Mr.K.Sivapragasam.B.A.London As the years progressed graduate teachers who qualified from indian universities joined the school. Mr.M.Sivasvithamparanathan,from Thumpalai Pont Pedro,Mr. Somasunthantharamoorthy,from Thunalai Karaveddi Mr. Ganeshamoorthy from Karaveddi are some of the names that come to my mind.Then started the flow of young graduate teachers from the ceylon university.Mr .C.Tharmalingam for science subjects and Mr.V.K.Nadarajah and Pon. Ganesan for arts subjects are the names that i remember.There was Mr. Balasubramaniam inter sc, economics, who was also a phonetician who taught us civics.

Education at vigneswara was not confined to class room only.It grew wide in the form of sports and games dramatics and oratory and other literary activities. Our school won many awards in the field of sports in the V.T.A competic;ns. in the year 1952 our volley ball team won the first place in the all island schools tournament under the captaincy of Ramajeyam.The plays we staged won prizes at the contests held by the V.T.A.A play titled <Swabasha> staged by us was highly acclaimed as it dealt with the current issue of the time.That was the time sinhala only was to be introduced by the then Prime minister S.W.R.D.Bandaranayake and we vigneswarans advocated the cotinued use of English as the official language and medium of instruction. Since this play was based on the current controversial affair and well presented it won the first place.1 remember playing the lead role in that drama.

One speciality at our college was the college Parliament a unique activity which was not prevalent in any other school in the area.The college Parliament practiced Parliamentary democracy in all its aspects.The composition and functions were more like the mother Parliament of Ceylon at that time but amended to suit the educational environments of the college.The Patron of the parliament was vice-principal or a senior master.The membership comprised of the J.S.C and Senior class students.

Electioins were annually held and a Speaker or a deputy elected presided over the sittings. The government comprised of the Prime minister and a cabinet of ministers.The leader of the opposition who was also the alternative Prime minister led the opposition.The cabinet of ministers were responsible for the portfolios of health sports-finance religious activities horticulture andthe maintanace of discipline among the students.The prime minister was also the leader of the students.

It is no coincidence that parliamentarians of the calibre of messers Pon Kanndiah M.Sivasitharnparam and K.Jayakody who made their mark in the parliament of ceylon were parliamentarians of the college parliament during their hey days at vigeshwara.Mr.Sivasithamparam held the post of deputy speaker of the parliament of ceylon.Mr. Siva has stated in an article he wrote in the college seventififth anniversay publication that what he gained as experience in the college parliament helped him to function as an efficent deputy speaker in the parliament of ceylon.

The college parliament ran the affairs of the school in most of the matters. The cabinet was almost similar to the prefects in other schools and the principal always gave a hearing to the advice of the prime minister who was. the student leader.

In the year 1954-1955 sessions i was the prime minister of the parliament. The five years i studied at vingeshwara gave me all the experience reqired in conducting my life in the later years. Special mention must be made of the leadership qualities gained from the college parliament. I was a trade unoin leader in the banking sector where i worked and was elected Senior Vice-President of the All ceylon bank employees union..When the lions club of vadamaradchy was formed i was elected the charter-president of the club and was appointed Zone-chairman and region chairman in consecutive years.Currently 2016-2017 lionsitic year i am the District-Cordinator-International for Dist. 306 B1 of the Lions clubs international Sri-Lanka.Recently i was awrded the Melvin Jones Fellowship M.J.F. by the Lions clubs international.

I am proud to say that theabove opportunities i got were possible because of the experiences gained at my Alma —mater .Vigneswara college. I am happy to share my memories of my old school with students of the past and present through this magazine being published to mark the centenary celeberations.



# விக்னேஸ்வரக் கல்லூரியுடனான தொடர்புகளும் அனுபவங்களும் 1964 - 2017

**வ.சிவச்சந்திரதேவன்**
ஓய்வுநிலை உத்தியோகத்தர், மக்கள் வங்கி.
முன்னாள் பகுதிநேர போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம் / சம்மாந்துறை.
தலைவர் – வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்.

எமது நாட்டின் வடபகுதியின் சிறப்பு கல்வி என்பது யாவரும் அறிந்ததே. இங்கு கரவெட்டிப் பகுதியில் சிறந்ததோர் கல்லூரியாக கடந்த நூறு ஆண்டுகளாக விக்னேஸ்வரக் கல்லூரி திறம்பட இயங்கிவருகிறது. இத்தகையதோர் கல்லூரியில் புலோலி, புற்றளையைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.சிவச்சந்திரதேவன் ஆகிய நான் 1964 ஆம் ஆண்டில் 3ஆம் தவணையின் ஆரம்பத்தில் இருந்து சுமார் 15 மாதகாலம் மட்டுமே இக்கல்லூரியில் கல்வி கற்க கிடைத்ததோர் சந்தர்ப்பத்தை பாக்கியமாகக் கருதுகிறேன். நான் இங்கு சேர்ந்தபோது அதிபராக இருந்தவர் திரு.வே.சோமசுந்தரம்(புலோலி). இவர் எனது உறவினராக இருந்ததன் காரணமாகவே நான் இங்கு சேரக்கூடியதாக இருந்தது. இதற்கு முன்னர் நான் கண்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்தேன். எனவே இக்கல்லூரியின் 100ஆவது ஆண்டு விழாவின்போது வெளியிடப்படும் மலரில் எனது கருத்துக்களையும் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் எட்டாம் வகுப்பில் மூன்றாம் தவணை சேர்ந்தபோது எனது வகுப்பில் சுமார் 30மாணவர்கள் படித்தார்கள். எனக்கு இவ்வகுப்பில் படிப்பித்த ஆசிரியர்களில் ஆங்கிலம் படிப்பித்த ஆசிரியர் தான் திரு.பாலசுப்பிரமணியம்(பாலர்) இவர் படிப்பிக்கும் முறை எனக்குப் பிடித்தமாக இருந்ததால் அவர் எனக்குப் பிடித்தமான ஆசிரியராகிவிட்டார். 1965ஆம் ஆண்டு நான் S.S.C. Prep. வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் படித்தேன். அப்போது எனக்குப் படிப்பித்த சில ஆசிரியர்களின் பெயர்கள் ஞாபகத்தில் உள்ளன.

அவர்களில் சிலர் பண்டிதர் முருகேசு (கரணவாய்) - தமிழ், திரு.கணேசமூர்த்தி (நவிண்டில்) - கணிதம், திரு.கார்த்திகேசு (கரவெட்டி) - சமயம், திரு.குலேந்திரன் (சாவகச்சேரி) - விஞ்ஞானம், திரு.சிதம்பரநாதன் (கோவில்சந்தை)- உடற்கல்வி, இக்காலத்தில் Discipline ற்கு பொறுப்பாக திரு. என்.சின்னத்தம்பி ஆசிரியர் இருந்தார். இவர்களைத் தவிர என்னுடன் படித்த மாணவர்களில் சிலரை (ஞாபகம் உள்ளவர்கள்) குறிப்பிடலாம். இவர்களில் சிலரது முதலெழுத்துக்கள் நினைவில்லை க.பாலகிருஷ்ணன் (கரவெட்டி), வ.சிவரூபன் (தளக்கந்தை), எஸ்.சிவநாதன் (கரவெட்டி),

தெய்வேந்திரன் (துன்னாலை), ஜெயபாலசிங்கம் (கரவெட்டி கிழக்கு), க.வேலாயுதம்(யார்க்கரு), நடராசமூர்த்தி (நாகர்கோவில்), வ.சந்திரசேகரம் (துன்னாலை), வரதராசசர்மா (கரணவாய்), மகேஸ்வரன்(நெல்லியடி), குணராசா(கரவெட்டி கிழக்கு), தனபாலசிங்கம் (செல்வம் மில்லடி) தியாகராசா (கரணவாய்), மகாலிங்கம்(கரணவாய்), இ.சிவராசா(யார்க்கரு), நிர்மலராசா(கரவெட்டி), சி.செல்வரத்தினம்(கீரிப்பல்லி), ஆ.தர்மராசா(நெல்லியடி), புனிதவதி (கரவெட்டி) சிவயோகம்(கரவெட்டி) இவர்களைத் தவிர செல்வராசா என்னும் பெயரில் மூவர் இருந்தனர். அவர்களை நாம் குறிப்புப் பெயர் கொண்டு அழைப்போம். எமது வகுப்பில் படித்து பின்னர் மரணித்தவர்கள் சிலரது பெயர்களும் நினைவிலுள்ளன. பொ.நமசிவாயம்(கரவெட்டி), செ.ஆனந்தசிகாமணி (அரசடி), நித்தியானந்தன்(கோவில்சந்தை), விமலராசா (நெல்லியடி).

இக்காலத்தில் நாம் சிறுவர்கள் என்பதால் எமக்குள் போட்டி, பொறாமை எதுவும் இல்லை. நாம் எங்களுக்குள் சண்டை பிடித்தாலும் சொற்ப நேரத்திலேயே சமாதானம் ஆகிவிடுவோம். இக்காலத்தில் எமக்குப் படிப்பித்த ஆசிரியர்கள் அன்பு கலந்த கண்டிப்புடனும், அர்ப்பணிப்புடனும் படிப்பித்தமையை நான் நன்றியுடன் பதிவு செய்கிறேன். இதன் காரணமாக நான் இக்கல்லூரியில் படித்து 53 வருடங்களின் பின்னரும் இப்பாடசாலையுடன் ஏதோ ஒருவகையில் தொடர்புபட்டவனாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கால்லூரியில் எமது படிப்பிற்கு அப்பால் வேறு பல செயற்பாடுகளிலும் ஈடுபட வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஒரு சம்பவத்தைச் சுருக்கமாக விபரிக்கலாம் என எண்ணுகிறேன். 1964ஆம் ஆண்டு கல்வியமைச்சால் மாணவர்கள் வயலில் களைபிடுங்கும் வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருந்ததன் காரணமாக எமது வகுப்பு மாணவர்கள் மூன்று தடவைகள் இச்செயற்பாட்டிற்காக அருகில் உள்ள வயல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது எமக்கு நாம் வயலுக்குள் செல்வது எவ்வாறு, மற்றும் அங்கு எவ்வாறு களை பிடுங்க வேண்டும் என எல்லாம் சொல்லித்தரப்பட்டது. முதல் நாள் செல்லும்போது எமக்கு களை பிடுங்குவதில் விருப்பமாக இல்லை. எனினும் நிர்ப்பந்தத்தின் காரணமாக நாம் சென்றோம். ஆனால் அங்கு சென்ற பின்னர் எமக்குக் களை பிடுங்குதல் மட்டும் அல்லாது வயலில் உள்ள நீரில் சந்தோஷமாக விளையாடி மகிழ்ந்தோம். எம்மை மேற்பார்வை செய்ய ஆசிரியர் ஒருவர் இருந்தாலும் நாம் அவரது கண்டிப்புகளையும் கவனிக்காது. எமது குறும்புகளைச் செய்தோம். களை பிடுங்கி முடிந்ததும் அவ்வயல் சொந்தக்காரர் எமக்குச் சிற்றுண்டி, தேநீர், இனிப்புவகைகள் தந்தார்கள். இவை எல்லாம் எமக்கு சந்தோஷத்தைத் தந்தது. முதலாவது தடவை இச்செயற்பாடு முடிந்த பின்னர் மீண்டும் ஒருமுறை இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்கினோம். அடுத்து ஒருமுறையும் கல்லூரிக்கு எதிரில் உள்ள வயலில் களை பிடுங்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கு எமது வகுப்பு மாணவர்கள் 20பேர் வரையில் களைபிடுங்கினோம். இதன் பின்னர் அவ்வயலின் உரிமையாளர் வேறு பாடசாலை ஒன்றின் ஆசிரியராகக் கடமையாற்றிய கீரிப்பல்லியை வதிவிடமாகக் கொண்ட திரு.தங்கராசா அவர்கள். இவர் எமக்குச் சாப்பிடுவதற்கு இடியப்பம், பிட்டு, தோசை, வடை மற்றும் சிறு சிறு பொதிகளில் வறுத்த பருப்புடன் சுடச்சுட தேநீரும் அருந்தத் தந்தார்கள். இவற்றைப் பார்த்து நாம் திகைத்தே விட்டோம். இவையெல்லாம் அக்காலத்தில் இருந்த பெரியோர்கள் ஏனையோரை மதிப்பவர்களாகவும், எமது கலாசாரப் பண்புகளில் உள்ளதான விருந்தோம்பலைச் செய்பவர்களாகவும் இருந்தார்கள் என்பதையும் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

நான் படித்த காலத்தில் கல்லூரியில் சிற்றுண்டிச்சாலை இல்லை. பாடசாலைக்கு மேற்குப் புறமாக உள்ள ஒரு வீட்டில் தேநீர்ச்சாலை ஒன்று இருந்தது. அங்கு தோசை, இடியப்பம், கடலை

போன்ற சிற்றுண்டி வகைகளும் தேநீரும் மிகக் குறைந்த விலையில் பெறக்கூடியதாக இருந்தன. அக்காலத்தில் நான் பகல்போசன இடைவேளையின் போது 5 சதத்திற்கு கடலையும் 5 சதத்திற்கு தேநீரும் வேண்டி அருந்துவேன். அப்போது தேநீரை மூக்குப் பேணி ஒன்றிலேயே தருவார்கள் (இப்போது உள்ளவர்களுக்கு மூக்குப் பேணி என்பது தெரியாது) இக்காலத்தில் பாடசாலை நேரம் மு.ப.8.30 முதல் பி.ப. 3.30 வரை என்பது ஞாபகம். பகல் ஒரு மணி நேரம் சாப்பாட்டு இடைவேளையும் காலை 10.00 மணிக்கு 15 நிமிட தேநீர் இடைவேளையும் விடுவார்கள்.

நான் தினமும் புற்றளையில் இருந்து மந்திகைச் சந்திவரை நடந்து வந்து பஸ் எடுத்து நெல்லியடி வந்து பின்பு கல்லூரிக்கு நடந்து வந்து படித்தேன். இதே போன்று பிற்பகலிலும் போக்குவரத்து இருந்தது. சிலவேளையில் நேரத்திற்கு பஸ் வராவிட்டால் காலையில் தாமதமாக வந்து பிரம்பால் அடி வேண்டியவையையும் நான் இன்னும் மறக்கவில்லை. பிற்பகலிலும் சிலவேளை பஸ் தாமதமாக, பாடசாலையில் இருந்து புற்றளையில் உள்ள எனது வீட்டிற்கு நடந்து சென்றேன். இதற்கு நான் சுமார் 1 1/2 மணிநேரம் செலவிட்டிருப்பேன். தற்போது வீட்டிற்கு வீடு துவிச்சக்கர வண்டிகள் இருப்பதால் மாணவர்களின் போக்குவரத்து இலகுவாகிவிட்டது.

ஒருமுறை நான் கல்லூரி முடிந்து நெல்லியடிக்கு நடந்து போய்க் கொண்டிருந்தபோது மேல் வகுப்பில் படித்த எனது ஊரைச் சேர்ந்த ஒருவர் தம்முடன் துவிச்சக்கர வண்டியில் வரும்படி கேட்டார். நான் “சரி” என்று சொல்ல அவர் ஓடிக் கொண்டிருக்கும்போது பின்னுக்கு பாய்ந்தோடி ஏறி இருக்கும்படி சொன்னார். நான் முயற்சித்தும் என்னால் ஏறி இருக்க முடியவில்லை. நான் ஏறி பின் Carrier இல் இருப்பதாக எண்ணி அவர் நெல்லியடி நோக்கிச் சென்றவேளையில் என்னை ஏன் மௌனமாக இருப்பதாகக் கேட்டிருக்கிறார். ஆனால் நான் இல்லாதது அவருக்கு அப்போது தான் தெரிய வந்தது. நான் துவிச்சக்கர வண்டியில் இருந்து விழுந்திருப்பேனோ என எண்ணி திரும்ப என்னைத் தேடிச் சென்ற வழியே வந்தபோது நான் விழாதது குறித்து சந்தோசப்பட்டு என்னை துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று வீட்டில் விட்டார். இந்த அனுபவத்தின் பின்னர் நான் எவரது துவிச்சக்கரவண்டியிலும் பின்னுக்கு ஏறுவதில்லை.

மேற்கண்டவாறு பல அனுபவங்களை இக்கல்லூரியில் படித்த காலத்தில் பெற்ற நான், போக்கு வரத்தில் உள்ள கஷ்டங்கள் காரணமாக எனது பெற்றோரால் வேறு ஒரு கல்லூரிக்கு 1966ஆம் ஆண்டில் மாற்றப்பட்டேன்.

நான் பாடசாலைக் கல்வி முடித்த பின்னர் விக்னேஸ்வரக் கல்லூரியில் உப அதிபராகப் பணிபுரிந்த திரு.நமசிவாயம் என்னை இக்கல்லூரியில் 1971ம் ஆண்டில் ஆங்கிலப்பாட தொண்டரா சிரியராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். நான் கண்டியில் இருந்து வந்து கஷ்டப்பட்ட வேளையில் என்னைக் கல்வி கற்க இடம் தந்த இக்கல்லூரியில் தொண்டராசிரியராக எனக்கு இருக்க விருப்பம் இருந்தது. எனினும் 1972ஆம் ஆண்டில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டதால் தொண்டராசிரியர் பதவியை ஏற்க முடியாது வருந்தினேன்.

நான் பாடசாலைக் கல்வியை முடித்த பின் 1971ஆம் ஆண்டில் கொழும்பில் துறைமுக அதிகாரசபையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காகச் சென்றபோது எனது ஆங்கில ஆசிரியர் திரு.பால சுப்பிரமணியம் அவர்கள் அங்கு மொழிபெயர்ப்பாளராகக் கடமை புரிவது அறிந்து சந்தித்தேன். அவர் எனது நேர்முகப் பரீட்சை முடிந்த பின்னர் என்னை புறக்கோட்டை “ஆரியபவான்” உணவகத்திற்கு அழைத்துச் சென்று பகல் போசனம் வழங்கியமையை நான் இன்றும் நினைவில் வைத்திருக்கிறேன்.

1975 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் அம்பாறை மாவட்டத்தில் தொழில் வாய்ப்புப் பெற்று 1985 ஆம் அண்டில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் வேலை செய்யும்போது 01.10.1985இல் என்னால் அல்வாயில் "வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்" என்னும் பெயரில் தன்னார்வத் தொண்டு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்மூலம் 1986 ஆம் ஆண்டில் இக்கல்லூரியுடன் எனது உறவைப் புதுப்பிக்கத்தக்கதாக இருந்தது. 1986 ஆம் ஆண்டில் திரு.சிவபாதசுந்தரம் அவர்கள் அதிபராக இருந்தபோது எமது கழகத்தின் சார்பில் கரவெட்டிப் பிரதேச பாடசாலையைவிட்டு விலகிய இளைஞர், யவதிகளுக்கு இப்பாடசாலையில் இலவச தமிழ் சுருக்கெழுத்து பயிற்சி, கல்லூரி நேரத் திற்குப் புறம்பான நேரத்தில் நடாத்தப்பட்டது. இப்பயிற்சியை நடாத்தியவர் இக்கல்லூரியின் பழைய மாணவியான மாலினி தவகுலரத்தினம் (உச்சில் அம்மன் கோவிலடி - தற்போது சுவிசில் இருப்பவர்) என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நடைபெற்ற எமது கழக முதலாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்விற்கு இக்கல்லூரியின் அப்போதய அதிபர் திரு.சிவபாதசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தமை குறிப்பிடத்ததக்கது.

1994 ஆம் ஆண்டு முதல் சுமார் 20 வருடங்களாக வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் சுருக்கெழுத்து-தட்டெழுத்துப் பயிற்சி பெற்ற மாணவர்களில் ஒருவர் இக்கல்லூரியின் அலுவல கத்தில் 6மாத கால செயன்முறைப் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக எமது வருடாந்த விழாக்களில் இப்பாடசாலை அதிபர்கள் தவறாது கலந்து கொண்டிருந்ததும் பெருமைக்குரியது.


இக்கல்லூரி, வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்திற்கும் எனக்கும் செய்த உதவிகளுக்கு நன்றிக கடனாக இக்கல்லூரி நூலகத்திற்கு நூல்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000/- (ஒரு இலட்சம்) பெறுமதியான காசோலையை 09.06.2012இல் அப்போதய கல்லூரியின் அதிபர் திரு. வே.சிவசிதம்பரம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இதன்மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் பாடசாலை மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாகும் என்பதில் ஐயமில்லை.

1999-2000 ஆண்டுகளில் நான் மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் "சிசு உதான" சேமிப்புத் திட்ட இணைப்பாளராக இருந்தபோது இக்கல்லூரியில் "சிசு உதான" சேமிப்பு அலகு ஒன்றை ஆரம்பிப்பதற்கு இக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியது பாராட்டுதற்குரியது.

நான் எனது பாடசாலைக் காலத்தில் 6 கல்லூரிகளில் பயின்றுள்ளமை எல்லோருக்கும் ஆச்சரியமளிக்கும். எனினும் இக்கல்லூரியில் 15 மாதங்கள் மட்டும் பயின்று பல அனுபவங்களைப் பெற்ற நான் இக்கல்லூரியுடன் தொடர்ந்தும் உறவைப் பேணவேண்டும் என்பதற்காக இக்கல்லூரியின் பழைய மாணவர்சங்க கொழும்புக் கிளையில் 2012 ஆம் ஆண்டுமுதல் அங்கத்தவராக இணைந்து தற்போது இதன் நிர்வாகக் குழுவில் ஒருவராக இருப்பதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

நூறு ஆண்டுகளைக் கடந்து கல்விப்பணி செய்யும் இக்கல்லூரி மேலும் பல நூறு ஆண்டுகள் தமது பணியைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

## நீங்கா நினைவுகள் - விக்னேஸ்வராவின் ஓய்வுநிலை மூத்த ஆசான் திரு. C. தர்மலிங்கம் ( C.T சேர் ) அவர்களின் நினைவுப் பகிர்வு



**செவ்வி கண்டவர்**
**வ. செல்வராசா**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**( பழைய மாணவன் )**

**வி**க்னேஸ்வரக் கல்லூரியில் முகாமையாளராக இருந்த திரு. K.C. நடராசாவின் காலத்தில் ஆசிரியராக இணைந்து, நீண்ட காலம் ஆசிரியப்பணி செய்ததன் பேறாகப் புலமைமிகு மாணவர்களைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் C.T.சேர் என அழைக்கப்படும் திரு.C.தர்மலிங்கம் அவர்கள். விக்னேஸ்வரக் கல்லூரியில் தான் கடமையாற்றிய காலப்பகுதிப் பதிவுகளை எம்முடன் பகிர்ந்து கொண்டார். 90 அகவையை எட்டிய போதும் தனது ஞாபகத்திலுள்ள பல விடயங்களை அவர் தெளிவான முறையில் எமக்குக் கூறினார்.

கேள்வி :- விக்னேஸ்வரக் கல்லூரியில் நீங்கள் எப்போது ஆசிரியராக இணைந்தீர்கள்?

பதில் :- 1950 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் H.S.Cதராதரப் பத்திர ஆசிரியராகக் கடமையைப் பொறுப்பேற்றேன். அவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றேன். அதே நாளில் திரு.S.கணேசமூர்த்தியும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

கேள்வி :- நீங்கள் ஆசிரியராக இணைந்த காலத்தில் பாடசாலை நிலைமைகள் தொடர்பாக

பதில் :- அக்காலத்தில் பாடசாலையின் முகாமையாளராக திரு.K.C.நடராசா அவர்கள் கடமை யாற்றினார். அவரது ஆலோசகராகக் கம்பகாக் கந்தப்பு கடமையாற்றினார். இதுவொரு தனியார் பாடசாலையாக இயங்கியது.

கேள்வி :- நியமனம் பெற்ற காலத்தில் நீங்கள் எந்தெந்த வகுப்புகளுக்குக் கற்பித்தீர்கள்?

பதில் :- சி.பா.த.ப ( S.S.C ) வகுப்புகளுக்குக் கணிதம், பௌதிகவியல் முதலான பாடங் களையும், இடைநிலை வகுப்புகளுக்குக் கணிதபாடமும் கற்பித்தேன். மேலதிகமாக மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றினேன்.

கேள்வி :- தங்களது காலத்தில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் யார்?

பதில் :- நான் ஆசிரியராக இணைந்த போது தும்பளையைச் சேர்ந்த திரு. சிவப்பிரகாசம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். தலைசிறந்த நிருவாகியான அவர் பாடசாலையின் கல்வித் தரத்தை மேம்படுத்த அயராது பாடுபட்டார். நீண்ட காலம் இப்பாடசாலையில் ஆசிரியராகப் பல அதிபர்களின் கீழ் கடமையாற்றிய அனுபவத்தை அவர் பெற்றிருந்தார். 1963 ஆம் ஆண்டு இறுதியில் அவர் நடேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து புலோலியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் பாடசாலையின் அதிபராகக் கடமையேற்றார்.

கேள்வி :- பாடசாலையின் பௌதிக வளங்கள் தொடர்பாக :-

பதில் :- பாடசாலையின் மேற்குப் புறமாக நுழைவாயிலை அண்மியதாக அதிபர் காரியாலயம் அமைந்திருந்தது. அதனோடு இணைந்ததாக ஆசிரியர் அறையும் இருந்தது. பாடசாலையின் தெற்குப் புறமாக விஞ்ஞான ஆய்வு கூடங்களும், இரு வகுப்பறைகளும் அமைந்திருந்தன. கிழக்குப் புறமாக இரு இடைநிலை வகுப்புக் கட்டடங்களும் இருந்தன. இதற்குக் கிழக்கே வடலிக்காணியொன்று இருந்தது. வடக்குப்புறமாக ஒரு மண்டபம் இருந்தது. அதில் மற்றைய வகுப்புகள் இருந்தன.

கேள்வி :- பாடசாலையில் எந்தெந்த வகுப்புகள் நடைபெற்றன?

பதில் :- நான் ஆசிரியராக இணைந்த காலத்தில் 6 - 10 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்றனர். கரவெட்டி, துன்னாலை , புலோலி, அல்வாய், வதிரி, திக்கம், பொலிகண்டி, கரணவாய், கப்புது முதலான கிராமங்களிலிருந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்தார்கள். அக்காலத்தில் சுமார் 300 மாணவர்களும், சுமார் 25 ஆசிரியர்களும் பாடசாலையில் இருந்தார்கள். மாணவர்களின் குடிநீர்த் தேவைக்காக திரு. இராசசிங்கம் அவர்களின் வீட்டிலிருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கேள்வி :- சிங்கள மாணவர்கள் தங்கள் காலத்திற் பாடசாலையிற் கல்வி கற்றார்களா?

பதில் :- அநுராதபுரத்தைச் சேர்ந்த சில்வா எனும் மாணவன் நான் கற்பித்த காலத்தில் தரம் 6 - சி.பா.த.ப (S.S.C) வகுப்பு வரை கல்வி கற்று சி.பா.த.ப பொதுப்பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தார். அக்காலத்தில் N.S.சின்னத்தம்பி ஆசிரியர் வீட்டிலுள்ள மாணவர் விடுதியில் இவர் தங்கியிருந்தார். இவரது திருமணத்திற்கு நானும், அதிபர் சிவப்பிரகாச முட்பட ஐந்து பேர் இங்கிருந்து அநுராதபுரத்திற்குச் சென்றோம். திரு. சில்வா எமக்கு வெற்றிலை வழங்கி வரவேற்றார். அக்காலத்தில் அவர் அநுராதபுரத்திலுள்ள பாடசாலை யொன்றில் சித்திரப் பாட ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் இவர் பதவியுயர்வு பெற்று அநுராதபுரம் மாவட்டக் கல்விப்பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியதாக அறிந்தேன். திரு.சில்வா S.S.C பொதுப்பரிட்சையில் தமிழ்மொழி பாடத்திற் திறமைச்சித்தி (Cசித்தி) பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வினா :- தங்களது காலத்திற் கல்வி கற்றுச் சாதனை படைத்த வேறு மாணவர்களைப் பற்றிக் கூற முடியுமா?

பதில் :- பல மாணவர்களைக் கூறலாம். சிலரை மட்டும் கூறுகிறேன். வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.க.கந்தசாமி தரம் 6 - S.S.C வகுப்பு வரை கற்றுப் பொதுப்பரீட்சையிற் சித்தியடைந்து, H.S.C வகுப்பிற் கற்பதற்காக ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்று பல்கலைக்கழகம் சென்றார். திக்கத்தைச் சேர்ந்த

திரு.வே.விசுவலிங்கம் எனது மாணவர்களில் ஒருவர். இவர் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து மன்னார் மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றினார். கரவெட்டியைச் சேர்ந்த கலாநிதி A.சின்னத்தம்பி திருமதி பார்வதி சின்னத்தம்பி, திரு.P.சின்னத்தம்பி திரு.செ.சுவாமிநாதன், திரு.செ.கதிர்காமநாதன் ஆகியோரும் இங்கு கல்வி கற்றவர்களே. இவர்கள் எல்லோரும் கலைப்பிரிவிற் கல்வி கற்றுப் பல்கலைக்கழகம் சென்றார்கள். இவர்களில் திரு.செ.சுவாமிநாதன் திட்டமிடற் பணிப்பாளராகவிருந்து பின்னர் மாகாணத்திட்டமிடல் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றினார். திரு.செ.கதிர்காமநாதன் இலங்கை நிருவாக சேவைப் பரீட்சையிற் சித்தியடைந்து உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார். மற்றைய மூவரும் விக்னேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றுக் கடமையாற்றினார். கலாநிதி A.சின்னத்தம்பி கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றார்.

வினா :- தங்கள் காலத்திற் பாடசாலையில் நடைபெற்ற இணைபாடச் செயற்பாடுகள் பற்றி என்ன கூறலாம்?

பதில் :- நான் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற முறை இயங்கியது. பாராளுமன்ற உறுப்பினர்களை மாணவர்களே தெரிவு செய்தனர். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து நான்கு அமைச்சர்கள் தெரிவு செய்யப் பட்டனர். இவ்வமைச்சர்களே தத்தமது துறைகளைக் கவனித்தனர். வாரந்தோறும் மாணவர்களின் பேச்சு, பட்டிமன்றம் முதலானவையும் இடம்பெறும். இக்கல்லூரியிற் கல்வி கற்ற திரு.மு.சிவசிதம்பரம், திரு.க.ஜெயக்கொடி, திரு.பொன் கந்தையா ஆகியோர் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். பாடசாலையில் கரப்பந்தாட்ட அணி, உதைபந்தாட்ட அணிகளும் இருந்தன. கரப் பந்தாட்டத்தில் அக்காலத்தில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்றமையையும் குறிப்பிடலாம்.

கேள்வி :- தங்கள் காலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களைப் பற்றிக் கூறுங்கள்?

பதில் :- நான் கடமையாற்றிய காலத்திற் புலோலியைச் சேர்ந்த திரு.சோமசுந்தரம், திரு.அருணாசலம், பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.சிவசிதம்பரநாதன், திரு.பாலசுப் பிரமணியம், துன்னாலையைச் சேர்ந்த திரு. சோமசுந்தர்மூர்த்தி, கரவெட்டியைச் சேர்ந்த திரு. கந்தையா, திரு.சிற்றம்பலம், திரு.சிதம்பரநாதன், திரு.A.சின்னத்தம்பி, திருமதி பார்வதி சின்னத்தம்பி ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இவர்களைத் தவிர நவிண்டிலைச் சேர்ந்த திரு.A.சுப்பிரமணியம் திருமதி.P.சுப்பிரமணியம் ஆகியோரும் கடமையாற்றினர். பண்டிதர் பொன்.கணேசன், திரு.P.சின்னத்தம்பி, திரு.V.தங்கராசா, மன்னவன் கந்தப்பு ஆகியோரும் பின்னர் ஆசிரியர்களாக இணைந்தனர்.

வினா :- ஆசிரியராகக் கடமையாற்றிப் பின்னர் அதிபராகப் பதவியுயர்வு பெற்றமை பற்றி ஏதும் கூற முடியுமா?

பதில் :- விக்னேஸ்வரக் கல்லூரியில் 14 வருடங்கள் ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமை யாற்றிய நான் கரணவாய் வாழ் மக்களின் வேண்டுதலை ஏற்று 1964 ஒக்ரோபர் மாதம் கரணவாய் மகாவித்தியாலயத்தில் கடமை நிறைவேற்று அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றேன். தொடர்ந்து புற்றளை மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய பின் ஓய்வு பெற்றேன். எனது கல்விப்பணி மூலம் பல மாணவர்களை இம்மண்ணில் நன்மாந் தர்களாக வாழ வழிகாட்டி மனநிறைவடைகிறேன்.

# சகாப்தம் வென்ற விக்னேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சிப்பாதையும் மிளிர்ச்சிப்போக்கும்



**ஆறுமுகம் இரகுநாதன்**
B.A (தமிழ்), M.A (அபிவிருத்திக்கற்கை)
சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்,
மாவட்டச்செயலகம்,
கிளிநொச்சி.

**வி**க்னேஸ்வரக் கல்லூரித்தாயின் பாதக்கமலங்களைப் பணிந்து அன்னையின் அறிவுச்சுடர் இலங்கும் மேன்மையை வரலாற்றுப் பார்வையாக, கோர்வையாக, சீர்மையுடன் ஆவணப்படுத்தும் ஆதங்கம் கொண்டு இக்கட்டுரை வரையப்படுகிறது.

**ஆரம்பமும் வளர்ச்சியும் :-**

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப்பகுதியில் கரவெட்டிப்பதியின் சீர்மிகு திருவாய், கற்பகதருவாய், நல்லுருவாய், ஊரனைத்தும் ஒளியேற்றும் விழியாய், ஞானத்தின் வழியாய் 1917இல் விக்னேஸ்வரக் கல்லூரி வித்தையின் விளைநிலமாய் முகிழ்த்தது. தென்மராட்சி மணியகாரராக பொலிவுற்ற கரவெட்டியின் வண்மை மகன் இராசவாச முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்கள் இக்கல்லூரியைத்தாபித்தார். ஆங்கிலமொழியின் ஊடுதிறன் புகுத்தப்பட்ட காலத்தின் தேவையறிந்து தோற்றுவிக்கப்பட்டதே இக்கல்லூரி. கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இருந்து சில மாணவர்களையும் மூன்று ஆசிரியர்களையும் நிலைப்படுத்தி கரவெட்டி நுகவில் வயலின் கிழக்குப் பக்கத்தில் அழகிய கிடுகுக் கொட்டகையுடன் இப்பாடசாலை கால்கோளானது. பின்னாளில் 1917.10.06 மூன்று வகுப்பறைகளைக் கொண்ட நிரந்தரக் கட்டட வசதி பெற்று மெருகுற்றது. இக்காலத்தில் அதிபராக கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை அவர்களும், முகாமையாளராக சின்னத்தம்பி சபாபதிப் பிள்ளை அவர்களும் சேவை நல்கினர்.

**சுருக்கக்குறிப்பு :-**

தாபகர் :- உயர்திரு. வீரவாகு சிற்றம்பலம்
(இராசவாச முதலியார், தென்மராட்சிப்பகுதி)

முகாமையாளர்கள் :- 01. திரு.சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை - 1917 - 1919
(கயிலைச்சட்டம்பியார்)

02. உயர்திரு. கந்தப்பு சின்னத்தம்பி - 1920 - 1955
(இராசவாச முதலியார், வடமராட்சிப்பகுதி)

03. திரு.கே.சி.நடராசா - 1955 - 1962
(பிரபல சட்டத்தரணி)

விக்னேஸ்வரக் கல்லூரி மெல்ல மெல்ல அறிவுச்சுடரின் தூண்டலிலும், துலங்கலிலும் புகழ் பெறத் தொடங்கியது. 1919இல் ஈ.எஸ்.எல்.சி (E.S.L.C) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியமைக்கு களம் அமைத்துக்கொடுத்தது. இந்தியாவிலிருந்து கே.இராமசாமி அவர்கள் வரவழைக்கப்பட்டு அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். இத்தகைய மாற்றம் எதிர்வரும் ஏற்றங்களுக்கு முத்தாய்ப்புக் கொடுத்தது. 1933இல் இலண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சைக்கு பல மாணவர்கள் தோற்றினர். வெற்றிகரமான பெறு பேறுகளைப் பெற்று வடமராட்சிப்பகுதியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த பாடசாலை என்ற நிலைக்கு அடித்தளம் இட்டனர். 1954இல் அதிபர் கே.சிவப்பிரகாசம் அவர்களின் முயற்சியினாலும், முகாமையாளர் கே.நடராசா அவர்களின் செல்வாக்கினாலும் எச்.எஸ்.சி. (H.S.C) கலை வகுப்புக்கள் ஆரம்பமாகி கால ஓட்டத்தில் விஞ்ஞான வகுப்புக்களும் இடம்பெறலாயின. இவ்வாறாக இப்பாடசாலை கல்லூரி என்ற கட்டமைப்புக்குரிய பட்டயத்தை தனதாக்கிக் கொண்டது. (1960) அறுபதுகளின் பிற்காலத்தில் உயர்தர வகுப்புக்களை நடத்திச் செல்வதில் வளப்பற்றாக்குறை (ஆசிரியர், பௌதிகவளம்) ஏற்பட்டதன் காரணமாக அவ்வகுப்புக்கள் கல்லூரியில் மையங்கொள்ள முடியாது போயிற்று. இருப்பினும் 1977இல் க.பொ.த உயர்தர கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புக்கள் மீளவும் கல்லூரியை அலங்கரித்தன. IAB தர பாடசாலையாக விக்னேஸ்வரக்கல்லூரி உயர்ந்தது. இவ்விடயத்தில் அப்போதைய அதிபர் எஸ்.நமசிவாயம் அவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் பழைய மாணவரும் பெரும் பங்காற்றினர்.

பாடசாலை ஒன்றின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் பலதரப்பட்ட பங்களிப்பினை நல்க முடியும். இந்த சங்கிலித் தொடரில் அதிபர் என்பவர் முதன்மை இடம்பெறுவதை சமூகமும், கல்விப்புலமும் அங்கீகரித்திருக்கின்றது. அந்த வகையில் விக்னேஸ்வரக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் பங்காற்றிய அதிபர்களைப் பற்றிய எழுத்து வடிவிலான விழிப்புணர்வுத் தேடல்கள் எதிர்காலச்சந்ததியினருக்கும் பாடசாலையினை மேம்படுத்த அயராது உழைப்போர்க்கும் ஊக்கியாக அமையும்.

அதிபர்கள் ஆற்றிய பணியும் தற்போதைய அதிபர் ஆற்றி வருகின்ற பணியும் வகைதொகையற்றவை. அனைத்தையும் பட்டியலிட்டு பதிவு செய்வதென்பது சிரமம் ஆகையால் சுருங்கச் சொல்லி நிறைவெண் காட்ட விளைகின்றேன். கல்வி நிர்வாகப்பணி, முகாமை, மேற்பார்வை, கண்காணிப்பு, வளங்களை இனங்காணல் மற்றும் ஒன்றுதிரட்டல், பௌதிக வளங்களை விருத்தி செய்தல், கட்டிக் காத்தல், மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்தல், பரீட்சைப் பெறுபேற்றில் உயர் நிலையைப் பேணல், இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவித்தல், பங்குகொள்ளச் செய்தல், கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் பரிசில்களைப் பெறச்செய்வித்தல் என அதிபரின் ஆளுகை என்பது நீண்டு செல்லக்கூடியது. காலதேச வர்த்தமானங்களைக் கடந்து செல்லக்கூடியது. கூட்டிணைப்பிற்கும், ஒழுக்க விழுமியங்களுக்கும், தகைசான்ற உறுதியினை, பற்றினை கட்டியெழுப்பி மாணவர்களை படியேற்றிவிடும் ஒப்பற்ற பணியும் ஆசிரியர் வழி அதிபருக்குரியதே. இந்தப்பணி விக்னேஸ்வரக் கல்லூரியில் நிகழ்ந்தேறியதை நிகழ்ந்து கொண்டிருப்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. பாடசாலையின் அதிபர் பட்டியலைக் கவனிப்போம்.

**விக்னேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய அதிபர்கள்:-**

| அதிபர் பெயர் | காலம் | இடம் |
|---|---|---|
| திரு. K. கிருஸ்ணபிள்ளை | 1917 – 1920 | நவிண்டில் |
| திரு. K. இராமசாமி | 1921 – 1928 | தென்னிந்தியா |
| திரு. K. அச்சுதன்பிள்ளை | 1929 – 1942 | தென்னிந்தியா |
| திரு. K.G. பத்மநாதபிள்ளை | 1943 – 1948 | தென்னிந்தியா |
| திரு. K. சிவப்பிரகாசம் | 1948 – 1963 | தும்பளை, பருத்தித்துறை |
| திரு. V. சோமசுந்தரம் | 1964 – 1970 | புலோலி |
| திரு. பொன் கணேசன் | 1971 – 1975 | கரவெட்டி |
| திரு. V. தங்கராசா | 1976 – 1977 | துன்னாலை |
| திரு. S. நமசிவாயம் | 1977 – 1979 | கரவெட்டி |
| திரு. A. சுப்பிரமணியம் | 1979 – 1980 | நவிண்டில் |
| திரு. K. சிவபாதசுந்தரம் | 1980 – 1990 | கரவெட்டி |
| திரு. K.S. சிதம்பரநாதன் | 1990 – 1990 | துன்னாலை |
| திரு. V. செல்வராசா | 1990 –1993 | கரவெட்டி |
| திரு. K. அம்பலவாணர் | 1993– 2000 | கரவெட்டி |
| திரு. K. செல்வராசா | 2000 – 2002 | வதிரி |
| திரு. V. சிவசிதம்பரம் | 2002 – 2012 | துன்னாலை |

**நிகழ்கால அதிபர்:-**

| | | |
|---|---|---|
| திரு. க.மு.கனகலிங்கம் | 2012 - இன்று வரை | புலோலி |

**திரு. V.K. கிருஸ்ணபிள்ளை-**

பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற பெருமைக்குரியவர். விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வம் உடையவர். ஓய்வு நேரங்களில் உயர்தர மாணவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்து பரீட்சைகளுக்குப் பயிற்றுவித்து சித்திபெறச் செய்வித்தவர். பிற்காலத்தில் வட்டாரக்கல்வி அதிகாரியாக உயர்ந்து வட மாநில பிரதம கல்வி அதிகாரியாக மேன்மையுற்று விக்னேஸ்வரக் கல்லூரிக்கு பீடு தந்த பிதாமகர்.

**திரு.K.இராமசாமி**

தென்னிந்தியாவைச் சேர்ந்த கல்விமானான திரு. K. இராமசாமி பாடசாலையின் இரண்டாவது அதிபராக பதவியேற்றார். இவர் காலத்தில் E.L.S.C, S.S.L.C வகுப்புகளில் மாணவர் தொகை அதிகரித்தது. வகுப்பறைகளும் அதிகரிக்கப்பட்டன. 1927இன் பின்னர் இலங்கை நிர்வாகசேவையில் சேரும் பொருட்டு பாடசாலையில் இருந்து விலகினார்.

**திரு.K.P.அச்சுதன்பிள்ளை**

அதிபர் திரு.K.இராமசாமிக்குப் பின்பு தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு.K.P.அச்சுதன்பிள்ளை அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த திருவாளர்கள் K.G.பத்மநாதபிள்ளை, K.கோவிந்தபிள்ளை, M.R.வாசுதேவன்பிள்ளை ஆகிய பிரபல கல்விமான்கள் ஆசிரியர் குழாமில் இணைந்தனர். London Matriculation பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற களம்

அமைத்துக் கொடுக்கப்பட்டது. 1930 இல் வரலாற்றுப்பாட ஆசிரியர் திரு M.R. வாசுதேவன்பிள்ளை அவர்களைக் காப்பாளராகக் கொண்ட மாணவர் பாராளுமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. சாரணியம், கரப்பந்தாட்டம் என்பனவும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. சண்டிலில் இருந்த மெதடிஸ் தமிஷன் பாடசாலைக்குரிய 6 பரப்புக் காணியும் கட்டடமும் குறித்த பாடசாலை இயங்காமற்போகவே விளையாட்டு மைதானமாகவும், வறிய மாணவர்களுக்கான இலவச விடுதியாகவும் மாற்றி அமைக்கப்பட்டன.

**திரு. K.G பத்மநாதபிள்ளை**

விக்னேஸ்வரக்கல்லூரியின் பொற்கால அத்திபாரம் இவரால் இடப்பட்டது எனலாம். பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுமாகப் பலர் நியமிக்கப்பட்டனர். முதல் பெண் ஆசிரியையாக செல்வி மின்னொளி சின்னக்குட்டி என்பவர் இணைக்கப்பட்டார்.

**உட்கட்டுமாண வளர்ச்சி**

60 x 30 அளவிலான புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் 700 மீற்றர் தூரத்தில் உள்ள S.K. இராஜசிங்கம் வீட்டில் இருந்து கையினால் இயங்கும் பம்பி மூலம் முதற்குழாய் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

**உயர்வுகள்**

கரப்பந்தாட்டத்துறையில் பல ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிக்கிண்ணங்களையும், கேடயங்களையும் மாணவர் குழு பெற்றுக்கொண்டமை. அணித்தலைவர்களான திரு.P.குமாரசுவாமி (யப்பான்), திரு.K.சிவசிதம்பரம் (அத்தான்) ஆகியோர் வெற்றிக்கு பெரும் பங்காற்றினர்.
திரு.A.கனகசபை அவர்களைக்காப்பாளராகக் கொண்ட நா்டகமன்றம் சிறப்பாக இயங்கி வந்தமை.

**திரு. K. சிவப்பிரகாசம்**

மாணவர் ஒழுக்கத்தில் கண்டிப்பாக இருந்து பணியாற்றியவர். ஆங்கிலம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களை திறமையுடன் கற்பித்தார். H.S.C கலை, விஞ்ஞானம் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்ட பெருமைக்குரியவர்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. அகில இலங்கை ரீதியில் கட்டுரை, பேச்சுப்போட்டியில் முதலிடம் கிடைத்தமை
2. திரு. ஆ. இராமஜெயம் தலைமையினால் கரப்பந்தாட்ட அணி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றமை.
3. மாணவர் தலைவர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
4. ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை.
5. 120x26 கிழக்கு மண்டபம் அமைக்கப்பட்டமை.
6. 60x 29 தொழில்நுட்ப, மனையியற் கூடங்கள் நிறுவப்பட்டமை.
7. ஆண், பெண் வெவ்வேறு கழிப்பறைகள் அமைக்கப்பட்டமை.
8. நூல் நிலையம் தாபிக்கப்பட்டமை.

(பாடசாலையின் இத்தகைய உயர்வுக்காலம் சிவப்பர் காலம் என இன்றும் சிலாகிக்கப்படுவதுண்டு)

**திரு. V. சோமசுந்தரம்**

அதிபர் சிவப்பிரகாசம் காலத்தில் முகிழ்விடத் தொடங்கிய பல்கலைக்கழக மாணவர் அனுமதியின் வேகம் இவர் காலத்தில் உத்வேகம் கண்டது. நகைச்சுவை உணர்வு மிக்க இவர் சிறந்த பௌதிகவியல் ஆசிரியர் ஆவார்.

சாதனைகள் / உயர்வுகள்

1. திரு.சி.கதிர்காமநாதன் போன்ற எழுத்தாளர்கள் வெளியுலகை எட்டியமை.
2. 1964ல் 14 வயதுக்குட்பட்ட பிரிவில் அகில இலங்கை ரீதியிலான விளையாட்டுப்போட்டியில் செல்வன் N.தங்கத்துரையும், மு.கனகசிங்கமும் முதலிடம் பெற்றமை.

**அதிபர் பொன் கணேசன்**

ஆங்கிலமும், தமிழும் சிறப்பாகக் கற்பித்தவர். கல்லூரியின் அருகாமையில் இயங்கி வந்த றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மூடப்பட்டு அங்குள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் விக்னேஸ்வரக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு ஆரம்பப்பிரிவுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டன.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. மாணவர் முதல்வர் முறை மீளப் புகுத்தப்பட்டமை.
2. மேற்கு மண்டபம் வகுப்பறைகளாகப் பிரிக்கப்பட்டமை.
3. திரு.V.கந்தப்பு (மன்னவன்) அவர்களால் ஆக்கப்பெற்ற கல்லூரிக் கீதம் அறிமுகம் செய்யப் பட்டமை.
4. கலைசார் போட்டிகள், தாபகர் நினைவு தினம், பரிசளிப்புவிழா தொடர்ச்சியாக நடாத் தப்பட்டமை.
5. அத்துளு குடிநீர்த்திட்டம் மூலம் நீர் பெற்றமை.

1976இல் வட்டாரக் கல்வியதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று கல்லூரியில் இருந்து கல்வி நிர்வாகப் பணிக்குச் சென்றார்.

**அதிபர் V. தங்கராசா**

பாடசாலையின் உதவி ஆசிரியராக இருந்து அதிபராக உயர்ந்தவர். பாடசாலைக் கட்டடங்களில் திருத்த வேலைகள், புனரமைப்பு வேலைகள் செப்பமாக நிறைவுறுவதற்கு உதவியவர். ஆசிரியர் தங்கும் அறையினைப் புனரமைத்து உதவியவர். 1977இல் கல்வியதிகாரியாக உயர்வு பெற்று பாடசாலைக்கு அணிசேர்த்தவர்.

**அதிபர் S.நமசிவாயம்**

இவர் பாடசாலையில் உதவி அதிபராகவும் பின்னர் துணை அதிபராகவும் திறமையாகச் சேவையாற்றியவர். பௌதிகவியல் கணிதம் போதிப்பதில் பெயர் பொறித்தவர்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. H.N.C.E கலை விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பித்து வைத்தமை
2. மைதானத்தின் மேற்புறத்தில் மேல்மாடிக்கட்டடம் அமைவதற்கு அயராது உழைத்தவர்.
3. 1979இல் அதிபர் பதவியில் இருந்து விலகி வெளிநாட்டில் கல்விப்பணிக்காகச் சென்றவர்.

**பதில் அதிபர் A.சுப்பிரமணியம்**

1952இல் கல்லூரியில் உதவி ஆசிரியராக இணைந்து துணை அதிபராகி 1979இன் பிற்பகுதியில் பதில் அதிபராகி இளைப்பாறும் வரை ஆசிரியப்பணியோடு துணை அதிபராகவும் செயலாற்றியவர். கவின் கலைகளில் தேர்ச்சியும் மிகுந்த ஈடுபாடும் உடையவர்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. பாடசாலையில் அழகியல், தொழில்நுட்பம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக உழைத்தவர்.
2. பொறியியல், தொழிநுட்ப அறிவு வழங்கி பாடசாலையின் நிர்மாண வேலைகளுக்கு ஒத்துழைப்பு நல்கியமை.
3. நாற்பது வருடங்களுக்கு மேலாக பாடசாலையின் வளர்ச்சியில் பங்கெடுத்தவர்.

1988இல் ஓய்வுபெற்ற போதும் தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சியில் கரிசனை கொண்டவராகவே வாழ்ந்தார். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் பொருளாளராக செயற்பட்டதோடு பவளவிழாக் குழுவிலும் உள்நின்று உரமூட்டினார். நோயுற்ற காலத்தில் கூட தமது வங்கிக் கணக்கிலிருக்கும் நிதியினை மறைவின் பின்னர் பாடசாலைக்குச் சேர்ப்பிக்க வேண்டும் என்ற ஆவண ஏற்பாட்டையும் செய்து கல்லூரியின் வளர்ச்சியில் மறைந்தும் நீங்காப் புகழ் பெற்றவர்.

**அதிபர் K.சிவபாதசுந்தரம்**

விக்னேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சித் திருப்புமுனைக்காலத்தில் சிவபாதசுந்தரம் அதிபர் அவர்களின் நாமம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடியது. 1980இன் நடுப்பகுதியில் பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டவர். ஸ்கந்தவரோதயக்கல்லூரியிலும், ஹாட்லிக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். குடாநாட்டின் பிரசித்திபெற்ற விலங்கியல் ஆசிரியராக வலம் வந்தவர்.

**அ) ஏற்றம் பெற்ற காட்சிகள்**

1. கல்லூரியின் பௌதிகவள ஏற்றத்தில் புதிய தோற்றம் கொடுத்தவர்.
2. மாடிக்கட்டடங்கள்
3. தொழிலதிபர் பாலசுப்பிரமணியத்தின் நன்கொடை மூலம் நன்னீர்த்திட்டம் ஏற்படுத்தப்பட்டமை, குடிநீர்க்கிணறுக்கான நிலத்தினைத் திருமதி நாகமுத்து ஆழ்வாப்பிள்ளையும், அவரது சகோதரர் ஐயா சின்னத்தம்பியும் மனமுவந்து அளித்தனர்.
4. தொழிலதிபர் ஆ.இராஜதுரையின் நன்கொடையின் மூலம் கல்லுரிக்கான மின்னிணைப்புப் பூர்த்தி செய்யப்பட்டமை.
5. திரு ஆ.கனகசபை என்பவர் மூலம் மைதானம் (4 பரப்புக்காணி) விஸ்தரிக்கப்பட்டமை.

மேற்கூறப்பட்ட அபிவிருத்திப்பணிகள் அமரர் சிவபாதசுந்தரம் அதிபர் அவர்களின் தனிப்பட்ட முயற்சியினாலும் செல்வாக்கினாலும் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டமை. காலத்தைக் கடந்தும் புகழ் சொல்லி நிற்கும்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. விஞ்ஞானத்துறை பெரு வளர்ச்சியுற்றமை.
2. பல்கலைக்கழகத்தெரிவில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அதிக மாணவர்கள் வாய்ப்புப் பெற்றமை. க.பொ.த. உயர்தர வர்த்தகத்துறையில் செல்வன் ஏ.சொக்கநாதக்குருக்கள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று (4A) புதிய சகாப்தம் படைத்தார்.

3. மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி அறிமுகம் செய்யப்பட்டமை.
4. உயர்தர மாணவர் மன்றம் சிறப்புற இயங்கியமை.
5. ஏணி சஞ்சிகை கையெழுத்துப் பிரதியாக வெளிவர ஆரம்பித்தமை.

அதிபர் சிவபாதசுந்தரம் அவர்கள் பாடசாலையில் ஆசிரியரின்றி இருக்கும் வகுப்பறைகளை தன் கற்பித்தலால் மெருகூட்டினார். விளையாட்டுத்துறைக்கு விசேட முதன்மை கொடுத்தார். நெடும் பொழுதை பொழுது சாயும் வரை பாடசாலையிலேயே செலவழித்தார். பத்து ஆண்டுகள் பாடசாலையின் மூச்சிலும், பேச்சிலும் எதிரொலித்தார். கொத்தணி அதிபராகவும் செயலாற்றியவர். கல்வி நிர்வாக அதிகாரி வாய்ப்புக் கிடைத்தும் கல்லூரிக்காகவே கடைசி வரை உழைத்தவர். 1990ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

**பதில் அதிபர் K.S.சிதம்பரநாதன்**

1990இல் K.S.சிதம்பரநாதர் பதில் அதிபராகக் கடமையேற்றார். 1961ஆம் ஆண்டு கல்லூரியில் முதல் நியமனம் பெற்ற காலத்தில் இருந்து உடற்கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் தனது முத்திரையைப் பதித்தவர்.

**உயர்வு**

1. பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டி, உதைபந்தாட்டப் போட்டிகளில் சிறந்த நடுவராகப் பணிபுரிந்தவர்.
2. உடற்பயிற்சிப் போட்டிகளில் மாணவர்கள் வெற்றிக் கேடயங்களைக் குவிப்பதற்கு பக்கபலமாக இருந்தவர்.
3. மாணவர்களிடையே ஒழுக்கவிழுமியங்கள் உயர்வதற்கு உந்துதல் கொடுத்தவர். பதில் அதிபர் K.S.சிதம்பரநாதன் அவர்கள் 1985ஆம் ஆண்டு முதல் துணையதிபராகவும் கடமை புரிந்தவர். 1992ஆல் ஓய்வு பெற்றார்.

**அதிபர் V.செல்வராசா**

அதிபர் V.செல்வராசா 1990இல் விக்னேஸ்வரக் கல்லூரியில் அதிபர் பொறுப்பை ஏற்றார். கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஊர்ப்பற்றோடும் நிர்வாகத் திறனோடும் பொருந்தியிருந்தார்.

**உயர்வுகள்**

1. கல்லூரியின் கல்வி, இணைப்பாடவிதானம் ஆகியவற்றின் மேன்மையில் தளராது உழைத்தவர்.
2. கல்லூரியின் விளையாட்டுத்துறையில் இவர் காட்டிய ஆர்வத்தால் 17 வயதுக்குட்பட்ட உதை பந்தாட்டக்குழு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.
3. க.பொ.த சா/த பரீட்சைப் பெறுபேற்றில் உயர்ந்த விகிதம் முன்பிருந்தமையைப் போன்றே பேணப்பட்டது.
4. கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் புனருத்தாரணம் செய்யப்படுவதற்கு காலாக இருந்தார்.
5. கல்லூரியின் பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அடித்தள முயற்சிகளை கட்டுக்கோப்போடு மேற்கொண்டார்.
6. பூந்துணர் சஞ்சிகை உயர்தர விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினால் வெளியீடு செய்யப்பட்டமை.

கரவெட்டிக் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றி சேவையால் உயர்ந்தவர். நாடடின் நெருக் கடியான காலகட்டத்தில் சாதூரியமாகச் செயற்பட்டவர். கல்வி நிர்வாக சேவைப்பரீட்சையில் சித்திபெற்று கல்வியதிகாரியாக பதவி உயர்வு பெற்றார். 1990 தொடக்கம் 1993 வரை மூன்றாண்டுகள் அதிபராக இருந்து மேன்மையுற்றவர். வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளராக, மாகாணக் கல்விப்பணிப்பாளராக மாண்புறு பதவிகளுக்கு உயர்ந்தவர். ஓய்வுக்காலத்திலும் தனது பாடசாலை என்ற உணர்வோடு உழைத்து வருபவர்.

**அதிபர் K.அம்பலவாணர்**

1989 தொடக்கம் 1993 வரை ஆசிரியராகவும் விக்னேஸ்வரக் கல்லூரியில் செயலாற்றினார். தமிழ், சமூகக்கல்வி, பொருளியல் முதலான பாடங்களைப் புகட்டுவதில் பாண்டித்தியம் பெற்றவர். அமைதியான ஆளுகையும், அன்பும், அறமும் கலந்த பேச்சினையும் வரித்துக்கொண்டவர். 1993ஆம் ஆண்டு நடுப்பகுதியின் பின்னர் அதிபராக நியமிக்கப்பட்டவர். நாட்டின் நெருக்கடியான காலகட்டத்தில் எல்லோரையும் அரவணைத்து பணிக்கு அணிசேர்த்தவர்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாடசாலைப் பரிசளிப்பு விழாவினை மீள ஆரம்பித்ததோடு தொடர்ச்சியாக பரிசளிப்புவிழா நிகழ்வதற்கு ஏதுவாக நிதி ஆதார வழியினை உறுதிப்படுத்தியமை.
2. பாடசாலையின் பவளவிழாக்காலத்து அதிபராகத் திகழ்ந்து தக்கன செய்தமை.
3. அதிபர் பணியோடு ஆசிரியப்பணியையும் சமாந்தரமாக மேற்கொண்டவர்.
4. 1994ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவில் செல்வி பொ.ஜானகி நான்கு பாடங் களிலும் அதிவிசேட சித்தி (4A) பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெறவும், மேலும் பல மாணவர்கள் அதிவிசேட சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்ல வழி சமைத்தவர்.
5. 2000ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் ஆகிய மூன்று துறைகளிலும் அதி விசேடசித்தி (A தரம்) பெற்று பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் உத்வேகம் கிடைத்தது.

அதிபர் அம்பலவாணர் அவர்கள் தன் சேவையால் மட்டுமன்றி தன் பிள்ளைகளின் பரீட்சைப்பெறு பேறுகளினாலும் பாடசாலைக்கு அழகூட்டியவர். 2000ஆம் ஆண்டு வரை சேவையாற்றி பின்னர் கோட்டக்கல்வியதிகாரியாகப் பதவியுயர்வுடன் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்.

**பதில் அதிபர் K.செல்வராசா**

அதிபர் K.செலவராசா கல்லூரியில் உதவி ஆசிரியராக இணைந்து பௌதீகவியல் பாடத்தினை செப்பமுறப்புகட்டியவர். எளிமையும், அமைதியும் குடிகொண்டவர். தொழிநுட்ப சாதனங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவர். 2000 தொடக்கம் 2002 வரை பதில் அதிபராக சேவை புரிந்தவர்.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. ஆய்வுகூடச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து செம்மையான பாவனைக்கு வித்திட்டவர்.
2. கணினி வழிச்சாதனங்களை கல்லூரியில் அமைப்பதற்கு அரும்பங்காற்றியவர்.
3. பாடசாலை அபிவிருத்திச்சபையின் நிதிக்கணக்கு நடவடிக்கைகளில் சிக்கனத்தை கடைப் பிடிக்க விரும்பியவர்.
4. ஒழுக்கத்திலும், இறைபக்தியிலும் ஈடுபாடு காட்டி மாணவர்களை நன்னெறிப்படுத்தியவர்.
5. க.பொ.த. உ/த விஞ்ஞான ஆய்வுகூடத்தொகுதியை உள்ளடக்கிய (தொய்வு நிலையில் இருந்த) மூன்று மாடிக்கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டமை.

அதிபர் V.சிவசிதம்பரம்

2002 இலிருந்து 2012 யூலை மாதம் வரை விக்னேஸ்வரக்கல்லூரியை மேன்மையுற இயங்கியவர். விக்னேஸ்வரக்கல்லூரியின் வரலாற்றில் பௌதிகவள விருத்தியிலும் அறிவியல் சாதனப்பயன்பாட்டிலும் பரீட்சைப்பெறுபேற்று வெற்றியிலும் புதிய தடம் பதித்தவர். விமர்சனங் களைக்கண்டு சோராதவர். வினைத்திறன்மிகு சேவையில் ஆசிரியர்கள் பயணிக்க வேண்டும் என்பதில் நிலையான தீர்மானம் கொண்டவர். அஞ்சாத முடிவுகளை சமூகநலன் நோக்கில் முன்னெடுத்துச் சென்றவர். இத்தகைய அதிபர் சிறந்த விஞ்ஞான ஆசிரியர் என்ற மகுடத்தையும் கொண்டவர்.

**சீர்மிகு விருத்திநிலை**

1. பாடசாலை பல கட்டடங்களை கண்டு நிற்கின்றமை. உதாரணமாக கிழக்கு மாடிக்கட்டடம், பொது விஞ்ஞான ஆய்வுகூடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
2. நூலகம் 60 + 25 விஸ்தீரணத்தில் ஏற்படுத்தப்பட்டமை.
3. கல்லூரி வளாகத்துள் 2005இல் நீர் வழங்கல் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டமை
4. 110 + 25 இரு மாடிக்கட்டடத்தொகுதி 2006இல் அமைக்கப்பட்டமை.
5. 2007இல் 12 பரப்புக் காணி அன்பளிப்பாகப் பெறப்பட்டமை. (ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சின்னம்மா சின்னத்தம்பி அவர்களின் மகள் திருமதி. சிவபாலன் மஞ்சுளா குடும்பத்தினர், ஓய்வுபெற்ற நீதிபதி சண்முகலிங்கம் குடும்பத்தினர் மூலம்)
6. விக்னேஸ்வரக்கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலைக்குக் காணி கொள்வனவு செய்யப்பட்டு சுற்றுப்புற கம்பி வேலி போடப்பட்டமை (பழைய மாணவர்சங்கம் இலண்டன் கிளை அன்பளிப்பு)
7. 2009இல் கல்லூரிக்கு இணையத்தள வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டமை. இணையத்தள முகவரி www.jvigneswara.sch.lk
8. கல்லூரியை மையமாகக் கொண்டு evillage வலைப்பின்னல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு e-village karaveddy எனும் இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. www.evillage.lk /karaveddy
9. 2010.01.01 முதல் விக்னேஸ்வர ஆரம்பப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதன் அதிபராக திரு.ம.மகாகேதீஸ்வரன் கடமையாற்றி வருகின்றார்.
10. இசுறு (ISURU) பாடசாலையாகத்தரமுயர்த்தப்பட்டமை.

**சாதனைகள் / உயர்வுகள்**

1. விளையாட்டுத்துறையில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட சாதனைகள்.
2. தேசிய மட்ட இலக்கியத்திறனாய்வு, தமிழறிவு வினாடிவினாப் போட்டியில் மாணவர் குழாம் தங்கப்பதக்கம் பெற்றமை.
3. க.பொ.த.(சா.த) பெறுபேறுகளில் உயர்ந்த விகிதாசார அடைவுகள் - 75%
4. 2010ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர கணித விஞ்ஞானப்பிரிவில் 100% சித்தி.
5. பல்கலைக்கழக அனுமதியில் போற்றும்படியான முன்னேற்ற நிலை ஏற்பட்டது.

**நிகழ்கால அதிபர்**

**திரு.க.M.கனகலிங்கம்**

2012இன் நடுப்பகுதியில் இருந்து விக்னேஸ்வரக் கல்லூரியை இன்று வரை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கல்லூரியைச்சிறப்புற இயக்கி வருகின்றார். கண்ணியத்துடன் கல்விப் புலத்தில் வாண்மையாளராகத் திகழ்கின்றார். நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதில் பிரயோக அறிவோடு உலா வருகின்றவர்.

**அபிவிருத்தி நிலை:**

1. பாடசாலையின் முன்புறத்திலும், தெற்குப்புறத்திலும் உள்ள பழைய மதில் அகற்றப்பட்டு புதிய மதில் மற்றும் நவீன அழகிய நுழைவாயில் அமைக்கப்பட்டமை.
2. பிரதான ஒன்றுகூடல் மண்டபம் புனரமைப்பும், பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை உதவியுடன் 400 கதிரைகள் பெறப்பட்டமையும்.
3. பெண் பிள்ளைகளுக்கான நவீன வசதிகளுடனான மலசலகூடத்தொகுதி அமைக்கப்பட்டமை.
4. இசுறு பாடசாலைத் திட்டப்படி புதிய நிர்வாகக் கட்டடத்தொகுதி பொலிவோடு அமைக்கப்பட்டு அப்போதைய மத்திய கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை.
5. பாடசாலை வளாகத்துள் தாபகர் சிலை,சரஸ்வதி சிலை நிறுவப்பட்டமை.
6. புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்பட்டமை.
7. கருவறையுடன் கூடிய பிரார்த்தனை மண்டபம் புனரமைப்பு செய்யப்பட்டமை.
8. “விக்நேயன்” எனும் விருதை முன்மொழிந்து மத்திய கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நிறைவேற்றியமை

**உயர்வுகள்**

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விஞ்ஞான அறிவு வினாவிடைப் போட்டியில் மாணவர் குழு முதலாமிடம் பெற்றமை.

கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் பல்வேறு மட்டங்களிலும் கிடைத்து வரும் வெற்றிகள்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஊடாக வழங்கப்படும் சிறந்த சுகாதாரச் சுற்றுச் சூழலுக்கான தங்கப்பதக்கத்தை 2014, 2015, 2016 ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பெற்றமை.

**ஆசிரியர் வாண்மையும் நிலைத்த வெற்றியும்**

நிறுவனம் ஒன்றின் வெற்றி, ஆசிரியப் பெருந்தகையோரின் நேரிய உழைப்பிலும் அர்ப் பணிப்பிலும் தங்கியுள்ளது. வாண்மை மிகு உழைப்பினால் ஆசிரியர்கள் கூட்டுறவாக்கப்படுகின்றார்கள். ஆசிரியர்கள் பல்வேறு நிலைகளில் நின்று மாணவர் சாதனைகளுக்கு உயிர்ப்பும் உறவும் ஊட்டுகிறார்கள். வகுப்பாசிரியர், துறைப்பொறுப்பாசிரியர் பகுதித்தலைவர், உபஅதிபர், துணை அதிபர் என இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். நகரப்பாடசாலைகளுக்கு இணையாக வித்துவமும், தத்துவமும் நிறைந்த ஆசான்கள் இக்கல்லூரியில் வரலாற்றுப்பதிவுகளாக இருந்துள்ளனர்: இருந்து வருகின்றனர்: பெயர்களைச்சுட்ட இடம் போதாமையினால் சட்டகமிடவில்லை ஆனால் நெஞ்சப் பெட்டகத்தில் உள்ளார்கள். அந்த வண்ணமிகு கோலம் நிறுவனமொன்றின் வெற்றியில் எல்லோரையும் இணையச் செய்கிறது. இதனால் வளர்ச்சியின் அடையாளங்கள் பொறி வழிப்பட்ட

புலன்களிற்கு விருந்தாக, மருந்தாகக்கிட்டுகின்றன. மகிழ்ச்சியினையும், உள்ளக்கிளர்ச்சியினையும் தருவிக்கின்றன. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்களே முதற்படி ஊக்கிகள். அறிவுப்பசி தீர்க்கும் ஆசிரியர்கள் நல்லாக்கிகள். இந்தத்தொடர்ச்சியின் சமநிலை விக்னேஸ்வரக் கல்லூரியில் பொய்த்துப் போகவில்லை.

பல்வேறு ஆண்டுகளிலும் கல்வி, விளையாட்டு பிற இணைப் பாடவிதானங்களில் மாணவர்கள் ஈட்டிய வெற்றிகள், சாதனைகள், அடைவுகள் இக்கட்டுரையில் முழுமையாகக் குறிப்பிடப்பட வில்லையே என்ற ஆதங்கம் என்னுள் இல்லாமல் இல்லை. எமது பாடசாலையின் வினைமிகு ஆட்டம், கவின்மிகு தேட்டம், பண்பாட்டுப் பழைமை, ஊடாட்டு வழமை ஆகியவற்றை ஏதோ ஒருவகையில் நிலை நிறுத்து வதற்கு இக்கட்டுரை துணை செய்யும், அணிசெய்யும் எனத்திடமாக நம்புகின்றேன்.

**புதியதொரு நிலைபேற்றுப்பயணம்**

கல்விச்சூழலில் பெற்றோர்கள் வலிமை மிகு பிரதானிகள். தம் பிள்ளைகள் எங்கு கல்வி பயில வேண்டும் என்பதை ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுப்பதற்கு அவர்களே வல்லவர்கள். ஊர்ப்பற்று, கிராமப்பற்று, முன்சங்கிலிப்பிணைப்பு, பிள்ளையின் பாதுகாப்பு, போக்குவரத்து இயலுமை, தொன்றுதொடு நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் விக்னேஸ்வரக் கல்லூரித்தாய் தூண்டு கோலாய் மிளிர்கிறார். பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டிய கல்விசார் வளம், இணைபாட விதான வளம், பௌதீக வளம், கலாசார வளம் நிறைந்து மலர்ந்திருக்கின்றது. பொதுவாகவே சுற்றயல் கிராம சனத்தொகை வீழ்ச்சி புதிய கல்விக்கொள்கைகள் காரணமாக பிள்ளைகளின் எண்ணத்திலும் எண்ணிக்கையிலும் மேம்படுத்தல் முயற்சிகளை முடுக்கிவிடப்படுகின்ற புதியதொரு நிலைபேற்றுப் பயணத்திற்கு நாம் எல்லோரும் தயாராக வேண்டியிருக்கிறது. கனவு மெய்ப்படவும், காரியம் வசப்படவும் நாம் இசைந்துபோக வேண்டும். உங்களால் முடியும். எங்களால் முடியும். எல்லோராலும் முடியும்.

**நிறைவுரை**

விக்னேஸ்வரக்கல்லூரி பல வகையிலும் வளர்ச்சியால் ஒளிர்ந்து வந்திருக்கின்றது. மறைந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு கூறிக்கொள்வது பெருமைக்குரியதே.


“......... இதன் வரலாற்றினூடே கரவெட்டியின் சமூகவரலாறு தொக்கி நிற்கின்றது......

நாம் எங்கிருந்தாலும் நமது பாரம்பரியத்திலிருந்து அந்நியப்பட்டவர்கள் அல்லர். இந்த ஆற்றல் வண்மை கரவெட்டியின் பலம் எனலாம். கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை இதனுள் உண்டு. இந்தப் பண்பாட்டு ஆளுமை வளர்ச்சியில் விக்னேஸ்வரக் கல்லூரிக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு.

விக்னேஸ்வர கரவெட்டியின் சின்னம். அதன் வளத்தைப் பெருக்குவது கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமையை வளர்ப்பதாகும்.”

இவ்வாறு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கூறுவது சிந்தனைக்குரியது. ஆக்க பூர்வமான வழிகளில் படித்த பாடசாலையை, படிக்கின்ற பாடசாலையை நேசிக்கக்கற்றுக் கொள்வோம். பூசிக்க முயல்வோம். கல்விச்சாலைகளின் எழுச்சி ஒரு சில நாளில் அல்லது மாதத்தில் அல்லது வருடத் தில் தோன்றிவிடுவதில்லை. பல வற்சரங்கள் காத்திருக்க வேண்டும். அறுவடைக்காக விழிகள் பூத்திருக்க வேண்டும். தாளாண்மையில் சிறந்தவர்களாக, ஊராண்மையில் உயர்ந்தவர்களாக, பேராண்மையில் தகுந்தவர்களாக, சமூகத்தோடு ஒன்றிக்கவேண்டும். இந்தப் பணியில் விக்னேஸ்வரக் கல்லூரி எனும் தேரின் வடம்பிடித்து வலம் வருவோம் வாரீர்.

# யா/விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலையின் ஆரம்ப வரலாறு



**திரு.ம.மகாகேதீஸ்வரன்**
(Com.Tra,BA,PGDE.Dip.in.Eng,DSM,PGDEM)
**யா / கரவெட்டி விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை**
**கரவெட்டி.**

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அன்று யா/கரவெட்டி விக்னேஸ்வர கல்லூரித்தாய் விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை என்ற மகவை ஈன்ற நன்னாள். 'இசுறு' என்ற (கிராமப்புறப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் மத்திய கல்வி அமைச்சின்) திட்டத்தின் கீழ் வடமராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு பாடசாலையாக யா/விக்னேஸ்வர கல்லூரி விளங்கியது. கல்லூரிக்கான அதிகரித்த வளங்கள் தேவை எனில் ஆரம்பப்பாடசாலை தனியாக இயங்க வேண்டும் என அமைச்சு வலியுறுத்தியதால் அப்போதைய கல்லூரிச் சமூகம் அதை ஏற்று தனியான ஒரு பாடசாலையாக யா/விக்னேஸ்வரக் கல்லூரியிலிருந்து ஆரம்பப்பிரிவானது வேறாக்கப்பட்டு இலங்கையின் 9493 ஆவது புதிய பாடசாலையாக 01.01.2010 இல் அது தோற்றம் பெற்றது.

பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கல்வியாளர்கள், கணக்காளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரை உருவாக்கிய கல்லூரி அன்று ஒரு புதிய பாடசாலையையே உருவாக் கியது. இது கரவெட்டி கல்விப் பாரம்பரியத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வாகும். கல்லூரியின் இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புக்களை செழுமைப் படுத்தும் நோக்குடன் இந்த வரலாற்றுப் பிரிப்பானது மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப வகுப்புக்களை மேம்படுத் துவதன் மூலம் கல்லூரியின் அடைவுகளை உயர் நிலைப்படுத்தல் என்பது இதன் முக்கிய நோக்கமாக அமைகிறது. எவ்வித அடிப்படை வளங்களுமற்ற நிலையில் இலண்டன் பழைய மாணவர் சங்க நிதி அனுசரணையில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் ஆரம்ப பாடசாலை புதிய அதிபராகிய எனது கடமையேற்புடன் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது.

விக்னேஸ்வர கல்லூரியிலிருந்து அகற்றப்பட்ட பழைய கட்டடப் பொருட்களைக் கொண்டு 100'X16' அளவான தற்காலிக கொட்டகை ஒன்று யுனிசெப் அமைப்பின் அனுசரணையில் 2011 ஆம் ஆண்டில் அமைக்கப்படுகிறது. புதிய அதிபரின் விடாமுயற்சியினாலும் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையினாலும் பாடசாலைக்கான கிணறு, மலசலகூடத்தொகுதி, மின்சார வசதி, நீர்த்தாங்கி

என்பனவும் அதே ஆண்டில் அமைக்கப்பட்டன. பாடசாலை இன்று வர்ணம் தீட்டப்பட்டு பூ மரங்கள் மற்றும் பயனுறு மரங்கள் நாட்டப்பட்டு அழகிய புறச்சூழலுடன் காட்சி தருகின்றது. பாடசாலைக்கான குடிநீர்த் தேவையும் இன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அதிபரின் வழிகாட்டுதல் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான உழைப்பினால் 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் 06 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி யடைந்தனர்.100 புள்ளிகளுக்கு மேல் 20 மாணவர்கள் பெற்றனர். இது பாடசாலை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தொடர்ந்து ஆண்டுதோறும் மாணவர் சித்தியானது தக்க வைக்கப்பட்டு வருகின்றது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது மாணவர் பல்வேறு சாதனைகளை கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் படைத்து வருகின்றனர். சிறுவர் அரங்கிலும் இவர்கள் கோட்ட, வலய மட்டங்களில் சிறந்த ஆற்றுகையினை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ்மொழித்தினப் போட்டி களிலும் மாகாண மட்டத்தில் எமது மாணவி ஒருவர் இரண்டாம் இடம்பெற்றுச் சாதனை படைத் துள்ளார். ஆங்கிலமொழித் தினப் போட்டிகளிலும் பாடசாலை மாணவர் சிறந்த அடைவுகளை வெளிக் காட்டியுள்ளனர்.

செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்விலும் ஆர்வமுடன் எமது மாணவர் பங்கேற்று வருகின்றனர். 2010ஆம் ஆண்டில் 140 மாணவர்கள் கல்வி கற்ற எமது பாடசாலையில் இன்று 90 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். தரம் 1 மாணவர் அனுமதியில் எமது பாடசாலை அயலிலுள்ள சில பாடசாலைகளினால் பாரிய சவால்களை எதிர்கொள்கிறது.மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியடை வதற்கு இதுவே முக்கிய காரணியாகவும் அமைகிறது.

எமது பழைய மாணவர்கள் தமது இடைநிலைக் கல்வியை தாய்ப் பாடசாலையில் தொடர்வதுடன் அங்கும் அவர்கள் பல்வேறு கல்வி மற்றும் இணைப்பாடவிதானங்களில் சாதனைகளை நிலைநாட்டி வருவது சிறப்புக்குரியதாகும்.


தாய்ப் பாடசாலையான விக்னேஸ்வரக் கல்லூரி அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்தின் பூரண ஒத்துழைப்பு மற்றும் நல்லாசிகளுடன் எதிர்வருங் காலங்களில் கல்லூரியுடன் இணைந்து பல சாதனைகளை இப்பாடசாலை படைக்கும் என்பது திண்ணம்.




# ஆய்வியல்



# பாடசாலைகள் மாணவர்களை தொழில்பெறு திறன்களில் இருந்து விலகிச் செல்வதற்குத் துணைபுரிகின்றனவா?



## பாடசாலைக் கல்விக்கும் தொழில் உலகுக்குமான முரண்பாடுகள் பற்றிய விசாரணை



**பேராசிரியர்**
**மா. சின்னத்தம்பி**

### அறிமுகம்

சமூகங்களின் வலிமை மிக்கதும் விரும்பத்தக்கதுமான வளர்ச்சிக்கு பாடசாலைகள் உற்பத்தித்துறைகளுக்கு உறுதுணையாக செயற்படவேண்டும். தொழில்கள் பற்றிய அறிவையும் நாட்டங்களையும் திறன்களையும் பாடசாலைகள் வளர்த்தல் வேண்டும். அதிக உடல் வலுவும் துடிப்பும் முனைப்பும் எதையும் எளிதாகக் கற்றுக்கொள்ளும் இயல்பாற்றலும் கொண்ட இளமைப் பருவத்தில் ( 5 - 18 வயது வரை) பெரும்பாலான பிள்ளைகளையும், இளைஞர்களையும் தன்னகத்தே கொண்டிருப்பன பாடசாலைகள் தான். தாம் செய்ய முடியாதவற்றை பாடசாலைகள் நிறை வேற்றும் என்ற அதீத நம்பிக்கையுடனும் பற்றுறுதியுடனும் தான் பாடசாலைகளை சமூகங்கள் (கோவில்களைப் போலவே) நேசிக்கின்றன, உதவுகின்றன, வளர்க்கின்றன.

அறிவுத்திரட்டல் என்பதன் அடுத்த இளைஞர் மேம்பாடு என்பது உன்னதமான தொழில்களை மேற்கொள்வதுதான். இதற்கு தொழில் உலகின் மாற்றங்கள் தொழில் கல்வியின் புதிய அங்கீகாரங்கள், தொழில்சார் நவீனமயமாதல் போன்றவற்றுடன் மாணவர்களை ஒன்றிணைக்கும் தேவைகள் தற்போது புத்துயிர் பெற்றுள்ளன. இவை தொடர்பான யதார்த்த நிலை பற்றியே இக் கட்டுரை பரிசீலிக்கின்றது.

### பாடசாலைகள் கல்வியின் பலவீனங்கள்

இலங்கையில் இளைஞர்களது அறிவு, திறன்கள், நாட்டங்கள், எதிர்பார்புக்கள், நம்பிக்கைகள் தான் தேசிய நீண்டகால வளர்ச்சியையும் அவற்றுக்கு எதிரான தடைகளையும் தீர்மானிக்கின்றன. திருமணம் புரியாத 15-29 வயதுக்குட்பட்ட அனைவரும் இலங்கையில் இளைஞர்கள் என இலங்கைக்கான தேசிய இளைஞர் அளவீடு (The National Youth Sarvey of Sri Lanka) வரையறை செய்கிறது. இந்த வயதினர் தொழிலுலகில் நுழையாத நிலைமைகளில் பாடசாலைகளில் அல்லது

பல்கலைக்கழகங்களில் காணப்படுவர். அல்லது ஒழுங்கமைந்த தொழில்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் காணப்படுவர். அல்லது ஒழுங்கமைக்கப்படாத ஓரளவு பயிற்சி மிக்க (Semi - Skilled) அல்லது பயிற்சி அற்ற (Unskilled) தொழில்களில் காணப்படுவர். இவர்கள் அனைவரும் பயன்மிக்க இளைஞர்களாக கருதப்படக்கூடியவர்கள்.

ஆனால் இங்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் துறைகளில் இல்லாமல் காணப்படும் இளைஞர்கள் வேலையற்றவர்களாக அல்லது அத்தகைய வேலை பற்றிய வழிகாட்டல்கள் எதுவும் கிடைக்காதவர்களாக காணப்படுவர். இவர்கள் தேசிய மனிதவளம் தொடர்பான சவால் களை உருவாக்குகின்றனர். இலங்கையில் அண்மைக்கால அனுபவங்கள் வேறுவிதமாகவும் காணப்படுகின்றன.

1. 15 அல்லது 16 வருட இலவச மற்றும் கட்டாயக்கல்வியைப் பெற்றவர்கள் ( பட்டதாரிகள்) சுய தொழில் உருவாக்கும் எண்ணம், துணிவு, முனைப்பு அற்றவர்களாக இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தென்படுகின்றனர்.

2. கல்வித்தகைமைகளை பரீட்சை (பெரிதும் எழுத்துப்பரீட்சைகள்) மூலம் பெற்றுக்கொண்ட அதிக இளைஞர்கள் தொழில் உலகு பற்றிய விழிப்புணர்வு அற்றவர்களாக உள்ளனர். கல்வித் தகைமைகளுக்கும் தொழில்வழங்குநர்களது தேவைகள் மற்றும் எதிர்பார்க்கைகளுக்கு மிடையிலான இடைவெளிகளை அதிகம் உணரத் தலைப்படுவதில்லை.

3. அரச தொழில்களை மாத்திரம் பெறுவதில் அதிக முனைப்புக் கொண்டுள்ளனர்.

   i. இலக்குகளை வலியுறுத்தாமல் வேலை வழங்கும் தன்மை

   ii. தோல்விகளுக்கு வகை கூறுதலோ அதற்காக வேதன இழப்புக்களோ இல்லாதிருத்தல்

   iii. ஓய்வூதிய நலன்களை வயது முதிர்ந்தபோது பெறுவது பற்றிய இளமைக்கால கணிப் பீடுகளில் திருப்திப்படுதல். இலங்கையில் அரச துறைகளிலிருந்து 543 552 பேர் ஓய்வூதி யர்களாக விளங்குகின்றனர். இவர்களுக்குரிய மாதாந்த கொடுப்பனவுகளுக்காக 10,000 மில்லியன் ரூபாய்கள் அரசினால் செலவிடப்படுகின்றன. விதவை, அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு 145 000 பேர் பெற்றுவருகின்றனர். இலங்கையில் மாதாந்தம் 2000 பேர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து வருகின்றனர். தொழிலிலிருந்து வெளியேறிய பின்னும் அரசுக்கு பெரிய நிதிச்சுமையை ஓய்வூதிய ஏற்பாடு ஏற்படுத்தி வருகின்றது.

4. இலவசக்கல்வி பாடசாலை மட்ட நலன்புரிச் சேவைகள், புலமைப்பரிசில் போன்ற கல்விக்கால அரச நிதியுரிமையின் தொடர்ச்சியாக அரச தொழில்வாய்ப்புப் பெறுவது பற்றி உரிமை கொள் எண்ணம் வலுப்பெற்றிருத்தல்.

   இத்தகைய மனப்பாங்குகள் இலங்கை இளைஞர்களிடையே அரச தொழிலுக்குரிய கிராக்கி ( Demand) யை வரலாற்றுக் காலம் முழுவதும் வளர்ச்சிபெற வைத்துள்ளன.

5. எட்டாம் வகுப்பு அல்லது அதிலும் குறைவான பாடசாலைக்கல்வியை பெற்ற பலர் அதிக முனைப்புடனும் பட்டறிவின் (Tacit Knowledge) பலத்தினாலும் தோல்விகளில் கற்றுக்கொண்ட தீர்மானம் எடுக்கும் திறன்களினாலும் குழுவாகச் செயற்பட்டு பெற்ற மென் திறன் (Soft Skills) களினாலும் தொழில் முனைவோராகியுள்ளனர். குறுந்தொழில் (Micro) சிறு தொழில் (Small)

நடுத்தர (Middle) மற்றும் பேரளவு (Large) தொழில்களைத் தொடக்கி நிர்வகித்து வருகின்றனர். அவர்கள் வாய்ப்புக்குறைந்த சூழலில் வாழ்ந்திருக்க முடியும். கல்வியின் பலத்தை உணராத குடும்பங்களில் பிறந்திருக்கக்கூடும். அவர்கள் தமக்குரிய அரசியல் சனநாயக உரிமைகளின் அடிப்படையில் இடைநிலைத் தொழில் வாய்ப்புகளுக்காக போராட்டங்களை நடத்தியதில்லை.

6. கல்வியெனும் பெருங்காற்று வீசும் திசைகளில் பயணிக்காதவர்கள் தேசிய மனித வள அச்சுறுத்தல்களை உருவாக்கியதில்லை. கல்வியின் நோக்கிலும் போக்கிலும் ஏற்பட்ட உள் முரண்பாடுகள் தான் கல்வி கற்ற இளைஞர்களை தன்னம்பிக்கையும், தன்முனைப்பும் அற்றவர்களாக மாற்றிவிட்டதோ என்ற சந்தேக உணர்வு சமூகத்தில் மேலோங்கிவிட்டது.

இலங்கை இளைஞர்களுக்கிடையிலான கல்வி மற்றும் தொழில் முன்னுரிமை பற்றிய நிலைமையை கீழ்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

**அட்டவணை - 1**

**பாடசாலை செல்லும் இளைஞர்களது தொழில் வாய்ப்பு முன்னுரிமைக்குரிய துறைகள் ( %)**

| குழுவினர் | சுயதொழில் | அரசதுறை | பல்தேசிய கூட்டுத் தாபனம் | தனியார் கம்பனி பெரியன | தனியார் கம்பனி சிறியன |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் | 27.5 | 45.1 | 3.4 | 14.6 | 6.4 |
| பெண்கள் | 15.2 | 63.1 | 1.4 | 9.2 | 5.5 |
| தமிழர் | 16.7 | 57.3 | 3.3 | 8.7 | 10.7 |
| சிங்களவர் | 19.5 | 54.5 | 1.5 | 16.5 | 3.0 |
| இஸ்லாமியர் | 33.0 | 47.0 | 3.0 | 8.0 | 5.0 |
| ஆரம்பக்கல்வி | - | 33.3 | - | 33.3 | 33.3 |
| க.பொ.த சாதாரணம் | 18.5 | 54.1 | 4.1 | 15.8 | 3.4 |
| க. பொ. த உயர் தரம் | 20.0 | 55.0 | | 15.0 | 7.5 |

Source: Angela N. Little & Siri Hettige Table 6.2 P 148

தமிழர்களில் 57.3 சதவீதத்தினர் அரச தொழில்களை விரும்பும்போது சிங்களவர்களில் 54.5 சதவீதத்தினரே இவற்றில் நாட்டம் கொண்டுள்ளனர். சுயதொழில் தொடங்குவது பற்றிய ஆர்வம் இஸ்லாமியர்களிடம் மிக அதிகமாக (33 வீதம்) காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பெண்களில் 63.1 சதவீதத்தினர் அரச தொழில்களில் அக்கறை கொண்டுள்ளனர். இதேபோல் க.பொ.த. உயர்தர தகுதி பெற்றவர்கள் பெரிதும் (55 வீதம்) அரச துறை சார்ந்த தொழில்களைத்தான் கவனம் செலுத்துகின்றனர். அரச தொழில் மீதான மோகம் கல்வி கற்ற இளைஞர்களிடம் அதிகரித்திருந்த போது அரசாங்கங்கள் அவற்றை வழங்க முடியாத போது குறிப்பாக வெள்ளுடை ( White Collar Job) உத்தியோகம் கிடையாத போது இளைஞர் அமைதியின்மைகளும் ஏற்பட்டன.

சிங்கள இளைஞர்களிடம் 1971இல் ஏற்பட்ட அமைதியின்மை தமிழ் இளைஞர்களிடம் 1987இல் ஏற்பட்ட அதிருப்தி 2017இல் இலங்கையில் வடக்குக் கிழக்கு பட்டதாரிகளின் உண்ணாவிரதப் போராட்டங்கள் இத்தகைய அரச வெள்ளுடை உத்தியோகங்கள் மீதான அதி தீவிர மோகத்தின் வலிமையை வெளிப்படுத்துகின்றன. எமது பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியின் கலைத்திட்டம், மனப்பாங்கு விருத்தி, முறைமைகள் பெரிதும் தனியார் துறையின் தொழில்வாய்ப்புப் பெறுவதற்குரிய தகைமைகளை வளர்க்கவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். கல்வியியலாளர்கள் பரீட்சை, மதிப்பீடு, தரநிர்ணயம் தொடர்பாக செலுத்திய கவனத்தை ஆளுமை, தன்னம்பிக்கை, மென்திறன்கள், இடர்கள் ஏற்கும் துணிவு தொடர்பானவற்றை வளர்ப்பதில் செலுத்தத் தவறிவிட்டதை ஏற்கத்தான் வேண்டும்.

இலங்கையில் இயங்குகின்ற தனியார் நிறுவனங்களும் தொழில்வாய்ப்பு வழங்கும்போது எதை எதிர்பார்க்கின்றன என்பது பற்றி ஏஞ்சலா மற்றும் ஹெற்றிகேயின் (2016) கருத்து கவனிக்கத்தக்கது.

> " இலங்கையின் தனியார்துறை மேற்கத்தேய நகர்ப்புற முன்னுரிமை கொண்ட வர்க்கத்தினரின் மேலாக்கத்திற்குட்பட்டுள்ளது. இவர்கள் பிரபல்யம் பெற்ற நகர்ப்புறப் பாடசாலைகளிலிருந்து தான் வேலைகளுக்கு அமர்த்துகின்றனர்". (little W. Angela and Siri Gettige (2016. P 147)

இலங்கையில் 2004 இல் மேற்கொள்ளப்பட்ட பாடசாலையிலிருந்து வேலைக்கான நகர்வு பற்றிய அளவீடு கூட அரச வேலைகளையே அதிகம் விரும்புவதாக காட்டுகின்றது. இதனை அட்டவணை 2 தெளிவாக விபரிக்கின்றது.

**அட்டவணை - 2**

**கல்வி மட்டத்துக்கும் தொழில் முன்னுரிமைக்குமுள்ள தொடர்பு**

| துறை | தரம் 6 - 11 | A/L படிக்க தகுதியுடையவர்கள் | A/L சித்திபெற்றவர்கள் | பட்டப் படிப்பு | பள்ளி செல்லாதோர் |
|---|---|---|---|---|---|
| அரசாங்கம் | 48.3 | 57.2 | 62.3 | 72.2 | 21.1 |
| தனியார் | 18.2 | 22.4 | 22.7 | 21.5 | 26.3 |
| சுயதொழில் வாய்ப்பு | 31.8 | 19.1 | 11.6 | 5.1 | 42.1 |
| பிற | 1.2 | 1.3 | 3.3 | 1.3 | 5.3 |

Source: National Youth Survey - 2000 Angela & Hettige 2016 P 147

கல்வித்தகுதி உயர்வதற்கேற்ப அரச தொழில்வாய்ப்பு நாட்டமும் அதிகரித்து வருவதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். பெற்றோர் தாம் இளைஞர்களாக இருந்த காலத்தில் எத்தகைய எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தனரோ அவற்றை தம் பிள்ளைகளுக்கு கைமாற்றி

வந்தனர். தொழில் பாதுகாப்பு, பண வருமானம், திருமண வாய்ப்பு, முதுமைக்கால பாதுகாப்பு, சமூக அந்தஸ்து, தலைமுறை முன்னேற்றம் போன்ற எதிர்பார்ப்புக்கள் இளைஞர்களிடம் அரசதுறை மீதான அளவுக்கதிகமான ஆர்வத்தை வலுப்படுத்தியே வந்துள்ளன.

**தொழில் வாழ்க்கையைச் சிதைத்தல்**

எமது பாடசாலைக்கல்வி ஏற்பாடுகளும், பாடசாலை செயற்படும் முகாமைத்துவ அணுகுமுறைகளும் நீண்டகாலமாக அலுவலக முறைமையில் "எழுதுவினைஞர்" வகைப்பட்ட வேலைகளுக்கு ஆட்களைத் தயார் செய்யும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது.

பிரித்தானியர்களது இலங்கையிலான 150 வருடகாலக் கல்வி ஏற்பாடுகள் யாழ்ப்பாண மக்களிடம் எழுதுவினைஞர் (Clerical Jobs) ஆவதற்குரிய உளநிலையை வளர்த்துவிட்டிருந்தது.

பாடசாலைகளில் செய்முறையுடன் இணைந்த சில போதனா ஏற்பாடுகள் உள்ளன. உடற்பயிற்சி, விளையாட்டு போன்றனவும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளாகவுள்ளன. எனினும் உடல் சார் உழைப்பு என்பதை "அகௌரவமாக" உணருகின்ற பண்பை எமது மாணவர்களின் விரும்பத்தக்க புலக்காட்சி (Perception)யை வலுவாக வளர்த்துவிட்டுள்ளது.

வேலை ஒன்றில் இணைந்து கொள்வதற்கு பின்வரும் நுட்பங்கள் அல்லது பண்புக்கூறுகள் தேவைப்படுகின்றன.

1. வேலை மீது உண்மையான நாட்டங் கொள்ளுதல்
2. வேலையை நிறைவான முறையில் கற்றுக் கொள்ளுதல்
3. இயன்றளவு வேலையுடன் இணைந்த கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுதல்
4. அதிகூடிய விருப்பத்துடனும் மகிழ்ச்சியாகவும் செய்தல்
5. தொழில் இடங்களில் பிற பணியாளர்களுடன் நட்புணர்வுடனும் மென்மையாகவும் பழகுதல்
6. தொழில் வழங்கும் நிறுவனத்திற்கு விசுவாசமாகவும் ஆக்கபூர்வமாகவும் நடந்து கொள்ளுதல்
7. கடமைகளுக்கு ஒழுங்காகவும் உரிய நேரத்திற்கும் எல்லா நாட்களிலும் சமூகமளித்தல்
8. சகபாடிகளையும் மேலதிகாரிகளையும் குறை கூறுவதை தவிர்த்துக் கொள்ளுதல்
9. தொழில் நிறுவனங்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை மிகவும் கவனமாகவும் அதி கூடிய விருப்பத்துடனும் எப்போதும் பின்பற்றுதல்
10. மேலதிகாரிகள் அல்லது நிறுவன முகாமையாளர்கள் கேட்கும் போது மாத்திரம் கருத்துக்கள் எண்ணங்களை வெளிப்படுத்துதல்

இத்தகைய பண்புகள் விருத்தி செய்வதற்குரிய நடைமுறைகள் வகுப்பறைகளில் அதிகம் வலியுறுத்தப்படுவதில்லை. பாடங்களின் உள்ளடக்கமான எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், தத்துவங்கள், குறியீடுகள், கலைச்சொற்கள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகள் மேலே விபரித்த பண்புகளை வளர்ப்பதற்கு வழங்கப்படுவதில்லை.

பாடசாலைக் கலாசாரத்தில் ஒன்றிணைந்த விதிகள் நடைமுறைகள் வெகுமதிகள், ஊக்குவிப்பு ஏற்பாடுகள் என்பன கூட உடலுழைப்புச் சார்ந்த நேர்மனப்பாங்கை வளர்ப்பதற்கு வழங்குவதில்லை.

மாறாக

1. உழைப்பாளர்களை மரியாதை குறைந்தவர்களாக நோக்குதல்

2. உழைப்பு என்பதன் உண்மை மதிப்பை (Value) குறைத்து மதிப்பிடுதல்.

3. உழைப்பின் விளைவுகள் வெளியீடுகள் (Out Puts) என்பவற்றை உழைப்புடன் தொடர்பு படுத்தாது இருத்தல்

4. உழைப்பினது ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வு அம்சங்களை உணராது இருத்தல்

5. உழைக்கும் தொழிற்சூழலின் சமூக மற்றும் தேசிய மகத்துவத்தை புரிந்து கொள்ளாதிருத்தல்.

போன்ற இயல்புகளை வளர்த்துவிட்டன. இவை தொழில் சார்ந்த (Vocational) உளச்சார்பு களை வளர்ப்பதற்குப் பதிலாக தேய்வடையுமாறு செய்துவிட்டன. உடலுழைப்பினால் ஏற்படும் களைப்பு, வியர்வை பற்றிய "கேவலமான" எண்ணங்களும் வளர்க்கப்பட்டுவிட்டன. தற்போதைய குடும்ப, சமூக, கற்றல் சூழலும் உழைப்பு என்பதிலிருந்து மாணவர்களை வெட்டிப் பிரித்து எதிர்முனைக்கு ( ஆடம்பரம், அழகுபடுத்தல் போலித்தனத்துடன் உரையாடுதல் போன்ற வற்றை நேசித்தல்) நகர்த்தியுள்ளன. பின்வரும் நிலைமைகள் கவனத்திற்குரியன.

1. வீடுகளில் சிறு தொழில்களை மேற்கொள்ளும் முறைமையும் பண்பாடும் காணப்பட்டது. சுருட்டுக் கொட்டில்கள், பணப்பயிர் பதப்படுத்தல், பனைகள் உற்பத்திகள் போன்றன குடும்ப மட்ட தொழில்களான போது பிள்ளைகள் உதவி செய்து வந்தனர். இப்போது அவற்றில் பிள்ளைகள் ஈடுபடுவதில்லை. எல்லா வயது வந்த மாணவர்களும் எல்லா நாட்களும் ரியூசன் வகுப்புக்களுக்கு அலைதல்.

2. வீடுகளில் பசுமாடு வளர்த்தல், குழந்தைப் பராமரிப்பு, சிறுதொழில்கள் ( பாக்குச் சீவுதல், துணிகளை கையால் நெய்தல், குழந்தைகளின் ஆடைகளை தாமே தைத்தல்) போன்ற நிலைமைகள் இருந்தன. பிள்ளைகள் இவற்றைப் பார்த்து தொழில்சார் உளச்சார்புகளை வளர்த்துக் கொண்டிருந்தனர். வீடுகளுடன் இணைந்த தொழில்கள் நிறுத்தப்பட்டு பல நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப்பெட்டி, மிக்சி, கிறைண்டர், உடை கழுவும் இயந்திரம் போன்ற பொறிகள் வீடு முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. பிள்ளை களும் சிமாட்போன், மோட்டார்சைக்கிள் என பொறிகளுடன் இறுக்கமாகப் பிணைக் கப்பட்டுவிட்டனர். இது உழைப்பின் மீதான தனித்துவ எண்ணங்கள் பரந்துபோய் விட்டதை காட்டுகின்றன.

3. சமூகங்களில் ரியூசன் நிலையங்கள் ஈ கபே, ரீலோட் செய்யும் வணிக மையங்கள், சீடி நிலையங்கள் எல்லாவற்றிலும் ஆடம்பரமாக இளவயதினர் குவிந்து விட்டனர். இந்த புதிய வகை நிறுவன வளர்ச்சி ஆடம்பரமாக நகர்ப்புற எண்ண அலைகளை பெருக்கிவிட்டன. மாணவர்கள் தினமும் அதிக நேரம் வீட்டுக்கு வெளியே அலைதல் அதிக பணம் செலவிடுதல் போன்ற நடத்தைக் கோலங்களுடன் பிணைக்கப்பட்டு விட்டனர்.

இவையனைத்தும் தொழில், தொழில்சார் கல்வி, தொழில்சார் மனப்பாங்கு என்பவற்றை இளைஞர்களிடம் வளர்க்க தவறிவிட்டன. படிக்கும் காலத்திலேயே

1. வீட்டில் குடும்ப மட்ட சிறு தொழில்களில் பங்குகொள்ளுதல்
2. பாடசாலைக்குச் செல்லும் முன்பும், பாடசாலை முடிந்த பின்பும் தொழிற்கூடங்களில் தொழில் பயிலுதல்
3. படிப்புச் செலவுக்காக பகுதி நேர பணிகளை மேற்கொள்ளுதல்

போன்றவற்றை முன்பு மாணவர்களில் கணிசமானோர் செய்து வந்தனர். புலம்பெயர்ந் தவர்களின் நிதியுதவியாலும் நுகர்ச்சி சார்ந்த வெளிப்பகட்டுக்களாலும் அவர்களை தொழில்சார் எண்ணங்கள் மற்றும் பழக்கங்களில் இருந்து அதிக தொலைவுக்கு கலைத்து விட்டுவிட்டன.

புலம்பெயர்ந்தவர்கள் தமது இரண்டாவது தொழில் வாழ்க்கையை தாம் குடியேறிய நாடுகளில் ஏற்கத் தொடங்கியபோது மீளவும் உழைப்பின் தேவையையும் வலிமையையும் உணர்ந்து கொண்டனர்.

பள்ளிப் படிப்பில் அக்கறை அற்று வெளிநாடு செல்ல விரும்புபவர்களும் உடல் உழைப்பு சார்ந்த இரண்டாவது தொழில் வாழ்க்கை (Second Career) பற்றி அறியாது அலைகின்றனர்.

**முடிவுரை:**

உலகம் முழுவதும் தொழிற்கல்வி, தொழில்நுட்பவியல், மின்னியல் (Electronics) சார்ந்த கல்வி என்பவற்றுக்குள் அறிவுசார் கல்வியை ( Academic Education) நகர்த்துவதில் அதிக முனைப்புக் கொண்டுள்ளனர்.

தொழிற்கல்வி வழங்கும் நிறுவனங்களும் தொழில்நுட்பவியல் நிறுவனங்களும் தொழில் பெறு ஆற்றல்களும் முன்னுரிமை பெற்று வருகின்றன.

எமது நாட்டில் 350 000 மாணவர்கள் 13 வருடக் கல்வியின் பின்பு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 29 000 பேர் தான் அரச பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெறுவதற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். மிகுதி 321 000 இளைஞர்களை எங்கே, எப்படி நகர்த்துவது? அவர்களுக்கும் சமூகத்திற்கும், தேசத்திற்கும் நன்மை செய்யக்கூடியவர்களாக மாற்றுவது அரசாங்கம் மனிதவள மேம்பாட்டுக்காக கல்வியில் பாடசாலை மட்டத்தில் செலவிடுகின்ற பொது மக்களின் வரிப்பணமாகிய 90 489.6 மில்லியன் (2009) ரூபாவை தேசிய விரயமாகாமல் தடுப்பது?

இளைஞர்களை தேசிய வளர்ச்சிக்குரிய உன்னதமான உற்பத்தித்திறன் மிக்க மனித வளமாக மாற்றுவது? இதற்குரிய புதிய சிந்தனைகளை இளைஞர்களிடம் எவ்வாறு விதைப்பது? இதற்கு அவர்களது மனப்பாங்கை மாற்றுதல் அவசியம். அறிவுக்குப் பதிலாக திறன்களையும் வகுப்பறை களுக்குப் பதிலாக தொழிற்பயிற்சி மையங்களையும் B.A, B.Sc. க்கு பதிலாக B.Tech பட்டங்களையும் நேசிக்குமாறு செய்தல் அவசியம்.

தொழில் உலகு, தொழிற்கல்வி பற்றிய மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் கல்வி நிர்வாகிகளும், கல்வியியலாளர்களும் ஒன்றிணைந்து நம்ப வேண்டும். இதனை பாடசாலைகளில் தொடங்குதல் வேண்டும்.

பாடசாலைக் கலைத்திட்டம், கற்றல் முறை, கற்றல் சூழல், கற்கும் நிறுவனங்கள். தகைமைகள் உழைப்பு சார் உன்னதங்களின் புதிய அங்கீகாரம் பற்றியெல்லாம் அதிக அக்கறை காட்டவேண்டும்.

கணிதமும், விஞ்ஞானமும், ஆங்கிலமும் தீர்மானிக்கப்பட்ட சட்டக முறையிலான கற்றலிலும், மதிப்பீட்டிலும் தேறாதவர்களை "ஒன்றுமே இயலாதவர்கள்" என முத்திரை குத்தி கைவிட்டு விடுவதா?

அவர்களிடமும் மாற்றுத்திறன்கள், புதிய எண்ணங்கள், புத்தாக்க வல்லமைகள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றுக்குரிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். வளங்களைத் திரட்ட வேண்டும். புதிய தொழில்நுட்ப படைப்பாற்றல் கல்வியை நிறுவன முறையில் ஊக்குவித்தல் வேண்டும்.

கல்வியியலாளர்களும், அரசியல் தலைவர்களும், தொழில்நுட்ப நிபுணர்களும், சமூகத் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். கையகப்படுத்தப்படாமல் கிடக்கும் மாற்றுக்கல்வி ( Alternative Education) ஏற்பாடுகளை பக்குவமாக மரபு வழிப் பரீட்சையில் பொருந்த முடியாதவர்களுக்கு கையளிக்க வேண்டும்.

புதிய தொழில், தொழில்நுட்பக்கல்வி அத்தகைய முன்னுரிமைகளில் முதன்மையானது இதனை வெகுசனமயப்படுத்துவோம். மனித வள விரயங்களை தவிர்ப்போம்.

Reference :-


1. Aggarwal .J.C (2004) Educational, Vocational, Guidance and Counseling, Doaba House, Delhi.
2. National Education Commission (2009) New Education Act, for General Education in Sri Lanka, Finance Report, Nugegoda.
3. Goonasekara, Kapila (2010) Vocational Training and Teach Education for a Knowledge Economy, Economic Review, August / September 2010, Peoples Bank, Colombo. PP20 -25.
4. Little.W.Angela and siri Hettige (2016) Globalization, Employment and Education in Sri Lanka, Opportunity and Division, Sarasavi Publication, Nugegoda.

# Our Academic Staff - 2017



## Staff - 2012



Krishnapillai House (Yellow)



## Chinnathamby House (Green)





முன்னாள் செயலாளர் சரஸ்வதி சிலையை திறந்து வைக்கிறார்



முன்னாள் செயலாளர் திரு. சி. சத்தியசீலன் கல்லூரிக்கு விஜயம் செய்த போது



ஒளி விழா நிகழ்வு



முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் வலயக் கல்விப்பணிப்பாளருக்கு நினைவுக்கேடயம் வழங்குகிறார்




பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வி.க. விருது பெற்ற போது பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை பாராட்டு விழா நடத்திய போது

## மாணவர் தலைவருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு - 2014



## பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை - 2002



## வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி - 2013




## சிங்கராஜா வனப்பகுதியில் உயிரியல் கற்கை தொடர்பான கல்விச்சுற்றுலா - 2011



விவசாயப்போட்டி ஒன்றில் வெற்றி பெற்ற போது





நீண்ட காலம் சிறப்பாகப் பணியாற்றிய
ஒய்வுநிலை பிரதி அதிபர்
திரு. ம.அ.தவரட்ணராஜா



நீண்ட காலம் சிறப்பாகப் பணியாற்றிய
ஓய்வுநிலை பகுதித்தலைவர்
திருமதி. சுசீலா கிருஸ்ணதாசன்



## Under 18 Volley Ball Team -2017



## Under 18 Foot Ball Team - 2017



# 2016ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள்



G. Raguraj 9A



K.Yatheesan (6A,2B,C)



K.Nimalraj (8A,C)



R.Vithursanan (6A,3B)



K.Thesikan (8A,S)



S.Kokulan (4A,2B,2C)


## மாகாண மட்ட உதைபந்தாட்டம் 3ஆம் இடம் - 2011



## நூற்றாண்டு நிறைவு விழா மலர்க்குழு



# 1952ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவுகள்




அதிபர் விளையாட்டு வீரர்களுக்கு உரையாற்றுகிறார்




ஆசிரியர் குழாம்



மாணவர் பாராளுமன்றம்



கரப்பந்தாட்டக்குழு



விளையாட்டுப்பயிற்சி



விளையாட்டு வீராங்கனைகள்

வலயமட்ட கிறிக்கெற் போட்டி 1ஆம் இடம் - 19 வயது ஆண்கள் - 2016



மாவட்ட மட்ட கிறிக்கெற் போட்டியில் 2ஆம் இடம் 19 வயது - 2013



2017ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடைபெற்ற விஞ்ஞான
வினாடி வினாப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள்



தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களை வடமாகாணக்
கல்விப்பணிப்பாளர் பாராட்டும் நிகழ்வு



வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி - 2013




வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி - 2013



வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி - 2013



வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி - 2013



## Under 20 Volley Ball Team - 2017



## Under 20 Table Tennis Team - 2017



## Under 20 Foot Ball Team - 2017



## Under 20 Carrom Team - 2017



## Under 20 Cricket Team - 2017



## Under 16 Foot Ball Team -2017



## Students Parliament



## Social Science Union



# School Development Committee - 2017



# School Management Team



# Science Union



# Scouts - 2017



# Prefects - 2017



# Our Non Academic Staff



## Old Students Association



## Sports Committee



## New Invention Club



## Tamil Union



## Health Committee



## Hindu Union



## Green Force Team



## English Union



## Employee Welfare Society



## Aesthetic Union



## Christian Union



## Band Group



## Discipline Committee



## Commerce Union



## Ramasamy House (Blue)



## Sittampalam House (Red)



இசுறு பாடசாலை கட்டட அடிக்கல் நாட்டு நிகழ்வின் போது - 2010



யா/ விக்னேஸ்வரக்கல்லூரி இல்லமெய்வல்லுநர் போட்டி - 2012



இசுறு பாடசாலை ஆசிரியர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வின் போது 2010



# நிர்வாக கட்டடத்தொகுதி
# திறப்பு விழா - 23.04.2014








## மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூட
## திறப்பு விழா நிகழ்வுகள்














## “விக்நேயன்” விழா நிகழ்வுகள்













## லண்டனில் நடைபெற்ற "நல்லதோர் வீணை செய்தே" என்ற நிகழ்வின் காட்சிகளில் சில











# இல்ல மெய்வல்லுநர்
# போட்டி நிகழ்வுகள்









## இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள்





## நூற்றாண்டு விழாவை முன்னிட்ட நடைபவனி





## நூற்றாண்டு விழாவை முன்னிட்ட
## சிரமதானம், இரத்ததானம்





# பரிசளிப்பு விழா நிகழ்வுகள்















# பரிசளிப்பு விழா நிகழ்வுகள்










தொழில் அதிபர், திரு. ந. பாஸ்கரன் அவர்கள் கதிரைகள்
அன்பளிப்பு செய்கின்றார்



பிரார்த்தனை மண்டப சுற்றுப்புற அலுமினிய வேலி அமைப்பு
அனுசரணை அமரர் சோமசுந்தரம் குடும்பத்தினர்



ஆங்கிலமொழி விருத்திச் செயற்றிட்டத்திற்காக
திரு.கு. ரஜீவ் தர்மேந்திரா அவர்கள் காசோலை
அன்பளிப்பு செய்கின்றார்

பாடசாலை நூலக முன்புறம்



பாடசாலையின் முகப்புத்தோற்றம் - 1993 - 2008 வரை



## நீண்ட கால அர்ப்பணிப்பான சேவைக்காக நூற்றாண்டு நிறைவு நாளில் பாராட்டப்படும் பணியாளர்கள்



அமரர் சி. சின்னத்துரை



திரு.ச. அன்ரன் இராசநாயகம்
(அம்மான்)



திரு.சி. வேலுப்பிள்ளை



திரு.ஆ. சிவராசா



திரு.மு. முரளிதரன்



பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்தில்
வலயமட்டத்தில் 2ஆம் இடம் பெற்று
அமைச்சரிடம் இருந்து பரிசு பெற்ற போது - 2013



பிரார்த்தனை மண்டப கருவறை
க.பொ.த உயர்தர - 2012
க.பொ.த சா/த - 2009 மாணவர்
அணியினரின் அன்பளிப்பு






காலை உடற்பயிற்சியின் போது

SLFF நடாத்திய 13 வயதின் கீழ் பெண்கள் உதைபந்தாட்டம்
2ஆம் இடம் (மாவட்ட மட்டம்)



மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டியோர் - 2009





**நீண்ட காலம் ஆசிரியராக அர்ப்பணிப்பான சேவை புரிந்த பதில் அதிபர் அமரர் A. சுப்பிரமணியம் ( ஆர்ட்டிஸ்ற் மாஸ்ரர்)**

நூற்றாண்டு நிறைவு மலருக்கான நிதி அனுசரணை வழங்கியவர்கள் முன்னாள் பதில் அதிபர் A. சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ்ற் மாஸ்ரர்) குடும்பத்தினர்

# கரவெட்டிப் பிரதேச, புலம்பெயர் எழுத்தாளர்கள், கலைஞர்கள்

பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் உலகத்தமிழ் இலக்கியப் பரப்பினுள் சென்று சேர்வதற்கும் அவ்விதத்தில் ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் உலக இலக்கியப் போக்குகளுக்கு நிகரான நிலையை அடைவதற்கும் வழிவகுத்த இலக்கிய வகைகளுளொன்று புலம்பெயர் தமிழ் இலக்கியமாகும். இவ்விதத்தில் கரவெட்டிப்பிரதேசம் சார்ந்து கனடாவிலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் வசித்துவரும் எழுத்தாளர்கள் பற்றியும் கலைஞர்கள் பற்றியும் அறிவது பயனுடையது.

மேற்கூறிய விதத்தில் மணிவேலுப்பிள்ளை (கனடா), கரவை மு.தயாளன்(லண்டன்), மீரா பாரதி(கனடா), லதா உதயன்(சுவிஸ்), நட்சத்திரன் செவ்விந்தியன் (அவுஸ்திரேலியா), கே.எஸ். பாலச்சந்திரன்(கனடா), கீழ்க்கரவை பொன்னையன் (ஜேர்மனி), கருணா வின்சன்ற், சின்னராஜா முதலானோர் இவ்வேளை நினைவிற்கு வருகின்றனர்.

மணி வேலுப்பிள்ளை மொழிபெயர்ப்பு, கட்டுரை, சிறுகதை சார்ந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர். இன்று வரை மூன்று முக்கியமான நூல்களை மொழிபெயர்த்துள்ளார். இவற்றுளொன்று மார்க்சியம் : ஒரு மீள்நோக்கு ,1967 இல் "பிரித்தானிய பெங்குயின் நூல் - வெளியீட்டகம் பொதுவுடைமைப் பிரகடனத்தையும் அதற்கு ஓர் அறிமுகம் என்ற பெயரில் ஏ.ஜே.பி. தைலர் (A.J.P. Taylor 1906-1998) வரைந்த மீள்நோக்கையும் ஒரே நூலாக வெளியிட்டது. அதன் மீள் பதிப்பு 1985 இல் வெளிவந்தது. தைலர் வரைந்த மீள்நோக்கின் தமிழாக்கமே மார்க்சியம் ஒரு மீள் நோக்கு. மார்க்சியம் தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இதில் இடம்பெற்றுள்ளன "மூல நூலைப்படிப்பது போன்ற திருப்தியைத் தரும் நடையில் மொழி மாற்றம் செய்திருக்கின்றார். திரு.மணி வேலுப்பிள்ளை" (அ.முத்துலிங்கம்) . மற்றொரு நூல், 'வெட்டுக்கிளிகளை உற்றுக்கேட்டல் (இன அழிப்பு, மறுப்பு, கொண்டாட்டம்)' (Listening to grasshoppers). எழுதியவர் அருந்ததிராய். துருக்கி, இந்தியா நாடுகளின் அரசியல்

சீர்கேடுகளை விமர்சிக்கும் கட்டுரைகளை எழுதிய அருந்ததிராய் இந்தியாவின் நட்சத்திர எழுத்தாளர்: உலகப்புகழ் பெற்றவர். இவரது காஷ்மீர் சீற்றம் பொதிந்த பார்வையும், மணி வேலுப்பிள்ளையினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிறிதொரு நூல், மாயமீட்சி, எழுத்தாளரான மிலான்குந்தேரா எழுதிய புலம்பெயர் நாவலின் மொழிபெயர்ப்பு: தமிழில் இவ்வகை நாவல்களின் மொழிபெயர்ப்புக் குறைவாக இருக்கின்ற சூழலில் தமிழ் வாசகருக்கு அதிக பயன் தருவது இந்நாவல் 'நாங்கள் அவர்கள்' என்பது மணி வேலுப்பிள்ளையின் கட்டுரைகள். ஒடுக்கப்பட்ட மக்கள், ஆளுமைகள், தமிழ் மொழி, கிரேக்கச் சிந்தனை என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள 20 கட்டுரைகளின் தொகுப்பு இது. "வாசகர்களை சிக்கலான, கூரிய நோக்குகள் ஊடாடும் தளங்களுக்கு அழைத்துச்செல்லும் நூல்கள் தமிழில் இல்லை என்ற குற்றச்சாட்டிற்கு "நாங்கள்-அவர்கள் பதிலாக இருக்கும்" (காலச்சுவடு பதிப்பாளர்). இந்நூலில் 'தமிழ்மொழி' பிரிவிலுள்ள கட்டுரைகள், 'மொழியினால் அமைந்த வீடு' என்ற தலைப்பில் ஏற்கனவே தனிநூலாக வெளிவந்துள்ளது. நூலுருப்பெறாத மணி வேலுப்பிள்ளையின் சிறுகதைகள்,ஈழம் கனடா சார்ந்த மக்களது வாழ்க்கைக்கோலங்களை அலங்கோலங்களை எள்ளல், துயரம் என்பன விரவி வர சித்தரிப்பவையாகும். (மணி வேலுப்பிள்ளையும் நானும் கரவெட்டி தமிழ் - ஆங்கில ஆசிரியர் அமரர் வ.சிவராசிங்கம் அவர்களின் அபிமான மாணவர்கள். மணி வேலுப்பிள்ளை, கொழும்பு பல்கலைக்கழகத்திலும் என்னோடு படித்தவர்)

கரவை மு.தயாளன் (மு.நற்குணதயாளன்) நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் எழுதுபவர். லண்டனில் பௌதிகவியல், கணிதம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவித்த அனுபவப் பின்னணியில் பௌதிகவியல், கணிதம், ஆங்கிலம் சார்ந்த 36 கைந்நூல்களின் ஆசிரியர். இவரெழுதிய இரு நாவல்களுளொன்று கடல் கடந்து போனவர்கள் (2001). இந்நாவல் எண்பதுகள் காலத்து ஈழத்து அரசியல் சூழலில் புலம்பெயர்ந்தும் ஆயுதப் பயிற்சிக்காகவும் சென்ற இரு வேறு குழாத்தினரைப் பற்றிய புனைவாகும். சில மனிதர்களும் சில நியாயங்களும் (2016), புலம்பெயர் வாழ்வில் ஒன்றியும் ஒன்றாமலும் வாழும் தலைமுறையினரின் வாழ்க்கை முரண்பாடுகளைக் களமாகக் கொண்டது. மறக்க முடியாத பாத்திரங்களும், தர்க்க ரீதியான உரையாடல்களும் விறுவிறுப்பான கதைப்பின்னலும் இந்நாவலின் சிறப்பியல்புகளாகும். இவரது, எனது பேனாவில் இருந்து (2016) என்ற தொகுப்பு தமிழில் எழுதப்பட்ட (சிறு) கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றையும் ஆங்கிலத்திலெழுதப்பட்ட stories, poems ஆகியவற்றையும் கொண்ட கூட்டுத்தொகுப்பு நூலாகும். சிறுகதைகள் பலவும் ஜேர்மன், இலண்டன் பின்னணியில் புதிய புகலிடப் பிரச்சினைகள் பற்றி (உ-ம். தற்கொலை, குழுச் சண்டை) எழுந்துள்ளன. கட்டுரைகள் சமய உலகில் (இங்கும் அங்கும்) நிகழ்கின்ற குறைபாடுகளை விமர்சிப்பவை. மொழிப்பற்று, புலப்பெயர்வு, விடுதலைக்கனவு முதலியன சார்ந்துள்ளன, கவிதைகள், நாடகங்களுள் ஒன்று புகலிட வாழ்வு பற்றியது, மற்றொன்று பாஞ்சாலி சபதத்தின் தழுவலாகின்றது. இவரெழுதிய மண்ணில் தெரியுதுவானம் கட்டுரைத் தொகுப்பு, பார்வைக்குக் கிட்டவில்லை. கலசம், திருவருள் ஆகிய லண்டன் சமய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவர் 'லதாஉதயன்' சிறுகதை, நாவல் முயற்சிகளில் ஈடுபடுபவர் இவரது சிறுகதைத் தொகுப்பு ஒரு நதியின் தேடல் இங்கும், சுவிஸிலும் வாழ்கின்ற பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி அலசுகின்றன. பெண்களது அழுகைக் குரல்களும் அடங்கிய குரல் தரும் எதிர்ப்புக் குரல்களும் உணர்ச்சிப் போராட்டங்களும் வாசகர்களை ஈர்க்கும் விதத்தில் இத்தொகுப்புக் கதைகளில் வெளியிடப்பட்டுள்ளன. உன்னைச் சரணடைந்தேன் (2016) நாவல், புலம்பெயர்ந்தோரது (சுவிஸ்) வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றியும் தாயக ஏக்கம் பற்றியும் இங்கிருப்போரது எதிர்பார்ப்புகள் பற்றியும் விடுதலை வேட்கை பற்றியும் விவரிக்கின்றது.

மேற்கூறிய அனைவரிலிருந்தும் வித்தியாசமான இலக்கியத் தடத்தில் செல்பவர் மீராபதி. இவரது இரு நூல்களிலொன்று, பிரக்ஞை (ஓர் அறிமுகம்), தனி மனித மாற்றத்திலிருந்து சமூக மாற்றத்தை நோக்கி (2012) என்பதாகும். நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படை கடந்தகாலச் செயற்பாடுகள் என்று அவை பிரக்ஞை பூர்வமாக அமைவது அவசியமானதென்றும் அவ்விதத்தில் 'விழிப்பு' நிலை, தியான நிலை என்பன அவசியமென்றும் விளக்கிச் செல்ல முற்படுகின்றது, இந்நூல். மற்றைய நூல் , மரணம் - இழப்பு - மலர்தல் ( இழப்பிலிருந்து வளர்ச்சியை நோக்கி ஒரு பயணம்) (2013) என்பதாகும். இதன் பேசுபொருள் யாதென்பதனை நூலின் தலைப்பு உணர்த்துகின்றது என்று கருதுகின்றேன். மீரா பாரதியின் தனிப்பட்ட வாழ்வின் துயரங்களும் வாசிப்பும் அவரது எழுத்துக்களை இத்திசை நோக்கிச் செலுத்தியுள்ளன போலும் எவ்வாறாயினும் எமது இவ்வுலக வாழ்க்கை பற்றிய புதிய சிந்தனைகளை நோக்கி இந்நூல்கள் எம்மை ஆற்றுப்படுத்துகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை.

மேற்கூறிய படைப்பாளிகளிடமிருந்து விலகி வேறு திசை சென்று அவர்களைவிட பெரும்பாலான மக்களால் நன்கறியப்பட்ட கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன். 'அண்ணை றைற்' என்ற தனி நடிப்புத்திறமையூடாக நன்கறியப்பட்ட இவர், புகழ்பெற்ற வானொலி நடிகர் ( உ-ம் . தணியாத தாகம்) தொலைக்காட்சி நடிகர் மேடை நடிகர் ( ஈழத்து) திரைப்பட நடிகர் ( உ-ம் : வாடைக்காற்று) , நாடக நெறியாளர், நாடக எழுத்தாளர் (உ-ம் : கரவெட்டியைக் களமாகக் கொண்ட கிராமத்துக் கனவுகள்) இத்தகு திறன்களை கனடாவிலும் வெளிப்படுத்தி புகழ்பெற்றவர். எனினும் கே.எஸ்.பாலச்சந்திரன் நாடகத்துறை விற்பன்னர் மட்டுமல்லர். கவனத்திற்குரிய எழுத்தாளருமாவார். சிறுகதைகள் சில எழுதியுள்ள அவர் (அவை பற்றி விரிவாக அறியமுடியவில்லை. ) நாவலாசிரியருமாவார். அவரெழுதிய நாவலான கரையைத்தேடும் கட்டுமரங்கள் (2009) இந்தியாவில் அமுதன் அடிகள் விருது பெற்றது. மீனவர் வாழ்வியல் பற்றிப் பேசுவது. சிறந்த கட்டுரையாளர் என்பதனை இளமைக்கால நினைவுகள் பற்றி இவரெழுதிய நேற்றுப்போல இருக்கின்றது (2011) வெளிப்படுகின்றது. ஈழத்தின் நகைச்சுவை எழுத்தாளர் வரிசையில் முக்கியமான ஒருவராகவும் இவரை இந்நூல் இனங்காட்டுகின்றது, நூலுருப் பெறாத பத்திரிகைத் தொடர்களும் நிறைய உள்ளன. (உ-ம் : வீடு – வாழ்வியல் கட்டுரைகள். தமிழ் ரைம் - கலைவாழ்வு பற்றியவை, இருக்கிறம் இலங்கை வானொலிக்கால நினைவுகள்)

மேற்கூறிய கலைஞனும் எழுத்தாளனுமான கே.எஸ்.பாலச்சந்திரன் விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பகால மாணவரென்பது இவ்வேளை விதந்துரைக்கப்பட வேண்டியதே.

நட்சத்திரன் செவ்விந்தியன் (அ.அருணோதயன்) மேற்கூறிய அனைவரையும் விட, வயது குறைந்தவர். ஈழத்திலுள்ள கவிதைத்துறை, விமர்சனத்துறை, ஆரவலர்களால் நன்கறியப்பட்டவர். வசந்தம் 91 (1994) எப்போதாவது ஒருநாள் (1999) ஆகிய இரு கவிதைத் தொகுப்புக்களின் சொந்தக்காரன். இவரது கவிதைகள் அவர் இழந்துவிட்ட பால்யபாலம் பற்றியவை, இளமைப் பருவம் பற்றியவை. குழந்தைப் பருவம் பற்றியவை. அவற்றின் பின்புலமாகக் கூடிய பேரினவாத போர்க்கால ரணங்கள், தோல்விகள், எதிர்பார்ப்புக்கள், பிரிவுகள் போன்றவற்றின் துயர்கள் பற்றியவை 1983 இனக் கலவரத்தின் போது இவரது வயது 10. தமது விமர்சன உரைகளால் (உ-ம்: இ.முருகையன் ஒரு கவிஞரா?) அதிர்வுகளை ஏற்படுத்தி வந்தவர். அனைத்தையும் விட இளம் வயதிலேயே முதிர்ந்த வாசகரானவர், ஆண்டு 8 இல் படிக்கின்றபோது வகுப்பிலே நண்பனுக்கெழுதிய கடிதத்திலே எஸ்.பொ.டொமினிக் ஜீவா சர்ச்சை பற்றி எழுதி என்னை பிரமிப்பிற்குள்ளாக்கியவர். (அவுஸ்திரேலிய பல்கலைக் கழகத்திலே அரசியல் பொருளாதார மாணவனாகப் பயின்றவர். தற்போது எந்நிலையில் உள்ளாரென்று முகநூல் தொடர்பற்ற என்னால் அறியமுடியவில்லை.)

கீழ்க்கரவைப் பொன்னையன் (இங்கிருந்தபோது நீதிமன்ற – எழுதுவினைஞர்) எழுதிய சிறுகதைகள் எவையும் நூலுருப்பெறாமை துரதிஷ்டமே. இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்ற சின்னராசா என்பவரும் எழுத்தாளராக அறியப்படுகின்றார். (தகவல் : எழுத்தாளர் கண.மகேஸ்வரன்) எண்பதுகளின் புகழ்பூத்த எழுத்தாளராகி பின்னர் வனவாசத்திலீடுபட்டிருந்த ரஞ்சகுமார் அவுஸ்திரேலியா சென்ற பின் இரு சிறுகதைகள் எழுதியிருக்கின்றார். இங்கிருந்த போது எழுத்தார்வம் கொண்டிருந்த நியூசிலாந்திலுள்ள வரதராஜனும் (முன்னாள் “சக்தி” செய்தி வாசிப்பாளர்) “முகநூல்” எழுத்தாளராக இயங்கிவருகின்றார். அதிகம் அறியப்படாத கலைஞர்களுள் அண்மையில் இலண்டனில் டிஜிற்றல் ஊடாக நவீன ஓவியக் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்த கருணா வின்சன்ற்றும் கரவெட்டி சார்ந்தவரே. பதாகை, போஸ்ரர், அட்டை ஓவியங்கள் முதலான பல துறைகளிலும் சாதனை புரிபவர் அவர். புலம்பெயர் நாடுகளின் ஊடகத்துறையில் ஏறத்தாழ 15 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் சௌந்தரியும் (சௌந்தரி கணேசன்) கரவெட்டி சார்ந்தவரே. விக்னேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவியும் கூட. பண்டிதர் பொன் கணேசனின் மகளே அவர்.

ஆக, வெவ்வேறு நோக்கும்போக்குமுடைய படைப்புகள் தருகின்ற புலம்பெயர் எழுத்தாளர்களுள் கரவெட்டிப் பிரதேச புலம்பெயர் எழுத்தாளர்களுக்கும் முக்கிய இடமுள்ளது என்பது இதுவரை கூறிய வற்றிலிருந்து ஓரளவே புலப்படுமென்று நம்புகின்றேன். ஏனெனில் முழுமையான தகவல்கள் இங்கு தரப்படவில்லை ஆயினும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு அல்ல, பதமான சில சோறுகளுள்ளன வென்று திருப்தியடைய இடமுள்ளது.!



# கரவெட்டி :- கல்வியும் கலையும் நான் கண்டதும் கேட்டதும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலருக்குக் கட்டுரையொன்று எழுதித்தருமாறு நண்பர் வ.செல்வராசா கேட்டுக்கொண்டார். என்ன கட்டுரை எழுதலாம்? எப்படி எழுதலாம்? என்ற யோசனையிலே நாள்கள் நடந்தன - இல்லை நாள்கள் கடந்தன. எண்ண அலைகள் ஓரளவுக்கு ஓய்ந்தது கரவெட்டி – கல்வியும் கலையும் - நான் கண்டதும் கேட்டதும் என்ற தளத்துக்கு வந்து சேர்ந்தேன்.

கரவெட்டி என்ற இடப்பெயர் பற்றிப்பலரும் பலவாறாகக் கூறியுள்ளனர். இதனை இடப்பெயர் ஆய்வாளர்களிடம் விட்டுவிடுவோம்.

கரவெட்டிப் பகுதி மிக அகன்ற நிலப்பரப்பை உடையது. அதற்குள் உப பிரிவுகள் பல உள்ளன. 19ஆம் நூற்றாண்டிலே தபாற்போக்குவரத்துத் தொடங்கியதும் தபாற்கந்தோரின் அமைவிடமாகக் கரவெட்டி அமைந்தது. இதனாலே தபாற்கந்தோரை முதன்மைப்படுத்தி வதிரி, கரணவாய், கப்புதூ. நவிண்டில், துன்னாலையின் ஒரு பகுதி முதலான ஊர்களும் கரவெட்டி என்ற முகவரியின் கீழே வந்தன.

வல்லைப்பாலம் அமைக்கப்பட்டு, யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் போக்குவரத்து இலகுவாகியதும் (பஸ் வண்டி,குரைக்கோச் முதலியன) நெல்லியடி முதன்மை பெறத் தொடங்கியது பின்னர் மெல்ல மெல்லப் பட்டினமாக மாறியது. எனினும் இன்றுவரை நெல்லியடி கரவெட்டி என்ற முகவரியிலே கடிதங்கள் பரிமாறப்படுகின்றன. நெல்லியடி நகரமாக மாறிய சூழலை ஆராய்வது சுவைபயப்பதாக அமையும்.

நாம் இங்கு கரவெட்டி எனக் குறிப்பிடுவது கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு(இப்போது கரவெட்டி மத்தியும்) ஆகிய பகுதிகளையே ஆகும். இப்பகுதிகளில் வாழ்வியல், பொருளாதார நடவடிக்கைகள் முதலியனவும் தனியே ஆராயப்படவேண்டியவை. நாம் இங்கு கல்வியையும் கலையையும் பற்றியே சிந்திக்கின்றோம்.

19ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் நெல்லியடி என்ற இடம் பிரபல்யம் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அதன் கேந்திர முக்கியத்துவம் கருதி ஒரு சந்தை இருந்தது. சூழவுள்ள தோட்டங்களிலே விளையும் விளைபொருட்கள் இந்தச் சந்தையிலேயே விற்பனை செய்யப்பட்டன. இச்சந்தையைச் "சேனாந்தை" (சேனா சந்தையாக இருக்கவேண்டும்) என்றே அழைத்தனர். இச்சந்தையிலே முஸ்லிம் சிறு வியாபாரிகளும் வியாபாரம் செய்தனர் (ஊசி, நூல் முதலியன) என்று முதியவர்கள் கூறினர்)

வல்லைப்பாலம் கூட்டப்பட்டதும் யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமான போக்கு வரத்து அதிகரித்தது. பருத்தித்துறை வீதி, கொடிகாமம் வீதி, வதிரி – அல்வாய் வீதி சந்திக்கும் நாற்சந்தியிலே பெரியதொரு நெல்லிமரம் நின்றதாம். இந்த நெல்லி மரத்தடியிலேதான் யாழ்ப்பாணம் செல்பவர்களும் வருபவர்களும் கோச் வண்டியை (பிற்காலத்திலே பஸ்வண்டி) பயன்படுத்துவார்கள். கரவெட்டி, துன்னாலை ,வதிரி, அல்வாய் முதலான இடங்களிலிருந்து வருபவர்களை இந்த நெல்லி மரத்தடியிலேதான் ஏற்றி இறக்குவார்கள். அந்த நெல்லிமரம் நின்ற இடமே நெல்லியடி ஆயிற்று.

மரங்களை முன்னிலைப்படுத்தி இடப்பெயர்கள் வழங்குவது எமது பிரதேசத்திலே வழக்கில் உள்ளது. உதாரணமாக அரசடி, மருதடி (மானிப்பாய்), மாவடி (வட்டுக்கோட்டை), வேம்படி (யாழ்ப்பாணம்), கூழாவடி (ஆனைக்கோட்டை) இவ்வாறு பல ஊர்ப் பெயர்களைக் குறிப்பிடலாம்.

இன்று குடாநாட்டின் சிறந்த வர்த்தகப் பட்டினங்களில் ஒன்றாக நெல்லியடி வளர்ச்சியடைந்துள்ளமை மகிழ்சிக்குரியது.

ஒல்லாந்தர் கரவெட்டி உள்ளிட்ட பகுதிகளைக் கட்டைவேலிக் கோவிற்பற்று என்றே அழைத்தனர். காணித் தோம்புகளை நோக்கினால் இந்த உண்மை தெரியவரும். எனினும் ஒல்லாந்தர் காலத்திலே கரவெட்டி என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தவரான நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுத முதலியார் (வேலாத்தை உடையார் என்றும் அழைப்பர்) மீது கரவை வேலன் கோவையைப் பாடியுள்ளார். இந்த வேலாயுத முதலியார் மரபில் வந்தவர்களே கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை நிறுவினார்கள்.

கரவெட்டியின் கல்வி முயற்சிகளை நோக்கும்பொழுது மிகப் பழங்காலத்திலிருந்தே திண்ணைப் பள்ளிகள் நிலவிவந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. மரபுவழித் தமிழ்க்கல்வி, புராணபடனத்திற்கான பயிற்சி முதலியன கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு பகுதிகளிலே மிக அண்மைக்காலம் வரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. வாய்மொழி வழக்காற்றிலே இன்றும் 'சட்டம்பியாவளவு' . 'சட்டம்பியார் வளவு' முதலான காணி. வீட்டுப்பெயர்கள் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்ற இடங்களாக இருக்கலாம்.

ஒல்லாந்தர் காலத்திலே நல்லூர் சின்னத்தம்பிப் புலவராற் பாடப்பட்ட கரவைவேலன் கோவையிலே கரவைவேலன் (வேலாயுதமுதலியார்) தமிழ்க்கல்வியிலே, தமிழ்ப்புலமையிலே சிறப்புற்று விளங்கியவர் என்று கூறப்படுகின்றது. இவர் மரபுவழித் தமிழ்க்கல்வியையே பெற்றிருப்பார் என்பதிற் சந்தேகமில்லை.

கிறிஸ்தவத்தின் வருகையை ஒட்டிக் கரவெட்டிப் பகுதியிலே சில கிறிஸ்தவப் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. இவற்றிலே திருஇருதயக்கல்லூரி , அதற்கு எதிரிலே R.C ஆரம்ப பாடசாலை என்பன கத்தோலிக்க சமயத்தினால் நிறுவப்பட்டவை. கரவெட்டி கிழக்கிலே கட்டைவேலி தமிழ்க்கலவன் பாடசாலை ஒன்றும் மெதடிஸ்த மிஷனரியினாலே நிறுவப்பட்டது . இப்பாடசாலை பருத்தித்துறை

ஹாட்லிக் கல்லூரிக்கு முன்னரே மெதடிஸ்த மிஷனரியாரால் நிறுவப்பட்டது என்று கூறுகின்றனர். இப்பாடசாலை வளவுக்குள்ளே ஒரு சிவன் கோயில் இருந்ததாகவும் அந்தச் சிவன்கோயில் போத்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். அந்தச் சிவன்கோயிலின் இடிபாடுகள் இன்றும் அந்த வளவிலே காணப்படுகின்றன. இவற்றைவிடக் கரவெட்டி கிழக்கு, மேற்குப் பகுதியிலே வேறு கிறிஸ்தவப் பாடசாலைகள் நிறுவப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த கிறிஸ்தவப் பாடசாலைகளிலே பெருமளவுக்குச் சைவப் பிள்ளைகளே படித்தனர். திரு இருதயக் கல்லூரியிலே அதிபராக இருந்த வண. தியோகுப்பிள்ளை அவர்களே பிற்காலத்தில் கத்தோலிக்க மறைமாவட்ட யாழ்ப்பாண ஆயராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாமறிந்த வரையிலே கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலையின் அதிபர்களாக இருந்தவர்களில் A.D.S என அழைக்கப்பட்ட ஆ.தா.சுப்பிரமணியம் குறிப்பிடத்தக்கவர். கரவெட்டிப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கும் கணிசமான பங்கு உண்டு.

மரபுவழிக்கல்வி மெல்ல மெல்ல அருகிச் செல்ல சைவச்சூழலிலே பிள்ளைகள் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன் சைவத்தமிழ்ப் பாடசாலைகள், சைவாங்கிலப் பாடசாலைகள் கரவெட்டிப் பகுதியிலே நிறுவப்படுகின்றன. இந்தவகையிலே சித்தமணியம் என அழைக்கப்பட்ட சிற்றம்பலமுதலியார் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர். இவர் கரவைவேலன் கோவைப் பாட்டுடைத் தலைவனான வேலாயுதமுதலியார் மரபிலே வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வேலாயுதமுதலியாருக்குச் சிற்றம்பலம் என்று ஒரு மகன் இருப்பதாகக் கரவைவேலன் கோவை கூறுகின்றது "தரணி போற்றிய சிற்றம்பலவனைத் தந்த தந்தை" எனக் கரவைவேலன் கோவை கூறும். கரவைவேலன் கோவையிலே வரும் சிற்றம்பலவனின் பேரனாகவோ பீட்டனாகவோ தான் சித்தமணியம் என அழைக்கப்படும் சிற்றம்பலமுதலியார் இருக்கவேண்டும் என்பதையும் இந்த இடத்திலே பதிவுசெய்வது நலம்.

சித்தமணியத்தினால் நிறுவப்பட்ட கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி,மாணிக்கவாசகர் வித்தியாசாலை,சரஸ்வதி வித்தியாலயம் (பெண்கள் பாடசாலை), விநாயகர் வித்தியாலயம் முதலியன கரவெட்டிப் பகுதியின் கல்விப்பயிரை வளர்த்த நிறுவனங்களாகும். இவற்றோடு கப்புது வித்தியாசாலை, கரவெட்டி கிழக்கு யாக்கருவிநாயகர் வித்தியாசாலை இவற்றைத் தொடர்ந்து கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலை ஸ்ரீ நாரதா பாடசாலை முதலியனவும் நிறுவப்பட்டன. பெரும் பாலும் இவை தமிழ்மொழி மூலப் பாடசாலைகளாகவே விளங்குகின்றன.

கரவெட்டியிலே சைவங்கில வித்தியாசாலையாக இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விக்னேஸ்வரக் கல்லூரி நிறுவப்பட்டது. கரவெட்டியின் சைவ ஆங்கிலக் கண்ணைத்திறந்து வைத்த பெருமை விக்னேஸ்வரக் கல்லூரிக்கேயுரியது.சித்தமணியம் குடும்பத்தினரின் அர்ப்பணிப்புடன் வளர்ந்த இக்கல்லூரியிலே கரவெட்டியைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரமன்றி வடமராட்சியின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். ஆங்கிலமொழி மூலமான போதனை நடைபெற்றதால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். உதாரணமாக ஒருவரை மட்டும் குறிப்பிடுவது ஒரு வரலாற்றுப் பதிவாக அமையும் என எண்ணுகின்றேன். மதவாச்சிப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் விளங்கிய மைத்திரிபால செனநாயக்கா சிறிது காலம் இந்தக் கல்லூரியிலே கல்வி பயின்றார். (இவர் இக்கட்டுரை ஆசிரியரின் பெரியதந்தையாராகிய செல்லப்பா வீட்டிலிருந்தே கல்லூரிக்குச் சென்றுவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது).

விக்னேஸ்வரக் கல்லூரியிலே இந்திய ஆசிரியர்கள் பலர் அதிபர்களாகவும் ஆசிரியர் களாகவும் விளங்கினர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்விப்புலமைப் பாரம்பரியத்தில் இந்தியா விலிருந்து வந்து இங்கு பணியாற்றிய ஆசிரியர்களின் பங்களிப்பு மகத்தானது. நாமறிந்த வரையிலே திரு.அச்சுதம்பிள்ளை, திரு.பத்மநாதபிள்ளை முதலான பலர் ஆசிரியர்களாகவும் அதிபர் களாகவும் பணியாற்றியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக "யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்கள்" என்னும் எமது நூல் விரைவிலே வெளிவருகின்றது. இக்கல்லூரியிலே நீண்டகாலம் பயின்ற மூத்தோரை அணுகி இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பற்றிய தகவல்களை இந்நூற்றாண்டு விழா மலரிலே இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இந்திய ஆசிரியர்களுடன் இணைந்து சுதேச ஆசிரியர்களும் பணியாற்றினர். இந்திய ஆசிரியர் களின் பின் முழுக்க முழுக்கச் சுதேச ஆசிரியர்களே கல்வி போதிக்கும் பணியை நேர்மையுடனும் சேவை மனப்பான்மையுடனும் முன்னெடுத்தனர். ஐம்பதுகள் அறுபதுகளிலே இக்கல்லூரியின் அதிபராக விளங்கிய திரு. சிவப்பிரகாசம் அவர்களை அனைவரும் போற்றுகின்றனர்.

இக்கல்லூரி சட்டமேதைகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலரை உருவாக்கியது. எல்லோரையும் சுட்டிக்காட்டுவது கடினமாகையால் வகைமாதிரிக்கு ஒருசிலரை இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

உடுப்பிட்டி, நல்லூர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் உப சபாநாயகருமான மு.சிவசிதம்பரம், முன்னாள் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் க.ஜெயக்கொடி, தொழில் நீதிமன்ற நீதிபதி வி.விமலராஜா, சிரித்திரன் சிவஞானசுந்தரம், பேராசிரியர் கா.சிவத்தம்பி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரி திரு.திருஞானசுந்தரம், சிறந்த சிறுகதை எழுத்தாளர் செ.கதிர் காமநாதன், வானொலி, சினிமா நடிகரான K.S.பாலச்சந்திரன் முதலான பலபேரைக் குறிப்பிடலாம். (விக்னேஸ்வரக் கல்லூரியிலே பயின்று புகழ்பரப்பியவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்).

நாமும் சிறிதுகாலம் விக்னேஸ்வரக் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பிலே படித்தோம். அக்காலத்திலே திரு. சோமசுந்தரம் B.Sc அதிபராக இருந்தார். எமக்கு A.S.சின்னத்தம்பி (இந்திய வரலாறு) P.S. சின்னத்தம்பி (அரசியல்), திருமதி, பார்வதி சின்னத்தம்பி (இலங்கை வரலாறு), ஆட்டிஸ்ற் சுப்பிரமணியம் (புவியியல்), பண்டிதர் க.முருகேசு (தமிழ்), திரு.பாலசுப்பிரமணியம் (ஆங்கிலம்) ஆகியோர் கற்பித்தனர். எமது குடும்பச்சூழல் காரணமாகப் பாடசாலைக்கல்வியை இடையிலே பரித்தியாகம் செய்துகொண்டோம். ஆங்கிலம் கற்பித்த திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் அமரராகும் வரை என்னுடன் தொடர்பு கொண்டவராக இருந்தார். நான் பல்கலைக்கழகம் வந்ததன் பின்னர் கொழும்புத்துறையில் இருந்து அடிக்கடி என்னிடம் வருவார். அவரிடம் மீண்டும் ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

விக்னேஸ்வராவின் கல்விப் பாரம்பரியம் பேரால விருட்சம் போன்றது. அதன் விழுதுகள் வேரோடி விருட்சத்தினைத் தாங்கி நிற்கின்றன.

கரவெட்டியின் கல்விப் பாரம்பரியம் போலவே கலைப் பாரம்பரியமும் பல சிறப்பியல்புகளைக் கொண்டது கரவெட்டிப் பகுதியிலே இசை, நடனம், கூத்து இவற்றோடு சிகரம், சப்பறம், வெடி, வாணம், திருவிழாச் சோடனைகள், சாத்துப்படி, கைவினைக்கலைகள் முதலியனவும் வழக்கில் இருந்தன.

இசையைப் பொறுத்தவரையிலே கரவெட்டிப் பகுதியில் நாட்டார் இசை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. குறிப்பாகத் தாலாட்டுத் தொடக்கம் ஒப்பாரி வரையான இசைப்பாடல்களைப் படிப்பறிவு இல்லாத பெண்கள் கூட அழகாகப் பாடுவர். இன்று இந்த மரபு சிறிது சிறிதாக அருகிவிட்டது. இடையிலேயே ஒப்பாரிகளின் ஓசையை மட்டும் கேட்க முடிகின்றது .

சாஸ்திரிய சங்கீதத்தைப் பயின்றவர்களிற் பலர் ஆசிரியராகப் பணியாற்றினர். அனுபவ ரீதியாகப் பயிற்சியின் அடிப்படையிலே சாஸ்திரிய சங்கீதத்தை உள்வாங்கியவர்களும் கரவெட்டிப் பகுதியிலே இருந்தனர். நல்ல குரல்வளம் உள்ளவர்கள் கூத்து, நாடகம், சினிமா முதலிய வற்றின் பாடல்களைச் சிறப்பாகப் பாடுவதை நமது இளமைக்காலத்திலே கண்டிருக்கின்றோம்.

தேவார திருவாசகங்களை மிகவும் பக்தி பூர்வமாகப் பண்ணோடு பாடும் (பண்ணிசை படிக்காமலே) பலர் கரவெட்டியிலே இருந்தனர். ஆலயங்களிலே, விழாக்காலங்களிலே இவர்கள் அற்புதமாகப் பஞ்சபுராணம் ஓதுவார்கள். இன்றும் ஓரளவுக்கு இந்த மரபு உண்டு.

மரண வீட்டிலும், மரண கிரியைகளிலும் தேவார திருவாசகங்களை இசையோடு பாடக்கூடிய பலர் இப்பகுதியிலே இருந்தனர். இவர்கள் பட்டினத்தார் பாடல்களை இசையோடு பாடும்பொழுது மரண வீட்டில் உள்ளோர் அழுவதை நாம் நேரிலே கண்டிருக்கின்றோம். நல்ல இசைஞானம் உள்ள பலர் பண்ணோடு தேவார திருவாசகங்களை ஓதினர். இந்த வகையில் கரவெட்டியைச் சேர்ந்த திரு.மூ.முருகேசு, திரு.மூ.கனகசபை முதலான பலர் (மற்றவர்களின் பெயர்கள் நினைவில்லை) பாடுவதை நாம் கேட்டிருக்கின்றோம். நாடகக்கவிமணி எம்.வீ.கிருஷ்ணாழ்வார் தேவார திருவாசகங்களை உணர்வுபூர்வமாகப் பாடுவார் ( இவர் நாடகம் பற்றிக் குறிப்பிடும் இடத்து விரிவாக நோக்குவோம்.)

சங்கீதத்தை வரன்முறையாகப்படித்த இசையாசிரியர்கள் பலர் இப்பகுதியிலே வாழ்ந்துள்ளனர். அவர்களது கையளிப்பு முறைமை இன்றும் தொடர்கின்றது என்றே எண்ணுகின்றோம். இன்று புகழ்பூத்த சங்கீத வித்துவானாகத் திகழும் செ.குமாரசுவாமி(வரதன்) கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவர். இவர் இசைச்சூழலிலே பிறந்து வளர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி கிறிஸ்தவப்பாடசாலைகளில் சூழலிலே ஒரு கிறிஸ்தவ 'சங்கீதப்' பாரம்பரியம் இருந்தமையையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

கரவெட்டியிலே சிறப்பான நாடகப் பாரம்பரியம் ஒன்றும் நிலவியது. பெரும்பாலும் இசை நாடகங்கள், சிந்துநடைக் கூத்துக்கள் முதலியனவே நடைபெற்றன. இப்பகுதியின் புகழ்பெற்ற அண்ணாவியாராகவும் , கவிஞராகவும், நாடக நடிகராகவும் எனப் பல்பரிமாணத் திறன்படைத்த நாடகக் கவிமணி எம்.வீ.கிருஷ்ணாழ்வார் கரவெட்டிக்குப் பெருமை சேர்த்த ஒரு கலைஞராவார். இவரைவிட அண்ணாவி மூத்ததம்பி (கரவெட்டி கிழக்கு) அண்ணாவி நற்குணம் முதலியோரும் கரவெட்டியைச் சேர்ந்தவர்களே.

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களிலே ஆலயச்சூழலிலே காத்தவராயன், அரிச்சந்திரா, பவளக்கொடி, சாவித்திரி சத்தியவான் முதலான இசை நாடகங்களைக் கரவெட்டியைச் சேர்ந்தவர்களே பழகி மேடையேற்றுவர். குறிப்பாக அத்துளு அம்மன் கோயிற்சூழல், பத்திரகாளி கோயிற்சூழல், யாக்கரு விநாயகராலயச் சூழல், கிழவிதோட்ட விநாயகராலயச் சூழல் முதலான இடங்களிலே நாடகங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த நாடகங்களிலே கரவெட்டியைச் சேர்ந்தவர்களே பாடி நடித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஒரு சிறந்த இசைநாடகப் பாரம்பரியம் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கரவெட்டியிலே நிலவியமையை மூத்தோர் அறிவர்.

இத்துடன் கரகம், காவடி ஆகிய கலைகளும் கரவெட்டிப் பகுதியிலே நிலவியது . கரவெட்டி கிழக்கிலே அண்ணாவி மூத்ததம்பியார் சிறுவர்களுக்கு ஆட்டக்காவடி(இது தாளக் காவடியாக இருக்க வேண்டும்) பழக்குவார். தென்மராட்சிப்பகுதியில் இருந்தும் சிறுவர்கள் வந்து இவரிடம் காவடி பழகியதை நாம் நேரிலே கண்டிருக்கின்றோம்.

நவராத்திரி நிறைவுநாள் அன்று (அம்மன் கும்பம்) கரவெட்டி கிழக்கில் உள்ள பெரியதம்பிரான் கோயிலில் இருந்து அத்துளு அம்மன் கோயிலுக்குக் கரகம் ஆடிக்கொண்டு செல்வார்கள். சிறப்பான கரக ஆட்டக்காரனாக (பெண் வேஷமிட்டே) வைரமுத்து என்பவர் இருந்தமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்த மரபும் இப்போது மறைந்திருக்க வேண்டுமென்றே கருதுகின்றோம்.

கரவெட்டியின் கலை வளர்ச்சியிலே ஆலயங்களே பிரதான பங்கு வகித்தன. இசை , நடனம், நாடகம், பண்ணிசை , அலங்காரம் முதலான கலைகள் யாவும் ஆலயங்களை மையமாக வைத்தே வளர்ந்தன. மிகப்பெரிய திருவிழாக்கள் நடைபெறும் போது, புகழ் பெற்ற தவில், நாதஸ்வரக் கலைஞர்கள், பாடகர்கள், சின்னமேளம் என அழைக்கப்பட்ட சதிராட்டம், வாணவேடிக்கை சிகரம், சப்பறம் முதலானவை இணைந்து ஆலயச்சூழலைத் தேவலோகமாக்கும், கிராமங்கள் நகரமாக யொலிக்கும். உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்களான, திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை, காருக்குறிஞ்சி அருணாசலம், ஷேக், சின்னமௌலானா, சேதுராமன் பொன்னுச்சாமி முதலா னோரும் தெட்சணாமூர்த்தி உள்ளிட்ட பெருந்தவில் வித்துவான்களும் கரவெட்டிக் கோயில்களிலே தமது கச்சேரிகளை நிகழ்த்தினர். பக்தி உணர்வோடு கலந்த கலை ஈடுபாடு இந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தவர்களிடம் இருந்திருக்க வேண்டும்.

விழாக்காலங்களிலே ஆலயத்தை அழகுபடுத்துவதற்குச் செய்யப்படும் சோடனைகளிலும் ஒரு கலைத்துவம் இருந்தது. குறிப்பாக சிகரம் கட்டுவது (ஆலய முகப்பை மூடிக்கட்டுவதே பிரதானம்) மிகவும் முக்கியமானது. இச்சிகரக் கலைக்குப் பின்னால் ஒரு அழகியற் செயற்பாடு. அழகியல் உணர்வு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சிகரக்கலைக்குப் புகழ்பெற்ற இடமாகக் கரவெட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. சிகரக்கலையின் தோற்றம், பயன்பாடு முதலியவை பற்றித் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

சிகரம் போலவே சப்பறம் , தண்டிகை, மணவறை (இதிலும் பூச்சப்பறம்,மணிச்சப்பறம் எனப் பலவகை) முதலானவையும் கரவெட்டிப்பகுதியிலே இருந்தன .சிகரம்,சப்பறம் முதலானவற்றை ஆக்கியவர்களிடம் ஆக்கத்திறன் அழகியல் சார்ந்து இருந்தமையையும் குறிப்பிட வேண்டும்.

கரவெட்டிப் பகுதியில் “சாத்துப்படி” செய்யும் சைவர்களும் இருந்தார்கள். நாமறியக் கரவெட்டி கிழக்கிலே “சுப்பையா ஐயர்” எனும் சாத்துப்படி விற்பன்னர் இருந்தார். அவர் அக்காலத்திலே புகழ் பெற்ற சாத்துப்படிகாரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு வெடி,வாணம் செய்பவர்களும் இருந்தார்கள். அவர்கள் இக்கலையை எங்கு கற்றார்கள் என்பது பற்றி அறிய முடியவில்லை. கரவெட்டி வெல்லன் பிள்ளையார் கோயிலிலே 1879ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3ஆம் திகதி நடைபெற்ற அக்கினி விபத்துக்கு வாணவேடிக்கை ஒரு காரணம் என்று சிலர் கூறுவர். ஆனால் அக்காலத்து பத்திரிகை ஒன்று ‘பெரும் அக்கினி விபத்து’ என்ற தலைப்பில் நீண்டதொரு செய்தியை எழுதியிருந்தது. அச்செய்தியின் ஒருபகுதி பின்வருமாறு.

“எஞ்சீவிய நாளில் எம்முன்னோரினடந்ததாய் நாங்கேளாததும் எமக்குமுன் நடந்ததாய் இதிகாசங்கூற நாமறியாததுமானவோர் குரூரமும்,பரிதாபமும்,

பயங்கரமும், கண்டோர் கேட்டோர் நெஞ்சத்தை ஏங்கச் செய்ததுமான ஓரிடையூறு 1879ஆம் ஸ்ரீ வைகாசி மீ 3 ஆம் இரவு வடமராட்சியிலுள்ள கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார் கோவிலிற் சம்பவித்தது. சாமியார் உள்வீதியுலாவித் தெருவீதி யெழுந்தருளுவதற்காகக் கோபுர வாசலைச் சமீபிக்க முன்னே சூலவிளக் கொன்றிலிருந்தவக்கினி பந்தலிற்றூக்கிய வாகைமாலை யொன்றிற்றா விசுவரூபங் கொள்ள பந்தர்ச் சோடினைகள் கடதாசிகளும் சீலைகளுமானதால் அந்த அக்கினி தேவனுக்கெளிதான உணவாயிருக்கவே..............."

இவ்வாறு அந்த செய்தி தொடங்குகின்றது. ஆலய அலங்காரம், வாகைமாலை, சீலை (வெள்ளை), கடதாசி என்பவற்றினாற் செய்யப்பட்டிருந்தன என்பதை இச்செய்தி மூலம் அறியமுடிகின்றது.

பொதுவாகத் தமிழர் கலைகள் ஆலயங்களை மையமாக வைத்தே வளர்த்து வந்தன. கரவெட்டியின் கலைகளும் அவ்வாறேதான் வளர்ந்துவந்தன.

இந்த அக்கினி விபத்துப்பின்னரோ என்னவோ கரவெட்டியில் உள்ள சில ஆலயங்களில் ஆடம்பரத் திருவிழாக்கள் நிறுத்தப்பட்டன. சில ஆலயங்களிலே கதாப்பிரசங்கம், சமயச் சொற்பொழிவு முதலான நிகழ்வுகள் விழாக்காலங்களிலே இடம்பெற்றன. இந்தவகையிலே கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்குச் சிறப்பிடம் உண்டு. மிகப் புகழ்பெற்ற மணிஐயர் என அழைக்கப் பட்ட சுவாமிநாதத் தம்பிரான், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி முதலான ஈழத்துத் தமிழறிஞர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கி.வா.ஜகந்நாதன், அ.ச.ஞானசம்பந்தன் சா.கணேசன், ஜனார்த்தம்பிள்ளை, வச்சிரவேலு முதலியார் முதலானோர் இந்த ஆலயத்திலே சொற்பொழிவாற்றினர். இவர்களின் சொற்பொழிவுகளைச் சிறுவனாக இருந்த இக்கட்டுரையாசிரியர் தொடர்ந்து கேட்டு உள்வாங்கியமையும், தமிழ்மொழி இலக்கியக்கல்வியில் ஈடுபாடு ஏற்படக்காரணம் எனலாம்.

கரவெட்டியின் தமிழ்க்கல்வி, புலமைப்பாரம்பரியத்திலே இச்சொற்பொழிவுகள் பெரும் பங்காற்றின என்பதை உறுதியாகக்கூறலாம். சொற்பொழிவுகள், புராணபடனம் முதலானவை ஒழுங்கும் கட்டுப்பாடும் சமய உணர்வும் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்கின என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

இன்னும் பல விடயங்கள் கல்வி, கலை பற்றி இருக்கலாம்.எமது நினைவிலே நின்றவற்றையே இங்கு குறிப்பிட்டோம். இக்கட்டுரை தொடர்பான இன்னும் சேர்க்கவேண்டிய தகவல்களை அறிஞரா யுள்ளோர் தந்துதவினால் மீண்டும் திருத்தியும் புதுக்கியும் எழுதுவோம்.

கரவெட்டி



# சமகாலக்கல்வியும் அது எதிர்நோக்கும் சவால்களும்

**வே.சிவசிதம்பரம்**
**ஓய்வுநிலை அதிபர்**
**யா/விக்கினேஸ்வராக் கல்லூரி**
**கரவெட்டி.**



குருகுலக்கல்வி ஊடாக பாடசாலைக் கல்விக்கு காலடி எடுத்துவைத்தநாம் இன்று கல்வியில் பல்வேறு பரிணாமங்களைக் கடந்த நிலையில் சர்வதேச கல்வியுடன் ஒன்றித்துப்போகும் ஓர் அணுகுமுறையை மேற்கொண்டுள்ளோம்.

இன்றைய கல்வியானது மாணவர் ஆளுமையை விருத்தி செய்யும் அதே சமயம் வாழ்வில் தோன்றும் சவால்களுக்கு முகங்கொடுத்து அதனை வெற்றி காணும் முறைக்கு மாணவரை எடுத்துச் செல்கின்றது. அதேசமயம் பூகோளமயமாக்கலுக்கு ஈடுகொடுக்கத்தக்கதாக தொழிற்கல்வியை முன்னிலைப்படுத்தும் முகமாகவும் அமைகின்றது. இம்மாற்றங்களை பெற்றோர் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் அது பூரணமாக வெற்றி கொள்ளாததொன்றாக அமைகின்றது.

குருகுலக்கல்வி, திண்ணைக்கல்வியில் ஆசிரியரே முன்னிலைப்படுத்தப்படுகின்றார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வாசகம் எப்போதும் மேலோங்கி நிற்கின்றன. மாணவர் தவறுவிடும்போது அங்கு வழங்கப்பட்ட தண்டனைகள் பெற்றோராலும் சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாக அமைந்திருந்தது. ஆனால் அந்நிலை இன்று இல்லை. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" "அடியைப்போல் அண்ணன் தம்பி உதவாது" என்ற வாசகங்கள் ஓங்கி ஒலித்த காலமது. கூறப் போனால் மாணவரை அடக்குமுறையிலான கல்வி மேலோங்கி நின்ற காலம். அதனை சமூகம் ஏற்றுக் கொண்ட துடன் அக்கல்வி முறை போற்றப்பட்டதெனலாம். குறிப்பாக கிராமப்புற பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் அடித்தால் மாணவன் வீட்டில் அதனைக் கூறினானாயின் பெற்றோர் மாணவனை மேலும் தண்டித்தது மாத்திரமன்றி அத்தகைய ஆசிரியரின் நடிவடிக்கைகளை போற்றிய காலமது. ஆனால் இன்று சிறுவர் உரிமை, மனித உரிமை என்பவற்றில் விழிப்புணர்வு பெற்றோர் மத்தியில் மாணவர் மத்தியில் மேலோங்கிய நிலையில் ஆசிரியர் அதிபர் தம்மிடம் ஒப்படைத்த மாணவரை புடம்போட்டு

மெருகூட்டுவதில் பின்நிற்கின்றார்கள். இது இறுக்கமான கட்டுப்பாடான கலாசாரத்தில் வாழ்ந்து வந்த எம் பிரதேச மக்களின் கல்வியில் சிறிது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஒரு காலத்தில் ஆசிரியர்கள் தமது சூழலிலுள்ள பிள்ளைகளை வீடு சென்று அழைத்துச் சென்று கல்வி புகட்டி அவர்களின் உயர்வில் மகிழ்ந்த காலமொன்று இருந்தது. ஆனால் இன்றோ அந்த நிலை காணமுடியாதுள்ளது. அன்றைய காலம் தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத காலம். அமைதியான கிராமப்புறச் சூழல் சூழலுடன் இணைந்த கல்வி அவ்வூர் சார்ந்த ஆசிரியர்கள் சேர்ந்து ஊர்ப் பற்றுடன் வடம் இழுத்த காலம் இன்று பெரும்பாலான கிராமப்புற பாடசாலைகள் மாணவர் வளம் குன்றி காணப்படுவதுடன் கிராமப்புற மாணவர் நகர்ப்புறங்களை நோக்கி படையெடுக்கும் நிலை பௌதிக வளம், ஆசிரியர்வளம் நிறைந்திருந்தும் அதிபர் ஆசிரியர் வினைத்திறனுடன் செயலாற்றுவதில் சோர்வு அடைகின்றனர். காந்தியின் கல்விக்கொள்கை இன்று எந்தளவிற்கு மெய்யாக்கப்படுகின்றதென்பது கேள்விக்குறியாகும்.

பூகோளமயமாக்கப்பட்ட இன்றைய நிலையில் பெற்றோரின் மனமாற்றங்கள், தவறான சிந்தனைகள் என்பனவும் கிராமப்புறக்கல்விக்கு சவாலாக அமைகின்றன. இங்கு பொருளாதாரமும் ஒரு காட்டியாக அமைகின்றது. வடலிகள் எல்லாம் இன்று பனைமரங்களாக வளர்ந்த நிலையில் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் துளிர்த்துவிடுகின்ற நிலையில் நகரத்தை நோக்கிய நகர்வு இயற்கை யானதே. பெற்றோர்கள் மத்தியில் இது இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக அமைகின்றது. என்னுடைய பிள்ளையும் ஏன் அங்கு படிக்கக்கூடாது ஏன் பஸ் ஏறிப்படிக்கக் கூடாது என்று எல்லோரும் நினைக்குமளவிற்கு சமூகம் மாற்றங்களைக் கண்டுள்ளது. இது கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நவீன தொழில்நுட்பம் மேலோங்கியுள்ள இன்றைய நிலையில் மாணவரிடையே பொழுதுபோக்கு சாதனங்களின் மிகையான பயன்பாடு தவறான முன்னெடுப்புக்கள் வெளிநாட்டு கலாசாரத்தின் சிறிது சிறிதான உட்புகுத்தல்கள் யாவும் சேர்ந்து மாணவர் கற்கும் நேரத்தை சூறையாடுவதுடன் மாணவரை தவறான பாதையில் திசை திருப்பி சில வேளைகளில் கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்துமளவிற்கு கொண்டு செல்கிறது. இந்நிலையில் ஆசிரியர் மாணவர் உறவு முறை வகுப்பறைக்கல்வி என்பன தளம்பல்களை ஏற்படுத்துகின்றது. போற்றத்தக்க உயர்ந்த எங்களின் கல்விப்பாரம்பரியம், கலாசார பாரம்பரியம் என்பன சிதைவடைகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

அன்று மாணவன் தனது கல்வியைப் பெறுவதில் முற்றுமுழுதாக ஆசிரியரையே நம்பியி ருந்தான். இன்று நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களின் உட்புகுத்தல்களும் கல்வியைப் பெறுவ தற்கான நவீன இணையத்தள வசதிகள் பயனுறுதி மிக்க தொடர்பாடல் கல்வி மேலோங்கிய நிலையில் ஆசிரியர் கற்கத் தூண்டுபவராகவும் வழிகாட்டியாகவும் அமையும் போது பெற்றோர் மாணவர் மத்தியில் ஆசிரியருக்கு முன்பு கொடுத்த அதீத முக்கியத்துவம் ஓரளவு குறைந்துள்ளதெனலாம். சுயகற்றல் கையேடுகள், மென்பொருட்கள் என்பன தாராளமாகக் கிடைக்கும் இன்றைய உலகில் ஒழுங்குமுறையில் கற்கும் ஒரு மாணவனுக்கு வகுப்பறைக்கல்வி எந்தளவிற்கு பயனுடையதாகும் என்று எண்ணத்தோன்றுகின்றது.

கல்வியின் அடித்தளம் மாணவனின் ஒழுக்கம் என்பர் . "உப்பில்லாப்பண்டம் குப்பையிலே" என்பது போல ஒழுக்கமற்ற கல்வி எந்தப்பயனையும் தரப்போவதில்லை. ஒரு காலத்தில் பாடசாலை களின் கலாசாரம் முனைப்பாக செயற்பட்டது. ஆனால் இன்றோ அதனை நிறைவேற்றுவதில் அதிபர், ஆசிரியர்கள் வேதனை அடைகின்றனர். கூறப்போனால் பிள்ளைகளின் பெற்றோர் கூட எந்தளவுக்கு பாடசாலையின் ஒழுக்க கலாசாரத்துக்கு உதவுகின்றார்கள் என்பது கேள்விக்குறியே.

மாணவனின் ஆளுமையை வளர்ப்பதில் கல்லூரிகளில் பல்வேறுபட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுவது யாம் அறிந்ததே. இந்நிலையில் தனியார் கல்வி நிலையங்களின் தாக்கமும் இன்றைய பரீட்சை முறைகளும் இதற்கு சவாலாக அமைகிறது. ஆசிரியர், அதிபர் கல்லூரியின் முன்னேற்றம் கருதி மாணவரை வலுக்கட்டாயமாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் புகுத்தவேண்டிய நிலை. எமது கல்விச்சிந்தனைகள் எங்கே போகின்றது என சிந்திக்கத் தோன்றுகின்றது.

அன்று ஆசிரியர் பன்முகத்தன்மை கொண்டவராக விளங்கினார் என்றால் மிகையாகாது. குறிப்பாக தமிழாசிரியர் ஒருவர் நடிப்பு, பாடும் ஆற்றல், மிடுக்கு என்பவற்றினூடு மாணவரை கவருவதில் வெற்றி கண்டார். அது மட்டுமன்றி அவர் இடைநிலைக்கல்வியை சரித்திரம், புவியியல், ஆங்கிலம், கணிதம் என ஏனைய பாடங்களையும் சமமாக கற்பிக்கும் ஆற்றல் கொண்டிருந்தார். அந்த நிலை இன்று உள்ளதா என சிந்திக்க தோன்றுகிறது.

இன்றைய தமிழாசிரியர் ஒருவர் தமிழ்ப் பாடத்தை பொதுப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கற்பிக்கத் தயங்குகிறார்கள். அது மட்டுமன்றி தமிழ் ஆசிரியர் ஒருவர் தமிழ்ப்பாடம் தவிர வேறு பாடங்களை கற்பிக்க முன்வருவதில்லை. வெற்றி காணும் பாடசாலைகளுக்கு அதிபருக்கு இது ஒரு சவாலாக அமைகிறது.

ஆசிரியர் என்பவர் எப்போதும் நேர்ச் சிந்தனையுடையவராக இருப்பின் கல்வி உலகில் அது விளைதிறன் மிக்க ஒரு முடிவைத்தரும் என்பதில் சந்தேகமில்லை. கல்லூரியின் இணைப்பாடவிதான செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு எந்தளவிற்கு உள்ளதென்பது நாம் அறிந்த உண்மை. பாடசாலைகளுக்கிடையே அன்னியோன்னியமான போட்டியை வளர்த்தெடுப்பதில் அதிபர் படும்பாடு பெரும் சோதனை ஆசிரியர்க்கென சுயமதிப்பீடு, புள்ளியிடும் திட்டம், வெளிவாரி மதிப்பீடு என்பன எவ்வளவுதான் நடைபெற்றாலும் ஆசிரியர்கள் மனங்கள் மாற்றப்படாத நிலையில் எந்த ஒரு கல்விச் செயற்பாடும் வெற்றியளிக்காது.

இவ்வேளையில் கல்லூரிச் செயற்பாடுகளில் சேவைக்கால ஆலோசகர் தரும் ஒத்துழைப்பு, கல்வி அதிகாரிகளின் வெளிவாரி மதிப்பீடுகள், கல்வித்திணைக்களத்தின் பாடசாலை மீதான செயற்படுத்தல்கள் இன்று கல்லூரிக்கு எந்தளவு உதவுகரமாக அமைகின்றதென்பது கேள்விக்குறியாகும். கூறப்போனால் முதற்தர முகாமையாளர் என்ற பதம் அதிபருக்கு பொருத்தமானதா என எண்ணத்தோன்றுகின்றது. சேவைக்கால ஆலோசகர்கள், பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் போன்றோரை இன்று ஆசிரியர் சமுதாயம் ஏற்றுக்கொள்கிறதா? என்பதை அவர்கள் தங்களை சுயமதிப்பீடு செய்து மாற்றிக்கொள்ளுமிடத்து பாடசாலைகளின் அடைவுமட்டம் நிச்சயம் மேலோங்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.


இன்றைய ஆசிரியத் தொழில் ஆசிரியர்கட்கு கற்பித்தலுக்கு மேலாக பதிவுகள் எழுத்து வேலைகள் கோவைப்படுத்துதல் எனப் பல்வேறு வேலைப்பாடுகளை ஏற்படுத்துகிறது எனும் ஒரு கருத்து நிலவுகிறது. கூறப்போனால் ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பறை நேரத்தின் பெரும் பகுதியை இதில் செலவழிக்கிறார்கள் என்னும் கருத்து உள்ளது. கல்விச்சிந்தனையாளர் இதனை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்கிறார்களோ தெரியாது. பிள்ளைகளை மதிப்பீடு செய்வதில் தற்போது மேற்கொள்ளப்படும் நவீன மதிப்பீட்டு முறைகள் ஆசிரியர்களை சோர்வு அடையச் செய்வதுடன் பொதுப்பரீட்சை முடிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனும் அபிப்பிராயம் நிலவுகிறது.

இன்று பாடசாலைகளில் கற்றலுக்கான பௌதிக வளங்கள் தாராளமாக வழங்கப்படுகிறது. குறிப்பாக கணினிகள், ஆய்வுகூட உபகரணங்கள், கணினி மென்பொருட்கள் கற்றலுக்கான வசதிகள் பல்ஊடக தெறிகருவி, Smart class room வழிகள் எனக்கூறிக்கொண்டே போகலாம். இவை யாவும்

வழங்கப்பட்ட நிலையிலும் பாடசாலை மாணவர்களின் அடைவுமட்டம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது இன்று கேள்விக்குறி. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து ஆசிரியர் அதிக திட்டமிட்டு செயற்படுவாராயின் ஒரு மாற்றத்தைக் காணலாம். இதில் அதிபர், ஆசிரியர் எந்த அளவுக்கு தம்மை ஈடுபடுத்தி மாணவர்களை வளர்த்தெடுக்கிறார்கள் என்பது கேள்விக்குறி.

ஆசிரியர் நியமனங்கள், இடமாற்றங்கள் என்பனவும் இன்று கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர் ஒருவர் தான் கற்ற பாடத்தினை படிப்பிக்கக் கூடிய ஒரு பாடசாலையில் முதல் நியமனம் பெறுவாராயின் அவர் தன்னை வளர்த்து தன்னை தொழில்நிலைப்படுத்த முடியும். ஆனால் இந்நிலை இன்று எத்தனை வீதம் உள்ளது என எண்ணத் தோன்றுகிறது. கட்டாய இடமாற்றங்கள் அடிக்கடி நிகழும் இடமாற்றங்கள் தேவையான பாடத்திற்கு புறம்பான ஆசிரியர் நியமனம் மேலதிக ஆசிரியபரம்பல் என்பனவும் கல்வித்துறைக்கு சவாலாக உள்ளன. அன்று 35:1 என மாணவர் ஆசிரியர்கள் விகிதம் இன்று 16.1 என மாற்றம் காணும்போது பாடசாலைகளில் கல்வித்தரம் உயர்ந்துள்ளதா எனும் கேள்வியும் பரவலாக பேசப்படுகிறது.

ஆசிரியர்கள், நவீன கற்பித்தல் சாதனங்களைக் கையாளும் திறனை வளர்த்து மனமாற்றம் கொண்டவர்களாக மாறும் அதே சமயம் பெற்றோர் மனதிலும் விழிப்புணர்ச்சி ஏற்படும் அதே சமயம் ஆசிரிய அதிபர் சுதந்திரமாக செயற்படும் சூழல் உருவாகும்போது எமது கல்வி கலாசார பாரம்பரியங்கள் பேணப்பட்டு பெற்றோர் தம் பிள்ளைகளை பொறுப்பு உள்ளவர்களாகவும் வகை கூறுபவர்களாகவும் வழிநடத்தும்போது ஏற்றம் பெற்ற கல்விச் சமூகம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. கூறப்போனால் மத்திய அரசு கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரித்த போதிலும் ஆசிரியர்களின் வேதனம் அதிகரித்த போதிலும் ஆசிரியர்வாண்மை விருத்திக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் பயனுள்ள இலவசக்கல்வி அளிக்கப்பட்டபோதிலும் கல்வியில் ஓரளவு சமவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் எதிர்பார்த்த அடைவுமட்டம் இலக்குகள் எந்த அளவுக்கு அடையப்பட்டுள்ளது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து செயற்படுவோமெனில் வெற்றி வெகு தூரத்தில் இல்லை.



# தமிழ்த்தேன்



சிலேடைக் கவி இரத்தினம்
பண்டிதர் கணபதிப்பிள்ளை

## தமிழ்த்தேன் I

தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் அறிஞர்களில் ரா.பி சேதுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தக்கவர் இலக்கணக்கடலனார் என்ற சிறப்புப் பட்டம் பெற்றிருந்த சோழவந்தான் அரசன் சண்முகனாரிடம் தமிழை ஐயம் திரிபு நீக்கிக் கற்றுக் கொண்டவர். ரா.பி. அவர்கள் தமிழர் வீரம் முதலான நூல்களை எழுதியவர். சிறந்த எழுத்தாளர்.

பிள்ளை அவர்கள் தொடக்கத்தில் தமிழகத்தில் உள்ள கிறிஸ்தவக் கல்லூரி ஒன்றில் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றினார். அவர் பணி ஆற்றிய கல்லூரி வளாகத்துள் கிறிஸ்தவத் தேவாலயமும் அமைந்திருந்தது. அந்தக் கிறிஸ்தவத் தேவாலயத்துக்குரிய பாதிரியார் ஓர் ஆங்கிலேயர் அதனால் பிள்ளை அவர்களும் பாதிரியாரும் ஒருவரை ஒருவர் சந்திப்பது இயல்பாயிற்று. ரா.பி. அவர்கள் பாதிரியாரைச் சந்திக்கும் வேளைகளில் தமிழின் சிறப்பு, அதற்குரிய ஐம்பெருங்காப்பியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலாம் நூல்கள் ஒவ்வொன்றையும் பாதிரியாருக்கு விளக்கி வரலானார். அந்த வரிசையில் ஒரு நாள் திருக்குறளுக்கு விளங்கங் கொடுத்தார். முடிவில் திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை என்று முடித்தார்.

அவர் விளக்கம் கொடுத்த அந்தக் கணத்திலேயே ஆடு ஒன்று கல்லூரிக்குள்ளே வந்து குறோட்டன் ஒன்றில் வாய் வைத்தது. அதனைக் கண்ட சிற்றூழியர் ஒருவர் அதனைப் பார்த்து “டோ டோ” என ஒலி எழுப்பித் துரத்தினார். ஈழத்தில் “சூ சூ” என ஒலி எழுப்பித் துரத்துவது வழக்கம். தமிழகத்தில் டோ டோ என்பது வழக்குப் போலும்,

இந்த “டோ டோ” என்ற ஒலி பாதிரியார் செவிகளிலும் பாய்ந்தது. அதனைக் கேட்ட பாதிரியார் “டோ டோ” வும் திருக்குறளில் உள்ளதா! என்றார். அதனைக் கேட்டதும் பிள்ளை அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டார். அடக்கிக் கொண்டவர் உடனே அதுவும் இருக்கிறது என்று சொல்லி விட்டு

"நலக்குரியார் யார் எனின் நாமநீர் வைப்பில் பிறர்க்குரியா டோ டோ யா தார்"

என்ற குறளைச் சொன்னதும் பாதிரியார் வாயடைத்துத் திருக்குறளை வியந்து நோக்கினார். "பிறர்க்கு உரியார் தோள் தோயாதார் என்பதே புணர்ச்சி விதிப்படி பிறர்க்குரியா டோ டோயா தார் என நின்றது. இந்த வகையிலும் நமது செந்தமிழ் தன்னைப் பாதுகாத்துக் கொண்டது நமக்குப் பெருமை தருவதன்றோ.

## தமிழ்த்தேன் II

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தோன்றிய ஒளி மிக்க தமிழ்த்துருவ நட்சத்திரங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று யாழ் நல்லை நகர் நாவலர் பெருமான் மற்றையது திரிசிரபுரம் (திரிசிரப்பள்ளி, திருச்சி) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள். இருவரும் வித்துவக் காய்ச்சல் இன்றி அறிவினால் ஒன்றிணைந்தவர்கள். நல்லை நகர் ஆறுமுகனாருக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தில் நாவலர்ப் பட்டம் பெற்றுக்கொடுப்பதில் முனைந்து நின்றவர் பிள்ளை அவர்கள். அவரே பிற்காலத்தில் பிரகாசித்து தமிழ்த் தாத்தா உ.வே.சாமினாதையர் பிள்ளை அவர்களுக்கு மாணவராய் அமைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாவலர் பெருமான் ஆவடுதுறைக்குச் சென்றால் பிள்ளை அவர்களுடன் தமிழ்ச்சல்லாபம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு முறை அவர் சென்றிருந்த மாதம்; மார்கழி பனி கொட்டிக் கொண்டிருந்தது. பனிக் கொடுமையை நோக்கிய பிள்ளை அவர்கள் "பனிக்காலம் கொடிது" என்றார். உடனே நாவலர் பெருமான் அஃது உண்மை உண்மை பனிக்காலம் நன்று என்றார். அதனைக் கேட்ட சுந்தரனார் சிரித்துக் கொண்டார். வாசகர்களுக்கு இது வியப்பளிக்கும். ஒருவர் கொடுமை என மற்றவர் நன்று என்கிறாரே. நாவலர் அதனை பனிக்கு ஆலம் நன்று என்று சிலேடை ஆக்கி விட்டார் ஆலம் - நஞ்சு பனியை அனுபவிப்பதிலும் நஞ்சை அருந்தி மரணிப்பது நல்லது என்பது நாவலர் கருத்து எனவே அஃதும் உடன்பாடு தானே.

## தமிழ்த்தேன் III

நல்லை நகர் நாவலர் பெருமானும் திரிசிரபுரம் (திருச்சி) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும் தமிழால் இணைந்தவர்கள். நாவலர் பெருமான் வசனநடை கைவந்த வல்லாளர். சுந்தரனார் கம்பனாய்க் கவிமழை பொழிந்தவர். இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் இடம் திருவாவடுதுறை ஆதீனமே. ஒரு நாட் சந்திப்பில் இருவரும் சாலை ஒன்றில் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். வழியில் ஒரு மதகில் இருந்து நீர் பாய்ந்து கொண்டிருந்தது. அதனைக் கண்ட சுந்தரனார் "என்னை விழும் தூம்பு" என்றார். இஃது ஒரு சிலேடைத் தொடர். என்னை விழுந்து ஊம்பு எனக் கொண்டால் நீர் என்னை விழுந்து வணங்கு எனப் பொருள் தரும். ஊம்பு - வணங்கு எங்கள் ஊரில் வாழ்ந்த முன்னாள் பெரியவர்கள் ஒருவரை வெறுக்கும் போது அவரை நான் ஊம்பமாட்டேன் என்பார்கள். இஃது எடுத்துக்காட்டு. இத் தொடரை "என்னை விழும் தூம்பு" எனக் கொண்டால் இந்த மதகில் இருந்து என்னை விழுந்து கொண்டிருக்கிறது என்பது பொருள் தூம்பு - மதகு, கண்வாய் என்பன ஒரு பொருட் சொற்கள்.

சுந்தரனார் என்னை விழுந்தூம்பு என்றதும் நாவலர் உடனே "நீர் விழுந்தூம்பு" என்றார். நான் உம்மை விழுந்து வணங்கமாட்டேன். நீரே என்னை விழுந்து வணங்குவீராக என்பது ஒரு பொருள். தண்ணீர் விழுகின்ற தூம்பு என்பது மற்றொரு பொருள். - நீர் - முன்னிலைப் பன்மையாகவும் தண்ணீர் என்ற பொருளிலும் நின்றது. ஊம்பு வணங்கு எனவும் தூம்பு கண்வாய் என்ற பொருளிலும் நின்றன.

# அறிவுசார் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்
# The Importance of Knowledge Based Economy





**கலாநிதி.எஸ்.விஜயகுமார்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**பொருளியலதுறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## 01. அறிமுகம் (Introduction)

உயர்வான பொருளாதார வளர்ச்சியினையும் பொருளாதார சுபீட்சத்தையும் அடைந்து கொள்வதற்காக பல்வேறு நாடுகளும் கடுமையாகப் போராடி வருகின்றன. சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்களை நன்கு அனுபவித்து வளர்ச்சியடைந்த நாடுகளாகக் காணப்பட, சில நாடுகள் வறிய நாடுகளாகவும், சில நாடுகள் நிலைமாறு கட்டத்திலுள்ளவையாகவும் காணப் படுகின்றன. ஆரம்பகால பொருளாதாரக் கோட்பாடுகள் பௌதிக மற்றும் இயற்கை வளங் களின் இருப்பு என்பது பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் நிர்ணயிக்கும் காரணி களாக வலியுறுத்தின. குறிப்பாக நிலம், உழைப்பு, மூலதனம் போன்றவற்றின் அளவுகளில் ஏற்படும் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியினை நிர்ணயிக்கும் பிரதான மூலமாக வலியுறுத்தப்பட்டன. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபத்தோரம் நூற்றாண்டிலும் இவ்வாறான பௌதிக வள இருப்பு என்ற கருத்து மாற்றம் பெற்று அறிவு மற்றும் அறிவு இருப்பு (Knowledge Stock) என்பது பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் உடையவையாக மாறிவிட்டன. அறிவு (Knowledge) புதிய புனைதலுக்கான உள்ளார்ந்த ஆற்றல் (Innovative Potentials) என்பன போட்டித்தன்மைக்கான பிரதான வளமாக (Key resources) அண்மைக்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதன் கருத்து யாதெனில் கண்ணுக்குப் புலப்படாத இவ்வாறான சொத்துக்களின் (Intangible Assets) வினைத் திறனான பயன்பாட்டிலேயே பொருளாதார வெற்றி என்பது தங்கியுள்ளது. இன்று அறிவு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பன பிரதான வளங்களாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், மரபு ரீதியான வளங்களாக நிலம், உழைப்பு, மூலதனம், போன்றவற்றின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. ஏதோ ஒரு வகையில் அறிவு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பன இக்காரணிகளுடன் இணைந்தேயுள்ளன என்பதை நாம் கருத்தில் கொள்ள

வேண்டும். உதாரணமாக தொழில்நுட்பம் என்பது தனிக்காரணியாக சுட்டிக்காட்டுகின்ற போதும் அது ஊழியத்துடன் அல்லது மூலதனத்துடனோ இணைந்தேயுள்ளது.

**02. அறிவுசார் பொருளாதாரம்: வரைவிலக்கணம்** (Definition of Knowledge Economy)

அறிவு என்னும் எண்ணக்கருவை விளக்குவது கடினமானது, அறிவை விபரிப்பதும் புரிந்து கொள்வதும் அளவிடுவதும் விஞ்ஞான ரீதியாக நோக்குமிடத்து முழுமை பெறாத ஒரு பணியாகவேயமையும். தகவல் (Information) என்பது அறிவுசார் பொருளாதாரத்திற்கு அவசியமான கூறாகும். நவீன அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான பிரதான முன் நிபந்தனை குறைந்த செலவில் பெருமளவு தகவல்களை உருவாக்கி நிரற்படுத்தி களஞ்சியப்படுத்தும் ஆற்றலாகும். எனினும் தகவல்களை நிறுவனங்களின் செயலாற்றத்துக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைக்க தேவைப்படுவது அறிவாகும். அறிவை தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் போது அது குறைவடைவதில்லை, மாறாக கூர்மையடையும். பீற்றர் ட்ரக்கர் (Peter Drucker) அறிவு, பொருளாதாரம் என்பதனையும் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தினார். "அறிவு என்பது பொருள் பொதிந்தவளமாகும். மரபு ரீதியான உற்பத்திக்காரணிகள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. அறிவினைக் கொண்டு இவ் வளங்களை இலகுவாக இனம்கண்டு பெற்றுக் கொள்ளமுடியும்."

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் (OECD) படி, செல்வத்தை உருவாக்குவதில் அறிவின் உருவாக்கமும் அதன் பயன்பாடும் தலையாய இடத்தைப் பெறுகின்ற பொருளாதார முறை அறிவுசார் பொருளாதாரமாகும். உண்மையில் அறிவினால் உந்தப்படும் பொருளாதாரம் என்ற சிந்தனையாவது உயர் தொழில்நுட்ப கைத்தொழில் பற்றிய விபரணம் மட்டுமன்று எல்லாத் துறைகள், கம்பனிகள், சகல பிராந்தியங்கள் விவசாயம் தொடக்கம் மென்பொருள் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் வரையிலான சகல துறைகளையும் பொறுத்த வரையில் மிகச் சாதகமாக பயன்படுத்தக்கூடிய புதிய வளங்களை அறிவுசார் பொருளாதாரம் குறித்து நிற்கின்றது. அறிவைக் களஞ்சியப்படுத்தல், பகிர்ந்து கொள்ளல், ஆய்வு செய்தல் தொடர்பான ஆற்றல் அதற்கு புதிய தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் என்பன காரணமாக நிறுவனங்கள் அறிவைப்பயன்படுத்தி தமது போட்டித் திறனை மேம்படுத்திக் கொள்ள உதவுகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போல அறிவு என்பது மீள் புதுப்பிக்கக்கூடிய ஓர் வளமாகும். அறிவு இருப்பு என்பது அதனைப் பயன்படுத்துவதால் தேய்வடைவதில்லை. உண்மையில் மற்றவர்களுடன் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் போதே அது பொருளாதாரத்திற்கு அதிக பெறுமதியைத்தருகின்றது. வளர்ச்சியினைத் தூண்டுகின்றது. பலாபலன்கள் எல்லா மக்களுக்கும் பரவலாக்கப்படுகின்றது.

சந்தையிலுள்ள ஒரு நிறுவனம் தன்னிடமுள்ள அறிவையும் புத்தாக்க ஆற்றலையும் தமது போட்டி நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்பம் காட்டாது இருக்கலாம். அல்லது அறிவைப் பகிர்வதில் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். இவ்வாறான ஒரு நிலை அறிவுசார் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதல்ல இந்நிலையில் கொள்கை வகுப்போர் (Policy Makers) சொத்துரிமைகளை (Intellectual Property) உறுதிப்படுத்தி தனி நிறுவனங்கள் மேலும் மேலும் புதிய புனைதலுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இவ் ஏற்பாடுகள் எந்தளவுக்கு சிறப்பாக அமைகின்றதோ அந்த அளவுக்கு அறிவைப் பரப்பும் முயற்சி வெற்றியடையும்.

**03. அறிவுசார் பொருளாதாரத்தின் தூண்கள் (Four Pillrs)**

அறிவுசார் பொருளாதாரத்தின் நான்கு தூண்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1. பொருளாதாரத் தூண்டல்கள் மற்றும் நிறுவன ஆட்சிமுறை (The Economic incentive and institution regime)
2. கல்வியும் மனித மூலதனமும் (Education & Human Capital).
3. புத்தாக்கமுறை (Innovation System)
4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information & Communication Technology)

பொதுவாக நிறுவன ரீதியான தூண்டுதல்கள் மிக முக்கியமானதாகும். தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் பங்களிப்பு பொருளாதார வளர்ச்சியில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. குறிப்பாக பல்கலைக்கழகங்கள், நீதித்துறை, காவல் நிலையங்கள், ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள், அரச திணைக்களகங்கள் போன்றன அறிவுகள் உற்பத்திகளை உருவாக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் அளப்பெரிய பங்கை செய்துவருகின்றன. அமெரிக்காவில், ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெருமளவு செலவீடுகள் செய்யப்படுகின்றன. இதன் காரணமாக புதிய அறிவுத் திரட்சியின் மையங்களாக அவை காணப்படுகின்றன. அதாவது புதிய கருவிகள், கோட்பாடுகள், செய்முறைகள், புதிய பொருட்களின் அறிமுகம் என்பன இந்நாடுகளில் தான் அதிகம் இடம்பெறுகின்றன. இந்நாடுகளில் உயர் அளவினை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவீடு மட்டுமன்றி சுதந்திரமான தனித்துவமான சூழல் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு இடம் தருகின்றது. ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் அவ்வளவுக்கு வினைத்திறனாக காணப்படுவதில்லை. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்குக் குறை விருத்தி நாடுகள் மிகக் குறைந்த செலவீட்டினையே செய்து வருகின்றன. குறிப்பாக இலங்கையில் ஆராய்ச்சிக்கான செலவு குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், தனியார் துறையினர் ஆராய்ச்சி அபிவிருத்தி மீது செலவீடு செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனை மாற்றியமைப்பது என்பது மிகுந்த சவாலான விடயமாகும்.

அறிவை உருவாக்குதல் மற்றும் பரவலாக்கத்தின் ஆணிவேராக இருப்பது கல்வியும் மனித மூலதனமுமாகும். பொருளாதார வளர்ச்சியினை மேல் நோக்கி உந்தி தள்ளுவதில் கல்வியும் மனித மூலதனமும் பிரதான பங்காற்றுகின்றது. தென்கிழக்காசிய நாடுகளின் அனுபவங்கள் எமக்கு கல்வியினதும் பயிற்சியினதும் முக்கியத்துவத்தை விளக்கி நிற்கின்றது.

தென்கிழக்காசிய பொருளாதாரங்களான தென்கொரியா, தாய்வான், கொங் கொங் போன்ற நாடுகளின் அபரிதமான செங்குத்தான பொருளாதார வளர்ச்சிக்கு அங்கு விருத்தி செய்யப்பட்ட கல்வியும் பயிற்சியும் அதனூடாகக் கட்டியெழுப்பப்பட்ட மனித மூலதனமுமே காரணமாகும். குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலம் பெருமளவு தொழில்நுட்பங்களை உள்வாங்கிய துடன் அத்தொழில்நுட்பங்களை உள்நாட்டு ஊழியம் பயன்படுத்தக்கூடிய வகையில் மனித விருத்தி இந்நாடுகளில் காணப்பட்டது. உண்மையில் எந்த நாட்டினதும் ஊழியப்படையும் அறிவுத் திறன் படைத்தவர்களாக இருப்பதுடன் தொடர்ச்சியாக அவ் அறிவுத் திறனை வளர்க்கவும் வளம் படுத்தக்கூடிய மனப்பாங்கைக் கொண்டிருத்தல் வேண்டும். இதுவே அறிவுசார் பொருளாதாரத்தின்

பிரதான அம்சமாகும். உலகமயமாதல் சூழலில் நல்ல கல்வியும் பயிற்சியும் பெற்றவர்களாலேயே வினைத்திறனாக உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், அறிவை தொடர்ச்சியாக உற்பத்தி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தமுடியும்.

இலங்கையினைப் பொறுத்தவரை உயர் அளவான கல்விக்குறிகாட்டிகளை அடைந்துள்ள போதும் இக்கல்வி முறை அறிவுசார் பொருளாதாரத்திற்கு உந்துசக்தியாக விளங்கவில்லை. கல்வியும் மனித மூலதனமுமே வெளிவாரி நன்மையைத் தரக்கூடிய பண்டம் என்றவகையில் ஒவ்வொரு நாடு வினைத்திறனான கல்வியை எல்லா மக்களும் பெற்றுக் கொள்வதை உறுதிசெய்தல் வேண்டும். அறிவுசார் பொருளாதாரத்தின் மிக முக்கியமான இன்னொரு தூண் தகவல் தொடர்பாடல் கட்டமைப்பாகும். இதன் பரப்பு சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் பரந்துபட்டு நிற்பதை இன்று நாம் அவதானிக்கமுடியும். பொதுவாக வினைத்திறனான தகவல்களை மற்றும் அறிவினை உலகளாவிய ரீதியில் வினைத்திறனாக பரவல் செய்யும், உற்பத்தி, நுகர்வு, பங்கீடு தொடர்பில் ஏற்படக் கூடிய செலவுகளை குறைக்கும். நேரம் மீதப்படுத்துமாதலால் உற்பத்திக் காரணிகளைச் சேமித்து உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தலாம். வறுமை வருமான சமமின்மையைக் குறைக்கும், பிணக்குகளை இலகுவாகத் தீர்க்க உதவும். எனவே இன்றைய பொருளாதாரத்தில் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இதனது பங்களிப்பு மிக இன்றியமையாததாகும். புத்தாக்க செயன்முறைக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான செலவீடு மிக முக்கியமானது. எனவே தான் அமெரிக்கா உட்பட்ட அபிவிருத்தியடைந்த நாடுகள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி மீது அதிக செலவீனத்தைச் செய்கின்றன. 58 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வின் பிரகாரம் ஆராய்ச்சிக்கான செலவு ஒரு சதவீதத்தால் அதிகரித்த போது மொத்த தேசிய வருமானம் 0.78 வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. புத்தாக்கமானது உற்பத்தி, செய்முறை, சந்தைப்படுத்தல். நிர்வாகம், என்ற பல்வேறு துறைகளிலும் ஏற்படமுடியும். புதிய பொருட்களைக் கண்டுபிடித்தல் இருக்கின்ற பொருடகள் சேவைகளில் செய்கின்ற மாற்றங்கள் உற்பத்திப் புத்தாக்கமாகும். செய்முறைப் புத்தாக்கம் என்பது (Process Innovation) உற்பத்தி முறை மற்றும் விநியோக முறைகளில் குறிப்பிடத்தக்கனவாக முன்னேற்றம் அல்லது உற்பத்தி மற்றும் விநியோக முறையுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி முறையில் புதிய நுட்பங்களின் அறிமுகம். புதிய கருவிகளின் அறிமுகம் என்பவற்றைக் குறிக்கும். புதிய சந்தைப்படுத்தல் முறையுடன் சம்பந்தப்பட்டதே சந்தைப்படுத்தல் புத்தாக்கமாகும். குறிப்பாக பொருட்களின் வடிவத்தில் மாற்றம் பொதி செய்வதில் மாற்றம், விலையிடல். நுட்பம் போன்றன சந்தைப்படுத்தல் புத்தாக்கமாகும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது ஒரு நாட்டின் கைத்தொழில், விவசாயம், சேவை என எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்தும் போது நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு வெளிப்படையாக வளர்ச்சி ஏற்படுவது கவனிக்கத்தக்கதாகும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஏழைகளுக்கு சார்பான வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியது என பலராலும் வலியுறுத்தப்படுகின்றது. நாம் கற்ற பாடப்புத்தகங்கள் வறுமையானது பல்பரிமாண நிகழ்வு (Multidimensional Phenomenon) எனக் குறிப்பிடுவதை இங்கு சுட்டிக் காட்ட முடியும். ஏழைகள் சார்பான வளர்ச்சி என்பது (Pro-Poor growth) வளர்ச்சியின் ஒரு வகை. இது ஏழை மக்களை பொருளாதார செயற்பாடுகளில் ஊக்கமாக பங்குபற்றச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தில் உயர்வினை ஏற்படுத்துவதைக் குறித்து நிற்கின்றது.

I.C.T ஆனது பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏழைகள் சார்பான வளர்ச்சிக்கு உதவுகின்றது.

1. குறிப்பிட்ட துறையில் பொருளாதாரத்தை வலுப்படுத்தலானது பொருளாதார வளர்ச்சிக்கு இடடுச் செல்லும்.

2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக வறியவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.

3. உற்பத்தித்துறைகளில் தொழில்நுட்பவியல் சார்ந்த புத்தாக்க நடைமுறைகளுக்கு உயர் அளவான தோற்றம் காணப்படுகின்றது.

4. பலதரப்பட்ட உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறனிற்கு I.C.T Value chain Mf பங்களிப்புச் செய்கின்றது.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பிரயோகம் தொடர்பில் வேறுபாடுகள் உள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரம் உள்ளீடுகளின் உற்பத்தியிலும் வாழ்வாதார விவசாயத்திலும் தங்கியுள்ளன. இத் துறைகளுக்கு சார்பு ரீதியாக I.C.T யினைப் பிரயோகிக்கும் போது அங்கு பெருமளவிலான முன்னேற்றம் காணப்படமாட்டாது. இருப்பினும் சில ஆசியநாடுகளின் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் I.C.T யின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் கூட வறியவர்களை விட ஏனையோர்களே அதிகம் நன்மையை அனுபவித்துள்ளனர். இங்கு குறிப்பிடப்படவேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில் ICT யின் உள்ளார்ந்த ஆற்றலினை மிக ஏழ்மையான நாடுகள் முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது என்பதாகும்.

**04. சிங்கப்பூர், பின்லாந்து மற்றும் சுவீடன்**

சிறந்த கல்வி மற்றும் ஆய்வு முறைக்கு மேலதிகமாக அறிவுசார் பொருளாதாரத்தின் வெற்றி யானது, வளர்ச்சி மற்றும் முயற்சியாண்மையை இலகுபடுத்தும் வியாபார சூழலை (Business Environment) வேண்டி நிற்கின்றது. போட்டி (Competition) சர்வதேச வர்த்தகத்துக்கான திறந்த தன்மை Openness to international trade) சிறந்த தொழிற்பாட்டு காரணிச்சந்தை (Well functioning factor market) பாதுகாப்பான சொத்துரிமை (Secure Property rights) போன்ற விடயங்கள் அறிவையும், திறன்களையும் வளர்ச்சியையும் போட்டித் தன்மையானதாக (Competitiveness) மாற்றுவதற்கு அவசியமாகும். வளர்ச்சி (Growth), புத்தாக்கம் (Innovation) தொழில்நுட்ப முன்னேற்றம் (Technical Progress) போன்றவற்றை ஊக்குவிப்பதற்கும் தேவையான மேற்கூறப்பட்ட சூழலை உருவாக்குவதற்கு அநேகமான நாடுகள் போராடுகின்றன. ஆயினும் சார்பு ரீதியாக சில நாடுகள் மாத்திரமே இவ்வகையான முயற்சிகளில் வெற்றியடைந்துள்ளன. சாத்தியமான சூழலை உருவாக்குவதற்குத் தேவையான அவசியமான சீர்திருத்தங்கள் உருவாக்குவதில் அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தலாம். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக பின்லாந்து, சிங்கப்பூர், சுவீடன் போன்ற நாடுகள் சார்பு ரீதியாக கொள்கை சீர்திருத்தங்களைச் செய்வதில் வெற்றியடைந்துள்ளன. மேற்கூறிய மூன்று நாடுகளும் 1990 களில் இயங்கியல் பொருளாதாரமாக (Dynamic Economy) வெற்றி நடை போட்டன. பின்லாந்து, சுவிடன் மற்றும் சிங்கப்பூர் வேறுபட்ட பொருளாதார விடயங்கள் தொடர்பில் வேறுபட்டு செல்கின்றன. பின்லாந்தும் (Finland) சுவீடனும் கைத்தொழில் மயமாக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் நீண்ட

வரலாற்றைக் கொண்டிருக்க, சிங்கப்பூர் சார்புரீதியாக கைத்தொழிலுக்கு புதியதாகவும் காலம் பிந்திய கைத்தொழில் நாடாகவும் காணப்படுகின்றது. பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் தமது ஆரம்ப பொருளாதார அபிவிருத்தியில் Primary மற்றும் Manufacturing உற்பத்தியில் தங்கியிருக்க, சிங்கப்பூர் பொருளாதார அபிவிருத்தியானது எப்பொழுதும் நேரடியாக தென்கிழக்காசியாவின் வரத்தக மையம் (Trade Hub) என்றவகையில் முக்கிய பங்கு வகித்தன. உலகம் பூராகவும் அதிகளவான முதலீடுகளைச் செய்திருக்கின்ற பல்தேசிய கம்பனிகளின் (MNCs) வீடாக (Home) பின்லாந்து மற்றும் சுவீடன் காணப்பட்டன. மாறாக சிங்கப்பூர் உள்நாட்டுக்கு சொந்தமான சிறிய கைத்தொழில்களை கொண்டதாகவும் பெருமளவான வெளிநாட்டு பல்தேசிய நிறுவனங்களின் முதலீட்டு உள்வரவில் தங்கியும் இருக்கின்றது. கீழ்வரும் அட்டவணையானது நாடுகளின் வரிசையினைக் காட்டுகின்றது.

| Wold Competitivences Ranking | |
|---|---|
| நாடுகள் | வரிசை |
| USA | 1 |
| Singapore | 2 |
| Findland | 3 |
| Luxembours | 4 |
| Netherlands | 5 |
| Hong Kong | 6 |
| Ireland | 7 |
| Sweden | 8 |
| Canada | 9 |
| Switzerland | 10 |

சுவீடன், சிங்கப்பூர் , பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் அளவில் மிகச்சிறியவை. இம் மூன்று நாடுகளும் முதல் பத்து வரிசைப்படுத்தலுக்குள் காணப்படுகின்றன. சிங்கப்பூரானது அமெரிக்காவிற்கு அடுத்ததாக 2ஆம் இடத்தில் போட்டித்தன்மைப் பொருளாதாரமாகக் காணப் படுகின்றது. பின்லாந்து மூன்றாம் இடத்திலும் சுவீடன் 8ஆம் இடத்திலும் காணப்படுகின்றது. மூன்று நாடுகளினதும் போட்டித்தன்மை என்பது உறுதியான தொழில்நுட்ப தகுதியினால் உருவாக்கப்பட்டதாகவும் தொழில்நுட்ப சுட்டெண் பிரகாரம் பின்லாந்து மிக மிக தொழில்நுட்ப ரீதியாக உலகில் முன்னேற்றமடைந்த நாடாகவுள்ளது. இந்தவகையில் சுவீடன் மூன்றாம் இடத்திலும் சிங்கப்பூர் பத்தாம் இடத்திலும் காணப்படுகின்றன.

**5. முடிவுரை**

இக்கட்டுரையானது பொருளாதாரங்களின் தன்மை அறிவுசார் பொருளாதாரங்களாக உருமாற்றம் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. குறிப்பாக சிறிய நாடுகளான

சிங்கப்பூர், பின்லாந்து மற்றும் சுவீடன் துரிதமான அறிவுசார் பொருளாதாரங்களாக உருப்பெற்று உயர் வளர்ச்சியினையும் மேம்பாட்டையும் அனுபவித்து வருகின்றன. தகுந்த பொருளாதார அரசியல் சூழல் அந்நாடுகளின் அறிவுசார் பொருளாதார விருத்திக்கு தூண்டுதலாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக குறை விருத்தி நிலையில் உள்ள பொருளாதாரங்கள் தமது மூன்றாம் நிலைக்கல்வி மீது அதிக பார்வை செலுத்த வேண்டும். உயர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை சாதாரண பாமர மக்களுக்கு எடுத்துச் செல்லும் பொறிமுறையினை முறையாகச் செய்தல் வேண்டும். எனினும் அரசியல் சீர்திருத்தங்கள் , உசிதமான அரசியல் சூழல் என்பன இந்நாடுகளில் மிக அவசியமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

## References


1. Aragonda Asian Regional Network Conference. Jointly sponsored by media Lab Asia, UN ICT Task Force, NASSCOm, TIE, CII, Mait and Ministry of Comunications and Information Technology, Goverment of India Thursday, April 25th 2002at Vigyan Bhavan, Maulana Azad Road, New Delhi.

2. Ashley., C,Roe D., and Goodwin, H.,Pro-Poor Tourism Report No.1 Pro-Poor Tourism Strategies: Making Toursm Work for the poor. A review of experience, overseas Development Institute, International Institute for Environment and Development, Centre for Responsible Tourism, April 2001, http://www.propoortourism.org.uk/ppt_report.pdf.

3. Batchelor S. J., and Webb, M. E-commerce Options for Third World Craft Producers

4. BARTEL, A. (1995), "Training, Wage Growth and Job Performance: Evidence from a Company Database", Journal of Labor Economics, Vol. 13.

5. BECK, N. (1992), Shifting Gears: Thriving in the New Economy, Harper Collins Publishers, Toronto.

6. CARTER, A.P. (1994), "Production Workers, Metainvestment and the Pace of Change", paper presented at the meetings of the International J.A. Schumpeter Society, Munster, August.

7. Bayes, A., von Braun, J., Akhter, R., Village Pay Phones and Poverty Reduction: Insights from a Grameen Bank, Initiative in Bangladesh, ZEF — Discussion Papers On Development Policy No. 8, Centre for Development Research, Bonn, June 1999.

8. Bedi. AS., The Role of Information and Communication Technologies in Economic Development, ZEF Discussion Papers on Development Policy, Bonn, May 1999.

9. Cooper, RB. and Zmud RW., Information Technology Implementation Research: A Technological Diffusion Approach, Management Science Vol. 36, No. 2, pp 123-139 1990.

10. DAVID, P. and D. FORAY (1995), "Accessing and Expanding the Sc ience and Technology Knowledge Base", STI Review, No. 16, OECD, Paris.

11. DeBRESSON, C. (1989), "Breeding Innovation Clusters: A Source of Dynamic Development", World Development, Vol. 17, No. 1.

12. Drucker. P (1993) Port — capitalist society oxford butter world Heinemann

13. MACHLUP, F. (1962), The Production and Distribution of Knowledge in the United States, Princeton University Press, Princeton, NJ.

14. MANKIW, G., D. ROMER and D. WEIL (1992), "A Contribution to the Structure of EconomicGrowth", Quarterly Journal of Economics, Vol. 106.

15. Magnus Blomstrom, Ari Kokko and Fredricic (2002), Growth and innovation policies for a knowledge Economy experiences from Finland, Sweden and Singapore, working paper 156

16. Rome, Paul M (1986), Increasing return and long run growth juried a political economy Vol. 94,155, PP 1002-1037

17. Word Development Report 1995-2012





# முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பண்பாட்டுக் காரணிகளின் தாக்கம் - இலங்கையின் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட முன் பள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு


நிசாந்தினி நித்திலவர்ணன்,
ஆசிரியர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை,
பருத்தித்துறை, இலங்கை
ஆனந்தமயில் நித்திலவர்ணன், சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியியல்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை
(Email: anithlavarnan@gmail.com )


## 01. ஆய்வுப்பின்னணி

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப்பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்குக் கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டுக் கையளிப்புக்குப் பொருத்தமான பருவமாகும். முறையான பாடசாலைக்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக பிள்ளை பெற்றுக்கொள்ளும் கல்வியாக முன்பள்ளிக்கல்வி (Pre School Education) அல்லது ஆரம்பப்பிள்ளைக்கல்வி (Early Childhood Education) விளங்குகின்றது. தற்காலத்தில் 3 வயது தொடக்கம் 5 வயது வரையிலான காலப்பகுதியில் சிறார்கள் முன்பள்ளிகளில் கற்கிறார்கள். இக்காலப்பகுதி மனித விருத்திப்பருவங்களில் ஒன்றான பிள்ளைபப்பருவத்தின் ஆரம்ப காலப்பகுதியில் வருவதனால், முன்பள்ளிச்சிறார்களிடம் உளவிருத்தியும், மூளைவிருத்தியும் அதிகளவில் ஏற்படுகின்றது. எனவே இப்பருவம் கற்ற லுக்கும், நேரான நடத்தை மாற்றத்துக்கும் சிறப்பான பருவமாகும். முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச்செலுத்துகின்றன. அக்காரணிகளில் பண்பாட்டுக்காரணிகள் முக்கியத்துவம்வாய்ந்தவை.

## 02. ஆய்வுப்பிரச்சினை

பண்பாடானது, பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டுவரும் ஒன்றாக காணப்படுகின்றது. இருந்தபோதிலும் உலகமயமாக்கலின் செல்வாக்கினால் பல சுதேசியப்பண்பாடுகள் தமது சுயத்தினை இழக்கும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன.

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், அதன் விளைவாக ஏற்பட்ட இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, வெளிநாடுகளுக்கு புலம்பெயர்தல் கலாசார சீர்கேடுகள் மற்றும் அந்நிய நாகரிகமோகம் என்பவற்றினால் தமிழர் பண்பாடும் ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது. பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது.

**"ஓர் இனத்தின் இனத்துவஅடையாளங்களாக அந்தஇனத்தின் பண்பாடும், கலாசாரப் பாரம்பரியங்களுமே காணப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பிலேயே அவ்வினத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தனித்துவம் என்ற போர்வையில் ஒதுங்கிப புறநடையாகச் செல்லாமலும், பன்மைத்துவம் என்றவகையில் கரைந்து காணாமல்போகாமலும், ஒவ்வொரு இனமும் தமது கலாசாரத்தைப்பாதுகாத்து வாழவேண்டும்."**

என பருத்தித்துறைப்பள்ளிவாசல் பிரதமஇமாம் அஜ்மல்.ஏ.காதர் அவர்கள் குறிப்பிட்டிருக் கின்றார். மேலும் இலங்கை அரசதகவல்திணைக்களப்பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்தின அத்துக்கல அவர்கள் கலாச்சாரத்தைப்பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடும்போது,

**"எந்தவொரு கலாசாரமும் மற்றுமொரு கலாசாரத்தை மிஞ்சிவிடமுடியாது. ஓவ்வொரு கலாசாரத்திலும் உன்னதநிலையாக மற்றைய கலாசாரத்தை மதிப்பதே எனக் கூறப்படு கின்றது."** எனவும்

**"யாழ்பாணத்திற்கே உரிய பல கலாசார முக்கியத்துவங்கள் காணப்படுகின்றன. முன்னேற்ற மடைந்த அதேவேளை பண்டைய கலாசாரத்தை உடையவர்களே யாழ்ப்பாண மக்கள்"** எனவும் குறிப்பிடுகின்றார்.

ஆனால் இன்றுநாம் எமது "கலாசாரப்பாதுகாப்பு" தொடர்பாகக் கவலை கொண்டிருக்கின்றோம். பண்பாட்டு அடையாளங்களான தாய்மொழி, வாழ்க்கைமுறை, பாரம்பரியகலைகள் உணவுமுறை மற்றும் ஆடைஅணிகலன்கள் என்பன சிதைவடைய ஆரம்பித்துள்ளன. இதற்கான காரணங்களாக உலக மயமாக்கல், மேலைத் தேயமோகம் மற்றும் உள்நாட்டில் காண்பிக்கப்படும் இன ரீதியான பாகுபாடு என்பன காணப்படுகின்றன.

புலம்பெயர்ந்து ஐரோப்பியநாடுகளில் வாழும் எமது உறவினர்களின் இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் பலர் தமிழ்மொழியை எழுதவாசிக்கத்தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

புலம்பெயர் உறவுகள் எங்களது வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதவர்கள். எங்கள் பல குடும்பங்களின் பொருளாதார மூலங்கள். அவர்கள் தமது திருமண பந்தங்களுக்கான மணமகள் மற்றும் மணமகன்களை இங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இனி ஒவ்வோராண்டும் கோடை விடுமுறைக்கு அவர்கள் இங்குதான் வருவார்கள். ஏனெனில் அவர்களது வேரும், வேரடிமண்ணும் இங்குதானுள்ளது. அவர்கள் சிலரின் நடவடிக்கைகள் எமது பண்பாட்டைச்சிதைப்பதாக உள்ளன. அவர்களின் இரண்டாம் தலைமுறைக்கான பண்பாட்டுக்கையளிப்பு மற்றும் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும்.

எமது தாய்மொழியான தமிழ்மொழி பல்வேறுவழிகளிலும் அழிவுக்குட்பட்டுவருகின்றது. அதனை அழிவிலிருந்து பாதுகாக்கவேண்டும். எமது கலாசார உடைகளை நாம் அணியவேண்டும். எமக்கே தனித்துவமான உணவுகளைத் தயாரித்து உண்ணவேண்டும். பாரம்பரிய கலைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு பாடசாலைகளிலிருந்தே ஊட்டப்பட

வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தமது தார்மீகக்கடமையாக இதனை ஏற்கவேண்டும். இது தொடர்பான சமூக விழிப்புணர்வு ஊட்டப்படவேண்டும். இதுவும் நிலை பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் ஒரு அங்கமாகும்.

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப்பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்குக் கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டுக்கையளிப்புக்குப் பொருத்தமான பருவமாகும்.

## 03. ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக்கொண்டது,

1) முன்பள்ளிச் சிறார்களுக்கு பண்பாடு எவ்வாறு கையளிக்கப்படுகிறது என்பதை இனங்காணல்.

2) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தையில் பண்பாட்டுத் தாக்கத்தை அறிந்து கொள்ளல்

3) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைகளில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தி பண்பாட்டை சிறந்த முறையில் கையளிப்பதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

## 04. ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு, அளவை நிலை (Survey Method) ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. அளவறிரீதியான (Quantitative) மற்றும் பண்பறிரீதியான (Qualitative) முறையியல்கள் இரண்டும் இணைந்த கலப்புமுறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டது. முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### 4.1 குடித்தொகையும் மாதிரியும்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் 1672 மாணவர்களே இங்கு ஆய்வுக் குடித்தொகை ஆகும். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவையாளர் பிரிவில் இயங்குகின்ற 69 முன்பள்ளிகளில் இம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 14 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு மாதிரி எடுத்தல், நுட்பமாக நோக்கு மாதிரி எடுத்தல் பயன்படுத்தப்பட்டது. அதாவது இப்பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் முன்பள்ளிகளில் வேறுபட்ட சமூகப் பின்னணியைக் கொண்ட முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மூன்று உள்ளூராட்சி சபைகள் அமைந்துள்ளன. இவ் உள்ளுராட்சி சபைகளுள் உள்ளடங்குகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கையும் தெரிவு செய்த முன்பள்ளிகளின் எண்ணிக்கையும், மேற்படி முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் விபரம் அட்டவணை – 2 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை – 1: வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் விபரம்

| உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | முன்பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | தெரிவு செய்த முன்பள்ளிகளின் எண்ணிக்கை | கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பருத்தித்துறை பிரதேச சபை | 43 | 1025 | 9 | 379 |
| பருத்தித்துறை நகர சபை | 15 | 418 | 3 | 192 |
| வல்வெட்டித்துறை | 11 | 228 | 2 | 103 |

(மூலம்: வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

**அட்டவணை – 2: தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளின் விபரம்**

| | முன்பள்ளியின் பெயர் | விலாசம் | பதிவிலக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை | | ஆசிரியர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | |
| பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 9 முன்பள்ளிகள் | மக்கள் படிப்பகம் | ஆலடி, பொலிகண்டி கிழக்கு | NP/14/41(11) S/0276 | 41 | 19 | 3 |
| | இன்பருட்டி | இன்பருட்டி, பருத்தித்துறை | NP/14/41(11) S/0242 | 41 | 26 | 3 |
| | சர்வோதயம் | தம்பசிட்டி | NP/14/41(11) S/0269 | 12 | 5 | 2 |
| | மாதிரி | கூவில், புலோலி மேற்கு | NP/14/41(11) S/0271 | 13 | 12 | 2 |
| | வல்லியானந்தா | துன்னாலை வடக்கு, கரவெட்டி | NP/14/41(11) S/0253 | 6 | 12 | 2 |
| | திக்கம் | திக்கம், அல்வாய் | NP/14/41(11) S/0277 | 16 | 18 | 2 |
| | கலைமகள் | புனித நகர், கற்கோவளம் | NP/14/41(11) S/0228 | 26 | 14 | 2 |
| | பூமகள் | அல்வாய் மேற்கு, அல்வாய் | NP/14/41(11) S/0263 | 19 | 21 | 2 |
| | புனிதசவேரியார் | சக்கோட்டை, அல்வாய் | NP/14/41(S)00 | 35 | 39 | 3 |
| பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட 3 முன்பள்ளிகள் | சைவமன்றம் | அத்தியடி, புலோலி | NP/14/41 (S)/0053 | 17 | 18 | 2 |
| | சதாவதானி | கதிரவேற்பிள்ளைவீதி, பருத்தித்துறை | NP/14/41(S)00 | 19 | 21 | 3 |
| | ஞானசம்பந்தர் | கலாமன்ற வீதி, பருத்தித்துறை | NP/14/41(S) | 43 | 34 | 4 |
| வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட 2 முன்பள்ளிகள் | கணபதி | நெடியகாடு, வல்வெட்டித்துறை | NP/14/41(4) S/0056 | 48 | 45 | 3 |
| | செம்மீன் | ஊறணி, வல்வெட்டித்துறை | NP/14/41(4) S/0063 | 5 | 5 | 1 |

(மூலம்: வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

### 4.2 தரவு சேகரித்தல் கருவிகளும் தரவுசேகரித்தல் முறைகளும்

இங்கு தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, அவதானிப்புப் பட்டியல், நேர்காணல், ஆவணங்கள் என்பன தெரிவு செய்யப்பட்டன. அவதானிப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாணவர் நடத்தை தொடர்பில் ஆய்வாளரினால் குறித்த முன்பள்ளிகளில் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவு சேகரிக் கப்பட்டது. குறித்த முன்பள்ளி அமைந்துள்ள சமூகங்களில் அல்லது பிரதேசங்களில் நிகழும் விழாக்கள், சடங்குகள், நிகழ்ச்சிகள் என்பவற்றில் கலந்துகொண்டு நேரடியான அவ தானிப்பு மூலமும் கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த சமூகத்தில் வாழும் சமூகப் பெரியார்களுடனான கலந்துரையாடல். மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## 5. ஆய்வு முடிவுகள்

### 5.1 வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம்பரிய அம்சங்கள்

- வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம்பரியங்களாக, சமூகம், உணவு, உடை, விளையாட்டு, அணிகலன்கள், வழிபாட்டு முறைமை, சிறு தெய்வவழிபாடும் கலைகளும், கூத்துமரபு, நாட்டுப்பாடல்கள் மற்றும் சடங்குகள் என்பன காணப்படுகினற்றன.
- இப்பண்பாட்டுக்காரணிகளை முன்பள்ளிச் சிறார்களுக்கு கையளிக்கின்ற முகவர்களாக குடும்பம், முன்பள்ளி ஆசிரியர், சமூகம், சகபாடிகள், சமூக நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன காணப்படுகின்றன.

### 5.2 முன்பள்ளிகளில் சிறார்களின் மொழிப்பாவனை

முன்பள்ளிச்சிறார்கள் தமது உறவினர்களை, நாகரிகம் கலவாத சரியான முறைப்பெயர் சொல்லி அழைக்கின்றார்கள். அத்துடன் வயதுக்கு மூத்தவர் களை மரியாதையுடன் அழைக்கின்றனர். முன்பள்ளியில் சலங்கழித்தல், மலங்கழித்தல் ஆகிய செயல்களைக் குறிப்பதற்கு இடக்கரடக்கல் சொற்பதங்களைப்பயன்படுத்துகின்றார்கள்.

### 5.3 முன்பள்ளிச்சிறார்களின் உணவுப்பழக்கவழக்கங்கள்

வடமராட்சிப்பிரதேசத்துக்கு தனித்துவமான உணவுப்பழக்கங்கள் முன்பள்ளிச் சிறார் களிடமும் காணப்படுகின்றன. தலைக்கு நல்லெண்ணை, கிரந்தி எண்ணை, மற்றும் தேங்காய் எண்ணை ஆகியவற்றை வைத்துக்கொண்டு முன்பள்ளிக்கு வருகின்றார்கள். முன்பள்ளியில் உணவு உட்கொள்ளும் போது, அனைத்து மாணவர்களும் சேர்ந்திருந்து உணவுண்பதுடன், உணவைப்பகிர்ந்தும் உண்கின்றனர்.

வடமராட்சிப்பண்பாட்டை பிரதிபலிக்கும் உணவுவகைகளான 'பருத்தித்துறைவடை', 'எள்ளுப் புண்ணாக்கு', 'பல்லுக்கொழுக்கட்டை', மற்றும் 'பிடிக்கொழுக்கட்டை' ஆகிய உணவுகள் பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றை உண்டும் இருக்கின்றனர். பனை உணவுகளான புளுக்கொடியல், ஒடியல்கூழ், பனங்கட்டி, பனாட்டு, பனங்கிழங்கு, மற்றும் பனங்காய்ப்பணியாரம் என்பவற்றைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன், பெரும்பாலான மாணவர்கள் 'கருப்பனீர்' பற்றி தெரிந்து வைத்திருக்கவில்லை.

### 5.4 முன்பள்ளிப்பிள்ளைகளின் உடையும் அணிகலன்களும்

பெரும்பாலான முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணியும் அதேவேளை ஒரு சில முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணிவதில்லை.முன்பள்ளிகளில் நடைபெறும் சமய விழாக்கள் மற்றும் கலைவிழாக்களுக்கு, தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் உடைகளான பாவாடை சட்டை, வேட்டி சால்வை என்பவை அணிதல் வழக்கமாகவுள்ளது.

விளையாட்டுப்போட்டியில் நடாத்தப்படும் வினோத உடைப்போட்டியில் தத்தம் சமூகம் சார்ந்த பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்கள். முன்பள்ளிச்சிறார்கள் முன்பள்ளிக்கு பல்வேறுபட்ட அணிகலன்களையும் அணிந்து வருகின்றார்கள். பெண்பிள்ளைகள் அனைவரும், பிராமண ஆண்பிள்ளைகளும் தோடு அணிகின்றனர்.சில பெண்பிள்ளைகள் காற்சங்கிலி அணிகின்றனர். பொதுவாக பெண்பிள்ளைகள் தலை அலங்காரத் திற்காக 'கிளிப்', 'றிபன்', 'பூல்பாண்ட்' மற்றும் 'அலிஸ்பாண்ட்' போன்ற நாகரிக அணிகலன்களை அணிந்திருந்தனர்.

### 5.5 முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான பின்னணித்தகவல்கள்

க.பொ.த(சா/த) கல்வித்தகைமை மட்டும் கொண்டவர்கள் 69.69% ஆகும். க.பொ.த(உ/த) கல்வித்தகைமை கொண்டவர்கள் 21.21% ஆகும். கலைப்பட்டதாரிகள் 3% ஆகவும் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் 3% ஆகவும் உள்ளனர்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடாத்தப்படும் முன்பள்ளிச் சான்றிதழ் பயிற்சி நெறியை 03 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவ கத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளிச்சான்றிதழ் கற்கைநெறியை 02 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். இது தவிர பெரும்பாலான ஆசிரியர்கள் UNICEF, JRS, Caritas-Hudec, போரூட் மற்றும் வலயக் கல்வித்திணைக்களம் ஆகிய நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக்கு சேலை, பாவாடை-சட்டை, பஞ்சாபி போன்ற உடைகளை அணிகின்றார்கள். இதேபோல் அணிகலன்களாக காப்பு, சங்கிலி, தாலிக்கொடி ஆகியவற்றை அணிகின்றனர்.

### 5.6 முன்பள்ளிக்கலைத்திட்டத்திலுள்ள பண்பாட்டு அம்சங்கள்

#### 1. பாடல்கள்

முன்பள்ளிகளில் நாட்டார் பாடல்களான கும்மிப்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், மீனவப்பாடல்கள், அரிவிவெட்டுப் பாடல்கள் போன்ற பாடல்கள் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. பொம்மை, நிலா, அணில், கப்பல், பறவைகள், பழங்கள், மிருகங்கள், மழை, பூக்கள் என்பவற்றை சித்தரிக்கும் சிறுவர் பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன. நாளாந்த செயற்பாடுகளை விபரிக்கும் ஒழுக்கப்பாடல்களுடன், ஆங்கிலப் பாடல்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

#### 2. கதைகள்

நீதிக்கதைகள், புராண இதிகாசக்கதைகள், சமயம் சார்ந்த கதைகள், மற்றும் மிருகங்கள் பற்றிய கதைகள் என்பன சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

## 3. சித்திரமும் ஆக்கச்செயற்பாடுகளும்



மண்ணினால் உருவங்கள் செய்தல், களியினால்(Clay) உருவங்கள் செய்தல், சித்திரங்கள் வரைதல், பூக்களினால் கோலங்கள் அமைத்தல் (புகைப்படம் - 1) ஆகிய ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

புகைப்படம் - 1: சைவமன்ற முன்பள்ளிச்சிறார்கள் நவராத்திரி விழாவின்போது கோலப்போட்டியில் ஈடுபடுதல்

## 4. நடனங்கள்

காவடி, கோலாட்டம், கும்மி, மீனவ நடனம், கரகம், அபிநயங்கள், ஆடலுடன் பாடல், தீப நடனம் ஆகிய நடனங்கள் முன்பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. ( புகைப்படம் - 2)



புகைப்படம் - 2: கலைமகள் முன்பள்ளியில், காவடியாடும் முன்பள்ளிச்சிறுவன்

## 1.1 முன்பள்ளிச்சூழலும் பண்பாட்டு அம்சங்களும்

### 1.1.1 முன்பள்ளி அமைந்துள்ள வளாகம்



கணபதி முன்பள்ளி, மாதிரி முன்பள்ளி, இன்பருட்டி முன்பள்ளி, சைவமன்றம், கலாமன்றம் ஆகிய முன்பள்ளிகள் ஆலய வளாகங்களினுள்ளேயே அமைந்துள்ளன. (புகைப்படம்- 3), சக்கோட்டை சவேரியார் முன்பள்ளியானது, சக்கோட்டை சவேரியார் தேவாலயத்துக்கு அருகில் அமைந் துள்ளது.

புகைப்படம் - 3: 'மாதிரி முன்பள்ளி' ஆலய வளாகத்தினுள் அமைந்திருக்கும் தோற்றம்

## 1.2 முன்பள்ளியினுள் அமைந்துள்ள பூஜை அறை


சர்வோதயம் முன்பள்ளி, திக்கம் முன்பள்ளி ஆகியவற்றில் தனியான பூஜை அறைகள் காணப்படுகின்றன.



புகைப்படம் - 4: திக்கம் முன்பள்ளியில் காணப்படும் பூஜை அறை

## 1.3 விழாக்களின்போது மாவிலை தோரணங்கட்டுதல் மற்றும் நிறைகுடம் வைத்தல் பண்பாடு

முன்பள்ளிகளில் நடைபெறும் விளையாட்டுப்போட்டி, கால்கோல் விழா, நவராத்திரி விழா, முத்தமிழ்விழா, மற்றும் தைப் பொங்கல்விழா ஆகிய அனைத்து விழாக்களின்போதும் மாவிலை கட்டுதல், தோரணங்கட்டுதல், நிறைகுடம் வைத்தல் வழக்கம் காணப்படுகின்றது.




புகைப்படம் 6 : ஞானசம்மந்தர் முன்பள்ளியின் வாயிலில் மாவிலை கட்டப்பட்டுள்ளதையும், முகப்புச்சுவரல் திருக்குறள் எழுதப்பட்டுள்ளதையும் காணலாம்)

## 1.4 முன்பள்ளிகளின் சுவர்களில் காணப்படும் பண்பாட்டை எடுத்தியம்பும் ஓவியங்கள்



முன்பள்ளிகளின் உட்புறச்சுவர்களிலும், வெளிப் புறச்சுவர்களிலும் தமிழ், ஆங்கில அரிச்சு வடிகளும் பல் வேறுபட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. பழங்கள், விலங்குகள், பல்வேறு தொழில் புரிபவர்கள் மற்றும் பல்வேறு கலைகள் பற்றிய ஓவியங்கள் உள்ளன.

புகைப்படம் - 7 - : சைவமன்றம் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் பரதநாட்டியமாடும் நங்கையின் ஓவியம்




புகைப்படம் - 8: சைவமன்றம் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் முன்பள்ளிச்சிறாரின் நல்விழுமியத்தை எடுத்துக்காட்டும் ஓவியம்

## 1.5 முன்பள்ளிகளில் காணப்படும் சமூகப்பெரியார்களின் படங்களும், அறிவுறுத்தல்களும்



ஞானசம்மந்தர் முன்பள்ளியில் பாரதியார், விவேகானந்தர், இராமகிருஸ்ணபரமகம்சர், விபுலானந்தர், நேரு, மற்றும் காந்தியடிகள் ஆகிய சமூகப்பெரியார்களின் படங்கள் காணப்படுகின்றன. (புகைப்படம்-9) சதாவதானி முன்பள்ளி வளாகத்தில் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர் களின் சிலை காணப்படுகின்றது. (புகைப்படம் - 10)




புகைப்படம் - 9: ஞானசம்மந்தர் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் பாரதியாரின் படம்


புகைப்படம் - 10: சதாவதானி முன்பள்ளி வளாகத்தில் காணப்படும் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் சிலை

## 1.6 முன்பள்ளிகளில் காணப்படும் அறிவுறுத்தல்களில் வெளிப்படும் பண்பாட்டு அம்சங்கள்

சர்வோதயம் முன்பள்ளியில் பெற்றோருக்கான அறிவுறுத்தலில் பின்வரும் விடயங்கள் உள்ளடக் கப்பட்டுள்ளன. 'ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று, மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (பூசைப்பொருட்கள் கொண்டுவரவும், பெண் - பாவாடை சட்டை, ஆண் - வேட்டிசேட்) (புகைப்படம் - 11) சதாவதானி முன்பள்ளியிலும் விஜயதசமி கொண்டாட்டம் தொடர்பான அறிவுறுத்தல் காணப்பட்டது. (புகைப்படம் - 12)



புகைப்படம் - 11: சர்வோதயம் முன்பள்ளியில் காணப்படும் அறிவுறுத்தல்



புகைப்படம் - 12: சதாவதானி முன்பள்ளியில் காணப்படும் விஜயதசமி பற்றிய அறிவுறுத்தல்

## 1.7 ஆய்வு முடிவுகளின் சுருக்கம்

- முன்பள்ளிகள் அமைந்துள்ள கிராமங்கள் அவற்றிற்கென தனித்துவமான பண்பாடுகளைக் கொண்டுள்ளன.
- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் சமயங்கள் பெருமளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது சமயங்கள் மூலம் முன்பள்ளிச்சிறார்கள்,
- நல் விழுமியங்களைப்பெற்றுக்கொள்கிறார்கள்
- கலைகளைப்பற்றித்தெரிந்துகொள்கிறார்கள்
- முன்பள்ளி ஆசிரியர்களின் வயதும் அனுபவமும் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அனுபவம் மிக்க ஆசிரியர்களி னால் பண்பாட்டுக் காரணிகளினை எடுத்துக்காட்டும் விதமான செயற்பாடுகள் முன்பள்ளிகளில் நிகழ்வதனைக் காணலாம். நவராத்திரி காலங்களில் சிறார்களிடையே கோலப்போட்டி, மாலை கட்டற் போட்டிபோன்றன நடைபெறுகின்றன.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனத்தில் பல்வேறு வேறுபாடுகளும் வேதனக் குறைவும் அவையும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை போன்ற குறைபாடுகளினால் ஆசிரியர்கள் வேலையில் ஈடுபாடு இல்லாமல் இருக்கின்றனர்.
- முன்பள்ளி ஆசிரியர் கல்வி, பயிற்சிகளில் பல பிரச்சினைகள், குறைபாடுகள் காணப்படுகின்றன.

## 1.8 ஆய்வின் விதப்புரைகள்

- குடும்பமானது பாரம்பரியமான அம்சங்களான விளையாட்டுக்கள், உடைகள், அணிகலன்கள், உணவுகள், பண்டிகை நடைமுறைகள், விரதங்கள், சடங்குகள், விழுமியங்கள், புராண இதிகாசக்கதைகள் மரபு வழிக்கதைகள் போன்ற விடயங்களை அவைகளின் தனித்துவங்கள் சிதறாதவகையில் சிறார்களுக்கு வழங்கவேண்டும்.
- முன்பள்ளி ஆசிரியர்கள், தாம் பண்பாட்டம்சங்களை முறையாகக்கடைப்பிடிப்பதுடன், சிறார்களுக்கு அவற்றை முறையாகக்கையளிக்க வேண்டும்.
- பாலர் நிறுவனங்களின் பொருத்தப்பாடு, ஒழுங்கமைப்பு, ஆசிரியர் கல் வித்தரம், அவர்களுக்கான கல்வி, பயிற்சி, வினைத்திறன் மிக்கதான கலைத்திட்ட ஆக்கம், சம்பளம், சலுகைகள், வளப்பகிர்வு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், பொருத் தமான உட்கட்டமைப்பு இவற்றோடு இணைந்ததான முழுமையான செயற்பாடுகள் என யாவற்றையும் முடிந்தளவில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதிலும் வழிகாட்டுவதிலும் அரசாங்கம் கரிசனையுடன் பொறுப்பேற்றுச் செயற்படவேண்டும்.
- சிறார்கள் பண்பாட்டு விழிப்புடையவர்களாக வளர்வதை ஊக்குவிக்கு முகமாக கல்வியிய லாளர்கள் செயற்படவேண்டும்.
- முன்பள்ளிகள் பெரும்பாலும் சமூக நிறுவனங்களாகிய சனசமூக நிலையங்கள், ஆலய நிர்வாகங்கள் ஆகியவற்றின் கீழேயே இயங்குகின்றன. பண்டிகைகளை முன்பள்ளிகளில் கொண்டாடுதல், கலாசார உணர்திறன் மிக்க நிகழ்வுகளை நடாத்து தல் மூலம் பண்பாட்டு அம்சங்களை சிறார்களுக்கு கையளிக்கலாம்.

- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் ஊடகங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. காலத்தின் தேவைக்கு ஏற்ப சிறார்களின் பண்பாட்டினை வளர்த்துச் செல்வதற்கான அறிவுசார்ந்த, சமயம் சார்ந்த, பண்பாடு சார்ந்த பல்வேறு விடயங்கனூடாக ஊடகங்களை சிறார்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1) பக்தவத்சலபாரதி (1999) பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2) மனோன்மணி,ச.(2003) தமிழர் ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல், கிறிப்ஸ் பதிப்பகம், கொழும்பு.

3) முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கைநூல் -2002, ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு, யுனிசெவ், திருகோணமலை.

4) சிவத்தம்பி, கா.(2005) வடமராட்சி தெற்கு மேற்கு வரலாற்றுக்குறிப்புக்கள் சில...., புதிய கட்டடத்திறப்புவிழா சிறப்புமலர், பிரதேசசெயலகம், வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.

5) சிவலிங்கராஜா, எஸ்.(1984) வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சி கல்வி வட்டம், பருத்தித்துறை.

6) இராசநாயகம், ஜெ.(2009) யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகளின் தற்போதய நிலை, அகவிழி, ரொறிங்டன் அவெனியு, கொழும்பு-7.

7) அந்தோனிமுத்து, சீ.(2008) வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் றோமன் கத்தோலிக்க திருமறை, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

8) இரகுவரன், பா. (2008) வடமராடசியில் சிறுதெய்வவழிபாடு, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.



# இளையோர் இடர்நடத்தைகளும் நேர்நிலை மேம்பாடும்:

### பாடசாலை மட்டத்தில் மேம்பாட்டுச் சொத்துக்களைச் சாத்தியம் ஆக்கும் வழிமுறைகள் குறித்த கருத்தாடலுக்கான திறவுகோல்

**இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**சமூகவியற்றுறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

இன்று பல தரப்பினராலும் மிகுந்த அக்கறையோடு பேசப்படுகின்ற விடயங்களில் ஒன்று இளையோரின் அமைதியின்மையும் அவர்களது இடர் நடத்தைகளும். இளையோரின் நடத்தைகள் சமுதாயத்தின் நலநிலைக்குச் சவாலாக அமைந்திருப்பதுடன் சமூக நலனுக்கு எதிர்நிலையான விளைவுகளைத் தரும் வகையில் அமைந்துள்ளன. பொதுவாகவே இளைஞர்களின் குழு வன்முறைகள், குடும்பம் மற்றும் சமூகத்துடனான பிணைப்பறுப்பு (disengagement), பாலியல் ரீதியான விலகல்கள் மற்றும் நெறிபிறழ்வுகள், வேலையின்மை, ஆட்கடத்தல்கள் (trafficking), போதைப்பொருள் பாவனை முதலிய பல பிரச்சினைகள் முதன்மையளித்துக் கருத்தாடப்படுகின்ற எதிர்நிலைத் தாக்கம் தரும் விவகாரங்களாகியுள்ளன. இளையோர் வளர்ந்து வரும்போது கற்றல் திறனின்மை, எதிர்சமூக தொடர்புகள், தாழ் உந்தல் மற்றும் அடைவு, குடிப்பழக்கமும் போதைப் பொருள் பாவனையும் அல்லது புகைத்தல், குறையூட்டத்தினால் தூண்டப்படும் உளசமூக நெருக்கீடுகள், புறக்கணித்தல் தொடர்பான இடர்கள், துஷ்பிரயோகம், பொருளாதாரப் பிரச்சினைகள் முதலிய எதிர்விளைவுகளால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய எதிர்விளைவு தரும் கண்ணோட்டத்தில் இளையோரை பார்க்காது அவர்களிடத்திலுள்ள நேர்முகமான மனப்பாங்குகள், உள்ளார்ந்த ஆற்றல்கள் மற்றும் திறன்களை வளர்த்து சமூக வாழ்விற்கு பங்களிப்பவர்களாக ஆக்குதல்தான் நேர்நிலை இளையோர் மேம்பாடு என பொதுவாக விளக்கப்படுகின்றது. லேணர், பிஷர் மற்றும் வெயின்பேர்க்(2000) என்பவர்கள் 'இளையோர் இடர்நடத்தையில் சுயதிறனடைதலைப் பாதுகாத்தல் என்பது நேர்நிலையான இளையோர் மேம்பாட்டினை முன்னேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குச் சமமானவையல்ல" என்று கூறுகின்றனர். அதாவது, 'இளையோர் மத்தியிலான பிரச்சினைகளிலிருந்து பாதுகாத்தல் என்பதன் அர்த்தம் அவர்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சிவில் சமூகத்திற்கும் நன்னிலையில் பங்களிக்கக்கூடிய திறனுள்ள வர்களாக ஆக்கப்படுகின்றனர் என்பதல்ல" என்று லேணர் மற்றும் பென்சன் குறிப்பிடுவதாக டாமோன் வில்லியம் (2004)[2] எழுதுகின்றார். இவர்களின் கருத்துப்படி நேர்நிலை இளையோர் மேம்பாடானது இளையோரின் இடர்நடத்தைகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் என்ற ஒற்றைப்பரிமாண விளக்கத் தினைக் கொண்டதல்ல என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

நேர்நிலை இளையோர் மேம்பாடு என்பது இளையோரை சமூகத்தின் பிரச்சினைகளாகவன்றி வளங்களாகக் காண்கின்றது. இது இளையோரின் திறனின்மையை விடுத்து வெளிப்படுத்தவல்ல உள்ளமைந்த ஆற்றல்களை வலியுறுத்தும் கண்ணோட்டத்துடன் விளக்கப்படுகின்றது. மிகவும் பிரதிகூலமான பின்னணியிலிருந்து வரும் இளையோரிடத்திற்கூட அவர்களின் திறனின்மைகளைக் கருத்திலெடுக்காமல் உள்ளுறை ஆற்றல்களே கருத்திலெடுக்கப்படவேண்டும் என்பதை நேர்நிலை இளையோர் மேம்பாடு என்பது வலியுறுத்துகின்றது. இது இளையோரை ஒரு இசைவுக்குறையுள்ள (maladaptive) பிரிவினராக நடத்துவதை விடுத்து அவர்களை புரிந்துகொள்ளல், கல்விபுகட்டல் மற்றும் படைப்பாக்கத்திறன் மிக்க கருமங்களில் பிணைப்புக்கொள்ளவைத்தல் என்பவற்றை இலக்காக் கொண்டது. இந்த இலக்கினை அடைவதற்கு பீற்றர் பென்சன் என்பவரும் அவருடன் இணைந்த ஆய்வாளர்களும் பணிபுரிந்த நிறுவனத்தினூடாக (Search Institute in Minnesota) 'மேம்பாட்டுக்கான சொத்து" (developmental assets) அவசியமானது என்பதனை ஆய்வுகளின்மூலம் வலியுறுத்தினர். மேம்பாட்டுக்கான சொத்து அகநிலைச் சொத்துக்கள் (internal assets), புறநிலைச் சொத்துக்கள் (external assets) என இருவகைப்படுத்தப்பட்டன. நேர்நிலை இளையோர் மேம்பாட்டுக்கான புறநிலைச் சொத்துக்கள் என்பவை இளையோர் மேம்பாட்டில் சமுதாயம் கொண்ட செல்வாக்கினையே குறிக்கின்றது. சமுதாயத்தினுள் அடங்கியுள்ள குடும்பம், அயலவர்கள் மற்றும் பாடசாலை என்பன புறநிலைச் சொத்துக்களாக அமைந்து நேர்நிலை இளையோர் மேம்பாட்டினை ஏற்படுத்தும். அதாவது இளையோர் - பெற்றோர், இளையோர் - இளையோர், இளையோர் - ஆசிரியர்கள், இளையோர் - பாடசாலை வகுப்பறை ஆகிய இடைவினைகளின் வழியான அம்சங்கள் புறநிலைச் சொத்துக்களாகின்றன. இவை பெரும்பாலும் வெளித்தெரியும் இடைவினைகளாகின்றன.

அகநிலைச் சொத்து என்பது இளையோரின் நேர்முக ஆளுமைசார் பண்புகளாகின்றன. கற்றலிலான ஈடுபாடு, நேர்நிலை விழுமியங்கள், சமூகத்திறன்கள், நேர்முக அடையாளங்கள் முதலியன அகநிலைச் சொத்துக்களாகின்றன. இவை இளையோருக்கான நேர்முகமான பலத்தினைத் (positive strength) தருகின்றன. இதனால் இளையோர் தமது சுயமிழத்தல் அல்லது சமூக எதிர்நிலைப் போக்குகள் என்பவற்றிலிருந்து விடுபடுகின்றனர். அகநிலைச் சொத்துக்களின் விருத்திக்குறைவு இளையோரின் நேர்நிலைத் தொழிற்பாடுகளில் ஒரு வெறுவெளியை (vacuum of positive activity) ஏற்படுத்துகின்றது. இதுவே சமூக எதிர்த்தொழிற்பாட்டுக்குக் காரணமாகின்றது. இத்தகைய அகநிலைச் சொத்துக்களை மேம்படுத்துவதில் பண்பாட்டின் செல்வாக்கு மிகுதியானது. குறிப்பாக புலனாகாப் பண்பாடானது இளையோரின் அகநிலைச் சொத்துக்களின் விருத்தியில் பெரும்பங்காற்றுகின்றன.

ஒரு மனிதனின் வாழ்க்கைப் பருவங்களில் குழந்தை மற்றும் சிறுவர் பருவங்களில் குடும்பத்தின் செல்வாக்கு அதிகமாக காணப்பட்டாலும், கட்டிளமைப் பருவத்திற்கு வரும்போது அவன் மீதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் குடும்பத்தைக் கடந்து மேலும் விரிவுபெறுகின்றது. சமூக நிறுவனங்களான குடும்பம், கல்வி, சமயம், அரசு என்பவற்றின் செல்வாக்கு இளையோர் மீது பல்வேறு அடிப்படைகளில் ஏற்படுகின்றன. மேம்பாட்டுக்கான சொத்துக்களை(புறநிலைச் சொத்துக்கள் மற்றும் அகநிலைச் சொத்துக்கள்) விருத்திசெய்யத்தக்க ஒருங்கிணைந்த சூழல் கல்வி நிறுவனங்களான பாடசாலைகளில் உள்ளன. இதனால் இளையோரின் எதிர்நிலை தொழிற்பாடுகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் செயலாற்றல் திறன்வாய்ந்த நிறுவனமாக பாடசாலைகள் தொழிற்படவேண்டுமென்ற எதிர்பார்ப்புள்ளது.

கட்டிளமைப் பருவம் என்பது 15 முதல் 24 வரையான வயதுப் பிரிவினரைக் குறிப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரையறை கூறுகின்றது. ஆயினும், அந்த வரையறை சமூக-பண்பாட்டு விசேடத்துவங்கள் மற்றும் சமூக நிலைமைகளுக்கேற்ப வேறுபடுகின்றது. இலங்கையில் இளையோரை வரையறுக்கும் தேசிய இளைஞர் சேவை ஆணைக்குழுவானது(1998) 14 தொடக்கம் 29 வரையான

வயதுப்பிரிவினர் எனக்குறிப்பிடுகின்றது. இந்த வயதுப் பிரிவினரில் பெரும்பாலானவர்கள் இடை நிலை, உயர்தரம் மற்றும் முறைசார்-முறைசாரா உயர்கல்வி ஏற்பாடுகளினுள்ளே உள்ளமைந் துள்ளனர். குறித்த ஒரு பகுதியினர் வேலைதேடுபவர்களாகவும் இன்னொரு பகுதியினர் பெற்றார் மற்றும் பாதுகாவலரிடத்தில் தங்கிவாழ்பவர்களாகவும் உள்ளனர். தேசிய இளைஞர் சேவை ஆணைக் குழுவானது இவர்களை கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் மற்றும் வேலையற்றிருப்பவர்கள் என்று மூன்று வகையினராகக் குறிப்பிடுகின்றது. இலங்கை முழுவதும் இரண்டாம்நிலை மேல் வகுப்புக்களுக்கு(தரம் 10-11) அனுமதிக்கப்படும் 80.6% மாணவர்களில் கல்லூரி நிலைக்குச்(தரம் 12-13) சென்றடைபவர்களின் வீதம் 39.4% என மிகமோசமான வீழ்ச்சி ஏற்படுவதாக நிலைமாற்றத்துக்கான இளைஞர் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. பாட சாலைக் கல்வியினுள் இரண்டாம்நிலை மேல்வகுப்புக்களுக்கு உள்ளீர்க்கப்பட்டவர்களில் 41.2% இளைஞர்கள் முறைசார் கல்வியிலிருந்து வெளிவீசப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவர்களும் வேலை வாய்ப்பற்றுத் தங்கிவாழும் இளையோரில் கணிசமான தொகையினராகவுள்ளனர். இதனால் இளையோரின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்வதில் அவர்கள் வாழும் நிலைமை அதிகம் கவனிக்கப்படவேண்டியது. வேறொரு வகையில் சொல்வதானால் இளையோர் யாவரையும் ஒரு வகைமையினுள் உள்ளடக்கி அவர்களின் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முடியாது.

இளைஞர்கள் எந்த நிலைமையிலிருந்தாலும் அவர்களிடத்தில் பொதுவான இயல்புகள் சில இனங்காணப்படும். அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

- இவர்கள் புதிய விழுமியங்கள், புதிய சிந்தனைகள் மற்றும் புதிய வாழ்வுக்கான வழிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாதல் வேண்டும்.
- பழைய பரம்பரையினர் புதிய சிந்தனைகளை கொண்டிருப்பதில் சிக்கல்கள் இருப்பதால் இளையோரின் சிந்தனைகள் சமுதாயம் தன்னை மறுசீரமைக்க அவசியமானவை.
- இளையோர் எப்போதும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையும் உறுதிப்பாடும் உடையதான பார்வை உடையவராதல் வேண்டும்.
- சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் தங்களின் எண்ணங்களை - சிந்தனைகளை தகவமைக்க சீரமைக்க மற்றும் மாற்றக் கூடியவராதல்.
- இளையோர் தங்கள் பண்பாட்டை மறுசீரமைப்பவர்களாக வேண்டும்.
- இளையோர் பாரம்பரியமற்ற சிந்தனைகளை ஆத்மார்த்தமாயும் ஆர்வத்துடனும் ஏற்றுக் கொள்பவர்களாதல் வேண்டும்.
- புதியவற்றை முயலுவதற்கும் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வலுவை கொண்டவர்களாக இளையோர் உள்ளனர்.
- உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்களும் விளையாட்டாகச் சாதிக்கும் மனப்போக்கும் கொண்டவர்களாதல் வேண்டும்.
- இளையோரின் வலு, புத்திக்கூர்மை மற்றும் இளையோர் வளம் என்பவற்றை பூரணமாகவும் பொருத்தமாகவும் பயன்படுத்தி 'பயங்கரவாதத்தை" ஒழித்தல் போன்ற முக்கியமான பங்கை ஆற்றலாம்.
- இளையோர் மரபுவழியான வேலைவாய்ப்புக்களைவிட முயற்சியாண்மைகளில் ஈடுபடுபவர் களாக வேண்டப்படுகின்றனர்.
- உலகின் நாகரிகமானதும், கூட்டுறவானதும் மற்றும் சமாதானமானதுமான நிலையினால் இளையோரின் நம்பிக்கைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.
- இளையோர் பூரணமான துடிப்புள்ள எண்ணங்களைக் கொண்டிருப்பதால் அவற்றை பொருத்தமான ஊக்குவிப்பு மற்றும் போதுமான வழிகாட்டலால் மேம்படுத்தவேண்டும்.

இவை வெறுமனே இளையோர் தொடர்பான இயல்புகள் மாத்திரமன்றி அவர்கள் தொடர்பான சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களுமாக அமைகின்றன. இத்தகைய எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் இளையோர் தொழிற்படுகின்றனரா? என்பது எம்முன் விஸ்வரூபமாக எழும் வினா. இந்த வினாவிற்கு 'இல்லை" என்பதுதான் பொதுநிலைப் பதிலானாலும் அப்பதில் விஞ்ஞானபூர்வமானதா? தர்க்க ரீதியானதா? என்பது ஆராயப்பட வேண்டியதே.[3] இந்தக் கட்டுரை பாடசாலை ஏற்பாட்டினுள் உள்ளடங்கியுள்ள நிலைமையிலுள்ள இளையோரைக் கருத்திலெடுப்பதால் இளையோர் பற்றிய சமூகத்தின் மேற்கண்ட எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையிலான இளையோருக்கான மேம்பாடுசார் அகநிலை மற்றும் புறநிலைச் சொத்துக்களை எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றித் தெளிவுபடுத்த முனைகின்றது.

மாணவர்களுக்கான வாழ்க்கை வெளிப்பேறுகள் மற்றும் கல்வியிலான முன்னேற்றம் என்பவற்றைக் காட்டுகின்ற ஒரு தொகுதி சூழல்சார் மற்றும் ஆளகப்பலங்கள் (Intrapersonal strengths) மேம்பாட்டுச் சொத்துகள் எனப்படுகின்றன.[4] இதனுள் அடங்கும் சமூகஉறவுகளின் வகை, அனுபவங்கள், சூழல் மற்றும் இடைவினைக் கோலங்கள் என்பன இளைய மாணவர் களின் நேர்நிலையான வெளிப்பேறுகளை முன்னேற்றகரமானதாக ஆக்கும். இதனால் இளையோரின் இடர்நிலையிலிருந்தான மீண்டெழும் தன்மை (Resiliency from Adversity) அதிகரிக்கின்றது. இதற்காகப் பாடசாலைச் சூழலைப் பொருத்தமான வகையில் மாற்றியமைக்கும்போது இளையோரின் இடர்நடத்தைகள், எதிர்மனப்போக்குகள் என்பன வெற்றிகொள்ளப்பட்டு நேர்நிலையான மேம்பாடு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கப்படும்.

மக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் நேர்நிலையான அனுபவங்களைப் பெறும் வகையில் இளையோரின் நேர்நிலை மேம்பாட்டுக்கான புறநிலைச் சொத்துக்கள் உறுதுணை (support), வலுவூட்டல் (Empowerment), எல்லைகளும் எதிர்பார்ப்புகளும் (Boundaries and Expectations), நேரத்தின் உருப்படியான பயன் (Constructive use of time) என நான்கு பரந்துபட்ட காரணிகளைக் கொண்டதாக விளக்கப்பட்டுள்ளன. உறுதுணை என்பது இளையோருக்கு தனியன்கள், குடும்பம் மற்றும் பிறரிடத்திலிருந்து கிடைக்கும் கவனிப்பு, அன்பு மற்றும் உறுதுணை என்பவற்றின் அவசியத்தினைக் கருதுகின்றது. இவர்களது மேம்பாட்டிற்குத் தேவையான நேர் நிலையானதும் உறுதுணையாகும் தன்மை வாய்ந்ததுமான சூழலினை வழங்குவதற்கு அவசியமான நிறுவனங்கள் மற்றும் அமைப்பாண்மைகள் அவசியமாவதையே இது கருதுகின்றது. வலுவூட்டல் என்பது இளையோர் தாம் வாழும் சமுதாயத்தினால் மதிப்பளிக்கப்படுபவர்களாகவும் பிறருக்கான பங்களிப்புக்களைச் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுபவர்களாகவும் அமைவதைக் கருதுகின்றது. இதன்மூலம் இளையோர் தாம் பாதுகாக்கப்பட்டவர்கள் என்ற உணர்வினைப் பெறுவர். எல்லைகளும் எதிர்பார்ப்புகளும் என்பது இளையோர் தம்மிடம் சமூகம் எதனை எதிர்பார்க்கின்றது? என்பதையும் எவற்றைச் செய்யலாம்? எவற்றைச் செய்யக்கூடாது? என்பதையும் அறிந்திருக்கவேண்டிய அவசியத்தினைக் குறிக்கின்றது. நேரத்தின் உருப்படியான பயன் என்பது இளையோர் படைப்பாக்கச் செயற்பாடுகள், இளையோர் நிகழ்ச்சித்திட்டங்கள், சமயச்சார்பான ஈடுபாடுகள், வீட்டில் நேரத்தினைப் பயன்மிக்கதாக்குதல் என்பவற்றின்வழி நேரத்தினை பயன்மிக்கதாகக் கழிப்பதன் அவசியத்தினைக் குறிப்பிடுகின்றது. இவை நான்கும் இளையோர் மேம்பாட்டில் சமூகத்தின் பங்களிப்பையே கருதுகின்றன. எனினும் இவற்றுக்கான பயிற்சிக் களமாகப் பாடசாலைகளே அமைதல் வேண்டும். இதற்காகப் பாடசாலைகள் சமுதாயமட்ட நிறுவனங்களுடனான ஆக்கபூர்வமான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தவேண்டியுள்ளது. சமய நிறுவனங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் மேம்பாட்டுச் சங்கங்கள், சிறுவர் கழகங்கள், முதியோர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் முதலிய பல்வேறு அடிப்படைகளில் பணியாற்றுகின்ற சமுதாய மட்டத்திலான நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றத்தக்க வாய்ப்புக்களை மாணவர்களுக்குப் பாடசாலைகள் வழங்கவேண்டும். பாடசாலைகள் சமூகத்தை ஊடறுத்துச்

செல்லக்கூடிய வகையிலான கூடுதல் நெகிழ்ச்சித்தன்மைகள் கல்வி நிர்வாகம், கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், புறப்பாடவிதான செயற்பாடுகள் என்பவற்றில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் இளையோரின் சமூக ஈடுபாடும் சமூகப் பொறுப்பும் அதிகரிக்கப்படும். அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் வரைவானது சமுதாயப் பாடசாலை பற்றிய சிந்தனையை நவீனத்துவத்தின் போக்குகளையும் அனுசரித்து மீட்டெடுக்கும் வாய்ப்பினை தரும் நிலையில் இளையோருக்கான இந்தப் புறநிலைச் சொத்துக்களின் கிடைப்பனவையும் உறுதிப்படுத்துமாறு நடைமுறைச் சாத்தியமாக்க வேண்டும். இது நல்லதொரு பாடசாலைச் சூழலைத் தந்து இளையோரின் அகரீதியான பண்பினை (Internal quality) அதிகரித்து சிறந்த முடிவெடுக்கும் திறன், குழுவேலைப் பண்பாடு, சமூகப் பொறுப்பு, ஈடுபாட்டுணர்வு (Sense of Engagement) என்பவற்றை அதிகரிக்கும்.

அகநிலைச் சொத்து என்பது இளையோரின் அகநிலை விருத்தியைப் பிரதிபலிக்கும் பண்பு மற்றும் நடத்தைசார்ந்த அம்சங்களாகும். இதனுள் கற்பதற்கான ஈடுபாடு (Commitment to Learning), நேர்நிலை விழுமியங்கள் (Positive Values), சமூகத் திறன்கள் (Social Competence), நேர்நிலை அடையாளங்கள் (Positive Identities) ஆகிய நான்கு பரந்துபட்ட காரணிகளை உள்ளடக்கியதாக விளக்கமளிக்கப்படுகின்றது. கற்பதற்கான ஈடுபாடு என்பது வாழ்நாள் முழுவதிலும் கல்விக்கும் கற்றலுக்குமான ஈடுபாட்டினை இளையோர் தம்முள் வளர்த்துக் கொள்வதன் அவசியத்தினைக் குறிக்கின்றது. நேர்நிலை விழுமியங்கள் என்பது இளையோர் தங்கள் தேர்வுகளை வழிப்படுத்தத்தக்க உறுதியான விழுமியப் பண்புகளை விருத்திசெய்யவேண்டியதன் அவசியத்தினைக் குறிக்கின்றது. சமூகத் திறன்கள் என்பது வாழ்வில் சாதித்தல், உறவுகளைக் கட்டியமைத்தல், நேர்நிலையான தேர்வுகளை மேற்கொள்ளல் என்பவற்றுக்குக் கருவியான இளையோருக்கு அவசியமான திறன்கள் மற்றும் ஆற்றல்களைக் குறிக்கின்றது. நேர்நிலை அடையாளங்கள் என்பது இளையோர் தங்கள் சொந்த சக்தி, நோக்கு, உறுதிப்பாடு மற்றும் யோக்கியதை என்பவற்றை வளர்த்துக்கொள்வதன் அவசியத்தினைக் குறிக்கின்றது.

இத்தகைய மேம்பாட்டுச் சொத்துக்கள் பற்றிய விளக்கங்களை உள்ளடக்கியவாறு நேர்நிலை இளையோர் மேம்பாட்டுக்கான 5Cs மாதிரி என்ற ஒன்றினை துறைசார் ஆய்வாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.[5] கட்டிளமைப் பருவத்திலிருந்து முதிர்பருவத்திற்குச் செல்லும் ஒருவர் பெறவேண்டிய பல்வேறு வீச்சிலான திறன்சார் விருத்திகளை இந்த மாதிரி விளக்குகின்றது. திறன்கள் (Competencies), உறுதிப்பாடு (Confidence), பண்பு (Charecter), தொடர்பு (Connection), பராமரிப்பு (Caring) ஆகியன 5Cs மாதிரியில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றில் திறன்கள் என்பது குறித்த ஒரு துறையில் ஒருவரின் செயல் பற்றிய நேர்நிலையான பார்வையை உருவாக்கவல்ல கல்வி மற்றும் அறிகைசார் திறன்கள், சுகவாழ்வுக்கான திறன்கள், பிறரைப் புரிந்துகொள்ளும் பிறரோடு கூடிப் பணியாற்றும் சமூகத்திறன்கள், காரண காரிய அறிவுடன் கூடிய படைப்பாக்கத்திறன்கள், தொழில்சார் பயிற்சி வழியான திறன்கள், நற்பிரசையாக இருப்பதற்கான திறன்கள் முதலியவற்றை இளையோர் தம் மேம்பாட்டுக்காக வளர்த்துக் கொள்வதைக் கருதுகின்றது. இளையோர் ஒருவரின் தன்னலம் தொடர்பான எல்லாவித நேர்க்கணிய விடயங்கள் தொடர்பான அகவயமான உணர்வும் உறுதிப்பாடு எனப்படும். சமூக நிறுவனங்கள் சமூக மக்களுடனான நேர்முகமான பிணைப்பை வளர்ப்பது தொடர்பு எனப்படுகின்றது. பண்பு என்பது சமூக மற்றும் பண்பாட்டு விதிகளுக்கு மதிப்பளித்து சரியான நடத்தையை வெளிப்படுத்தும் திறன். பராமரிப்பு என்பது பிறர் மீதான பரிவு மற்றும் இரக்கம் கொண்டு செயலாற்றும் திறன். இவற்றோடு இன்று ஆறாவது Cahf பங்களித்தல் (contribution) என்பதும் கூறப்படுகின்றது. அதாவது, மேற்குறித்த 5Cs இன் பிரயோகத் தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் பிறரின் வாழ்வை முன்னேற்றத்தக்க செயலாற்றலில் ஈடுபடுதலைக் குறிக்கும். இவற்றை இளையோர் தமது பாடசாலைக் காலத்தில் பெற்றுக்கொள்ளும்போதுதான் அவர்களின் நேர்நிலை மேம்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது.

இளையோரிடத்தில் இத்தகைய மேம்பாட்டுச் சொத்துக்களை வளர்ப்பதிலான சிக்கல்களும் தெளிவின்மைகளும் சிறுபிள்ளைகளிலிருந்தே மாணவர்களை விலகலாளர்களாகவும், எதிர் சமூகச் செயற்பாட்டாளர்களாகவும் ஆக்கிவிடுகின்றது. இது சமூக உறுதிப்பாட்டுக்குப் பாரிய சவாலாகிவிடுகின்றது. இதனை வெற்றிகொள்ளும் நோக்கில் விருத்திபெற்ற நாடுகளில் பல வசீகரமான திட்டங்கள் பாடசாலை மட்டங்களிலேயே அமுலாக்கப்படுகின்றன. பெருந்தெரு ஒன்றைத் தத்தெடுத்தல், மீள்சுழற்சிக்கானவற்றை செயன்முறைப்படுத்தல், அயலவர்களுக்கான செய்திப்பிரசுரம் வெளியிடல், சமுதாயத்துக்கான சுவரோவியம் வரைதல் போன்ற சமூகசேவைக் கருத்திட்டங்களில் அங்கு மாணவர்களை தொடர்ச்சியாக ஈடுபடுத்துகின்றனர். கல்லூரிகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர் மீதான தனிப்பட்டதும் தொடர்ச்சியானதுமான கவனிப்புக்காக நம்பகம்மிக்க ஆலோசகரை (Mentor) நியமித்து அவர்களை இடர்நடத்தைகளிலிருந்து விடுவிக்கும் செயற்றிட்டங்கள் உள்ளன. சுய ஒழுக்கம், சமூக உறவைக் கட்டிவளர்த்தல், நேர்முகமான பிரச்சினை தீர்த்தல் என்பவற்றுக்கான திட்டமிடப்பட்ட பயிலரங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. எங்கள் நாட்டின் கல்வி ஏற்பாடுகளிலும் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை இவற்றுக்கான தவிர்க்க முடியாத தேவை உணரப்பட்டுச் செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டே வருகின்றன. எனினும் இளையோரின் இடர்களும் இடர்நடத்தைகளும் அதிகரித்த போக்கினையே காட்டுகின்றன. பாடசாலை, பல்கலைக்கழகம், உயர்தொழிற்கல்லூரிகள், வாண்மைப் பயிற்சிக்கல்லூரிகள் போன்ற ஒவ்வொரு சூழமைவுகளிலும் முழுமொத்த இளையோரும் இடர்நடத்தைகளைக் காட்டுபவர்களாகப் பொதுமைப்படுத்தவியலாது. அவர்களது இடரின் தன்மையும், இடர்நடத்தையின் வெளிப்பாடுகளும், அவற்றின் விளைவுகளும் வேறுபட்டவை. ஆனால் யாவரிடத்திலும் வளர்க்கப்பட வேண்டிய மேம்பாட்டுச் சொத்துக்கள் ஒரே வகையினதே. இதனை இளையோர் பருவத்தின் ஆரம்பநிலையான பாடசாலைமட்டத்தில் கருத்திலெடுத்து மாற்று வழிமுறைகளைக் கண்டறிந்து பாடசாலைகள், பெற்றார்(குடும்பம்), சமூகமட்ட நிறுவனங்கள் என்ற மும்முனைகளின் இணைவுடன் செயற்பாடாதுவிட்டால் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தவல்ல ஒன்றாக இளையோர் அமைதியின்மையும் இடர்நடத்தைகளும் எதிர்கால சமூகத்தின் நலநிலையை அச்சுறுத்தும்.

அடிக்குறிப்புகள்:

1. Damon William(2004)., *What is positive youth development?,* Annals of the American Academy, AAPSS, 591, pp:13-24, DOI: 10.1177/0002716203260092.
2. Ibid.
3. பார்க்க: இளையோர் பண்பாடும் சமூக விலகலும்: நிகழ்போக்குகளும் மாற்றத்துக்கான உபாயங்களும், ,ராஜேஸ்கண்ணன்.இ(2013).,கிராமியம்-கல்வி-மேம்பாடு: சமூகவியல் பார்வைகள், சாத்வீகசுருதி வெளியீடு, பக்:30-31.
4. Oliver W. Edwards, Vincent E. Mumford and Rut Serra-Roldan, *A Positive Youth Development Model for Students Considered At-Risk*, *School Psychology International Copyright* © 2007 SAGE Publications (London, Los Angeles, New Delhi and Singapore), Vol. 28(1): 29–45.DOI: 10.1177/0143034307075673
5. Edmond P. Bowers et al(2010)., *The Five Cs Model of Positive Youth Development: A Longitudinal Analysis of Confirmatory Factor Structure and Measurement Invariance,* Journal of Youth and Adolescence (July 2010), DOI: 10.1007/s10964-010-9530-9 Published online: 16 April 2010 Springer Science + Business Media, LLC 2010



# ஈரல் செயலிழத்தல் (Liver cirrhosis)

Dr.Anuratha Kajendran (MBBS, MD)
Gastroenterologist & Hepatologist
**உணவுக்கால்வாய் ஈரல் சம்பந்தமான விசேட வைத்தியர்**

**ஈரல்**

இது எமது உடலிலுள்ள மிக முக்கியமான அங்கங்களுள் ஒன்றாகும். உடலின் அத்தியா வசியமான பல தொழிற்பாடுகள் ஈரலினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**ஈரலின் தொழிற்பாடுகள்**

1. அல்புமின் மற்றும் குருதி உறைதலுக்குத் தேவையான புரதங்களை உற்பத்தி செய்தல்.
2. உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நச்சுத் தன்மையான பொருட்களை நச்சுத்தன்மை குறைந்த உடலினால் கழிவாக அகற்றப்படக்கூடிய நிலைக்கு மாற்றுதல்.

   உ-ம் : மருந்துகள், உடலின் அனுசேபத் தொழிற்பாடுகளால் உருவாகும் கழிவுகள்.
3. குருதியிலுள்ள குளுக்கோசு மற்றும் கொழுப்புக்களின் அளவைச் சீரான சமநிலையில் பேண உதவுதல்.
4. பித்தம் மற்றும் பித்த உப்புக்களைச் சுரத்தல்.
5. விற்றமின்களையும் கனியுப்புக்களையும் சேமித்தல்.
6. நோயெதிர்ப்பு அங்கமாகத் தொழிற்படல்.
7. விற்றமின் D தொகுப்புக்கு உதவுதல்.
8. குருதிக் கலங்களை உற்பத்தி செய்தல் (பிரதானமாக குழந்தைகளில்)

### ஈரல் செயலிழத்தல்

அநேகமான ஈரல் நோய்களின் விளைவாக ஏற்படும் சிக்கலான நிலைமையே ஈரல் செயலிழத் தலாகும். இதன்போது ஈரலினது கட்டமைப்பிலும் தொழிற்பாட்டிலும் அசாதாரணமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஈரலில் ஏற்படும் நோய்களினால் ஈரல் கலங்கள் பாதிப்படைகின்றன. பாதிப்பு அதிகரிக்கும் பட்சத்தில் ஈரல் கலங்கள் இறக்கின்றன. இதனால் ஈரலில் ஏற்படும் அழற்சியினாலும் (Inflammation) அதனைத்தொடர்ந்து ஈரலில் நடைபெறும் திருத்தியமைத்தல் பொறிமுறையினாலும் (Regenerative mechanism) ஈரல் கலங்கள் நார்த்தன்மையான பதார்த்தங்களால் மீள் நிரப்பப்படுகின்றன. ஈரல் கலங்கள் புத்துயிர்ப்பு அடையக்கூடிய ஆற்றலைக் கொண்டவையெனினும் ஏற்படும் பாதிப்பு மிக அதிகமாகும் பட்சத்தில் புத்துயிர்ப்பு அடையக்கூடிய ஆற்றலை இழக்கின்றன. ஈரல் செயலிழத்தலின்போது ஈரல் கலங்களுக்கும், குருதியோட்டத்திற்கும் இடையிலான தொடர்பு மாற்றம் அடைகின்றது. பழுதடைந்த ஈரலில் மீள் நிரப்பப்படும் நார்த்தன்மையான பதார்த்தங்கள் குருதியோட்டத்துக்கு தடையை ஏற்படுத்து கின்றன. இதனால் குடலிலிருந்து ஈரலை நோக்கி குருதியைக் கொண்டுவரும் ஈரல்வாயி நாளத்தில் குருதியமுக்கம் அதிகரிக்கின்றது. (Portal hypertension) இதனால் குடலிலிருந்து வரும் குருதியானது ஈரலினூடாகச் செல்லாமல் வேறு தாழ்ந்த குருதியமுக்கங்களைக் கொண்ட நாளங்களினூடாக இதயத்தை வந்தடைகின்றது. ஈரல் கலங்களின் எண்ணிக்கை குறைவடைவதனாலும் எஞ்சிய ஈரல் கலங்களுக்கும் குருதியோட்டத்துக்குமான தொடர்பு பாதிக்கப்படுவதனாலும் ஈரலினூடாகச் செல்லும் குருதியின் அளவு குறைவடைவதனாலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்நோய் நிலைமையில் ஈரல் கலங்களுக்கும் ஈரலினுள்ளே காணப்படும் பித்தத்தைக் கொண்டு செல்லும் கான்களுக்கும் (Bile ductules) இடையிலான தொடர்பும் பாதிப்படைகின்றது. பித்தமானது சமிபாட்டுப் பொறிமுறையில் உதவுவதுடன் கழிவுப்பொருட்களை உடலிலிருந்து அகற்றும் ஒரு வழியாகவும் காணப்படுகின்றது. பித்தத்தினூடாக அகற்றப்படும் கழிவுப்பொருட்கள் குடலை அடைந்து மலத்துடன் அகற்றப்படுகின்றன. ஈரல் பழுதடைவதனால் இக்கழிவுப்பொருட்கள் உடலில் தேக்கமடைய ஆரம்பிக்கின்றன.

### ஈரல் செயலிழத்தலை ஏற்படுத்தும் காரணிகள்

01. மது பாவனை - ஈரல் செயலிழத்தல்களுக்கான காரணிகளில் இது முக்கியமானதொன்றாகும். ஈரலுக்கு ஏற்படும் பாதிப்பானது ஒருவர் உள்ளெடுக்கும் மதுபானத்தின் அளவிலும் எவ்வளவு காலமாக உள்ளெடுக்கின்றாரென்பதிலும் தங்கியுள்ளது. ஒருவர் அதிகளவில் மதுபானத்தை நீண்ட காலமாக உள்ளெடுக்கும் பட்சத்தில் அதன் மூலம் ஈரலுக்கு ஏற்படும் பாதிப்பானது மிக அதிகமாகும்.

02. ஈரலில் கொழுப்புப்படிதலும் அதனால் ஏற்படும் ஈரல் அழற்சியும் - இது அதிக உடற்பருமன் கொண்டவர்களிலும் நீரிழிவு நோய் வகை II உடையவர்களிலும் இன்சுலின் தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்களிலும் ஏற்படுகின்றது. இந்நோயினால் பாதிக்கப்படுபவர்கள் மதுபாவனை அற்றவர்களாகவோ அல்லது மிகக்குறைந்த அளவில் மதுபானம் அருந்துப வர்களாகவே காணப்படலாம்.

03. வைரசுகளினால் ஏற்படும் ஈரல் அழற்சி - Hepatits B.C போன்ற வைரசுகள் ஈரலில் நீண்ட காலமாக அழற்சியை ஏற்படுத்துகின்றன. இவ்வழற்சியினால் ஈரல் செயலிழத்தல் ஏற்படுகின்றது.

04. Autoimmune Hepatitis - சாதாரணமாக ஒருவரின் உடலில் அவருடைய உடலிலுள்ள கலங்களுக்கு எதிராக பிறபொருளெதிரிகள் (antibodies) நீர்ப்பீடனத் தொகுதியினால் உருவாக்கப்படுவதில்லை (Self Tolerance) எனினும் அசாதாரணமாக ஒரு சிலரது உடலில்

அவர்களது ஈரல் கலங்களுக்கு எதிராகப் பிறபொருளெதிரிகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் ஈரலில் ஏற்படும் அழற்சியினால் ஈரல் செயலிழத்தல் ஏற்படுகின்றது.

05. பரம்பரை வழியாகக் கடத்தப்படும் சில நோய்கள் - சில நோய்களின் போது ஈரலில் இரும்பு (Haemochromatosis) செப்பு (wil son's disease) போன்றன அதிகளவில் தேக்கமடைகின்றன. இதனால் ஏற்படும் நச்சுத்தன்மை காரணமாக ஈரல் செயலிழக்கின்றது.

06. Cryptogenic cirrhosis - சில நோயாளிகளில் ஈரல் செயலிழப்புக்கான காரணிகள் தெளிவாகக் கண்டறியப்படவில்லை. எனினும் இவ்வாறான நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மற்றும் அவதானிப்புக்களினூடாக நீண்ட காலமாகக் காணப்படும் அதிக உடற்பருமன், நீரிழிவு நோய் போன்றன இதற்குக்காரணமாக அமையலாம் எனக் கருதப்படுகின்றது.

**இந்நோயினுடைய அறிகுறிகள்**

01. தோல், கண் போன்றன மஞ்சள் நிறமடைதல். (Jaundice)

02. கால்கள், கணுக்கால் மூட்டுக்களைச் சூழ ஏற்படும் வீக்கம். (Ankleoedema) இந்த வீக்கமானது நீண்ட நேரமாக நின்ற பின்னர் அல்லது நடந்த பின்னர் அதிகமாகக் காணப்படுவதுடன் இரவு நித்திரையின் பின்னர் குறைவடையும்.

03. வயிற்றுக்குழிக்குள் திரவம் தேங்குவதனால் வயிறு வீக்கமடைதல். (Ascites)

04. உணவுக்கால்வாயின் மேற்பகுதியில் உள்ள அங்கங்களிலிருந்து ஏற்படும் குருதிப்பெருக்கு. (upper gastrointestinal bleeding) இதன் போது நோயாளிகள் சிவப்பு நிறமான இரத்தக்கட்டிகள் கலந்த அல்லது கோப்பி நிறமான வாந்தி எடுக்கலாம். கறுப்பு நிறமான மலம் வெளியேறலாம் (Melaena)

05. நித்திரைக்குழப்பம், இலகுவில் எரிச்சலடையக்கூடிய தன்மை, கணித்தல்களை மேற் கொள்வதில் சிரமம், ஞாபகசக்தி குறைவு, உடலில் தோற்றுவிக்கப்படும் அமோனியாவை நச்சுத்தன்மை குறைந்த பதார்த்தமாக மாற்றும் அங்கமாக ஈரலே காணப்படுகின்றது. ஈரல் செயலிழப்பதனால் இந்த அமோனியா உடலில் தேக்கமடைவதன் காரணமாக மூளையின் தொழிற்பாடு பாதிப்படைவதன் மூலமே இவ்வறிகுறிகள் ஏற்படுகின்றன.

06. பசியில் ஏற்படும் குறைவு.

07. களைப்பு, சோர்வு.

08. உடலில் ஏற்படும் கடி.

நோயாளிகள் சிலரில் ஈரல் நோய்க்கான அறிகுறிகள் முற்றாகவே வெளிப்படுத்தப்படுவதில்லை. சிலர் ஒரு சில அறிகுறிகளையே வெளிக்காட்டுவர். எனினும் இந்த அறிகுறிகள் தனியே ஈரல் நோய்களில் மட்டும் வெளிப்படுத்தப்படுபவையல்ல என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

**ஈரல் செயலிழப்பினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்.**

**ஈரல் பாதிப்படைவதனால்**

01. சிறுநீரகத்தின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படலாம். எனினும் ஈரலின் தொழிற்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டாலோ அல்லது ஈரல் மாற்றுச்சிகிச்சையின் பின்னோ சிறுநீரகம் கூடுதலான வேளைகளில் வழமை போன்று தொழிற்பட ஆரம்பிக்கும்.

02. ஈரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் ஈரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

03. ஈரல் செயலிழப்பு அதிகமாகும் நிலையில் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும்.

04. குருதிச்சோகை (Anaemia)

இந்நோயானது மருத்துவசரிதம், வழமையான உடற்பரிசோதனை, இரத்தத்தில் மேற்கொள்ளப்படும் சில பரிசோதனைகள் வயிற்றில் மேற்கொள்ளப்படும். CT, MRI, Ultrasound Scan மூலம் அடையாளம் காணப்படுகின்றது. ஈரலில் இருந்து பெறப்படும் ஒரு மாதிரியை ஆராய்வதன் மூலம் இந்நோயானது உறுதிப்படுத்தப்படுகின்றது.

**இந்நோய்க்கான சிகிச்சைகள்**

**ஈரலுக்கு மேலும் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க கையாளப்படும் வழிமுறைகள்**

01. சமநிலையான உணவை உள்ளெடுத்தல் - உணவுக்கு மேலதிகமாக விற்றமின்களைக் கொண்ட மாத்திரைகளை உள்ளெடுக்கலாம்.

02. மது பாவனையிலிருந்து முற்றாக விடுபடுவது மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

03. ஈரலினால் நஞ்சகற்றப்படுகின்ற, ஈரலின் தொழிற்பாட்டை மேலும் பாதிக்கக்கூடிய மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளல்.

04. NSAID மருந்துகளை உள்ளெடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளல்.

05. உடல் அங்கங்களில் அசாதாரணமாக இரும்பு தேக்கமடையும் நோயாளிகளில் குறித்த அளவு குருதியை குறித்த அளவு இடைவெளியில் வெளியேற்றல். இம்முறையானது குருதியிலுள்ள இரும்பானது சாதாரண நிலையை அடையும் வரை மேற்கொள்ளப்படும்.

06. அசாதாரணமாக உடலில் செப்பு தேக்கமடையும் நோயாளிகளில் மேலதிக செப்பை சிறுநீருடன் வெளியேற்றுவதற்கான சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

07. வைரசுகளுக்கான மருத்துவ சிகிச்சைகளின் மூலம் Hepatitis B.C போன்ற வைரசுகளை அழித்தல்.

08. Autoimmune Hepatitis நோயாளிகளில் அவர்களின் நீர்ப்பீடனத் தொகுதியின் தொழிற்பாட்டைக் குறைக்கக்கூடிய மருந்துகளை வழங்குதல்.

09. ஈரல் பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு Hepatitis A, B நோய்த் தொற்றுக்கெதிரான தடுப்பூசிகளை வழங்குதல்.

**ஈரல் செயலிழப்பினால் ஏற்படும் சிக்கல்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள்**

01. உணவுடன் உள்ளெடுக்கப்படுகின்ற உப்பின் அளவைப் பேணுதல். ஒரு நாளைக்கு ஒரு நோயாளி எடுக்கக்கூடிய உச்ச பட்ச உப்பின் அளவு 29.

02. உப்புக்கள் சேர்க்கப்பட்ட உணவுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக கருவாடு, உப்பு சேர்க்கப்பட்ட மிக்ஷர், மாமைட் போன்ற உணவுகள்.

03. தினமும் உள்ளெடுக்கப்படும் திரவத்தின் அளவைச் சீராகப் பேணுதல். இந்த அளவானது குருதியிலுள்ள சோடியத்தின் அளவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். சோடியம் அளவு குறைவடையும் போது உள்ளெடுக்க வேண்டிய திரவத்தின் அளவையும் குறைக்க வேண்டும்.

உடலில் நீர் தேக்கமடையும் சந்தர்ப்பத்தில் உடலிலிருந்து வெளியேறும் சிறுநீரின் அளவை அதிகரிக்கும் மருந்துகள் வழங்கப்படும்.

04. உடலினுள் தேங்கியுள்ள நீரின் அளவை மருந்துகளால் சீர்செய்ய முடியாத பட்சத்தில் மேலதிக நீர் வயிற்றுக்குழியில் இருந்து குழாயொன்றின் மூலம் வெளியேற்றப்படும். (Abdominal Paracentesis)

05. ஈரல்வாயி நாளத்தில் காணப்படும் குருதியமுக்கத்தைக் குறைப்பதற்கான மருந்துகளை வழங்குதல். (B-Blockers)

06. Hepatic encephalopathy க்கான சிகிச்சை

- நாளொன்றுக்கு மூன்று தடவை மலம் கழிக்கக்கூடிய வகையில் Lactulose எனும் மருந்தை வழங்கல்
- Rifaximine
- LOLA (L-Ornithine-L- Arginine)
- இந்நிலைமை ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும் காரணிகளான மலச்சிக்கல், நோய்த்தொற்று போன்றவற்றுக்கான சிகிச்சைகளை வழங்கல்.

07. Spontaneous bacterial peritonitis க்கான சிகிச்சை - வயிற்றுக்குழியிலிருந்து திரவத்தை எடுத்து வளர்ப்பூடகத்தில் இட்டு கிருமித்தொற்றை ஏற்படுத்திய நுண்ணங்கியை அடையாளம் கண்ட பின்னர் அதற்கான நுண்ணுயிர் கொல்லிகள் நாளத்தினூடாக (Intravenous) வழங்கப்படும்.

08. உணவுக்கால்வாயிலுள்ள மேற்பகுதியிலுள்ள அங்கங்களிலிருந்து ஏற்படும் இரத்தப்பெருக்கு (Upper gastrointestinal bleeding) க்கான சிகிச்சை

- நோயாளியை ஆசுவாசப்படுத்தல்
- நாளத்தினூடாக திரவம், குருதியை வழங்குதல்.
- நாளத்தினூடாக Terlipressin என்ற மருந்தை வழங்குதல்.
- நாளத்தினூடாக நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் வழங்குதல் (Intravenous antibiotics)
- Endoscopictherapy
  - Banding – இதன் போது புடைத்த நாளங்களுக்கு மேல் இறப்பர் பட்டிகளை இடுவதன் மூலம் அவற்றினூடான இரத்த ஓட்டம் தடுக்கப்படுகின்றது.
  - Sclerotherapy – இதன் போது நாளத்தினுள் ஒரு பதார்த்தத்தை செலுத்துவதன் மூலம் நாளமானது சுருங்க வைக்கப்படுகின்றது.
  - Glue injection - இதன் போது நாளத்தினூடாக ஒரு பதார்த்தத்தை செலுத்துவதன் மூலம் குருதியோட்டமானது தடுக்கப்படுகின்றது.

09. சிறுநீரக தொழிற்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்கான சிகிச்சை

தேவையான அளவு நீரினை வழங்குதல் (Hydration) நாளத்தினூடாக 20 % human albumin வழங்கல்.

10. புடைத்த நாளங்களின் (Varices) நிலையானது Endoscopy மூலம் அவதானிக்கப்படுகின்றது.

Endoscopy யில் Varices இன் நிலையைக் கொண்டு அடுத்த Endoscopy செய்ய வேண்டிய கால அளவானது தீர்மானிக்கப்படுகின்றது. ஈரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை Ultra sound scan செய்யப்படுகின்றது.

ஈரல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய ஆபத்தான காரணிகளைக் கொண்டவர்கள் உடற்பயிற்சி மற்றும் உணவு முறை மூலம் ஆரோக்கியமான நிறையைப் பேணிக்கொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் ஆரோக்கியமான கொழுப்பு, சிக்கலான காபோவைதரேற்று போன்றவற்றைக் கொண்ட உணவுகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான கொழுப்புகளான Omega – 03 கொழுப்பமிலங்கள் மீன், மீன் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்றவற்றில் காணப்படுகின்றது. பழங்கள், மரக்கறிகள் என்பன உணவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இவை கலங்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைக்க உதவும். விற்றமின் E கொண்ட உணவுகளை உள்ளெடுப்பது நன்று. இவை சூரியகாந்தி வித்துக்கள், ஒலிவ் எண்ணெய் என்பவற்றில் காணப்படுகின்றது. எளிய வெல்லங்களால் ஆக்கப்பட்ட, பிரக்ரோசைக் கொண்ட உணவுகள் பானங்கள் என்பவற்றை உள்ளெடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நாளொன்றுக்கு மூன்று கோப்பை வரையான பால் மற்றும் சீனி சேர்க்கப்படாத கோப்பி பருகுவது சிறந்ததாகக் கருதப்படுகின்றது. Wilson's disease போன்ற பரம்பரை ரீதியாகக் கடத்தப்படும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் செப்பு கொண்ட உணவுகளான கடலுணவுகள் Chocolate போன்றவற்றை உள்ளெடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பொருத்தமான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் சரியான உடல் நிறையைப் பேணுதல் மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. கிழமையொன்றுக்கு குறைந்தது மூன்று நாட்களாவது உடற்பயிற்சியில் ஈடுபடுதல் வேண்டும். நாளொன்றுக்கு குறைந்தது 30 நிமிடங்கள் வேக நடை, சைக்கிளோடுதல் போன்ற Aerobic உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

ஈரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தினமும் தமது உடல் நிறையை அளந்து கண்காணித்துக்கொள்வது வரவேற்கப்படுகின்றது.



# SIVA ANNAN — A MAGNETIC MULTIFACETED TOWERING PERSONALITY

***V. Vimalarajah -Attorney-at-Law***
***Retired Labour Court Judge***
***President Vigneswara Old Students Association — Colombo Branch***
***From 05 July 1992 to 24 March 2016***
***Presently Based in Australia***

**A** question may be posed as to who "Siva Annan" is? He is none other than Late Mr.Murugesu Sivasithamparam former T.U.L.F.Leader, Member of Parliament for Uduppiddy and Nallur and also Deputy Speaker, Parliament of Sri Lanka. He hails from a highly respectable family reputed for noble traditions. He has been closely associated with me from my childhood for the reason his mother and my mother are first cousins (children of two brothers). always addressed Him as "Siva Annan". He was a distinguished old student of Vigneswara College, a leading English School in Karaveddi established on 06 October 1917. It is considered appropriate to examine the historical background of the establishment of this school. English was the official language during the British Colonial days and Christian missionaries managed most of the schools in the Island of "Ceylon", as it was called at that time. Hindus and Buddhists were unhappy over the lack of facility of Education in English. Nationalists like Anagarika Dharmapala and Mettananda showed enthusiasm for establishment of Buddhist schools in the South for English education and Armuganavalar and Hindu Board Rajaratnam also enthusiastically establishd schools in the North for education in English. Karaveddi was fortunate to have Veeravahu Sittampalam,

a Hindu activist who was determined to establish a Hindu English School for Hindu students of Karaveddi to have education in English in a Hindu atmosphere. He had not only the will but also the means to perform the Herculean task of establishing Vigneswara College.

He was brilliant and outstanding student. The Indian teachers who were hired for service at Vigneswara introduced the Parliamentary system to Vigneswara in 1927, four years ahead of the State Council in Sri Lanka. The members to Parliament were elected by each class. The members elected formed the Parliament which elected the Speaker, Deputy Speaker, Prime Minister, Ministers, Opposition Leader etc. The Principal allocated funds to the Finance Minister who formulated the income and expenditure account and obtained the approval of the Parliament.

Siva Annan was defeated in the elections thrice although he was the Grandson of the Founder of Vigneswara. He was finally elected as Speaker, Prime Minister and Minister.

He always said that the lessons he learnt and the experience he gained at Vigneswara College Parliament helped him a lot in his work as Deputy Speaker in the Parliament of Sri Lanka from 1967 to 1970. He was proficient in all three languages. He presided over the parliamentary sittings creditably. Dr.N.M. Perera an outstanding politician commended Siva Annan highly for the manner in which he handled a complicated issue in relation to Srimavo Bandaranaike. He had on one occasion admonished his leader G.G. Ponnambalam, Q.C for unfairly ciriticising Amirthalingam when he was not present in parliament.

**His career at Law College and Legal Practice**

He was a leading Criminal Lawyer. He was a shining star at Law College. He led the law college debating team against the University team and his performance at the debate won the admiration and commendation of the Judges of the debate. He was awarded the Gold medal in the address to the Jury. This was the first time in the history of Law college a first year student was awarded a Gold medal.

His performance as a criminal lawyer was excellent. He had appeared in several big cases and won the cases. Some of them are Kuddimani's case, Kuchevely Robbery case, Ratmalane Bomb case. He had appeared free in a series of cases under the Prevention of Terrorism Act.

When the Sixth Amendment to the Constitution was passed he did boycott parliament and refused to take oaths under the 6th amendment which is a pre-requisite to practise as an Attorney-at-Law. From 1983 communal riots onwards, he could not practise as an Attorney-at-Law and his financial loss was colossal. In the 1983 communal riots, his house at Norris Canal Road, Colombo and two vehicles were burnt. His wife escaped death miraculously. After more than a decade, Honourable MHM Ashraff, the then Minister of Rehabilitation got a cheque for rupees one million sent to him as compensation for his loss in the 1983 communal riots. He declined to accept the cheque which he richly Deserved.

**His political career**

In keeping with the behaviour pattern of the youth of the good old days, Siva Annan too was a card carrying member of the Communist party when he was an undergraduate. In course of time, he abandoned communism and joined the All Ceylon Tamil Congress to do his best to the cause of Tamil Nationalism. He contested the Point Pedro Electorate in the Northern Province as an Independent Candidate and lost. He contested the newly created Uduppiddy Electorate as a Tamil Congress Candidate in March 1960 and he was elected as Member of Parliament for the first time. He contested in July. 1960 as a Tamil Congress Candidate and won the elections. It was a miracle as he was the only Tamil Congress Candidate to win the elections in March 1960 and July 1960 when the Federal Party had a resounding victory all over. He won again in March 1965. In 1967 he was elected Deputy Speaker of Parliament which he held up to 1970. His work as Deputy Speaker was highly commended by outstanding politician of the calibre of Dr NM Perra. In 1972 the Tamil Parties formed together the Tamil United Front which later became the Tamil United Liberation Front (TULF) in 1976. TULF contested the elections in 1977. Siva Annan moved out of Uduppiddy Electorate to facilitate T. Rasalingam, a minority candidate who won the Udupidy Electorate. Siva Annan contested Nallur Electorate he was not familiar with and won the elections scoring 29 858 votes and created a record by recording the largest majority of 28 137 votes in the entire country in that election. TULF won 18 seats and it was the largest opposition party in 1977. A. Amirthalingam and Siva Annan became Leader and Deputy Leader of Opposition respectively. In 1978 Siva Annan became President of TULF. In 1983, TULF forfeited its parliamentary seats by refusing to take the oath of allegiance to a unitary state as provided for in the 6th amendment to the Constitution. He was playing a leading role in the peacekeeping efforts of former President Chandrika

Kumaratunge. He survived with injuries an assassination attempt in 1989 by the LTTE. Amirthalingam and Yogeshwaran were killed in the incident.

To mention a few of what he has done to Vigneshwara. He got buildings constructed at the college premises. When the post of Principal fell vacant in Vigneshwara in the year 2002, the executive committee of our old students association Colombo branch decided to have V. Sivasithamparam who was the principal at Gnanasariya College Thunalai with high reputation, appointed as principal at Vigneshwara College. We heard that several persons were trying to come to Vigneshwara. The members of the executive committee of Colombo branch old students association went to Siva Annan's residence at Have Lock Road Colombo and pressed him to get this appointment made. He listened to us patiently and telephoned the Director of Education in our prescence and got V. Sivasithamparam appointed as Principal of Vigneshwara. V Sivasithamparam as principal was in constant touch with our Colombo Branch Old Students Association. He was an asset to the college which progressed very well during the period he was principal. A few days prior to Siva Annan's passing away on 05 June 2002, he had given Rs 7.5 Lakhs for the college library out of the allocation made to him by Parliament.

He has always given top priority to Vigneshwara which owes him a debt of gratitude for the distinguished and dedicated service he had rendered to it.

**Conclusion**

He was a paragon of virtue in every sense of the phrase with not a whiff of scandal about him. He was extraordinary, outstanding and unmatched in many ways. It is usual for politicians to be scandalised. Siva Annan had no public scandals during his entire period in politics spanning more than half a century. He carried with him an unshakable religiosity that influenced his thoughts and actions. When Muslims were sent away from Jaffna by the Tigers, he said at the Muslim Congress Convention in Kalmunai as Chief Guest that he would not put his foot to Jaffna until the Muslims were taken back to Jaffna. Hon. Rauff Hakeem, President Muslim Congress emphasised what Siva Annan said when he addressed a memorial oration of Siva Annan at the invitation of Vigneshwara Old Students Association Colombo Branch.

Siva Annan was accorded a felicitation ceremony at Colombo by Vigneshwara Old Student Association Colombo Branch on 16 February 2002 and Siva Annan passed away peacefully in Colombo on 05 June 2002 within a period of four

months of the Felicitation Ceremony to him on 16 February 2002. Our Colombo Branch published a book titled "Sahavaram Petta Sanron". In this book there are messages from leading personalities — Hon Rani! Wickamasinge, Prime Minister Hon Chandrika Bandaranaike Kumaratunge, Former President of Sri Lanka And Hon. Rauff Hakeem. According to Siva Annan's wishes, his dead body was taken to family burial ground — Sonappu in Karaveddi. There was a large crowd at the funeral. Hon. Rauf Hakeem in his funeral oration said — "Siva Annan has kept his word to Muslims. He has not gone to Jaffna but his dead body was only taken to Jaffna".

His passing away is a colossal loss to the Tamil community in particular and to the country at large. He passed away fourteen years ago but he remains deep in the hearts of people of Karaveddi — his place of birth.

"Prophets are not honoured in their own country" goes an old saying. This old saying cannot be applied in so far as people of Karaveddi and Siva Annan are concerned. It is in the fitness of things that Karaveddi "Onriam" has erected recently a statue of Siva Annan at Nelliyady Junction and the livewire behind the statute is Mr V.S. Ponnampalam known in Karaveddi as Upali Ponnampalam, an old student of Vigneshwara and one time Vice President of Vigneshwara Old Students Association Colombo Branch. Siva Annan is undoubtedly a magnetic, multifaceted, towering personality.



# மனம்

**திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம்**
**இலண்டன் பழைய மாணவர் சங்கம்**
**காரியதரசி**

**ம**னமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. உண்மையில் மனம் என்பது என்ன உடலில் எங்கிருந்து எதனால் உருவாகின்றது? மனிதனின் அறிவுக்கு உட்பட்டதா? அல்லது அறிவின் மேல் ஆட்சி செய்கின்றதா? அதன் செயல் என்ன? இப்படி கேள்விகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். மனம், சித்தம், புத்தி, அறிவு, உள்ளம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. பாரதியின் கவிதையில்

"பேயாய் உழலும் சிறுமனமே

பேனாய் என் சொல் இன்று முதல்

நீயாய் ஒன்றும் நாடாதே

நினது தலைவன் யாளே தாண்" என்கிறார்.

"மனத்துக் கண் மாசிலனாதல்" " உள்ளதால் உள்னலும் தீதே" திருவள்ளுவர் பல இடங்களில் மனம் பற்றிக் கூறுகின்றார். "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என்று நாயன்மார் தேவாரங்களில் குறிப்பிடுகின்றார். மனத்தால் வாழ்கின்றவன் மனிதன் விலங்குகளுக்கோ வேறு உயிரினங்களுக்கோ மனம் இல்லை . மனம் மென்மையானது. மனம் எப்பொருளில் கலந்திருக்கிறதோ அதுவாகவே மாறிவிடும். அறிவினாலும் பயிற்சியினாலும் மனத்தை அடக்கத்தெரிந்தவனுக்கு வாழ்க்கை ஒரு விளையாட்டு. அவன் என்றும் இன்பமாக விளையாடிக்கொண்டிருப்பான். ஒரு மனிதனுக்கு ஆத்மசுகம், மனச்சுகம், உடற்சுகம் இம் மூன்றும் அவசியம். உடற்சுகம் இல்லாவிட்டால் மனச்சுகம் ஏற்படாது. எனவே உடலை எப்போதும் ஆரோக்கியமாக வைத்திருத்தல் வேண்டும். இதனை திருமூலர் "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" என்றும் "உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டான்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உடம்பு ஒரு வண்டி போன்றது. எமது வாழ்வு எனும் யாத்திரை தொடரும் மட்டும் வண்டியாகிய உடம்பை பாதுகாக்க வேண்டும். எமது உடம்பு மனதின் கட்டுப்பாட்டில் இயங்குவதனால் மனதைத் திடமாகவும் கவனமாகவும் வைத்திருக்கவேண்டும். மனதைக் குரங்கிற்கும் ஒப்பிடுவர். அது மரத்திற்கு மரம் தாவுவதைப் போல மனமும் நிலையில்லாது தாவிக்கொண்டிருப்பதனால் மனம் மட்டுமன்றி உடலும் பாதிக்கப்படுகின்றது. மனமும் உடலும் பாதிக்கப்படுவதனால் ஆத்மசுகம் கிடைக்காமல் போகின்றது. எனவே மனம் என்கின்ற மாயக்கண்ணாடியை சுத்தப்படுத்திக்கொண்டால் உடலும் உயிரும் (ஆத்மா) சிறப்பாகத் தொழிற்படும். ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி அறிய வேண்டும். தம் மன ஓட்டத்தை உற்று நோக்க வேண்டும். ஆழமாகக் கவனிக்க வேண்டும். அப்போது தான் எமது நல்ல தீய எண்ணங்களை உணரமுடியும். நம்மிடமுள்ள தீய எண்ணங்களைக் கண்டு அதனை எடுத்தெறிய வேண்டும். ஒரு தடவையில் எடுத்து எறிய முடியாது. முயற்சி செய்தால் வெற்றி கிட்டும். வெற்றி பெற்றால் அவருடைய வார்த்தைகள் மூலம் அறியலாம். இந்த வார்த்தைகளால் எம்மை கவலையிலிருந்தும் நோயிலிருந்தும் மீட்டுக் கொள்ளலாம். யப்பானிய Dr.மிகாவ் உசியின் பஞ்சசீலக் கொள்கையை கடைப்பிடித்தால் உடல் உள்ளம் உயிர் சுகத்தைப் பெறமுடியும். பஞ்சசீலக் கொள்கைகள் ஆவன

1. இன்று எதற்காகவும் சினமடையக்கூடாது.
2. இன்று எதற்காகவும் மனக்கவலை அடையக்கூடாது.
3. இன்று நன்றி உணர்வுடன் இருக்க வேண்டும்.
4. இன்று கடினமாக உழைக்க வேண்டும்.
5. இன்று எல்லோர் மீதும் அன்பு செலுத்த வேண்டும்.


இவைகளை தினமும் கடைப்பிடித்தால் நோயற்று இன்பமாக வாழலாம். மனமே உடலை ஆளுகின்றது. உடலில் ஒளிவட்டம் ஆரா (Aura) சுற்றி பல அடுக்குகளாக இருக்கின்றது, இந்த உயிர் ஒளிவட்டம் என்பது ஜீவ ஒளி. இது உயிர் பிரிந்த பின் இருப்பதில்லை. எல்லா உயிர்களிலும் இந்த ஒளிவட்டமுள்ளது. இந்த ஒளிவட்டமானது உடலிலுள்ள ஏழு சக்கரங்கள் மூலம் நரம்பு மண்டலங்களில் ஊடுருவி எமக்குச் சக்தியைக் கொடுக்கின்றது. இந்த சக்கரங்களுக்கு நிறமும் ஒலியும் உள்ளது.

சக்கரம் ஒலி நிறம் கிரகம் சகஸ் ரத்தினம் உச்சி ஓம் Om ஊதா Violet சூரியன் ஆகாயம் ஆக்ஞா புருவமத்தி ஆம் Aum கருநீலம் Indigo சந்திரன் ஆகாயம் விசுத்தி தொண்டை Hum ஹம் நீலம் Blue செவ்வாய் ஆகாயம் அனாகதா கிருதயம் யம் Yam பச்சை Green புதன் காற்று மணிப்பூரகம் வயிற்றுப்பொக்குள் ரம் Ram மஞ்சள் Yellow குரு நெருப்பு சுவாதிட்டானம் அடி யாவும் மாறி மாறி வருகின்றது. காலமுங் கடலும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. மனம் அமைதி பெற இவற்றை பின்பற்ற வேண்டும்.

1. எதனையும் திட்டமிட்டு செயற்பட வேண்டும்.
2. ஆசைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.
3. எதிர்ப்பு இருக்கக் கூடாது.
4. விவாதம் கூடாது.
5. போலித்தனமில்லாது திருப்தியுடன் இருக்க வேண்டும்.
6. மற்றவர்களின் மனதைக் குலைக்கக்கூடாது.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

(மனம் என்ற கட்டுரையின் ஒரு பகுதி)



# THE EXPECTED TREND OF SCHOOLS IN THE 21$^{ST}$ CENTURY

***Dr. S. Kukanesan***
***(Rtd. A.D.E)***
***Hony. Adviser, Action Group for Scocial Development, Peoples Assembly of Sri Lanka & South Asian Academy for Good Governance.***

In the new Millennium schools, teachers, students and parents will have to naturally adapt and change themselves to meet the challenges of the modern world. The new changes open out new avenues and opportunities to develop the standard of the students who come under our care. We are living in the world of digital revolution. The traditional method of teaching and learning becomes obsolete to meet the modern trends. We need to tune our minds and thinking patterns in a way suitable to understand the life patterns.

The life style is challenged by factors such as globalization, usage of internet facilities, E-commerce, E - money etc. One cannot exist without knowing about internet and Information Communication Technology. We cannot carryon with the old teaching methods. The new trend in the teaching methods should be solely child centered. The child should be allowed to define the problem, search for data, analyse and Arrive at solutions.

In the entire process, the teacher is a facilitator, counsellor and a co-worker in the learning process. The attitude of the teacher should change accordingly to adopt the new methodology. The new teaching methods of 5-E paradigm, leads the student to involve in critical thinking. The expansion of 5 E Method is classified as follows:

(1) Engagement
(2) Exploration

(3) Explanation

(4) Elaboration

(5) Evaluation

In this process a child will improve his knowledge, attitude, skill, and good practical involvement. The following aspects play a major role in producing a strong civil society.

1. **Information Technology**

A student must be familiar with all modern, frequently used software and able to utilize information by browsing through the internet in the learning process.

2. **Language Proficiency**

An excellent working knowledge of English is a must in the modern world of Trade and Commerce. A basic working knowledge is insufficient to meet the demands of the world. One should be able to articulate in verbal and oral skills. One should be able to make presentations using their computer skills. The Students need this language to pursue higher studies and to get good jobs. The Ministry of Education in Sri Lanka has felt the urgency of the English Language and has made it compulsory for 0/L and A/L examination, from next year.

3. **Time Management**

All the students are involved in a rat race which leads to a limited university admission due to the' competitive examinations. It is very unfortunate that only 5% or less is given places at the universities. The so called tuition culture should go along as a complementary process to schooling but it is not so in the present set up. Children lead a machine life without any rest. The time management becomes very urgent and necessary for a child to set a plan and to work the plan to meet the present examination trend. Thereby, the student will have more time to reflect by themselves as to what they have to study and prepare for an examination.

4. **Student Orientation**

At present we educate the students by transferring what we know and what is expected by the curriculum, but the-teaching should delight the student, which means we should fulfil the expectations and the aspiration of the students. We should create a happy learning environment and a healthy teacher-student relationship.

5. **Team Work**

Students working as a group are very important as it helps to solve tie complex problems. Snaring Ana caring attitudes we develop when you work as a team and improve efficiency and productivity. It improves understanding and create concern over their colleagues.

6. **Innovation**

A student should be given more opportunities to produce new things. It can be in the field of dramatics, Music or art. A student should be able to think differently, and not simply follow and accept the past practices. New methods to be innovated and encouraged for normal daily routine and progress.

As teachers we have to reflect our relationship between education & development. Both of them are human processes. We live in a situation where day by day we are brought face to face with some aspect of this problem.

It is the community at present that has to gear itself to overcome a situation. The educationists and the learned who understand the situation must pop out of it. We have to strive through, rather than finding excuses on the situation, and getting away from problems. How can we come out of it and march forward? Every citizen has to work hard genuinely to build up this broken society, which underwent 30 years of tremendous hardships. Now there is hope and signs of a better situation. Due to the war, the family bonding has been disturbed, the relationships with the society and within the families have been tampered by forces beyond their control. We have lost all our cultural and religious values by the behaviour changes of parents, students and the society at large. Therefore, in this respect schools have to play a major role in repairing these phenomena to create a new society.

The draw back in our society is the rat-race towards pre-determined courses of studies. The choice of careers must to be designed properly, taking into consideration the attitude of parents and the ambition and ability of the student itself.

To rectify the above issue there had been a paradigm drift, from an evaluation culture to an assessment culture since the introduction of the Reforms proposals in "General Education in 1999 island wide. But the teachers, parents and students have neither adopted this concept nor changed themselves to implement, both knowledge wise and attitude wise. The "5 E" Paradigm introduced by the education department is one of the methods adopted in schools to recognize the ability, and attitude of the children when he/she is involved. in the learning

process in the classrooms (School Based Assessment-SBA). I could suggest this as a model to our dear parents to follow; that is:

- from 0-7 years

The Parents should be the best parents who shower love and kindness.

- From 7 - 12 years

Good parents should be good teachers, teaching all the basics which are needed for a better disciplined life.

- From 12 - 20 years

parents should be guiders, counsellors .

- After 20 years

The parents to be good genuine friends to share all their stress and expectations.

If all these are adhered in all the families and in schools, there is a definite possibility to nurture the children with proper discipline, love and understanding, and the society will definitely become wholesome.

The specific issues we face now at present in Sri Lanka confront the general areas which are common to all of us. One of the things we have is the legacy of the past that is in the distant past we had a well-developed educational system, but it was changing from time to time. With creeping in of western education, the pattern of education changed all over, and now education and development have come to be related to life patterns, with modern technology and the computerized world. At present the popular demand for education is through a computer network. We have come to terms for such a transformation to provide an "education fit for life" and" appropriate technology for life". It is a "knowledge explosion" of our times and a dawn of knowledge based society. There is no occupation today which remains unchanging and young people are being geared and prepared for this changing trend.

The mother tongue definitely has a certain amount of sentimental value in human activities, but there had been a marked change. We as educationists have a duty to perform and that is to impart the best education to the students suited to this era. An education which will help them to lead a life full of prosperity and happiness. This will also give a scientific turn of mind, in this respect the teaching and learning of English Language is being adapted well to meet the changing needs. In all spheres of life English occupies a predominant place. With

the commencement of English Medium classes, the modern knowledge imparts Scientific, technical, economical and the allied subjects in English. Hence the use of English has become prime important in all spheres of life, as the medium in higher education as well. This enables many children to obtain admission and pursue additional qualifications in the field of banking, accounting, Management, marketable professional courses like CIMA & ICASL. For all these and more, English is the best suited language to meet the needs of our time.

Let us, as parents, teachers and the society on the whole, get involved in the shaping of our young minds entrusted in our hands. Let us build new well educated cultured citizens who can understand and appreciate life to its fullness,

Let us take a closer look at this new age that is dawning. In this aspect I firmly believe education is essentially the foundation upon which children build themselves in this wide world. The task therefore, of modern education, is to take account of what is happening around and to prepare the students who come under our care for a new age. We are today dealing with a new generation of students who are more mature in outlook than the students of our generation. This new student generation, the ones we have in our hands today, has to be rightly understood, and helped to mould themselves into the new age that is thrown in front of us.

The war is over, no shells, no bombs, and the life - becoming somewhat normal, but the children and the women are the mostly affected ones. Many children whom we have admitted, have either lost both the parents, or father or mother died due to the evil war. Some they do not even know as to what has happened to their parents and are hoping to see them one day. Therefore, they are in a disturbed state of mind. The students who were born during the war and bona fide students of this college are also affected by reading and hearing all sort 'of shocking and strange stories and happenings through media and hearsay in the community. Their general attitude towards life and behaviour patterns have changed a lot in the absence of law and order During the last 30 years. Therefore, it is our duty as educators at large to give a new life and hope to all the children under our care and show a clear direction of life with an accepted behaviour pattern. This will improve to cultivate proper attitude towards positive thinking and solving their problems. More over our general observation, is that, all the students are lacking love, care and concern and we are called upon to give that in schools to bridge the need spelled out here. Therefore, I think these are important components of life Side by side of all the scientific and Technological Development, The most astounding expansion that has taken place in human life is the extension of mind which has come by the discovery of the computer. We are depending on the IT more than the human mind. Almost everything a human

can do thecomputer can do. Therefore, we are losing sight of the social life. getting off from the human network and interdependency which are the basis of social binding to form a stable community.

A major role coming in to our educational system today is the breaking down of its traditional patterns and upbringing. It is our duty to promote the uses of modern technology, but also emphasize the importance and make the students be aware of the traditions and culture of our land. Schools have a threefold function: -

- Make the students be aware of the source! of knowledge'
- Involve the students to the learning process with practical training
- Gain knowledge from life and reflect it into action

Grade 5 examination has become a social evil to our younger generation. Students have been put in extra pressure and credits and additional stress in the minds of the young children. The accelerated mechanized coaching system spoils the natural development in the mind set. Further lack of curricular work produce minds without proper foundation. Therefore, from Grade 5 to Grade 6 they face a big gap to bridge likewise at the G.C.E. (AIL) examination the school based assessments in real sense does use help to identify their defects and coaching at the tutor based on examination and the end of tutor based on Exam in action and the end of the day examination results could not the real knowledge acquired. At his Advanced Level, syllabus is wide and schedules work without rest and attend more than one tutor and have very little time to reflect and apply.

Other important aspect is stress. The modem psychological definition of stress is any circumstance that threatens or is perceived to threaten one's well-being and thereby tax one's coping abilities". The major causes of stress are frustration, conflict, any change and external pressure. We need to educate our students to cope with the stress issue.

Education in Sri Lanka has the responsibility in preparing students for able citizenship. It is the duty of any school to teach the students the skills necessary to live a peaceful world and meet the demands of the society. The mental growth of girls and boys need guidance, and we as Educationists must see that they attain and maintain normal growth and development through physical education. I urge all parents due to record the daily scene of school-home tuition-home-school process, to a more conducive program, me of physical fitness and physical education. Leisure time participation in highly competitive team sports such as soccer, basketball, hockey, tennis, badminton, cricket and netball is vitally important to participate often in physical fitness throughout life. Physical fitness is a phase of total fitness from which Students learn to adjust to situations and to understand

to adjust to situations and to understand each other emotionally. Good health and positive character traits are desirable outcomes of physical fitness.

A student with proper physical fitness will continue to be physically and emotionally fit for life. Therefore, let us guide our students to take to at least one sport activity for them to attain and maintain the strength, health, skill, speed and endurance necessary for normal growth and development. Education is constructed on a period of knowledge skills and behaviour. Any employer will look for individuals who demonstrate employability, skills as well as economic cultural and social values such as communication, research, independent learning, problem solving, project management and presentation and critical thinking and behaviour skills are introduced through economic awareness, cultural sensibility career mindedness and self-modulation. Therefore, our foremost duty is to equip our students with appropriate foundation to face challenges with the basic three components knowledge, skills and behaviours. We consider the students given in our hands, as they are not mass produced in a factory, but they are exclusive hand- made precious jewels in God's sight. We are walking now in the 21st century, we see the world moving very fast in all the fields in front of our eyes - may it be technology, Science or travel. In the same way problems too are sky-rocketing among the world countries.

# அதிபர்களின் தலைமைத்துவமும் பாடசாலையின் விளைதிறனில் அதன் வகிபங்கும்



திருமதி நளாயினி கிருஷ்ணமூர்த்தி
BBA (Hon) Dip. in Ed.
யா/விக்னேஸ்வரக் கல்லூரி

**த**லைமைத்துவத்தைப் பற்றி ஆய்வு செய்தவர்கள் தமது ஈடுபாடுகளுக்கேற்ற விதத்தில் அதனை வரைவிலக்கணப்படுத்த முயன்றுள்ளனர். எனவே தான் "தலைமைத்துவத்தை வரை யறைப்படுத்த எத்தனை பேர் முயன்றனரோ அத்தனை வரைவிலக்கணங்கள் உள்ளன". என Stogdill குறிப்பிட்டுள்ளார். கடந்த கால் நூற்றாண்டு காலமாக வெளிவந்த வரைவிலக்கணங்கள் சிலவற்றை Yukl, (1994) பின்வருமாறு தொகுத்துள்ளார்.

Rauch et al (1984) இலக்குகளை அடைவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு குழுவின் செயற் பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவது தான் தலைமைத்துவம்.

Jacobs et al (1990) தலைமைத்துவம் என்பது ஒன்றுபட்ட முயற்சிக்கு அர்த்தத்தை வழங்குவதோடு நோக்கத்தினை அடைவதற்கு ஆர்வத்துடன் முயற்சிப்பதற்கு வழிவகுக்கும் ஒரு செயன்முறை.

தலைமைத்துவம் தொடர்பான வரைவிலக்கணங்கள் அவ்வாறிருக்க, பாடசாலைத் தலைமைத் துவம் தொடர்பாக சின்னத்தம்பி, (2006) பின்வருமாறு கூறுகின்றார். "பாடசாலைகளில் செயற்படும் ஒரு குழுவான மனிதர்களைத் தெளிவான குறிக்கோள்களை நோக்கிச் செயற்படுமாறு செய்வதற்கு தலைமை தாங்குதல் அல்லது வழிகாட்டுதல் தலைமைத்துவம் எனப்படுகின்றது". முகாமைத்துவத்துக்கும் தலைமைத்துவத்துக்கும் இடையில் ஒற்றுமைகள், வேற்றுமைகள் காணப்பட்டாலும் பாடசாலையின் வெற்றிக்கு அதிபரின் வகிபங்கு மிகவும் முக்கியமானதாகும். அதிபர் தலைமைத்துவ இயல்புகளும் ஆற்றலும் கொண்டவராகச் செயற்படவேண்டும். பாடசாலைகளின் வினைதிறனைத் தக்க வைப்பதில் அவர் மூலகாரணி ஆகின்றார். செயற்பாட்டிலீடுபடும் ஆசிரியர்களுடன் நேரடித்தொடர்புடையவர், கற்றல் செயற்பாட்டிலீடுபடும் மாணவர்களுடனும், மத்திய நிர்வாக ஊழியர்களுடனும் பெற்றோர் மற்றும் சமூகத்துடனும், வெளியக முகவர் மற்றும் நிர்வாகம் என்பவற்றுடன் தொடர்புடையவர். அதுமட்டுமன்றி

மாற்றத்தின் முகவராகவும், மாற்றங்களை அறிமுகம் செய்ப வராகவும், அதனைத்தொடர்ந்து இருக்கச் செய்பவருமாவார்.

இவ்வாறான கல்வி சார் மாற்றத்தில் பாடசாலையை மையமாகக்கொண்ட நிர்வாகிகளின் பிரதான பங்கினை Michel Fullen (1991) பின்வருமாறு விபரித்துள்ளார். "பாடசாலை தொடர்பான எதிர்பார்ப்புக்களை இனங்காணல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை விருத்தி செய்தல், அமைச்சு மற்றும் மாகாண அமைச்சின் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் என்பன அதிபர்களின் பொறுப்பு" எனக் குறிப்பிடுகின்றார். பாடசாலைச் சமூகம் முதலான தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் இத்தொடர்புகளின் எல்லைகளையும் தீர்மானிப்பதுடன் தொடர்புகள் விளைதிறனுடன் செயற்படுவதற்கு ஆவன செய்கின்றார். விளைதிறனுள்ள பாடசாலையின் பண்புகள் தொடர்பில் Edmonds, (1979) பின்வருமாறு கூறியுள்ளார்.

1. அதிபரின் விளைதிறன்
2. மாணவர்களின் அடிப்படைத்திறன்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்துதல்.
3. ஏதுவான பாடசாலைச்சூழல்
4. மாணவர் முன்னேற்றம் பற்றிய தொடர் மதிப்பீடு

Mortimore (1988) விளைதிறனுடைய பாடசாலை தொடர்பாகக் கூறியவை

1. குறிக்கோள்களின் அடிப்படையில் அதிபர் முகாமை செய்தல்
2. உயர்மட்ட ஆசிரியர் - மாணவர் இடையிலான தொடர்பாடல்
3. பெற்றோரின் ஒத்துழைப்பு
4. ஆசிரியர் பங்கேற்பு
5. சுமூகமான பாடசாலைக் கவின்நிலை

இதனைவிட தேசிய கல்வி நிறுவனத்தினால் 1992இல் இனங்காணப்பட்ட இலங்கையின் விளைதிறனுடைய பாடசாலைகளின் பண்புகள் வருமாறு.

1. வினைத்திறனுடைய அதிபர்
2. வினைத்திறனுடைய ஆசிரியர் குழாம்
3. விளைதிறனான திட்டமிடலும் ஒருங்கிணைப்பும்
4. கல்வி தொடர்பான மாணவர்களின் உயர் எதிர்பார்ப்புக்கள்
5. ஆசிரியர் மாணவர் மற்றும் பெற்றோர் இடையிலான தொடர்புகள்.

1974 இல் தலைமைத்துவம் பற்றிய ஆய்வாளர்களில் முக்கியமானவரான ஸ்ரொக்டில் சுமார் 3000 தலைமைத்துவ ஆய்வுகளைத் தொகுத்தார். ஏழு வருடங்களின் பின்னர் 1981இல் தலைமைத்துவம் பற்றிய ஆய்வுகளின் எண்ணிக்கை 5000க்கு மேலாக அதிகரித்திருந்தது. இன்று இவ் ஆய்வுகள் பல மடங்குகளாக அதிகரித்துள்ளது. இவை தலைவரின் பண்புக்கூறுகள், திறன்கள், நடத்தைப்பாங்குகள், அதிகார மூலங்கள் மற்றும் சூழ்நிலை அம்சங்களில் மட்டுமன்றி பணியாளரின் அல்லது பின்பற்றுவோரின் பண்புக்கூறுகள், தேவைகள், விருத்தி நிலைகளிலும் மையம் கொண்டுள்ளன. அது மாத்திரமன்றி தலைமைத்துவ விளைதிறனும் இன்று முக்கிய ஆய்வுப் பொருளாகியுள்ளது. (தனராஜ், 2008)

தலைவர்களின் செயற்பாடுகள் பற்றிய ஆய்வுகளில் முக்கியமான ஹென்றி மின்ஸ்பேர்க்கின் ஆய்வில் பத்து வகிபங்குகளை மூன்று வகுதிகளுள் உள்ளடக்கியுள்ளார்.

அவையாவன:

1. ஆளிடை வகிபங்கு
2. தகவல் சார் வகிபங்கு
3. தீர்மானம் மேற்கொள்ளும் வகிபங்கு

தகவல் சார் வகுதியினுள் பாடசாலையினுள் நடைபெறும் செயற்பாடுகளைத் தான் அல்லது உதவி அதிபர் மூலம் கண்காணிக்கின்றார். இதன் மூலம் பெறப்படும் தகவல்களை சரியான நேரத்தில், சரியான நபர்கட்கு, சரியான முறையில் பகிர்ந்தளிக்கின்றார். தகவல்களைப் பெறுவதும் அவற்றைப் பரப்புவதும் அவர் நாளாந்தம் ஆற்றும் முக்கிய வகிபங்காகும். அத்துடன் தான் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் பாடசாலையின் பேச்சாளராகவும் செயற்படுகின்றார்.


தீர்மானம் மேற்கொள்ளும் வகுதியினுள் முயற்சியாண்மையாளர் என்ற அடிப்படையில் பாடசாலையின் அபிவிருத்தி கருதி பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றார். வளங்களைத் திரட்டுவதில், குழுக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மட்டுமன்றி பிரச்சினை தவிர்ப்புக்கான முன்னேற்பாடுகளையும் மேற்கொள்கின்றார். பாடசாலைச் சமூகத்திடமிருந்தும், கல்வித் திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் வளங்களைத் தேவைகட்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு தரப்பினருக்குப் பகிர்ந்தளிக்கின்றார். இதன்போது வளங்களைப் பெறுதல், பகிர்ந்தளித்தல், பல்வேறு தரப்பினருக்கும் பணிகளை வழங்குதல் முதலானவற்றில் அவர் பேரம் பேசுதலில் ஈடுபடுகின்றார்.

மேற்கூறிய மிஸ்பேக்கின் ஆய்வுகள் நிறுவனத்தலைவர்கள் உண்மையில் என்ன செய்கிறார்கள் என்னும் விளக்கத்தை முன்வைத்துள்ளது. அண்மைக்கால ஆய்வுகள் தலைமைத்துவ வகிபங்குகளை இன்னும் வேறுபட்ட முறையில் அணுகுகின்றன. நவீன தலைவர்கள் நிறுவனங்களுக்கான தரிசன நோக்குகளை உருவாக்கி அவற்றைத் தமது பணியாளர்களுடன் இசைவுபடுத்தி, ஊக்கப்படுத்தி முன்னே தள்ளிச் செல்கின்றனர். (தனராஜ் 2008)

மேற்படி ஆய்வின் முடிவுகளிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் விளைதிறனுடைய பாடசாலையின் பெரும்பாலான இயல்புகள் தலைமைத்துவத்தினதும் முகாமைத்துவத்தினதும் கீழ் வருவதை அவதானிக்க முடிகிறது. எனவே இலங்கைப் பாடசாலைகளினது விளைதிறனை மேம்படுத்த அதிபர்களின் தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவத்திறன்களை விருத்தி செய்வது பயனுடையது.

## நூற்பட்டியல்


1. இடைநிலைக்கல்வி நவீனமயமாக்கல் செயல்திட்டம் - II கல்வியமைச்சு (2008)
2. தனராஜ், தை (2008) தலைமைத்துவக் கோட்பாடுகள், சேமமடு பதிப்பகம்
3. Yukl.G (1994) :Leadership in organizations Prentice Hall international, Inc, New Jersey
4. Stogdill, R.M (1950) "Leadership membership ande organization" in Psychological Bulleti



# திண்மக்கழிவகற்றல் பிரச்சினைகளும் முகாமைத்துவமும்

Mr.S.Uthayanathan
(C.B.A Hons, PGDE, MED)
Teacher

இன்றைய நவீன உலகில் நாளாந்தம் எதிர்கொள்ளப்படும் பிரச்சனையாக திண்மக் கழிவுகள் வெளியேற்றப்படுதல் அமைந்துள்ளது. திண்மக்கழிவுகளை அகற்றுவதில் உலக நாடுகள் பலவற்றினதும் நகரங்கள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. திண்மக்கழிவுகள், வீடுகள், வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் போன்ற இடங்களிலிருந்து மண்ணில் வீசி எறியப்படுகின்றன. அத்தேவை யற்ற பயன்பாட்டுக்கு உதவாத திடப்பொருட்கள் சுற்றுச்சூழலை மாசு படுத்துகின்றன. இத்திண்மக் கழிவுகளில் உக்கும், உக்காத கழிவுகள் அடங்குகின்றன. 1990களில் இருந்து திண்மக் கழிவகற்றல் உலகளாவிய பிரச்சனையாக மாறி வருகின்றது. நகரங்களும் அதனைச் சூழ உள்ள புறநகரப் பகுதி களும் பாரிய குடித்தொகை இடங்களாக உள்ளடங்குவதுடன் அவர்கள் நாளாந்தம் பெருமளவு திண்மக் கழிவுகளை உருவாக்கி வருகின்றன. பெரும்பாலும் அபிவிருத் தியடைந்து வரும் நாடுகளின் நகரங் களை அண்டிய பகுதிகள் துர்நாற்றமெடுக்கின்ற கவனிக்கப்படாத முகாமை செய்யப்படாத பாரிய திண்மக்கழிவுகள் குவிக்கப்பட்டிருக்கும் பகுதியாக இருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. நகரங்களிலும் அவற்றைச் சுற்றி உள்ள இடங்களிலும் தூய்மையான சூழலைப் பேணுவ தற்கு வினைத்திறன் மிக்கதும் விஞ்ஞானபூர்வமானதுமான திண்மக்கழிவு முகாமைத்துவம் அவசியமாக உள்ளது.

**திண்மக் கழிவுகளின் வகைகள்**

திண்மக் கழிவுகள் பல்வேறு வகையில் வகைப்படுத்தப்பட்டாலும் பொதுவாக பின்வரும் ஒழுங்கில் வகைப்படுத்தி நோக்கப்படுவதனை அவதானிக்கலாம்.

1. சிதைவடைவன (Garbage)

   இவை நுண்ணுயிர்களின் செயல்களால் எளிதில் சிதைவடையும் இதில் இறந்த தாவர விலங்குப் பகுதிகள் காய்கறி கழிவுகள் போன்ற இயற்கையாக பிரிகையாக்கம் அடையக்கூடிய பொருட் களை குறிப்பிடலாம்.

2. சிதைவடையாதவை (Rubbish)

இவை நுண்ணுயிர்களின் தாக்கத்திற்கு உட்பட்டு சிதைவடையக்கூடியது அல்ல. பிளாஸ்ரிக், கண்ணாடி, உலோகங்கள் போன்றன இதில் அடங்குகின்றன.

3. சாம்பல் கழிவுகள்

மரக்கட்டை, நிலக்கரி போன்றவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தும்போது கிடைக்கும் துணை விளைபொருட்கள் சாம்பலாகும். இது அதிகரித்தல் சூழலில் பாரிய பிரச்சனையாக அமையும்.

4. கட்டுமானத்திடக் கழிவுகள்

கட்டடங்கள் கட்டும் போதும், இடிக்கும் போதும் வெளிப்படும் கழிவுகள் இதில் அடங்கும். இதில் கற்கள், கொங்கிறீட் செங்கற்கள், மின்சாதனப் பொருட்கள் போன்றன இதில் அடங்கும்.

5. கழிவு நீர் சுத்திகரிப்பு கழிவுகள்

கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளில் இருந்து வெளியெறும் (Effluent Treatment Plant - ETP) திடக் கழிவுகள் அடங்கும்.

6. வேளாண்மைக்கழிவுகள்

விவசாயக்கழிவுகளான உமி, தவிடு, கரும்புச்சக்கை மற்றும் தோகை , சோளக்கட்டை,

பண்ணைக் கழிவுகள், கசாப்புக்கடைக்கழிவுகள் என்பன அடங்கும்.

7. ஆபத்தான நச்சுத்திடக்கழிவுகள்

இதில் உலோகங்களில் உள்ள கழிவுகள் (குரோமியம், பாதரசம், கட்மியம்) மற்றும் பூச்சி கொல்லிகள், வெடிபொருட்கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள்(ஊசி, நுண்ணுயிர் உள்ள அறுவகை செய்யப்பட்ட உடற்பகுதி கதிரியக்க திண்மக்கழிவுகள்) ஆகியன அடங்கும்.

இவற்றைவிட உணவுக்கழிவுகள் துணி வகைகள், தோட்டக்கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள் என்பனவும் உள்ளடங்குகின்றன. இவற்றை முகாமை செய்வது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும் சுமையாக உள்ளது.

**உலக ரீதியில் திண்மக் கழிவுகள்**

உலகில் வருடாந்தம் 20-50 மெற்றிக்தொன் இலத்திரனியல் கழிவுகள் சூழலுக்கு விடப்படு கின்றன. அமெரிக்காவில் வருடாந்தம் 12-20 மில்லியன் கணினிகளும், ஜேர்மனியில் 35 இலட்சம் தொலைக்காட்சிகளும் வருடாந்தம் கழிவாக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. எனினும் இன்று

உலகில் அதிக கையடக்கத் தொலைபேசிகளே இலத்திரனியல் கழிவாக சூழலில் சேர்க்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. வளர்ந்த நாடுகளின் கழிவுகள், வளர்ந்து வரும் நாடுகளில் கொண்டு வந்து கொட்டப்படுவது ஒரு வியாபாரமாக இன்று மாறியுள்ளது.

உலகில் உள்ள கண்டங்களில் வடஅமெரிக்காக் கண்டத்தில் ஒரு வருடத்திற்கு 200 மில்லியன் தொன் குப்பைகள் கொட்டப்படுகின்றன. ஒரு நாளில் ஒரு மனிதன் சுமார் 1.6kg கழிவை சூழலுக்கு விடுகின்றான். சனத்தொகை வளர்ச்சி, வருமான அதிகரிப்பு, மக்களின் நுகர்வு வேறுபாடு காரணமாக திண்மக்கழிவுகள் அதிகரித்துள்ளன. நகரங்களில் அதிகமாக உடனடி உணவுகள், பயன்படுத்துவதால் அவை பொதி செய்யப்பட்டு வருகின்ற பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் உறைகள் போன்றவற்றால் பாதிப்படைகின்றன. மனித சமூகமானது சில உக்கலடையாத, உக்கலடையக் கூடிய பொருட்களை சூழலில் இட்டு சூழலின் தூய்மையை அழித்து வருகின்றன.

குறிப்பாக பத்திரிகை, பற்பசைக் குழாய்கள், பழைய உடைந்த தொலைக்காட்சிப் பெட்டிகள், உடைந்த அடுப்புக்கள், உடைந்த வாகனங்கள் போன்றன அபாயகரமான கழிவுப்பொருட்களாகும். அகற்றப்பட வேண்டிய கழிவுகள் சேகரிக்கப்படும் போது அது மனித உடல் நலத்துக்கும், சூழலுக்கும் கேடு விளைவிப்பதாக உள்ளது. உலகில் இன்று கூட்டு நகரங்கள், பாரிய நகரங்கள் தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது. குறிப்பாக 2008ஆம் ஆண்டின் உலக நகர சனத்தொகை 50% தாண்டி விட்டது. அதிலும் ஆசியாக் கண்டத்தில் உலகில் உள்ள 26 மெகலோப் பொலிஸ் (Megalopoish) நகரங்களில் 16 நகரங்கள் உள்ளன. ஆகவே இந்த நகரங்கள் திண்மக்கழிவுகள் அகற்றல் தொடர்பாக பாரிய பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றன.

**திண்மக்கழிவு தொடர்பான பாதிப்புக்கள்**

திண்மக் கழிவுகள் பல சுகாதாரப் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுள்ளன. திண்மக் கழிவு களுடன் தங்களது வாழ்க்கை வட்டத்தை நெருங்கிய முறையில் பேணுகின்ற ஈக்கள், நுளம்புகள், கரப்பான் பூச்சிகள், எலிகள் போன்றன நோய்க் காவிகளாக விளங்குகின்றன. குறிப்பாக டெங்கு, மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரப்பப்படுகின்றன. அத்துடன் திண்மக் கழிவுகளுடன் திண்மக் கழிவகற்றும் இடங்களுக்கு நோய்க் கிருமிகள் வந்து சேர்கின்றன. இதன் காரணமாக வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரப்பப்படுகின்றன.

ஆசிய நாடுகளின் நகரங்களில் திண்மக்கழிவுகள் தொடர்பான பிரச்சனைகள் மிக உச்ச அளவில் காணப்படுகின்றன. திடப்பொருட்களை எரிக்கும்போது வளிமண்டலத்தையும் மண்ணில் இடும் போது நீர் மற்றும் நிலத்தையும் மாசுபடுத்துகின்றன. அத்தோடு நோயை உண்டாக்கும் நுண்ணுயிருள்ள மருத்துவமனைக் கழிவுகள் பல நோய்கள் ஏற்படக் காரணம் ஆகின்றன. மீள்சுழற்சி நடவடிக் கைக்காக பத்திரிகை பொறுக்குபவர்களுக்கு தோல் நோய்கள், சுவாசக்கோளாறுகள், கண் எரிச்சல் மற்றும் இரைப்பை தொற்றுநோய் போன்றவை ஏற்படுகின்றன. குளோரின் உள்ள திணமப் பொருட் களை எரிக்கும் போது அதில் இருந்து வெளிவரும் டையெக்சின், ப்யுரான் போன்ற வாயுக்களை சுவாசிக்கும் போது மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. அதே போல் நச்சுத்திடக்கழிவுகள் உணவுச் சங்கிலி மூலம் உடலில் சேமிக்கப்பட்டு புற்றுநோய் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

**இலங்கையில் திண்மக்கழிவுகள் முகாமைத்துவம்**

இலங்கையில் இன்று பாரிய அரசியல் மனிதாபிமான நெருக்கடியாக திண்மக்கழிவு அகற்றல் அமைந்துள்ளது. அண்மையில் மீதோட்ட முல்லையில் ஏற்பட்ட குப்பை மேட்டுச்சரிவும் அதனுடன் இணைந்த உயிர் இழப்புக்களும் சொத்திழப்புக்களும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் மீது அனைவரது கவனத்தையும் குவியச் செய்துள்ளது. காரணம் கொழும்பு நகர் மெகலோ பொலிஸ் (megalopplish) நகரமாக வளர்ந்து வருவதும் அதன் ஒட்டுண்ணி நகரங்களின் வளர்ச்சியும் இப்பிரச்சனைக்கு முக்கியமான காரணமாக அமைந்துள்ளன. இதைவிட இலங்கை மக்கள் திண்மக்கழிவு தொடர்பாக அடைந்துள்ள விழிப்புணர்வு முக்கிய காரணமாக உள்ளது. திண்மக்கழிவுகளால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் சுகாதார சீர்கேடுகள் போன்றனவும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் பால் கவனத்தை ஈர்த்துள்ளது.

பொதுவாக கழிவகற்றல் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சிறந்த திண்மக் கழிவுகளால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் சுகாதார சீர்கேடுகள் போன்றனவும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் பால் கவனத்தை ஈர்த்துள்ளது.

பொதுவாக கழிவகற்றல் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சிறந்த திண்மக் கழிவுகள் முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்பட்ட பின்னரும் கூட பெரும்பாலான சந்தர்ப் பங்களில் இறுதியான “அகற்றலின்” போது திண்மக்கழிவுகளின் எச்சம் அல்லது அதன் கூறுகள் சுற்றாடலுக்குள், வளிமண்டலத்திற்குள், மண்ணிற்குள் அல்லது நீர் நிலைகளில் கலந்து வருகின்றன. ஆகவே சிறந்த திணமக்கழிவு முகாமைத்துவ முறையானது இறுதியான திண்மக்கழிவின் அளவினையும் சுற்றாடல் மீதான அதன் மோசமான தாக்கத்தினையும் மிகவும் குறைப்பதற்காக இருத்தல் வேண்டும். பொதுவாக கழிவு முகாமைத்துவ விடயமானது மாகாண சபைகளும், உள்ளூராட்சி மன்றங்களினதும் அல்லது மாகாண அரசாங்கங்களினதும் அதாவது துணைத்தேசிய அரசாங்க மட்டங்களின் அதிகார மட்டங்களின் கீழ் வருகின்றது. எனவே இவற்றின் செயற்பாடுகள் வினைத்திறனாக அமைதல் வேண்டும்.

திண்மக்கழிவு முகாமைத்துவ வழிமுறைகளாக குறைத்தல், மீளப்பயன்படுத்துதல் மற்றும் மீள்சுழற்சி என்ற மூன்றையும் உள்ளடக்கிய பாதுகாப்பான கழிவுகளைக் குறைக்கும் முறைகள் மீது பாவனையாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் அறிவூட்டல் கழிவு செய்யப்பட்ட பொருட் களுக்கான சந்தைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தகைய கழிவு செய்யப்பட்ட பொருட்களை அச்சந்தையின் மையங்களுக்கு திருப்பி விடுதல் நிலைத்திருக்கக்கூடிய விதத்தில் நிலங்களை நிரப்புதல் மற்றும் திண்மக்கழிவுகளை சாம்பலாக மாற்றும் வெப்பமின்வலு, பொறிகள் என்பவற்றை பயன்படுத்துதல். இங்கு கழிவுகளை வலுவளமாக மாற்றுதல் முக்கியம் பெறுகின்றது. இறுதியில் கழிவுகளைக் குறைப்பதற்கான நுட்பங்களை நடைமுறைப்படுத்துவது உற்பத்தியாளர்களின் ஒரு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் கழிவுகளை சேகரித்துக்கொள்ளுதல், பாதுகாப்பு தொழிற்பாடு களுக்காக பாதுகாப்பு வேலை ஆட்களை போதுமான எண்ணிக்கையில் வேலைக்கு அமர்த்தல் இதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட திண்மக்கழிவுப்பைகளை அறிமுகப்படுத்தல், குறித் துரைக்கப்பட்ட முடிவிடங்களுக்கு அத்தகைய திண்மக்கழிவுகளை கொண்டு செல்வதற்கென ஒரே வகையான சாதனங்களை அறிமுகப்படுத்தல், இறுதியாக அவற்றை குவிக்கும் இடங்களுக்கு கொண்டு செல்லல் என்பன ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் நியாயாதிக்க எல்லையில் இருந்து மற்றைய உள்ளூ

ராட்சி மன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் நச்சுத்தன்மைகள் புகுவதற்கு நீர்நிலைகள் போன்ற சுற்றாடல் ரீதியில் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு நச்சுத்தன்மை பரவ வாய்ப் பளிக்கும். ஆகையால் மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களையாவது பின்பற்ற வேண்டி இருக்கும்.

பொதுமக்களின் விழிப்புணர்வு ஒரு வெற்றிகரமான திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான முக்கியமானதொரு முன் நிபந்தனை ஆகும். நகர் பிரதேசங்களில் திண்மக்கழிவுகள் முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் ஒரு முற்றிலும் மாறுபட்ட வடிவத்தினை எடுக்கின்றது. நகராட்சி அல்லது உள்ளூராட்சி எல்லைக்குள் வர்த்தகம், கைத்தொழில், வேளாண்மை, சுரங்கம் அகழ்தல் மற்றும் சமூக வீட்டுத்துறை நடவடிக்கைகளின் விளைவாக தற்போது திண்மக் கழிவானது மின் கழிவு மற்றும் கைத் தொழில் துறைக்கழிவில் இருந்து பச்சைக்கழிவு மற்றும் உயிரியல் கழிவு என வேறுபடுத்தப்படுகின்றது. குறைத்தல், மீளப்பயன்படுத்துதல் மற்றும் மீள்சுழற்சி போன்ற சமூக விழிப்புணர்வு திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பொதுமக்கள் விழிப்புணர்வு இன்றியமையாதது ஆகும்.

மீள்சுழற்சிக்குப் பின்னர் எஞ்சி இருக்கும் எந்தவொரு கழிவும் (மருத்துவ சிகிச்சைக்கழிவு அல்லது தொழிற்சாலைக்கழிவு) தீங்கு விளைவிக்கக்கூடியது. எனவே இத்தகைய தீங்கு விளைவிக் கக்கூடிய கழிவுகளில் இருந்து ஏற்படக்கூடிய நீண்டகால ஆபத்துக்களில் இருந்து பொதுச்சுகாதாரம் பாதுகாப்பு மற்றும் பொதுநலம் என்பவற்றை பாதுகாப்பதற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை கையாளுவதும் களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல், சுத்திகரிப்பு மற்றும் அப்புறப்படுத்தல் என்ப வற்றிற்கு விசேட அனுமதிகள் தேவை. ஐரோப்பா கழிவுகளின் துணை வகைகளையும் திடமான கழிவுப் பிரிவுகளையும் வகைப்படுத்துவதற்கான கழிவு விளக்கக்குறியீடு ஒன்று பின்பற்றப்படுகின்றது. இந்த வகைப்படுத்தல் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் சரியான வழிகளை அடையாளப்படுத்த வழி காட்டப்படுகின்றது. இதை எமது நாட்டிலும் கடைப்பிடித்தலும் அவசியமாகும். அத்துடன் சூழல் தாக்கம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது.

திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் தாக்கம் உள்ளூராட்சி மன்ற நியாயாதிக்க எல்லைக்கு அப்பால் செல்வதனால் திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் மத்திய அரசின் கண்காணிப்பு தேவைப்படு கின்றது. சூழல் சட்டங்கள் இறுக்கமாக்கப்படல் அவசியமாகிறது. நாளாந்தம் திண்மக்கழிவுகள் திட்டமிட்ட முறையில் முகாமை செய்யப்படல் வேண்டும். மீள்சுற்றுப்படுத்தல் மிகப் பயனுள்ள பொருளியல் ரீதியாக சாத்தியமானதாகவும் நீடித்து நிலைக்கக்கூடிய உறுதியானதொரு திண்மக் கழிவு முகாமைத்துவக் கருவியாக உள்ளது. பொருட்களை நசிக்கும் தளம், கொட்டும் மையங்கள் போட்டு வைத்தல் மற்றும் மீள் அழித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சனசமூக சேகரிப்பு மையங்கள் அல்லது வீடுகளுக்கு சென்று சேகரித்தல் என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் அனைவரது ஒத்துழைப்புடனும் திண்மக்கழிவு மீள்சுற்று செயற்பாட்டை வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும்.

திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களின் சமூக ஏற்பானது பெரியளவில் திண்மக் கழிவு சுத்திகரிப்பு நிலையச் செயற்பாட்டாளர்கள் அல்லது நில நிரப்புதல் உரிமையாளர்களை திண்மக் கழிவின் தவறான கையாளுகையினால் ஏற்படுகின்ற இழப்புகளுக்கு கடமைப்பாடுடையவர்களாக ஆக்குவதற்கு பொருந்தக்கூடிய சரியான தொகுதி விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் அமுலாக்கத்தில் தங்கியுள்ளது. எந்த ஒரு திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திலும்

நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றமையை கவனிப்பது மிக முக்கியமானதாகும். திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களில் நன்மைகள் கிடைக்கக்கூடிய மாற்று வழிகளை தொடர்பு படுத்தி தீர்மானிக்கப்படல் வேண்டும்.

**முடிவுரை**

உலகின் இன்றைய நவநாகரிக போக்கானது திண்மக் கழிவுசார் சூழல் பிரச்சினைகளுக்கு அடித்தளம் இடுவது போன்றமைந்துள்ளது. உலக நகரமயமாதல் போக்கானது துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதனால் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான விடயங்களிலும் தொடர் தேர்ச்சித் தன்மை அடிப்படையில் அக்கறை காட்டப்படுவது அவசியமாகின்றது. ஒவ்வொரு வளர்ந்து வரும் நாடுகளிலும் முதன்மை நகரங்கள் தோற்றம் பெறுவதும் அவற்றின் செயற்பாடுகள், சனத்தொகை அடர்த்தி என்பனவும் பிரச்சனைகளின் தீவிரத்தை துரிதப்படுத்தியுள்ளது. எனவே திண்மக்கழிவுகளை குறைத்தல், மீளப் பயன்படுத்தல் மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளுக்கு சிறப்பான பொறிமுறைகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்குவது அரசுகளின் கடமைகளாக மாறியுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பொது மக்களின் விழிப்புணர்வு வெற்றிகரமான திண்மக் கழிவு முகாமைத்து வத்திற்கு அடிப்படையாகும். எதிர்காலத்தில் உலகில் எந்த ஒரு நாடுகளும் திண்மக் கழிவுகளை கையாளுதல் தொடர்பான விடயங்களில் மெத்தனப்போக்கை கடைப்பிடிக்க முடியா தென்பது புலனாகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. சூழல் எம்.ஐ.எம்,(2016) மானிடப்புவியியல், குறிஞ்சி நேத்திரா அச்சகம், கண்டி.
2. அன்ரனி நோபேட், எஸ், (2007) சூழல் புவியியல் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம்.
3. உதயநாதன் V.S.(2007) சூழல் புவியியல் , செவ்வானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு
4. மத்திய வங்கி ஆண்டறிக்கை (2012) திண்மக்கழிவு முகாமைத்துவம், மத்திய வங்கி.



# விளையாட்டுக்களில் தொழில்நுட்பத்தின் வகிபங்கு

Mr.S.Gowsigan
B.Sc(PES), B.Ed. Ad.Dip.in.PE, SP.Trd.in.PE
POG
J/Vigneswara CollegeKaraveddy

மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் விளையாட்டுக்கு முக்கிய பங்குண்டு. அதிலும் இன்றைய பரபரப்பான காலகட்டத்தில் உணவு முறைகளில் ஏற்பட்ட மாற்றம் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபட நேரம் ஒதுக்க முடியாத காரணத்தால் பல்வேறு நோய்களுக்கும் அடிமையாகி வருகின்றோம். விளையாட்டை உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஓர் முறையாகப் பயன்படுத்துபவர்களும் இருக்கின்றார்கள். அதேசமயம் விளையாட்டை தொழில்முறை ரீதியாக அணுகுபவர்களும் இருக்கின்றார்கள். இந்த இரண்டு தரப்பினரும் விளையாட்டை அணுகும் முறை அடிப்படையில் வேறுபாடானதே. ஆனாலும் உள்ளூரில் நடைபெறும் போட்டிகளில் சர்வதேச ரீதியாக நடைபெறும் போட்டிகளிலும் வீரர்களின் உச்சபட்சத் திறமைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு துல்லியமான முடிவுகள் பெறப்பட வேண்டும் என்பதே விளையாட்டுத்துறை சம்பந்தப்பட்டவர்களின் பெரு விருப்பாக இருக்கின்றது.

இன்றைய இலத்திரனியல் யுகத்தில் எந்தவொரு துறையும் தனித்து இயங்க முடியாது. இன்னொரு துறையோடு பின்னிப்பிணைந்தே காணப்படுகின்றது. அந்தவகையில் விளையாட்டு ஓர் தனித்துறையாக விளங்கினாலும் அதுவும் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியை உள்வாங்கியே காணப்படுகின்றது என்பது வெளிப்படையான ஒன்றே. மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொல்வார்கள். அந்த வகையில் புதுப்புது தொழில்நுட்ப உத்திகள் காலத்திற்குக்காலம் உருவாக்கப்படும் பொழுது அவற்றை உள்வாங்கி தன்னை எப்போதும் தகவமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு துறை தொழில் நுட்பத்துறையாகும்.

இன்று சர்வதேச ரீதியாக நோக்கும்பொழுது விளையாட்டுத்துறையில் தொழில்நுட்பக் கையாளுகைகள் ஏற்படுத்திய பாய்ச்சல் பிரமிக்கத்தக்கதாகவே உள்ளன. இத்தகைய நிலை

தனியே வீரர்களுக்கு மாத்திரமல்லாமல் நடுவர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் என்று பலதரப்பட்டவர்கள் போட்டியை குழப்பமின்றி இலகுவாக நடத்திச் செல்வதற்கும் பார்வையாளர்கள் தெளிவாகப் போட்டிகளைக் கண்டு களிப்பதற்குமான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

தொழில்நுட்பத்தின் வருகைக்கு முன்னதாக போட்டிகளில் துல்லியமான முடிவுகளைப் பெறுவதிலும் வீரர்களின் செயல்திறனில் (Performance) அதிகரிக்கும் முன்னேற்றத்தையும் அறிந்து கொள்வதற்கு பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. ஆனால் இன்று தொழில் நுட்பத்தின் வருகை அதனை மிக இலகுவாக மாற்றிவிட்டது.

அந்த வகையில் விளையாட்டுத்துறையில் தொழில்நுட்பக் கையாளுகைகள் இரண்டு விதங்களில் தாக்கத்தைச் செலுத்துகின்றன எனலாம்.

1. வீரர் என்ற தனி மனித ஆளுமையில் அவை ஏற்படுத்தும் தாக்கம்.
2. விளையாட்டுக்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் அதன் பங்கு.

மெய்வல்லுநர் போட்டிகளில் Stop Watch இனுடைய கண்டுபிடிப்பு மிகத்துல்லியமான முறையில் நேரத்தைக் கணிப்பிடுவதற்கு உதவுகின்றது. அத்தோடு போட்டியின் போது பார்வையாளர்களும் வீரர்கள் ஓடும் நேரத்தை பரீட்சித்துப்பார்ப்பதற்கு ஏற்ற வகையில் மைதானத்தில் Stop Clock வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய Stop Watch வசதிகள் சர்வதேச ரீதியில் இன்று கையடக்க விலையில் கிடைப்பதனால் வீரர்கள் தங்கள் செயல்திறனில் (Performance) நாளடைவில் ஏற்படும் துரித மாற்றங்களை உடனுக்குடன் கண்டறிந்து தம்மைச் சுயபரிசோதனை செய்வதற்கு உதவுகின்றது. அத்தோடு வீரர்கள், பயிற்சியாளர் இல்லாமலேயே இணையத்தளத்தின் மூலம் சுயாதீனமாக பல்வேறுபட்ட விளையாட்டுப்பயிற்சி முறைகளை Theory ஆகவும் Practical ஆகவும் பெற்றுக்கொள்வதற்கும் உதவுகின்றமை தொழில்நுட்பம் வீரர்களின் தனிமனித ஆளுமையில் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு உதாரணங்கள் எனலாம்.

போட்டிகளில் ஒவ்வொரு பிரச்சினைகள் ஏற்படும் பொழுதே அதற்கான தீர்வாக தொழில் நுட்பத்தின் தேவையும் அமைந்து விடுகின்றது. 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்து - ஜேர்மனி அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி ஒன்றில் இங்கிலாந்தின் பிராங் லம்பேர்ட் அடித்த பந்து கோல் எல்லைக்கோட்டைத் தாண்டிய பின்னரே தடுக்கப்பட்டது. ஆனாலும் நடுவர் கோல் கொடுக்கத தவறியதால் பலத்த சர்ச்சையை அது உருவாக்கி இருந்தது. இதுவே பின்னர் கோல்லைன் தொழில்நுட்பத்தை (Goal Line Technology) உதைபந்தாட்டத்தில் பயன்படுத்த வேண்டியதற்கான அவசியத்தைத் தோற்றுவித்திருந்தது.

அந்த வகையில் தொழில்நுட்பக் கையாளுகைகளை விளையாட்டுக்களில் பயன்படுத்தும் பொழுது அவை ஏற்படுத்தும் முக்கிய அம்சங்களாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. வீரர்களின் விளையாட்டு செயல் திறனையும் (Performance) பயிற்சியாளர்களின் அறிவுத்திறன் சார் அளவையும் மேம்படுத்த உதவும்
2. விளையாட்டு செயல்திறன் (Performance) கால அளவீடுகளில் துரிதமான மாற்றங்களை உடனுக்குடன் அவதானிக்க உதவும்
3. நடுவர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் காலம் தாழ்த்தாது துல்லியமான முடிவுகளை எடுப்பதற்கு வழிசமைக்கும்

4. விளையாட்டுப்போட்டிகளில் வீரர்கள் பயன்படுத்திக்கொள்ளும் உபகரணங்கள் மற்றும் ஆடைகளின் வடிவமைப்பு போன்றவற்றை மேம்படுத்த உதவும்.
5. பார்வையாளர்களுக்கு மிகச் சிறந்த போட்டியை கண்டு களிப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும்.

விளையாட்டுத்துறையில் போட்டிகளை வீடியோ மூலம் பதிவு செய்வது இன்று சர்வசாதாரண மானாலும் அதன் அறிமுகம் விளையாட்டுலகில் ஏற்படுத்தியது ஒரு புரட்சி என்றே கூறலாம். வீடியோ பதிவு என்பது உண்மையில் ஆவணப்படுத்தலின் ஒரு பகுதியே. அந்த வகையில் எல்லாப் போட்டிகளும் தற்போது ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றமை எதிர்காலவியல் நோக்கில் மிகுந்த பலனைத் தரவல்லது. மேலும் எதிரணிகள் விளையாடும் போட்டிகளின் வீடியோ பதிவுகளை பகுப்பாய்வு செய்து (Video Analysing) அவர்களின் பலவீனங்களைக் கண்டறிந்து போட்டிகளை இலகுவில் வெல்வதற்கு உதவி புரிகின்றன.

அத்தோடு மைதானங்களில் பொருத்தப்பட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட வீடியோக்கள் போட்டிகளின் பல்பரிமாணத்தை வெளிப்படுத்துவதனால் சிக்கலுக்குரிய பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வு வழங்குவதோடு போட்டியை ரசிக்கும் ரசிகர்களுக்கும் பரவசத்தை வழங்குகின்றன. மேலும் மைதானத்தில் சில அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதாவது ரசிகர்களிடையே மோதல், வீரர்கள் மீது இனவெறி ரீதியிலான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டால் மைதானங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரீவி கெமராக்களின் மூலம் அத்தகைய ரசிகர்கள் இனங்காணப்பட்டு அவர் களுக்குத் தண்டனை வழங்கிக் கொடுத்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. இவையெல்லாம் சேர்ந்தே ஒரு போட்டியை முழுமைப்படுத்துகின்றன என்ற வகையில் இத்தகைய வசதிகள் தொழில்நுட்பங்கள் எமக்குத் தந்த வரப்பிரசாதங்களே.

உதைபந்தாட்டத்தில் மைதான நடுவர்கள் மற்றும் எல்லைக்கோட்டு நடுவர்கள் ஆகியோர் களுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் வயர்லெஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் சிறந்த உதாரணம். போட்டிகளின் பொழுது வீரர்கள் முறை தவறி விளையாடும் பொழுது மைதான நடுவரின் கண்களுக்கு அது தெரியாதுவிட்டாலும் தொலைக்காட்சி நடுவர் வாயிலாக அதனை உறுதிப்படுத்தி தவறிழைத்த வீரர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதிலும் தொழில் நுட்பத்தின் வகிபங்கு காத்திரமானது. இது விளையாட்டை கண்ணியமான முறையில் விளையாட வேண்டும் என்ற எண்ணத்தை வீரர்களுக்கும் போட்டியை நடுநிலைமையோடு கண்காணித்து விளை யாட்டின் கண்ணியத்தை பேண வேண்டியதன் அவசியத்தை நடுவர்களுக்கும் உணர்த்துகின்றது.

அதுபோல கிரிக்கெட்டில் மூன்றாவது நடுவரின் உதவியோடு பல்வேறு சிக்கலான பிரச்சனை களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளதோடு DRS முறையைப் பயன்படுத்தி மைதான நடுவர்களின் தீர்ப்பையே மறுபரிசீலனை செய்யும் முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் விளையாட்டில் தொழில் நுட்பத்தின் வருகைக்கு கிடைத்த வெற்றி எனலாம்.

Hawk - Eye தொழில்நுட்பம் என்பது கணினியை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில்நுட்பம் ஆகும். கிரிக்கட், உதைபந்தாட்டம், ரெனிஸ் பட்மின்ரன் கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் வீரர்கள் அடிக்கும் பந்து எல்லைக் கோட்டுக்குள் உள்ளே விழுந்ததா அல்லது வெளியே, விழுந்ததா என்பதைக் கண்காணித்து போட்டி முடிவுகளை இயன்ற வரை தவறில்லாமலும் பக்கச்சார்பின்றியும் வழங்குவதற்கு இத் தொழில்நுட்பம் உதவுகிறது . 2001 ஆம் ஆண்டு இத் தொழில்நுட்பம் கிரிக்கட்

போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதன் வெற்றி பின்னர் மேற்கூறிய விளையாட்டுக்களிலும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளது.

மேலும் விளையாட்டுத் துறையில் Video Conference மூலம் பல்வேறு நாட்டுப் பயிற்றுனர்களது பயிற்சி முறைகளையும் இருந்த இடத்தில் இருந்தே அறிந்து கொள்வதற்கும் தொழில்நுட்பம் கைகொடுக்கின்றது. அதிலும் ஒரு தொடருக்கான அணியைத் தெரிவுசெய்யும் போது அனைத்து தேர்வுக்குழு உறுப்பினர்களும் ஒரே இடத்தில் ஒன்று கூடி அணியைத் தெரிவு செய்வதற்கான நேரம் இல்லாமல் போனால் Video Conference மூலம் வெவ்வேறு இடங்களில் இருந்து இன்று அணியைத் தெரிவு செய்து வழங்குகின்ற நடைமுறையும் உள்ளது.

இக்கட்டுரையில் இதுவரை கூறிய உதாரணங்கள் இன்று எந்தவொரு விளையாட்டிலும் தொழில்நுட்ப கையாளுகையின் தாக்கம் தவிர்க்க முடியாமல் இருந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றன. ஆனாலும் தொழில்நுட்பத்தின் வருகையினால் மனித வலு வீணடிக்கப்படுவதான அல்லது நடுவர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதான குற்றச்சாட்டுக்கள் இல்லாமலும் இல்லை. ஆனாலும் போட்டிகளில் துல்லியமான முடிவுகளைக் கருத்திற் கொள்ளும் பொழுது அது தவிர்க்க முடியாது என்றாலும் அதன் மூலம் கிடைக்கப் பெறும் முடிவுகள் அனைத்தும் நூறு வீதம் சரிதானா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்கின்றன.

குறிப்பாக கிரிக்கட் போட்டிகளில் Hot spot தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிடைக்கும் சில முடிவுகளை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். அத்தோடு தொழில்நுட்பத்தைக் கையாளும் நடுவர் குழாமில் அது குறித்துப் போதிய பரிச்சய மின்மையாலும் அவற்றைக் கையாளுபவர்களும் மனிதர்கள் தான் என்ற காரணத்தினாலும் சில சந்தர்ப்பத்தில் தவறுகள் ஏற்படுவதையும் தவிர்க்க முடிவதில்லை.

அதேசமயம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி ஆடை வடிவமைப்பு மற்றும் விளையாட்டு உபகரண உற்பத்தி போன்ற துறைகளில் இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பினை அதிகரிப்ப தற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி உள்ளதையும் மறுக்க மடியாது.

இறுதியாக தொழில்நுட்பத்தால் விளையாட்டு உலகு அடைந்த நன்மைகள் அதிகமே. ஆனாலும் விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல பொதுவாகவே வளர்முக நாடுகள் பலவற்றிலும் பெரும்பாலான உள்ளூர் பிராந்தியங்களிலும் இன்றும் தொழில்நுட்பக் கையாளுகை எட்டாக் கனியாகவே உள்ளது. இது காலத்தோடு இயைந்து செல்ல முடியாத அவலத்தையே சுட்டிக் காட்டு கிறது. ஒருபுறம் தொழில் நுட்பக் கையாளுகைகளைப் பயன்படுத்துவதற்கான விருப்பு சம்பந்தப் பட்டவர்களிடம் இருந்தாலும் அதனை உள்வாங்கும் அளவுக்கு பொருளாதார எழுச்சி இன்மையால் தொடர்ந்தும் பின்னடைவைச் சந்திக்க நேரிடுகின்றது.

# விக்னேஸ்வரக் கல்லூரி தந்த புலமைப் பாரம்பரியம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி



**திருமதி நாளினி கணபதிப்பிள்ளை**
**ஆசிரியை :** M.A **தமிழ்** M. Phil (Edu)

**க**ல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்த மொழியாம் தமிழ் மொழியின் மேன்மை உலகமெலாம் பரவுவதற்காய் தமிழறிஞர்கள் பல்வேறு பணிகளைக் காலந்தோறும் மேற்கொண்டு வந்ததன் விளைவாகவே உலகத் தமிழராய்ச்சி மாநாடுகளும் உலகச் செம்மொழி மாநாடும் அரங்கேறின. இம் மாநாடுகளில் ஈழத்தறிஞர்களின் பங்களிப்பு காத்திரமானதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்டவர் எனும் பாங்கில் தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள் நினைவு கூரப்படுவது போல் தமிழ்மொழியின் செம்மொழி அந்தஸ்தை உலகெங்கும் எடுத்துரைத்த உலகச் செம்மொழி மாநாட்டின் தலைவர் என்ற வகிபங்கின் மூலம் பேராசிரியர் கா.சிவத்தம்பி தன்னை உருவாக்கிய விக்னேஸ்வரக் கல்லூரியையும் உலக வரைபடத்தில் குறித்துக் கொணடார். அது மட்டுமல்ல 19ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தால் 'நாவலர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஆறுமுகநாவலரை விதந்து பேசுவது போல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர் என சுவாமி விபுலானந்தரைப் போற்றுவது போல தமிழகத்திலும் உலக அரங்கிலும் சமகால தமிழ் ஆய்வியல் மற்றும் திறனாய்வியல் என்பவற்றின் திசையறி கருவியாகவும் விமர்சன மாமலையாகவும் முன்னோடியாகவும் திகழ்ந்தமையால் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் போற்றத்தக்கவரே. தன் வாழ்க்கைக் காலத்திலேயே தன்னைப்பற்றிய ஆய்வுகளையும் புகழ் மொழிகளையும் கேட்ட பெருமையும் இவரைச் சார்ந்ததே. இவர் தம் அறிவாற்றல் திறன் கண்டு சென்னைப் பல்கலைக்கழகம் 2005ஆம் ஆண்டில், 20ஆம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் வகிபாகமும் திசைவழிகளும் என்ற தலைப்பில் நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கு இவர் தம் பெருமையை எடுத்துரைக்கும் இக் கருத்தரங்கின் தனித்துவம் பற்றி பேராசிரியர் வா.செ.குழந்தைச்சாமி. "படைப் பாளிகளுக்கு இவ்வகையான ஆய்வுகள் நடைபெறுவதை நான் கண்டிருக்கிறேன். முதன் முதலாக ஆய்வாளனுக்கு நடக்கும் கருத்தரங்கு" எனப் பாராட்டிக் கூறுவார். இவர் தம் தமிழியல் ஆய்வின் ஆழம் கண்ட அறிஞர்கள் நடமாடும் கலைக்களஞ்சியம் என்றும் சமூகவிஞ்ஞானி, ஈழம் தந்த

வேழம், தமிழாய்வின் சிகரம், புலமை சகாப்தம், ஆய்வுலக கலங்கரை விளக்கு எனப் பல பெயர்களால் சிறப்பித்துள்ளனர். இத்துணை பெருமை மிகு பேராசிரியர் அவர்கள் கரவெட்டியால் ஈழத்துக்கும் தமிழ் உலகிற்கும் கிடைத்த பெருஞ் சொத்து. விக்னேஸ்வராக் கல்லூரியின் விலைமதிக்க முடியாத முத்து எனலாம்.

**செயலாற்றுகைத்தளம்**

பேராசிரியர் அவர்கள் ஈழத்து இலக்கியப் புலத்தின் முன்னணி அறிஞர், பழந்தமிழ் இலக்கண, இலக்கியம், நவீன இலக்கியம். தமிழ் நாடகம், இலக்கிய வரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல் தொடர்பியல் ஆகிய பல்வேறு துறைகளில் ஆய்வு மேற்கொண்ட தலைசிறந்த விமர்சகர், முற்போக்கு இலக்கிய கருத்துக்களை முன் வைத்ததவர். இவர் செயலாற்றுகைத்தளம் பன்முகப் பரிமாணங் களைக் கொண்டதாக அமைந்தது. ஆசிரியராக, நடிகராக மொழிபெயர்ப்பாளராக, கலைச்சொல் ஆக்குபவராக, உயர்நிலை ஆய்வாளராக, பேராசிரியராக, பல்கலைக்கழக துணைத்தலைவராக, பாடத்திட்ட வடிவமைப்பாளராக கலை இலக்கியத் திறனாய்வாளராக, சமூக மேம்பாட்டாளராக, இதழாசிரியராக, பதிப்பாசிரியராக என விரிந்து பரந்து காணப்பட்டது.

"யாதானும் நாடாமல் ஊராமல்" என்ற பொய்யா மொழிப்புலவர் வள்ளுவரின் வாக்கின் வழி வாழ்ந்து காட்டிய பெருந்தகையும் இவரே. கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் மட்டுமன்றி எல்லா நாடுகளுமே நாடாகும் எவ்வூருமே ஊராகும் என்ற உண்மை, உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் பேரன்பிற்குரிய பேராசானாக திகழ்ந்த நிகழ்வுகளாலும் இவர் மறைவின் போது உலகெங்கும் நிகழ்த்தப்பட்ட இரங்கற் கூட்டங்களாலும், இணையத்தளங்கள் ஊடாக வெளிவந்த இரங்கற் செய்தி களாலும் நிரூபிக்கப்பட்டது. மேலும் இவர் தம் சர்வ வியாபகத்தை ஈழத்துப் பல்கலைக்கழகப் பேராசிரியராக மட்டுமன்றி உலகெங்கும் வருகை நிலைப் பேராசிரியராகவும், அதிதிப் பேராசிரியராகவும் ஆய்வுக்கட்டுரை வாசிப்பவராகவும் கருத்தரங்கு வளவாளராகவும், புலம்பெயர் தமிழ்க்குழந்தைகளின் பாடநூலாக்க குழுத்தலைவராகவும் பணியாற்றியமை மூலம் அறிய முடியும்.

பேராசிரியர் அவர்கள் இலங்கை வித்யோதயப் பல்கலைக்கழகம் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கிழக்குப் பல்கலைக்கழகம், களனி வித்யாலங்காரப் பல்கலைக்கழகம் என்பவற்றில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் கடமை யாற்றியதுடன் தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், இந்திரா காந்தி திறந்த பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்பவற்றில் வருகை நிலைப் பேராசிரியராகவும் செயற்பட்டார். மேலும் டில்லிப் பல்கலைக்கழகம், தென்னாசிய கல்விக் கருத்தரங்கு நிறுவனம் என்ப வற்றில் அதிதிப் பேராசிரியராகவும் கடமையாற்றினார். சர்வதேச ரீதியாகவும் இவருடைய தமிழ்ப்பணி தொடர்ந்து அமெரிக்க கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் , ஹாவார்ட் பல்கலைக்கழகம் கலிபோர்னியா பல்கலைக்கழகம், சுவீடன் உபசாலாப் பல்கலைக்கழகம் என்ப வற்றோடு ஸ்கன்டினேவியன் ஆசிய கல்விக்கான நிறுவனத்தின் வளவாளராக டென்மாரக், சுவீடன், நோர்வே, பின்லான்ட் ஆகிய ஒன்பது பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாற்றியதுடன் வருகை தரு பேராசானாகவும் அதிதியாகவும் விளங்கினார். மேலும் மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் இலக்கிய வளர்ச்சி பற்றி அந்நாடுகளுக்கு சென்று ஆய்வரங்கு நடத்தினார். ஜேர்மன் நாட்டின் புலம்பெயர் தமிழர் பாடநூலாக்கத்திற்கு பேராசானாய் வழிகாட்டினார் மேலும் உலகத்தமிழராய்ச்சி மாநாடு அமெரிக்க இலக்கிய ஆய்வுகள் தொடர்பான மாநாடு, தொல்காப்பிய கவிதையியல் தொடர்பான மாநாடு அமெரிக்காவில் ஆசியக் கற்கைகள் மாநாடு, சிங்கப்பூரில் நடந்த முதலாவது உலக ஆசிரியர் மாநாடு கனடாவில் நடைபெற்ற உலக மாநாடு என இவரது ஆய்வுரைகள் வழங்கும் பணி சர்வ வியாபகத் தன்மை பெற்றது.

**விருதுகள்**

இவர் தம் உயிர்ப்பு நிலை சேவை (ஆத்மார்த்த) கண்ட இலக்கிய உலகம் பல்வேறு விருது களையும் வழங்கிக் கௌரவித்தது. ஈழத்தில் மட்டுமன்றி உலக நாடுகளாலும் கௌரவிக்கப்பட்ட பேரறிவுத்திறன் வியக்கத்தக்கது.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலே மகிமை இல்லை
திறமான புலமை எனின் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்ற பாரதியார் பாடல் அடிகளுக்கு இணங்க ஈழத்தில் மட்டுமன்றி தமிழ்நாடு முதல் மேலைத் தேயம் வரை விருதுகளினால் சிறப்பிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்ட உயரிய விருதான திரு.வி.க.விருது அவரின் தனித்துவத்தை உலகிற்கு உணர்த்தியது. மேலும் உயர்கலை விருது (தமிழ் எழுத்தாளர் மாநாடு மட்டக்களப்பு) சாகித்திய ரத்னா அரச இலக்கிய உயர் விருது (இலங்கை) கொடகே விருது DSI சிதுவில் இலங்கை சிலுமின விருது தமிழ் (இலங்கை) பவளவிழா விருது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) ஹரசாரா பரணமா விருது (றோயல் கல்லூரி) சிறப்பு விருது (இலங்கை புத்தக வெளியீட்டுக் கூட்டுத்தாபனம்) சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (இலங்கை) இலக்கிய தகைமையாளர் விருது Award of D.Lit (Honoris causa) (யாழ் பல்கலைக்கழகம்) பங்கா விருது ( இலங்கை ஜப்பான் நட்புறவுக் கழகம்) 1998ஆம் ஆண்டுக்கான சிறந்த மனிதர் விருது (ஆளுநர் வடமாகாணம்) தமிழ் இலக்கிய தகைசார் விருது (கொழும்பு பல்கலைக்கழகம்) 20ஆம் நூற்றாண்டின் புலமையாளர் விருது, இருபதாம் நூற்றாண்டு பேரறிஞர் விருது (International Biographical Center Cambridge America) என பல்துறை சார் உயரிய விருதுகளைப் பெற்று இலக்கிய உலகில் இருபதாம் நூற்றாண்டின் மாமனிதராகத் திகழ்ந்தார். இவ்வாறு பல்வேறு துறைகளில் விருதுகளைப் பெற்ற ஈழத்துப் பேராசிரியர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

**அவையடக்கப் பண்பு**

பன்முக ஆளுமையால் உலகளாவிய ரீதியில் பாராட்டுக்கள் விருதுகள் குவிந்தபோதும் அவை யடக்கத்தில் அவரை விஞ்ச யாருமில்லை என்றே கூறலாம். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் எப்போதும்

"தமிழை வளர்த்தவர்கள் யாருமில்லை
எல்லோரும் தமிழால் வளர்ந்தவர்களே"

என எல்லாப் புகழையும் தமிழுக்கே அர்ப்பணித்தார். மேலும் பெயருக்குப் பின் தகைமைகள், பட்டங்கள் எழுதவே கை கூசுகிறது என்றும் தனது ஆற்றலுக்கு தான் கற்ற விக்னேஸ்வர கல்லூரிதான் காரணம் என பெருமைகளை கல்லூரிக்கே சமர்ப்பித்தார். "எனது தந்தையார் கற்ற பாடசாலையாகிய விக்னேஸ்வரா சென்றேன். தலைமுறைத் தொடர்பை ஏற்படுத்திய விக்னேஸ்வரா வாழ்வு முக்கி யமானது. அக்காலத்தில் தான் எனக்கு இவ்வளவு பெரிய ஆளுமையை செயற்படுத்த அனுபவம் உருவானது. எனது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு ஓர் அரங்கம் போல் தொழிற்பட்டது எனலாம்". (ஏணி 1993 எனற பேரா. கா.சிவத்தம்பி அவர்களின் பேட்டியாலும், அவர் உயரிய விருதான திருவிக விருது பெற்ற வேளையில் ஏற்புரையில் "திரு.வி. க.விருது பெறும் வேளையில் என் பெற்றோர் பல்கலைக்கழக நிலைக்கு முன்னர் எனக்கு தமிழார்வம் ஊட்டிய ஆசிரியர்களை நினைக்காமல் போற்றாமல் இருக்க முடியவில்லை."

எனக் கூறியதாலும் கல்லூரிக்கும் ஆசான்களுக்கும் முதன்மை அளிப்பதைக் காணமுடிகிறது. தொடர்ச்சியாக "தலைவர் அவர்களே சுவாமி விபுலானந்தர் கா.சு. பிள்ளை, தெ.பொ.மீ, வையாபுரிப் பிள்ளை, கணபதிப்பிள்ளை, எனது நண்பன் கைலாசபதி எனற கருடன்கள் பறந்த இந்தத் தமிழியல் வானில் நானும் பறக்கிறேன்"

எனத் தன்னடக்கமாக கூறும் இப்பண்பானது வேறெந்தப் பேராசிரியரிடமும் காணாத பண்பென்றே கூறலாம். இதற்கு அவர் தான் பிறந்த கிராமமான கரவெட்டி ஊரின் சித்திரை என்று சிறுப்பதுமில்லை. பங்குனி என்று பருப்பதுமில்லை போன்ற பண்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கியமையே காரணமெனலாம்.

பன்முக ஆளுமை கொண்டவராகவும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராகவும் அறிவின் சிகரமாகவும் அனைவராலும் போற்றப்பட்ட இவர் தன்னை ஒரு போதும் சிகரமாக கருதியதில்லை.

**தோல்விகளே சித்திகளாக**

"ஒருவனது வெற்றியை கணக்கிடும் போது அவன் தன் வாழ்நாளில் அடைந்த உயர் நிலையிலே வைத்து அல்லாமல் தனது முயற்சியின் போது அவன் கடந்து வந்த இக்கட்டுக்களை வைத்தே அளவிடவேண்டும்" என்ற ஜோர்ஜ் லாவிங்டனின் கருத்திற்கு பேராசிரியர் சிவத்தம்பியின் வாழ்க்கையே எடுத்துக்காட்டு. யோகசுவாமியினால்" சிவத்தம்பி" எனப் பெயர் சூட்டப்பட்டு பிற்காலத்தில் அறிஞராவான். என ஆசீர்வதிக்கப்பட்ட போதும் இவர் சந்தித்த சவால்கள் தோல்விகள் இளைய தலைமுறைக்குப் பாடமாக அமையும் என்றே கூறலாம். கொழும்பு ஸாகிறாவில் எச்.எஸ்.ஸி படித்த காலத்தில் பரீட்சை நெருங்கும் வேளையில் நெருப்புக்காய்ச்சல் வந்து மூன்று கால மாதம் சிரமப் பட்டபோது எல்லோரும் பரீட்சை எடுக்கவேண்டாம் எனத் தடுத்தபோதும் கேட்காமல் எடுத்து தோல்வியைத் தழுவினார். ஆனாலும் பெற்றோர் ஆசிரியர்களின் ஆறுதல் வார்த்தைகளால் மன முடையாது அடுத்த தடவைகளில் எடுத்து சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றதும் நன்மையாகவே அமைந்தது. காலப்பின்னடைவு மற்றோர் விதத்தில் பேராதனைப் பல்கலைக்கழகம் செல்லவும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகிய ஆசிரியர்களையும் பேராசிரியர் கைலாசபதி எனும் நல்ல நண்பனையும் பெற்றுக்கொள்ளவும் உதவியது. எந்த இழப்பும் உடனே துன்பம் தரினும் அதுவும் நன்மைக்கே என்ற படிப்பினை தந்தது இது பற்றி பேராசிரியரே " இது பற்றி இளைய சமுதாயம் அறிந்திருப்பது அவசியம். எதுவும் இலேசாகக் கிடைக்கவில்லை தோல்விகள் துன்பங்களை சந்தித்த பின்பே கிடைத்ததும், புகுமுகப் பரீட்சைகளில் தோல்வி சாதாரண பொதுக்கலைப் பட்டதாரி 3ஆம் வகுப்புச் சித்தி என்ற போதும் தளரா முயற்சியால் உயரிய இடம்பெற்றேன். பெற்றோர் செய்த புண்ணியமும் இறைவழிபாடுமே துணை நின்றது..." என்று தன்னடக்கத்துடன் கூறுவார். மேலும் P.D ஆய்வை பல்வேறு போராட்டங்களின் மத்தியில் பாமிங்காம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தொம்சனின் கீழ் முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் கூறிய கருத்துக்கள் மனதில் நிலை நிறுத்த வேண்டியவை.

"இவை யாவும் எனது திறமையாலோ புத்திசாலித்தனத்தாலோ வந்ததென்று நான் நிச்சயமாக சொல்லமாட்டேன். ஆனால் நான் சொல்லுவதும் மனப்பூர்வமாக நம்புவதும் இதற்கெல்லாம் காரணம். எமது தாய் தகப்பன் செய்த புண்ணியம் என்பதே. என்னால் தோல்விகளைப் புறங்காண முடியவில்லை. இத்தோல்விகள் ஊடேயும் சித்திகள் கிடைத்தமைக்கு உண்மையில் தோல்விகளே சித்திகளாய் ஆனமைக்கு என் தாய் தகப்பனையும் ஆசிரியர்களையும் நினைத்து நினைத்து இன்று மனம் உருகுகின்றேன். (கரவை விக்னேஸ்வரா வழி வந்த ஒரு தமிழ் அறுவடை)

ஜவஹர்லால்நேரு யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு விக்னேஸ்வரக் கல்லூரி மாணவரால் வழங்கப்பட்ட "நாம் தளர மாட்டோம்" என்ற பிரக்ஞை பூர்வமான வாசகமே அக்கால கல்லூரி மாணவர்

களின் உந்துசக்தியாயிருந்தமைக்கு இவர் வரலாறு சான்று தரும்.

**குடும்ப ஆளுமை**

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே"

"எனும் புறநானூற்றுப் பாடல் வரிகளை நிஜமாக்கிய பெருமை பேராசிரியர் சிவத்தம்பியின் தந்தையரான பண்டிதர் சைவப்புலவர் த.பொ.கார்த்திகேசு அவர்களையே சாரும். பேராசிரியரின் தமிழ்மொழி மீதான ஈடுபாட்டிற்கு இவரே தளமானார். பண்டிதர்களுள் ஓர் இமயம் போன்றவர். ஆனாலும் தன்னறிவுத்திறனை விளம்பரம் செய்ததில்லை. பாலப்பருவத்திலேயே அருஞ்சுவை ஆகாரத்துடன் நற்றிணை குறுந்தொகை பரிபாடல், பத்துப்பாட்டு என பண்டைத்தமிழ் இலக்கியத்தையும் சேர்த்தே ஊட்டியவர். சமஸ்கிருத மொழி கற்றவர். யோகர் சுவாமியின் பக்தரான இவரது இறையுணர்வே பேராசிரியர் வாழ்வைச் செதுக்கியது. தலைமையாசிரியராக பணிபுரிந்த இவர் குமாரசுவாமிப் புலவர், நவநீதகிருஸ்ணபாரதி, சோமசுந்தரப்புலவர், மகாலிங்கசிவம் போன்ற புலமைச் சிகரங்களிடம் பாடம் கேட்டவர். யாப்பில் சிறப்புத்தாடனம் காரணமாக கரவெட்டியில் உள்ள தமிழறிஞர்கள் பலர் இவரிடம் வந்து பாடம் கேட்டதுண்டு. இளவயதிலிருந்தே இலங்கை, தமிழக பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதியுள்ளார். இவை யாவும் பேராசிரியரின் இலக்கிய ஆர்வத்துக்கு வித்திட்டன. மேலும் இலங்கையினதும் இந்தியாவினதும் முதல் இஸ்லாமியப் பேராசிரியரான ம.மு. உவைஸ் அவர்கள் பேராசிரியரின் தந்தையிடம் தமிழ் பயின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இதயத்தால் பேசும் மனப்பாங்குமுடைய தாயாரின் இயல்பும் பேராசிரியரின் இனிய குணவியல்பை தீர்மானிப்பதாய் அமைந்தது. படிப்புச் சூழலை உருவாக்கிய சகோதரிகள் என ஆரம்பமே சிறப்பாய் அமைந்தது. பின்னாளில் அவரது வாழ்க்கைத் துணைவியும் பிள்ளைகளும் இல்லச் சூழலை அவரது கல்வித்தேடலுக்கும் ஆய்வுக்கும் ஏற்றவகையில் ஆக்கவே உலகளாவிய அறிவியற் பயணத்தை இலகுவாக்கியது எனலாம்.

**கல்லூரிப்பங்களிப்பு**

பேராசிரியர் அவர்கள் தான் வாழ்ந்த கிராமத்தின் மீதும், கற்ற கல்லூரியின் மீதும் கொண்ட பற்று உயிரோடு கலந்ததாக காணப்பட்டது. "நாம் எங்கிருந்தாலும் நமது பாரம்பரியத்தில் இருந்து அந்நியப்பட்டவர்கள் அல்லர் இந்த ஆற்றல் வன்மை கரவெட்டியின் பலம் எனலாம். பண்பாட்டு ஆளுமை வளர்ச்சியில் விக்னேஸ்வரக் கல்லூரிக்கு முக்கிய இடமுண்டு. விக்னேஸ்வரா கரவெட்டியின் சின்னம்" (பவளமலர், விக்னேஸ்வரக் கல்லூரி) என்று விதந்து கூறினார். மேலும் உலகின் எந்த மூலையில் தமிழ்ப்பணிக்காய் சென்றாலும் கூட அங்கும் உள்ளத்தில் நிறைந்த உன்னதமாக விக்னேஸ்வரக் கல்லூரியே திகழ்ந்தது என்பதனை அவரது கட்டுரைகளும் பிரதிபலிக்கும்.

"கேம்பிரிட்ஜையும் ஒக்ஸ்போட், பஸ்கினியையும் பர்மிங்காமையும் கண்ட பின்னும் விக்னேஸ்வரா ஸாகிறாவை மறக்கமுடியாது போல்" (மாணிக்கவாசகர் நூற்றாண்டு மலர்) என்ற வாசகம் நினைவு கூரத்தக்கது) பேராசிரியரிடம் இருந்து தனித்துவத்தை உணர்ந்து தட்டித் தட்டி வளர்த்த மையமாக கல்லூரி அமைந்திருந்தது. இவரிடம் இருந்து ஏதாவது வரும் என்று நினைத்து வளர்த்தவர் விக்னேஸ்வரக் கல்லூரி அதிபராக இருந்த சிவப்பிரகாசம்" என்பதை இலக்கியமும் வாழ்க்கையும் ஞானம் சஞ்சிகைக்கான நேர்காணலில் கூறுவார். அதிபர் தான் ஆங்கில ஆர்வத்தை வளர்த்து நிறைய வாசிக்கச் செய்து ஆங்கிலக் கவிதைகளில் இரசனை ஏற்படுத்தி ஆங்கிலத்தில் எழுத வைத்தவர். அதேவேளை தமிழிலும் ஆர்வத்தை ஊட்டியவர்" என்று கூறியதனூடாக விக்னேஸ்வரக் கல்லூரி என்ற ஆங்கிலக்கல்வி மையம் பின்னாளில் உலகப் பல்கலைக்கழகங்கள் நோக்கிய பயணத்திற்கு

அடித்தளமிட்டது என்பதையும் உறுதி செய்கிறார். மேலும் அதிபரால் எஸ்.எஸ்.ஸி யில் ஆங்கிலப் பாடத்திட்டத்தில் Distintion சித்தி பெற்றதற்காக பாராட்டி வழங்கப்பட்ட பாக்கர் பேனாவை (அந்நாளில் அதன் மதிப்பு அதிகம்) முதல் விருதாகக் கருதி பவளவிழாக் காலத்திலும் பேணிப்பாதுகாத்தமை கல்லூரிப் பற்றினைக் காட்டுகிறது.

அரச உத்தியோகத்தர்களுக்காக ஆங்கிலக்கல்வி தந்த நிறுவனமான விக்னேஸ்வராக் கல்லூரி நவீன மயப்பாட்டை ஏற்படுத்தியதால் "விக்னேஸ்வரா வரலாறு வடமராட்சி வரலாறு" எனப் போற்றுவார். "நாங்கள் விக்னேஸ்வராவில் படித்தோம் என்பதிலும் பார்க்க விக்னேஸ்வராவால் உருவாக்கப்பட்டோம். ஒருவர் தான் படித்த பாடசாலையை குறிப்பிடும்போது Alma mother என்று குறிப்பிடுவது வழக்கம். Alma mother என்ற சொற்றொடரின் கருத்து நிறைந்த அள்ளித் தந்த தாய் என்பதால் எங்களுக்கு விக்னேஸ்வரா நிறைவுள்ள தாய்தான். (கரவை விக்னேஸ்வரா வழி வந்த அறுவடை கொழும்பு 2011) என்ற வைர வரிகள் கல்லூரியின் மகத்துவத்தைப் பறை சாற்றுகிறது எனின் மிகையாகாது. மேலும் விக்னேஸ்வரக் கல்லூரியில் சிவப்பிரகாசம் அதிபரதும் வாசுதேவன் பிள்ளை ஆசிரியரதும் வழிகாட்டலில் இயங்கி வந்த மாணவர் பாராளுமன்ற முறையானது (J.S.C. S.S.C) மாணவர்களைக் கொண்ட சனநாயக முறையாக அமைந்துள்ளது. இதில் S.S.C மாணவர்கள் அமைச்சர்களாக இருந்தனர். இது சமூக சிந்தனையை ஊட்டுவதாக இருந்தது. பேராசிரியர் அவர்கள் மாணவர் பாராளுமன்றத்தில் 1946, 1947 ஆண்டுகளில் சுகாதார மந்திரியாக இருந்தபோது பாராளுமன்ற பேச்சுக்கள், கருத்துமோதல்கள் யாவும் தனது பேச்சாற்றல்களை வளர்ததது என்பர் (இம்மாணவர் பாராளுமன்ற முறை நூற்றாண்டு கழிந்த பின்பு இன்று இலங்கைப் பாடசாலை தோறும் அரசு நடைமுறைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது)

வரலாறு ஆசிரியர் வாசுதேவன்பிள்ளை வழிநடத்தலில் கல்லூரியின் முதல் சஞ்சிகையில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை பேராசிரியர் அவர்களின் முதலாவது எழுத்துலகப் பிரவேசம் எனக் கருதலாம். இதுவே ஆங்கிலமொழி மூலம் சிந்திக்கும், கருத்துரைக்கும் முறைக்கு வித்திட்ட நிகழ்வாகும். பின்னாளில் சமூகப் பொருளாதார கட்டுமானங்களின் வழி தமிழ் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும் நோக்கும் முறைமை விக்னேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் வாசுதேவன் பிள்ளையாலேயே வளர்க்கப்பட்டதெனலாம். மேலும் இவர் தனது வரலாற்று பாடக் குறிப்புக்கள் அடங்கிய கறுப்பு நிறக்கொப்பியைக் கொடுத்து நீ இதை என்றோ ஒருநாள் பயன்படுத்துவாய் இதை வைத்துக்கொள் என்றமை சரியான தெய்வவாக்காய் அமைந்தது.

**பல்துறை ஆளுமை**

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் மேன்மையான புலமைத்தள வளர்ச்சிக்கு பொலிவும் வலுவுமூட்டியவை. அவரது தமிழ்த்துறை, அரங்கியல், நுண்கலை போன்ற பல்துறை சார் பல்கலைக் கழக பணிகள் என்றே கூறலாம். இவரது நேர்காணல் பத்திரிகைகள், சிந்தனைக் கருத்துக்கள் யாவும் இலங்கை மட்டுமன்றி அனைத்திந்திய அளவிலும் அறியப்படவும் பாராட்டப்படவும் அடிப்படையாக அமைந்தன. மேலும் தமிழ்மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் அவருக்கிருந்த புலமையும், இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் உள்ள சொல்வளம் பற்றிய தெளிந்த அறிவும் முதன்மைப் பண்பை அளித்தன. தமிழ் மட்டுமன்றி சமூக விஞ்ஞானத்துறை வரலாறு, பொருளியல், சமூகவியல் முதலிய துறை சார்ந்த ஆங்கில நூல்கள், சஞ்சிகைகள் படிக்கும் ஆற்றல் ஆழ அகல நோக்கும் பண்பை வளர்த்தது. மார்க்சியம் என்ற அறிவியல் சார் தத்துவத்தின் ஒளியில் சமூகத்தையும் அதன் வரலாற்றையும் தரிசிக்கும் முறையான முற்போக்குப் பார்வையை பல்கலைக்கழக சூழலில் புகுத்தியவர் என்ற வகையிலும் ஆளுமை விதந்துரைக்கப்பட வேண்டியதே.

சமகால ஏனைய தமிழ்ப் பேரறிஞர்களைப் போல மேனாட்டு ஆங்கில எழுத்தாளரின் படைப்புக் களை தமிழ்மொழி மூல மொழிபெயர்ப்பு மூலம் அறிந்து கொள்ளாது நேரடியாகவே ஆங்கிலத்தில் வாசிக்கக்கூடிய ஆற்றல் காணப்பட்டது. "ஆங்கிலம் இது உலகை இணைக்கும் மொழி. இதில் பாண்டித் தியம் இல்லாமல் தமிழை மட்டும் மையமாக வைத்து ஒரு மொழிப்பண்டிதராக வாழ்ந்து தமிழை வளர்க்க முடியாது" என கருதியமைக்கு விக்னேஸ்வராவில் எஸ்.எஸ்.ஸி வரை கற்ற ஆங்கிலமொழிக் கல்வியே காரணம் எனலாம். மேலும் பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப் பாளராக செயற் படவும் ஆங்கிலமொழி மூலக் கல்வியே வழிவகுத்தது. மும்மொழிப் புலமை ஆங்கிலமொழி ஊடகம் வாயிலாக தமிழை உலக அரங்கிற்கு கொண்டு சென்றார். ஆங்கில அறிவினால் மேற்குலக சிந்தனையை உள்வாங்கி அதனைத் தம்முள் இணைத்து நவயுகத் தமிழை வழங்கியமை அவர் தாம் ஆளுமையின் உயர்நிலையைக் காட்டுவதாக உள்ளது.

**பல்கலைக்கழகப் பணி**

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் பல்கலைக்கழகப் பணியானது இலங்கைப் பல்கலைக் கழகங்களிலொன்றான வித்யோதயப் பல்கலைக்கழகத்தில் (இன்றைய ஜெயவர்த் தனபுர பல்கலைக்கழகம்) 1965இல் ஆரம்பமாகி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வியாபித்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிறைவு பெற்றது. வித்யோதயப் பல்கலைக்கழகத்தில் இவரது பணித் துறையானது ஆரம்பத்தில் (Non Sinhala medium) சிங்களமல்லாத மொழித்துறை என்ற பெயரிலேயே இயங்கியது. பேராசிரியர் சிவத்தம்பி துறைத் தலைமைப் பதவியைப் பெற்ற பின் தமிழ் மற்றும் திராவிட மொழித்துறை (Department of Tamil and Dravidian Studies) என்ற பெயர் மாற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் தம் முயற்சியினால் தமிழ்ப் பிரிவானது மேலும் விரிவாக்கப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த காலத்திலேயே பேராசிரியர் ஜோர்க் தொம்சனின் கீழ் (Pho) பட்டம் பெறும் கனவு நனவானது. மேலும் ஜோர்க் தொம்சனின் வழிகாட்டல், இலக்கிய அடித்தளமாக இருந்திருக்கக்கூடிய சமூக வரலாறு பற்றிய நோக்கை உருவாக்கியதுடன் மார்க்சியப் பார்வையையும் விரிவாக்கியது 1976இல் இணைப் பேராசிரியராக தடம்பதித்தார்.

அடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் (1978-1986) தமிழ் இலக்கிய வரலாறு பாடத்தைக் கற்பிக்கும் போது சமூகவியல் நோக்கிற்கு அடித்தளமிட்டார்; "சமூக சிந்தனையும் இலக்கிய வளர்ச்சியும்" என்ற தலைப்பிலேயே பார்த்தார். 1980களில் தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் இலங்கை நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கொன்றை நிகழ்த்தி பிரதேச இனக்குழும அடிப்படையில் ஆய்வு செய்தார். இக் கருத்தரங்க கட்டுரைகளை தட்டச்சு நூலாகவும் வெளியிட்டார். முதுகலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதிப்பட்ட ஆராய்ச்சியாளர் பலருக்கு மேற்பார்வையாளராக இருந்து சிறந்த மாணவப் பரம்பரையை உருவாக்கினார். மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை ஆரம்பிப்பதற்கு முயற்சித்ததுடன் அமையாது நாடகமும் அரங்கியலும் எனும் பாடநெறியில் பட்டமேற் கல்வியை உருவாக்கி பாடத்திட்டம் போன்றவற்றையும் வடிவமைத்தார். இவ்வாறு கற்பித்தல் மாத்திரமன்றி கல்வித்துறைகள் உருவாக்கம் விரிவாக்கம் என பன்முக செயற்பாடுகளால் நுண்கலைப் பல்கலைக்கழகத்தை மேம்படுத்தினார். பதினெட்டாண்டு பணியைப்பூர்த்தி செய்த பின்னர் நாட்டுச் சூழ்நிலை உடல் நிலை போன்ற பல காரணங்களால் ஓய்வு பெற்றார். எனினும் அவருக்கு கற்றதை வழங்கும் தாகம் ஓய்வில்லை. அவரின் சேவை வேண்டி கிழக்குப் பல்கலைக்கழகம் கரம் நீட்டி அழைக்கவே அவரது பாதங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தடம் பதித்தது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் இரண்டாண்டுகளே பணியாற்றிய போதும் இருபதாண்டு காலத்தில் செய்ய வேண்டிய சேவையை வழங்கினார். மொழித்துறை, நுண்கலைத்

துறையிலும் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களுக்கான கலைத்திட்ட வரைபை உருவாக்கி பட்டப்பின் கல்விக்கு புதிய பரிணாமம் கொடுத்தார். மேலும் சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கத் துணை நின்றார். பின் அதற்கு பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்க வரைபு ஆக்கினார். மொழித்துறையில் இருந்து தமிழ்ப்பாடத்தைப் பிரித்து தமிழ் கற்கைகள்துறை ஒன்றை ஆரம்பிக்கவும் வழிகாட்டினார். இவை யாவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தினை முழுமையாக்கும் செயற்பாடாகவே அமைந்தன. மேலும் வானொலிச்சேவை, பத்திரிகை இயக்குவது தொடர்பான அறிவு இருந்தமையாலும் முன்பு களனி வித்தியாலயங்கார பல்கலைக்கழகத்தில் தொடர்பியல் கற்பித்த அனுபவத்தாலும் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் மொழி மற்றும் தொடர்பாடல் துறையில் வளவாளராகவும் தேர்வாளராகவும் பணியாற்றினார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி தமிழ்நாடு, அனைத்திந்திய பல்கலைக் கழகங் களிலும் தம் புலமைச் செயற்பாடுகளை விரிவாக்கிக் கொண்டார். அவரது ஆய்வியல் நோக்கும் அறிவியல் போக்கும் உலகப் பல்கலைக்கழகம் வரை வியாபித்திருந்தது. இவரின் ஆங்கிலமொழிப் புலமை காரணமாக ஆங்கிலத்தில் ஆய்வுரை நடத்தும் ஆளுமை காரணமாக உலகெங்கும் உள்ள அதிக பல்கலைக்கழகங்களில் வருகைநிலைப் பேராசிரியராகவும், அதிதிநிலைப் பேராசிரியராகவும் ஆய்வாளராகவும், வளவாளராகவும் தமது வகிப்பாகத்தினால் வளமூட்டினார். இவை பற்றிய விபரம் முன்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்ற உன்னத மனப்பாங்கு காரணமாக தனது சக பேராசிரியர்கள், கல்வியாளர்கள் போன்றோரை இலங்கை தவிர்ந்த ஏனைய நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குச் செல்ல தொடர்பாளராக, வழிகாட்டியாக திகழந்தமை குறிப்பிடத் தக்கது. பல பல்கலைக்கழகங்கள் போவதனால் ஒருவரது அனுபவம் விருத்தியாகின்றது. அதற்கு பிற நாட்டு நல்லறிஞர்கள் தொடர்பு வேண்டுமென கருதியதனை “சுவீடன் உப்சாலா அதிதிப் பேராசிரியராக இருந்தபோது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் உறவுகள் ஏற்படுத்தினேன். அதன் பின் பத்மநாதன் வேலுப்பிள்ளை ஆகியோர் சென்றனர். (இலக்கியம் வாழ்க்கையும் ஞானம் சஞ்சிகைக்கான நேர்காணல்) எனக் குறிப்பிடுவார். அதேவேளை கல்வியியல் துறை பேராசிரியர் சோ.சந்திரசேகரமும் உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் வருகை தரு பேராசிரியராக இருந்தபோது “இலங்கையில் தமிழரின் கல்வி நிலைக் கருத்தரங்கில் கட்டுரை வாசிக்க ஐரோப்பிய இலங்கைப் பேராசிரியர்களை பரிந்துரை செய்ததுடன் பாடசாலை நூலாக்கத்தின்போது தம்மை அழைத்துச் சென்றதும் பேராசிரியர் கா.சிவத்தம்பியே ( கரவை ஊற்று) என்று பாராட்டிக் கூறுவார். இவற்றின் மூலம் அவரது சகோதரத்து வமான மனப்பாங்கை உணரமுடிகிறது.

**ஆராய்ச்சிப்பணிகள்**

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அடிப்படையில் ஆய்வாளர்களாக இருக்க வேண்டும். கற்பித்தலை விட முக்கியமாக ஆய்வு அமையவேண்டும் என்ற இலக்கணத்துக்கு அமைய சிறந்த ஆய்வாளராக திகழ்ந்தார். இவர் தம் ஆய்வுமுறை பன்முகப்பரிமாணத்தைக் கொண்டது. தமிழ் இலக்கியம் மட்டுமன்றி சமூக விஞ்ஞானம், அரசியல் பொருளியல், வரலாறு என பல்துறைசார் ஆய்வுப்பணியை களமாகக் கொண்டவர். மும்மொழிப்புலமை ஆங்கில அறிவின் ஊடாக தமிழரது ஆய்வியலை உலக அரங்கிற்கு கொண்டு சென்றவர். வரலாற்று இயங்கியல் பொருள் முதல் வாதத்தளத்தில் நின்று கொண்டு தமிழின் மீதும் சைவத்தின் மீதும் பற்றுக்கொண்ட மார்க்சிய வாதியாக விஸ்வரூபம் பெற்றவர். இலங்கைத் தமிழர்களதும் பண்பாடு கருத்து நிலை மற்றும் கரவகள் தமிழரின் அரசியல் வரலாறு, தமிழ் நாட்டினதும் இவரது ஆய்வுப் புலங்களாக தமிழ் நாடகமும்

அதன் சமூகமும், இலக்கிய வரலாறு தமிழ் நாட்டினதும் இலக்கியங்கள் தொல்காப்பியம் பற்றிய ஆராய்ச்சிகள் தமிழறிஞர்களின் வாழ்வுப் பணிகள், தொடர்பு சாதனங்களின் வரலாறும் பணிகளும், தமிழ்க் கவிதையியல், விமர்சனம் பதிப்பு (வாளபிமன் நாடகம்) இலங்கையில் மலையகப் பண்பாடும் கருத்து நிலையும்) என்பவற்றைக் குறிப்பிடலாம். விரிவு அஞ்சி பேராசிரியரது விசேட ஆய்வுத்துறைகளை நான்காக பிரித்து நோக்குவோம் (1) தமிழரின் சமூக இலக்கிய வரலாறு (2) தழிழரிடையே பண்பாடும் தொடர்பியலும் (3) தமிழ் நாடகம் (4) இலக்கிய விமர்சனம்.

**தமிழரின் சமூக இலக்கிய வரலாறு**

தமிழரின் சமூக இலக்கிய வரலாற்றினை பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை ஆராயும் முயற்சியாக விரிவாக்கினார். உற்பத்தி முறை, சமூக உறவுகள், மொழி அரசியற்கலை, இலக்கியங்கள் பற்றிய தொடர்புகளை மார்க்சிய நோக்கில் அணுகினார்.

ஒரு சமூகத்தின் அல்லது குழுவின் பொருளியல் நிலைப்பட்ட உற்பத்தி முறைமையே அச்சமூகத்தில் அல்லது குழுவினுள் நிலவும் சமூக உறவுகளுக்கான திறவுகோலாகும். பொருளாதார அமைப்பினை தனியே விபரிப்பதிலும் பார்க்க உற்பத்தி முறைமையை விபரிப்பதனால் நாம் மனித இயக்கங்களின் தன்மைகளையும் செல்நெறிகளையும் நன்கு விளங்கிக்கொள்ளலாம். (இலக்கணமும் சமூக உறவுகளும்) என நிறுவினார். தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகளாக முல்லை சான்ற கற்பு (1966) திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் (1966) தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கணமும் சமூக உறவுகளும், (2002) பத்துப்பாட்டின் கவிதையில் (1998) தொல்காப்பியத்தின் கவிதையில் 1999 என்ற ஆய்வுகள் அமைந்தன.

பேராசிரியரது கலாநிதிப்பட்ட ஆய்வான 'பண்டைத்தமிழ் சமூகத்தில் நாடகம் குறித்த வரலாற்று ஆய்வுகளுக்கு அடிகோலியது. நிலம், மக்கள், உருப்பெறும் பண்புகள், தொல்காப்பியம் கூறும் கட்டமைவு முறை ஊடாக திணை - மரபு சார் ஆய்வு செய்து திணைக் கோட்பாடு என்பது தமிழரிடையே காணப்பட்ட அகப்புற உறவுகளதும் அசமத்துவ சமூக அரசியல் ஒழுங்கமைப்பினதும் புதை வடிவம் ஆன செய்யுள் மரபு என்றார். தமிழ் இலக்கிய வரலாற்றில் சமூக அரசியல் வளர்ச்சியினை கருத்திற் கொண்ட புதிய கால வகுப்பினை வீரயுக காலம், நிலப்பிரபுத்துவ காலம், வணிக காலம், முதற்காலம் மேலைப்புல சிந்தனைப் பண்பாடு பரவல் காலம், சுதந்திரத்துக்கு பின்னான காலம் என வகைப்படுத்துவார். இலக்கணமும் சமூக உறவுகளும் எனும் நூலில் இலக்கண வகுப்புமுறை அது முகிழ்த்த வகை அறிவதன் மூலம் தமிழ் மக்களின் சமூக உற்பத்தி உறவை அறியலாம் எனவும் திணை, பால், எண் வேற்றுமை வினையியல்பு என்பன மக்களிடையே நிலவிய உறவுகளே என விளங்கினார். இதன் மூலம் தமிழர் வாழ்வியலை வேறுபட்ட அணுகுமுறையில் ஆய்வு செய்து நவீனத்துவ சிந்தனைகளையும் தமிழில் விதைத்து விடுகிறார். இதுவே உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றாய்வுக்கும் வழிவகுத்தது.

**தமிழர் பண்பாடும் தொடர்பியலும்**

ஆய்வு நிலையில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட தமிழர் பண்பாடும் தொடர்பியலும் பற்றிய முதன்மை நூலாக தமிழ் இலக்கியத்தில் "மதமும் மானிடமும்" எனும் நூலைக் குறிப்பிடலாம். இந்நூலில் மதம் முக்கிய சமூக நிறுவனம். மதத்திற்கான தேவைகள் சமூக வாழ்வியல் தேவைகள் எனவே, சமூக வாழ்வியல் மனித இருப்புக்கள் பற்றியது என்பதுடன் பக்திப் பாரம்பரியமே தமிழ் இலக்கியத்தை அனைத்திந்திய பாரம்பரியத்தில் முக்கிய இடம்பெறச் செய்தது என்பர். "மதமும் கவிதையும்" எனும் நூலில் பக்தி இலக்கிய மரபின் முக்கியத்துவம் உரைப்பதுடன் மதம் பற்றிய மார்க்ஸிய கருத்தை தெளிவுபடுத்தும் செயற்பாட்டையும் பேராசிரியர் சிவத்தம்பி மேற்கொண்டார். மார்க்ஸோ ஏங்கல்ஸோ மதம் ஒரு முக்கிய சமய நிறுவனம் என்பதை என்றும் நிராகரிக்கவில்லை மாறாக மதத்

திற்குரிய (மெய்யியல்) எடுகோளை நிராகரித்தனர். சுருக்கமாக சொன்னால் மதத்திற்கான தேவை இருக்கும் வரை மதம் இருக்கும் எனவும் ஜேர்மனில் மார்க்ஸ் எழுதிய நூலை மொழிபெயர்த்தவர்கள் மூலத்தில் இருந்து மாற்றியதாக குறிப்பிடுகிறார். 'Religion is the opium' என்றும் கூறவில்லை மாறாக Opiate (பொய்யான தவறான திருப்தி தரும் பொருள்) என்றே கூறினார். என நிறுவி மதம் ஒதுக்கப்பட்ட சிலரின் பெருமூச்சாகவும் இதயமற்ற உலகில் இதயமாகவும் இருத்தலை சுட்டிக்காட்டிய மார்க்ஸ் சமூகத்தில் மதத்திற்கு ஒரு வகிபாகமுண்டு என்பதை நிராகரிக்கவில்லை என அழுத்திக் கூறினார்.

தமிழப் பண்பாட்டில் சினிமா எனும் கட்டுரையில் இலக்கியங்களை பார்ப்பது போல் வரலாற்றைப் பார்ப்போர் ஆழந்த ஆய்வுப் பார்வையோடு தான் சினிமா உலகையும் அணுகவேண்டும் என்கிறார். Tamil film as a medium of political communicat என்ற கட்டுரையும் 'Politician as players' என்ற கட்டுரையும் நாடக நடிகைகள் அரசியல்வாதியாவதற்கான காரணங்களைக் கூறுவதுடன் சினிமா சமூகத்தின் ஏன் முக்கியம் பெற்றது என்பதை அலசி ஆராய்வதாயும் உள்ளது.

ஒரு கலை வகை அல்லது படைப்பு ஒரு மக்கள் கூட்டத்தின் கலைப்பிரக்ஞைக்குள் வருவதென்பது இரண்டு தளத்தில் நடைபெறுவதாகும். ஒன்று மக்கள் கூட்டத்தில் அழகியலுக்கு இணைந்துவிடுவது மற்றும் அழகியல் பிரஞைக்குள்ளே உணர்வுக்குள் வருவதாகும். இந்த வருகை சமூக உறவுகளினூடாக சமூக இருப்பினூடாக வருவதாகும் என அறிமுகம் செய்வார்.

மேலும் "யாழ்ப்பாணத்தில் தொடர்பும் பண்பாடும்" தமிழ் இதழியல் கற்போருக்கான வரலாற்று ஆதார நூலாகவும் அமைவதைக் காணலாம்.

**தமிழ் நாடகம்**

இவரது பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம் எனும் நூல் அன்றைய சமூகத்தினை மார்க்சிய நோக்கில் விளங்கிக்கொண்டு தமிழ் நாடகத்தின் அன்றைய நிலைமையையும் அச்சமூகத்தின் தன்மையையும் ஆராய்ந்தது. மேலும் நாடக வரலாறுகள் பற்றி நிறைய பேசப்படும் இவ்வேளையில் 1415ஆம் நூற்றாண்டு வரை நாடகம் கிடைக்காமைக்கான காரணத்தை அறிவதற்காக சமூக நிலைப் பாட்டை ஆய்வு செய்ததன் மூலம் சங்ககால நாடகம், சடங்கு நடனங்கள் மற்றும் தொல்சேர் நடனங்களுக்கான சமூகக் காரணங்கள் முன்வைக்கப்பட்டு தமிழ்நாட்டு நாடக மரபு கிரேக்க நாடக வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டமை சிறப்பாகும். அதேவேளை தமிழ் நாடக மரபு பேணப் படாமைக்கான சமூகக் காரணங்களை சமூக வரலாற்றுடன் இணைத்துப் பார்த்த ஓர் உரிய ஆய்வு நூலும் இதுவாகும். நாடகத்துறையில் அவருக்கிருந்த ஈடுபாடே (PH.D) ஆய்விற்கு இவ்விடயத்தை தொனிப் பொருளாக்கியது. கல்லூரிக் காலம் முதல் நடிகனாக நாடகம் சம்பந்தப்பட்ட கலைஞனாக மேடையிலும் வானொலிகளிலும் நடித் தமையும் பின்னாளில் நாடக நெறியாளராக தொழிற்பட்டமையும் நாடக வரலாற்றை பார்க்கும் நிலைக்கு உந்துசக்தியானது. இதுவே படிப்படியாக நாடகம் பற்றிய ஆய்வுடன் பழைய தமிழ் சமுதாயத்தில் கலைகள் எவை இருந்தன. ஏன் நாடகங்கள் காணப்படவில்லை என ஆராய்ந்தபோது சமூக வரலாறு பற்றிய பார்வையை கொணர்ந்தது.

**விமர்சனம்**

விமர்சனத்துறையில் "ஒட்டிப்பிறவா இரட்டையர்" எனும் பெயரில் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி இருவருமே காத்திரமான பங்களிப்பு செய்ததன் மூலம் ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் முன்னோடியாக திகழந்து மேலைநாட்டு அறிஞர்கள் பார்வையை தமிழ் உலகை நோக்கி ஈர்த்தனர். மாக்சியம் எனும் அறிவியல் சார் தத்துவத்தின் ஒளியில் சமூகத்தையும் அதன் வரலாற்றையும் தரிசிக்கும் விமர்சனப் பார்வையானது இவர்களுக்கு உரியது. தமிழ் இலக்கியத்திலும் தமிழ் சமூகத்திலும், தமிழ் சமூக வரலாற்றிலும் அதன் பண்பாட்டிலும் உள்ள ஈடுபாடே முற்றுமுழுதாக சமூக அடித்தளத்தில் இருந்து பார்க்கும் தன்மையை பேராசிரியர் சிவத்தம்பியிடம் தோற்றுவித்தது. விமர்சனம்

என்பது நாவல்களையும் சிறுகதைகளையும் பார்ப்பது மட்டுமல்ல பழைய தமிழ் இலக்கியத்தையும் நவீன இலக்கியம் போல் ஒரு விமர்சன நெறிக்குள் கொண்டு வரலாமென்ற புதிய கண்ணோட்டத்தை பேராசிரியர் கொணர்ந்தமை குறிப்பிடத்தக்கது. மாணிக்கவாசகரை, நாயன்மார்களை அடியார் என்ற நிலையிலிருந்து கவிஞனாக, கவித்துவம் மிக்கவராக பார்க்கலாமென்பதை "திருவாசகம் காட்டும் மாணிக்கவாசகர்" என்ற கட்டுரை ஊடாக முன்வைத்ததுடன் தமிழ்க் கவிதைகளில் சினிமாவை உள்வாங்கியமை ஆகிய இரு வேறுபட்ட புதுமைகளை ஒரே வேளையில் செய்தார். இவரது சொந்த வாசிப்பும் தேடல் தளமான ஆங்கிலத்தில் அவ்வக்காலத்தில் வருகிற சிந்தனை மரபுகள் பற்றி ஆழமாக பார்க்கின்ற தன்மையும் நவீனத்துவம் பின் நவீனத்துவம், அமைப்பியல் வாதம் என்பவற்றை தமிழில் அறிமுகம் செய்ய வழிவகுத்தது. மேலும் தமிழியலோடு இணைந்த தனிநபர் ஆய்வுகளையும் முன்னெடுத்தமைக்கு "ஈழத்தின் தமிழ் இலக்கிய சுடர்கள் நூலைக் குறிப்பிடலாம்.

மேலும் Multi disiciplinary apporch எனப்படும் பல்துறை சங்கம் ஆய்வு பேராசிரியரை பல்வேறு துறைகளில் திறமையாக இயங்க துணை நின்றது. அதாவது சமூகவியல், பொருளாதாரம், வரலாறு, இலக்கியம், மொழியியல் இவற்றை எல்லாம் சேர்த்து அதனூடாகப் பார்க்கும் விமர்சன முறையானது கலாநிதிப்பட்ட ஆய்வின்போதே ஆரம்பமாகிவிட்டதே எனலாம். அந்த இலக்கிய விமர்சன முறைமையானது உலக அறிஞர்களாலும் தமிழ் அறிஞர்களாலும் பாராட்டப்பட்டு பின்பற்றப்பட்டமை கவனிக்கத்தக்கது.

மார்க்ஸியவாதியான பேராசிரியர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தன் கருத்தியல் வடிவமைப்பிலும் பங்கு கொண்டார். இவரது இலக்கியத்தில் முற்போக்கு வாதம் என்ற நூல் மார்க்சியத்திற்கும் முற்போக்கு வாதத்திற்குமுள்ள தொடர்பையும் செயல்நிலை வேறுபாட்டையும் புலப்படுத்தியது.

முற்போக்கு இலக்கியம் என்பது உண்மையில்
மார்க்ஸிய இலக்கிய தோன்றுதலுக்கான ஒரு
வழிநடத்தும் கட்டம், தொடக்கக் கட்டமே
முற்போக்கு இலக்கியத்தின் நிறைவு
மார்க்ஸிய இலக்கியம் தான் (இலக்கியமும் வாழ்க்கையும்)

**கலைச்சொல்லாக்க வினைத்திறனாளர்**

நவீன இலக்கியப் போக்கை தீர்மானித்தவர் என்ற வகையில் தேக்க நிலைக்கு உட்படாதவராய் திகழ்ந்தவர். தமிழில் நவீனத்துவத்தை திறனாய்வின் வழியே இறைமைப்படுத்தும் உலகளாவிய ஆளுமை, அதற்கு ஏதுவான வார்த்தைப் பிரயோகம், அர்த்தம் நிறைந்த சொற்புனைவுகள் இவருக்கு ஆங்கில மொழிக்கல்வி எனும் அடித்தளத்தில் இருந்து உருவானது. இவர் தம் ஆற்றல் கண்டு இலங்கை அரச கரும ஆணைக்குழு சிங்கள தமிழ் கலைச் சொற்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தும் திட்டம் 1999இல் ஆரம்பித்தபோது இணைப்பாளராகவும் தலைவராகவும் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களையே நியமித்தது தமிழக, ஈழத்தறிஞர் குழுக்களை இணைத்ததோடு தமிழ் மட்டும் அன்றி இயற்கை விஞ்ஞானம், சமூகவிஞ்ஞானம், மனிதப் பண்பியல் தொழில்நுட்பம் சார்ந்த கலைச்சொல் பட்டியல் தயாரித்தார். இரண்டு தொகுதி மட்டுமே கலைச் சொல் அகராதிகளாக வந்தன. முழுமையாக வெளிவரும்போது அவர் தம் ஆளுமையை உலகை மீட்டுயிர்க்கும்.

**புலம்பெயர் தமிழர்க்கு பாடநூலாக்கம்**

இலங்கை தேசிய கல்வி நிறுவக மதிப்புரையாளராக திகழ்ந்ததுடன் தமிழகம் மட்டுமல்லாமல் உலகில் வாழ்கின்ற தமிழர்களின் குழந்தைகளெல்லாம் தமிழ் படிக்க வேண்டும் என்பதில் பேராசிரியர்

சிவத்தம்பி உறுதி கொண்டிருந்தார். அதன் காரணமாக ஜேர்மனில் தமிழ்க்குழந்தைகளுக்கு பாடநூலைத் தயாரிப்பதற்கு பல்வேறு அறிஞர்கள் கொண்ட குழு உருவாக்கியபோது அதன் தலைமைப் பொறுப்பைத் தாங்கி வழிநடத்தினார். இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் குழந்தைகள் தமிழ் படிக்க வேண்டும் என் விருப்பமும் பூர்த்தியாயிற்று. (பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு புலமைச் சகாப்தம் இராமர் இளங்கோ)

**ஈழத்தறிஞர் நூல் மறுபதிப்பாக்கம்**

ஈழத்தறிஞர் நூல்களை எல்லாம் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் வழியாக மறுபதிப்பு செய்வதற்கு துணை நின்றார். வித்துவ சிரோன்மணி கணேசையரின் தொல்காப்பிய எழுத்துச் சொல் பொருளுரை சி.வை.தாமோதரம்பிள்ளையின் கலித்தொகை உரை ஆகிய நூல்கள் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் உந்துசக்தியால் மறுபதிப்புச் செய்யப்பட்டன. இவை மரபு வழி இலக்கியங்களில் அவர் வைத்திருந்த பற்றினைக் காட்டுகின்றது.

**சமூகப்பணி**

இலக்கியச் சூழலில் மாத்திரம் வாழ்கின்ற பேராசிரியர் மத்தியில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் மாறுபட்டவராக சமூகப்பணியாளனாகவும் வாழ்ந்தார். மனிதநேயம் மிக்க இவர் மக்கள் பொதுநிலைச் செயற்பாடுகள் இரண்டு செய்தார்.

1. பிரஜைகள் குழு
2. அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

1983களில் தமிழர் பிரதேசம் முடக்கப்பட்டிருந்த அரசியல் மிகுந்த சிக்கல் நிறைந்த காலத்தில் பிரஜைகள் குழு நிலையில் பணி புரிந்தார். ஆரம்பத்தில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத்தலைவராகவும் பின் அனைத்து பிரதேச பிரஜைகள் குழு ஒன்றிணைந்த போது யாழ்ப்பாண மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவராகவும் இயங்கினார். பிரதேச தேவைகளை உயர்மட்டத்திற்கு சிறப்பாக ஜனாதிபதியிடமும் கொண்டு சென்று நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு தூதுக்குழுவாகச் செல்லும்போது தாம் கூறவேண்டிய கருத்துக்களை துணிந்து முன்வைப்பார். முதலாவது வாக்கியத்திலேயே பிரச்சினைகளின் பாரதூரத் தன்மையும் உக்கிரத்தையும் எடுத்துரைத்துவிட்டு தொடர்ந்து அவற்றை பட்டியலிட்டுக் கூறும் முறையைக் கையாண்டு கேட்பவரை அவதானித்துக் கேட்கும் மனநிலைக்கு கொண்டு வருவார். இது அவரின் சொல்லாடல் மகத்துவம் என்றே கூறலாம். பின் யுத்த நிறுத்தத்தின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் பணிபுரிந்தார்.

அடுத்து 1986இல் TRRO எனும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் (போரினால் பாதிக்கப் பட்டோருக்கு தொண்டாற்றும் நிறுவனம்) தலைமைப் பதவி ஏற்றார். அப்போது தமிழ் மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகள் செய்தார். இவரது உதவி பெற்று விக்னேஸ்வரக் கல்லூரி (1993-1994) ஏணி சஞ்சிகையை (றோணியோ தாளில்) வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்குமிடத்து பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தமிழ்ப் புலமையுலகில் கால் வைக்காத துறைகளே இல்லை எனலாம். இறுதிக்கணம் வரை தளரா அறிவுத்தேட்டமுடன் தாமும் வாழ்ந்து ஏனையோரும் அவ்வழி வாழ வழிகாட்டினார். அவரது பரந்த வாசிப்பும் பன்முக ஆளுமையும் அதனால் ஏற்பட்ட முதிர்ச்சியும் அவரை மாமனிதராக ஆக்கிவிட்டது. அவரின் மறைவு ஒரு புலமை சகாப்தத்தின் நிறைவு என்றே கூறலாம். தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என்ற பாரதிதாசன் வாக்கினை நினைவு கூர்ந்து திருவாசகத்தினால் சமர்ப்பணமாக்குவோம்.

“எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யாம் இலம் இதற்கு ஓர் கைம்மாறே”



# இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு

**பா.பார்த்திபன்,**
**சட்டத்தரணி**




அண்மைக்காலமாக ஊடகங்களில் நீதிமன்றம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் அச்செய்திகளை அறிக்கையிடும்போது இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்புத் தொடர்பில் போதிய பரீட்சயமின்மை காரணமாகத் தவறுகள் விடப்படு வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உதாரணமாக களவு வழக்கொன்றில் நீதிபதி அவர்கள் தண்டனை வழங்கினார் என்றும் ஆலய நிர்வாகம் தொடர்பான நம்பிக்கைச் சொத்து வழக்கில் நீதீவான் கட்டளை வழங்கினார் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருப்பதனை நாம் அவதானிக்கலாம். மேலும் மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றம் ஆகிய இரு நீதிமன்றங்களிலும் ஒரே நபரே நீதிபதியாகவும் நீதிவானாகவும் கடமை புரிவதன் காரணமாக நீதிமன்றில் வழங்கப்படும் கட்டளையானது குற்றவியல் வழக்குத் தொடர்பானதா அல்லது குடியியல் வழக்குத் தொடர்பானதா என்ற விளக்கமின்மை காரணமாகவே இத்தகைய தவறுகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை கல்விப் பொதுச் சாதாரண தர மாணவர்களுக்கு தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் ஒரு பாடமாகக் காணப்படுவதுடன் குடியுரிமைக்கல்வி பாடத்திட்டத்திலும் இலங்கை யின் நீதிமன்றத் தொகுதி என்ற ஒரு பாடம் காணப்படுவதனால் இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்புத் தொடர்பான கட்டுரை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுடையதாக அமையும் என கருது கின்றேன்.

**இலங்கையின் நீதிமன்ற பதவணி** (Court Hierarchy in Sri Lanka)

இலங்கையில் தற்போதுள்ள நீதிமன்றங்களை மேல் நிலை நீதிமன்றங்கள், கீழ் நிலை நீதி மன்றங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். பொதுவாக அரசியலமைப்பினால் ஏற்பாடு செய்கின்ற நீதிமன்றங்களை மேல்நிலை நீதிமன்றங்கள் எனவும், ஏனைய நீதிமன்றங்கள் கீழ்நிலை நீதிமன்றங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.




**1. உயர் நீதிமன்றம்** (Supreme Court)

இலங்கையில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தினுள்ளும் உயரியதும் இறுதியான நியாயாதிக்கமுடையதுமான நீதிமன்றம் உயர் நீதிமன்றமே ஆகும். உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசருடன் ஆகக் குறைந்தது ஆறு நீதி அரசர்களும் ஆகக் கூடியது பத்து நீதியரசர்களும் பணிபுரிவர்.

பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணானதா என ஆராயும் நியாயாதிக்கம், அரசியல் யாபபிற்கு பொருள்கோடல் செய்யும் நியாயாதிக்கம் (வியாக்கியானம் கூறல் ) ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நியாயாதிக்கம், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் நியாயாதிக்கம என்பன உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது.

உயர் நீதிமன்றம் கொழும்பிலேயே தனது பணிகளைப் புரிகின்றது. சாதாரணமாக ஒவ்வொரு வழக்கிலும் மூன்று நீதியரசர்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். ஆனாலும் வழக்கின் முக்கியத்துவம் கருதியோ அல்லது வழக்கை விசாரிக்கும் நீதியரசர்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோரின் வேண்டுகோளுக்கமைய குறித்த வழக்கை விசாரிப்பதற்கு ஐந்து நீதியரசர்கள் அல்லது அதற்கு மேற்பட்டோரை பிரதம நீதியரசர் நியமிக்கலாம்.

**2. மேன் முறையீட்டு நீதிமன்றம்** ( Court of Appeal)

மேன்முறையீட்டு நீதிமன்றமானது தலைவர் மற்றும் ஆகக் குறைந்தது ஆறு நீதியரசர்களையும் ஆகக்கூடியது பதினேழு நீதியரசர்களையும் கொண்டிருக்கும். கீழ்நிலை நீதிமன்றங்களில் வழங்கப் படுகின்ற தீர்ப்புத் தொடர்பில் அதிருப்தியுறும் தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

மேலும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான மனுக்களை விசாரிப்பதற்கான தத்துவம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கே உண்டு. மேன்முறையீட்டு நீதிமன்றமும் கொழும்பிலேயே காணப்படுகின்றது.

**3. மேல் நீதிமன்றம்** (High Court)

மேல்நீதிமன்றமானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்யும் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது.

1. இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்பட்ட ஏதாவது குற்றம் தொடர்பில்
2. இலங்கையின் வான்வெளியில் புரியப்பட்ட குற்றம் தொடர்பில்
3. இலங்கையின் ஆள்புல எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் புரியப்படும் குற்றம் தொடர்பில்
4. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் விமானம் அல்லது கப்பலில் புரியப்பட்ட குற்றம் தொடர்பில்
5. படுகொலை, ஆட்கொலை, படுகொலை முயற்சி கற்பழிப்பு போன்ற குற்றங்கள் தொடர்பில்
6. 16 வயதிற்குட்பட்ட பெண்ணுடனான பாலியல் உறவு தொடர்பான குற்றங்கள் தொடர்பில்
7. இந்நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புத் தொடர்பில் அதிருப்தி அடைந்த தரப்பினர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

**4. வர்த்தக மேல் நீதிமன்றம்** (Commercial High Court)

வர்த்தக மேல் நீதிமன்றமானது 1996ஆம் ஆண்டே முதன் முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. இது கொழும்பில் இயங்குகின்றது. இங்கு ஐந்து மில்லியனிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய கடன், நட்டஈடு தொடர்பான வர்த்தகப் பிணக்குகளும், புலமைச் சொத்து சட்டத்தின் கீழான பிணக்குகளும் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றன. இந் நீதிமன்றத்தின் தீர்ப்பில் திருப்தியுறாத கட்சிக்காரர் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்

**5. மாகாண மேல் நீதிமன்றம்** ( Provincial High Court)

இந்நீதிமன்று அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்திற்கமைவாக கொண்டுவரப்பட்டது. மேன் முறையீட்டு நீதிமன்றின் அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பரவலாக்கும் நோக்குடனேயே இந்நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாண மேல்நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்திலுள்ள ஆரம்ப, நீதிவான், மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்பு தொடர்பில் இங்கு மேன் முறையீடு செய்யலாம்.

**6. மாவட்ட நீதிமன்றம்** (District Court)

மாவட்ட நீதிமன்றம் ஆனது குடியியல் வழக்குகளான காணி தொடர்பான பிணக்குகள், மரணசாதனங்கள் தொடர்பான வழக்குகள், பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வழக்குகள், புத்திசாதுரியமற்ற ஆட்கள், அவர்களது சொத்துக்கள் என்பன தொடர்பான வழக்குகள் என்பவற்றை விசாரணை செய்யும் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. மேலும் திருமணப் பிணக்குகள், விவாகரத்து வழக்குகள், பராயமடையாத பிள்ளைகளின் பாதுகாவல், மகவேற்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ்களை திருத்துதல், திருமண வாக்குறுதி தொடர்பான பிணக்குகள் ஆகியனவும் மாவட்ட நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படுகின்றன.

**7. நீதிவான் நீதிமன்றம்** (Magistrate Court)

இந்நீதிமன்றம் பொதுவாக இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை மற்றும் 1500 ரூபாவிற்கு மேற்படாத தண்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை விசாரிக்கும் தத்துவமுடையது. மேலும் மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச்சட்டத்திற்குட்பட்ட குற்றங்கள், வனப்பாது காப்புக் கட்டளைச்சட்டத்திற்குட்பட்ட குற்றங்கள். மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்குட்பட்ட குற்றங்கள் என்பனவற்றை விசாரிக்கும் நியாயாதிக்கமும் இந் நீதிமன்றிற்கே உள்ளது.


**8. ஆரம்ப நீதிமன்றம்** (Primary Court)

இந் நீதிமன்றம் 1500 ரூபாவிற்கு மேற்படாத கடன், நட்டஈடு, உரிமைக்கோரிக்கை தொடர்பில் விளங்கித் தீர்க்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படும் குடியியல் விடயங்கள் தொடர்பில் நீதிபதி அவர்கள் இரு கட்சிக்காரரையும் அழைத்து குறித்த பிணக்கை இணங்கித் தீர்ப்பதற்கு முயற்சித்தல் வேண்டும். மேலும் இங்கு சிறைத் தண்டனை விதிப்பதற்குப் பதிலாக சமூக சேவைக் கட்டளைகள் வழங்கப்படலாம்.

இந்நீதிமன்றங்களை விட முஸ்லிம்களின் திருமணப் பிணக்குகள் தொடர்பாக விசாரணை செய்ய காதி நீதிமன்றங்களும் (Quazis Court) தனியார் துறையுடன் தொடர்புடைய தொழில் பிணக்குகள் தொடர்பில் விசாரணை செய்ய தொழில் நியாய சபைகளும் (Labour Tribunal) கைத்தொழில் பிணக்குகள் தொடர்பில தீர்வுக்காண கைத்தொழில் நீதிமன்றங்களும் (Industrial Court) காணப்படு கின்றன.

**உசாத்துணை நூல்கள்**


1. அரசியலமைப்புச் சட்டம்
2. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
3. இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம் - செ.செல்வகுணபாலன்



# 'சிரித்திரன்' சுந்தரும் செ.கதிர்காமநாதனும் இருவரும் இரு வேறு ஆளுமைகள்

கண.மகேஸ்வரன்
(பழைய மாணவன்)

**எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்!**

எங்கள் கரவை மண் பெற்றெடுத்த தவப்புதல்வர்களுள் இவ்விருவருமே தவிர்க்க முடியாத மாபெரும் கலைச்சிற்பிகள். முன்னவர் ஓவியராக, 'கார்டூன் ஆர்டிஸ்ற்' ஆக தன்னை நிலைநிறுத்தி உலகைத் திரும்பிப்பார்க்க வைத்தாரென்றால், பின்னவர் இலக்கிய உலகில் எழுத்துத்துறையில் தனது ஆளுமையைப் பல்வேறு தளங்களிலும் சர்வதேச எழுத்தாளர்களாலும் மதிக்கப்பெறும் தகுதியைத் தக்க வைத்து இன்றும் பேசப்படும் ஆதர்ஷ புருஷராக நிலைபெற்றார். இவை மிகையான கூற்றன்று. தாம் வரித்துக்கொண்ட கொள்கைகளில் பற்றுறுதியுடன் செயற்பட்ட இவர்கள் இருவரிடையேயும் நிரம்ப ஒற்றுமைகள் இருப்பது ஆச்சரியமே.

கரவை மண்ணின் செம்மையை - மண்வாசனையை - கிராமியச் சூழலில் கண்டறிந்து - அங்கு வழக்கிலிருந்த சொற்களையே பெரிதும் கையாண்டு, தத்தம் துறைகளின் தேர்ச்சியைக் காட்டிய பெருமை இவ்விருவருக்கும் பொருத்தமானதே

இனி, இந்த இரு வேறு ஆளுமைகள் பற்றியும் தனித்தனியாக விபரமாக நோக்குவோம்.

**திரு.சி. சிவஞானசுந்தரம் (சுந்தர்)**

'சிவா' என்று நண்பர்களால் அழைக்கப்பட்டாலும், 'சிரித்திரன் சுந்தர்' என்றே பிரபலமான திரு. சி.சிவஞானசுந்தரம், 'சிரித்திரன்' எனும் நகைச்சுவை ஏட்டின் ஆசிரியராவார். இதழியல் வரலாற்றில் இது ஒரு பெரும் சாதனையெனலாம்.

தமிழர் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கரவையின் மண்வாசனை கமழ உலகறியச் செய்ய வேண்டுமெனும் நோக்குடன், நளினமும் நையாண்டியும் ஒருசேர, தன்னை ஓர் உண்மைக் கலைஞராக அர்ப்பணித்தவர் சிவா.

'சவாரித்தம்பர்' எனும் அவரது அழியாப்புகழ் பெற்ற சிந்தனைச்சித்திரங்கள் தம்பரையும் சின்னக்குட்டியையுமே பிரதான பாத்திரங்களாகக் கொண்டு வாழ்வியல் தரிசனம் தருபவை: இன்று வரையும், இனிமேலும் வாழுந்தன்மையுடைத்தான பாத்திரங்கள்: தலைமுறை இடைவெளிகளைக் கடந்து, ஒரு வரலாற்றுக் காலகட்டத்தைத் தெளிவுபடுத்தும் தன்மையவை அவை செப்பும் மொழியும், ஆசிரியரின் சிந்தனைகளும், நையாண்டி கலந்த நளினமான அந்த நடைதான் அந்தப் பிராந்தியத்தின் மண்வாசனை .

நடமாடும் தன் பிரதேசத்தின் மாந்தரைப் பாத்திரமாக வார்த்தெடுப்பதன் முன்னதாக, தமிழர் தம் அரசியல் வானில் கொடி கட்டிப்பறந்த 'சுதந்திரன்' வாரப்பத்திரிகையில் அவரது அரசியல் கார்ட்டூன்கள், சிவாஜி என்ற புனைபெயருள் மறைந்து பரிணமித்ததை தமிழ் வாசகர்கள் மறந்திருக்கமுடியாது "சிவாஜி" தான் சிவஞானசுந்தரம் என்பதை அவரோடு சேர்ந்து நான் பணியாற்றிய காலத்திலேயே புரிந்து கொண்டேன்.

நம் நாட்டில் அவர் சித்திரங்கள் கதைபேசு முன்பாக, பாரதத்தின் கட்டடக்கலைக் கல்லூரிக்கு கற்கைநெறியின் பொருட்டுச் சென்ற நமது கலைஞர் அரசியல் உணர்வுகளால் உந்தப்பட்டு "பிளிட்ஸ்" , "கொஞ்ச்" போன்ற பத்திரிகைகளில் தான் தமது முதல் கைவண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதுவே அவரை உலகளவில் பரவலாக அறியவைத்தது.

இலங்கையில் அரச கட்டடக்கலைத் திணைக்களத்தில் படவரைஞராக இருந்துகொண்டே தன் தனித்திறமைகளை வளர்த்தெடுத்துக்கொண்டு அனைத்துலகுமறியப் பிரபலமானபோதும், சிங்களம் மட்டும் சட்டத்தின் பின் கட்டாயத் திணிப்பைப் பொறுக்காத அந்த நெஞ்சம் அரச தொழிலைத் துறந்து "செய்தொழில் தெய்வம் , "சிரிப்பே சீவியம்" எனும் தாரக மந்திரத்துடன் "சிரித்திரன்" எனும் சிரிப்போடு சிந்தனையை ஊட்டிய சித்திரச் சிறு சஞ்சிகையைச் சொந்தமாகத் தொடங்கி, சிறு சஞ்சிகை உலகை ஆச்சரியத்தில் அமிழ்த்தியது.

அறுபதுகளின் பிற்பாதியில் அவற்றை விலைகொடுத்து வாங்கிப் படித்துச் சேகரித்தும் வந்தேன். அவற்றில் ஒன்றுகூட தற்சமயம் கையில் இல்லாதது துர்லபம்.

தினகரன் பத்திரிகையில் இவரது கார்ட்டூன்களை வண்ணத்தில் அச்சேற்றி தகுந்த சன்மானமும் தருவதாக அதன் அப்போதைய ஆசிரியர் கோரிய போதும், தன் கொள்கைப்பற்றுதலால் அரசின் குறியீடாக இயங்கிய அத்தேசியப் பத்திரிகையில் தனது சிந்தனைகளைப் பரப்ப மனமின்றி அந்த வாய்ப்பையே நிராகரித்தார்.

அதற்குப் பதிலாக வீரகேசரியில் 'சவாரித்தம்பரைத்' தொடர்ந்தார். அதே வேளை அந் நிறுவனத்தின் மாலைத்தினசரியாக வெளிவந்த மற்றொரு பத்திரிகையாக 'மித்திரன்' மலர்ந்த போது , அன்றைய நாகரிக வாலிபர்களின் உள்ளக் கிடக்கைகளை அதே நையாண்டியுடன் "மைனர் மச்சான்" எனும் கதாபாத்திரத்தினூடாக வெளிக்கொணர்ந்தார். சிகரட்டும் கையுமாக, கூலிங்கிளாஸ் சகிதம் சிறுதடியும் வைத்திருக்கும் இளைஞனின் போக்கே 'மைனர் மச்சான்' அந்த மாலைத்தினசரி இளைஞர் யுவதிகளிடையே பெரு வரவேற்பைப் பெற்றதுடன், அன்றைய பிந்திய செய்திகளை வாசிப் பதற்காக வாங்கும் முதியோர்களையும் கவர்ந்தது. மைனர் மச்சானுக்கு நிகராக மினிஸ்கேர்ட் மங்கை ஒருத்தியையும் புகுத்தி கலகலப்பேற்றினார்.

'சிரித்திரன்' ஏட்டில் 'நிலைக்கண்ணாடி' எனும் ஆசிரிய தலையங்கம் சிறப்பாக பதிவு செய்யப்பட்டது. அதுபோலவே 'மகுடி' கேள்வி பதில் பகுதியும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. கோகில கானம் என்ற மகுடத்தில் ஆழ்ந்த கருத்துடைய சிறு கவிதைகள், Mr.Mrs. டாமோடிரன், தெளிவத்தை ஜோசப் போன்ற

பிரபலங்களின் சிறுகதைகள், காசி ஆனந்தனின் சிந்தனையைத் தூண்டும் மாத்திரைக்கதைகள், செங்கை ஆழியானின் நகைச்சுவைத்தொடரான "ஆச்சி பயணம் போகிறாள்" நாவல் (மறுபிரசுரம்), புதியவர்களின் அறிமுகக் கதைகள், சிரிகதைகளென பல்பரிமாண முயற்சிகளுடன் இதழியல் வரலாற்றில் பெயர் பதித்துக்கொண்டார். போர் நடந்த வேளையிலும் கூட, இயல்பில் பயந்த சுபாவமுள்ள அன்னார் தைரியத்துடன் கொண்டு நடாத்தியது ஆச்சரியமே. 'பாரிசவாதம்' எனும் பக்கவாத நோயால் வலது புறம் முற்றாகச் செயலிழந்தபோதும், இடது கையைப் பரிட்சயப்படுத்திய சாதனையும் வியக்கத்தக்கதே.

கொழும்பு கொட்டாஞ்சேனையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில், தமிழரசுக்கட்சியின் பிரதான தூண்களில் ஒன்றாக விளங்கிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ.இராசதுரை அலுவலகத்திற்கு வந்து, இந்தியாவில் கூட இப்படி ஓர் ஏடு வந்து எடுபட்டதில்லையெனப் புகழாரஞ் சூட்டியதை மிகுந்த மகிழ்ச்சியுடன் நண்பர்களிடம் பரிமாறிக் கொள்வாராம்.

சுந்தரின் துணைவியார் கோகிலா அக்கா அவருக்குப் பக்கதுணையாக இறுதிவரை சேர்ந்தியங்கியதை நானறிவேன். அவரது வாரிசுகள் பணியைத் தொடராதபோதும், மகள் வானதியும் ஓவியம் தீட்டி வருவதாக பிற்காலத்தில் நானறிந்தேன். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரோடு பழகிய நண்பர் திக்கவயல் தர்மகுலசிங்கம் பின் நாட்களில் 'சுவைத்திரன்' எனும் நகைச்சுவை ஏடொன்றைத் தொடங்கி நடாத்தி வந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**திரு.செ.கதிர்காமநாதன் (கதிர்)**

'சிரித்திரன்' சிவஞானசுந்தரம் எவ்வாறு கரவெட்டியின் மண் வாசனையைத் தனது கலைப்படைப்புக்கள் மூலம் நிலைநிறுத்த முயன்றாரோ, அதற்குச் சற்றேனும் சளைக்காதவராக திரு. செ.கதிர்காமநாதன் அவர்கள் இந்த மண்ணின் மண்வாசனையை - கிராமியத் தளங்களை - அவர்தம் பேச்சு மொழியை - பண்பாட்டுக் கோலங்களை அழகியலுடன் தமது சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தி, உலகளாவிய ரீதியில் நிலைநாட்டினார்.

'ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கின்றான்' 'கொட்டும் பனி' 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற படைப்புக்கள் இவரின் ஆளுமைக்கு தனிச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள், பதச்சோறு போல மொழிபெயர்ப்புத்துறையிலும், பிறமொழிக்கதை என்ற உணர்வேயின்றி வாசிக்கத்தூண்டும் ஆற்றல் வாய்ந்தவை. இந்திய மற்றும் மேலைத்தேச படைப்பாளிகளினதும் அறிஞர் பெருமக்களின் வரவேற்பைப் பெற்றதுடன் சர்வதேச எழுத்தாளராகவும் அவரை இனங்காட்டியது. இறுதியாக இவர் எழுதி வீரகேசரியில் வெளிவந்த 'வியட்னாம் உனது தேவதைகளின் தேவவாக்கு' என்ற ஒரு கதை போதும், இவரது மனிதப் பண்பை நிலைநிறுத்த பரந்த சமூகப் பார்வை இவருடையது. எழுத வேண்டுமே என்பதற்காக எழுதாமல், சமூகத்தின் அவலங்கள் பிரச்சனைகளையெல்லாம் அக்குவேறு ஆணி வேறாக அலசி யதார்த்தமாக சித்தரிப்பது இவரது பலம்.

ஒரு கிராமத்துப்பையன் கல்லூரிக்குச் செல்கிறான் என்ற இவரது சிறுகதையின் பின்புலத்தை நோக்குவோம். தனது இல்லத்திலிருந்து வயல்வெளியினூடே கல்லூரிக்குச் செல்லும் பாதையை மையமாகக் கொண்டு, வாசிப்பவர்கள் அவரது சொந்தக்கதையோ என்று சிந்திக்குமளவிற்கு வெகு இலாவகமாக - உணவு பூர்வமாகச் சித்தரித்திருக்கும் இந்தச் சிறுகதையே அவரை முதன்மைப்படுத்தியது. வாசகர்கள், படைப்பாளிகள் அனைவரின் பேசுபொருளாகியது. இதுவே, நான் வாசித்த அவரது முதற் சிறுகதையுமாகும். கிராமிய வழக்குச் சொற்களை அதிகம் பெய்து, சுவை குன்றாமல், எமது கிராமத்து வறிய குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் கண்ணீரைத் துடைக்கும்

கருவூலமாக, அவர்களுக்கு ஓர் உந்து சக்தியாக - அன்றைய கல்லூரி அதிபரின் கண்டிப்பான தன்மையையும் வெளிப்படுத்தும் ஒரு குறுக்குவெட்டுமுகமாக ஆசிரியர் கதையை நகர்த்திச் செல்கிறார்.

ஆனால், கல்லூரியிலேயே திறமையான மாணவனாக, மிக வறிய குடும்பத்தைச் சேராத - அப்போதே கல்வீடு கட்டி வாழ்ந்த தமிழாசிரியர் திரு.செல்லையா, பொன்னம்மா தம்பதியினரின் தவப் புதல்வனாக 1942ஆம் ஆண்டு பிறந்த கதிர்காமநாதன், சமூகத்தின் சீர்கேடுகளைப் பார்த்து மனம் நொந்தவராகவே பேனா எனும் ஆயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டார். 1961ஆம் ஆண்டு தமிழ்மொழி மூல முதற்றொகுதி மாணவனாக பல்கலைக்கழகத்திற்குச் தெரிவானார். பரந்த வாசிப்பனுபவம் மிக்க இவர் இளங்கதிர் இதழாசிரியராகவும் அங்கு சிறப்புப் பெற்றார். 1968இல் 'கொட்டும் பனி' எனும் இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி வெளிவந்து, அடுத்த ஆண்டில் உயர் அரச விருதான சாகித்திய மண்டலப் பரிசினையும் தட்டிக்கொண்டது. 1971இல் செ.யோகநாதன், தீர்வைப் பொன்னையனுடன் இணைந்து, மூவர் கதைகள் தொகுதியை வெளியிட்டார். அதே ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையிலும் இணைந்தார்.

2015 மார்கழியில், கரவெட்டிப் பிரதேசசெயலக கலாசாரப் பேரவையின், கனடா தேடகமும் இணைந்து வெளியிட்ட 'செ.கதிர்காமநாதன் படைப்புக்கள்' என்ற பாரிய தொகுப்பின் வாயிலாக இவரது அனைத்துத் திறமைகளையும் ஒரு சேர வாசித்தறியும் பாக்கியம் கிடைத்தது. இத்தொகுதியானது ஒவ்வொரு நூலகத்திலும், தமிழ்க் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பேணப்பட வேண்டிய ஓர் ஆவணமாகும். இவரை எழுத்துலகில் நிலைநாட்டிய 'ஒரு கிராமத்துப்பையன் கல்லூரிக்குச் செல்கின்றான்' எனும் இச் சிறுகதை யுனெஸ்கோ நிறுவனத்தினால் அறுபதுக்கும் மேற்பட்ட உலக மொழிகளில் வெளியிடப்படுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஈழத்துச் சிறுகதை களில் ஒன்றாயமைந்த செய்தியையும் இப் படைப்புத் தொகுதியினூடாகவே தெரிந்து கொண்டேன். இவரது கதைகள் உலக மொழிகளில் மொழிபெயர்க்கத் தகுதி பெற்றது போலவே இவரது மொழி பெயர்ப்பு முயற்சிகளும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும், இவரது கௌரவத் தையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

செ.க.வீரகேசரி ஆசிரியபீடத்தில் இருந்த காலம், இவரது பொற்காலமெனலாம். பிறமொழிக் கதைகளை வாராவாரம் மொழிபெயர்த்து தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய காலமும் இதுவே. மித்திரனில் வெளிவந்த 'கோடைநதி' என்ற தொடர்கதையும் இக்காலத்தையே. அவருடனான எனது அனுபவப்பகிர்வுகள் சிலவற்றையும் இங்கு பதிவு செய்யலாமென விழைகிறேன்.

வீரகேசரியில் அவர் பணியாற்ற முந்திய ஒரு மாலைப்பொழுதில் கொழும்பு ராஜேஸ்வரி பவனில் என்னைச் சந்தித்த வேளை, வீரகேசரி வாரமலரை வாங்கிப் புரட்டிப் பார்த்த அவர், எப்போதோ அனுப்பிய இச்சிறுகதை பத்திரமாக இருந்து ராஜகோபாலிடம் சிக்கி வெளிவந்திருக்கிறது என்று ஆதங்கப்பட்டார்.

கொழும்பிலிருந்து விடுமுறையில் அவர் ஊருக்கு வந்த செய்தியறிந்து அவரைச் சந்திக்கச் சென்றேன். அச்சில் வெளிவந்த எனது சில ஆக்கங்களை அவரிடம் காட்டிய போது, வாங்கிப்பார்த்து, பிறிதொரு நாள் வருமாறும், அன்று சாவகாசமாகக் கதைப்போமென்றும் உறுதியளித்தார். மீண்டும் அவரைச் சந்திக்கச் சென்றபோது, எப்படி என்னை அவர் விமர்சிப்பாரோ என்ற பயவுணர்வு உள்ளூர இருக்கவே செய்தது. முகமலர்ந்து வரவேற்றார். குசலம் விசாரித்தபின் நேரடியாகவே விடயத்திற்கு வந்தார். இலக்கிய உலகில் அகலக்கால் பதிப்பது தனக்கும் உடன்பாடே என்றும், எனது மொழி நடையைச் சிலாகித்ததுடன் சிறுகதைத் துறையில் ஆழ வேரூன்றுமாறும் அறிவுரை சொன்னார். அவரது வாய்மொழி ஆசியுரை இன்றும் என் நினைவில் நிழலாடுகிறது.

ஒரு ஞாயிறு கேசரியில் வியட்னாமின் துயரைச் சுமந்த ஒரு சிறுகதையை வாசித்த அனுபவம் மறையுமுன்னரே, அடுத்த ஞாயிறு பத்திரிகைகள் அனைத்தும் அவரது மறைவுச் செய்தியை வெளிக்கொணர்ந்து அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

மிகச் சிறிய வயதில், ஒரு முதிர் படைப்பாளியின் ஆற்றலுடனும், ஆளுமையுடனும் எழுதி வந்த கதிர், 1972ஆம் ஆண்டு இவ்வுலகைத் துறந்தது, கரவை மண்ணிற்கு மட்டுமன்றி படைப்புலகிற்கே நேர்ந்த பேரிழப்பாகும்.

புனைகதைகள் சிருஷ்டிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், ஒரு மொழிபெயர்ப்பாளனாக - பத்திரிகை ஆசிரியனாக - இதழியலாளராகவும் இலக்கிய விமர்சகராக - பழந்தமிழ் நூல் ஆய்வாளனாக - பரந்துபட்ட உயர்மட்ட வாசகனாக - பன்முக ஆளுமை கொண்ட - சர்வதேசத்தாலும் அங்கீகரிக் கப்பட்ட ஈழத்தமிழனாக - ஆற்றல் மிகு படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டிக்கொண்ட கதிர்காம நாதன் அவர்கள், எமது கல்லூரியின் பழைய மாணவன் என்பதில் புளகாங்கிதமடைகின்றேன்.

ஏனைய அவரது ஆக்கங்களையும் ஒருசேரப் படிக்கும் வாய்ப்பினை எனக்களித்த 'செ.கதிர்காம நாதன் படைப்புக்கள்' என்ற தொகுப்பு நூல் வெளிவரக் காரணமான அனைத்து அன்பு நெஞ்சங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.



# பிழையானவற்றை சிறப்பாகச் செய்யும் போக்கு


**திரு. க. மு. கனகலிங்கம்**
M. Phil (Ed), M.Ed, B.A, PGDE
**அதிபர்,**
**யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி**


மனிதர்களாகிய நாம் பல்வேறு செயற்பாடுகளை நாளாந்தம் மேற்கொள்ளுகின்றோம். அந்தச் செயற்பாடுகள் எல்லாமே பயன் தருபவை என்று கூறமுடியாது. செயற்பாடுகளின் முடிவிலே அடைவின் அளவை நாம் மதிப்பிடும்போது நன்மை பயக்கும் அடைவுகளை நாம் அடைந்து விட்டதாக உணருவோம் அலலது திருப்தி அற்ற உணர்வுகளைப் பெறுவோம். இவ்வாறு இலக்கை நோக்கிய செயற்பாடுகளின் முடிவிலே கிடைப்பது "வெளியீடு" (Output) என அழைக்கப்படுகின்றது. ஆனால் உடனடியாக கிடைத்த சில வெளியீடுகள் நீண்ட காலத்தில் மிகுந்த நன்மை பயக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில் உடனடியாக நன்மையான வெளியீடுகளை தருபவை நீண்டகாலத்தில் விளைவுகளாக (Out Comes) மாறும்போது சில வேளைகளில் தனக்கும் பிறருக்கும் தீமையான விளைவுகளாக மாறிவிடுகின்றன.

அனுபவங்களினூடாக நம் முன்னோர்கள் பட்டுணர்ந்த விடயங்களும் இதற்கு ஆதாரமாக வுள்ளன. இந்த வகையில் நோக்கும்போது நீண்ட காலத்தில் தீமை பயக்கும் விடயங்களை அதாவது பிழையான விடயங்களை மிகச் சிறப்பாகச் செய்வதற்காக முண்டியடிக்கின்றோம். குறுங்காலத்தில் அதாவது உடனடி வெளியீடாக (Output) கிடைக்கும் சில வகை திருப்திகளுக்காக பணத்தையும் நேரத்தையும் செலவு செய்வது எல்லோருக்கும் தீமை விளைவிப்பதாகும்.

எமது செயல்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சரியானவைகளை சிறப்பாகச் செய்வது
2. சரியானவைகளை சிறப்பில்லாமல் செய்வது
3. பிழையானவைகளை சிறப்பாகச் செய்வது
4. பிழையானவைகளை சிறப்பில்லாமல் செய்வது

இவற்றிலே பிழையானவற்றை சிறப்பாகச் செய்வதற்கே நம்மில் அநேகர் முற்படுகின்றோம். இதற்கு பல்வேறு வகையான உதாரணங்களைக் கூறலாம்.

**இளம் பிள்ளைகளை உள நெருக்கடிக்குள் உள்ளாக்குதல்**

மனித உளவியல் என்பது மனித நடத்தைகள் எவ்வாறு அமையும் என்பது பற்றிய ஆராய்ச்சி முறைமையாகும். குழந்தை உளவியல் பற்றி பல உளவியலாளர்கள் இது தொடர்பாக பொருத்தமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவற்றிலே "சிக்மன்ட் பிராய்ட்" என்பவர் முன்வைக்கும் உளப்பகுப்பு தொடர்பான கருத்துக்கள் முக்கியமானவை. இதைவிட குழந்தை கல்வியியலாளர்கள் அவ்வப்போது செய்த ஆராய்ச்சி முடிவுகள், அவர்களின் முன்னோக்கு சிந்தனைகள் எமது இளம் பிள்ளைகளை உள ஆரோக்கியத்துடன் வளர்க்க துணை புரிகின்றன. இவர்களின் கருத்துப்படி இளம் பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் அழுத்தங்கள் அவர்களின் அடி மனதில் (நனவடிநிலை) தேங்கி நின்று பின் நாட்களில் பிறழ்வான நடத்தைகளில் அவர்களை ஈடுபடத் தூண்டுகின்றது. குழந்தைகளில் ஏற்படுத்தப்படும் உள நெருக்குவாரங்கள் மூலம் அவர்கள் அடங்கி நடப்பதுபோன்றும், கற்பது போன்றும் எமக்கு வெளித்தெரியும். ஆனால் அவர்கள் கட்டிளமைப் பருவத்தை அடையும் போது அவர்களின் நனவடியில் இருந்த அழுத்தப்பட்ட உணர்வுகள் வன்செயல், வன்சொல், சகிப்புத்தன்மை அற்ற போக்கு, பிறழ்வான நடத்தை போன்றனவாக வெளிவரும். எனவே இளம் பிள்ளைகளை உள நெருக்கடிக்குள் உள்ளாக்காதவாறு பெரியவர்களாகிய நாம் நடந்து கொள்ள வேண்டும்.

**டியூட்டறிகளிலும் சீருடை**

பாடசாலை செல்லும் சிறுவர்கள் வெள்ளைச் சீருடை அணிந்து 6 மணித்தியாலங்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவது பொதுவாக எல்லா நாடுகளிலும் நடைபெறும் ஒன்று தான். பாடசாலைகளில் அவர்கள், இணைந்த பாட செயற்பாடுகள் மற்றும் உளவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அவர்கள் உளநிறைவடைந்து உளச்சமநிலை பெறும் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் தற்போது சில தனியார் டியூட்டறிகளிலும் டியூட்டறிக்கான சீருடையைக் கட்டாயமாக அணிய வேண்டும் என டியூட்டறி நிர்வாகம் நிர்ப்பந்திக்கின்றது. இவ்வாறான நிலைமையை குறுங்காலத்தில் வெற்றியை விரும்பும் சில பெற்றோர்களும் ஏற்றுக்கொள்கின்றார்கள். பெற்றோர்களுக்கு உரிய விளக்கங்கள் இன்மையே இதற்கு காரணம்.

பாடசாலையில் ஆறு மணி நேரமாகக் கற்று விட்டு வீடு வரும் பிள்ளைகளுக்கு மீண்டும் டியூட்டறிக் கான சீருடை அணியப்பட்டு மீண்டும் கற்றலுக்காக அனுப்பப்படும்போது அவர்கள் புளகாங்கிதம் அடைவார்கள் என்று கூற முடியாது. இளம் மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தனியார் டியூட்டறிகளில் இருக்கும் என்றில்லை. தகரக் கொட்டில்கள், வாங்குகள் கொண்ட வகுப்பறை களில் கவின்நிலைகள் இருக்கும் என்றில்லை. ஆனால் டியூட்டறிகளில் கற்கும் 20%மான மாணவர்கள் விரிவுரைகள் மூலம் இடம்பெறும் கல்வியைக் கொண்டே தமது உயர்கல்விக்கான வாய்ப்பைப் பெறு கின்றார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

எனினும் உயர்கல்வி வாய்ப்பை பெற்ற எல்லா மாணவர்களும் சமூகத்துடன் இணைந்த உளச்சமநிலை (Balance Personality) பெற்ற மனிதர்களாக தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் மனிதத்தன்மை மிக்கவர்களாக வாழ்கின்றார்களா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயமே. பிள்ளைகளின் மாலைநேர மகிழ்ச்சியை டியூட்டறிச் சீருடைக்குள் புதைத்துவிட்டு பிள்ளை களின் அடி மனதில் அழுத்தப்பட்ட உணர்வுகளை அடக்கி வைப்பது பிற்காலத்தில் அவர்களின்

இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் விடயமாகும். தற்போதைய யாழ். மாவட்ட மாணவர்களில் சிலர் உயர்தரம் கற்கும் போது மன அழுத்தத்திற்கு உள்ளாவதும், பரீட்சைகளில் வெற்றியடையாத போது தற்கொலை செய்து கொள்வதும் பத்திரிகைகள் மூலமாக அறிகின்றோம். மேலும் இவர்கள் திருமண பந்தத்தில் இணையும் போது முரண்பாடுகளை வளர்த்து விவாகரத்தில் வந்து முடிவடைவதும் கவனிக்கப்படவேண்டும்.

எனவே பாடசாலைச் சீருடைக்கு மேலதிகமாக டியூட்டறியும் சீருடை அணிவித்து கறாறான நிர்வாகம் நடத்துவது குறுங்காலத்தில் ஒழுக்கம், பண்பாடு போன்ற தோற்றத்தைத் தந்தாலும் நீண்டகாலத்தில் தீமையான விளைவுகளே கிடைக்கும்.

**தரம் - 5 புலமைப்பரிசிற் பரீட்சை**

இலங்கையில் நடைபெறும் தரம் - 5 புலமைப்பரிசிற் பரீட்சைக்குத் தயார்படுத்தல் என்னும் அதீத ஈடுபாடு காரணமாக பத்து வயது நிரம்பிய பிள்ளைப்பருவத்தில் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சி தரக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களையும் இல்லாதொழிக்கின்றோம். தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சை தொடர்பாக பல ஆராய்ச்சிகள் நடைபெற்று முடிவுகள் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்குவோமானால் பின்வரும் முடிவுகள் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

1. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள் மிகத்தரமானது. ஆனால் அப் பருவத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்களின் அப்போதைய உள இயலுமைக்கு ஏற்றவாறு வினாக்கள் அமைவதில்லை.

2. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எல்லாப் பிள்ளைகளும் தொடர்ந்து கற்று, உயர்கல்வி வாய்ப்புக்களை பெறுவர் என்று உத்தரவாதப்படுத்த முடியாதுள்ளது. ஆய்வுகளின்படி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31% மாணவர்களுக்கே பல்கலைக்கழக உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்கின்றது. அவர்களில் 4% மாணவர்கள் மட்டுமே தரம் ஐந்து புலமைப்பரிசிற் பரீட்சையிலும் உயர் புள்ளி பெற்று க.பொ.த.(சா/த), க.பொ.த (உ/த) பரீட்சையிலும் உயர் பெறுபேறு பெற்று, பல்கலைக்கழக மட்டத்திலும் உயர் அடைவுகளைப் பெறுகின்றார்கள்.

3. தரம் ஐந்து புலமைப்பரிசிற் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு குறைவாக புள்ளிகள் பெற்ற மாணவர்களில் பலர் தொடர்ந்து வந்த வகுப்புக்களில், உடல், உள இயலுமைகளின் விருத்தி காரணமாக கல்வியில் முன்னேறி உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறுகின்றார்கள். அண்மையிலே வடமராட்சிப் பிரதேசத்தில் க. பொ. த (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்ற மாணவன் தரம் ஐந்து புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைய வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல உதாரணங்கள் நம்மிடையே உள்ளன. அதாவது இதனுடைய சாராம்சம் என்னவெனில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் வயது, பரம்பரை அவர்கள் பெற்ற அனுபவங்களிலும் ஒரே சீராக இருப்பதில்லை. பெரும்பாலான மாணவர்களில் பின்னாட்களிலேதான் இந்த இயலுமைகள் விருத்தியடைந்து சுய சிந்தனைக்கிளறல் ஏற்பட்டு, கல்வி முன்னேற்றத்தில் உறுதியான முன்னேற்றத்தைக் காட்டுகின்றார்கள்.

எனவே நாம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக ஈடுபாட்டைக் காட்டலாம். ஆனால் அதீத ஈடுபாட்டைக் காட்டக்கூடாது. அதீத ஈடுபாட்டைக் காட்டி கல்வி மீது பிள்ளைகளை வெறுப்படையச் செய்யும் ஆரம்பப் புள்ளியாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நிலைமாற்றாமல் கவனிக்க வேண்டியது எம் எல்லோரினதும் பொறுப்பாகும். இதைத் தவிர்த்து பிள்ளைகளின் மகிழ்ச்சியைத் தொலைத்தல், அழுத்தத்தை ஏற்படுத்தல், மற்றொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுத் திட்டித்தீர்த்தல், நீண்ட காலத்தில் பெரும்பாலான மாணவர்களுக்கு கிடைக்காமல் இருக்கப்போகும் "கலாநிதி" பட்டத்திற்குரிய தொப்பியும் கோட்டும் அணிந்து பெரும் செலவில் விழா எடுத்தல் போன்றன நம் அறியாமையின் பாற்பட்டதாகும்.

மேற்கூறியவை போன்ற பல்வேறு பிழையான விடயங்களை நாம் சிறப்பாகச் செய்கின்றோம். இவற்றைத் தவிர்க்க நாம் ஒற்றுமையாக முயற்சிக்க வேண்டும். குறிப்பாக கல்விச் சமூகம் பகுத்தறிவுடன் செயற்பட்டு நீண்ட காலத்தில் சமூகத்திற்கு கிடைக்கும் விளைவுகள் குறித்து சிந்தித்து செயற்படும்போதே அறிவு சார்ந்த சமூகம், உடல், உள ஆரோக்கியமான வளமான சமூகம் போன்ற எதிர்காலக் கனவுகள் மெய்ப்படும்.



# வெற்றிகரமாகக் கற்பதற்கான SQ5R கற்றல் முறை

**நல்லதம்பி நந்தன்**
National Dip.in Teach., B.Ed., BIT, SLPS
**பிரதி அதிபர்,**
**யா / கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி**
**கரவெட்டி.**

**இ**ன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் எல்லா வகையான தொகுதிகளிலும் நவீன தொழி நுட்பத்தின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. இங்கு தொழினுட்பத்தினை பயன்படுத்துவதன் நோக்கம் வெளியீடுகளை அதிகமாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதே ஆகும். இவ்வாறே கல்வித் தொகுதியில் மாணவர்களிடமும் கல்வி அடைவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இன்றைய சமூகத்தில் எல்லாப் பெற்றோருமே தமது பிள்ளைகள் கற்று உயர் பதவிகளை அலங்கரிக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர். எனினும் எல்லாப்பிள்ளைகளும் எதிர்பார்ப்பது போலவே உயர் பதவிகளை அடைந்து விடுவதில்லை இதற்குக் காரணம் மாணவர்கள் தமது இலக்கு களை அடைந்து கொள்ள எவ்வாறு கற்பது என்பதை அறியாமல் இருப்பதுதான்.

எவ்வாறு வினைத்திறனாகக் கற்பது? என்பது தொடர்பாக துறைசார் நிபுணர்களும் ஆய்வாளர் களும் பல்வேறு கொள்கைகளை முன்வைத்துள்ளனர். SQ5R எனும் கற்றல் முறை இவற்றுள் பிரதானமானதாகும்.

குறுகிய காலத்தினுள் ஏராளமான விடயங்களைக் கற்பதற்கும் கற்ற விடயங்களை நீண்ட காலத்திற்கு நினைவில் வைத்திருப்பதற்கும் பொருத்தமான கற்றல் முறையாக இம்முறை காணப் படுகின்றது. SQ5R இலுள்ள ஒவ்வொரு எழுத்தும் பின்வரும் விடயங்களைக் குறிக்கும்

- S - Survey (தேடி ஆராய்தல்)
- Q - Question (வினாத்தொடுத்தல்)
- 5R
  1. R - Read (வாசித்தல்)
  2. R - Record (பதிவு செய்தல்)

3. R - Recite (உரத்து வாசித்தல்)
4. R - Reflect (கற்றதைப் பிரயோகித்தல்)
5. R - Review (கணிப்பிடலும் மீட்டலும்)

**S - Survey (தேடி ஆராய்தல்)**

ஒரு விடயத்தை கற்க முன் ஒரு மாணவன் தான் வாசிக்கப்போகும் விடயம் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய ஒரு முன் ஆய்வு என இதனைக் கருதலாம். தான் படிக்கப்போகும் விடயம் எது? அதன் உள்ளடக்கம் என்ன? அதனைக் கற்பதனால் உண்டாகும் விளைவுகள் எவை? போன்ற அம்சங்களை அறிந்து தனது சிந்தனைப் பரப்பை குறித்த விடயத்தினுள் விசாலமாகப் பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பத்தை இவ்வாய்வின் மூலம் மாணவன் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாய்வின் போது பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

- வாசிக்க முற்படும் விடயம்
- விடயத்தின் அறிமுகத்தலைப்பு
- கலைச்சொற்கள்
- வரைபுகள் அட்டவணைகள்
- விடயச் சுருக்கம்

இவ் அம்சங்களை அவதானித்து தான் படிக்கப்போகும் விடயம் பற்றிய தெளிவைப்பெற இவ்வாய்வு துணை செய்யும்.

**Q - Question (வினாத்தொடுத்தல்)**

ஒரு விடயத்தை வெறுமனே வாசிப்பதற்கும் குறித்த ஒரு கேள்விக்கு விடை காணும் நோக்கத்துடன் வாசிப்பதற்குமிடையே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் குறித்த விடயத்தை வாசிக்க ஆரம்பிக்கமுன் சில வினாக்களைக் கேட்டு கொள்வது பயன்மிக்கது.

பாடத்தின் பிரதான தலைபபையும் அதன் உப தலைப்பையும் வினாக்களாக மாற்றிக் கொள்லாம். இவற்றை வினாக்களாக மாற்றுவதற்காக பொருத்தமான இடங்களில் யார்? என்ன? எப்போது? எங்கே? ஏன்? எப்படி? எவ்வாறு? எவை? எத்தனை? காரணம் என்ன? போன்ற வினாச் சொற்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

இவ்வினாக்கள் அனைத்தும் மாணவன் குறிப்பிட்ட பாடத்தை வாசிப்பதன் மூலம் என்ன தகவலைப் பெறவேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள முடியும். பாடத்தின் எப்பகுதியில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற சிந்தனையையும் தருவதுடன் அடுத்த கட்டமாக வாசிப்பை மேற்கொள்ளும்போது கிரகித்துக் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றியும் தீர்மானிக்க உறுதுணையாக அமையும்.

**R Read (வாசித்தல்)**

வினாக்கள் அனைத்தையும் குறிப்புப் புத்தகத்தில் தெளிவாக எழுதிக்கொண்ட பின்னர் அடுத்தகட்டமாக வாசிப்பில் இறங்கவேண்டும். இதன்போது எழுதிக்கொண்ட அனைத்து

வினாக்களுக்கும் விடை காணும் வகையில் வாசித்தல் வேகமாக அமையலாம். வேகமாக வாசிக்கும் போது வினாக்களுக்கான விடைகாண முடியவில்லையாயின் மெதுவாக வாசித்தல் பயன் தரும்.

**R - Record பதிவு செய்தல்**

வாசிக்கும்போது எழுதிக்கொண்ட வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான முக்கிய குறிப்புக்கள் அனைத்தையும் குறிப்புப்புத்தகத்தில் எழுதிக் கொள்ள வேண்டும். சில முக்கிய தகவல்கள் நீண்ட வசனங்களாகவோ, பெரிய பந்தியாகவோ அல்லது புரிந்து கொள்ளமுடியாத கடினமான சொற்களைக் கொண்டதாகவோ காணப்படின் அவற்றை மாணவன் தனது சொந்த மொழி நடையில் எழுதிக் கொள்ள வேண்டும்.

**R - Recite உரத்து வாசித்தல்**

பாடத்தின் ஒரு பக்கத்தை அல்லது ஒரு பகுதியை வாசித்து முடித்த பின்னர் தொடர்ந்து வாசிப்பதை நிறுத்தி விட்டு ஏற்கனவே எழுதிக்கொண்ட கேள்விக்காக பதிவு செய்து கொண்ட விடையை, குறிப்புப் புத்தகத்தைப் பார்க்காது சொல்லிப் பார்க்க வேண்டும். அவை மனனமாகும் வரை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்ப்பது பயன்தரும்.


**R - Reflect கற்றதைப் பிரயோகித்தல்**

இதன்போது மாணவன் சில வினாக்களை தனக்குள்ளே வினவிக்கொள்ள வேண்டும். தான் வாசித்த விடயங்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை. இது போன்ற அல்லது இதனுடன் தொடர்பான விடயங்களை இதற்கு முன்னர் நான் கற்றுள்ளேனா இத்தகவல்களை வேறு எங்கு, எப்படி எவ்வாறு பிரயோகிக்கலாம்? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். இவ்வினாக்களை ஒருவர் வினவும்போது அவர் பெற்றுக்கொண்ட தகவல்கள் ஞாபகசக்தியில் ஆழப்பதிவது மாத்திரமன்றி தேவையான இடங் களில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விரைவாகப் பிரயோகிக்கக் கூடியனவாக மாறிவிடும்.

Review **கணிப்பிடலும் மீட்டலும்**

இது SQ5R முறைக் கற்றலின் இறுதிப்படிமுறையாகும். இதன்போது மாணவன் தான் கற்ற விடயங்களை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும். பரிசோதித்தலின்போது மீண்டும் முன்னைய வினாக்களை வினவி விடைகளைச் சொல்லிப்பார்த்து ஒப்பிட்டுச் சரி பார்த்துக்கொள்ள வேண்டும். விடைகள் திருப்திகரமாகக் காணப்படின் கற்றல் வினைத்திறனாக நடைபெற்றுள்ளது என முடிவு செய்யலாம். விடைகள் திருப்திகரமாக அமையாத சந்தர்ப்பங்களில் அப்பாட விடயம் மீண்டும் கற்கப்பட வேண்டும்.

கற்கப்பட்ட விடயங்கள் பரீட்சைக்குப் பயன்படும்வரை மாதம் ஒருமுறையேனும் மீட்டிப்பார்க் கப்படல் வேண்டும். இவ்வாறு வெற்றிகரமான கற்றல் நிகழும் சந்தர்ப்பத்தில் அனைத்து மாணவர்களுமே தமது இலக்கை அடைய முடியும்.



# பாடசாலைக் கலைத்திட்டத்தினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய மென்திறன்கள்

S.Suthakaran B.A (Hons),
Dip in Edu, MEd, SLPS III
Deputy Principal, Vigneswara College.
Karaveddy.

இன்றைய சூழலில் உலகமயமாக்கல், தனியார மயமாக்கல் போன்ற புதிய போக்குகள் முனைப்புப் பெற்று வருகின்ற நிலையில் மாணவர்கள் உயர் அறிவாற்றலும், ஆற்றுகைத்திறன்களும் உடையவர்களாக வலுவூட்டப்பட வேண்டியது அவசியமானதாகும். நாட்டில் நடைமுறையில் காணப்படும் கல்வித்தொகுதியினூடாக வெளியீடாக கிடைக்கப்பெறும் பொருத்தமான மனித மூலதனங்கள் தேசிய. சர்வதேசரீதியில் தொழில் உலகுடன் போட்டி போடக் கூடிய நிலைமையினை அடைவதன் மூலம் சாத்தியமாக்கப்படுகிறது. மேலும் கல்விச் செயற்பாடுகள் ஊடாக கிடைக்கப்பெறும் மனித மூலதனங்கள் நடைமுறை வாழ்க்கை முறைகளுக்கும் நாட்டின் சகல அபிவிருத்திச் செயற்பாடு களிற்கும் தமது அறிவு, ஆற்றல்களைப் பிரயோகிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதனையே எமது நாட்டில் நடைமுறையிலிருக்கும் தேர்ச்சிமட்ட கலைத்திட்டம் கருப்பொருளாக கொண்டுள்ளது. இவ்வாறான மனித மூலவளங்களை உருவாக்குவதில் பாடசாலைக்கல்வி மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றது. மேலும் கல்வியானது மனிதவலு விருத்திக்கும் அதன் பயன்பாட்டிற்கும் தேவையான அடிப்படைச் செயற்பாடுகளுக்கான அடித்தளத்தையும் வழங்குகின்றது. இருந்த போதிலும் இன்றைய கல்வி முறையின் ஊடாக ஒரு நாட்டின் தேசிய, சர்வதேச ரீதியிலான அபிவிருத்திக்கு என்ன வழங்கப் படுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மிருது திறன்கள் என்பவை கல்வியறிவு அல்லது பாடஅறிவு என்பதற்கும் அப்பால் ஒரு வேலைத்தளத்தில் செயற்படுவதற்குத் தேவையான விடயங்களாகும். அதாவது இவை ஒவ்வொருவரிடமும் உள்ளார்த்தமாக காணப்படும் ஆற்றல்களாகும். இவை காணப்படும் அளவு ஆளுக்காள் வேறுபடுகிறது பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த இம் மிருதுதிறன்கள் உதவுவதோடு இவை அவர்களுடைய நாளாந்த வேலையுலக வாழ்க்கைக்கும் அவசியமானவையாகும். எனவே பாடசாலைகளில் நடைபெறும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

இத்திறன்களை விருத்தி செய்வதில் மிகக்கூடிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. அந்தவகையில் மாணவர்களிடையே வளர்க்கப்பட வேண்டிய மென்திறன்களுள் சில சிறப்பான வையாக இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன

1. தொடர்பாடல் திறன்
2. சிந்தித்தல் திறன்கள் மற்றும் பிரச்சினை தீர்த்தல் திறன்கள்
3. குழுவாகச் செயற்படும் ஆற்றல்
4. தகவல் முகாமைத்துவம் மற்றும் வாழ்நாட்கல்வி
5. தொழில்சார் திறன்கள்
6. அறம், ஒழுக்கம் மற்றும் வாண்மைத்துவம்.
7. தலைமைத்துவத் திறன்கள்.

மேலே கூறப்பட்ட ஒவ்வொரு மிருதுதிறன்களும் மேலும் பல உப மிருதுதிறன்களைக் கொண்டுள்ளன.

**01. தொடர்பாடல் திறன்**

பல்வேறுபட்ட இடங்களில் பல்வேறுபட்ட நபர்களுடன் வேறுபட்ட மொழிகளில் தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றலை தொடர்பாடல் திறன் குறிப்பிடுகின்றது. தொடர்பாடல் திறன்களில் உபதிறன்கள் பின்வருமாறு.

1. கருத்துக்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ நம்பிக்கையுடன் தெளிவாகவும் வினைத்திறனாகவும் முன்வைக்கும் ஆற்றல்
2. விடயங்களை ஆக்கபூர்வமான முறையில் கேட்கும் திறனிலும் துலங்கும் திறனிலும் பயிற்சி பெறும் ஆற்றல்.
3. பார்வையாளருக்கு நம்பிக்கையுடன் தெளிவான கருத்துக்களைச் சமர்ப்பித்தல்
4. முன்வைப்பு அல்லது சமர்ப்பிப்பின்போது தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல்
5. கலந்துரையாடவும் கலந்துரையாடி பொதுக்கருத்துக்களை வழங்குவதற்குமுரிய ஆற்றல்
6. வெவ்வேறு கலாசாரப் பின்னணியில் இருந்து வரும் ஒவ்வொரு தனிநபர்களுடனும் தொடர்பாடல் மேற்கொள்ளும் ஆற்றல்.
7. தனியாள் ஒருவர் தனது சுயதொடர்பாடல் திறனை விரிவாக்கும் ஆற்றல்
8. வாய்மொழி சாராத திறன்களைப் பயன்படுத்தும் ஆற்றல்.

பல்கலைக்கழகக் கல்வியாயினும் சரி, பாடசாலைக் கல்வியாயினும் சரி கல்வி அமைப்பில் தொடர்பாடல் திறன்கள் மிகவும் முக்கியமானவையாகும். பாடசாலையை விட்டு விலகிய பின்னர் நிறுவனச் செயற்பாடுகளில் அல்லது சமூகச் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்குகொள்வதற்கு

தொடர்பாடல் திறன்கள் அவசியமாகும். எதிர்கால மனித மூலதனத்திற்கு மிகவும் பிரதானமான கூறாக தொடர்பாடல் திறன்கள் கருதப்படுகின்றது.

## 02. தர்க்கரீதியாகச் சிந்தித்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் திறன்கள்

தர்க்க ரீதியாக, ஆக்கபூர்வமாக, புத்தாக்க ரீதியாக, பகுப்பாய்வு ரீதியாக சிந்திக்கும் ஆற்றலையும் புதிய வேறுபட்ட பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு அறிவைப் பிரயோகிக்கும் ஆற்றலையும் இப்பகுதிக்குள் அடக்கமுடியும். இவற்றுள் அடங்கும் உபதிறன்களாவன.

1. கடினமான சூழ்நிலைமைகளில் பிரச்சினைகளை இனங்காணவும் பகுப்பாய்வு செய்யக் கூடியதாகவும் தெளிவாக மதிப்பீட்டினை மேற்கொள்ள கூடியதுமான ஆற்றல்.
2. விளக்கமளித்தல், பகுப்பாய்வு செய்தல் மதிப்பிடுதல் ஆகிய சிந்திக்கும் திறன்களை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் கூடியதான ஆற்றல்.
3. மாற்றுத்தீர்வுகளைக் கண்டறிவதற்கும், புதிய கருத்துக்களை கண்டறிவதற்குமான ஆற்றல்
4. பொருத்தமான நிறவனங்களை ஏற்றலும் அவற்றினை நிறைவேற்றுவதற்குமான ஆற்றல்.
5. பல்வேறுபட்ட வேலைச்சூழலை தனியாள் ஒருவர் விளங்கிக் கொள்ளலும் அதற்கு இசைவாக்க மடைவதற்குமான ஆற்றல்.

பாடசாலையை விட்டு விலகிய பின்னர் நிலையான வாழக்கைக்காக தொடர்ந்து கற்பதற்கான நடைமுறைத் திறன்களை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் தரவுகளையும் தகவல்களையும் ஒழுங்கமைக்கவும் வியாக்கியானம் செய்யக்கூடியதுமான ஆற்றல், வினாக்களை உருவாக்கும் திறன்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல் என்பனவற்றினையும் தர்க்கரீதியாகச் சிந்தித்தல் திறன்கள் குறிப்பிடுகின்றன.

## 03. குழுவாக இயங்குவதற்கான திறன்கள்

பல்வேறுபட்ட சமூக, கலாசாரப் பின்னணியில் இருந்து வரும் நபர்களுடன் ஒரு பொது இலக்கினை அடைவதற்காக செயற்படும் ஆற்றலை குழுவாக இயங்குவதற்கான திறன்கள் குறிப்பிடப்படுகின்றன. மாணவர்கள் குழுவாக இயங்கவும், குழு அங்கத்தவர்களுக்கிடையே கருத்துக்களைப் பரிமாறவும் ஏனைய குழு அங்கத்தவர்களின் கருந்துக்களை மதிக்கவும் ஏற்றுக் கொள்வதற்கான மனப்பாங்கினை விருத்தி செய்யக்கூடியதான ஆற்றலை ஊக்குவித்தலை இங்கு கருதப்படுகின்றது. இத்திறன்கள் பின்வருமாறு உபதிறன்களாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவையாவன.

1. ஏனையோருடன் வினைத்திறனாகச் செயற்படுவதற்கான நல்ல தொடர், இடைவினை என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்.
2. தலைமைத்துவம் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் ஆளணியினரின் நடிபங்கினை விளங்கிக் கொள்வதற்கும் செயற்படுத்தவும் தேவையான ஆற்றல்.
3. ஏனையோரது மனப்பாங்கு, நடத்தைகள், நம்பிக்கைகளை மதிப்பிடுவதற்கும் உணர்ந்து கொள்வதற்குமான ஆற்றல்.
4. குழுவேலைகளை ஒழுங்கமைக்கவும் திட்டமிடவும் பங்களிப்புச் செய்வதற்குமான ஆற்றல்
5. குழுவினது தீர்மானங்களை அல்லது முடிவுகளை மதிப்பளித்தல்.

பாடசாலைக் கல்விக்கூடமானது தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான செயலணி ஒன்றை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எதிர்கால மனித முதலீடுகள் இத்திறன்களைக் கொண்டு அமையவேண்டும்.

### 04. தொழில்சார் திறன்கள்

இவை தொழில்வாய்ப்பு மற்றும் வியாபாரம் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைத் தேடுதல், இத்துறைகளில் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வை விருத்திசெய்தல் தொடர்பான திறன்களையும், மேற்படி துறைகளில் புத்தாக்க, ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஏற்படுத்துதல் தொடர்பான திறன்களையும் கருதுகின்றது. மேலும் இத்திறன்களின் உபதிறன்களாவன.

1. வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை இனங்காணல்.
2. வியாபாரம், மற்றும் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை முன்வைத்தல்.
3. வேலைவாய்ப்புக்கள், மற்றும் வியாபாரம் மேற்கொள்வதற்கான வாயப்புக்களை கண்டறிதல் விரிவாக்குதல், கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்.
4. சுயதொழில் விருத்திக்கான வாய்ப்புக்களை விருத்தி செய்தல் என்பன உள்ளடக்கப்பட வேண்டும்.

### 05. ஒழுக்கம், விழுமியம், மற்றும் வாண்மைத்துவம் சார் திறன்கள்.

தனியாள் ஒருவர் தான் வாழும் சமூகத்தில் ஒழுக்கம், விழுமியம் மற்றும் வாண்மைத்துவம் மிக்க ஒரு பிரஜையாக வளரச் செய்வதற்கான திறன்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

1. வாண்மைத்துவம் சார் செயற்பாடுகளால் உயர் ஒழுக்கம், விழுமியம் பேணும் திறனும், பயிற்சியும் தொடர்பான ஆற்றல்.
2. ஒழுக்கம் சார் பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பான ஆற்றல்.
3. சமூகம் தொடர்பான பொறுப்புணர்ச்சி உடையவராகவும் அற ஒழுக்கம் சார் மனப்பாங்கை உடையவராகவும் வாழ்வதற்கான திறன்கள்.

### 06. தலைமைத்துவத் திறன்கள்

தனியாள் ஒருவரிடம் முன்னின்று, தலைமைப் பொறுப்புக்களை ஏற்று செயலாற்ற வேண்டிய திறன்களை விருத்தி செய்தலே இங்கு கருதப்படுகின்றது.

1. தலைமைத்துவம் தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பெறுதல்
2. ஒரு செயற்றிட்டத்தை நிறைவேற்றி வெற்றிகாண்பதற்கான ஆற்றல்.
3. தலைவராகவும், தலைவரைப் பின்பற்றுபவராகவும் தன்னை மாற்றிக் கொள்வதற்கான திறன் களைப் பின்பற்றிக் கொள்வதற்கான திறன்களைப் பெற்றுக் கொள்ளல்.
4. குழுவில் உள்ள அங்கத்தவர்களை மேற்பார்வை செய்யும் ஆற்றல் என்பன இத்திறனின் உபதிறன்களாகக் கொள்ளப்படுகின்றன.

## 07. வாழ்நாட்கல்வி மற்றும் முகாமைத்துவத் திறன்கள்

தனியாள் ஒருவர் புதிய அறிவினையும் திறன்களையும் உள்வாங்கிக் கொள்வதற்கு சுயாதீனமாகக் கற்பதற்கு அல்லது சுய ஒழுங்கமைக்கப்பட்ட கற்றலில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை இப்பகுதிக்குள் உள்ளடக்க முடியும்.

1. பல்வேறுபட்ட தகல்கள் மூலாதாரங்களில் இருந்து தேவையான தகவல்களைக் கண்டறிந்து முகாமை செய்வதற்கான ஆற்றல்கள்

2. சுய கற்றலுக்கூடாக புதிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல்.

3. ஆராய்வு மனப்பாங்கினையும் புதிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றலை விருத்தி செய்வதற்குமான உபதிறன்கள் இதற்குள் அடங்கும்.

மாணவர்களிடையே ஆராய்வு மனப்பாங்கினை விருத்தி செய்தல் அறிவினைத் தேடியறிவதற்கான விருப்பத்தினை ஏற்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்படும் பிரதான மிருது திறன்களாகும். இதனூடாக தனியாள் ஒருவர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்று அறிவையும் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியாள் ஒருவர் தகவல்களில் நல்லவை, தீயவை எவையென வேறு பிரித்தறியவும், முகாமை செய்யக்கூடிய ஆற்றல்களையும் கொண்டிருக்க வேண்டும். இவற்றுக்குத் தேவையான நல்ல நடைமுறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதுடன் அதனூடாக நல்ல தீர்மானங்களை எடுப்பதற்கும் தேவையான ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வதும் அவசியமானதாகும்.

இதனாலேயே மனிதத்திறனுள் விருத்திகளும் அவைசார்ந்த தொழில் திறன் கையாட்சிகளும் வலியுறுத்தப்படுகின்றன. ஆனால்தற்போதுகல்வித்துறையின்நோக்கங்களாகநடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பான தொழிற்துறைகள் பல இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று கருதப் படுகின்றது. பாடசாலைகளில் மிருது திறன்களைத் திட்டமிடவும் அமுல்படுத்தவம் பல்வேறு அணுகு முறைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இவை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். பாடக்கலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் இன்றைய காலங்களில் இவற்றின் போதமைகள் அதிகம் என்பதால், பாடசாலைகளில் இம் மென்திறன்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது தொடர்பாக கல்வியியலாளர்கள் நீண்ட காலமாக கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்கள். 2007ஆம் ஆண்டு கல்விச் சீர்த்திருத்தமும் மாணவர்களிடம் மென்திறன்களை வளர்ப்பதைக் கருத்தில் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரந்து சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளிலும், மாற்றம் காணும் தொழில் உலகிலும் அவர்கள் ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்டே மென்திறன் விருத்திச் செயற்பாடுகள் பாடசாலையில் இடம்பெற்றாலும் பரீட்சைமையக் கல்வியையே மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள்.

மாறிவருகின்ற சவால்கள் நிறைந்த எதிர்கால சமூகத்தை மென்திறன்களோடு வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலைகளின் முக்கிய பொறுப்பாகும். சமூகத்திறன்கள், சுயதிறன்கள், சிந்தனைத் திறன்கள் என்பன நிறைந்த ஒருவரிடத்திலேயே ஒன்றிணைந்த ஆளுமை காணப்படும். பாடசாலைகளின் ஊடாக மென் திறன்களுக்குப் பயிற்சி அளித்தலே இன்றைய தேவைப்பாடாக உள்ளது. எழுத்தறிவு, எண்ணறிவு மட்டுமன்றி செயல்கற்றல் கொண்டவர்களாக

ஒவ்வொருமாணவர்களும் துலங்க வேண்டும். இதற்கேற்ற களத்தினை பாடக்கலைத்திட்டங்கள் இன்று கொண்டிருக்கவில்லை என்றே கூறலாம். ஏனெனில் இன்று அறிவை மட்டும் மாணவர்களுக்கு வழங்குவதனால் மாணவர்களின் ஏனைய திறன்கள் குன்றி விடுகின்றன. ஆதலால் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்கள் கிடைக்கும் போது மென்திறன்களை வளர்த்துச் செல்ல முடியம். இன்று கல்வி ஒரு மூலதனம் ஆகும். அக்கல்வியினூடாக மென்திறன்கள் வளர்க்கப்பட வேண்டும். தொடர் பாடல் தொழிநுட்பத்திறன் உட்பட ஏனைய ஒவ்வொரு திறன்களும் கல்வியினூடாக புகட்டப்பட வேண்டியவையாகும். மென்திறனான பயிற்சிக்கு பாடசாலைகள்தான் அடித்தளம் இடவேண்டும்.

அந்தவகையில் பாடசாலைக் கல்விக்கூடாக தேசத்தின் முன்னேற்றத்திற்கு தேவையான ஒன்றிணைத்து செயற்படக்கூடிய செயலணியொன்றினை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்கால மனித முதலீடுகள் இத்திறன்களைக் கொண்டு ஏற்புடையவகையில், திறன்கள் வளர்க்கப்பட வேண்டும் அத்தகைய திறன்களே உலகமயமாக்கலில் உந்தப்படும் பிள்ளைகளுக்கு பெரும் தேவையாகவும் உள்ளது. ஆதலால் மாணவர் மென்திறன் விருத்தியில் பாடசாலை, ஆசிரியர்கள், கலைத்திட்டம் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். காலத்தின் தேவைக்கு ஏற்ப இவற்றில் மாற்றங்கள் புகுத்தப்பட்டு செயற்படல் அவசியம் ஆகும்.

**உசாத்துணை நூல்கள்.**


1. கருணாநிதி.மா (2009) "கற்றல் கற்பித்தல் மேம்பாடுகளுக்கான வழிமுறைகள்" கொழும்பு, சேமமடு பதிப்பகம்.
2. சந்திரசேகரன்.சோ (2011) "கல்வியில் புதிய தடங்கள்" கொழும்பு, சேமமடு பதிப்பகம்.
3. சந்திரசேகரன்.சோ (2011) "சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள்" கொழும்பு, சேமமடு பதிப்பகம்.
4. ஆசிரியர் (2011 ஒக்டோபர்) இதழ் 06



# கவியியல்



# அறிவுக் கண்ணீந்த ஆலயமே நீ வாழி



**வ. செல்வராசா**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

**சி**த்த மணியத்தின் சிந்தையுதிர் சித்திரமே
செழுங் கமலநாயகியே செஞ்சொற் செல்வி
நித்தமுனை நான் நெஞ்சிருத்தி வாழ்த்துகிறேன்
நீடித்து நீ வாழி! நெடிதோங்கி வாழி!

கல்வியின் இலக்கணமாய்க் கண்ணுடைய கற்றோர்
கரையின்றிக் கரவையிலே படைத்த தாயே
எல்லையிலாக் கல்வியின் இலக்கியமானவளே
எந்தன் கவிமழையில் நீராடி நீ வாழி!

தஞ்சையிலே தமிழியலை ஆய்வு செய்து
தரணியிலே தமிழணங்கை அலங்கரித்த
பண்டிதரின் படகினிலே பயணம் செய்து
பாவியற்றி வாழ்த்துகிறேன் வாழி! வாழி!

வெல்லன் விநாயகரின் அருளாசி பெற்றவளே
வேந்தர் வளர்த்த தமிழை வளர்த்தவளே
எல்லோரும் வாழ வழிகாட்டி நின்றவளே
பல்லோரும் போற்றுகிறோம் நீடு வாழி!

ஏழைச் சிறார்கட்கு எழுத்தறிவித்தவளே
ஏழ்மை இருளகற்றி விடிவு கொடுத்தவளே
பாரெங்கும் புகழ்பூத்த பல்லோரை யீந்தவளே
பாராட்டி வாழ்த்துகிறேன் வாழி! வாழி!

உண்மை வெல்லும் எனும் உயரிய மகுடத்தை
ஊட்டி வளர்த்தெடுத்த உத்தம புத்திரியே
நாடறிந்த நல்லுப சபாநாயகரை
நமக்கீந்த நல்லாளே வாழி! வாழி!

பாராளு மன்றத்தை அலங்கரித்த உறுப்பினர்கள்
பாரெங்கும் புகழ்பூத்த கல்விமான்கள்
நேரான பாதையிலே பயணம் செய்யும்
நேர்மைமிகு புத்திரர்கள் படைத்தாய் வாழி!

நூற்றாண்டு காணும் தாயே வாழி!
நுண்மதியை வளர்த்தெடுத்த தாயே வாழி!
பாட்டியற்றிப் பாடவைத்த தாயே வாழி!
பார்போற்றும் மாந்தர் தமைப் படைத்து வாழி!



# கரவையின் பெருமையே நீடு வாழி!!



திருமதி.ரஞ்சினிதேவி சிவசபேசன்
ஆசிரியர்
யா/விக்னேஸ்வரக் கல்லூரி

**நூ**றே வயதான இளமையின் மீது
இன்னும் காதல் யாருக்கும் குறைந்ததில்லை
கரவையின் மயக்கத்தை எழுதுகிறேன்
இது கல்லூரிக் காதல்
பின்னால் வந்தவர்களுக்கு
முன்னால் செல்ல வழி தந்த முகவரி
கரவை விக்னேஸ்வரக் கல்லூரி
தன்னால் இயன்றவரை
விண்ணைத் தாண்டும் வீரியத்தை
இது வரை கற்றுக் கொடுத்துள்ளது விக்னேஸ்வரா
கரவை மண்ணோடு சேர்ந்த மகத்துவத்தை
விக்னேஸ்வராவை விட்டு எப்படி எழுத முடியும்
எண்ணற்ற வல்லவர்களை ஈன்று தள்ளி
சொல்லில் அடக்க முடியாதபடி
பூமியெல்லாம் புல்லரிக்க விட்டிருக்கின்றது
கரவை மாதவம்
மக்கள் மனதை வென்று
சட்ட சபைக்குச் சென்ற

ஆன்றோர்கள் மு.சிவசிதம்பரம், ஜெயக்கொடி
முற்றுமறிந்த முத்தமிழ் முதல்வன் பேராசான் சிவத்தம்பி
கற்றுத் தெளிந்த கங்கையை
கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டாமா
இந்த ஞானப் பொய்கையில் நீராடியவர்களை
அணிவகுக்கச் சொன்னால்
வடதுருவத்தை நெருங்கும் வரலாறு
ஆனவரை எத்திசை நோக்கினும்
விக்னேஸ்வரா விருட்சத்தின் பேரழகு
ஆயிரக் கணக்காய் நிலவையும் சூரியனையும்
அறுவடை செய்த இந்த வானம்
இன்னமும் வாழ்வின் இருள் கலைத்து ஒளியேற்றி
முடியாத ஒரு பயணத்தை முகங்களில்
சந்தன நினைவாய் பூசிச் செல்கின்றது
என்ன இருக்கிறது விக்னேஸ்வராவில்
என எட்டிப் பார்ப்பவர்களுக்கு
ஒரு பெரும் ஞான ஒளி ஆக்கிரமிக்கின்றது
இக் கல்லூரித் தாயின் புனித நிலத்தில்
என் பாதம் படும் போதெல்லாம்
எம்மை ஆண்டு நடத்தி அழகு சேர்த்த
முதல்வர்கள் ஆசான்களின்
ஞானக்குரல் கேட்கிறது
ஞாபக இடுக்குகளில்
பன்னீர் கொப்பளிக்கின்றது
வந்த நாட்களை திருப்பிப் பார்க்கிற போது
இங்கு நாம் வரங்களையல்லவா பெற்றுள்ளோம்
தமிழரின் தங்க மகுடங்களில் ஒன்று
கரவை மண்ணில்
விக்னேஸ்வரக் கல்லூரியாய் நாமம் தரித்துள்ளது
வடக்கில் உதிக்கின்ற அறிவுச் சூரியனை
வாழ்த்துவோம் வாருங்கள்
நூறு இந்த நிலத்துக்கும்
நிமிர்ந்த கட்டடங்களுக்குமல்ல
கரவையின் பெருமைக்கும் ஒரு நூறு



# My Venerable Vigneswara!

***I.C.Ambihavaran***
***(Old Student)***
***Canada***

With the grace of holy "Vigneswaran"
And the prowess of our two Gate Mudaliyars
We were blessed with our Vigneswara
Which illuminates not only Karaveddy
But the whole of Vadamarachy
With the light of knowledge, thus creating a new era.

So venerable was it in my esteem
That I regard it as my almighty.
For it empowered me with strength and dignity,
Confidence and integrity.
It endowed me with compassion and service mentality
In order for me to sacrifice for and serve our community

Parenting experts say quality time
To be spent with children in family time
In the premises of Vigneswara
I had both times Learning, playing, relaxing and socializing
All in one — I did overtime In the prime of my life time.

All my five senses enjoyed the feel
Of the sight of the greenery around and the smell
From the front side, grown bent Margosa tree
And the dancing young plants in the paddy fields
The serene breath of fresh air blowing from Nuhavil
Even the lullaby, in the nights, of the croaking of frogs
In the flooded fields coming with gentle breeze
How can I ever forget them?
Those memories and feelings they still reveal.

Soccer was my favourite game which
I played for this school, and later for other schools, and brought fame
While in Vigneswara,
I excelled in studies for which I pray
All my 'gurus' who "came in to play"
But two of whom outstanding — I would say
For inducing me to learn, reflect and review
And revive and revel — until today.

One of the gurus I adore is Mr. Kasippillai
Who was always "in"

The school off hours or even, weekends
Cyclostyling or fixing ripped library books
At his own expense and on his own.
He taught us Tamil and Mathematics
In grades five, six and seven
He induced an interest for reading
Which I am still enjoying
He boosted our Mathematics (grades seven level)
To a competent grade ten level.

The other is Mr. Sivapragasam, our principal then
Who taught us English in grade nine
Outside Curriculum and before school in the mornings
Mark Antony's funeral speech was the scene
He taught us and we listened as we were keen

It was so interesting and inspiring to learn
That master piece that induced me to yearn
For more Shakespeare's plays from that year on.

I am floating in ecstasy and pride
That my alma mater has had her hundred years of ride
In imparting the light of knowledge — far and wide
I wish and pray that her divine mission continues to rise to soaring heights
And for many more years with shine
* Lord Ganesha from Vellan Veli and Thachchan Thopu.



# சாதனை விருட்சமே வாழ்க! பல்லாண்டு.....


திருமதி ரமணாதேவி ஸ்ரீகண்ணன்
பழைய மாணவி, ஆசிரியை
யா/விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி.


**நூ**றாண்டில் கால் பதிக்கும் எங்கள் அன்னையே!
மாறாத புகழோடு வாழ்க! என்றுமே
தேவர்கள் குடிவைகும் திருக்கோயிலில்
பாமாலை தினம் சூட்டித் தாள் பணிவோம்

முத்தமிழின் நாயகியே! கரவையம்பதி பூத்த
வித்தகியே யெங்கள் விக்னேஸ்வரத்தாயே!
எத்திசையும் புகழ் பரப்பும் ஏந்தல்களையீன்ற
நர்த்தகியே யுன் நாமம் நாளும் வாழியவே!

கல்விப் பெருங்கடலே! கலையின் முதூற்றே!
பல் விநோதத் தொடர்பால் பயிற்று மிளையவளே!
கள்ளவிழ் பூங் கோதையுந்தன் கலையரங்கிலமர்ந்து
தெள்ளு தமிழ் சொல்லெடுத்து தேம்பாமலர் சொரிந்தேன்

ஊராளக் களமமைத்து உலகாள உணர்வூட்டி
பாராளு மன்றமதில் பண்பட்டார் நின்சேய்கள்
பேராளத் தமிழறிஞர் திரு.வி.க.விருது பெற்ற
காராளன் சிவத்தம்பி காத்திரம் காத்தவளே!

போதனைகள் பலவூட்டி போகுமிடமெங்கும்
சோதனைகள் ஓட்டிவிடும் சோர்வற்ற திடம்நல்கி
தீதனைய மனம் வளர்த்த தேன்கனிகள் சொரியும்
சாதனை விருட்சமே! வாழ்க பல்லாண்டு!



# நூற்றாண்டு வாழ்த்துக்கள்

வ. ஆ. தங்கமயில்
ஓய்வு பெற்ற நில அளவையாளர்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஓ | | | | | | |
| | | | | | று | மோ | த | | | | | |
| | | | | நூ | மா | ம் | த | த் | | | | |
| | | | த் | தா | ன் | வி | க | ர் | சி | | | |
| | | ற | ட | ச | க | க் | க | ங் | ல | ளி | | |
| | | றொ | ப் | ப | வ | னே | க | து | றை | க | | |
| | தே | ன் | தி | த் | வ | ஸ் | த | ந் | த | ல் | ரா | |
| நி | லை | க் | க | ல் | வி | வ | ர | ன் | மு | றை | யா | னோ |
| | டு | ந | தூ | ர் | சே | ரா | த | ல் | நூ | து | த் | |
| | | ற | எ | ம் | மை | வா | வெ | ன் | ற | ழை | | |
| | | | வூ | றி | ய | ழி | டா | ட் | வி | | | |

வே ர்

வேர் கவிதை
வேர் விட்டாழி யறிவூற எம்மை
வாவென் றழைத்து நூல்தரா
சேர் தூநடு நிலைக்கல் விவரன்
முறையானோரால்தந் தஸ்வத்தின்
தேறொப் பவனே கஃதுறைக நிலங்கக்
கசடறத் தான்விகர் சித்தம்மா
நூறு மோத ஓமோம் விக்னேஸ்
வரா வாழி வாழி

# Vigneswara at 100

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | **V** | | | | | | |
| | | | | S | E | **I** | L | E | | | | |
| | | | A | T | I | **G** | N | I | T | | | |
| | | E | M | O | T | **N** | I | R | E | V | | |
| | E | A | R | T | B | **E** | A | T | G | L | O | |
| H | E | R | U | P | T | **S** | O | M | E | V | I | T |
| | L | L | E | G | E | **W** | H | E | T | N | A | |
| | | O | C | Y | Mt | **A** | T | S | E | R | | |
| | | V | E | S | A | **R** | Y | E | V | E | | |
| | | | I | N | N | **A** | 0th | 0 | 1 | | | |

**A** **T**

Vigneswara at 100
At 100th Anniversary Everest
At My College Whet native
Most pure heart beat Glover
In to meat ignite lies vigneswara

# வெற்றிகளின் விருட்சமாக விக்னேஸ்வரா



**ஈஸ்வரானந்தன் தயாரூபன்** (SLAS)
**(பழைய மாணவர்) பிரதேசசெயலாளர் ,**
**காரைநகர்**

**பா**றைகளாய் விக்னேஸ்வராவின்
மடியில் விழுந்தோம். செதுக்கியபோது சிரமப்பட்டோம்.
சிலைகளாக்கி சமூகத்திலே தூக்கிவிட்டது.
நான்....வேதாரணியேஸ்வராவில் தவழ்ந்து
1986இல் விக்னேஸ்வராவின் வாசலிலே எழுந்தேன்
இன்று.....நிர்வாக நுணுக்கங்களை கற்கின்றபோது
அதன் அடிப்படை ஆணிவேர்
விக்னேஸ்வரா என்னும் விளைநிலத்தில்
பெறப்பட்டது வியப்பளிக்கிறது.
கண்டிப்பான அதிபர்களாக.....
மாலை நேரங்களில் மாணவர்களின் சகபாடிகளாகி
விளையாட்டுக்களின் நுணுக்கங்களை கூறியபோதும்,
விசேட நிகழ்வுகளில்
கட்டளை பிறப்பிக்காமல் சேர்ந்து பணிகளில்
பங்கெடுத்தபோதும்......இன்று புரிந்து கொண்ட
சிறந்த தலைமைத்துவப் பண்பை அன்று

விளங்கிக் கொள்ளவில்லை
கற்றலின் போதும், விளையாட்டுக்களின் போதும்
தகைமைகளை மெருகேற்றும் போதும்
உன்னால் முடியும்.....
உன்னால் முடியும் என்று தட்டிக் கொடுத்த
ஆசிரிய பெருந்தகைகளின்
செயற்பாடுகள் தான் ஊக்கமளித்தல்
என விளங்கியபோது
குதூகலமும் கும்மாளமும் குழப்படியும்
பாடவேளைகளுக்கு ஆனால்
அதையும் இழக்கச் செய்யும் நேரந் தவறாமை
ஆசிரியரின் வருகை......நேர முகாமைத்துவம்
வியந்து நோக்கின் விளங்கிட ஆயிரம்
தெரிவுகள் சிறுதவறுகள் வந்தபோதும்
விட்டுக் கொடுத்து......ஏற்று நடந்துகொண்ட
பண்பை பழக்கியது விக்னேஸ்வரா என்பதில் ஐயமில்லை
உயர்தரம்......பெயரில் மட்டுமன்றி தரத்திலும்
உயர்வாக்கிய என் கல்விக்கூடத்தில்
கழிந்த- களித்த......பொழுதுகள் இன்னும்
பசுமரத்தாணியாக......
13 சகோதர மாணவிகளுடன் கல்வி
கற்ற நான்- தனி ஒருவர் பாசத்துடன்
பலகாரங்கள் பகிர்ந்துண்ட மகிழ்வான காலம்



# மாணவர் ஆக்கவியல்





# புவி வெப்பமடைதல்
# Global Warming

**B.Kirupalini.**
**(13 கலைப்பிரிவு)**

**அறிமுகம்**

இயற்கையன்னை எமக்களித்த அரிய கொடைகளான நீர், நிலம், வளி போன்ற பல்வேறு இயற்கை அம்சங்கள் மாசுபடும் நிலையை எட்டியுள்ளது. இவை மனித செயற்பாடுகளால் இடம் பெறுகின்றது எனக் கூற முடியும். விஞ்ஞான வளர்ச்சி காரணமாகவும்,சனத்தொகை அதிகரிப்பாலும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாள்தோறும் மனிதனுடைய செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இவற்றின் விளைவுகளில் ஒன்றுதான் புவி வெப்பம் அடைதல் ஆகும்.

புவி வெப்பமடைதல் என்றால் இயற்கையான செயற்பாடுகளாலும் மனித நடவடிக்கை களினாலும் வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரித்தலினால் புவியில் ஏற்படும் மாற்றம் அல்லது குழப்ப நிலை எனப்படும். இவை அதிகமாக பச்சை வீட்டு வாயுக்களான $O_2$, $CH_4$, $NO_2$, CFC போன்றன அதிகளவில் வளிமண்டலத்தைச் சென்றடைவதால் ஏற்படுகின்றன. கடந்த 200 வருடங்களாக இவ்வாயுக்களின் அளவு வளிமண்டலத்திற்கு அதிகளவாக சென்றடைந்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான விஞ்ஞான ரீதியான கருத்தின்படி இருபதாம் நூற்றாண்டிலும் அதன் பிற்கால கட்டங்களிலும் உலகின் சராசரி வெப்பநிலை 0.6 C ஆக அதிகரித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. 1990ஆம் ஆண்டு மிக வெப்பமான தசாப்தமாகவும் 1998இல் வெப்பமான வருடமாகவும் இருந்தது என சான்றுகள் குறிப்பிடுகின்றன. பூகோள மேற்பரப்பின் சராசரி வெப்பம் 2100 களில் 1.4 $^0C$ ஆக காணப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பூகோள ரீதியான சராசரிக் கடல் மட்டம் 2100 களில் 0.09 – 0.88 மீற்றர்களாக உயர்வடையும் எனவும் கூறப்படுகின்றது.

**புவி வெப்பமடைதலுக்கான காரணங்கள்**

காபனீரொட்சைட்டில் ஏற்படுகின்ற 10% அதிகரிப்பு உலகின் சராசரி மேற்பரப்பு வெப்ப நிலையை 0.03% மாக அதிகரித்துள்ளது. 1990 களில் இருந்து அதிகரித்து வருகின்ற சூரியப்புள்ளி நடவடிக்கை,

(SUNSPOT ACTIVITY) எரிமலைச் செயற்பாடுகளின் முக்கியத்துவம், தொழிற்சாலைகள், வாகனங்கள் என்பவற்றுக்கு உயிர்ச்சுவட்டு எரி பொருட்களான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், நிலக்கரி என்பவற்றின் அதிகளவு பயன்பாடு, தாவரப்போர்வை அகற்றப்படல், உயிர்த்திண்மம் அழுகுதல் என்பவற்றால் அதிகளவு காபன் வெளியேற்றப்படல், பரந்துபட்ட நெல்வயல்களில் நீர் நிரப்பி பயன்படுத்தல். அசைபோடும் விலங்குகள் மேய்தல், (எருமை, மாடு. ஆடு, குதிரை, கழுதை, கோழி, பன்றி, தாரா) இவற்றின் வாய் மூலமும், பசளை மூலமும் $CH_4$ வெளியேறல், கரைசலை உண்டாக்கும் இரசாயனப் பயன்பாடு, காடுகள், பற்றைகள் என்பவற்றை எரிப்பதனால் உருவாகும் $CO_4$, $NO_2$ வாயுக்களின் வெளியேற்றம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் பூகோள வெப்பமடைதலுக்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

புவி வெப்பமடைதல் தொடர்பாக மனித இனம் ஏன் கவனம் செலுத்த வேண்டும் என நோக்கும் போது அதிகரிக்கின்ற வெப்பநிலையானது ஒளித்தொகுப்பு உற்பத்தியினை விட உயர் அளவு ஆவியுயிர்ப்புக்கும், அழிவிற்கும் காரணமாகிறது. ஈரநிலங்களின் கீழ் காணப்படும் பகுதிகள் மறைந்து விடலாம். மாற்றமடைகின்ற கடற்கரைகள், ஆற்று வடி நிலங்கள் ஏரிகள் போன்ற மீன்களுக்கு உணவு கிடைக்கும் பகுதிகள், மீன்குஞ்சுகள் வாழும் பகுதிகள் என்பவற்றிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் உணவுச் சங்கிலியிலும் மாற்றதை ஏற்படுத்தும் பிரதேச ரீதியான காலநிலை மாற்றம், காலநிலையில் ஏற்படும் தளம்பல், நுண்ணுயிர் மற்றும் பூச்சிப் பீடைகளின் தாக்கத்தை அதிகரிக்கும். வெப்பநிலையுடன் இணைந்த வகையில் சாதகமாக அமைந்து அவை மேலும் வளர்ச்சியடையும்.

புவி வெப்பநிலையில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும் போது வரலாற்றுக் காலங்களில் காலநிலை மாற்றமடைந்துள்ளது. 1550 - 1850 காலத்தில் நிலவிய சிறுபனிக் காலம் (Little iceage) காரணமாக பூகோளக் காலநிலை மிகக் குளிராக காணப்பட்டது. மாரி காலங்கள் மிக குளிராக இருந்தன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருபருவங்களில் வெப்பநிலை விரைவாக அதிகரித்துள்ளன. வெப்ப நிகழ்வான எல் - நினோ செயற்பாட்டால் வெப்பநிலை $0.2^0C$ அதிகரித்து காணப்படுகிறது.

பச்சைவிட்டு வாயுக்களில் பிரதான வாயுவாக விளங்கும் $CO_2$ வின் வளி மண்டலச் செறிவு 379PPM ஆகும். அடுத்த 50 வருடங்களில் 54 PPM ஆக அதிகரிக்கும் என IPCC (Intergovermental panal on climate change) மதிப்பிட்டுள்ளது. தற்போதைய காலகட்டத்தில் புவி வெப்பமடைதலிற்கான பங்கில் இயற்கை 25% பங்களிப்பையும் மனிதன் 75% பங்களிப்பையும் கொண்டுள்ளது. எனவும் மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.

**புவி வெப்பமடைதலினால் மனிதனுக்கும் சூழலுக்கும் ஏற்படும் தாக்கங்கள்**

பூகோள வெப்பமடைதலினால் மனிதனுக்கும் சூழலுக்கும் ஏற்படும் தாக்கங்களை எடுத்துக் கொண்டால் வெப்பம் கூடும் பொழுது மனிதனால் தாங்க முடியாத நோய் ஏற்படல், மனநிலை பாதிக்கப்படல், சருமநோய் உண்டாதல் மனித உடலில் மாற்றம் ஏற்படல் போன்றனவும் சூழல் என்று நோக்கும்போது முனைவுப் பகுதிகளிலும், மலைச்சிகரங்களிலும் காணப்படும் பனிககட்டி உருகுதல், கடல் மட்டம் அதிகரித்தல், கரையோர அதிகரிப்பு, ஈரலிப்பு பகுதி அதிகரிப்பு கடல்சார் உயிரினங்கள் அழிவடைதல், இயற்கை உயிர் வாழ்விடங்கள் பாதிக்கப்படல், காலநிலை மாற்றம், பாலை வனமாதல், விவசாயம் பாதிப்பு, விலங்குகள் அழிவடைதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இவ் விளைவுகள் சில வருமாறு.

**பாலைவனமாதல்**

புவியில் காலநிலை மாற்றம் காரணமாக பாலைவனங்கள் அதிகரிக்கிறது. புற்றரைகளும் காடுகளும் அருகி வரும், வெள்ளம், சுழல் காற்று, காட்டுத்தீ போன்றன புவியில் சர்வசாதாரண நிகழ்ச்சிகள் ஆகிவிடும். அத்துடன் வளமான நிலங்கள் வரண்டு வளமற்றுப்போகும் தானியங்களை உற்பத்தி செய்து வழங்கிய பயிர்நிலங்கள் வரட்சிக்குட்படுவதால் உணவு உற்பத்தி குறைவடையும்.

**கடல் மட்டம் உயர்தல்**

புவியின் சராசரி வெப்பநிலை வருடா வருடம் ($3^0F$-$8^0F$) உயரும் போது முனைவுப் பகுதிகளிலும் உயர்மலைப் பகுதிகளிலும் படிந்துள்ள பனிக்கட்டி உருகி கடலைச் சென்றடையும் இதனால் கடல் மட்டம் உயரும். இவற்றுக்கு உதாரணமாக கரீபியன் கடற்கரை , கினி குடாக்கரை, வடகடல், பால்டிக் கடற்கரை, வங்காள விரிகுடா, இந்தோனேசியாக்கரை, அவுஸ்திரேலியாக்கரை, பசுபிக்கரை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. வங்காள கரைப்பகுதியில் 1/3 பகுதி நிலப்பரப்பு சமுத்திரத்தில் அமிழ்ந்து போவதுடன் மாலைதீவுகள் போன்ற தீவுகளும் கடலில் மூழ்கிவிடும்.

**கடல் உயிரினம் அழிவடைதல்**

கரையோரச் சூழலில் அதிகளவு இனச்செறிவு கொண்ட சமூகங்களாகக் காணப்படும் முருகைக் கற்பாறைகள் மிக மோசமாகப் பாதிக்கப்படும். கரையோரங்களில் காணப்படும் மீனினங்களில் 1/3 பகுதி அயனப் பிரதேச முருகைக் கற்றொகுதியுடன் இணைந்துள்ளது. அத்துடன் இப்பிரதேச வாழ் மக்கள் தமது உணவு விளையாட்டு, பொழுதுபோக்கு, புயற்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இவற்றில் தங்கியிருக்கின்றனர். வெப்பநிலை தொடர்ச்சியாக $30^0C$க்கு மேல் அதிகரிக்குமாக இருந்தால் இங்கு காணப்படும் பாறைகள் அழிந்து விடும் அயன சமுத்திர பகுதிகளில் $2^0C$ - $3^0C$ என மிகப் பெரிய அளவில் வெப்பநிலை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுவதால் முருகைக் கற் பாறைகள் அழியவும் அவற்றின் செயற்பாடு குறையவும் இதன் மூலம் மீனினம் அழியும் நிலையும் அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது.

**மனிதனுக்கு நோய்கள் ஏற்படல்**

புற ஊதாக்கதிர்கள் மனிதனைத் தாக்காது ஓசோன் படை பாதுகாக்கின்றது. இவ் ஓசோன்படை அழிவதால் எமக்கு தீங்கு விளைவிக்கும் கதிர்கள் நேரடியாகத் தாக்குவதால் கண் மற்றும் தோல் சம்மந்தமான சரும நோய்கள் ஏற்படும். அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும். நதிகளில் நீரின் அளவு அதிகரித்தமையால் நதிகளின் வேகம் அதிகரித்து வெள்ளப்பெருக்கு நிலவழுக்குகைகள் என்பன ஏற்படும். கம்பூச்சியா, வியட்னாம், பங்களாதேஸ், மெக்னா, மிசூரிமிசிசிப்பி ஆகியவற்றின் கரையோரங்களில் அதிக மக்கள் வாழ்கின்றனர். சடுதியான நதி நீரின் அதிகரிப்பால் பாதிப்புக்கள் பல ஏற்படுகின்றன.

**விவசாயம் பாதிக்கப்படல்**

பூகோள வெப்பமடைதலின் காரணமாக ஏற்படும் உயர் வெப்பநிலைகளால் கோடைகாலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படும். இதனால் கலிபோர்னியாவின் விவசாயக் கைத்தொழிலில் 30 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படும். றொக்கி மலைத்தொடரின் புல்வெளிகள் மறைந்து விடும். அயன மண்டலப் பகுதிகளில் மாரிகாலம் குறுகியதாகவும் இளஞ்சூடாகவும் இருக்கும். இதனால் உப அயனப் பிரதேசம் வறட்சிக்கு உட்பட்டு விவசாயம் பாதிக்கப்படும்.

மேலும் வறுமை அதிகரித்து பொருளாதாரப் பிரச்சனைகள் ஏற்பட்டு விலங்கு வேளாண்மை குறைவடைந்து உலகின் உணவு உற்பத்தி நிலங்கள் குறைவடைந்து உயிரினங்கள் அழிந்து செல்லவும் ஏதுவாக அமைகிறது.

**புவி வெப்பமடைதலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்**

புவி வெப்பமடைவதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நோக்கின், புதிய வகை இயந்திரங்கள், வாகனங்கள், எஞ்சின்கள் என்பவற்றை உருவாக்கி பச்சை வீட்டு வாயுக்களின் அளவைக் குறைத்தல், காடழிப்பைக் கட்டுப்படுத்துவதுடன் காடாக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல், காடுகள் பற்றைகள் எரியூட்டுவதைத் தடுத்தல், காபன் வட்டம் பற்றிய அறிவை எல்லோரிடமும் பரவச் செய்து வளிமண்டலத்தை வந்தடைகின்ற அல்லது அங்கிருந்து வெளியேறும் $CO_2$ செல்வாக்குச் செலுத்தும் முறையை விளக்கல், பச்சைவீட்டு வாயுக்களை தயாரிக்கும் புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்காது கட்டுப்படுத்தல் போன்றவற்றுடன் சனத் தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல், காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற சூழற்றொகுதி பாதிப்புக்கள், பொருளாதார சமூக அரசியல்த் தாக்கங்கள் சமூகத்தில் ஒவ்வொரு அங்கத்தவராலும் அறிந்து கொள்ளப்படல், புதினப் பத்திரிகைகள், சுவரொட்டிகள், வானொலி, தொலைக்காட்சி, கணினி என்பவற்றினூடாக உலகவாழ் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டல், உயிர்ச்சுவட்டு எரிபொருளின் பாவனையைக் குறைத்தல், வலுபிறப்பிக்கப்படும் மூலகமான சூரியனில் இருந்து மின்னைப் பெறல், காற்றாலை மின் உற்பத்தி, நிலவெப்பப் பாவனை போன்றவற்றைப் பயன் படுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புவி வெப்பமடைதலினால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்காக சர்வதேச நிறுவனங் களினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றி குறிப்பிடுமிடத்து

1997 - யப்பானில் கியோட்டோ நகரில் இடம் பெற்ற உச்சி மாநாடு

1985 - ஓசோன் படையினைப் பாதுகாக்கும் வியன்னா மாநாடு

1987 - மொன்றியல் பிரகடனம்

1992 - புவிச்சூழல் உச்சி மாநாடு ( றியோடி ஜெனிரோ)

போன்ற ஒப்பந்தங்கள் சாசனங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றுக்கு மேலான ஐக்கிய நாடுகளுக்கான சூழல் நிகழ்ச்சித் திட்டம் (United Nation Environmental Programme) UNEP சுற்றாடல் தினம் அறிமுகப்படுத்தப்பட்டமை இத் தினத்தின் பிரதான கருப்பொருள் Global warming and global warning ஆகும். இதனூடாகவும் புவி வெப்பமடைதலும் முன்னெச்சரிக்கையும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.


**முடிவுரை**

சுருங்கக் கூறின் புவி வெப்பமடைதலையும் அதற்கான காரணங்களையும் அதைத் தீர்ப்பதற்கான வழிகளையும் அறிந்த நாம் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக புவி வெப்பமடைதலைக் குறைத்து இனிமையான சூழலை உருவாக்கி மகிழ்வான வாழ்விற்கு வழி கோலுவோம்.

"இயற்கையோடு இணைவோம் இனிமையாக வாழ்வோம்"

**உசாத்துணை நூல்**

1. உதயநாதன் V.S 2007 சூழல் புவியியல், செவ்வானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
2. அன்ரனி நோபேட். எஸ், 2008, சூழலியல் முகாமைத்துவம், சேமமடுப் பதிப்பகம், கொழும்பு 11.



# சூதும் வாதும் வேதனை செய்யும்

**ம.கவியரசன்**
**குறுநாடக ஆக்கம்**
**பிரிவு /4 முதலாமிடம்**
**யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

**பாத்திரங்கள் :-**

| | |
|---|---|
| மீனாட்சி (ராமுவின் தாய்) | சங்கர் (ராமுவின் தகப்பன்) |
| ராமு (மகன்) | ரவி |
| சோமு | குமார் |
| கட்டியக்காரன் 1 | கட்டியக்காரன் 2 |
| பொலிஸ் 1 | பொலிஸ் 2 |
| பொலிஸ் 3 | நபர் 1 |
| நபர் 2 | நபர் 3 |
| நபர் 4 | |

**காட்சி** I

இடம் : ராமுவின் வீட்டு வளாகம்

(திரை திறக்கப்படும்போது சேவல் கூவும் ஒலி எழுப்பப்படுகின்றது. CC யில் ராமு படுத்துக் கொண்டிருந்தான். UR இலிருந்து ராமுவின் தாயான மீனாட்சி CC ஐ நோக்கி வருகின்றார்)

மீனாட்சி :- விடிஞ்சு இவ்வளவு நேரமாச்சு. ஏன் என்னும் ராமு எழும்பல. இவனுக்கு என்னாச்சு. ராமு! ராமு! எழும்புடா (மீனாட்சி ராமுவை தட்டி எழுப்புகின்றார்)

ராமு :- என்னம்மா?

மீனாட்சி :- இந்த தேத்தண்ணியை குடிச்சிட்டு பள்ளிக்குப் போற வேலையைப் பார்.

ராமு :- தேத்தண்ணியோ? அம்மா உனக்கு எத்தனை தடவ சொல்றது நெஸ்ர மோல்ட் ஆத்தித் தாங்கோ எண்டு. எனக்கு வேண்டாம். உதைக் கொண்டே நீங்களே குடியுங்கோ.

(காட்சி இடம்பெறும் இடத்திற்கு ராமுவின் அப்பா சங்கர் வாறார்)

சங்கர் :- என்ன மீனாட்சி உங்க என்ன பிரச்சினை?

மீனாட்சி :- பாருங்கோ உங்கட மகன் நெஸ்ரமோல்ட் தானாம் தரட்டாம். நீங்களே இரண்டு நாள் வேலைக்குப் போகலை. ஒரு வேளை சோத்துக்கே கஷ்ட மாயிருக்கு. இப்ப நான் என்ன செய்யுறது.

(மீனாட்சி கண் கலங்கி அழுகிறாள்)

சங்கர் :- மீனாட்சி அழாத. இஞ்ச பாரு நான் ராமுவை சரிப்படுத்துறன். ராமு இங்க வா.

ராமு :- என்னப்பா? எத்தனை நாள் தான் பொறுக்கிறது?

சங்கர் :- ராமு கவலைப்படாதே. அப்பான்ர இண்டையான் வேலைச் சம்பளத்தில் உனக்கு நெஸ்ரமோல்ட் ரின் வாங்கிக்கொண்டு வாறன் சரியே. இப்ப உனக்கு ஏதேனும் வேணுமோ?

ராமு :- ஓமப்பா இண்டைக்குப் பள்ளிக்கூடத்தில் சாப்பாட்டுக் காசு நூறு ரூபா கொடுக்கணும். இல்லாட்டி வீட்ட திருப்பி விட்டுடுவாங்க !

சங்கர் :- (பொக்கட்டிலிருந்து நூறு ரூபா எடுத்து ராமுவிடம் கொடுக்கிறார். ) கவனமா வைச்சிரு.

ராமு :- சரி அப்பா நான் குளிச்சிட்டு வெளிக்கிட்டு வாறன்.
(ராமு UL ஆல் வெளியே செல்கிறான்)

மீனாட்சி :- என்னங்க ராமுவை நினைச்சால் எனக்கு கவலையாய் இருக்கு. அவன் போக்கே சரியில்லை.

சங்கர் :- நீ பேசாமலிரு. அவன் பெரிய ஆசைப்பட்டானே. இல்லத்தானே நெஸ்ரமோல்ட் தானே கேட்டான். நீ இதைப் பெரிசு படுத்தாத. அப்படியே விட்டுவிடு.
(ராமு குளித்து வெளிக்கிட்டு உள்ளே வருகிறான்)

ராமு :- அம்மா வேளைக்கு சாப்பாட்டத் தாங்கோ. இண்டைக்கு பள்ளிக்கு வேளைக்குப் போகணும்.

மீனாட்சி :- என்ன அவசரம் இப்பத்தான் ஏழு மணி.

ராமு :- தாங்கோண்டா தாங்கோ வேற கதையில்ல.
(மீனாட்சி உணவை ராமுவிற்குக் கொடுக்க ராமு வேண்டி உண்ணுகிறான்.)

குமார் :- (ராமுவின் வீட்டின் வெளியே நின்று) ராமு! ராமு! உடனே வா

ராமு :- அம்மா குமார் வந்துட்டான் போல நான் போட்டு வாறன்.

மீனாட்சி :- முழுக்கலும் சாப்பிட்டுப் போவேண்டா.

ராமு :- வந்து சாப்பிர்றன் அம்மா. போட்டு வாறன்
(அப்படியே அனைவரும் சிலையாக நிற்க கட்டியக்காரன் வருகின்றார்)

கட்டியக்காரன் 1 :- பாத்தியே இவனை இவங்கிட குடும்ப நிலைப்பாடு ஒண்டும் உவனுக்குத் தெரியலை.

கட்டியக்காரன் 2 :- இப்படிப்பட்ட வறுமையிலும் பங்கு கொடுக்காமல் ஆடம்பரமாக வாழ நினைக்கிறான் ராமு. என்ன செய்யுறது இதுதான் இண்டைய உலகு.

கட்டியக்காரன் 1 :- பிள்ளையெண்டால் அப்பா அம்மான்ர சொல்லைக் கேட்கணும் ஆனால் இவனோ அவர்களின் மனதைக் காயப்படுத்துகிறான்.

கட்டியக்காரன் 2 :- இன்னும் இனி இவன் என்னென்ன செய்யப் போறானோ?

கட்டியக்காரன் 1 :- எல்லோரும் பொறுத்திருந்து பார்ப்பம்.
(திரை மூடித் திறக்கின்றது)

**காட்சி** II

இடம் : வீதிப்புறச் சூழல்

(ராமுவும் ராமுவின் நண்பர்களுமான குமார், சோமு, ரவி ஆகியோரும் சேர்ந்து நடந்து செல்கின்றனர்.)

ரவி :- குமார் இண்டைக்கு நீ எவ்வளவு காசு வைச்சிருக்கே?

குமார் :- பத்து ரூபா வைச்சிருக்கன். இண்டைக்கு அவ்வளவுதான் அம்மா தந்தவா.

ரவி :- குமார் உன்னையும் விட நான் பத்து ரூபா கூட வைச்சிருக்கன். சரி. சரி. ராமு எவ்வளவு காசு கொண்டந்தனி.

ராமு :- நூறு ரூபா.

சோமு :- நூறு ரூபாவா என்னெண்டுடா அவ்வளவு காசு? களவெடுத்தனியே?

ராமு :- இல்லை. நான் அப்பாட்ட சாப்பாட்டுக் காசு கட்டணும் எண்டு சொல்லி வாங்கினான். (ராமு சிரிக்கிறான்)

சோமு :- அட நீ பெரிய கில்லாடியடா. உங்கட அப்பா, அம்மாவையே ஏமாத்திட்டியே

ராமு :- அட போடா. இதெல்லாம் எனக்கு சிம்பிள் வேலை.

ரவி :- ராமு எங்கட காட்ஸ் அடிக்கிற இடம் வந்துட்டுது. (ஒரு மரத்தடியிலே நாலைந்து இளம் ஆட்கள் இருந்து காட்ஸ் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.)

நபர் 1 :- என்ன இண்டைக்கும் விளையாட வாறியளே.

ராமு :- ஓமோம் நான் மட்டும் வாறன்.

சோமு :- என்னடா சொல்லுறா. அப்ப நாங்கள் என்ன செய்யுறது.

ராமு :- நீங்கள் நான் விளையாடுறதைப் பாருங்கோ. இண்டைக்கு விளையாடி கனக்க காசு எடுக்கிறன் பார்!

குமார் :- சரி மச்சான் நீ சொன்னா சரி.

ராமு :- எல்லாரும் உங்ககிட்ட இருக்கிற காசெல்லாத்தையும் தாங்கோ.

நபர் 2 :- நீ விளையாட ரெடியோ?

ராமு :- ரெடி ரெடி

நபர் 3 :- இண்டைக்கு எவ்வளவு காசை வைச்சு விளையாடப் போறாய்?

ராமு :- நூத்தி ஐம்பது ரூபா

நபர் 4 :- பொடிப்பயல் எங்களோட விளையாடித் தோற்கயெல்லோ போறா?

ராமு :- அதையும் கொஞ்சம் பாப்பமே.
(அனைவரும் காட்ஸ் விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.)

ராமு :- ஜே! வின் பண்ணிற்றேன்.

குமார் :- எவ்வளவு காசு வின் பண்ணினி?

ராமு :- ஐந்நூறு ரூபா

சோமு :- டே இவ்வளவு காசையும் வைத்து என்ன செய்யப் போறம்.

ரவி :- ஆ.... சிலவழிக்கப்போறம்.

குமார் :- அப்ப தியட்டருக்குப் போவமே. இண்டைக்கு பக்கத்து செல்லா தியட்டரில துப்பாக்கி ஓடுதாமே, நம்மட சூப்பர் ஹீரோ விஜயின்ர.

ராமு :- ஓமடா போவம். சீக்கிரம் போவம், முதல் சோ தொடங்க பத்து நிமிசம் இருக்கு.

(அனைவரும் நடந்து செல்கின்றனர். அவ்வேளையில் திரை மூடுகிறது. மேடை அமைப்பாளர்கள் தியேட்டர் மாதிரியொன்றை அமைக்கின்றனர். பின்னர் திரை திறக்கின்றது.)

ரவி :- தியேட்டர் வந்திட்டு

குமார் :- சரி உள்ள போய்ப் பார்ப்பம்.

சோமு :- நான் போகலை. எனக்குப் பயம்.

ராமு :- என்னடா பயம். சரி நானே போறன்.
(ராமு ரிக்கெற் எடுக்க DL இலிருந்து CC ஐ நோக்கிப் போகிறான்)

ராமு :- ஐயா நாலு ரிக்கெற் தாங்கோ?

ரிக்கெற் கொடுப்பவர் :- இந்தா தம்பி ஐந்நூறு ரூபா தா.

ராமு :- இந்தாங்கோ காசு.

ரிக்கெற் கொடுப்பவர் :- தம்பி தம்பி இஞ்ச ஒருக்கா வா. நீ சங்கற்ற மகனெல்லோ?

ராமு :- ஓமோம்.

ரிக்கெற் கொடுப்பவர் :- பள்ளிக்கூடம் போகலையோ

ராமு :- இண்டைக்கு எனக்கு ஃபீவர் அதுதான் போகலை.

ரிக்கெற் கொடுப்பவர் :- ஆ சரி நீ போ.
(ராமுவும் தனது நண்பர்களும் படம் பார்த்து பின் அனைவரும் தங்கள் தங்கள் வீடுகளுக்கு ரண்டு மணிக்கு போறார்கள்) கட்டியக்காரர் உள்ளே வருகின்றார்.

கட்டியக்காரன் 1 :- பாத்தியோ இவன்ர வேலைய. அவங்ககிட்ட காசை வேண்டிற்று படம் பார்க்கிறான்.

கட்டியக்காரன் 2 :- சரியாச் சொன்னா இண்டைக்குச் சமூகம் நல்லா கெட்டுப் போச்சு.

கட்டியக்காரன் 1 :- இனியும் என்ன செய்யுறானோ. அதையும் பார்ப்போம்.

கட்டியக்காரன் 1 :- நீங்களும் பாருங்கோ (சபையோரைப் பார்த்து )
(திரை மூடித்திறக்கிறது)

**காட்சி III**

இடம் :- ராமுவின் வீடு

(ராமு பள்ளிவிட்டு வந்தது போல வீட்டிற்குள் வந்து நுழைகிறான்)

ராமு :- அம்மா அம்மா பசிக்குது.

மீனாட்சி :- வா வந்திரு சாப்பாடு போடுறன்.

ராமு :- சீக்கிரம் அம்மா. பசி வயித்தப் புடுங்குது.

மீனாட்சி :- இந்தா பிடி (சாப்பாட்டைக் கொடுக்க ராமு உண்ணுகிறான்)
(மீனாட்சியின் வீட்டின் ரெலிபோன் அடிக்கிறது போல ஒலி எழுப்புதல்)

ராமு :- அம்மா போன் அடிக்குது போய் எடுங்கோ.

மீனாட்சி :- (போனை எடுத்து) ஹலோ! யார் கதைக்கிறீங்கள்? ஆ சொல்லுங்கண்ண...
ஏன் என்ன நடந்தது? அப்படியோ...ஓம்...
சரி சரி போன வையுங்கோ

ராமு :- ஆரம்மா போனில

மீனாட்சி :- டே ராமு இஞ்ச வாடா (கோபத்துடன் அழைக்கிறார்)

ராமு :- ஏன் அம்மா

மீனாட்சி :- இண்டைக்கு பள்ளிக்கூடம் போனியோ? போகேல்லையோ?

ராமு :- ஏன் அம்மா கேட்கிறீங்கள்

மீனாட்சி :- ஓமோ இல்லையோ...

ராமு :- போனான் அம்மா

மீனாட்சி :- பொய் சொல்லுற... இப்பதான் செல்லா தியேட்டரிலிருந்து அந்த அண்ண எடுத்து நீ இண்டைக்குப் படம் பார்க்க வந்தனீ எண்டு சொன்னார். இது உண்மை தானா?

ராமு :- இல்லை அம்மா
(மீனாட்சி கையால் ராமுவுக்கு அடிக்கிறாள். ராமு அழுது குழறுகிறான்)

சங்கர் :- மீனாட்சிஅடிக்காத! அடிக்காத! எத்தன தடவ சொல்லுறது

மீனாட்சி :- இவன் செய்த காரியத்துக்கு அடிக்காமல் என்ன கொஞ்சுவாங்களே?

சங்கர் :- என்ன நடந்தது விளக்கமாய் சொல்லு

(நடந்தவற்றையெல்லாம் சைகையில் மீனாட்சி கூறுகிறாள்)

சங்கர் :- என்ன என் மகன் தப்பு செய்திட்டானே. ஐயோ! என்ர வளர்ப்புத்தான் சரியில்லை. ஆ! ஐயோ! நெஞ்சு குத்துதே ஐயோ...! (சங்கர் கீழே விழுந்து இறக்கிறார்)

மீனாட்சி :- என்னங்கோ... (அழுது கொண்டு) நீங்க போயிட்டீங்களே... ஐயோ நான் இனி என்ன செய்யுறது? எல்லாம் உன்னால தான்ரா. சனியன் மாடு எனக்கெண்டு வந்து பிறந்திட்டியே. ஐயோ! ஐயோ!

(மீனாட்சி அழுது குழறுகிறாள். அப்போது பின்னணி பாடல் ஒன்று ஒலிக்கிறது)

பாடல் : கல்லாய் இருக்கும் உன் பிள்ளையாலே
நல்லாய் இருந்த உன் கணவனை
கல்லறை வரவேற்றதோ- உன்
கணவனை வரவேற்றதோ!
பத்து மாசம் சுமந்தாய் நீ — பெற்று
போட்டாய் ஒரு பிள்ளையை — உன்
கணவன் என்ன செய்தார் - ஏன்
போனார்! போனார்! போனார்!
(கல்லாய் இருக்கும்....)
ஏன் இந்த சோகம் உனக்கு - ஏன்
இந்த சோகம்- சிறகுகளாய்
இருந்தாய் உன் கணவனை
இறைவனடி சேர்ந்தாரோ! கவலை கொள்ளாதே
காலம் மாறுமடி மீனாட்சி - இந்தக்
காலம் மாறுமடி மீனாட்சி

(என்று பாடல் முடிவடைகிறது. பின் திரை மூடித் திறக்கிறது)

ராமு :- அம்மா அழாதைங்கோ இனி உங்கட கஷ்ரத்தப் போக்க நான் வெளிநாடு செல்லப் போறன்.

மீனாட்சி :- என்னடா சொல்லுறா அப்ப படிப்பு?

ராமு :- அம்மா நான் இனிப் படிக்கலை. வெளிநாட்டில போய் உழைக்கப்போறன். என்னைத் தடுக்காதையுங்கோ.

மீனாட்சி :- அப்ப போறதுக்கு பணம்?

ராமு :- அதெல்லாம் என்ர நண்பன் குமார் பார்க்கிறான்

மீனாட்சி :- சரி நீ எங்கயிருந்தாலும் சந்தோசமாய் இருக்கணும்

ராமு :- அம்மா என்னெண்டு நான் நிறையப் பொருட்கள் வாங்கணும் அதுக்கு மட்டும் காசு தாங்கோ.

மீனாட்சி :-காசுக்கு நான் எங்க போறது?

ராமு :- அம்மா உங்கட தாலிய அடகு வைத்து தாங்கோ

மீனாட்சி :- என்னடா சொல்லுறா அதெல்லாம் முடியாது

ராமு :-அம்மா பிளீஸ் தாங்கோ நான் வெளிநாட்டுக்குப் போனாப்பிறகு காசு அனுப்புறன் அதை வைத்து எடுத்திடலாம்.

மீனாட்சி :- சரி இந்தா நான் உன்ன நம்புறன்

ராமு :- அம்மா நான் இண்டைக்கு பின்னேரமே வெளிக்கிடுறன். சரி போட்டு வாறன் திரை மூடித் திறக்கிறது.

காட்சி IV

இடம் : வெளிநாடு (மலேசியா)

(ராமுவும், குமாரும் வெளிநாட்டில் வந்து இறங்கி விட்டனர்)

ராமு :- குமார் இதேடா மலேசியா எவ்வளவு அழகாய் இருக்கு

குமார் :- ஓமடா இங்க எல்லோரும் பணக்காரர். இப்ப நாங்கள் பியர் அடிப்போமே?

ராமு :- ஓமடா ஒரே பிளைற்றில வந்து களைப்பா இருக்கு.

குமார் :- நீ உழைச்சு வீட்டுக்கு காசு அனுப்புவியோடா?

ராமு :- போடா டே நான் உழைச்சு அம்மாவுக்கு காசு அனுப்பி அவங்கட கஷ்டத்தை போக்குவன். பின் கைவிட்டுடுவன்.

குமார் :- அப்ப உங்கட அம்மாவ ஏமாத்தின மாதிரி இருக்குமேடா

ராமு :- ஆமாடா அண்டு எனக்கு அடிச்ச அடிக்கு அவருக்கு நான் கொடுக்கிற தண்டனைதான் இது.

(இரண்டு பேரும் குடித்து விட்டு காரை எடுத்து ஓடுகின்றனர்.)

குமார் :- ராமு பார்த்து வண்டிய ஓட்டு

ராமு :- தலைய சுத்துதடா

குமார் :- டே முன்னால வாகனம் வருகுது. பிரேக் அடி.
(ராமு வாகனத்தை நிறுத்தி இரண்டு பேரும் காரை விட்டு கீழே இறங்குகின்றனர்)

ராமு :- குமார் மலேஷியா பொலிஸடா.

குமார் :- ஓமடா சத்தம் போடாமலிரு.

பொலிஸ்1 :- கூ ஆர் யூ?
வியர் ஆர் கம் செயர்?

ராமு :- என்னடா ஒன்னும் புரியலை

குமார் :- சேர் தமிழ் சேர்

பொலிஸ்2 :- சேர் தெ ஆர் ஸ்பீக்கிங் ரமில்

பொலிஸ்1 :- ஓகே யூ னோ ரமில்

பொலிஸ்2 :- ஜேஸ் சேர்

ராமு :- சேர் எங்களை விட்டிடுங்கோ

பொலிஸ்2 :- நீங்க ஏன் குடிச்சிட்டு வண்டி ஓட்டினீங்கள்?

குமார் :- சேர் எங்களுக்குத் தெரியாது.

பொலிஸ்2 :- நீங்க இரண்டு பேரும் குற்றவாளிகள் சோ உங்களைக் கைது செய்யப் போறம்.

ராமு :- சேர் எங்கள விட்டிடுங்கோ வீட்டை அம்மா கஷ்டத்தோட இருக்கிறா. அதுதான் சேர் உழைக்க வந்தனாங்கள்.

பொலிஸ்2 :- ராமுவைப் பார்த்து இங்க வா. உன்ர வீட்டு போன் நம்பரச் சொல்லு ராமு போன் நம்பரை சைகையில் சொல்ல பொலிஸ் 2 கோல் பண்ணுகிறார்.

பொலிஸ் :- ஹலோ நீங்க ராமுவின் அம்மாவா?
உங்கட மகனை பொலிஸ் அறெஸ்ற் பண்ணீற்று (இரண்டு பேரையும் பொலிஸ் ஜெயிலில் வைத்திருக்கிறார்கள்) (ஓரிரு தினங்களின் பின் என்று ஒலி எழுப்பப் படுகின்றது)

பொலிஸ்3 :- ராமு உனக்கு லெட்டர் வந்திருக்கு (ராமுவிற்கு கொடுக்கிறார்)

ராமு :- (லெட்டரை படித்த பின்) ஐயோ அம்மா நீயும் போயிட்டியே நான் செய்த பாவத்தால் நீங்க ரண்டு பேரும் செத்து போயிட்டீங்களே.. எல்லாம் என்ர தப்புத்தான். ஐயோ அம்மா என்னை மன்னித்து விடுங்கோ. (ஜெயில் கம்பியைப் பிடித்துக் கொண்டு) இந்தப் பாவியால் தான் எல்லாம் நடந்தது நான் இழைத்த பாவங்கள் என்னையும் என் குடும்பத்தையும் பாதிச்சிட்டே ஐயோ நான் என்ன செய்வன். (என்று கதறி அழுகிறான்)
(அப்படியே ஸ்டில்லில் நிற்க கட்டியக்காரர்கள் வருகின்றனர்.)

கட்டியக்காரன் 1 :- பார்த்தியோ இவன் செய்த பாவம் எல்லாம் இவனையும் இவன் குடும்பத்தையும் பாதிச்சிட்டே ஐயோ பாவம்.

கட்டியக்காரன் 2 :- நீ சரியாகத் தான் சொன்னாய் இப்படித்தான் இண்டைக்கு சமூகம் மாறிக்கிட்டு வருது.

கட்டியக்காரன் 2 :- இதிலிருந்து என்ன விளங்குது தெரியுமே?

கட்டியக்காரன் 1 :- என்ன விளங்குது?

கட்டியக்காரன் 2 :- சூதும் வாதும் வேதனை செய்யும்?

கட்டியக்காரன் 1 :- ஓமோம் இனி எல்லோரும் நல்ல வழியில் தான் செல்ல வேண்டும்.

கட்டியக்காரன் 2 :- (சபையோரைப் பார்த்து)
பாத்தியளே நீங்களும். இனி நீங்கள் இப்படிச் செய்யக்கூடாது. இப்படிச் செய்வீர்களே

பார்வையாளர்கள் :- இல்லை...இல்லை...இல்லை...

கட்டியக்காரன் 2 :- நல்லது

கட்டியக்காரன் 1 :- நன்றி வணக்கம்.
(ஒலி குறைந்து திரை மூடுகிறது)

**மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற ஆக்கம்**
**கவின் தமிழ் – 2013**



## போதையற்ற புதுவாழ்வு

**ஸ்ரீ. லோகாசினி**
**தரம் 10**
**யா/ விக்னேஸ்வரக்கல்லூரி, கரவெட்டி.**

விஞ்ஞானத்தின் விந்தையால், விளைந்தது எத்தனை பொருளோ? அந்த அஞ்ஞானமும் அகன்றதடி விஞ்ஞானத்தின் அபரீத வளர்ச்சியால் விண்ணிலே தடம் பதித்து பல சாதனைகள் நிலைநாட்டிய, இருபத்தோராம் நூற்றாண்டு மிலேனிய யுகத்து, புருஷர்களாகிய நாம் மது எனும் மாயவலையினால் நமது வாழ்வை கேள்விக்குறியாக்கி நிற்கின்றோம். இந்த இரண்டெழுத்து மந்திரத்தால் தான், எங்களுடைய ஆறறிவையும் இழந்து வெறியுடன் வீதியில் நிற்கின்றோம்.

நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள். எம்மை வளர்த்து ஆளாக்கிய தாயும் ஒரு கடவுளேயாகும். இவ்வாறு நல்ல பிள்ளைகளாய் வளரும் எம்மை, குடி என்ற இரண்டெழுத்து மந்திரம் அழித்து விடுகிறது. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" எனும் பாடல் தற்காலத்திலே குடி என்ற சொல்லால் "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் அது மதுவில் கை வைக்கும் வரை" என மாறி வருகின்றதென்றால் அது காலம் செய்த கொடுமையல்ல போதை செய்த கொடுமைதான்.

போதை என்றால் என்ன? என்று கேட்டால் அனைவருக்கும் பதில் தெரியாது. போதை என்பது ஒரு மரணத்தை நோக்கிச் செல்லும் பாதை என எத்தனை பேருக்குத் தெரியும்? பல வர்ண நிறங்களில் எமது கண்ணைப் பறிக்கின்றன. அவையெல்லாம் எம் கழுத்துக்கு விழப்போகும் பாசக்கயிறுகள், தற்போதைய உலகில் எமனல்ல, எமது உயிரை எடுப்பது மது என்னும் மாய அரக்கனே ஆகும். போதை என்பதற்குள் அடங்குபவை பல. குறிப்பாக அபின், கஞ்சா, மது, சிகரெட் போன்றவற்றைக் கூறலாம்.

அந்தக் காலத்தில் பெண்ணடிமை கண்டு பாரதிக்கு மீசை துடித்தது. இந்தக் காலத்தில் பெண்ணைக் கண்டு பல ஆண்களுக்கு ஆசை துடிக்கிறது. பிஞ்சு மனம் மாறாத சிறுமியானாலும் சரி கூனும் பாட்டியானாலும் சரி போதையால் ஆண்களது ஆசைக்கு இரையாகின்றனர். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாம். இவ்வாறே இருக்கின்றனர். நமது நாளைய தலைவர்கள் கையில் போத்தலுடனும், வாயில் சிகரெட்டுடனும் வீதி வீதியாய் அலைகின்றனர். நமது வருங்காலம்

இவ்வாறுதான் மாறப்போகிறது. பால் மணம் மாறாத சிறு பாலகன் கூட பாலுக்குப் பதில் குடிக்க மது என்று கேட்கும் நிலைமை வந்துவிட்டது. இன்று மருந்துக்கடையோ அல்லது மளிகைக்கடையோ கட்டாயம் மதுக்கடைகள். ஒவ்வொரு வீதியிலும் இருக்கின்றன. வீட்டுக்கொரு நூலகம் என்ற சொல் மாறி வீட்டுக்கொரு மதுப்போத்தல் என்ற நிலைமைக்கு வந்து விட்டனர்.

இவ்வாறு போதையுடன் வாழ்வைக் கழிப்பவன் தன் நிலைமை மறக்கின்றான். தான் யார் என்பதையும் மறக்கிறான். எல்லாவற்றையும் மறந்து வீதி வீதியாய் அலைகின்றான். நமது கடந்த காலத்தை ஒருமுறை நினைவுகூர்ந்து பார்த்தால் வித்தியா, கிருஷாந்தி என பல மாணவிகளின் மரணத்திற்கு இந்தப் போதையே காரணம். இவ்வாறு எமது வருங்காலத்திலும் தொடர்ந்து நடைபெற்றால் எமது நாடு எங்கே போகும்?


இவ்வாறு போதைவஸ்துக்களை நாம் பயன்படுத்துவதால் புற்றுநோய் தொடக்கம் மரணம் வரை நீடிக்கும். சிறு வயதிலேயே மரணத்தை தழுவுகின்றனர் நம் “குடி” மக்கள், போதைவஸ்துக்களை தயாரிப்பவனுக்கோ இலாபம் பன்மடங்காக பெருக, நம் குடிமகனுக்கு இதயத்தில் ஓட்டைகள் பெருகுகின்றன. இவ்வாறு பல தீமைகளை உணர்ந்தாலும், எமது சமுதாயம் இந்தக் குடியை விடுவதில்லை. ஏனெனில் இது ஒரு தொற்றுநோய். குணப்படுத்த முடியாத நோய். இதை எழுதும் சமயம் எங்கோ படித்த கவிதை வரிகள் ஞாபகத்தில் எட்டுகின்றன. “நான் உன்னைத் தொட்டதே வேடிக் கையாய், ஏன் என்னைத் தொடர்கிறாய் வாடிக்கையாய் உன்னால் நான் கெட்டேன் உலகத் தால் ஒதுக்கப்பட்டேன். நீ ஒரு முனையில் புகை என்றால் மறுமுனையில் பகை’.

இந்தக் கவிதை எமக்கு போதையினால் கிடைக்கும் பலனைக் கூறுகிறது. நாம் முதலில் வேடிக்கையாய் அருந்தப்போய் அதுவே வாடிக்கையானால் நமது நிலைமை எங்கே போகும். மனிதர்களே! சற்று சிந்தியுங்கள்.

அழுகுரல்களுடன் சீரழியும் போதையுடன் கூடிய வாழ்வு வேண்டுமா? அல்லது மகிழ்ச்சியுடன் குடும்பத்தில் வாழும் போதையற்ற வாழ்வு வேண்டுமா? முடிவு உங்கள் கையில், உங்களது முடிவில்தான், நமது வருங்காலம் இருக்கிறது. போதையற்ற புதுவாழ்வை உருவாக்குவோமானால், பாதையில் உள்ள முள்ளை எடுத்து எறிந்து விட்டு, கடந்து போக முடியும். ரோஜா முள் உங்கள் மேல் பட்டாலோ நீங்கள் ரோஜா முள் மேல் கை வைத்தாலோ தீமை உங்களுக்குத்தானே. எனவே இளைஞர்களே சற்று சிந்தியுங்கள்! ஆறறிவு கொண்ட நாம் எமது எதிர்காலம் சிறந்தோங்க போதையற்ற புதுவாழ்வை உருவாக்கி மகிழ்வுடன் என்றும் வாழ்வோம்.

“போதையற்ற புது உலகம் படைப்போம்
மாசற்ற புதுவாழ்வு சமைப்போம்”

# நூற்றாண்டு நிறைவு
# நினைவுச் சின்னம்



ந
வ

*

*

*

நாற்ற

# நூற்றாண்டு விழாச் சின்னத்துக்கான விளக்கம்



**திரு. கோ. கயிலாசநாதன்**
**ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்**
**(அழகியல்)**

* இராசவாச முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்களின் புற உருவுக்குள்ளும், அதனை ஊடறுத்துச் செல்லும் புறஉருவின் வெளிப்புறத்திலும் இக்காட்சி அமைகிறது.

* ஓவியத்தின் கீழ்ப்புறத்தில் கமுகம் ஓலையும், நெற்கதிர்களும் உண்டு. இரண்டிற்கும் இடையில் விநாயகர் உருவின் சுருக்கம் (absraction) காணப்படுவதுடன், ஆங்கில எழுத்துக்கள் A, Z ஆகியனவும் உள்ளன. விநாயகர் உருவின் காதாக அமையும் கையில் ஏடு ஒன்று உண்டு. இந்த ஏடானது புத்தகமாக மேல் நோக்கி விரிவடைகின்றது. கைவிரல்கள் "மூன்று" இவை, திருநீற்றைக் குறிக்கின்றன. அதாவது சைவப்பிள்ளைகள் கற்பதற்காகவும் அவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்காகவும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. " விநாயகரே " விக்னேஸ்வரர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

* மருத நிலத்தையொட்டி இப்பாடசாலை இருப்பதால் ஸ்தாபகரின் மேலங்கி "பச்சை நிறம்" வயலைக் குறித்தும் நிற்கிறது. நெற்கதிரும் மருத நிலத்தையே சுட்டுகிறது. கமுகம் ஓலை பாடசாலைக்கான குறியீடாகவும் உள்ளது.

* ஏட்டில் இருந்து விரிவடையும் திறந்த புத்தகம் பாடசாலையின் வளர்ச்சியை, அதாவது கல்வி வளர்ச்சியைக் காட்டுவதுடன் வலப்புறத்தில் மாணவர்கள் "இங்கு கற்பதற்காக உள்நுழைவதுடன்", கற்ற பின்பு புத்தகத்தையும் துளைத்துக் கொண்டு உயர்கல்விக்காக வெளியேறுவதையும் இக்காட்சி வெளிப்படுத்துகிறது. வெளியேறுபவர்கள் எல்லோரும் Super Computer ஐ நோக்கிப் படிப்படியாக முன்னேறுகின்றார்கள் என்பது இதன் கருத்தாகும். (காலத்திற்கு ஏற்ற கல்வி என்பதுவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)

* வடமராட்சி நெய்தல் நிலத்துடனும் தொடர்பானது என்பதைக் கீழ்ப்புறங்களில் தீட்டப் பட்டுள்ள நீல நிறம் காட்டுகிறது. மேலும் விநாயகரின் மேற்பக்கத்தில் ஏட்டுக்கு அண்மையில் ஓடம் போன்ற

வடிவம் உள்ளது. இதில் 'KVC' என்பது எழுதப்பட்டுள்ளது. அறியாமையாகிய கடலைக் கடக்க அறிவு என்ற ஓடம் வேண்டும் என்பது இதன் கருத்தாகும். KVC என்பது பாடசாலையின் சுருக்கம்.

* முதலியார் அவர்களின் " தலைப்பாகைக்குள்" ஆண் ஆசிரியர் ஒருவரும் பெண் ஆசிரியை ஒருவரும் காட்டப்பட்டுள்ளனர். இருவரும் கரும்பலகைக்கு முன்னால் உள்ளனர். கரும் பலகையுடன் சேர்த்து ஏணியும் ஒன்றுள்ளது. இவர்களே " மாணவர்களை உயர்த்துபவர்கள்" என்பதுடன் இவர்கள் இருவரும் பல ஆண் ஆசிரியர்களையும், பல பெண் ஆசிரியர்களையும் குறித்தும் நிற்கின்றனர். இப்பாடசாலையில் கற்ற பலர் உயர்ச்சி அடைந்துள்ளனர் என்பதையும் ஏணி காட்டுகிறது.

* திறந்த புத்தகத்தின் விரிப்புக்கு இடையில் இருப்பவர் அதிபர். கல்வி உயர்ச்சிக்கு அதிபர் மிகவும் முக்கியமானவர் என்பதுடன் ஒருவர் பல அதிபர்களைக் குறித்தும் சுட்டியுமுள்ளார்.

* பின்புறம் பாடசாலையின் பழைய கட்டடத்தின் ஒரு பகுதியுடன் யன்னல் ஒன்றும் தூணும் வரையப்பட்டுள்ளன. பழையது பேணப்பட வேண்டும் என்பது இங்கு கருத்திற் கொள்ளப் பட்டுள்ளது.

* இராசவாச முதலியார் ஊன்றிய "வித்தானது" காலவோட்டத்தில் விருத்தியடைந்து அவரின் பிற்புலத்தில் ஒரு தரிசனமாக நேரடியாகவும் குறியீடுகளுடனும் முடிவற்று நீளுமொரு காட்சியாகஇவ்வோவியச் சித்திரிப்பு அமைகிறது. இயற்கையின் கூறுகளுடனும் செயற்பாடுகளுடனும் அவரைக் காட்டியமை அவரின் நல் எண்ணத்தை மேலும் வலுப்படுத்துவதற்காகவே ஆகும். எல்லாவற்றிலும் அவர் நிறைந்துள்ளார், அவரில் எல்லாம் நிறைந்துமுள்ளன.



# அறிக்கைகள்



# Significant Events & dates in the History of Vigneswara 1917 - 1992

| | |
|---|---|
| 1917 | Gate Mudaliar Veeravaku Chittampalam founded the school. Classess conducted in cadjan sheds Sinnathamby Sabapathippillai appointed as first manager |
| 06.10.17 | B.S. HORSEBERG – Government Agent, Jaffna laid the foundation for stone structure |
| 1920 | Gate Mudaliyar Kandappu Chinathamby became the manager V.K.Krishnapillai assumed duties as the first principal of the college. |
| 1923 | V. K. Krishnapillai left to take up the post of Principal, Training College |
| | K.Ramasamy appointed as Principal . |
| | Cambridge Senior and London Matriculation classes introduced |
| 1928 | P.Atchuthanpilliai, appointed as Principal when Ramasamy joined the Ceylon Administrative Service |
| 1930 | Boarding facilities made available for orphans at Sandil land. |
| | Parliamentary system introduced for students, |
| | M.R.Vasuthevanpillai acted as Patron. |
| | V.Kandappu was elected trial Premier |
| 1931 | K.C.Nadarajah elected Premier. |
| | Vigneswara accorded a welcome to Pandit Jawaharlal Nehru at Nelliady Junction: |
| 1933 | Scouting was introduced |
| 1937 | Volley ball introduced- at School |
| 1942 | Special class was formed for those who completed the S. S. C. Tamil elsewhere, with a view to amalgamate them into the regular senior classes. |
| 1943 | K. G. Padmanathapillai takes over as Principal when the former retired and left home to Kerala. |
| | A new hall was built adjoining the Old Hall. |
| | Hand-pump operated water supply pipeline was laid from Mr. Rajasingam's well. |
| 1945 | Vigneswara became champions in Volley Ball for three consecutive years in Vadamaradchy Adramatic club was formed by senior students with Mr.A.Kanagasabai as the patron |
| 1948 | Mr K. Sivapragasam appointed principal on Mr.Pathmanathapillai's retirement. Soccer was introduced at school |
| 1952 | Sandil grounds came to be used for sports activities |

| | |
|---|---|
| 12.67.52 | Sports meet at Sandil Mr & Mrs. V. K Chinniah, Chief guests. |
| | Vigneswara won. the coveted all island Championship Trophy in volley ball, sponsored by Colombo Plan Exhibition & Education Department. |
| 1953 | Mr. K. C. Nadarajah takes over from his father as the Manager of the school. James Selvam physical instructor introduces boxing to senior students, |
| 15.02.54 | We won against Megoda M. V. at Colombo, Volley Ball match at the finals. |
| 1955 | Parliamentary system done away with and prefects system introduced. |
| | New iron gate for the entrance provided with a metal arch indicating College's Name |
| 15.09.55 | Some collection of children's paintings were put up for show at the World Exhibition of Child Art held at Tokiyo - Japan. |
| 19.03.55 | The playlet 'Swabasha' staged by our students won the Ist place at the V.T.A. concert |
| 11.06.55 | All Ceylon Health Week Drama - 1st place. |
| 19.08.55 | Mr. R.Ramkumar, the last of the Indian Teachers left the staff and flew back to India. |
| 23.07.55 | Mr. S.Thambithurai, District Judge - Chief Guest at Inter House Sports Meet. |
| 1955 | Chemistry and Physics Labs renovated to conduct H.S.C.classes according to Depart mental requirements.<br>Teachers' Guild established<br>Farewel to Herath Banda, the Sinhala Teacher |
| 06.07.56 | Mr V. K. Krishnapillai, Chief Education Officer presided over the Inter House Sports Meet. Mrs N, P. Pillai, Principal, Ramanathan College gave away the prizes. |
| | A Biology Lab and two more class rooms were built. |
| 12.03.56 | V.TA. Silver Jubilee celebration at Nelliady M.M.V. Several of our Science, Arts and Crafts Exhibits adjudged first and commended. Eastern hall was completed (120' x 26') |
| | + Adjoining land acquired to expand the playground. |
| 25.10 57 | A Silver medal was awarded to master M.Thurairatnam, for Poster Competition by Royal Food and Agricultural Exhibition held at Colombo. |
| 07.05.58 | Art & craft and Home science workshop buildings opened |
| 26.01.58 | H. S C. Science stream approved by the Department |
| 08.07.58 | Veteran teacher K. V. Kandiah, a Jubilarian retires |
| 30.07.53 | Music was introduced to the curriculam - Old Hall converted as the Library |
| 24 08.59 | M. Somasuntharamoorthy, Vice principal expired, while in service |
| 11.08.59 | Asia Foundation donated large number of books to the Library Netball introduced |
| 25.08.09 | Scouts took part at Amparai Annual Camp. N. S. Sinnathamby scout master was in charge of the troup. |
| | Our children's paintings exhibited at World Exhibition of Child Art held at new Delhi |

| | |
|---|---|
| 12.07.59 | A. S P-van Twest presided over – Inter house Sportsmeet |
| 18.05.59 | Mr. C.Tharmalingam appointed as Vice -Principal |
| 16 06.59 | Mr. Gnanasambandan of Madras - All India - Radio - gave a talk on "Kamparamayanam" |
| 21.08.59 | World renowd Nathaswara Vidvan Karaikurichy Arunasalam paid a courtesy call to college on his brief sojourn to Nelliady. |
| 23.10.59 | Opening of college Library and unveiling the portrait of Mudaliyar K.Chinnathamby by M. Sri Kantha G. A. and S. Thambithurai D. J. |
| 1.04 60 | Mr. C.P.Jayawardana Commissioner of St. Johns Ambulance Brigade visited the school and congratulated the activities after inspection, |
| 18.05 60 | Auditor General Mr. S, Kanagaratnam Chief Guest at Inter House Sportsmeet. |
| 22.81.60 | Mr.T.Nadarajah appointed as Vice Principal. |
| 01.11.60 | Mr. K.C.Nadarajah bids farewell to teachers and students on the eve of his relinquishing duty as manager consequent to take over by the Government. |
| 21.11.60 | Teachers sign new appointment letters of Education Department. |
| 20 01.61 | Mr, K.S.Sithamparanathan a fully qualified Physical Instructor appointed. |
| 07.07.61 | Mr.M.Sivasithambaram was the chief Guest at Inter house Sports Meet |
| 28.09 61 | 40 Students spend a week at a colour ful Annual Scouts rally at Old Park, Jaffna in which foreigners participated; Scout masters Messrs, M.Thavakularatnam and V.Kanthasamy were in charge, |
| 14.10 61 | Navarathiri Vila - Musical festival held. |
| 18,02.62 | Noted literary laurate `Kanthamurugesanar' was honoured at College grounds with Muthamil Vila. |
| 28.02.62 | School vested to the Department of Education.<br>Mr. S. Somasegaram, Director of Education formlly takes over. . |
| 21.06.63 | Founder's day celebration and Prize giving.<br>Mr P, R. S. Mani, Deputy High Commissioner of India was Chief Guest. |
| 28.06.63 | School welfare Board constituted. Messrs, V. K. Nadarajah and- V. Kanthasamy elected representatives from 0. B. A. |
| 30.12.63 | Mr.K.Sivapragas handed over the school to Mr. T. Nadarajah, Vice Principal and assumed duty as Principal to Nadeswara College on 31-1-64. |
| 02,01.64 | Mr.V.Somasundaram appointed as principal. |
| 09.10,64 | Mr.C.Tharmalingam, Vice Principal left as Principal to Karanavai M.V. |
| 22.02.6.5 | Former Manager Mudaliar K.Chinnathamby passed away. |
| | Kinder garten block and an Open Air Theatre put up with the allocation of fund by Mr.M.Sivasithamparam M.P. |

| | |
|---|---|
| 2.2.6.65 | Mr. S.Arumugam, retired teacher was Chief Guest at Inter House Sports Meet. |
| 16.06.66 | M.I.Chittampalam Chief Guest at Inter House Sportsmeet |
| 29.09.66 | Master V. S.Swaminathan was awared a certificate and cheque for having achieved the 1st place in an essay competition held Island wide on Human Right's , |
| 05.05.67 | An Island wide educational tour – 4 teachers and 66 students (senior) covering kanthalai Sugar factory, ruins of Polanaruwa, Valachenai Paper factory, Badulla, Nuweraeliya Park, Norton Bridge - Hydroelectricity scheme, Tooth Temple – Kandy, Sigiriya, Mihintala and Anuradhapura ruins, |
| 03.02.68 | Mr.S.Namasivayam – Vice Principal. |
| 01.06.68 | Mr.M.Sivasithamparam, Chief Guest at Interhouse Sportsmeet. |
| 18.07.68 | Science and Art craft Exhibition at M.M.V.Nelliady, We did well. |
| 03.05.69 | Commerce classes approved |
| 16.06.70 | An Exhibition of Science held at College, highly commended by Mr.V.Atputhanathan C. I.Sc. |
| 31.12.70 | Mr.V.Somasuntharam Principal retired.<br>Veteran sports master Mr.N.S.Sinnaththamby, a Jubilarian retired. |
| 01.01.71 | Karaveddy R.C.M.T.S.Teachers and students amalgamated with Vigneswara. |
| 12.01.71 | Mr.Pon Ganesan assumed duty as Principal.<br>Mr.S.Namasivayam appointed as Vice Principal. |
| 13.07.71 | Participated at Science Exhibition at M.G.H.S. |
| 15.07.71 | Interhouse Sportmeet Mr.A.Santhirasegarampillai, Chief Education Officer was Chief Guest. |
| 01.08.71 | Mr.A.Thillaiampalam appointed Head Master, Kinder – Garten. |
| 01.03.72 | Mrs.T.Veerakathy assumed as Headmisterss, on Mr.Thillaiampalam's retirement. |
| 07.10.72 | Prize day – Mr.K.Kanakasabapathy C.E.O was Chief Guest. |
| 13.07.73 | Science and Art – craft exhibition at Nelliady M.M.V. |
| 18.07.78 | Circuit Music and Dance competition at Sacred Heart College.<br>Our Dance –Drama 'Shakunthalai' adjudged 1st. |
| 29.01.74 | The noted benefictor and well wisher of the college V.Kanthappu (Gampaha) passed away. The School was closed as a mark of honour. |
| 01.08.74 | Prize day – variety entertainment. Mr.T.Rajalingam M.P was Chief Guest . |
| 06.10.74 | Students stayed away from school to protest against the policy of Mrs. Bandaranayake Government's implementation of standardizations. When she came to open the Jaffna Campus |

| | |
|---|---|
| 06.01.75 | Educational tour in the Peninsula – covering Farms, Factories, Meusiem etc. |
| 15.08.75 | Science and Arts exhibition at College. |
| 24.08.75 | The best selections exhibited at circuit level. Mr.S.Rajah, C.E.O. opened the exhibition at Nelliady M.M.V. |
| 01.11.75 | Children's dance and music in aid of building fund sponsored by O.B.A. Also a drama 'Assaddu Mappillai' staged by milk white soap Company. |
| 16.01.76 | Mr.Pon Ganesan transferred to Kilinochchy as C.I.<br>Mr.S.Namasivayam appointed as acting principal. |
| 16.02.76 | Mr.V.Thangarajah appointed principal by the Department. |
| 06.02.77 | Mr.S.Namasivayam assumes duty as principal when Mr.V.Thangarajah left. |
| 01.04.77 | H.N.C.E. classes approved by the Department by the effots of S.D.S., after the classes had been discontinued from 1965 for want of qualified teachers. |
| 22.02.78 | Interhouse Sports meet Mr.K.Navaratnam E.O & Mr.T.Rajalingam M.P Chief Guests |
| 23.02.78 | School closed – Ministry order –students agitate standardization |
| 31.07.78 | Foundation laid by T.Rajalingam M.P, for an upstair building |
| 14.02.79 | Students boycott school demanding non standardization |
| 09.07.79 | New story building opend by Messrs.T.Rajalingam, M.Sivasithamparam, K.Jeyakody, followed by Prize giving by P.Maniccavasager DE/NR. |
| 31.10.79 | Mr.A.Subramaniam assumed duties as performing Principal on the eve of Mr.S.Namasivayam's departure to Zambia. |
| 28.02.80 | Cricuit Science and Art – craft exhibitin at M.M.V.A replica of wind –mill constructed by Mr.V.Sabanayagam of the staff was highly commended. |
| 05.05.80 | Mr.K.Sivapathasuntharam appointed as Principal |
| 18.07.80 | New hall was partitioned with Chip-boards to accommodate more classes, which also served as black boards. |
| 08.09.80 | A piece of land donated by Mrs.N.Alvappillai and her brother Iya Sinnathampy to sink a fresh-water well at Nugavil. |
| 08.02.81 | A.G. M, of S.D.S. Mr.K.Sivananthan DE / NR and Mr.V.K.Easurapatham were observers |
| 16.02.81 | Inter house Sportmeet. M.T.Rajalingam M.P.was Chief Guest. |
| 10.07.81 | Mr. M. Rajadurai opened the Electricity Scheme funded by him |
| 16.07.81 | Mr.V.Balasubramaniam opened the new water supply funded by him. |
| 11.03.82 | At Circuit Drill competition held at Uduppidy Girls' College, our Boys obtained 1st and Girl's 3rd places. |

| | |
|---|---|
| 12.03.82 | Interhouse Sports meet- M.V.P.Suntharalingam D.J. Was Chief Guest. An old boy |
| 16.06.82 | Mrs.R.Rajadurai appointed as head mistress K.G. |
| 08.10.82 | New science block foundation was laid by Mr.K.C.Nadarajah and Mr.T.Rajalingam M.P. |
| 06.06.84 | Orator Subramaniam, Principal emeritus of Skanthavarothaya College opened the new one storey block followed by a variety entertainment and Prize giving. |
| 25.09.84 | A memorial was conducted to dedicate the open Air theatre to later Mr. V.Somasuntharam.Mrs.S.Somasundaram and daughter graced the occasion. Mr.M.Sivasithamparam unveiled his photograph. |
| 09.03.85 | The school founder Gate Mudaliyar, V.Sittampalam's photograp was unveiled by Mr.V.Sabanayagam CEO followed by SDS', AGM. |
| 30.06.85 | Deputy Principal Mr. A. Subramaniam retired. |
| | Mr.K.S.Sithamparanathan appointed Vice Principal. |
| 03.11.85 | Prize day celebration Mr.V.Sabanayagam was Chief Guest (CEO) Mrs. Sabanayagam gave away the prizes. |
| 05.03.86 | Mr.R.Suntharalingam DE/NR was Chief Guest at the Interhouse Sports meet. |
| 30.05.86 | A/L students published a hand written magazine 'Erny' for the first time. |
| 09.06.86 | A variety entertainment was held to raise funds to purchase more land to add to the playground. Mr.V.Thangarajah, CEO Physical Education. was the Chief Guest. |
| 01.08.86 | Science and Arts craft exhibition held at College.Mr. V.Thangarajah. CEO Chief Guest. |
| 13.11.86 | Late Manager K.C.Nadarajah memorial and prize day held. Mr.K.Kanthy CEO was Chief Guest. |
| 30.05.87 | Home Science workshop builiding damaged by 'Shell' attack. |
| 18.01.89 | Pro.K.Sivathamby was Chief Guest at a function held to fete Mr. V.Sabanayagam on his appointment as DE/NR. |
| 15.03.90 | All the groups of students got 1st places in Drill competition at circuit level. |
| 04.02.91 | Mr.K.Sivapathasuntharam retired. |
| 18.02.91 | Mr.K.S.Sitha mbaranathan appointed as acting Principal. |
| 23.03.91 | Mr.S.Selladurai was Chief Guest at Interhouse Sports meet. |
| 24.07.91 | Mr. V. Selvarajah appointed as Principal. |
| 07.10.91 | International Teachers day was celebrated. |
| 19-03-92 | Annual Inter House Sports Meet. Chief Guest – Dr.S.Mangaleswaran. |
| 18-02-93 | Won 1st place in all age groups of Physical Training Competition - Cluster level. |

| | |
|---|---|
| 26-02-93 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.V.Thillainathan |
| 21-06-93 | Annual A/L Student Union get together. Chief Guest – Dr.Gnanakumaran. |
| 22-06-93 | Principal Mr.V.Selvarajah was transferred to Chavakachcheri Divisional Education Office. Mr.K.Selvarajah assumed duties as performing Principal. |
| 01-09-93 | Mr.K.Ambalavanar was appointed as Principal. |
| 06-10-93 | World Teachers' Day was celebrated by the students and old students association. |
| 12-01-94 | "Erney" Magazine was published by the A/L students. Chief Guest – Mr.K.Kanthasamy, Director of Education. |
| 05-03-94 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.K.Thanikasalam. |
| 06-10-94 | World teachers' day was celebrated by the students and old students association. |
| 14-01-95 | Platinum Jubilee celebration. |
| 16-01-95 | Last day of the Platinum Jubilee celebration.The most honorable guests were Mr.K.Kanthasamy- Director of Education. Mr.K.Ponnampalam, Government Agent of Jaffna. "SenkaiAaliyan" Mr.K.Kunarasa, Tamil veteran writer.Mr.S.Sivarajah, Karaveddy Divisional Director of Education. |
| 03-03-95 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.V.S.Swamynathan |
| 28-02-97 | "Erney"(ஏணி) magazine was published by A/L students. |
| 19-03-97 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.V.Selvarajah. |
| 11-06-97 | Annual A/L student union get together. Chief Guest – Mr.P.Sivanathan, Head of Economics Department, University of Jaffna. |
| 03-06-98 | Annual A/L student union get together. Chief Guest – Prof.K.Thevarajah, Head of Commerce Department, University of Jaffna. |
| 14-11-98 | Annual Prize Day. Chief Guest – Prof.A.Shanmugathas, Dean of Arts Faculty,University of Jaffna. |
| 29.01.99 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.N.Suntharamoorthy. |
| 29-01-2000 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.M.Paramanantham. |
| 17-02-2000 | Principal Mr.K.Ampalavanar was transferred to Karaveddy Divisional Education Office as Divisional Director of Education.Mr.K.Selvarajah assumed duties as acting Principal. |
| 15-03-2000 | The opening ceremony of Activity Room, Children's Playground and Agriculture room. The occasion was graced by Mr.K.Kanthasamy, Provincial Director of Education. |
| 20-05-2000 | Accommodation facilities were given in our school to 50 displaced families from Chavakachcheri. |
| 17-11-2000 | Annual Prize day. Chief Guest - Dr.S.Srisatkunarajah,Lecturer, Maths Department, University of Jaffna. |

| | |
|---|---|
| 17-02-2002 | Annual Inter House Sports Meet. Chief Guest – Mr.V.S.Sivanathan, Manager, Nelliady Branch, Bank of Ceylon. |
| 15-06-2002 | A three story building complex was ceremoniously opened by Mr.S.Sivarajah, Additional Provincial Director of Education. |
| 15-07-2002 | Mr.V.Sivasithamparamwas appointed as principal and assumed duties. |
| 18-07-2002 | A science magazine "Poonthunar" (பூந்துணர்) was published by our students. Chief Guest - Mr.S.Venugopal, A.D.E, Planning, Zonal Education Office, Vadamaradchy. |
| 07-10-2002 | World Teachers' Day was celebrated by the students and old students association. Chief Guest Hon.M.K.Sivajilingam,Member of Parliament, Jaffna District. |
| 30-11-2002 | Annual Prize Day. Chief Guest – Dr.S.Yogarajah, Head of Linguistic Department, Eastern University. |
| 16-02-2003 | Annual Inter House Athletic Meet. Chief Guest – Mr.S.Sivarajasingam, |
| 07-02-2004 | Annual Inter House Athletic Meet. Chief Guest – Mr.V.Swamynathan. |
| 17-02-2004 | Annual Prize Day. Chief Guest - Mr.R.Thiyagalingam, Secretary, Ministry of Education, North East. |
| 14-09-2005 | A New Library Building was ceremoniously opened by Mr.K.Ganesh, Government Agent, Jaffna District. |
| 14-09-2005 | A two story building under the Necord project was ceremoniously opened by Mr.T.Lankanesan - Director of planning, Necord. |
| 04-03-2006 | Annual Inter House Athletic Meet. Chief Guest – Mr.V.Visvalingam, Government Agent, Mannar District. |
| 10-03-2007 | Annual Inter House Athletic Meet. Chief Guest – Mr.V.Selvarajah, Zonal Director of Education, Vadamaradchy. |
| 09-06-2007 | Annual Prize Day. Chief Guest – Mr.K.Ganesh, Government Agent, Jaffna District. |
| 23-02-2008 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.P.Kumarasamy, JPUM (Attorney at law) |
| 13-10-2008 | Annual Prize Day. Chief Guest - Prof.Dr.S.Sivalingarajah, University of Jaffna. |
| 08-02-2009 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.S.Suntharalingam,Retired Regional manager, Peoples Bank. |
| 07-04-2009 | "Erney"(ஏணி)8th magazine was published by A/L students. Chief Guest – Prof.M.Nadarajasuntharam. |
| 03-07-2009 | Donation of land – 6 perches land on the eastern side of the school was donated by Mrs. Sinnamma Sinnathampy and Mr. &Mrs. Sivapalan Families. The occasion was graced by Mr.V.Selvarajah, Zonal Director of Education. |
| 20-09-2009 | Our school was included in the ISURU project. |

| | |
|---|---|
| 08-12-2009 | Annual Prize Day. Chief Guest - Mr.L.Ilankovan, Secretary of the provincial Ministry of Education. |
| 01-01-2010 | Under the ISURU project, Primary section of our school is separated and Mr.M.Mahaketheeswaran was appointed as principal to this primary school. |
| 23-01-2010 | Foundation stone was laid by Hon. Governor Major General G.A.Chandrasiri for the administration block to be constructed under ISURU project. |
| 14-02-2010 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Lawyer Mr.V.Vimalarajah, President, O.S.A, Colombo Branch. |
| 08-03-2010 | Inauguration of e-village web side in our school. Our web address is www.evillage.lk.karaveddy |
| 16-11-2010 | "Suyambu" (சுயம்பு) magazine was published by our Hindu association. Chief Guest Mr.V.S.Sivanathan, Manager, Bank of Ceylon. |
| 05-02-2011 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.B.Parthipan, Attorney at law. |
| 12-03-2011 | Annual Prize Day. Chief Guest – Mr.V.Selvarajah, Zonal Director of Education. |
| 27-06-2011 | Won 1st place in "Thamilarivu" Quiz program in Tamil day competitions, provincial level. |
| 27-11-2011 | A seminar was conducted to the teachers by Mr.Ranjith Kumarasri from SLIDA under the Isuru program. The teachers were participated wearing the newly introduced uniform for the first time. |
| 05-02-2012 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.R. Saththiyaseelan, Secretary of Education, Cultural affairs, sports and Youth affairs, Ministry of Education, Northern province. |
| 04-07-2012 | Principal Mr.V.Sivasithamparam was retired and Mr.K.M.Kanagalingam was appointed as principal. |
| 10-02-2013 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.V.Kaneshamoorthy, retired principal and old student of the school. |
| 12-01-2014 | Annual Prize Day. Chief Guest- Hon.T.Kurukularajah, Minister of Education, Northern Province. |
| 01-02-2014 | Annual Inter House Athletic Meet. Chief Guest – Industrialist Mr.N.Baskaran. |
| 21-04-2014 | Unveiling ceremony of the statue of our founder and the statue of Saraswathy. The statue of our founder was unveiled byMr.V.Selvarajah, Provincial Director of Education. And the Saraswathy Statue was unveiled by Mr.R.Saththiyaseelan, Secretary of Education, Cultural affairs, sports and Youth affairs, Ministry of Education, Northern Province. |
| 23-04-2014 | New Administration Block was ceremoniously opened by Hon.BandulaGunawardane, Minister of Education. |
| 27-09-2014 | Annual Prize Day. Chief Guest - Prof.M.Sinnathamby. |
| 07-02-2015 | Annual Inter House Athletic Meet. Chief Guest - Dr.M.Baskaran. |
| 01-04-2015 | Opening Ceremony of Technology Laboratory. Honorable Guests- Mr.V.Sivayokan, Mr.C.Sukirthan, Mr.E.Arnold, Members of Northern Provincial Council. |

03-07-2015 Vigneyan Awarding ceremony. Chief Guest - Mr.S.Nanthakumar, Zonal Director of Education, Vadamaradchy.

23-10-2015 Annual Prize Day. Chief Guest Mr.S.Uthayakumar, Provincial Director of Education.

06-02-2016 Annual Inter House Athletic Meet. Chief Guest - Dr.S.Vijayakumar, Senior Lecturer, University of Jaffna.

24-06-2016 Annual Prize Day. Chief Guest - Dr.JeyaluxmyRasanayagam, Senior Lecturer, University of Jaffna.

02-07-2016 Annual A/L student union get together. Chief Guest - Mr.S.Raveenthiran, Senior lecturer, Department of Geography, University of Jaffna.

05-02-2017 Annual Inter House Athletic Meet. Chief Guest - Mr.V.Ganeshwaran, Founder, Sivan Foundation.

16-02-2017 Our students emerged National level Champions in the Inter School Quiz competition conducted by the C.E.B and S.L.B.C.

21.02.2017 Honoring our National Champions. Chief Guest - Mr.S.Uthayakumar, Provincial Director of Education.

16-03-2017 Opening ceremony of the renovated new prayer hall. The prayer hall was opened by Mr.V.Sivasithamparam , former principal of this school. The renovation was funded by our 2009 G.C.E(O/L) batch and 2012 G.C.E(A/L) batch students.

13-05-2017 Vigneswara Centennial Walk was organized to mark the centenary celebrations. Thousands of students, teachers, parents, old students and well wishers participated in this event. Zonal Director Mr.S.Pushpalingam and old student and industrialist Mr.N.Baskaran flagged - off the walk.

21-06-2017 "Smart Classroom" was ceremoniously opened by Zonal Director Mr.S.Pushpalingam.

24-06-2017 A cricket match between the old students to mark the centenary celebration.

26-06-2017 A blood donation camp was held with the help of Point Pedro Base hospital blood bank unit to mark the centenary Celebration.

*Most people would succeed in small things if they were not troubled with great ambitions*

- Henry Wordswoth Longfellow.

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பல்கலைக்கழக புலமைப்பரிசில், கல்விசார் நிதி உதவுகை, பௌதிக வள விளையாட்டு அபிவிருத்தி நிதியங்கள்

| இல | நிதியம் வழங்குநர் | ஞாபகார்த்த விபரம் | விடயம் | வழங்கிய ஆண்டு | நி.வை.& வங்கி | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | திரு.ந.பாஸ்கரன் | நெல்லை ம.பாஸ்கரன் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 1994 | தே.சே.வ. பகு | 100,000 | - |
| 02 | பழைய மாணவர் சங்கம் | - | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 1994 | தே.சே.வ. பகு | 150,000 | - |
| 03 | பழைய மாணவர் சங்கம் | - | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 1994 | இ.வ - நெல் | 150,000 | - |
| 04 | திருமதி.ரமணி வீரபாகு | அமரர் நாகமுத்து ஆழ்வாப்பிள்ளை | பௌதிக வள அபிவிருத்தி | 2003 | கி.வ - கட் / நெல் | 108667 | 37 |
| 05 | பழைய மாணவர்கள் - லண்டன் | - | பௌதிக வள அபிவிருத்தி | 2003 | கி.வ - கட் / நெல் | 45800 | - |
| 06 | திருமதி.பா.சுப்பிரமணியம் | அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் | பௌதிக வள அபிவிருத்தி | 2004 | கி.வ - கட் / நெல் | 200,000 | - |
| 07 | திருமதி.பா.சுப்பிரமணியம் | அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2004 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 08 | திருமதி.செ.சிவபாதசுந்தரம் | அமரர் கனகசபை சிவபாதசுந்தரம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2004 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 09 | பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை | - | விளையாட்டு அபிவிருத்தி | 2004 | கி.வ - கட் / நெல் | 200,000 | - |
| 10 | திருமதி.பா.சிவஞானம் | அமரர் வல்லிபுரம் சிவஞானம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2005 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 11 | பழைய மாணவர் சங்கம் - லண்டன் கிளை | - | பௌதிக வள அபிவிருத்தி | 2006 | கி.வ - கட் / நெல் | 400,000 | - |
| 12 | திரு.ச.சசிதரன் | அமரர் வெற்றிவேலு சபாநாயகம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2006 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 13 | DR.ப.சிவசுதன் | அமரர் குவிதா சிவசுதன் | மாணவர் மதிப்பளித்தல் | 2007 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 14 | திரு.சி.சத்தியமூர்த்தி | - | கல்விசார் அபிவிருத்தி | 2009 | கி.வ - கட் / நெல் | 55750 | - |
| 15 | புலம்பெயர் வவுனியா பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் | அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் | கல்விசார் நிதி உதவுகை | 2009 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 16 | பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை | - | பௌதிக வள அபிவிருத்தி | 2009 | கி.வ - கட் / நெல் | 216,000 | - |
| 17 | திருமதி.ப.தணிகாசலம் | அமரர் கணபதிப்பிள்ளை தணிகாசலம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2014 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | DR.S.V.தேவேந்திரா | அமரர்.சின்னத்தம்பி வேலாயுதம் | மாணவர் ஊக்குவிப்பு நிதி உதவுகை - விளையாட்டு | 2012 | வர்.வங்கி. நெல் | 150,000 | - |
| 19 | திரு.ரஜீவ் தர்மேந்திரா | அமரர்குலவரதராஜா கௌரிமனோகரி | மாணவர் ஊக்குவிப்பு நிதி உதவுகை - கல்வி | 2012 | வர்.வங்கி. நெல் | 150,000 | - |
| 20 | திரு.சின்னத்துரை விஜயகுமார் | அமரர் சித்தர் சின்னத்துரை | கல்வி நிதி உதவுகை | 2015 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 21 | DR.மகாலிங்கம் பாஸ்கரன் | அமரர் கனகசபை கதிர்காமத்தம்பி | கல்வி நிதி உதவுகை | 2015 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 22 | திருமதி.தங்கமணி சுந்தரமூர்த்தி | அமரர்.நடராசா சுந்தரமூர்த்தி | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2014 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 23 | திருமதி.இராசமணி சுப்பிரமணியம் | அமரர் கிருஷ்ணர் சுப்பிரமணியம் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2015 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 24 | செல்வி.சௌந்தரி கணேசன் | அமரர் பொன் கணேசன் | பல்கலைக்கழக புலமைப்பரிசில் | 2015 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 25 | திரு.வேலுப்பிள்ளை தில்லைநாதன் | அமரர் செல்லையா தர்மலிங்கம் | கல்வி நிதி உதவுகை | 2016 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |
| 26 | பழைய மாணவர் சங்கம் | - | பல்கலைக்கழக புலமைப்பரிசில் / கல்வி நிதி உதவுகை | 2014 | வர்.வங்கி -நெல் | 100,000<br>200,000 | - |
| 27 | பழைய மாணவர் சங்கம் | - | பல்கலைக்கழக புலமைப்பரிசில் / கல்வி நிதி உதவுகை | 2014 | கி.வ - கட் / நெல் | 300,000 | - |
| 28 | திருமதி.பா.சரோஜினிதேவி குடும்பம் | அமரர்.கந்தப்பு பாலகிருஷ்ணன் | கல்விசார் நிதி உதவுகை | 2017 | கி.வ - கட் / நெல் | 200,000 | - |
| 29 | திருமதி.வே.தில்லைநாதன் | அமரர்.வே.தில்லைநாதன் | கல்விசார் நிதி உதவுகை | 2017 | கி.வ - கட் / நெல் | 100,000 | - |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் நிதி உதவுகை செய்வோர்

1. கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் ஞாபகார்த்தமாக பொறியியல் பீடம் செல்லும் மாணவருக்கான புலமைப்பரிசில்
2. திருமதி புஸ்பா சபாநாயகம் அவர்கள் க.பொ.த.சாதாரணதர விஞ்ஞான பாட சிறப்பு ஊக்குவிப்பு நிதி
3. அமரர் வெ.சபாநாயகம் நினைவாக க.பொ.த.சாதாரண தர வரலாறு பாட ஊக்குவிப்பு நிதி.
4. கே.கே.எஸ்.கனகசபை புலமைப்பரிசில் நிதி - விளையாட்டுத் துறைக்கான ஊக்குவிப்பு
5. திருமதி வி.ஆன் தர்சிகா மாதாந்தம் வறிய மாணவருக்கான கல்வி ஊக்குவிப்பு நிதி.

# வருடாந்த நன்கொடை உதவுநர் விபரம்

| இல | வழங்குநர்பெயர் | ஞாபகார்த்த விபரம் | விடயம் | தொகை | |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி. சி. கந்தப்பு | அமரர் - கார்த்திகேசு கந்தப்பு | இல்ல மெய்வன்மை போட்டி வெற்றி கிண்ணம் | | செலவாகும் தொகை |
| 02 | திரு. கா. இரத்தினசபாபதி | அமரர் - N. S. சேர் | இல்ல மெய்வன்மை போட்டி வெற்றி கிண்ணம் | | செலவாகும் தொகை |
| 03 | திரு. சி. செல்வரத்தினம் | | தொண்டர் ஆசிரியர் வேதனம் | 12000.00 | |
| 04 | திரு. ஜெ. ரமணன் | | தொண்டர் ஆசிரியர் வேதனம் | 24000.00 | |
| 05 | திருமதி. கெ. உமாதேவி | சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் | கல்விசார் நிதி உதவுகை | 5000.00 | |
| 06 | திரு. சி. சிவகுமார் | சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் | கல்விசார் நிதி உதவுகை | 10000.00 | |
| 07 | கரவை அபிவிருத்தி ஒன்றியம் | | உயர்தர பரீட்சை கருத்தரங்கு | 50000.00 | |
| 08 | திரு. து. அருந்தவசீலன் | அமரர்கள் திரு. திருமதி துரைராசா | ஆண்டு 5 புலமைப் பரிசில் | - | மாணவர் தொகைக்கு ஏற்ப |
| 09 | திரு. க. ஜெயக்குமார் | அமரர் நா. கந்தசாமி | விளையாட்டுப் போட்டி பதக்கங்கள் | | |
| 10 | திரு. வ. ஆ. தங்கமயில் | பெற்றார் | விளையாட்டுப் போட்டி கயிறு இழுத்தல் | | |
| 11 | திருமதி. பா. சரோஜினி தேவி | அமரர் M.S.Sir | விளையாட்டுப் போட்டி வெற்றிக் கிண்ணம் | | |

## Students of last 25 Years who were selected to University

| Course | University | Name | Z-Score | Results | D. R |
|---|---|---|---|---|---|
| **2016** | | | | | |
| Medicine | Peradeniya | Esan Tharsini | 2.1659 | 2A , B | 20 |
| Arts | Peradeniya | Kunenthiraseelan Saktheesan | 1.7703 | 2A , B | 28 |
| Arts | Jaffna | Benadict Livengton | 1.3915 | A , 2B | 121 |
| Arts | Jaffna | Ratnam Niruba | 1.3443 | A, B ,C | 136 |
| Commerce | Jaffna | Antony Rasanayagam Ann Vinojitha | 1.2382 | 2A , B | 130 |
| **2015** | | | | | |
| Management | Sri Jeyawardanapura | Panpalagan Nirushan | 2.0518 | 3A | 9 |
| Commerce | Jaffna | Yokarasa Sobiththiriya | 1.5539 | 2A , B | 61 |
| Information Technology | Moratuwa | Sivapathasundaram Ragaventhan | 1.6135 | 2A , C | 132 |
| Arts | Jaffna | Vannimaram Ingaran | 1.6731 | A , 2B | 41 |
| Arts | Jaffna | Sarvnantha Sanjikanth | 1.5204 | 2A , B | 90 |
| Arts | Jaffna | Jeyabalasingam Sinthuja | 1.1242 | A , B ,C | 302 |
| Arts | Jaffna | Thurairasa Suhirtha | 0.9827 | A , B ,C | 436 |
| Arts | Easten | Sivapathasuntharam Kirush-nathas | 0.9803 | 2B ,C | 441 |
| Arts | Eastern | Punitharaj Pushpanchali | 0.9038 | 2B , C | 508 |
| Dance | Ramanathan | Raviprakash Visshnuha | 0.7314 | A , B ,S | 692 |
| Arts | Easten | Piremathas Pirinthika | 0.7032 | 3C | 730 |
| **2014** | | | | | |
| Medicine | Jaffna | Alageswaran Rajkaran | 2.2085 | 3A | 10 |
| Molecular Biology | Colombo | Sivamoorthy Sakthy | 1.8482 | A , 2B | 59 |
| Siddha Medicine | Jaffna | Saravanabavan Viththaki | 0.7022 | 2C , S | 356 |
| Commerce | Jaffna | Raveenthira Bavatharani | 1.4058 | 2A , C | 86 |
| Management | Vavuniya | Balenthiran Rammiya | 1.4793 | 2A ,B | 106 |
| Arts | Vavuniya | Mahathevar Thuvaraka | 1.4951 | A , 2B | 95 |
| Arts | Vavuniya | Jeyarupan Sukeerthan | 1.3588 | 2A , B | 158 |
| Physical Science | Jaffna | Nemavarathan Nishanthan | 1.0456 | B , 2C | 273 |
| Arts | Jaffna | Kugarasa Nishanthini | 1.2689 | A , B ,C | 218 |
| **2013** | | | | | |
| Engineering | Moratuwa | Thirunavukarasu Kajaharan | 2.1950 | 3A | 21 |
| Engineering | Jaffna | Kanthasamy Elilarasi | 1.8147 | A , 2B | 65 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Management | Sri Jeyawardanapura | Antony Rasanayakam Anton Thevakamal | 1.7438 | 2A , C | 37 |
| Arts | Jaffna | Thavarasa Sinthuja | 1.5236 | A ,B ,C | 111 |
| Arts | Jaffna | Arunika Nallathamby | 1.3696 | A ,2B | 186 |
| Arts | Jaffna | Natkunam Lashshika | 1.3264 | 2B ,C | 220 |
| Arts | Jaffna | Nallathamby Thenuka | 1.2449 | A ,B,C | 282 |
| Siddha Medicine | Trincomalee | Balenthiran Sumanthan | 0.5360 | 2C,S | 347 |
| **2012** | | | | | |
| Engineering | Jaffna | Selvarajah Mayooran | 1.7801 | 2A ,B | 58 |
| Management | Jaffna | Selvarasa Suthan | 1.3169 | 2A,B | 49 |
| Management | lovely University India | Saravanamuththu Suganya | 1.2674 | 3A | 60 |
| Management | Jaffna | Sriskanthan Kogulan | 1.2468 | 3A | 64 |
| Computer Science | School of Computing, Uni. Col | Sinnaiah Ahilendran | 1.5883 | 3B | 94 |
| Agriculture | Jaffna | Thevarajah Saththiya | 1.0995 | 2B , C | 149 |
| Bio Science | Jaffna | Gathirvelou Gowthami | 0.9278 | B , 2C | 186 |
| Computer Science | Jaffna | Jeyapalan Pirasath | 1.4992 | 2B , C | 109 |
| Arts | South Eastern | Rajendram Vigraman | 1.2640 | A , 2C | 275 |
| Arts | Jaffna | Loganathan Sharmini | 1.3547 | A , B ,C | 209 |
| Arts | Jaffna | Mahalingam Ushanthy | 1.5253 | A , 2B | 123 |
| Arts | Jaffna | Kirusnapillai Kobika | 1.3663 | 3B | 202 |
| Arts | Jaffna | Thangarasa Nirusha | 1.3501 | B , 2C | 214 |
| Arts | Jaffna | Kanthasamy Mayoori | 1.5422 | A , 2C | 117 |
| Agriculture | Jaffna | Selvamanokaran Thinkaran | 1.0351 | B , 2C | 160 |
| **2011** | | | | | |
| Medicine | Colombo | Esan Ranjany | 2.6703 | 3A | 8 |
| Medicine | Jaffna | Thanabalasingam Thuvara-kan | 2.2698 | 2A , B | 23 |
| Engineering | Peradeniya | Ranjan Kumuthan | 1.9000 | 2A , B | 8 |
| Engineering | Peradeniya | Ranjan Niroshan | 2.1711 | 2A , B | 24 |
| Engineering | Peradeniya | Selvarajah Varmila | 2.0467 | A , 2B | 32 |
| Management | Jaffna | Kanthasamy Sivachchandran | 1.5804 | A , 2B | 27 |
| Management | Jaffna | Mukunthan Jameela | | | |
| Management | Jaffna | Paramsothy Thiyalan | 1.5516 | A , 2B | 33 |
| Commerce | Jaffna | Rasenthiram Vinoth | 1.5169 | 2A ,C | 38 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Information Techology | Moratuwa | Nagendran Baveendran | 1.5537 | 3B | 26 |
| Commerce | Jaffna | Sivapatham Biruntha | 1.4633 | A ,B ,C | 45 |
| Commerce | Jaffna | Navaratnarajah Aruran | 0.7802 | 2B,C | 50 |
| Animal Science & Fisheries. | Peradeniya | Sockalingam Samanthi | 1.3706 | 2B,C | 56 |
| Bio Science | Jaffna | Rajaratnam Arththiya | 1.2515 | B ,2C | 114 |
| Arts | Jaffna | Kanagaratnam Thivakaran | 1.5490 | 2A ,B | 134 |
| Arts | Jaffna | Sivapathasundaram Rakuvaran | 1.2158 | A ,B,C | 156 |
| Management | Vavuniya | Senthivel Vishnupriya | 0.8837 | B,2C | 121 |
| Arts | Jaffna | Ratnanathan Thadsayini | 1.2664 | 2A,C | 135 |
| Arts | Jaffna | Rasaraththinam Thanusha | 1.3391 | A,2C | 263 |
| Arts | Jaffna | Singarasa Mary Jenita | 1.3095 | A ,B,C | 282 |
| Arts | Jaffna | Thangarajah Nirusha | 1.2876 | 2B,C | 293 |
| **2010** | | | | | |
| Medicine | Colombo | Ananthalingam Nitharsan | 2.4876 | 3A | 5 |
| Physical Science | Jaffna | Kanapathipillai Rajeeva | 1.4083 | 2B,C | 133 |
| Com.Sc | Jaffna | Ratnam Selvabavitha | 1.3992 | A ,2C | 136 |
| Nursing | Jaffna | Sooriyakumaran Sooriya Thadsahaini | 1.5387 | A ,B,C | 102 |
| Management | Jaffna | Vaiththiyanathan Priyanka | 1.4229 | A ,2B | 45 |
| Arts | Jaffna | Sivarasa Vinothan | 1.5423 | A ,2B | 103 |
| Arts | Jaffna | Mathiyalakan Gowsika | 1.5408 | A , 2B | 105 |
| Arts | Jaffna | Ratnasri Anusha | 1.3831 | A ,2B | 203 |
| Arts | Jaffna | Navaraththinarajah Thujith-tha | 1.3642 | A ,2B | 215 |
| Commerce | Jaffna | Gunarasa Aranan | 1.0082 | B ,2C | 155 |
| Fine Arts | Ramanathan | Sridaran Tharseka | 1.0868 | A ,2B | 523 |
| Fine Arts | Ramanathan | Selvanayakam Mohana | 0.8569 | A , B,C | 884 |
| Physical Science | Ramanathan | Selvakumar Kabilnath | 1.1886 | 2B,C | 162 |
| Physical Science | Ramanathan | Veluppillai Ketheesan | 1.1439 | B,2C | 175 |
| **2009** | | | | | |
| Quantity Surveying | Moratuwa | Sivaramalingam Sivakuma-ran | 1.8141 | 2B,C | 90 |
| Management | Jaffna | Selvarajah Sayanthan | 1.4145 | 2A, B | 65 |
| Management | Jaffna | Yoganathan Thanarupan | 1.3455 | A ,2B | 77 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Arts | Jaffna | Selvarasa Ketheesan | 1.4946 | 2A, B | 98 |
| Arts | Jaffna | Navarasa Thuvaraka | 1.3776 | 2A, B | 161 |
| Arts | Jaffna | Pushparaj Jeevana | 1.3387 | 2A ,B | 195 |
| Arts | Jaffna | Rajathurai Kasitha | 1.3311 | 3A | 203 |
| Nursing | | Niruj aVijayakumar | 1.2911 | 2B,C | 122 |
| Bio.Sc | Jaffna | Kamalakannan Kadamban | 0.6406 | 2C,S | 511 |
| Arts | Jaffna | Rajenthiran Ambalikka | 1.2875 | A,B,C | 255 |
| **2008** | | | | | |
| Management | Jaffna | Sivakumar Kanishda | 1.4543 | 2A , C | 51 |
| Quantity Surveying | Moratuwa | Francis Mathusha | 1.8134 | A , B, C | 79 |
| Arts | Jaffna | Balasubramaniam Nirojan | 1.5719 | 2A , B | 78 |
| Arts | Jaffna | Balendran Judit Bamini | 1.4819 | 2A , B | 124 |
| Arts | Jaffna | Poobalasingam Ann Juliet Allen | 1.4769 | 3A | 128 |
| Arts | Jaffna | Raththinam Piremila | 1.4536 | 3A | 148 |
| Arts | Jaffna | Sachithananthan Jeevitha | 1.4471 | 2A , B | 157 |
| Arts | Jaffna | Ratnasiri Vijayatharsiny | 1.4442 | 2A ,B | 161 |
| Arts | Jaffna | Cyril Mayuran | 1.3883 | 2A , B | 207 |
| Arts | Jaffna | Anton Rasanayagam Mary Viniththa | 1.2794 | 2A , C | 320 |
| Arts | Jaffna | Kandaiah Thaneswaran | 1.2254 | 3A | 383 |
| Drama & Theater | Eastern | Niththiyanathan Niththiya | 1.1833 | A , 2B | 431 |
| Drama & Theater | Eastern | Selvarasa Gnanamathangi | 1.1715 | A , 2B | 457 |
| Art & Design | Jaffna | Thiruvambalam Kaneshathas | 1.0836 | A , 2B | 585 |
| Art & Design | Jaffna | Inpamalai Nishanth | 0.8239 | A , B, C | 1105 |
| Art & Design | Jaffna | Selvamanokaran Nirojan | 0.6964 | A , B, C | 1359 |
| Visual & Technological Arts | Eastern | Uthayasooriyan Ramanan | 0.6751 | 2B , C | 1412 |
| **2007** | | | | | |
| Engineering | Moratuwa | Ananthalingam Thushyan-than | 2.3449 | 2A , B | 20 |
| Engineering | Peradeniya | Sebastian Kularatnam AnnTharsika | 1.8501 | A ,B,C | 66 |
| Physical Science | Jaffna | Sivaraja Nitharsan | 1.2952 | 3C | 171 |
| Physical Science | Jaffna | Kulenthiram Rathika | 1.2775 | B,2C | 175 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Applied Science | Jaffna | Subramaniam Nirojini | 1.0148 | 3C | 237 |
| Applied Science | Jaffna | Selvam Piraveena | 0.9763 | 2C, S | 249 |
| Bio Science | Jaffna | Kamalakkannan Rahavan | 0.8813 | 3C | 234 |
| Arts | Jaffna | Rajathurai Anitha | 1.5472 | 2A , B | 55 |
| Arts | Jaffna | Vallipuram Ramanan | 1.4653 | 3A | 81 |
| Arts | Jaffna | Rajakulenthiram Anchana | 1.3512 | A , 2B | 144 |
| Arts | Jaffna | Uthayakumar Laksitha | 1.3317 | 2A,C | 156 |
| Arts | Jaffna | Nallathamby Tharjika | 1.2934 | 2A , C | 178 |
| Arts | Jaffna | Yogenthiram Kabilakar | 1.2649 | 2A , B | 211 |
| Arts | Jaffna | Sriskantharaja Vigitharan | 1.2101 | A , 2B | 263 |
| Arts | Jaffna | Kanthappu Ratheepa | 1.2070 | A , B, C | 268 |
| Arts | Jaffna | Jesuthasan Mary Rupina | 1.1934 | 3A | 286 |
| **2006** | | | | | |
| Management | Sri Jeyawardana-pura | Kailasanathan Thirukumaran | 2.2084 | 3A | 1 |
| Radiography | Peradeniya | Ambalavanar Anutheepa | 1.6470 | A , B, C | 89 |
| Arts | Jaffna | Murugesu Mayoorikka | 1.6765 | A , 2B | 32 |
| Arts | Jaffna | Sockalingam Varuna | 1.3242 | A , 2B | 209 |
| Fine Arts | Jaffna | Selvarajah Nishanthi | 0.3618 | B , 2C | 1717 |
| **2005** | | | | | |
| Medicine | Jaffna | Ananthalingam Thushyanthy | 1.9156 | 2A , B | 34 |
| Bio Science | Jaffna | Kathirkamu Rajakanthan | 1.5213 | A , B, C | 103 |
| Physical Science | Jaffna | Kulaveerasingam Thushyanthy | 1.6551 | 2B , C | 94 |
| Physical Science | Jaffna | Selvarasa Kalaichelvam | 1.4450 | A , 2C | 126 |
| Management | Jaffna | Ambikapathy Nirojini | 1.5060 | 2A , B | 54 |
| Arts | | Krishnapillai Nalajini | 1.4684 | 2A , C | 97 |
| **2004** | | | | | |
| Engineering | Peradeniya | Thirugnanasundaram Gnan-arathan | 1.9073 | 2A , C | 51 |
| Engineering | Moratuwa | Kailasanathan Elambotharan | 1.8531 | 3B | 58 |
| Quantity Surveying | Moratuwa | Sivaramalingam Kumaresan | 1.6769 | 2B,C | 85 |
| Physical Science | Jaffna | Ganeshathas Sasikaran | 1.2990 | B, 2C | 167 |
| Physical Science | Jaffna | Arumugam Paranan | 1.2783 | 3C | 274 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Physical Science | Jaffna | Sebastian Kularatnam Gairegan | 1.1427 | B,2C | 218 |
| Management | Jaffna | Selvanayagam Anton Suresh | 1.5985 | 2A,B | 53 |
| Arts | Jaffna | Kunasingam Sakila | 1.7061 | 2A , B | 38 |
| Arts | Jaffna | Markandu Sivasothy | 1.6357 | A , 2B | 56 |
| Arts | Jaffna | Sothyrupan Piriyatharsini | 1.5681 | 2A , B | 75 |
| Arts | Jaffna | Selvaratnam Sivaranjan | 1.3152 | A , B, C | 192 |
| Arts | Jaffna | Selvamokaran Piratheepa | 1.3012 | A , B, C | 201 |
| Arts | Jaffna | Balasuntharam Vijitha | 1.1452 | A , B, C | 334 |
| Arts | Eastern | Mahalingam Sivaji | 0.8237 | B, 2C | 707 |
| Fine Arts | Jaffna | Ratnam Vithursha | 0.5592 | B,C,S | 1080 |
| **2003** | | | | | |
| Engineering | Moratuwa | Manikkavasakar Tharukasini | 2.3391 | 2A , B | 19 |
| Bio Science | Jaffna | Santhanagobal Jenothiny | 1.5484 | 2B,C | 111 |
| Commerce | Jaffna | Rasaiah Thayalini | 1.5133 | 3B | 134 |
| Arts | Jaffna | Velauthampillai Rajeevan | 1.7017 | 2A,B | 31 |
| Arts | Jaffna | Kanthy Kanthees | 1.5166 | 2A,C | 83 |
| Arts | Jaffna | Balasingam Agalya | 1.4542 | A ,B,C | 104 |
| Arts | Jaffna | Sinnathurai Sivakumar | 1.2968 | 2B,C | 174 |
| Arts | Jaffna | Kanapathipillai Yaso | 1.2384 | A ,2C | 199 |
| Arts | Jaffna | Arumugam Jeyanthini | 1.1950 | 2B,C | 225 |
| Arts | Jaffna | Santhirasekaram Jegathas | 1.1736 | A ,B,C | 242 |
| **2002** | | | | | |
| Physical Science | Jaffna | Sivarajah Arumairajan | 1.4297 | A ,2C | 123 |
| Arts | Jaffna | Sivanathan Subasini | 1.9944 | 2A, B | 2 |
| Arts | Jaffna | Karthigesu Thadshajini | 1.9564 | 3A | 3 |
| Arts | Jaffna | Kanthasamy Jegagimman | 1.3705 | A ,2B | 82 |
| **2001** | | | | | |
| Physical Science | Jaffna | Sithamparanathan Jeyananthan | 1.2917 | B,2C | 167 |
| Arts | Jaffna | Yogarajah Sutharsini | 1.3223 | 2A,C | 130 |
| **2000** | | | | | |
| Engineering | Peradeniya | Sebastian Kularatnam Roy Nixon | 242 | 3A | 7 |
| Engineering | Peradeniya | Chelliah Sathiyapama | 295 | 2A,B ,C | 25 |
| Medicine | Jaffna | Ambalavanar Anuratha | 228 | 3A | 2 |
| Bio Science | Jaffna | Balakrishnan Manojah | 191 | A,2C | 94 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Management | Jaffna | Balasubramaniam Vasavan | 242 | 3A | 3 |
| Commerce | Jaffna | Tharmakulasingam Parthipan | 289 | 3A,C | 25 |
| Commerce | Jaffna | Karthigesar Karthiga | 281 | 2A,B,C | 146 |
| Arts | Jaffna | Selvanayakam Kokila | 220 | A ,2B | 43 |
| Arts | Jaffna | Thambirajah Parthipan | 283 | 2A,B,C | 107 |
| Arts | Jaffna | Shanmugaratnam Nishanthini | 211 | A,2B | 119 |
| **1999** | | | | | |
| Manegement | Jaffna | Kanapathipillai Naveetharan | 275 | A ,2B,C | 124 |
| Commerce | Jaffna | Sivarajah Arunthavarajan | 267 | A, B,2C | 181 |
| Physical Science | Jaffna | Thambikandu Kumutha | 213 | 4C | 264 |
| **1998** | | | | | |
| Physical Science | Jaffna | Subramaniam Sutharsini | 214 | 4C | 244 |
| Bio Science | Jaffna | Anandamayil Niththilavarnan | 265 | 3B, C | 136 |
| Agriculture | Jaffna | Krishnapillai Yasotharan | 260 | A ,2B,S | 156 |
| Management | Jaffna | Thirugnanasundaram Heerthi-ka | 268 | A,2B,C | 64 |
| Arts | Jaffna | Murugesu Suhirtha | 282 | A ,3B | 112 |
| Arts | Jaffna | Suthanthiran Suthakaran | 270 | A ,2B,C | 260 |
| **1997** | | | | | |
| | | Ratnam Nirmala | 252 | B, 3C | 104 |
| | | Kanagasabai Mukuntharaj | 220 | 4C | 199 |
| | | Thandapanisarma Prasanna | 211 | 4C | 234 |
| Commerce | Jaffna | Kanthasamy Thaya | 284 | A,2B,C | 78 |
| Arts | Jaffna | Namasivaya Kurukkal Vama | 256 | 2A, C,S | 149 |
| Arts | Jaffna | Kandiah Sumathy | 285 | A , 3B | 47 |
| Arts | Jaffna | Veerasingam Thivyanathan | 272 | A ,2B,C | 114 |
| Arts | Jaffna | Balasingam Kumuthavalli | 269 | A, B,2C | 174 |
| **1996** | | | | | |
| Engineering | Peradenia | Sangarapillai Thayalan | 282 | 2A ,B,C | 43 |
| Physical Science | Jaffna | Thanabalasingam Theepthakumar | 264 | 3B , C | 76 |
| Bio Science | Jaffna | Chelliah Sireeranhan | 262 | A ,2B, S | 71 |
| Commerce | Jaffna | Namasivayam Yogathasan | 290 | 3A , C | 90 |
| Arts | Jaffna | Kanapathipillai Rajani | 260 | A,B, 2C | 246 |
| **1995** | | | | | |
| Engineering | Jaffna | Kirshnapilla Vishnuvrarthan | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Management | Jaffna | Somasuntharam Vaikunthavasan | 312 | 3A , B | 3 |
| Management | Jaffan | Ponnusamy Latha | 295 | 2A, B,C | 28 |
| Management | Jaffna | Sabaratnam Ragavan | 292 | 2A,B,C | 47 |
| Commerce | | Veerapillai Parthipan | 277 | A ,3B | 142 |
| Commerce | | Shanmuganathan Balakumar | 276 | 4B | 147 |
| | | Krishnapillai Jeyarasan | 239 | 2B,C, S | 260 |
| | | Sivarajah Sivakaran | 254 | 2B, 2C | 235 |
| Arts | | Navaratnam Nanthakumar | 278 | A,2B,C | - |
| | | Sinnathamby Vivekananthan | 274 | A,2B,C | |
| | | Vinayakamoorthy Senthoo-ran | 253 | 2B , 2C | |
| | | Nadarajah Jamunathevi | 244 | A , 3C | |
| | | Kaneshapillai Murugamoor-thy | 242 | 2B , 2C | |
| | | Iyathurai Kalarathy | 239 | 2B,C,S | |
| | | Arulanantham Shanthy | 228 | 2B,C , S | |
| **1994** | | | | | |
| Engineering | Moratuwa | Parameswaran Sivatharman | 335 | 4A | 6 |
| Engineering | | Selvarajah Sutharsan | 283 | 2A, B,C | 65 |
| Engineering | | Ranganathan Sathees | 270 | 3B, C | 102 |
| Medicine | | Ponnambalam Janaki | 336 | 4A | 1 |
| Management | | Velsamybalan Logitha | 299 | 2A ,2B | 41 |
| Management | | Veerasingam Ranganathan | 298 | 2A,2B | 45 |
| Management | | Arumugam Santhamoorthy | 287 | 2A,B,C | 96 |
| Management | | Selvaraja Vathani | 287 | A ,2B,C | 96 |
| Commerce | | Kanagasabai Mohanarajah | 285 | A ,3B | 109 |
| Commerce | | Sinnathamby Manchula | 276 | A,2B ,C | 188 |
| Physical Science | | Kanapathipillai Vignarajah | 256 | 2B, 2C | 161 |
| Physical Science | | Nadarajah Suresh | 227 | A,2C,S | 264 |
| Arts | | Velautham Vinothini | 226 | 3C,S | 328 |
| Arts | | Ganeshan Tharmathevan | 298 | 2A , 2B | 9 |
| Arts | | Velautham Sutha | 291 | 2A,B, C | 18 |
| Arts | | Subramaniakkurukal Sivanantham | 283 | 2A, B ,C | 35 |
| Arts | | Subramaniam Muraleetharan | 278 | A,2B ,C | 48 |
| Arts | | Vinayakamoorthy Bhaga-wathy | 277 | A,B, 2C | 52 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Arts | Jaffna | Markandan Sunitha | 262 | 2B,2C | 127 |
| Arts | Jaffa | Vishvalingam Puvanaverni | 261 | A ,B,2C | 135 |
| Arts | Jaffna | Nadarajah Jamunathevy | 257 | 2B, 2C | 166 |
| Arts | Jaffna | Kanapathipillai Vimalanayaki | 252 | B,3C | |
| **1993** | | | | | |
| Medicine | Jaffna | Kanagaratnam Sivasuthan | 288 | 4B | 34 |
| Physical Science | Jaffna | Velautham Murugathasan | 267 | 2B,2C | 134 |
| Physical Science | Jaffna | Tharmarajah Tharmaseelan | 248 | A ,2C,S | 237 |
| Commerce | Jaffna | Kuganathan Pirakash | 271 | A,2B,C | 87 |
| Arts | Jaffna | Eswaranathan Thayarupan | 291 | 2A,B,C | 8 |
| Arts | Jaffna | Sivagnanam Vasanthy | 266 | A,B,C,S | 48 |
| Arts | Jaffna | Gengatharan Swarnalatha | 264 | 2B , 2C | 55 |
| **1992** | | | | | |
| Dental | Peradeniya | Masilamani Thavarajah | 224 | B ,2C ,S | - |
| Bio Science | Jaffna | Arumugam Murugananthan | 191 | 2C,2S | - |
| Phy. Science | Jaffna | Subramaniam Surenthiran | 220 | B,2C,S | - |
| Commerce | Jaffna | Gengatharan Piremalatha | 226 | 2B , 2C | - |
| Commerce | Jaffna | Kathirkamanathan Sutharsini | 265 | A,2B ,C | - |
| Arts | Jaffna | Kanthappakurukkal Meenathevy | 277 | 2A,B ,C | |
| Arts | Jaffna | Sinnamani Thevahi | 251 | 2B,2C | |
| Arts | Jaffna | Piraisoody Sritha | 248 | 2B,2C | |

விக்னேஸ்வரக் கல்லூரியில் கல்வி கற்று கடந்த 25 வருடங்களில் (1992 - 2017) பல்கலைக் கழகம் சென்ற மேற்படி மாணவர் பட்டியலானது பல்வேறு தேடுதல்களின் அடிப்படையிலும் கிடைக் கக் கூடியதாகவுள்ள ஆவணச் சான்றுகளின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் யாராவது தவறவிடப்பட்டிருந்தால் அது தற்செயலானதே. அவ்வாறு தவறுகள் காணப்படுமிடத்து தகுந்த ஆதாரங்களுடன் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு அதனைச் சரிசெய்து (Update) உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்வதோடு, அவ்வாறு சரி செய்யப்பட்ட பட்டியலானது தொடர்ந்து வரும் பரிசளிப்பு விழா அறிக்கையில் திருத்தமாக வெளியிடப்படும் எனவும் உறுதியளிக்கின்றோம்.

# நூற்றாண்டு நிறைவு மலர்க்குழு

திரு.வை.செல்வராசா (தலைவர்)

திரு.வே.சிவசிதம்பரம்

திரு.க.அம்பலவாணர்

திரு.க.செல்வராசா

திருமதி.க.நாளினி

திரு.ச.இராகவன்

திரு.கி.விஜயகுமார்

திரு. வ.கணேசமூர்த்தி

திரு.சி.நவரட்ணம்

திரு.கை.திருக்குமரன்

திரு.சி.செல்வரத்தினம்

திரு.கி.ரவிக்குமார்

திரு. மு. கனகலிங்கம்

திரு. ம. அ. தவரத்தினராசா

திருமதி. சு. கிருஸ்ணதாசன்

திருமதி. க. குகானந்தன்

திரு. எஸ். கௌசிகன்

திரு. V. பகீரதன்

திரு. பா. உதயராஜன்

திருமதி. செ. விநாயகமூர்த்தி

# என்றும் நன்றிக்குரியவர்கள்

1. பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை
   ஒன்றுகூடல் மண்டபத்திற்கான 400 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பு.
   மின்சாரக் கட்டண நிலுவையை நிலையான வைப்புப் பணத்திலிருந்து வரும் வருமானத்தில் இருந்து ஈடுசெய்தல்

2. திரு.கு.ரஜீவ் தர்மேந்திரா
   சரஸ்வதி சிலை அமைத்தலுக்கான நிதி அனுசரணை
   ஆங்கில மொழி விருத்திச் செயற்றிட்ட நிதி அன்பளிப்பு

3. பழைய மாணவர் சங்கம் இலண்டன் கிளை ஸ்தாபகர் சிலை அமைத்தலுக்கான நிதி அனுசரணை விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலைக் காணிக்கொள்வனவு, ஆரம்பப் பாடசாலைச் சுற்றுமதில் அமைத்தலுக்கானநிதி அனுசரணை கல்லூரியின் வடகிழக்கு மூலைக் காணிக் கொள்வனவுக்கான நிதி அனுசரணை

4. க. பொ. த. (உ.த) 2012, க. பொ. த. (சா/த) 2009 மாணவ அணியினர்.
   பிரார்த்தனை மண்டபக் கருவறை அமைத்துத் தந்தமை

5. முன்னாள் அதிபர், அமரர் சோமசுந்தரம் குடும்பத்தினர்
   பிரார்த்தனை மண்டபத்தின் அலுமினியத்தாலான பாதுகாப்பு வேலி

6. வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்
   பிரார்த்தனை மண்டப கூரை அமைப்பு தரை அமைப்பு உட்பட்ட புனரமைப்பு மற்றும் கல்வி, பௌதிக வளத்திற்கான ஒத்துழைப்புக்கள்.

7. கௌரவ மாகாணசபை உறுப்பினர்களின் ஒதுக்கீடு.
   திரு வே. சிவயோகன் - பிரார்த்தனை மண்டப தள அமைப்பு
   திரு. ச. சுகிர்தன் - சைக்கிள் தரிப்பு நிலையம்
   திரு. இ. ஆனோல்ட் - மல்ரி மீடியா புரொஜெக்ரர்

8. கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீடு
   திரு. எம். ஏ. சுமந்திரன் - ஆசிரியர்களுக்கான வாகனத் தரிப்பு நிலையம்

9. திரு. முருகேசு சிவபாதம்
   மாணவர்களுக்கான 42" LED தொலைக்காட்சி மல்ரி மீடியா புரொஜெக்ரர்

10. திரு. சு. சதீஸ்கரன்
    ஒன்று கூடல் மண்டபத்திற்கான ஒலிபெருக்கி வசதி

11. வடமராட்சி தட்டெழுத்து சுருக்கெழுத்துக் கழகம்
    ஒரு லட்சம் பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு

12. திரு. செல்லையா தவராசா - அவுஸ்திரேலியா
    ஆங்கிலமொழி விருத்திச் செயற்றிட்டம் மற்றும் கல்வி விருத்திக்கான நிதி அனுசரணை

13. முன்னாள் பதில்அதிபர், அமரர் ஆ.சுப்பிரமணியம் (ஆர்டிஸ்ற் மாஸ்ரர்) குடும்பத்தினர்
நூற்றாண்டு நிறைவு மலருக்கான நிதி அனுசரணை
வடக்குப் புற மதில் அமைப்புக்கான நிதி அன்பளிப்பு

14. லண்டன் இளைய தலைமுறை பழைய மாணவர் சங்கம் -
"நல்லதோர் வீணை செய்தே" நிகழ்ச்சி மூலம் சேர்ந்த நிதி ரூபா பதினொரு இலட்சம் பணத்தை நிரந்தர நிதியத்தில் வைப்பிலிட்டு அதன் வருமானம் மூலம் திறமை, வசதிக்குறைவு உள்ள மாணவர்களை ஊக்குவித்து அதன் மூலம் மாணவர் அனுமதியை அதிகரிக்க ஏற்பாடு செய்தமை

15. திரு. I. C அம்பிகாவரன் - கனடா
காலத்துக்காலம் தனிப்பட்ட முறையிலும், கனடா பழைய மாணவர் சங்க கிளை மூலமும் கல்லூரி பௌதிக வள அபிவிருத்தி, விளையாட்டு அபிவிருத்திக்கு பொருளாகவும் பண மாகவும் வழங்கியமை

விசேடமாக 2017 ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கி கல்லூரிக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான நிதி உதவுகை.
நூற்றாண்டு விழா செலவினங்களுக்கான நிதி அனுசரணை

16. பழைய மாணவர் சங்கம்
பல்கலைக்கழக புலமைப்பரிசில்கள், மாணவர்கல்வி நிதி உதவுகை, நூலக அபிவிருத்தி பௌதிக வள விருத்தி, இணைப்பாடவிதான செயல்பாடுகளுக்கான நிதி அனுசரணை ஆசிரியர் தின விழா கௌரவிப்பு, பரிசளிப்பு விழா நூற்றாண்டு விழாவுக்கான செயற்பாடுகளுக்கான அனுசரணை

காலத்துக்குக் காலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவிகள் புரிந்த தனிநபர்கள், குழுக்கள், இந்த நூற்றாண்டு மலரை சிற்புற வடிவமைத்துத்தந்த அன்றா நிறுவனத்தினர்க்கும் கல்லூரிச் சமூகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# நூற்றாண்டு விழா வாழ்த்துப்பா

**பல்லவி**

விக்னேஸ் வரனென்றாலே வீடுபேறே தருவான்
விக்னேஸ்வரா வென்றாலே ஆனா அறிவே யருள்வான்

(விக்...)

**அனுபல்லவி**

நூறாண்டு கண்டுவிட்ட நுண்கல்விக் கூடம்
மாறாத உயர்வாக்கும் மாட்சி மிகு கூடம்

(விக்...)

**சரணம் I**

தேறாத மாணவர்கள் தேடினு மிங்கில்லை
கூறாமல் கூறுமிந்த கூர்ப்பு வேறெங்குமில்லை
மாறாத மாணறிவு மலர்வதற் கேதெல்லை
கூறாதோ விக்னேஸ்வரா குவலயத்தி னறிவினெல்லை

(விக்...)

**சரணம் II**

பாபதம் தாறிதம் தேனமு தாமென தூயறிவதனை
நாவிதம் தாய்மொழி வேற்றுமொழி தருக்முடனிணை
பூரகம் ஒருதரம் ரேசகம் இருதரமாய் மூச்சினை
மாரகம் வரும்வரை வாசியாக்கி விக்னேஸ்வரா மாதாபிணை

(விக்...)

**சரணம் III**

வீம்பிடும்பை ஆங்காரம் விலக்கும் கல்வி
சாம்வரையும் அன்பறிவு புகட்டித் தந்த
தாம் தாயாய் அணைத்தவளே விக்னேஸ்வரா
நாம் உயர்ந்தோம் நாடுய்யும் வீடும் பெறுவோம்

(விக்...)

வ. ஆ. தங்கமயில்

# நூற்றாண்டு விழா வாழ்த்துப்பா

**வெண்பா**

ஆயிரத்துத் தொள்ளாயி ரப்பதினே ழிற்கால்கோள்
ஆயினளம் கேற்முதலி யாராலே - பாயிரம்
நன்றமைய ஆங்கிலப் பாடசாலை யாகியதன்
இன்நூறு றாண்டின் ஈடு

**குறள் வெண்பா**

பேரன் புசேர்சுகப்ர காசதிபர் போல்வார்
ஏர்பிடித்த கல்விவிளை பூமி

பேராசார் காகிகந்தை யாஜசீ யாறுமுக
ஆட்டிஸ் சின் னத்தம்பி கூறும்

ஆரம்பக் கல்வியும் அண்மையில் சேர்த்தேறு
ஆனஸ்றுப் பாடசாலை யாகும்

**ஆசிரியப்பா**

இலக்கண இலக்கிய இலகுக ணிதம்தமிழ்
துலக்கிப் பிஞ்சுள் ளத்துட் புகுத்தியும்
அலகிலாங் கிலம்சம யவிஞ்ஞா னவர்த்தகம்
உலகநோ யகற்றுமா சாரதியர்
உலவிய விக்னேஸ் வராநூறா னமாண்பே

**வாழ்த்து முற்றும்**

வ. ஆ. தங்கமயில்




KARAVEDDI
PRINT@ANDRA PRINTERS, 0212228929